ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பரமகாருணிகரான

பின்பழகியபெருமாள்ஜீய ரருளிச்செய்தருளின

ஆறாயிரப்படி

குருபரம்பராப்ரபாவம்.

இஃது

சித்ரகூடம்,

கந்தாடை - திருவேங்கடாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1892.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

குருபரம்பராப்ரபாவத்தனியன்கள்.

೧. వాత్సల్యసౌశీల్యగుణామ్బురాశిం వక్తారమర్థం ద్రమిడశ్రుతీనామ్।
శ్రీదేవరాట్పుత్రపదైకనిష్ఠం యజ్ఞేశసూరిం మునిమాశ్రయామః.

೨. కలిధ్వంసదయాపాత్రం పశ్చాత్సున్దరదేశికమ్।
అజ్ఞాతజ్ఞాపకం పుంసామస్మద్దేశికమాశ్రయే.



3. శఠారిముఖనిస్సృతద్రమిడవేదనిర్వాహకం స్వభక్తజనరక్షణైకమకృపాత్తపద్మేక్షణమ్।
స్వసూక్తిరచనోజ్జ్వలద్గురుపరమ్పరావైభవం యతీన్ద్రపదశేఖరం తమపరాఙ్కుశార్యం భజే.

சென்னை திருவல்லிக்கேணி பேயாழ்வார்ஸந்நிதிவீதி 12 - வது
கதவிலக்கமுள்ள திருமாளிகையில் கிடைக்கும் ஸ்ரீகோசங்கள்.

	ரூபா.	அ.	பை.
முதலாயிரவ்யாக்யாநம் 3 - ஸம்புடமுள்ளது	௨௧	0	0
ராமாநுஜதிவ்யசரிதையென்னும் உடையவர் வைபவம்...	௨	௧௨	0
பின்பழகிய பெருமாள்ஜீயர் சேர்த்தருளின வார்த்தாமாலை.	௧	௧௨	0
திருச்சந்தவிருத்தவ்யாக்யாநம்	௧	௧௨	0
திருமாலைவ்யாக்யாநம்பைண்டுடன்	௧	௪	0
திருப்பல்லாண்டுவ்யாக்யாநம	0	௮	0
திருப்பாவை ௩000 ப்படி, ௬000 ப்படி, ஸ்வாபதேசம் பதவுரையுடன்	௩	௮	0
திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டக வ்யாகயாநம் * மைவண்ணநறுங்குஞ்சிகு பட்டர்படியுடன்	௨	௮	0
திருமந்த்ரார்த்தம் அரும்பதத்துடன் பைண்டு	௧	௧௨	0
இராமாநுசநூற்றந்தாதி பெரியஜீயர் உரை, பிள்ளைலோகார்யஜீயர் வ்யாக்யாநத்துடன்	௩	௮	0
யதீந்த்ரப்ரவணப்ரபாவமென்னும் மணவாளமாமுனிகள்வைபவம	௧	௪	0
குருபரம்பராப்ரபாவம் ஆறுயிரப்படி ...	௨	0	0
ஷை ப்ரமாணத்திரட்டுடன் பையிண்டுகாப்பி.	௨	௮	0
குருபரம்பராப்ரபாவம் மணவாளமாமுனிகள் வைபவம்வரையில்	௩	0	0

இங்ஙனம்
சித்ரகூடம்-கந்தாடை,
☞ திருவேங்கடாசார்யர்.





ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பின்பழகியபெருமாள்ஜீயரருளிச்செய்த

குருபரம்பராப்ரபாவத்தின் ப்ரவேசம்.

ஸ்ரியஃபதியாய், ஸ்ரீவைகுண்டநிகேதநனாய், ஸ்ரீமதநந்தமுக நித்யஸூரி பரிஷந்நிஷேவ்யமாணனாய், அவாப்தஸமஸ்தகாமனாய், அகிலமங்களகுணஸ்வரூபனான ஸர்வேச்வரன், (క్షయంతమస్య రజసః పరాకే) (க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே) என்றும், (త్రిపాదస్యామృతం దివి) (த்ரிபாதஸ்யாம்ருதம் திவி) என்றும், (తదక్షరే పరమే వ్యోమన్) (ததக்ஷரே பரமே வ்யோமந்) என்றும், (యో అస్యాధ్యక్షః పరమే వ్యోమన్) (யோ அஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்) என்றும், (తద్విష్ణోః పరమం పదం సదా పశ్యన్తి సూరయః) (தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:) என்றும்- ஸகலஜகத்திதாநுசாஸநபரங்களான நிகிலநிகமாந்தஸமூஹங்களிலும், (వైకుణ్ఠే తు పరే లోకే శ్రియా సార్ధం జగత్పతిః। ఆస్తే విష్ణురచిన్త్యాత్మా భక్తైర్భాగవతైస్సహ) (வைகுண்டே து பரே லோகே ஸ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:- ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ) என்றும் (వైకుణ్ఠే తు పరే లోకే శ్రీసహాయో జనార్దనః। ఉభాభ్యాం భూమినీళాభ్యాం సేవితః పరమేశ్వరః) (வைகுண்டே து பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந:- உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேஸ்வர:)) என்றும், (అత్యర్కానలదీప్తం తత్స్థానం విష్ణోర్మహాత్మనః। స్వయైవ ప్రభయా రాజన్ దుష్ప్రేక్ష్యం దేవదానవైః) (அத்யர்க்காநலதீப்தம் தத்ஸ்தாநம் விஷ்ணோர்மஹாத்மந:- ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷ்யம் தேவதாநவை:) என்றும், (ఆక్రీడాః వివిధా రాజన్ పద్మిన్యశ్చామలోదకాః। ఏతే వై నిరయాస్తాత స్థానస్య పరమాత్మనః) (ஆக்ரீடா விவிதா ராஜந் பத்மிந்யஶ்சாமலோதகா:- ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந:) என்றும், (కాలం స పచతే తత్ర న కాలస్తత్ర వై ప్రభుః) (காலம் ஸ பசதே தத்ர ந காலஸ்தத்ர வை ப்ரபு:) என்றும், (కలాముహూర్తాదిమయశ్చ కాలో న యద్విభూతేః పరిణామహేతుః) (கலாமுஹூர்த்தாதிமயஶ்ச காலோ ந யத்விபூதே: பரிணாமஹேது:) என்றும், (అణ్డకోశాత్పరవరాత్ అవ్యక్తాత్ పరతః ప్రభో।

స్థితోహంపరమే వ్యోమ న్యప్రాకృతశరీరవాన్) (அண்டகோசாத் ஸாவரணாத் அமுஷ்மாத்பரத:ப்ரபோ-ஸ்திதோஹம்பரமேவ்யோம ந்யப்ராக்ருதசரீரவாந்) என்றும், (యత్తత్పురాణమాకాశం సర్వస్మాత్పరమం ధ్రువం। యత్పదంప్రాప్యతత్వజ్ఞాః ముచ్యన్తేసర్వకిల్బిషైః)(யத்தத்புராணமாகாசம் ஸர்வஸ்மாத்பரமம்த்ருவம்- யத்பதம்ப்ராப்யதத்வஜ்ஞாஃமுச்யந்தே ஸர்வகில்பிஷை:)என்றும்,(అణ్డేభ్యః పరతో నిత్యం త్రిపాదేన రాజతే। ఇతరేణతు పాదేన ప్రాకృతేణ్డే విరాజతే) (அண்டேப்ய:பரதோநித்யம் த்ரிபாதேந விராஜதே - இதரேணதுபாதேந ப்ராக்ருதேண்டேவிராஜதே) என்றுமித்யாதியாலே யோகயாஜ்ஞவல்க்ய பஞ்சமவேத புராண ரத்ந ஸமுதஞ்சித ப்ராமாண்ய பாஞ்சராத்ராதிவசநங்களிலும், (நலமந்தமில்லதோர்நாடு) என்றும், (சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதி) என்றும், (தெளிவிசும்புதிருநாடு) என்றும், (மாகவைகுந்தம்) என்றும், (தெளிதாகியசேண்விசும்பு) என்றும் இத்யாதிவாக்யசதங்களிலும் *மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களாலே அறுதியிடப்பட்ட அளவிறந்த ஏற்றத்தையுடைத்தாய், (గుణత్రయప్రధానపురుషపరంపదంపరాత్పరంబ్రహ్మచతేవిభూతయః)(குணத்ரயப்ரதாநபுருஷபரம்பதம் பராத்பரம்ப்ரஹ்மசதேவிபூதய:) என்றும், (పరమయోగివాఙ్మనసాపరిచ్ఛేద్యస్వరూపస్వభావ) (பரமயோகிவாங்மநஸாபரிச்சேத்யஸ்வரூபஸ்வபாவ) என்றுதொடங்கி, (నిరతిశయ వైకుంఠనాథ)(நிரதிசயவைகுண்டநாத)என்றும்,(కాలాతీతపరమహావిభూతిః)(காலாதீதபரமஹாவிபூதி:) என்றும், (యద్గత్వానమనసో యత్రైవతమసఃపారేయదత్యద్భుతం) (யத்காத்வாமநஸோயத்ரைவதமஸ: பாரேயதத்யத்புதம்) என்றும்-ஸர்வபூர்வதேசிகஸ்தோமப்ரசஸ்தமாய், இப்படி வேதாந்தங்களாலும், ரிஷிகளாலும், ஆழ்வார்களாலும், ஏககண்டமாக ப்ரதிபாதிக்கப்பட்ட ப்ரபாவாதிசயத்தையுடைய பரமபதத்திலே, (ప్రాకారైశ్చవిమానైశ్చ సౌధైరత్నమయైర్వృతా) (ப்ராகாரைச்சவிமாநைச்ச ஸௌதைரத்நமயைர்வ்ருதா)என்றும், (మణితోరణచిత్రాఢ్యాఃచిత్రధ్వజవిరాజినీ*)(மணிதோரணசித்ராட்யா விசித்ரத்வஜராஜிநீ) என்றும்,(కోటివైశ్వానరప్రఖ్యైర్గృహపఙ్క్తిభిరావృతా)(கோடிவைச்வாநரப்ரக்யைர் க்ருஹபங்க்திபிராவ்ருதா) என்றுஞ்சொல்லுகிறபடியே *கொடியணிநெடுமதிள்களையும் கோபுரங்களையுமுடைத்தான திருப்படைவீட்டிலே * மணிமாட மாளிகைகளாலே சூழப்பட்ட * செம்பொன்செய்கோயிலிலே (సహస్రస్థూణేఽచిత్రేవృష్ఠుద్రేయత్రదేవానామధిదేవఆస్తే) (ஸஹஸ்ரஸ்தூணே விசித்ரேதாட உக்ரேயத்ர தேவாநாமதிதேவஆஸ்தே) என்றும், (మధ్యేతుమణ్డపేదివ్యే రాజాఖ్యేస్థానమహాద్భుతే) (ప్రియం। మాణిక్యస్తమ్భసాహస్రజుష్టం రత్నమయంశుభం। నిత్యముక్తైస్సమాకీర్ణం సామగానోపశోభితం - ఆలీవతత్ర దాస్యార్హ్ణం) * (மத்யேது மண்டபே

* "மாலிநீ" என்றும், * "அநீவதத்தம ஏணயம" என்றும்பாடம்.

திவ்ய ராஜாஸ்தாநமஹோச்ச்ராயம்-மாணிக்கஸ்தம்பஸஹஸ்ரஜுஷ்டம் ரத்நமயம் ஸுபம்-நித்யமுக்தைஸ்ஸமாகீர்ணம் ஸாமகாநோபஸோபிதம்-அதிவதத்ஸதாபூர்ணம்) என்றும், "மாமணிமண்டபத்தந்தமில்பேரின்பத்து" என்றுஞ் சொல்லப்பட்ட ஆநந்தைகார்ணவமான திருமாமணிமண்டபத்திலே பர்யங்கவித்யாதிதியோதித அங்கத்யமாஹாத்மயத்தையுடைய திவ்யாஸ்தாநமண்டபத்திலே, உபயவிபூதியுந் தொழிலாக வகுப்புண்டு, * கோப்புடைய சீரிய சிங்காசநத்திலே, (హిరణ్మయే పరే లోకే విరజం బ్రహ్మ నిష్కలం। తచ్ఛుభ్రం జ్యోతిషాం జ్యోతిస్తద్యదాత్మవిదో విదుః) (ஹிரண்மயே பரே லோகே விரஜம் ப்ரஹ்ம நிஷ்களம்-தச்சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ்தத்யதாத்மவிதோ விது:) என்றும், (న తత్ర సూర్యో భాతి న చన్ద్రతారకం నేమా విద్యుతో భాన్తి కుతోఽయమగ్నిః। తమేవ భాన్తమనుభాతి సర్వం తస్య భాసా సర్వమిదం విభాతి) (நதத்ர ஸூர்யோ பாதி நசந்த்ர தாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி:- தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி) என்றும், (దివి సూర్యసహస్రస్య భవేద్యుగపదుత్థితా - యది భాస్సదృశీ సా స్యాద్భాసస్తస్య మహాత్మనః) (திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா - யதிபாஸ்ஸத்ருஸீ ஸாஸ்யாத் பாஸஸ்தஸ்ய மஹாத்மந:) என்றும், (స్రగ్వస్త్రాభరణైర్యుక్తం స్వానురూపైరనూపమైః। చిన్మయైస్స్వప్రకాశైశ్చ అన్యోన్యరుచిరఞ్జితైః) (ஸ்ரக்வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை: - சிந்மயைஸ்ஸ்வப்ரகாஸைஸ்ச அந்யோந்யருசிரஞ்ஜிதை:) என்றும், "சூழ்பட்டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளம்" என்றும், "சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" என்றும் சொல்லுகிறபடியே, நிரவதிகதேஜோரூபமாய் ஸதைகரூபமாய் நித்யஸித்த பரமேஷ்ட்யாதி பஞ்சோபநிஷண்மயமாய ஸ்வாநுரூபமாய்ச்சிந்மயமாய்விளங்குகிற கிரீடாதிநூபுராந்தமான திவ்யஸ்ரக்வஸ்த்ராபரணபூஷிதனாய், ஆபரணகோடியிலும், ஆயுதகோடியிலும், மெய்க்காட்டுகிற திவ்யாயுதங்களாலே தீப்யமானனாய், நிரதிசய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமிதோதார குணகணநிதியாய திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய், இவ்வடிவழகு காட்டிவெரித்த நிலாவாகாமே, (బృహచ్ఛరీరోఽభివిమానదేహో యువా కుమారత్వముపేయివాన్ హరిః। రేమే శ్రియాఽసౌ జగతాం జనన్యా సౌజన్యజ్యోత్స్నయా చన్ద్ర ఇవామృతాంశుః) (ப்ர்ஹச்சரீரோ பிவிமாநதேஹோ யுவா குமாரத்வமுபேயிவாந் ஹரி:- ரேமே ஶ்ரியா ஸௌ ஜகதாம் ஜநந்யா ஸௌஜ்யோத்ஸ்நயா சந்த்ர இவாம்ர்தாம்ஶு:) என்றும், "உடனமர்காதல்மகளிர் திருமகள்மண்மகளாயர்மடமகள" என்றும் சொல்லுகிறபடியே, இரண்டட்டத்திலுமிருந் தநுபவிக்கிற * கூந்தல்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்குங்குலவாயர்கொழுந்துக்குங் கேள்வனாய்க்கொண்டு ஸ்ரீபூநீளைகளோடே வீற்றிருந்து, இப்படி * கண்ணன்

விண்ணுளரான * வைகுந்தமாநகரிலே திவ்யபோகம் நடவாநிற்க, அச்சேர்த்தியழகைத் தலைநீர்ப்பாட்டிலே கண்டநுபவித்து, நிப்பரஸ்துதிபண்ணி, (నమః-நம:) என்பது, (జితం-ஜிதம்) என்பது, "பல்லாண்டு" என்பதாய், அசரமமாக * பிணங்கியமரர்பிதற்றுமது கண்டு, "ஆங்காரவாரமது கேட்டழலுமிழும் பூங்காரரவணை" என்கிறபடியே, அஸ்த்தாநாக்ஷால்யஸமிகளாய், தாஸ்யதர்ஷ்ணுகவிதபரிசரராய், (సూరయో నిత్యసంసిద్ధా స్సర్వే దాస్యైకభోగినః) (ஸூரயோநித்யஸம்ஸிததாஸ்ஸர்வதாஸர்வதர்ஶிந:) என்கிறபடியே * முடியுடைவானவரான * அயாவறுமமரர்களாலும், (సూర్యకోటిప్రతీకాశాః పూర్ణేన్దుయుతసన్నిభాః। యస్మిన్పదే విరాజన్తే ముక్తాస్సంసారబన్ధనైః) (ஸூர்யகோடிப்ரதீகாஶா: பூர்ணேந்துயுதஸந்நிபா: - யஸ்மிந்பதே விராஜந்தே முக்தாஸ்ஸம்ஸாரபந்தநை:) என்னும்படி * கரைகண்டோராய், அநந்த வைநதேயாதிவத் அந்தரங்கரான அநந்தமுக்த பாகவதர்களாலும், அநவரத பரிசர்யமாண சரண நளிநனாகக் கொண்டு, (రాజాధిరాజ స్సర్వేషాం విష్ణుర్బ్రహ్మమయో మహాన్। ఈశ్వరం తం విజానీమ స్స పితా స ప్రజాపతిః) (ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் விஷ்ணுர்ப்ரஹ்மமயோமஹாந் - ஈஶ்வரம்தம் விஜாநீமஸ் ஸபிதா ஸப்ரஜாபதி:) என்கிற வேண்டப்பாடு தோன்ற, "ஏழுலகுந்தனிக்கோல்செல்ல-வீற்றிருந்து" என்றும், "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதுஞ் சோராமேயாள்கின்ற-செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்" என்றும் சொல்லுகிறபடியே உபயவிபூதிநிர்வாஹகனாய், "கண்டவாற்றாற்றனதேயுலகென நின்றான்" என்கிறபடியே கண்டகாட்சியிலே, தான் உபயவிபூதிநிர்வாஹகனானமைதோற்ற வெழுந்தருளியிருந்து, (స్వేతరసమస్తవస్తువిలక్షణానన్తజ్ఞానానన్దైకస్వరూప) (ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைகஸ்வரூப) என்கிறபடியே தானும் நிரதிசயாநந்தயுக்தனாய், "அயர்வறுமமரர்கள்" என்கிறபடியே நித்யாஸங்குசிதஜ்ஞாநராயிருந்துள்ள அநந்த கருட விஷ்வக்ஸேநப்ரமுகரான நித்யஸூரிகளையும், "இயக்கெலாமறுத்து" என்கிறபடியே நிவர்த்தஸம்ஸாரருமாய் அந்தநித்யரோபாதி லப்த கைங்கர்யருமான முக்தரையும், "அந்தமில்பேரின்பத்தடியர்" என்னும்படி ஆநந்திப்பித்துக்கொண்டு போராநிற்க, இவர்களோபாதி ஸம்ஸாரிகளும் நம்மையநுபவித்து * அநுபவஜநிதப்ரீதிகாரிதாஶேஷாவஸ்தோசிதாஶேஷஶேஷதைகரதிரூபநித்யநிரவத்யநிரதிசயாநந்தரூபமத்கைங்கர்யமாகிற மஹாஸம்பத்தைப் பெற்றுவாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்க, இவர்கள் இத்தையிழந்திருப்பதே! என்று மிகவும் வ்யாகுலாந்த:கரணனாய், அங்குத்தையநுபவங்களொன்றும் உண்டதுருக்காட்டாதே, (స ఏకాకీ న రమేత - ஸஏகாகீநரமேத) என்கிறபடியே அவன், தனியனாய்

போலே போரநொந்து, இவர்கள் கரணகளேபர சூந்யராய், (భూన పక్షవాణ్ణజః) (ஹூநபக்ஷஇவாண்டஜ:) என்கிறபடியே இறகொடிந்த பக்ஷிபோலே யிருக்கிறபடியைக்கண்டு,(కరణకళేబరైర్యోక్తుమయందయమాన మనాః) (கரணகளேபரைர்க்கடயிதுந்தயமாநமநா:) என்றும், "பல்லுயிர்க்கு மாக்கைகொடுத்தளித்தகோனே" என்றுஞ்சொல்லுகிறபடியே பரமதயாளுவாய்க்கொண்டு அகிலாத்மாக்களுக்கும் கரணகளேபரப்ரதாநம் பண்ணியருள; இவர்களும் (విచిత్రాదేహ సమ్పత్తి రీశ్వరాయనివేదితుం। పూర్వమేవకృతాబ్రహ్మ హస్తపాదాదిసంయుతా) (விசித்ராதேஹஸம்பத்திரீஶ்வராயநிவேதிதும் - பூர்வமேவக்ர்தா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா) என்றும், "நாடாதமலர்நாடி நாடோறும் நாரணன்றன், வாடாதமலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று" என்றும், "மாயவன் தன்னை வணங்கவைத்த கரணமிவை" என்றும், "தேனமலருந்திருப்பாதம்" என்றும், "துயரறு சுடரடி" என்றுஞ்சொல்லுகிறபடியே - ஸ்வசரணகமலஸமாச்ரயணத்துக்குறுப்பாகக்கொடுத்த கரசரணாத்யவயவஸங்காதாத்மகமானசரீரத்தைக்கொண்டு அவன்நினைவின்படி செய்யாதே, ஸமித்தை தறிக்கக்கொடுத்த கத்தியைக் கொண்டு பசுவின்வாலைத் தறிப்பாரைப்போலேயும், களையெடுக்கக்கொடுத்தகோலைக்கொண்டு கண்ணைக்கலக்கிக்கொள்வாரைப்போலேயும், ஆறுநீந்தக்கொடுத்த தெப்பத்தைக்கொண்டு கரையேறவிருக்க அதுசெய்யாதே, நீர்வாக்காலேயொழுகி கடலிலேபுகுவாரைப்போலேயும், * ஆக்கையின்வழியுழன்று சப்தாதிவிஷயப்ராவண்யத்துக்குறுப்பாக்கி, கர்மப்ரவாஹத்தாலே * பிறவியென்னும்பெருங்கடலிலே புக்கு அநர்த்தப்படுகிறபடியைக்கண்டு, நல்வழிகண்டுநடக்கைக்குடலாக (శాస్త్రచక్షుః) (ஶாஸ்த்ரசக்ஷு:) என்றும், (హర్తుంతమస్సదసతీచ వివేక్తుమీశో మానంప్రదీపమివకారుణికోదదాతి) (ஹர்த்தும்தமஸ்ஸதஸதீச விவேக்துமீஶோ மாநம்ப்ரதீபமிவகாருணிகோததாதி) என்றும், "கலைகளும்வேதமும் நீதிநூலும்கற்பமுஞ்சொற் பொருள்தானும் மற்றநிலைகளும்வானவர்க்கும்பிறர்க்கும்நீர்மையினாலருள்செய்து" என்றும், "தொண்டேசெய்தென்றுந் தொழுது வழியொழுகப் பண்டே பரமன்பணித்தபணிவகை" என்றுஞ் சொல்லுகிறபடியே தன்காருணிகையாலே சாஸ்த்ரப்ரதாநம் பண்ணினவிடத்திலும், அதின்படிசெய்யாதே, (ఈశ్వరోహమహంభోగీసిద్ధోహంబలవాన్సుఖీ। ఆఢ్యోభిజనవానస్మి కోన్యోస్తిసదృశోమయా) (ஈஶ்வரோஹமஹம்போகீ ஸித்தோஹம் பலவாந்ஸுகீ - ஆட்யோபிஜநவாநஸ்மி கோந்யோஸ்திஸத்ர்ஶோமயா) என்றும், (యోన్యథాసన్తమాత్మానమన్యథాప్రతిపద్యతే। కింతేనకృతంపాపంచోరేణాత్మాపహారిణా) (யோந்யதாஸந்தமாத்மாநமந்யதாப்ரதிபத்யதே - கிந்தேநநக்ர்தம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா) என்

றும், "கொல்வன முதலா வல்லன முயலும்" என்றுஞ் சொல்லுகிறபடியே அகிலபாபஹேதுவாய் ஸ்வஸ்வாதந்த்ர்யரூபமான ஆத்மாபஹாரத்தைப்பண்ணி அநாதிகர்மவாஸநாதோஷ தூஷிதாந்தக்கரணராய், அபதேப்ரவ்ருத்தரா யிருக்கிறபடியைக் கண்டு, ஓலைப்புறத்துச் செல்லாதநாட்டை எடுத்துவிட்டுக் குறும்பறுக்கும் ராஜாக்களைப்போலே, ஸர்வேசவரனும் நாமேபோய் இவர்களை வாரிப்பிடியாகப்பிடித்துக்கொண்டு வரவேணுமென்று, ராமக்ருஷ்ணாத்யவதாரமாக அவதரித்து *படாதனபட்டுத் திருத்தப்பார்த்தவிடத்திலும், (ఆసురీంయోనిమాపన్నా మూఢాజన్మనిజన్మని। మామప్రాప్యైవకౌన్తేయతతోయాన్త్యధమాం గతిం)(ஆஸுரீம்யோநிமாபந்நாமூடாஜந்மநிஜந்மநி-மாமப்ராப்யைவகௌந்தேயததோயாந்த்யதமாங்கதிம்) என்றும், (అవజానన్తిమాంమూఢా మానుషీంతనుమాశ్రితం। పరంభావమజానన్తో మమ భూతమహేశ్వరం) (அவஜாநந்திமாம்மூடாமாநுஷீம்தநுமாஶ்ரிதம்-பரம் பாவமஜாநந்தோ மமபூதமஹேஶ்வரம்) என்றுஞ்சொல்லுகிறபடியேஸஜாதீயப்ரதிபத்தியாலே அவஜ்ஞைபண்ணிஎதிரம்புகோப்பாராய், *பலபலநாழஞ்சொல்லி *கேட்பார் செவிசுடுகீழ்மை வசவுகளைவைது *வல்லவாபழித்து வாக்துருகதங்கள் பண்ணுவாராய், ஆஸுரப்ரக்ருதிகளாய்த்தன்னைவந்துகிட்டாமையன்றிக்கே, (అహంమే) (அஹம்மே) என்று எதிரிட்டு அதமமானகதிகளிலே விழுகிறபடியைக்கண்டு, *மனிசரும் மற்றும் முற்றுமாய மாயப்பிறவிபிறந்த தனியனைகையாலேவிஸஜாதீயரானநமக்கு இது ஸாத்யமன்றென்று பார்த்து, பார்வைவைத்து மாகமபிடிப்பாரைப்போலேமநுஷ்யஸஜாதீயரான ஆழ்வார்களையிடுவித்துஜகத்தைத்திருத்தியருளவேணுமென்றுபார்த்தருளி, "ஸ்ரீவத்ஸகௌஸ்துபவைஜயந்தீவநமாலைகளையும், ஸ்ரீபூமிநீளைகளையும், ஸ்ரீபஞ்சாயுதாழ்வார்களையும், அநந்தகருடவிஷ்வக்ஸேந ப்ரப்ருதிகளையும்பார்த்து, "நீங்கள்போய் லீலாவிபூதியிலே நாநாவர்ணங்களிலும் அவதரித்து, அகிலாத்மோத்தாரணம் பண்ணுங்கோள்" என்று நியமித்தருள; அவர்களும (కలౌఖలు భవిష్యన్తి నారాయణపరాయణాః। క్వచిత్క్వచిన్మహాభాగా ద్రమిడేషుచభూరిశః) (கலௌகலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:-க்வசித்க்வசிந்மஹாபாகாத்ரமிடேஷுசபூரிஶ:) என்றும், (తామ్రపర్ణీనదీయత్ర కృతమాలాపయస్వినీ। కావేరీచమహాభాగా ప్రతీచీచసరస్వతీ) (தாம்ரபர்ணீநதீயத்ரக்ருதமாலா பயஸ்விநீ-காவேரீசமஹாபாகாப்ரதீசீசஸரஸ்வதீ, என்றுஞ்சொல்லுகிறபடியே இந்நதிகளின்ஸமீபங்களானத்ராமிடபூபாகத்திலேநிம்நகளைஉயர்த்தநாநாவர்ணங்களிலேவந்தவதரிக்க, ஸர்வேசவரனும் அவர்களுக்கு *மயர்வறமதிநல மருளி அவர்கள்முகேந, ஸர்வாதிகாரமான த்ராவிடவேதரூப திவ்யப்ரபந்தங்களைப்ரகாசிப்பித்தருளினன்.

ப்ரவேசம் முற்றிற்று.

பொய்கையாழ்வார்வைபவம்.

எங்ஙனேயென்னில்; (కాఞ్చ్యాం సరసి హేమాబ్జే జాతం కాసారయోగినం। కలయే యః శ్రియఃపత్యై రవిం దీపమకల్పయత్) (காஞ்சயாம்ஸரஸிஹேமாப்ஜே ஜாதம்காஸாரயோகிநம் - கலயேயஶ்ரிய:பத்யை ரவிம்தீபமகல்பயத்) என்றும், - (ముకున్దస్య ముఖోల్లాస మూలవాగ్జాలముచ్ఛ్రితం। మునిముఖ్యం సరోజాతం ముక్తిమూలముపాస్మహే) (முகுந்தஸ்யமுகோல்லாஸமூலவாக்ஜாலமுச்ச்ரிதம் - முநிமுக்யம்ஸரோஜாதம் முக்திமூலமுபாஸ்மஹே) என்றும் - முதலாழ்வார்கள்மூவரிலும்வைத்துக்கொண்டுபரதமமபொய்கையாழ்வார், (ఇతి బ్రహ్మణో నామ తే సన్తి త్రాణి శిష్టో హరిః। తత్ర కాఞ్చీతి విఖ్యాతా పురీ పుణ్యవివర్ధనీ) (இதிப்ரஹ்மணோநாமதேஸந்தத்ராம்சிதோஹரி: தத்ரகாஞ்சீதிவிக்யாதாபுரீபுண்யவிவர்தநீ) என்கிறபடியேசுகாரவாச்யனான ப்ரஹ்மாவினாலே, ஸர்வேச்வரன அச்வமேதததாலே ஆராதிதனான ஸ்தலமாகையாலே, காஞ்சீபுரமென்றுப்ரக்க்யாதமுமாய, புண்யவிவர்த்தகமுமான * கல்லுயர்ந்தநெடுமதிள சூழ்கச்சியிலே * காலநிலந்தோயாது விண்ணோர்தொழுங் கண்ணன்வெஃகாவில் பொற்றாமரைப்பொய்கையிலே, காஞ்சநபத்மகர்ப்பத்திலே ஐப்பசிமாஸத்திலே விஷ்ணுநக்ஷத்ரமான ச்ரவணநக்ஷத்ரத்திலே, ஸ்ரீபாஞ்சஜந்யாம்சராய் அவதரித்தருளினார். (హేమాబ్జినీ సామసరోజగర్భాత్ శ్రీపాఞ్చజన్యాంశజనిః స యోగీ। తారే హరేరాశ్వయుజాఖ్యమాసే సమస్తజీవావనకర్మహేతోః) (ஹேமாப்ஜிநீஹேமஸரோஜகர்பாத் ஸ்ரீபாஞ்சஜந்யோஜநிதத்ரயோகீ - தாரேஹரோராஶ்வயுஜாக்யமாஸே ஸமஸ்தஜீவாவநகர்மஹேதோ:) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே.

பூதத்தாழ்வார்வைபவம்.

அநந்தரம், (మల్లాపురవరాధీశం మాధవీకుసుమోద్భవం। భూతం నమామి యో విష్ణోః జ్ఞానదీపమకల్పయత్) (மல்லாபுரவராதீசம்மாதவீகுஸுமோத்பவம்- பூதம்நமாமியோவிஷ்ணோ:ஜ்ஞாநதீபமகல்பயத்) என்றும், (వన్దే భూతాఖ్యయోగీన్ద్రం వరేణ్యగుణసమ్పదం। లక్ష్మీసహాయకరుణా ప్రాప్తప్రమితివైభవం) (வந்தே பூதாக்யயோகீந்த்ரம் வரேண்யகுணஸம்பதம்-லக்ஷ்மீஸஹாயகருணா ப்ராப்தபரமிதிவைபவம்) என்றும், "மாதவன்பூதங்கள்" என்றும் சொல்லலாம்படியான பூதத்தாழ்வார், "கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத்தலசயநம" என்று அநுஸந்தேயமானதிருக்கடலமல்லையிலே பரிமளப்ரசுரமாய் நன்றாயிருப்பதொரு மாதவிப்பூவிலே

---

* (అజ్ఞానధ్వాన్తవిధ్వంసనపటుదీపాయితార్యైః ... శుక్లాష్టమ్యాం భౌమవారే ... కాసారయోగీ)

அந்த ஐப்பசிமாஸத்திலே அவிட்டநக்ஷத்ரத்திலே ஸ்ரீகௌமோதகீகதாம்சராய் அவதரித்தருளினார். (మాసేఽథ తస్మిన్వసుభే జనిష్ట పారేసముద్రంపురిమల్లనామ్న్యాం। లతాగృహాన్తాద్భువిభూతనామా కౌమోదకీశక్తిమయో మునీన్ద్రః) (மாஸேதஸ்மிந் வஸுபே ஜநிஷ்டபாரே ஸமுத்ரம் புரி மல்ல நாம்ந்யாம் - லதாக்ர்ஹாந்தாத்புவி பூதநாமா கௌமோதகீ ஶக்திமயோ முநீந்த்ர:) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லப்பட்டதிறே.

பேயாழ்வார்வைபவம்.

அநந்தரம், (దృష్ట్వా నిశి మహాసారవర్షయా మయిలాధిపః । కూపే రక్తోత్పలే జాతం మహదాహ్వయమాశ్రయే) (த்ர்ஷ்டவா நிஶி மஹாஸார வர்ஷயா மயிலாதிபம்-கூபே ரக்தோத்பலே ஜாதம் மஹதாஹ்வயமாஶ்ரயே) (పద్మారమణపాదాబ్జప్రేమభ్రాన్త్యమనోజుషా। భ్రాన్తయోగీతి విఖ్యాతం మునిం వన్దే గుణామ్బుధిం)(பத்மாரமணபாதாப்ஜப்ரேமப்ராந்த்யமநோஜுஷா-ப்ராந்தயோகீதி விக்யாதம் முநிம்வந்தே குணாம்புதிம்) என்கிறபடியே பேயாழ்வாரும் * தேனமர்சோலைமாடமாமயிலையிலே ஆதிகேசவப்பெருமாள்கோயில் திருக்கிணற்றிலே யுண்டானதொரு செவ்வல்லிப்பூவிலே, அந்த ஐப்பசிமாஸத்தில், சதயநக்ஷத்ரத்திலே ஸ்ரீநந்தகாம்சராய் அவதரித்தருளி, (నియతపులకితాఙ్గః సర్వదానన్దబాష్పా గళితనిఖిలసఙ్గా గద్గదస్తోత్రగీతిః। అమరతలహరివర్ణహాసనృత్తోపపన్నా వికటనటకవృత్తిర్విష్ణుభక్తిర్విభాతి) (நியதபுலகிதாங்கா: ஸர்வதாநந்தபாஷ்பா கலிதநிகிலஸங்கா கத்கதஸ்தோத்ரகீதி: - அமரதலஹரிவர்ணஹாஸ நர்த்தோபபந்நா விகடநடகவ்ருத்திர்விஷ்ணுபக்திர்விபாதி) என்கிறபடியே விஷ்ணுபக்தியையுடையராய், "பேயரேயெனக்கியாவரும் யானுமோர் பேயனே" என்கிறபடியே... "பேயனாயொழிந்தே னெம்பிரானுக்கே" என்கிறபடியே பகவதநுபவாதிசயத்தாலே "அழுவன்தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்" என்றும், "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றும் சொல்லுகிறபடியே பகவதநுபவபாரவச்யம், அல்லாத ஆழ்வார்களைக்காட்டில் இவர்க்கு மிகவிருக்கையாலே பேயாழ்வாரென்றதையே நிரூபகமாகவுடையராயிருப்பர். (తన్మాస ఏవావిరభూద్విపశ్చిత్ ప్రాచేతసర్క్షే మయూరపుర్యామ్। మహాభిధానో మణికైరవాన్తాత్ శ్రీనన్దకాత్మా శ్రితభక్తిరూపః) (தந்மாஸ ஏவாவிர்பூத்விபஶ்சித் ப்ராசேதஸர்க்ஷே மயூரபுர்யாம் - மஹாபிதாநோ மணிகைரவாந்தாத் ஸ்ரீநந்தகாத்மா ஶ்ரிதபக்திரூப:) என்று திவ்யஸூரி சரிதையிலே சொல்லிற்றிறே.*

---

* (తస్మిన్ జాతం శతతారకాయాం మయూరపుర్యాం మణికైరవాన్తాత్। భక్త్యా మహాన్తం మహదాహ్వయం తం శ్రీనన్దకాంశం శ్రితభక్తిరూపమ్)

இப்படி இம்மூவரும் யோநிஜாதரன்றிக்கே புஷ்பஜாதராய் வந்தவதரித்து, எம்பெருமானுடைய நிர்ஹேதுககடாக்ஷத்தாலே "முக்குணத்திரண்டவையகற்றி" என்கிறபடியே ராஜஸ தாமஸ ரஹிதராய், (ప్రవృత్తిఞ్చ నివృత్తిఞ్చ కార్యాకార్యే భయాభయే। బన్ధంమోక్షఞ్చ యావేత్తి బుద్ధిస్సాపార్థసాత్త్వికీ) (ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே-பந்தம்மோக்ஷஞ்சயாவேத்தி புத்திஸ்ஸாபார்த்தஸாத்விகீ) என்று சொல்லுகிற சுத்தஸத்வகுணமான * ஒன்றினில் ஒன்றி நின்று, (దాసావయమితిబ్రహ్మణ్యుపాసకాః) (தாஸாவயமிதிப்ரஹ்மண் யுபாஸகாஃ) என்றும், (దాసభూతాస్స్వతస్సర్వేహ్యాత్మానః ... బద్ధమోక్షతః) (தாஸபூதாஸ்ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாநஃ பரமாத்மநஃ - நாந்யதாலக்ஷணம்தேஷாம் பந்தேமோக்ஷே ததைவச) என்றும், (స్వత్వమాత్మని సఞ్జాతం స్వామిత్వం బ్రహ్మణి స్థితం) (ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்) என்றும், (ఆత్మదాస్యం హరేస్స్వామ్యం స్వభావఞ్చ సదా స్మర) (ஆத்மதாஸ்யம் ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்சஸதாஸ்மர) என்றும், (జ్ఞానానన్దమయస్త్వాత్మా శేషోహి పరమాత్మనః) (ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா ஶேஷோஹி பரமாத்மநஃ) என்றும் சொல்லுகிறபடியே, ஸ்வதஸ்ஸித்த பகவத்தாஸ்யரஸத்தை யுடையராய், அத்தாலேயுண்டான ஸம்யக் ஜ்ஞாந பக்தி வைராக்யங்களை யுடையராய, "புலன்களைந்து பொறிகளா லேதமொன்றுமிலாத" என்கிறபடியே அந்யபாரதி வர்ஜிதராய், "உவர்த்த பாலைப்போல் சீரில் பழுத்தொழிந்தேன்" என்று பால்யாத்ப்ரப்ருதி பகவத்குணைக தாரகராயிருக்கிற இவர்கள்; ஸம்ஸாரிகள், தங்களைப்போலன்றிக்கே * உண்டியேயுடையேயுகந்து சப்தாதிவிஷயங்களிலே அதிப்ரவணராய், * நீதிநன்னெறி நிற்கவல்லாத செய்து பகவத்விமுகரா யிருக்கையாலே "நாடுமானிடத்தோ டெனக்கரிது" என்கிறபடியே அவர்களோட்டை ஸஹவாஸம் தங்களுக்கு துஸ்ஸஹமாய் ஒருநாளிருந்தவிடத்திலே யொருநாளிராமே, க்ராமைகராத்ரராய் இவர்கள் ஒருவரையொருவர் அறியாதே தனித்தனியே வர்த்திக்கிறகாலத்திலே, ஸர்வேச்வரனும் (మహాత్మానోఽనన్యమానసాః) (மஹாத்மாநோऽநந்யமாநஸாஃ) என்றும், (జ్ఞానీత్వాత్మైవమేమతం) (ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்) என்று சொல்லுகிறபடியே, தனக்கு ஆத்மபூதரான இவ்வாழ்வார்களைக்கொண்டு ஜகத்தைத் திருத்தவேணுமென்று நினைத்து, (అనాదిమాయయాసుప్తః) (அநாதிமாயயாஸுப்தஃ) என்கிறபடியே அநாத்யவித்யாபிபூதராய்ப் போருகிற ஸம்ஸாரி சேதநருக்கு அஜ்ஞாநாந்தகாரத்தைப்போக்கி, ஸ்வவிஷயஜ்ஞாநபக்திகளை யுண்டாக்குகைக்காக, ஒருநாள்ராத்ரியிலே இம்மூவரையும் * சேரமையாமா நிறைந்த செல்வத்திருக்கோவலூரிலே ஒருதிருவிடை

கழியிலேயாதர்ச்சிகமாக ஸங்கதராக்க, இவர்களும் (వైష్ణవో వైష్ణవం దృష్ట్వా దండవత్ ప్రణమేత్ భువి) (வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத்ப்ரணமேத்புவி) என்கிறபடியே அந்யோந்ய வந்தந பராராய்க்கொண்டு, நீரார், நீராரென்று ஒருவரையொருவர் கேட்க; (భగవచ్ఛేషభూతోஹం మదన్యార్హోஹతత్పరః) (பகவச்சேஷபூதோஹம் அநந்யார்ஹோஹதத்பரஃ) என்றும், (దాసోஹం వాసుదేవస్య) (தாஸோஹம்வாஸுதேவஸ்ய) என்றும், (దాసోஹం కోసలేంద్రస్య) (தாஸோஹம்கோஸலேந்த்ரஸ்ய) என்றும், (జ్ఞానానందమయస్త్వాత్మా శేషోహి పరమాత్మనః) (ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோஹிபரமாத்மநஃ) என்றும் இத்யாதிகளாலே தந்தாமுடைய ஸ்வரூபநிர்த்தேச ப்ரஸங்க வ்யாஜேந, (బోధయన్తః పరస్పరమ్) * போதயந்தஃபரஸ்பரம் பண்ணிக்கொண்டிராநிற்க, அவ்வளவிலே எம்பெருமான், (అనన్యాహి మయా సీతా భాస్కరేణ ప్రభా యథా) (அநந்யாஹிமயாஸீதா பாஸ்கரேணப்ரபாயதா) என்றிருக்குமவளும்கையுமாய் * இறையுமகலகில்லாத பிராட்டியோடு கூடக்கொண்டு * கூராராழி வெண்சங்கேந்தி, (తులసీకాననం యత్ర యత్ర పద్మవనాని చ। యత్ర వైష్ణవాయత్ర తత్ర సన్నిహితో హరిః) (துளஸீகாநநம்யத்ர யத்ரபத்மவநாநிச - யத்ரவைஷ்ணவாயத்ர தத்ரஸந்நிஹிதோஹரிஃ) என்கிறபடியே * செந்தமிழ் பாடுவாராகிற இவர்களருகே * தழுவிழூசி ப்புகுந்து நெருக்கிநிற்க, இவர்களும நம்மையொழியவும * காமரூநீகோவலிடைகழியைப் பற்றிநிற்கிறார்களுண்டோவென்று பார்ச்சைக்காக, * வையம்தகளியாய் விளக்கேற்றியும் * ஞானச்சுடர் விளக்கேற்றியும் * உணர்வென்னுமொளிகொள் விளக்கேற்றியும் பார்த்தருளி, (திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்) என்றும், (நீயுந்திருமகளும் நின்றாயால்) என்றும் - ஸ்ரீமந்நாராயணனுடைய * மைப்படி மேனியையும் செந்தாமரைக்கண்ணையும், பரமவைதிகரான இவர்கள் * நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டநுபவித்து, அநுபவஜநித ப்ரீதயதிசயம் உள்ளடங்காமல், (பாலேய்தமிழர்) என்றுசொல்லுகிற நற்றமிழ ராகையாலே (வையந்தகளி) (அன்பேதகளி) (திருக்கண்டேன்) என்கிற திவ்யப்ரபந்தங்களை ஸம்ஸாரிகள் அதிகரித்து அஜ்ஞாநாந்தகாரம் நீங்கி உஜ்ஜீவிக்குமபடி * ஞானத்தமிழாக வருளிச்செய்து உபகரித்தருளி ஜகத்தை வாழ்வித்தருளினார்கள்.

திருமழிசைப்பிரான்வைபவம்.

(శక్తి పంచమయ విగ్రహాత్మనే శుక్తికారజత చిత్త హారిణే। ముక్తిదాయక మురారిపాదయోర్భక్తిసారమునయే నమో నమః) (ஶக்திபஞ்சமயவிக்ரஹாத்மநே ஶூக்திகாரஜதசித்தஹாரிணே - முக்திதாயகமுராரிபாதயோர்பக்திஸார

முநயேநமோநம:) என்று - ஆழ்வார்திருமழிசைப்பிரானுகிறார், * ஒருத்திமகனாய்ப்பிறந்தோரிரவிலொருத்திமகனாயொளித்து வளர்ந்தருளின க்ருஷ்ணனைப்போலேயாய்த்து அவதரித்தருளினபடியும், வளர்ந்தருளினபடியும். எங்ஙனேயென்னில்;-(తతోఖిలజగత్పద్మబోధాయాచ్యుతభానునా। దేవకీపూర్వసంధ్యాయామావిర్భూతంమహాత్మనా,) (ததோகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா-தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்ப்பூதம்மஹாத்மநா) என்கிறபடியே யதுகுலத்திலேபிறந்து, (అనార్ద్రమార్ద్రంకరసంకరాత్స్యమపల్లవంపల్లవితంతదాసీత్। గావోబభూవుస్తేనదుఘాబభూవు ర్యాన్తాననేనస్పృశతిస్మశౌరిః) (அநார்த்ரமார்த்ரம்கரஸம்ஸ்பர்சாத்ய மபல்லவம்பல்லவிதம்ததாஸீத் - காவோபபூவுர்துகாபபூவுர்நாராயணேநந்தகுலம்பரவிஷ்டே) என்கிறபடியே * யதுகுலத்திலேபிறந்து நந்தனகுலமதலையாய கோபகுலத்திலே வளர்ந்தருளினாப்போலே இவ்வாழ்வாருடையதிருவவதாரமும் ஒருபிறவியிலே இருபிறவியாயிறேயிருப்பது. அதெங்ஙனேயென்னில்;-அத்ரி, ப்ருகு, வஸிஷ்ட, பார்க்கவ, ஆங்கிரஸாதிகளான மஹர்ஷிகளெல்லாரும ப்ரஹ்மாவின்பக்கலிலேசென்று, பூலோகத்திலே உத்க்ருஷ்டதமமான க்ஷேத்ரத்திலே எங்களுக்குநித்யவாஸம்பண்ணவேணும், அத்தை நிர்ணயித்துச் சொல்லவேணுமென்று கேட்க; ப்ரஹ்மாவும * உலகுமழிசையு முளனுணர்ந்து விச்வகர்மாவைக்கொண்டு பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணையாய ஸசைலவநபுதி காநனையான பூமியெல்லாம்ஒருதட்டும் விதேஹபவநக்ஷேத்ரமானதிருமழிசையொன்றும் ஒருதட்டுமாகத் துலையிலே வைத்துநிறுக்க, (ధాత్రాతులితాచలఘుర్మహీ) (தாத்ராதுலிதாசலகுர்மஹீ) என்கிறபடியே பூமியைவைத்தபக்கம் நொய்தாய், * மாநீர்மழிசையை வைத்தெடுத்தபக்கம் கனத்திருக்கக்கண்டு, அதற்கு "மஹீஸாரக்ஷேத்ரம" என்று பேரிட்டு திருமிசையாலே, அந்தரிஷிகளும அவ்விடத்தைவிடாதே நித்யவாஸம்பண்ணிக்கொண்டிரா நிற்க;

அவர்களிலே பார்க்கவ மஹர்ஷியானவர், (పశ్చిమేయాజనార్థేచ విదేహాధిష్ఠితంవనం। భార్గవోదీర్ఘసత్రేణ వాసుదేవంసనాతనం॥ అభిపూజ్యయథాన్యాయమిష్టిసత్యమకల్పయత్) (பஶ்சிமேயோஜநார்த்தேச விதேஹாதிஷ்டிதம்வநம - பார்க்கவோதீர்க்கஸத்ரேண வாஸுதேவம்ஸநாதநம - அபிபூஜ்யயதாந்யாய மிஷ்டிஸத்யமகல்பயத) என்று ப்ரஹ்மாண்ட புராணத்திலே சொல்லுகிறபடியே, தீர்க்கஸத்ரமென்கிற யாகத்திலே ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணனை ஸகரமமாக யஜித்துக்கொண்டிருக்கிறகாலத்திலே பார்க்கவருடையபத்நி கர்ப்பிணியாய், "பன்னிருதிங்கள் வயிற்றிற்கொண்ட" என்கிறபடியே பன்னிரண்டுமாஸத்துக்குப்பின்பு தைமாஸத்தில் மகாநக்ஷத்ரத்தில், பிண்டாக்ருதியாகப்ரஸவிக்க;(సాగర్భమాధత్తమునేర్పత్నీసుదర్శనాంశేన [illegible]।

పపాతగర్భోద్భువి తైష్యమాసే మఘాభిధానే మహనీయతారే) (ஸாகர்ப்பமாதத்தமு
ரேஸ்ஸபத்நீ ஸுதாஸநாம்ஸோநத்தாநுவிஷ்டம்பபாதகாப்போபுவி
தைஷ்யமாஸே மகாபிதாநேமஹநீயதாரே) என்கிறபடியே, ஸுதர்
ஸநாம்ஸோந திருமழிசைப்பிரான் அவதரித்தாரென்று திவ்யஸூரி
சரிதையிலே சொல்லிற்றிறே. அநந்தரம், உல்பஸம்வேஷ்டிதமாய்
ஒன்றும் ரூபீகரியாமல் அவதரிக்கையாலே பார்க்கவரும் தபத்நியும்
அநாதரித்து ஒருபிரப்பந் தூற்றின் கீழே வைத்துப்போக; அந்த
உல்பாவ்ர்த பிண்டாக்ருதியானது, அகிலஜகந்மாதாவான பெரிய
பிராட்டியாருக்ரஹத்தாலே, பூமிப்பிராட்டி ஸுரக்ஷிதமாகவைத்
துக்கொண்டிருக்கச்செய்தே,* "சிக்கென்றுசென்னிக்கால் சீரிடை
பின் கண்ணுயிராயொக்க வுருப்பாய்ந்தறிவாலுள்நிறைந்து" என்
கிறபடியே ஸர்வாவயவங்களும் பரிபூர்ணமாய், அதிலே ஜீவஸம்ப
ரித்துத்தோற்றி, "பேதைக்குழவி" என்றும் சொல்லுகிறபடியே
அத்யந்தசிசுவாய் - பசுங்குழந்தையான ஆழ்வார், பசிதாஹங்க
ளாலேயீடுபட்டு ஸ்தந்யார்த்தியாய், விஜநமான வநத்திலே ஒரு
பிரப்பின் தூற்றிலே ரோதநம்பண்ண, அவ்வளவிலே மஹீஸார
க்ஷேத்ராதிபதியான பெருமாள் அங்கே எழுந்தருளி, கருணைமர்
த்தளக நிஷ்பந்தியான கடாக்ஷபாதங்களாலே, இவர் பசிதாஹம்
தீரும்படி குளிரக்கடாக்ஷித்து ஆராவமுதமான ஸ்வவிக்ரஹத்
தைக்காட்டி, ஆஸ்வஸிப்பித்து மறைய; இவரும், தத்விரஹா
ஸஹிஷ்ணுவாய், மீளவும் அழத்தொடங்கினார்.

அங்கே "திருவாளன்" என்கிற ஒருத்தன் பிரம்பறுக்கப்போன
விடத்திலே இவருடைய ஆர்த்தநாதங்கேட்டு கூடவந்தவர்களு
டன் சோதித்து, இவரைக்கண்டு ஹர்ஷபரகாஷ்டையோடே எடுத்
துக்கொண்டுவந்து, தன்னுடைய பத்நியான பங்கயச்செல்வியார்
கையிலேகொடுக்க; அவளும், வந்த்யையாகையாலே, மிகவும்
ப்ரீதையாய் "உத்தாநஞ்செய்து" என்கிறபடியே எடுத்துக்கொ
ண்டு, புத்ரப்ரதிபத்தியைப்பண்ணி, (தத்துக்கொண்டாள்கொலோ
தானேபெற்றாள்கொலோ) என்று விகல்பிக்கலாம்படி ஆதரத்து
டனே ஸ்நேஹபூர்வகமாக வளர்க்க வளர்ந்தருளுகிறவளவிலே,
"வனமுலைகள்சோர்ந்துபாய" என்கிறபடியே முலைப்பால்சுரக்க,
இவளும், "நந்தகோபனணிசிறுவா நான்சுரந்தமுலையுணாய்" என்
னும்படியே, முலைகொடுக்கத்தேட இவரும், ஸ்தந்யாதிபோஜ்யங்
களிலே நிராஸராய், பகவத்குணைகதாரகராய், வாக்வ்யாஹார
ரோதநாதிகளொன்றுமின்றியே மலமூத்ரரஹிதராய், பரிபூர்ண
மாக ஸர்வாவயவங்களும் வர்த்திக்க எழுந்தருளியிருக்க;

(సిద్ధార్థిన్యుష్ణరశ్మౌ మకరమధిగతే ద్వాపరేఽష్టానధారా క్షోదసంవత్సరాఘేగత
వతిచదినే సప్తమం శేమఘాఖ్యే । నక్షత్రే భానువారే మునివరతనయో భక్తిసారో మునీంద్ర
ర్భూమౌ సాక్షాదవాతారంజగదుపకృతయే పర్వణో న్యద్యురక్త)

இந்த ஆஸ்சர்யத்தை, அபுத்ரவானுமாய், திருமழிசையிலே வாஸமபண்ணும் சதுர்த்தவர்ண ஜாதனுமாய், ப்ராஜ்ஞனுமான வொருவ்ர்த்தன கேட்டு, பரங்காகப் பாலமுதுகாய்ச்சிக் கொண்டு, ஸ்வபார்யாஸஹிதனுய இவரிருக்கிறவிடத்திலேவிடியற்காலததேவந்து, பரசமசகதிமயமான சிசுவினுடைய அப்ராக்ர்த திவ்ய தேஜஸ்ஸைக்கண்டு அத்யாஸ்சர்யப்பட்டு, தான் கொண்டுவந்த பாலமுதை ஸமாப்பித்து ப்ரார்த்தித்து "அமுது செய்யப்பண்ணவேணுமெனறு இத்தை கொண்டுவந்தேன், அமுதுசெய்தருளவேணும" எனறு பஹுமாபேண்டிக்கொள்ள; ஆழ்வாரும் அவனிடத்தில க்ர்பாதிசயத்தாலே அவனகொண்டுவந்த பாலமுதையமுதுசெயதுபோகவிட, அவர்களும் அப்படியேபலநாளும போரபரிதியுடனே பாலமுதை அமுதுசெயவியாநிற்க; ஒருநாள், ஆழ்வார, வ்ர்த்தத்மபதிகளுடைய மநோபாவமறிந்து, அறறைக்கு அவர்கள கொண்டுவந்த பாலமுதை யமுதுசெயது சேஷித்தபாலே, "நீங்கள் ஸ்வீகரியுங்கோள, உங்களுக்குநலலபுத்ரனுண்டாவன" எனறு பரஸாதிக்க; அவர்களும் அபபடியே ஸ்வீகரித்து, யௌவநாவஸ்த்தையையடைந்து, தத்பதநியும் கர்ப்பவதியாய்ஒன்பதுமாஸமசென்று பததாம்மாஸம நிறைந்தவாறே, * கேசவன்றமராய்*நாக்கொண்டு மானிடம்பாடாத மஹா ப்ராஜ்ஞரான ஒருகுமாரரை ப்ரஸவிக்க, ஸ்ரீவிதுரரைப்போலே விளங்குகிற புத்ரனைக்கண்டு, * பத்துநாளுங்கடந்த விரண்டாநாள் இவருக்கு "கணிகண்ணன" எனறு திருநாமம்சாத்தி, அகிலவித்யைகளையும அதிகரிப்பித்தார்கள

பினபு ஆழ்வாரும் பகவத்ஸ்யாஸ்வாதநத்ர்ப்தசேதநராய், விடப்பட்ட அந்யாபேக்ஷயையுடையராய், பைதர்கவேச்மத்திலே வளர்ந்தருளுகிற இவர், ரிஷிபுத்ரராகையாலே ஏழுதிருநக்ஷத்ரத்துக்குப் பின்பு "இளைப்பினையியக்கம் நீக்கி யிருந்து முனமிமையைககூட்டி அளப்பிலைம்புலனடக்கி" எனகிறபடியே யம நியமாதியான அஷ்டாங்க யோகாப்யாஸத்திலே திருவுள்ளமாய், அதுக்கு ஜகத்காரணவஸ்துவே த்யாநத்துக்கு விஷயமாகச் சொலலுகையாலே, அந்தவஸ்துவை அறியவேணுமல் * பிணங்குஞ்சமயம பலபலவாகையாலே அவையவை தோறும்புக்கு ஆராய்வோமென்றுகொண்டு, * சாக்யோலூக்யாக்ஷபாதக்ஷபணகபில பதஞ்சலிகளாகிற பாஹ்யஸமயங்களையும், சைவமாயாவாத ந்யாயவைஶேஷிகபாட்ட ப்ராபாகராதிகளாகிற குத்ர்ஷ்டி ஸமயங்களையும் உணர்ந்துரைத்து ஆராய்ந்து பார்த்தவிடத்தில், "இறைநிலை யுணர்வரிது" என்கிறபடியே அவற்றிலே ஒருபசையில்லாமையாலே, அங்கு ஆசையற்று, "அறியார்சமணர்

அயர்த்தார்பவுத்தர், சிறியார் சிவப்பட்டார்" என்றுகொண்டு ஈனமான * இடங்கொள்சமயத்தையெல்லா மெடுத்துக்களைந்து, "கலையறக்கற்றமாந்தர்காண்பரோ கேட்பரோதான்" என்று இதர ஸித்தாந்தங்களை நச்வரமென்று கைவிட்டு, இப்படி எழுநூறு திருநக்ஷத்ரம் சென்றவாறே;

ஸ்ரீவைஷ்ணவராய் பரமவைதிக ஸித்தாந்த நிஷ்டராய் "இனியறிந்தேனீசற்கும் நான்முகற்குந்தெய்வம" என்று அறுதி யிட்டு, * வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்தவிளக்கை யறிந்து தத்ப்ரவணராக, ஸர்வேச்வரனும் அதுவே பற்றாசாக இவர்க்கு * மயர்வறமதிநலமருளி, தன்னுடைய திவ்யாதம ஸ்வரூபத்தையும் ததாசரயமான ஜ்ஞாநசக்த்யாதி கல்யாணகுணங்களையும், உபயத்தையும் ப்ரகாசிப்பிக்கிற திவ்யமங்கள விக்ரஹத்தையும், ததாதாரமான கிரீடாதி நூபுராந்தமான திவ்யபூஷண வர்க்கத்தையும், அவற்றோடே விகல்பிக்கலாம்படியான சங்கசக்ராதி திவ்யாயுதங்களையும,இத்தனைக்காட்டிலெரித்தனிலாவாகாமே அநுபவிக்கிற லக்ஷ்மீப்ரப்ருதி மஹிஷீவர்க்கத்தையும, "சூழ்ந்திருந்தேத்துவர்" என்றும், "ஏவமற்றமராட்செய்வார்" என்றுஞ் சொல்லுகிறபடியே அச்சேர்த்தியிலே அடிமைசெய்கையே தங்களுக்கு தாரகாதிகளாக வுடையரான திவ்ய பரிஜநவர்க்கத்தையும, அந்தபோகத்துக்கு வாத்தசமாய், * நலமந்தமில்லதோர நாடாய் போகவிபூதியான பரமபதத்தையும ஸாக்ஷாத்கரிப்பித்து, பின்னையும் ப்ரக்ருதி புருஷகாலாத்மகமான லீலாவிபூதியினுடைய ஸ்ருஷ்டிஸ்த்திதி ஸம்ஹாரங்களை அத்வாரகமாகவும ஸத்வாரகமாகவும் நின்று, "இன்புறு மிவ்விளையாட்டுடையான" என்கிறபடியே தனக்குலீலையாக வுடையனாயிருக்கிறபடியையும காட்டிக்கொடுக்க;

இப்படி உபயவிபூதிநாத்னான தான, ([illegible]) (யந்நாபிபத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதிர்விச்வஸ்ருக்) என்கிறபடியே * நான்முகனை,முழ்த்தநீருலகெல்லாமபடைக்கும்படி முதலிலேதனக்கு ஜ்யேஷ்டபுத்ரனாக ப்ரஹ்மாவைத் தன்திருநாபீகமலத்திலே, ([illegible]) (யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்) என்னும்படி முந்துற உத்பந்நனாக்கின படியையும், ([illegible]) (ப்ரஹ்மணஃபுத்ராய ஜ்யேஷ்டாய ச்ரேஷ்டாய) என்கிறபடியே அந்த ப்ரஹ்மாவுக்கு ஜ்யேஷ்டபுத்ரனான ருத்ரன் உத்பந்நனானபடியையும ப்ரகாசிப்பித்தருள; இவரும் (நான்முகனை நாராயணன்படைத்தான், நான்முகனுந் தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்) என்று தம் வாக்காலே சொல்லும்படி இவற்றையெல்லாம் இவர் ஸம்சயவிபர்யயமற அறிந்து, * (சாக்கியங்கற்றோஞ் சமணங்கற்

* இப்பாட்டைத் திருத்த மாயினறி விட்டுவிட்டனவும்.

ரேஞ் சங்கரனுர், ஆக்கிய வாகமநூலாராய்ந்தோம் - பாக்கியத்தால் - செங்கட்கரியானைச் சேர்ந்தோம் தீதிலமே - எங்கட்கரிய தென்றில்) என்றநுஸந்தித்தருளி, இதரஸித்தாந்த நிவ்ருத்தி பூர்வகமாக, * திருநின்றபக்கம் திறவிதென்றோர்ந்து, (ఆలోడ్య సర్వశాస్త్రాణి విచార్య చ పునః పునః। ఇదమేకం సునిష్పన్నం ధ్యేయో నారాయణస్సదా) (ஆலோட்யஸர்வஶாஸ்த்ராணி விசார்யசபுநஃபுநஃ - இதமேகஂஸுநிஷ்பந்நஂத்யேயோநாராயணஸ்ஸதா) என்றும், (యోగేశ్వరం జగన్నాథం విష్ణుం జిష్ణుం శ్రియః పతిం। పద్మనాభం విశాలాక్షం చిన్తయామి జగత్పతిం) (யோகேஶ்வரஂஜகந்நாதஂ விஷ்ணுஂஜிஷ்ணுஂஶ்ரியஃபதிஂ - பத்மநாபஂவிஶாலாக்ஷஂ சிந்தயாமிஜகத்பதிம்) என்றுஞ் சொல்லுகிறபடியே ஜகத்காரணபூதனுய், ஸர்வாந்தர்யாமியாய், புண்டரீகாக்ஷனுய், ஜகந்நாதனை ஸ்ரீயப்பதியை த்யாநம்பண்ணிக்கொண்டு க்ருதார்த்தராய் திருவல்லிக்கேணியிலே கஜேந்த்ர ஸரஸ்ஸின்கரையிலே எழுநூறு ஸம்வத்ஸரம் பகவதநுபவம்பண்ணிக்கொண்டுயோகத்திலே எழுந்தருளியிருக்கிறகாலையிலே, ஒருநாள் இவர் நிரந்தரபகவதநுபவத்துடனே * கந்தாஸீவநஞ்செய்யாநிற்க, அவ்வளவிலே ருத்ரனும் அத்ரிகந்யாஸஹிதனுய், ரிஷபாரூடனுய த்ரிசூலபாணியாயவ்யோம மார்க்கத்திலே செல்லாநிற்க, ஆழ்வாரும அவர்களைக்கண்டு அவன் நிழல் தன்மேற்படாமல் ஒதுங்க, இதனை தம்பதிகளிருவருங் கண்டுநிற்க, அவ்வளவிலே ருத்ரனைக் குறித்துப் பார்வதி இவனுரோவென்று அறிந்துபோவோமென்ன, ருத்ரனும் தத்பதியுடனே இவன மஹாநுபாவன், நம்மைக்கணிசியானென்ன, ஆகிலும் அவனைக்கண்டுபோவோமென்ன, அவனும் ஸம்மதித்து இவரண்டையிலேவந்துநிற்க, இவரும அவனை கண்ணெடுத்துபபாராமல் உதாஸீநராயிருக்க, அவனும நாமவந்துநிற்க நீர் அலக்ஷ்யம் பண்ணலாமோவென்ன, இவரும உன்னைக்கண்டு என்னப்ரயோஜநமுண்டெனச்சென்ன, அவனும் நாம உமக்கு ஒன்றுதரக்கடவதாக வந்தோமென்ன, இவரும் நமக்கொன்றும்வேண்டாவென்ன, அவனும் நமவரவு வ்யர்த்தமாகாமல் உமமபீஷ்டத்தைக்கேட்டுக் கொள்ளீரென்ன, ஆழ்வாரும் * புனமுறுவலசெய்து, ஆகில் "மோக்ஷந்தரவல்லையாகில்தா என்ன, அது என்னால் தரக்கடவதன்று, ஸ்ரீமந்நாராயணனுலேயென்ன, ஆனுல இன்று சாவாரை நாளை சாகும்படி பண்ணவல்லையாவென்ன, அதுவும் கர்மாநுகுணமன்றோவென்ன, ஆனால இவ்வூசியின்பின்னே நூல்வருமபடி வரப்ரதாநம் பண்ணுமென்று அபஹாஸித்துச்சொல்ல, அவனும் இவ்வார்த்தையைக்கேட்டு மிகவும்குபிதனுய், இவரை அநங்கனைப்போலே யாக்கக்கடவேனென்று, பொறியும் புகையும் கிளம்பும்படி தன்னெற்றிக்கண்ணைத் திறந்துவிட, அக்கண்ணில் நின்றும், ஜ்வாலை

---

* கந்தாஸீவநம் - கந்தையைத்தைத்தல்.

ஜாஜ்வல்யமாநமாய் ஸம்வர்த்தாக்நிபோலே சுட்டுக்கொண்டெரிகிற ஜ்வலந ப்ரரோஹத்தைக் கண்டு, ஆழ்வாரும் தம்முடைய வலத்திருவடியின் பெருவிரலில் ஒருகண்ணைத்திறந்துவிட, அக்கண்ணில் நின்றும் அக்நி, ப்ரளயஸஹஸ்ரகோடி கல்பமாய ஜ்வலித்துக்கொண்டு கிளம்ப, கோடிவைஶ்வாநர ப்ரக்யமாய், அத்யர்க்ககோடி நிபதீக்ஷ ஜ்வாலாஜாஜ்வல்யமாநாக்நியில் சம்புவின் லோசநாக்நி, கத்யோதப்ராயமாய் அடங்க, சம்புவும் அந்த லோசநாக்நி ஜ்வாலையைப்பொறுக்கமாட்டாமல், "புஷ்கலாவர்த்தகமென்கிற ப்ரளயகாலமேகங்களை அக்நி சமிக்கும்படி ஆஜ்ஞாபிக்க, அம்மேகங்களும் மின்னி முழங்கி வில்லிட்டு அகிலதாபமுமடங்கும்படி ஆகாசாவகாசமடைய நிறைந்து வர்ஷிக்க, அவ்வர்ஷத்தாலே, எரிகிற அக்நியும் அணைந்து பெருவெள்ளங்கோக்க, ஆழ்வாரும், ([illegible])(க்ஷிரபோரவர்ஷதாராபிர்ஹந்யமாநாநவிவ்பது:) என்கிறபடியே அத்ரிராஜனைப்போலே வர்ஷதாரைக்கு இளையாமல் பகவதநுபவ தத்பரராயிருக்கிறபடியைக் கண்டு, அவனும் விஸ்மயப்பட்டு, இவருக்கு "பக்திஸாரர்" என்று திருநாமத்தையும் சாத்தி, இவர்வைபவத்தைக்கொண்டாடி, சிரக்கம்பநம்பண்ணி, "அம்பரீஷனாலே துர்வாஸர் அவமாநப்பட்டாரிறே, ஆகையாலே பாகவதர்கள் ஸர்வதுர்ஜயர்" என்று ஸ்வபாதநிக்குறைத்துக்கொண்டு ஸ்வஸ்தாநமேபோனான்.

பின்னையும் ஆழ்வார் பூர்வம்போலே யோகத்திலே எழுந்தருளியிருக்க, யாதாச்சிகமாக வ்யாக்ராரூடனாய் சுகஸிஹாமென்பானொரு கேசரன் ஆகாசமார்க்கத்திலே செல்லாநிற்க, ஆழ்வாருடைய யோகப்ரபாவத்தாலே, இவர்மேலேபோக சக்தனன்றிக்கே வ்யாக்ரமும் திமிர்த்துநிற்க, அவனும் இதேதென்று பார்த்துக்கொண்டுவருமளவில் கீழ்மௌநியாய் யோகத்திலே எழுந்தருளியிருக்கிற ஆழ்வாரைக்கண்டு, விஸ்மயப்பட்டு, தத்க்ஷணத்திலே ஆகாசத்தினின்றும் பூமியில்வந்து வ்யாக்ரவாஹநத்தில் நின்று மிறங்கி இவரண்டையிலேவந்து, யோகசகலமுநீந்த்ரரே!, இக்கந்தாவரணத்தைப் பொசட்டு நான்தருகிற திவ்யபடநிர்மிதமான இந்தக்கவசத்தைத் தரியுமென்று ஒருகவசத்தைக்கொடுக்க, இவரும் அத்தை நிஷேதித்து ஸ்வஸங்கல்பத்தாலே மணிஸ்வரூபமாய் திவ்யமணிப்ரபோபமமான கவசத்தை அவனுக்குக்காட்ட, அவனும் லஜ்ஜாவிஷ்டனாய், தன்கழுத்தில் ஹாரத்தைவாங்கி, இத்தை அக்ஷமாலையாகத் தரியுமென்று கொடுக்கத்தேட, இவரும் தங்கழுத்தில் துளஸிபத்மாக்ஷமாலையைவாங்கி, இத்தைப் பாரீரென்ன, அது நவரத்நஹாரமாய் விளங்கக்கண்டு, அவனும் இவர் மஹாநுபாவர், மஹாபரிபூர்ணரென்று தண்டனிட்டு, இவர் வைபவத்தைக் கொண்டாடி, யதாஸ்தாநமேபோந்தான்.

பின்னையும் அங்கே இவர் யோகநிஷ்ட்டரா யெழுந்தருளி யிருக்கச்செய்தே, "கொங்கணஸித்தன்" என்கிற பெயரையுடைய னாய், ரஸவாதியா யிருப்பானொருவன்வந்து, இவ்வாழ்வாருடைய வைபவத்தைக்கண்டு, இவருக்கு, காணி கோடியை பேதிப்பதான ரஸகுளிகையை ஸமர்ப்பிக்க, இவரும் அத்தை அநாதரித்து, நமக்கு வேண்டாவென்று, அவனுக்குத் தம்முடைய * பொன்னொத்த மேனியின் புழுதியோடே தம்காதிற்குறும்பியை யுருட்டி, இந்தக் காணிகுளிகை கோடாகோடியைப்பேதிக்குமென்று கொடுத்தருள, அவனும் அப்படியே பரீக்ஷிக்க அது சொன்னபடிக்குஒத்திருக்கை யாலே அதிப்ரீதியுடனே ஆழ்வாரைத்தண்டனிட்டு, "தந்யோ ஹம்" என்று க்ருதார்த்தனாய்ப் போந்தான்.

அநந்தரம் திருமழிசைப்பிரானும், ஒரு குஹாந்தராவிஷ்ட ராய், நிப்ர்தாக்ஷவ்ருத்தியையுடையராய், யோகத்திலே யெழுந்தரு ளியிருக்க, அவ்வளவிலே பொய்கை பூதன் பேயாழ்வாராகிற முதலாழ்வார்கள் மூவரும், * எங்குந்திரிந் தரங்கனெம்மானுக்கே காதல்செய்தொண்டராய் ஸஞ்சரித்து வருகிறவர்கள், ஸுதூரத் திலே அப்ராக்ர்த திவ்ய தேஜஸ்ஸைக்கண்டு அத்யாஶ்சர்யப்பட்டு, இத்தை அறியக்கடவோமென்று எங்கும் சோதித்துவந்து, குஹாந்தராவிஷ்டரான பக்திஸாரரை, இம்மஹாநுபாவரரோ வென்று திவ்யமான * நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டு, "யார்க்கவமுநீந்த்ரரே! ஸுகமேயிருக்கிறீரோ" என்று குசலப்ரச் நம்பண்ண; அவரும் "பத்ம மாதவீ குஸுமகைரவோத்பவ முனி காள்! நன்றாயிருக்கிறீர்களோ" என்று வினவியருளி, அந்யோந்ய வந்தநபரராய், * ஆஹ்லாதசீதநேத்ராம்புக்கள் பனிப்ப புளகீக்ர்த காத்ரராய் ஒருவரையொருவர் ஆலிங்கிதத்துக்கொண்டு, மிகவும் ப்ரீதியுடனே எல்லாரும் ஸதாபரகுணவிஷ்டராய் யோகத்திலே யெழுந்தருளியிருந்தார்கள்.

இவர்கள் ஒருவர்க்கொருவர் பாலும்பாலும் சேர்ந்தாற்போல வும், தேனுந்தேனுங் கூடினாற்போலவும், பகவச்சரணாரவிந்த த்யாநாம்ர்தாஸ்வாதநம் * தேனூறி யெப்பொழுதும் தித்தித்து இகரஸ்யத்தாலே எல்லாருக்கும் ப்ரணயரஸம் உந்மஸ்தகமாம்படி பகவதநுபவம் பண்ணியிருந்தார்கள். பின்பு எல்லாரும் உகந்த திருவுள்ளத்தை யுடையராய் மயிலைநகரியேற வெழுந்தருளி, அங்கே பேயாழ்வார் திருவவதரித்தருளின கைரவ தீர்த்தத்தை யும் ப்ரீதியுடன் ஆலோகித்துக்கொண்டு, தத்தீரத்திலே சிலகாலம் யோகத்திலே யெழுந்தருளியிருந்து, பின்பு "ஓடித்திரியும் யோகி கள்" என்னும்படியே, பூர்வம்போலே பார்க்கவமுநீந்த்ரரை அநுவர்த்தித்து அநுமதிகொண்டு, பூஸஞ்சரணார்த்தமாக முதலா ழ்வார்கள் மூவரு மெழுந்தருளினார்கள்.

அநந்தரம், பார்க்கவமுநீந்த்ரரும், தம்முடைய திருவவதாரஸ்த்தலமான திருமழிசையிலே எழுந்தருளி சாத்துகைக்குத் திருமண்வேண்டி, கல்வி ஶோதித்தவிடத்தில், திருமண் அகப்படாமல் முசித்துக்கிடக்க, அப்போது * திருவேங்கடத்தெந்தை இவர்ஸ்வப்நத்திலே யெழுந்தருளி, திருமண்ணிருக்குமிடம் அடையாளமாகக் காட்டியருள, இவரும் அங்கே திருமண்கண்டெடுத்து, அத்திருமண்கொண்டு பன்னிரண்டு திருநாமஞ்சாத்தியருளி, பெரியப்ரீதியுடனே "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை" என்கிறபடியே க்ஷுத்ர புருஷார்த்தங்களில் நசையற்று, பகவதநுபவம் பண்ணிக்கொண்டு, திருமழிசையிலே எழுந்தருளியிருக்கிற இவர், பொய்கைப்பிரானவதரித்தருளின பொய்கைப்ரதேசத்திலே, சிலகாலம் ஸேவித்திருக்கத் திருவுள்ளமாய், (యత్తుసత్యవ్రతంనామ క్షేత్రం పాపవినాశనం। పుణ్యక్షేత్రేషు సర్వేషు తస్యశ్రైష్ఠ్యమీరితం) (யத்து ஸத்யவ்ரதம் நாம க்ஷேத்ரம் பாபவிநாஶநம் - புண்யக்ஷேத்ரேஷு ஸர்வேஷு தஸ்ய ஶ்ரைஷ்ட்யமீரிதம்) என்று சொல்லுகிறபடியே புண்யக்ஷேத்ரங்களில் வைத்துக்கொண்டு ஶ்ரேஷ்டமுமாய்ப் பாபஹரமுமாய ஸத்யவ்ரத க்ஷேத்ரமென்று பேரையுடையதுமான கச்சிவெஃகாவிலே யெழுந்தருளி, (శయానం శేషపర్యఙ్కే కున్దేన్దుధవళప్రభే। ఫణారత్నసహస్రాంశు నవాస్తరణవిస్తృతే॥ నీలజీమూతసఙ్కాశః పద్మపత్రనిభేక్షణః। సేవ్యమానో విశాలాక్ష్యా శ్రియా కమలహస్తయా॥ ధరణ్యా చ సుతన్వఙ్గ్యా ధాతా విశ్వస్య విశ్వభుక్) (ஶயாநம் ஶேஷபர்யங்கே குந்தேந்துதவளப்ரபே - பணாரத்நஸஹஸ்ராம்ஶு நவாஸ்தரணவிஸ்தர்தே - நீலஜீமூதஸங்காஶ: பத்மபத்ரநிபேக்ஷண: - ஸேவ்யமாநோ விஶாலாக்ஷ்யா ஶ்ரியா கமலஹஸ்தயா - தரண்யா ச ஸுதந்வங்க்யா தாதா விஶ்வஸ்ய விஶ்வபுக்) என்றும், "தேவிமாராவார் திருமகள்பூமி" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்ரீபூமிநீளைகளாலே ஸேவ்யமாநனாய்க்கொண்டு, "பணங்களாயிரமுடைய நல்லரவணைப் பள்ளிகொள்பரமா" என்கிறபடியே பெரியதிருவநந்தாழ்வானான திருவணையிலே * வெஃகாவில் துயிலமர்ந்தவெந்தை ஸேவித்து, பொய்கையாழ்வாரவதரித்தருளின அந்தத் திருப்பொய்கைக் கரையிலே ஆவரைத்யானம்பண்ணிக்கொண்டு, யோகத்திலே எழுநூறுஸம்வத்ஸரமெழுந்தருளியிருக்கிற காலத்திலே,

இவர்திருவடிகளிலே கணிகண்ணன்வந்து ஆச்ரயித்து பகவத்ப்ரவணராயிருக்க; அவ்வளவிலே அங்குள்ள ஒருஸ்தவிரியானவள்வந்து, ஆழ்வாரை ஸேவித்து, அவர் திருவடிகளிலே பக்தியுக்தையாய், அவர் எழுந்தருளியிருக்கிற விடத்தை, "கடைத்தலைசீக்கப்பெற்றால் கடுவினைகளையலாம" என்கிறபடியே ஸம்மார்ஜநகோமயாநுலேபந ரங்கவல்யாத்யலங்காரங்களாலே அநுதிநம

சுச்ருஷிக்க, யோகத்திலே யெழுந்தருளியிருக்கிற இவ்வாழ்வார் ஒருநாள் திருக்கண்களை விழித்துப்பார்த்து, இவள்செய்கிற கிஂகரவ்ர்த்திக்கு மிகவுமுகந்த திருவுள்ளத்தராய், அந்த வ்ர்த்தையைப்பார்த்து, உனனபீஷ்டத்தைச்சொல்லிக்காணாய், உனக்கொருவரப்ரதாநம்பண்ணுகிறோமென்றருளிச்செய்ய; அவளும் அப்படியே ஆழ்வாரைக்குறித்து, அடியேனிடத்தில் க்ர்பாதிசயமுண்டாகில் அடியேனுக்கு இந்தவார்த்தக்யம்போம்படிகடாக்ஷித்தருளவேணுமென்ன; ஆழ்வாரும் அப்படியே யாகக்கடவதென்று அவளைக் குளிரகடாக்ஷித்தருள; அவளும இவர்கடாக்ஷத்தாலே ப்ராப்தயெளவனையாய தேவஸ்த்ரீயைப்போலே அதிஸுந்தரையாக; அவ்வளவிலே, தத்ராஜ்யாதிபதியானபல்லவராயனும இவளைக்கண்டு, மந்மதபாணபாதிதனாய், தனக்குப் பத்நியாகவேணுமென்று ப்ரார்த்திக்க; அவளும் அநுகூலித்து, அவனுடனே அதிமாநுஷமான போகங்களை யநுபவியாநிற்க;

ஒருநாள் பல்லவராயன், தனககுஒருநாளைக்கொருநாள் ஸ்வசரீரம ஜரித்துவரக்கண்டு, அவளைக்குறிதது, உனக்கதிமாநுஷமான இந்தயெளவநமெங்ஙனேயுண்டாயிற்றென்று கேட்க; அவளும் அவனைககுறித்து, ஆழ்வார்கடாக்ஷத்தாலே தனக்குண்டானபடியைச் சொல்லி, நீயும உன்னகத்திலே அநுதிநம உபாதாநம் பண்ணவருகிற கணிகண்ணனை யநுவர்த்திதது அவர்புருஷகாரமாக தத்தேசிகரான பக்திஸாரரையநுவாததிததாயாகில், உனக்கும் இப்படிப்பட்ட யெளவநமுண்டாமென்றுசொல்ல; அப்போது ராஜாவும கணிகண்ணனையழைதது, உமமுடையஆசார்யரை நாம் ஸேவிக்கவேணும், அவரை நம்பக்கல் அழைததுக்கொண்டு வரவேணுமென்று சொலல; கணிகண்ணரும், நம்மாசார்யர் ஒருவரகத்துக்குமஎழுந்தருளார, ஒருராஜாக்களையும் கணிசித்துப் பாரார்என்ன; பின்னையும ராஜாவான பல்லவராயன் தன்னைக்கவிபாடவேணுமென்று கணிகண்ணரை அபேக்ஷிக்க, *வைகுந்தச்செல்வனார்சேவடியைப்பாடுகையொழிய, "நாக்கொண்டுமானிடம பாடேன்" என்றும, "வாய்கொண்டு மானிடம்பாடவந்த கவியேனல்லேன்" என்றும-இப்படி தம்முடைய அத்யவஸாயஹேதுவான சிஷ்டாசாரவசநங்களைசசொல்லி, பகவத்பாகவத விஷயமொழிய நான் நரஸ்துதிபண்ணுவதில்லையென்ன;

ஆகிலும நீர் நம்மைப்பாடவேணுமென்று அவன் இவரைநிர்ப்பந்திகக; கணிகண்ணரும், "ஆடவர்களெங்ஙனகல்வாருள்சுரந்து - பாடகமுமூரகமும் பாம்பணையும், நீடியமால்-நின்றானிருந்தான்கிடந்தானிதுவன்றோ-மன்றூர்பொழிற்கச்சிமாண்பு" என்று சொல்ல, அவனும் நம்மைப்பாடென்றால் இங்ஙனே சொல்ல

லாமோவென்று மிகவும் குபிதனாய், ஆகில் நம்முடைய ராஜ்யத்தினின்றும்போமென்ன; (అజగామముహూర్తేన) (ஆஜகாமமுஹூர்த்தேந) என்கிறபடியே சடக்கென ஸ்வாசார்யரானபக்திஸாரமுனிகள்திருமுன்பேசென்று தண்டன்ஸமர்ப்பித்து, அச்செயதியை விண்ணப்பஞ்செய்து, அடியேன் இவ்விடத்தில் நின்றும் விடைகொள்ளுகிறேனென்ன; ஆழ்வாரும் நீர்போகிறீராகில் நாம இங்கிருக்கப்போகிறோமோ? நாம்புறப்பட்டால்எம்பெருமான் இங்குக் கண்வளரப்போகிறானோ? அவனெழுந்தருளும்போது தத்பரிகரபூதரான ப்ரஹ்மாதிகள் இங்கிருக்கப் போகிறார்களோ வென்றருளிச் செய்து, * வெஃகாவிலுன்னிய யோகத்துறக்கமானவனையும் எழுப்பிக்கொண்டு வருகிறோமென்று சொல்லி, திருவெஃகாநாயனார்திருமுன்பே யெழுந்தருளி, அவரைப்பார்த்து, "கணிகண்ணன்போகின்றான்காமருபூங்கச்சி - மணிவண்ணாநீகிடக்கவேண்டா - துணிவுடைய - செந்நாப்புலவனும்போகின்றேன்நீயுன்றன் - பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்" என்று ஆழ்வார் விண்ணப்பஞ்செய்ய, அவர் சொன்னவண்ணம் செய்து இவருடையபின்னே எழுந்தருள; "சுடர்கொள்சோதியைத்தேவரும் முனிவருந்தொடர" என்கிறபடியேமற்றும்அத்தேசத்தில் ஆலயங்களில் தேவதைகளும் பின்தொடர எழுந்தருளுகையாலே, (అపివృక్షాః పరిమ్లానాః సపుష్పాంకురకోరకాః। ఉపతప్తోదకా నద్యః పల్వలాని సరాంసి చ)(அபிவ்ர்க்ஷாஃபரிம்லாநாஃ ஸபுஷ்பாംகுரகோரகாஃ - உபதப்தோதகா நத்யஃபல்வலாநிஸராംஸிச) என்று சொல்லுகிறபடியே, திருவயோத்யை ராமவிச்லேஷததாலே பொலிவழிந்தாப்போலே காംசீநகரத்திலே தரு குல்ம லதாதிகளும் மிகவுமவாடி அழகழிந்து தத்ராஜ்யத்தில் கோயில்களில் எம்பெருமான்களுமில்லாதே ஆலயங்களிலே தேவதைகள் ஒருவருமின்றியே அந்தகாரம்கவிந்து உதயாஸ்தமயந்தெரியாதே "நீளிரவாய்நீண்டதால்" என்கிறபடியே, கனதிமிரபூயிஷ்டமானபடியை ராஜாவும் மந்த்ரிகளுங்கண்டு, போரக்லேசித்து இவர்களைப் பின்தொடர்ந்துசென்று, * "ஓரிரவிருக்கை" என்கிற வூரிலே யிவர்களைக்கண்டு, கப்படத்தைக்கட்டிக் காலிலேவிழுந்து, கணிகண்ணனைவேண்டிக்கொள்ள; கணிகண்ணனும் மீண்டெழுந்தருளும்படி ஆழ்வாரை வேண்டிக்கொள்ள; ஆழ்வாரும் மீண்டெழுந்தருளத் திருவுள்ளமாய் ஆச்ரிதபாரதந்த்ரரான சொன்னவண்ணம்செய்தபெருமாளைப் பார்த்து, "கணிகண்ணன்போக்கொழிந்தான்காமருபூங்கச்சி - மணிவண்ணாநீகிடக்கவேண்டும்,துணிவுடைய-செந்நாப்புலவனும் போக்கொழிந்தேனீயுன்றன் - பைந்நாகப்பாய்படுத்துக்கொள்"

* "ஓரிருக்கை" என்றும் பாடம்காண்கிறது,

என்று விண்ணப்பம்செய்ய; எம்பெருமானும் மீண்டெழுந்தருளி, ஆழ்வார் சொன்னவண்ணம் செய்தது எல்லார்க்கும்ப்ரத்யக்ஷமாகவேணுமென்று இடததிருக்கை கீழ்ப்படக் கண்வளர்ந்தருளினார். இப்படி (விருப்புடையவெஃகாவேசேர்ந்தானை) என்கிறபடியே சேர்ந்து * நாகத்தணையைப் படுக்கையாகப்படுத்துக்கொண்டு கண்வளர்ந்தருளின இந்த ஸௌலப்யத்தை, "வெஃகணைக்கிடந்ததென்னநீர்மையே!" என்று ப்ரீதராயருளினார். அந்த நகரிதானும் "நிறைந்தசீர்நீள்கச்சி" என்னும்படி பொலிவையுடைத்தாயிருக்கையாலே, அவ்விடத்திலே * வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினையுள்ளத்துக்கொண்டு யோகத்திலே பின்னையுமசிலகால மெழுந்தருளியிருந்து;

அநந்தரம், கும்பகோணயாத்ராபேக்ஷையை யுடையராய், (యోనరఃకుంభఘోణేస్మిఙ్ క్షణార్ధమపితిష్ఠతి। కరస్థస్తస్యవైకుణ్ఠం కిముతాన్యావిభూతయః) (யோநர꞉கும்பகோணேஸ்மிந் க்ஷணார்த்தமபிதிஷ்டதி - கரஸ்தம்தஸ்யவைகுண்டம்கிமுதாந்யாவிபூதய꞉) என்கிறபடியே, * வைகுந்தமாநகர்மற்றது கையதுவாகத்தக்க ப்ரபாவாதிசயத்தையுடைத்தான திருக்குடந்தையிலே நித்யவாஸம்பண்ணி ஆராவமுதாழ்வாருடைய * ஏரார்கோலத்தை யோகத்திலேகொண்டு எழுந்தருளியிருக்கத திருவுள்ளமாய், "நலத்தால்மிக்கார் குடந்தைக்கிடந்தா யுன்னைக்காண்பான்நானலைப்பாய்" எனகிறபடியே அதித்வரையோடேஎழுநதருளாநிற்கச்செய்தேபெரும்புலியூரென்கிற கிராமத்திலே சென்று ஒருதிண்ணையிலேஅவஸரித்தெழுந்தருளியிருக்க, அத்திண்ணையிலேயிருந்து அதயயநம்பண்ணுகிறப்ராஹ்மணர்கள் இவரைக்கண்டு விப்ரதிபத்திபண்ணி வேதாத்யயநத்தைத் தவிர்ந்திருக்க, பின்னை அவர்களுக்கு விட்டதறுவாய் தோன்றுமல தடுமாற, ஆழ்வாரும் அத்தைககண்டு கறுப்புநெல்லை உகிராலேயிடந்துஸம்ஜ்ஞையாலே அந்தவாகயத்தைஸூசிப்பித்தருள, பின்பு அவர்களுக்கு (కృష్ణానాంవ్రీహీణాంనఖనిర్భిన్నమ్) (க்ருஷ்ணாநாம்வ்ரீஹீணாம்நகநிர்ப்பிந்நம்) என்கிறவாக்யந்தோற்ற; (నశూద్రాభగవద్భక్తా విప్రాభాగవతాస్మృతాః) (நஶூத்ராபகவத்பக்தாவிப்ராபாகவதாஸ்ம்ருதா꞉) இத்யாதிப்படியே அவர்கள் தெளிந்துவந்து தண்டன் ஸமர்ப்பித்துக்ர்தார்த்தரானார்கள்,

பின்னையும் அந்தக்ராமார்ச்சனையான வெம்பெருமானும் இவ்வாழ்வாரா உபாதாநார்த்தமாக ஸஞ்சரித்தருளுகிற திருவீதிகள்தோறும் அபிமுகராய் - திரும்பியருள, இந்த ஆஶ்சர்யத்தைநம்பியார்கண்டு, சில ப்ராஹ்மணர்க்குக்காட்ட அவர்கள் அந்தக்ராமத்திலே யாகம்பண்ணுகிற பெரும்புலியூரடிகளுடையயாகசாலையிலே சென்று "கண்டோங்கண்டோங்கண்டோம்கண்ணுக்கினியனகண்டோம்" என்று இவருடைய ப்ரபாவத்தைச்சொல்ல;

தீக்ஷிதரும்கேட்டு "மெய்யடியார்கள் தமீட்டங்கண்டிடக்கூடுமேல் அதுகாணுங்கண்பயனாவதே" என்றுகொண்டு (అక్ష్ణోః ఫలం త్వాదృశదర్శనం) (அக்ஷ்ணோஃபலம் த்வாத்ருஶதர்ஶநம்) என்று சொல்லுகிறபடியே அதிஹர்ஷத்துடன் யாகசாலையிலும் புறப்பட்டு ஆழ்வாரெழுந்தருளியிருக்குமிடத்தேற வந்து இவருடைய சகதிபஞ்சமயமான விக்ரஹத்தைக்கண்டு ஸேவித்து, (போதுமினமதிடம்புகுதுக) என்கிற படியே நம்முடைய யாகசாலைக்கெழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்து எழுந்தருளுவித்துக்கொண்டுபோய ஆழ்வாருக்கு அக்ரபூஜைபண்ண; அத்தைக்கண்டு, அங்குள்ள அத்வாயு தொடக்கமான சடங்கிகளுடைய இவரைக்கொண்டு புகுந்து யாகத்தை உபஹதியாக்கிற்றே! என்று, தாயபுத்ரன ராஜஸூயயாகத்திலே கர்ஷ்ணனுக்கு அக்ரபூஜைபண்ணினபோது சிசுபாலன் பஹுமுகமாகபருஷோக்திகளைப் பண்ணினாப்போலே இவர்களும் ஆழ்வாரை * பொறுப்பரியனகள்பேசி அதிக்ஷேபிக்க, தீக்ஷிதரும் வ்யாகுலாந்தக்கரணராய் ஆழ்வாரைப்பார்த்து, இவர்கள், "ஏதேனும்பேச நான் கேட்கமாட்டேன்" என்று விண்ணப்பஞ்செய்ய; ஆழ்வாரும் இனி நம்மை வெளியிடாதிருக்கவொண்ணாதென்று பார்த்து, (అష్టాంగయోగసిద్ధానాం హృద్యోగనిరతాత్మనాం। యోగినామధికారస్య దేకస్మిన్ హృదయాంబుజే) (அஷ்டாங்கயோகஸித்தாநாம் ஹ்ருத்யோகநிரதாத்மநாம் - யோகிநாமதிகாரஸ்யாதேகஸ்மிந் ஹ்ருதயாம்புஜே) என்கிறபடியே தமக்கு அந்தர்யாமியாய் * அற்புதனான அநந்தசயனனைக்குறித்து, (அக்கரங்களக்கரங்களென்றுமாவதென்கொலோ - இக்குறுமையைநிக்கியென்னையீசனுக்கவல்லையேல் - சக்கரங்கொள்கையனே சடங்கர்வாயடங்கிட - உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்துகாட்டிடே) என்று விண்ணப்பஞ்செய்தருள, * ஒண்சங்கதைவாளாழியானும், (தம்மையேநாளும் வணங்கித்தொழுவார்க்குத் - தம்மையே யொக்கவருள்செய்வர்) என்கிறபடியே * அரவத்தமளியினோடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப்பாவையுந்தானுமாய பெரியதிருவனந்தாழ்வானமேலே * வடிவிணையில்லாமலர்மகள் மற்றநிலமகள்மெல்லடிபிடிக்கும்படி கண்வளர்ந்தருளும்படியை அனைவருங்கண்டநுபவிக்கும்படி ஆழ்வாருடைய திருமேனியிலே ப்ரத்யக்ஷமாக்கி இவருக்கு ஸாரூப்ய ப்ரதர்சநம்பண்ணியருள, இவரும் ஸாரூப்யத்தைப் யநுபவிக்கப்பெற்றுஎல்லாருங்காணலாம்படியெழுந்தருளியிருக்க, முன்புகர்ஹித்தசடங்கிகளுடைய ஆழ்வாருடைய ஹ்ருதயத்தில் ப்ரகாசிக்கிற வெம்பெருமானுடைய திவ்யமங்களவிக்ரஹத்தை இவர் உரஸ்ஸிலே ப்ரத்யக்ஷமாக ஸேவித்து திருவடிகளிலே ஸாதரமாக ஸாஷ்

டாங்கபராஜமத்தைப்பண்ணி க்ஷமைகொண்டு ஆழ்வாரை ப்ரஹ்ம ரதமபண்ணி உபலாளித்து *நக்ஷமாமிக்கு லக்ஷ்யமாகாமல் *திருமா லடியார்களைப் பூசிக்கநோற்றுக்ர்தார்த்தரானார்கள். இவரும் அவர் களுக்கு பஹுப்ரகாரமாக ஜ்ஞாநப்ரதாநம்பண்ணியருளி, பஹுசங்க்ர்பைபண்ணியருளி வாழ்வித்து *செழுமாமணிகள் சேருந் திருக்குடந்தையைநோக்கிஎழுந்தருளினார்.

அங்கே ஆராவமுதாழ்வாருடைய *ஏரார் கோலத்தையுங் கண்டு அவ்வநுபவஜநிதப்ரீத்யதிசயத்தாலே நான்முகன்றிருவந் தாதியையுமதிருச்சந்தவிருத்தத்தையும் அருளிச்செய்து,(காவிரிக் கரைக்குடந்தையுள் கிடந்தவாறெழுந்திருந்துபேசு) என்று விண்ணப்பம்செய்ய;ஆராவமுதாழ்வாரும அப்படியேஉத்யோகிக்க, அந்த ஸௌலப்யததுக்குத் தோற்று, (வாழிகேசனே)என்று மங் களாசாஸநம்பண்ண, எம்பெருமானும் அப்படியேஉத்தாநசாயியா யருள, அப்படியான விக்ரஹதைத த்யாநம் பண்ணிக்கொண்டு யோகத்திலே இரண்டாயிரத்து முந்நூறுஸம்வத்ஸர மெழுந்தருளி யிருந்தார்.= இப்படி திருமேனியுடனே அந்நாஹார வர்ஜிதராய் க்ஷீராஹாரதாரகராய நாலாயிரத்தெழுநூறுஸம்வத்ஸரம் பகவ தநுபவம்பண்ணிககொண்டுஎழுந்தருளியிருந்து, "ஆழ்பொருளைச் சிந்தாமற்கொண்மின்நீர்தேர்ந்து" என்று நான்முகன்திருவந் தாதி, திருச்சந்தவிருத்தமெனகிற திவ்யப்ரபந்தங்களை பரமஸாத் விகராய் நாராயணைகபரான முமுக்ஷுக்களுக்குத் தம்முடைய பரமக்ர்பையாலே உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

ஸ்ரீகுலசேகரப்பெருமாள்வைபவம்.

(ఘుష్యతే యస్య నగరే రఙ్గయాత్రా దినే దినే। తమహం శిరసా వన్దే రాజానం కులశేఖరమ్)
(குஷ்யதேயஸ்யநகரே ரங்கயாத்ராதிநேதிநே - தமஹம்ஶிரஸா வந்தே ராஜாநம்குலசேகரம்) இங்கே அவதாரக்ரமம் பார்க்கில் நம்மாழ்வார்திருவவதார வைபவம சொல்லலாயிருக்க, ஸ்ரீகுலசே கராழ்வார்திருவவதார வைபவம் சொல்லுகிறது-அவயவ நிரூப ணம்பண்ணியே அவயவியை நிரூபிகக வேண்டுகையாலே. ஸ்ரீகுல சேகரப்பெருமாள், கொலலிநகரெனகிற திருப்படைவீட்டிலே, *சேரன் குலசேகரராயகொண்டு க்ஷத்ரியவர்ணத்திலே மாசிமாஸ ததில புநர்ப்பூசநக்ஷத்ரத்தில ஸ்ரீகௌஸ்துபாம்சராய் வந்தவதரி த்தருளினார்.(తస్యామభూచ్చేరకులప్రదీపః శ్రీకౌస్తుభాత్మా కులశేఖరాఖ్యః। మహీపతిర్మాఘపునర్వసూత్థే దినే హరేః పూర్ణకటాక్షలక్ష్యః)தஸ்யாமபூச்சேரகுலப்ரதீபஸ் ஸ்ரீகௌஸ்துபாத்மா குலஶேகராக்ய: - மஹீபதிர்மாகபுநர்வஸூத்யத்திநே ஹரேஃபூர்ணகடாக்ஷலக்ஷ்ய:)என்று திவ்யஸூரி சரிதை யிலே சொல்லிற்றே.

"மாற்றலரை வீரங்கெடுத்த செங்கோற்கொல்லிகாவலன் வில்லவர்கோன் சேரன்குலசேகரன் முடிவேந்தர் சிகாமணி" என்று சொல்லப்படுகிற இவர், ரதகஜ துரக பதாதிளென்கிற சதுரங்க பலத்தை யுடையராய், ப்ரதிபக்ஷங்களையெல்லாம் * காந்திசீகராம்படி காடேறவோட்டி, "கொல்லிகாவலன்கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்றும், "கூரார்ந்த வேல்வலவன் கோழியர்கோன் குடைக் குலசேகரன" என்றுஞ்சொல்லுகிறபடியே தம்முடையசெங்கோலேசெங்கோலாகப் படைவீடுகளிலேயிருந்து துர்ப்பலரை பலவாந்கள் பாதியாதபடி, (గోసహస్ర ప్రదాతారం) (கோஸஹஸ்ரப்ரதாதாரம்) என்கிற பெருமாளைபபோலே ஸ்ரீகுலசேகரப் பெருமாளும அத்யுதாரராய்ஸவிநயராய ராஜ்யம் பண்ணிக்கொண்டுபோராநிற்க.

தம்மை ஸ்வதந்த்ரராகவும், நியந்தாவாகவும், அபிமாநித்துக்கொண்டிருககிற இவரை, உபயவிபூதிநிர்வாஹகளுய, ஸர்வநியந்தாவான ஸர்வேச்வரன், தன்நிர்ஹேதுக க்ருபையாலே இவர் ராஜஸ தாமஸ ரஹிதராய் ஸத்வகுணப்ரசுரராம்படி கடாக்ஷித்தருளி, *ஸ்வரூபரூபகுண விபூதிசேஷ்டிதங்களையெல்லாம் விசததமமாகக் காட்டிகொடுக்க, அவற்றையெல்லாம், பகவத்பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை யுடையராய்க்கொண்டு இவ்வாழ்வார் கண்டவநந்தரம், ஸம்ஸாரிகளான இதரதேசீயர் தேஹாத்மாபிமாநத்தைப்பண்ணி, (అకృత్యకరణాదావ ప్యత్యన్తోద్భటవృత్తికః । అర్థకామాభిభూతో యమన్యత్రవర్తతే) (அக்ர்த்யகரணுதாவப்யத்யந்தோத்படவ்ர்த்திகः - அர்த்தகாமாபிபூதோயமுந்மத்தஇவவர்த்ததே) என்கிறபடியே, தேஹவச்யராய் தேஹபோகத்தை அநுபவித்து, பகவத்விமுகராய், தேஹாத்மாபிமாநிகளாய்,சப்தாதிவிஷயப்ரவணரான இஸ்ஸம்ஸாரிகள்நடுவேயிருக்கிற இருப்பு உயிர்க்கழுவிலேயிருந்தாற்போலேயும்,"கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு" என்கிறபடியே யானைக்கழுத்திலே தாமிருந்து ராஜ்யம் பண்ணி ஸாகரூபமாக ராஜபோகததை புஜிக்கிற ராஜத்வமும் அக்நிஜ்வாலையிலே இருந்தாற்போலேயும் அஸஹ்யமாய், (పరిత్యక్తామయాలఙ్కామిత్రాణిచధనానిచ) (பரித்யக்தாமயாலங்காமித்ராணிச தநாநிச) என்றும், (త్యక్త్వాపుత్రాంశ్చదారాంశ్చ రాఘవంశరణంగతః) (த்யக்த்வாபுத்ராஂஶ்சதாராஂஶ்ச ராகவஂஶரணஂகதः) என்றுஞ்சொல்லுகிறபடியே, ஸ்ரீவிபீஷணுழ்வான் ஸகலபோகங்களையுமஸவாஸநமாக த்யஜித்து, * ஸர்வலோகசரண்யரானபெருமாளை ஆச்ரயித்தாற்போலே, இவரும் "இன்பமருஞ்செல்வமு மிவ்வரசும் யான் வேண்டேன்" என்று ப்ரதிகூலங்களான ப்ராக்ர்தபோகங்களில் நசையற்று,

---

* காந்திசீகராம்படி - பயநதோடும்படி.

* திருவரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளும் கடல்விளங்கு கரு மேனியம்மான் றன்னைக் கண்ணாரக்கண்டு உகக்குங்காதலையுடையராய், * அறப்பற்றற் சுற்றிவாழுமந்தணீரரங்கத்திலே தாமும், * அற்றுப்பற்றராய், அவ்விடத்திலே நித்யவாஸம்பண்ணி, * விண்ணுளாரிலும் சீரியராய் அணியரங்கன் திருமுற்றத்தடியார்'' என்கிறதுவே நிரூபகமாகவுடையராய் * சாதுகோஷ்டியரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய * இன்பமிகுபெருங்குழுவு கண்டு அநுபவிப்பதெப்போதோ என்றும், (శ్రీరఙ్గయాత్రా శ్రీరఙ్గఇయాసా చైవ నారద। ఉత్తారయతి సంసారాన్నిత్యవాసస్తు కిం పునః)(ஸ்ரீரங்கயாத்ரா ஸ்ரீரங்க இயாஸா சைவநாரத-உத்தாரயதி ஸம்ஸாராந்நித்யவாஸஸ்து கிம்புந:) என்றுஞ் சொல்லுகிறபடியே, ஸ்ரீரங்கயாத்ரையையும் ஸ்ரீரங்கஇயாஸையையும் * விடியா வெந்நரகைப்போக்கி வைகுந்தந் தரவற்றாயிருக்க அங்கே நித்யவாஸம் பண்ணிற்றெல்லாம் சொல்லவேண்டாவிறே என்கிற அர்த்தத்தை அறிந்தவராகையாலே ஸ்ரீரங்கயாத்ரையிலே நித்யபத்தசராதராய், (త్రైలోక్యవిశ్రుతా పుణ్యా స్వామిపుష్కరిణీ ద్విజాః। గఙ్గాద్యైస్సకలైస్తీర్థైస్సమా విమలోదకా॥ తత్ర దేవర్షిగన్ధర్వాస్సిద్ధాశ్చ పరమర్షయః। సన్నియతాహారా వేఙ్కటాహ్వయభూధరే) (த்ரைலோக்யவிஶ்ருதா புண்யா ஸ்வாமிபுஷ்கரிணீ த்விஜா-கங்காத்யைஸ் ஸகலைஸ்தீர்த்தைஸ்ஸமா விமலோதகா-தத்ர தேவர்ஷிகந்தர்வாஸ்ஸித்தாஶ்சபரமர்ஷய: - ஸம்நிதியதாஹாரா வேங்கடாஹ்வயபூதரே) என்று - கங்காதிஸகல தீர்த்தங்களிலும் உத்க்ருஷ்டதமமாகச்சொல்லப்பட்ட ஸ்வாமிபுஷ்கரிணியையுடைத்தாய், "வேங்கடத்தைப் பதியாகவாழ்வீர்காள்'' என்று சொல்லுகிறபடியே, பரமர்ஷிகள்தொடக்கமான மஹாத்மாக்களாலே நித்யவாஸம் பண்ணப்படுகிற * திருவேங்கடமாமலையிலே, இவரும், திர்யக்ஸ்தாவரஜங்கமங்களைபரிக்ரஹித்து நித்யவாஸம்பண்ணவேணுமென்றும் இப்படி மற்றுமுண்டான திவ்யதேசங்களெங்கும் சென்று அங்குள்ள எம்பெருமான்களையும் ஸேவித்து அங்கே நித்யவாஸம்பண்ணவேணுமென்றும் ஆசையையுடையராய், அஷ்டாதசபுராணஉபபுராண இதிஹாஸாதிகளையும் நிரீக்ஷித்து தத்ஸாரபூதமான முகுந்தமாலையருளிச்செய்து, காலக்ஷேபார்த்தமாக, (వేదవేద్యే పరే పుంసి జాతే దశరథాత్మజే। వేదః ప్రాచేతసాదాసీత్ సాక్షాద్రామాయణాత్మనా)(வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே-வேதப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா) என்கிறபடியே, வேதவேத்யனான பரமபுருஷன் தசரதாத்மஜனாய் வந்தவதரித்தருளினாற்போலே அந்த வேதங்கள்தாமும் ஸ்ரீவால்மீகிபகவான்முகேந இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணமாய்க்கொண்டு ப்ரகாசித்ததாகையாலே, அதுவே தமக்கு * செவிக்கினிய செஞ்சொல்லாக, "இன்னமுதம் மதியோம்'' என்கிறபடியே ச்ரவித்துக்கொண்டுபோராநிற்க,

(చతుర్దశసహస్రాణి రక్షసాం భీమకర్మణామ్। ఏకశ్చ రామో ధర్మాత్మా కథం యుద్ధం భవిష్యతి)
(சதுர்த்தசஸஹஸ்ராணி ரக்ஷஸாம்பீமகர்மணாம்-ஏகஶ்சராமோ தர்மாத்மா கதம்யுத்தம்பவிஷ்யதி) என்கிறச்லோகார்த்தத்தைக் கேட்டருளுகிற

தறுவாயிலே, பெருமாளும், இளையபெருமாளை பிராட்டிக்குத்திருமெ ளிக்காவலாக வைத்து, கரத்ரிசிரோ தூஷணாதிகளாகிற பதினாலாயிரம துஷ்டராக்ஷஸருடனே, தர்மாத்மாவான பெருமாளொருவரே யுத்தந்தொ டங்கினார், * எங்கு இளைக்கிறாரோ என்று ரிஷி வயிறுபிடிக்கிறானென் றுகேட்கையாலே, இவ்வாழ்வாரும பரம பரவசராயக்கொண்டு, * அவத்தங்கள் விளையுமென்னு மதிசங்கையாலே, "வாளுருமவில்லுங் கொண்டு பின்செல்வார்மற்றில்லை" என்றும, "உருவார்சக்கரம் சங்கு சுமந்திங்கும்மோடொருபாடுழல்வானோரடியானுமுளனே" என்றுஞ் சொல்லுகிறபடியே, இவரும் சதுரங்கபலத்தோடே பெருமாளுக்குப படைத்துணையாகப் புறப்பட்டெழுந்தருளாநிற்க; இவருடைய அபிப்ரா யத்தமான இந்த யாத்திரையைக்கண்டு, இதைத் தவிர்ப்பிக்கைக்காக;

மந்த்ரிகள் உபாயேந சிலரை எதிரேவரவிட்டு அந்தப்பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் பெருமாளொருவரே நிரஸித்து மீண்டெழுந்த ருளாநிற்கச்செய்தே, (తందృష్ట్వా శత్రుహంతారం మహర్షీణాం సుఖావహం । బభూవ హృష్టా వైదేహీ భర్తారం పరిషస్వజే) (தந்த்ருஷ்ட்வா ஸத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் - பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே) என்கிறபடியே-பிராட்டி, பெருமாள்திருமேனியில் வ்ரணங்களெல்லாம ஆறும்படி திருமுலைத்தடங்களாலே வேதுகொண்டணைத்து, ஆச்வா ஸிப்பித்த சோகநிவர்த்தகமான இந்த ச்லோகத்தைச் சொல்லுவிக் கையாலே, இவரும் அதைக்கேட்டு, ஸந்துஷ்டராய மீண்டெழுந்த ருளினவளவிலே,

மந்த்ரிகள், நம்முடைய ராஜாவான இவர்க்கு ஸ்ரீவைஷ்ணவஸஹ வாஸத்தாலே இத்தனைகலக்கங்களும் நேருகைகளும வந்ததென்று, அவர்களுடையஸஹவாஸத்தைத் தவிர்ப்பிக்கவேணுமென்று, இவரு டைய க்ருஹார்ச்சனை எம்பெருமானுடைய திருவாபரணப் பெட்டியி லே, நவரத்நம்சாபிதமாயிருப்பதொரு ஹாரத்தையெடுப்பித்துமறைய வைத்து, இவருக்கு அந்தரங்கராய் உததேசியா ஸ்ரீவைஷ்ணவர்கள் எடுத்தார்கள் என்று ஆரோபிக்க, அதுக்கு அவரும "பரன்னபர்கொ ள்ளார்" என்று அவர்களுக்காகத் தாம் பாம்புக்குடத்திலே கையிட் டருளி ஜயிக்க, இத்தைக்கண்டு மந்த்ரிகள தாங்கள்செய்த அகார்த்யத்தை விண்ணப்பஞ்செய்து, அந்த ஹாரத்தை இவர் திருமுன்பேவைத்து, தண்டன் ஸமர்ப்பித்தார்கள்.

பின்பு ஆழ்வாருக்கு இவர்கள்நடுவே, ராஜ்யம்பண்ணியிருக்கு மிருப்பு (న శౌరిచిన్తావిముఖజనసంవాసవైశసం । వరం హుతవహజ్వాలాపంజరాన్తర్వ్యవస్థితిః) (நசௌரிசிந்தாவிமுக ஜநஸம்வாஸவைஸஸம்-வரம்ஹுதவஹ ஜ்வாலா பஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி:) என்கிறபடியே பகவத்வைபவஞ் சொல்லப்பொறாதார்நடுவிலிருக்கு மிருப்பைக்காட்டில், அக்நிஜ்வாலாப ஞ்சராந்தர்வ்யவஸ்த்திதிபகவத்பரர்க்குஉத்க்ருஷ்டதமம், ஆகையால்இவ ர்க்கு அக்நிஜ்வாலையிலே அகப்பட்டாற்போலே அதிதுஸ்ஸஹமாயிருக்

* "என்னுயிர்விளையப்புகுகிறதோ" என்றும் பாடம்.

கையாலே, தம்குமாரருக்கு யுவராஜ்யாபிஷேகம்பண்ணி, ராஜ்யபாரத்தை யவரிடத்திலே வைத்து, "ஆளுதசெல்வத்தரம்பையர்கள் தற்சூழவாளுளும்செல்வமும்மண்ணரசும யான்வேண்டேன்" என்றுகொண்டு ஐஹிகாமுஷ்மிக திவ்யமாநுஷ போகங்களில் நசையற்று, தமக்கந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸத்துடனே, * நல்லார்கள்வாழும் நளிரரங்கத்தை நோக்கி யெழுந்தருளி, தகட்டிலழுத்தின மாணிக்கம் போலே, * உறங்குவானபோல யோகுசெய்கிற * அணியரங்கத் தம்மானை, நித்யதரித்ரன் நிதியைக்கண்டாற்போலே கண்ணாரக்கண்டு, வாயாரவாழ்த்தி அநுபவித்து அவவநுபவஜநித ப்ரீத்யதிசயத்தாலே, பகவத்பாகவத வைபவத்தை எல்லாரும அறிந்து உஜ்ஜீவிக்கும்படி (பெருமாள்திருமொழி) என்கிற திவ்யப்ரபந்தத்தை யருளிச்செய்து, ஸஜ்ஜநங்களுக்கு உபகரித்தருளி லோகத்தைவாழ்வித்தருளினார்,

---

பெரியாழ்வார் வைபவம்.

(ధాతాత్వికప్రతిఫలత్పక్షత్పాదవం విస్త్రీయమాణాట్యకథకేతుర్జయిగజేన। గచ్ఛత్ప్రియా యుగకృతయుతే ... స్మరేయే నమోస్తుతస్మై) (தாதாத்விகப்ரதிபலத்பக்ஷத்பாதவம் விஸ்ரீயமாணாட்யகதகேநத்ராஜயிகஜேந - கசசங்ப்ரியாதுபகதேகருடேநமதே ப்ரேமஹ்ருஷிஷம்சயதிஸ்ம நமோஸ்துதஸ்மை) என்று-பெரியாழ்வார், "வேதவாயதொழிலார்கள்வாழ்வில்லிபுத்தூர்" என்கிறபடியே * செயதவேள்வியரான * வையத்தேவர் நிதயவாஸம் பண்ணிவாழாநிற்கிற ஸ்ரீவில்லிபுத்தூரிலேப்ராஹ்மணோத்தமரான * வேயர்தங்கள்குலத்திலே ஆனிமாஸத்திலே திருச்சோதியிலேகருத்மதம்ஸராய் யவதரித்து, "விஷ்ணுசித்தர்" என்கிற திருநாமத்தையுடையராயிருப்பர் (జ్యేష్ఠేమాసేభవమానో ... శ్రేష్ఠో గుణైర్నాజనిభట్టనాథః। తత్రత్రయీరూప ... కటాక్షలక్ష్యం కమలాపతేర్యః) (ஜ்யேஷ்டேதமாஸேபவமாநதாரே ஶ்ரேஷ்டோகுணைர்நாஜநிபட்டநாதம் - தத்ரத்ரயீரூபகருத்ம தாத்மா கடாக்ஷலக்ஷ்யம்கமலாபதேர்ய,) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே. *

பின்பு வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே, (ప్రహ్లాదో జన్మవైష్ణవః) (ப்ரஹ்லாதோ ஜந்மவைஷ்ணவஃ) என்னும்படி ஸஹஜதாஸ்யத்தையுடையரா யிருக்கு மிவர், (నాకించిత్కుర్వతశ్శేషత్వం) (நாகிஂசித்குர்வதஶ்ஶேஷத்வம்) என்கிறபடியே சேஷத்வமுறையையுணர்ந்து பகவத்விஷயத்திலே கிம்சித்கரித்து ஸ்வரூபம்பெறவேணுமென்றுபார்த்து, அதுசெய்யுமிடத்து, "தனக்கேயாகவெனைக்

---

* (ద్వాపరాన్తే కలేరాదౌ ... సంవత్సరే ... మేషే ... శుక్లపక్షే ఏకాదశ్యాం ... స్వాత్యాం భాస్కరవాసరే ... శ్రీమాన్ ... మాశ్రీవిష్ణుచిత్తోఽనఘః)

கொள்ளுமீதே" என்கிறபடியே அவனுகந்தவடிமைசெய்கையே நமக்குக் கர்த்தவ்யமென்றநுஸந்தித்து, அதறிகைக்காக அவதாரங்களையாராய்ந்து பார்த்தவிடத்தில், ஸர்வேஶ்வரன் "மண்ணின்பாரமநீக்குதற்கே வடமதுரைப்பிறந்தான்" என்றும், (ఏష నారాయణః శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః । నాగపర్యఙ్కముత్సృజ్య హ్యాగతో మధురాం పురీం) (ஏஷநாராயண ஶ்ரீமாந க்ஷீரார்ணவநிகேதந:-நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்) என்றும், (పుణ్యాద్వారవతీయత్ర తత్రాస్తే మధుసూదనః। సాక్షాద్దేవః పురాణోఽసౌ స హి ధర్మః సనాతనః) (புண்யாத்வாரவதீயத்ர தத்ராஸ்தே மதுஸூதந:- ஸாக்ஷாத்தேவ: புராணோஸௌ ஸஹிதர்மஸ்ஸநாதந:) என்றும் சொல்லுகிறபடியே ஸாதுபரித்ராணாதி த்ரயத்துக்காக, * திருவின்வடிவொக்கும் தேவகிபெற்ற பிறந்து, * மைத்தடங்கண்ணி யசோதை வளர்க்க வளர்ந்தருளுகிற * உருவுகரிய வொளிமணிவண்ணனுன க்ருஷ்ணன், * குடங்களெடுத்தேற விட்டுக் கூத்தாடவல்லவென்கோவே ... கடியனவேந்தி விண்ணோர்களுநன்னீ - ராட்டியாய் தூபந்தராநிற்கவே யங்கோர்மாயையினு - லீட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந்த வனுகையாலே அந்தவாஸனையின்றட்டி, கம்ஸனுக்குப பணிசெய்து போந்த ஸ்ரீமாலாகாரர் திருமாளிகையிலே பொருந்தருளி பூவிரக்க, அவரும், (ప్రసాదపరమౌ నాథౌ మమ గేహముపాగతౌ । ధన్యోఽహమర్చయిష్యామి) (ப்ரஸாதபரமௌநாதௌ மமகேஹமுபாகதௌ - தந்யோஹமர்ச்சயிஷ்யாமி) என்று உகந்துசூட்டினபடியைக்கண்டு, இவ்விஷயத்துக்குப் பூவிடுகையே உகப்பென்றறுதியிட்டு, வடதளபுடசாயியாகிற வடபெருங்கோயிலுடையானுக்கு, * நாட்கமழ்பூமபொழிலாகத் திருநந்தவநஞ்செய்து, திருமாலைகட்டிச்சாத்திப்போருகிற காலத்திலே, * பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலத்திலே ஸ்ரீவல்லப தேவனென்கிறராஜா தார்மிகனுகையாலே, சிறியதகைப் பெரியது நலியாதபடி கூடலென்கிறமதுரையிலேயிருந்து ராஜ்யம்பண்ணிக்கொண்டு போருகிறகாலத்திலே.

அந்தராஜா, நகரசோதநார்த்தமாக வருகிறவளவிலே, ஒருப்ராஹ்மணன் அங்கே ஒரு திண்ணையிலே கிடக்கக்கண்டு, ராஜா அவனையெழுப்பி, நீயாரென்றுகேட்க, அவனும்நானொருப்ராஹ்மணன், கங்கையாடிவருகிறேனென்ன, ஆனால்உனக்குப் போமதுண்டாகில் ஒருச்லோகம்சொல்லிக் காணுமென்ன, அந்தப்ராஹ்மணனும், (వర్షార్థమష్టౌ ప్రయతేత మాసాన్ నిశార్థమర్ధం దివసం యతేత । వార్ధక్యహేతోర్వయసా నవేన పరత్రహేతోరిహజన్మనా చ) (வர்ஷார்த்தமஷ்டௌப்ரயதேதமாஸாந் நிஶார்த்தமர்த்தம் திவஸம்யதேத-வார்த்தக்யஹேதோர்வயஸாநவேநபரத்ரஹேதோரிஹஜந்மநாச) என்கிறச்லோகத்தைசசொல்ல, ராஜாவும் இத்தைக்கேட்டு, வ்யுத்பந்நனுகையாலே, த்ருஷ்டத்தில் நமக்கொருகுறைவுமில்லை, இனி அத்ருஷ்டயத்நம் பண்ணும்படி யெங்ஙனேயென்று வ்யாகுலாந்தக்கரணனாய், தன்னுடைய புரோஹிதனான செல்வநம்பியைப் பார்த்து, புருஷார்த்தநிர்ணய பூர்வகமாக அத்ருஷ்டவிதத்தி

ர்க்கு விரகென்னென்றுகேட்க; அவரும், (ధర్మజ్ఞసమయః ప్రమాణం వేదాశ్చ) (தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச) என்கையாலே வித்வான்களைத் திரட்டி, வேதாந்தவேத்யமான பரதத்வ நிர்ணயம் பண்ணுவித்து, அவ்வழியாலே பெறவேணுமென்றருளிச்செய்ய; ராஜாவும் அப்படியே யாகிறதென்று பஹுதநராஶியைக் கிழிச்சீரையிலே வித்யாஶுல்கமாக ஒருதோரணத்திலே கட்டுவித்து, வித்வான்களை ஆஹ்வாநம் பண்ணச் சொல்லுகிறவளவிலே;

வடபெருங்கோயிலுடையானை, ஸௌரிகள் * பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டு பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்று மோதிமாண்டொழிந்தைய போகாமே இவ்வாழ்வாரைக்கொண்டு, லோகத்திலே வேதாந்தவேத்யமான பரதத்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, * மெய்யடியாரான இவ்வாழ்வாருடைய ஸ்வப்நத்திலே யெழுந்தருளி, நீர்போய்க் கிழியை யறுத்துக்கொண்டு வாருமென்றருளிச்செய்ய; அது வித்யாஶுல்கமாக நிர்மித்ததொன்றன்றோ? * நலங்களாய நற்கலைகள் நாவிலுநவின்றறியாத நானென் கையில் கொட்டுத் தழும்பைக்காட்டிக் கிழியையறுக்கலாமோவென்ன; அது உமக்குபாரமோ? நாமன்றோ வேதார்த்த ப்ரதிபாதநத்துக்குக் கடவோம் என்று ஆழ்வாரை நிர்ப்பந்தித்தருள; (బ్రాహ్మే ముహూర్తే చోత్థాయ) (ப்ராஹ்மே முஹூர்த்தே சோத்தாய) என்கிறபடியே, * சிற்றஞ்சிறுகாலே யெழுந்திருந்து, இதொரு ஸ்வப்நமிருந்தபடி யென்னென்று விஸ்மிதராய் விஶ்வஸித்து பாண்டியனுடைய வித்வத்கோஷ்டியேற வெழுந்தருளினவளவிலே, செல்வநம்பியும் ராஜாவும் * த்விஜகுலதிலகரான இவ்வாழ்வாரைக்கண்டு, அப்யுத்தாந ப்ரணாம பூர்வகமாக பஹுமாநிக்க, இதைக்கண்ட வித்வான்கள், இவர்க்கு வேதாப்யாஸமிருந்ததுமில்லையென்னும் புத்தியாலே, ராஜாவை யதிக்ஷேபிக்க, அவ்வளவிலே, * அபிமாநதுங்கனான செல்வநம்பி, ஆழ்வாரைத் தண்டனிட்டு வேதாந்த ப்ரதிபாத்யமான பரதத்வத்தை நிஶ்சயித்தருளிச் செய்யவேணுமென்று விஜ்ஞாபித்தவளவிலே, (హసితం భాషితం చైవ గతిర్యా యచ్చ చేష్టితం। తత్సర్వం ధర్మవీర్యేణ యథావత్సంప్రపశ్యతి) (ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம் - தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத்ஸம்ப்ரபஶ்யதி) என்கிறபடியே ஸ்ரீவால்மீகிபகவான் ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸகலார்த்தங்களையும் ஸாக்ஷாத்கரித்தாற்போலேயும், (శంఖప్రాన్తేన గోవిన్దస్తం పస్పర్శ కృతాఞ్జలిం। ఉత్తానపాదతనయం మునివర్యం జగత్పతిః॥ తతః ప్రసన్నవదనః స్తత్క్షణాన్నృపనన్దనః। తుష్టావ ప్రణతో భూత్వా భూతధాతారమచ్యుతమ్) (ஶங்கப்ராந்தேந கோவிந்த ஸ்தம்பஸ்பர்ஶ க்ருதாஞ்ஜலிம் - உத்தாநபாததநயம் முநிவர்யம் ஜகத்பதி: - தத: ப்ரஸந்நவதந ஸ்தத்க்ஷணாந்ந்ருபநந்தந:- துஷ்டாவ ப்ரணதோ பூத்வா பூததாதாரமச்யுதம்) என்கிறபடியே, ராஜகுமாரனான த்ருவன் ஸ்ரீபாஞ்சஜந்ய ஸ்பர்ஶத்தாலே ஸர்வஜ்ஞனானாப்போலேயும், நிர்ஹேதுக பகவத்ப்ரஸாதத்தாலே ஸகலவேத ஸாரார்த்தங்களை யும், ததுபப்ரஹ்மணங்களான இதிஹாஸ புராணங்களையும் ஸாரார்த்த

ரித்து, ([illegible]) (ஸமஸ்தஶப்தமூலத்வாத் அகாரஸ்யஸ்வபாவத:) என்று - ஸர்வஶப்தமூலமாயிருந்துள்ள அகாரத்தை ([illegible]) (அக்ஷராணாமகாரோஸ்மி) என்று-கீதாசார்யன் றானே யருளிச்செய்கையாலும், ([illegible]) (அகாரோ விஷ்ணுவாசக:) என்கிறபடியே அகாரவாச்யனான ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத் பரனென்று பரதத்வஸித்தாந்தங்களான ஜகஜ்ஜந்ம ஸ்திதி லய வாசகங்களான வாக்யங்களையும், ([illegible]) (யதோவா இமாநிபூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி, தத்விஜிஜ்ஞாஸஸ்வ, தத்ப்ரஹ்மேதி) இத்யாதி ஜகத்காரணத்வ முமுக்ஷுபாஸ்யத்வ மோக்ஷப்ரதத்வ ப்ரதிபாதகங்களான நாராயணாநுவாகாதி ச்ருதிகளாலும், ([illegible]) (விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம் ஜகத்தத்ரைவசஸ்திதம்-ஸ்திதிஸம்யமகர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்சஸ:) என்றும், ([illegible]) (நாராயணபரோதேவோ நபூதோநபவிஷ்யதி - ஏதத்ரஹஸ்யம் வேதாநாம் புராணாநாஞ்சஸம்மதம்) என்றும், ([illegible]) (ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே - வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி நதைவம்கேஶவாத்பரம்) என்றுமித்யாதிகளான ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸபுராணாதிவசந ஸஹஸ்ரங்களாலும் பஹுமுகமாக ப்ரதிபாதித்து அருளிச்செய்கையாலே வித்யாசுல்கமாகத் தோரணத்திலே கிழியாகக் கட்டிவைத்த தநம் இவர்முன்னே தானே தாழவளைய, ஆழ்வாரும் பெரியபரிவோடே "விரைந்து கிழியறுத்தான்" என்னும்படியே அக்கிழியை அறுத்துக்கொண்டருளினார்.

இத்தைக்கண்டு அதிக்ஷேபித்த வித்வான்களோடு அநுமோதித்த ராஜாவோடுவாசியற ஸர்வரும் விஸ்மிதராய்க்கொண்டு ஆழ்வார்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, "வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனனே" என்று மிகவும் ப்ரீதியோடே அவரை யானைக்கழுத்தின்மேலே யேறியருளப்பண்ணி, அந்தவித்வான்கள் சத்ரசாமரதாலவ்ருந்தாதிகள் தரித்து ஸேவிக்க, "வேதப்பயன்கொள்ள வல்லனான மெய்க்காவல்வந்தான்" என்று விருதூதித் திருச்சின்னம் பணிமாற, * ஈண்டியசங்கமெடுத்தூத, ராஜா, இவர்க்கு பட்டர்பிரான்" என்று திருநாமஞ்சாத்தி, தானும் ஸபரிகரனாய ஸேவித்துக்கொண்டு நகரிவலம்வருகிற மஹோத்ஸவத்தைக்காண்கைக்காக புத்ரர்களைப்ரஹ்மரதம்பண்ணும் ஸமயத்தில் மாதாபிதாக்கள்காண ஆதரித்துவருமாப்போலே, ஸர்வேச்வரனும் தனக்கு நிரூபகபூதையான பிராட்டி ஸஹிதனாய்க்கொண்டு, * மஞ்சுயர்பொன்மலைமேலெழுந்த மாமுகில்போன்ற வடிவுடனே பெரியதிருவடிமேற்கொண்டு, "திருச்சக்கரஞ் சங்கினொடும்" என்கிறபடியே திவ்யாயுததாரனாய், "கிளர்ந்த

பிரமன்சிவ னிந்திரன்விண்ணவர்சூழவிளங்க வொருநாள்காணவாராய் விண்மீதே" என்கிறபடியே ஆகாசத்திலே ஸ்வபரிகரபூதரான ப்ரஹ்மருத்ராதிகளாலே ஸேவ்யமானனாய் திவ்யமங்களவிக்ரஹ விசிஷ்டனாயக்கொண்டு, நெருங்கிநிற்கிற இத்திரளோடு ஸங்கிஹிதனாக, இத்தைஸாக்ஷாத்கரித்தருளின ஆழ்வார் பகவத்ப்ரஸாதத்தாலே நிரவத்யகபக்தியைப் பெற்றவராகையாலே, ஸ்வஸமர்த்தியைக்கண்டு இறுமாவாதே, அவனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வ ஸர்வரக்ஷகத்வாதிகளை யநுஸந்திப்பதற்குமுன்னே, முகப்பிலே * நீலமுண்ட மின்னன்னமேனியிலுண்டான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதிகளைக்கண்டு, காலக்ரதபரிணாமமில்லாதிக்கே ஸதைகரூபமாய், நித்யவிபூதமாய், பஞ்சோபநிஷண்மயமான பரமபதத்திலே,(సదా పశ్యన్తి సూరయః) (ஸதா பஶ்யந்தி ஸூரய:) என்கிறபடியே - நித்யஸூரிகளாலே ஸதாதர்சநம் பண்ணப்படுகிற வஸ்து, காலக்ருத பரிணாமமாய், க்ஷணக்ஷரணஸ்வபாவமாய், பரமாத்மஸ்தாநமான பரமபதத்தைப் பற்றநரகோபமமாய், அரக்கரசுரர்க்கு ஆவாஸபூமியாய், துர்விதக்தர் தாமிலைநின்று மஸ்தலமாய், கலிஸாம்ராஜ்யம் பண்ணுகிற * இருள்தருமாஞாலமான இத்தேசத்திலே வந்து சக்ஷுர்விஷயமாவதே! இவ்வஸ்துவுக்கு என்னாகுமோ! என்று மதிசங்கையாலே, யானைக்கழுத்தில் கிடக்கிற மணிகளைத் தாளமாகக்கொண்டு, "இந்த ஸௌந்தர்யாதிகளுக்கு ஒரு தீங்குமவாராதே நித்யமாய்ச் செல்லவேணும்" என்று தமஸ்வரூபத்தை மறந்து, ப்ரேமபரவசராய்க்கொண்டு மங்களாசாஸநம்பண்ணியருளி, இவ்விஷயத்துக்கு தாமொருவரும் மங்களாசாஸநம் பண்ணுகை போராதென்று, தமக்குத் தோள்தீண்டிகளான ஐச்வர்ய கைவல்ய பகவச்சரணார்த்திகளையும் மங்களாசாஸநயோக்யராம்படி திருத்திச் சேர்த்துக்கொண்டு, * பல்வகையாலும் திருப்பல்லாண்டு பாடியருளினார்.

அநந்தரம், அந்தராஜாவையும் விசேஷகடாக்ஷம் செய்தருளி, அவனாலே ஸத்கர்த்தராய், * வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடிகாண்பதோராசையினால் மீண்டு ஸ்ரீவில்லிபுத்தூரிலே யெழுந்தருளி, அக்கிழியில்தநத்தை (యస్యైతే తస్య తద్ధనం) (யஸ்யைதே தஸ்ய தத்தநம்) என்கிறபடியே வடபெருங்கோயிலுடையான் திருமுன்பேவைத்து தண்டன் ஸமர்ப்பித்து, (ప్రాగస్లిష్టంపశ్చిమాప్య ప్రత్యగమనుసరతి) என்கிறபடியே தாம் முதலில் உபக்ரமித்தருளின * காணார்நறுந்துழாய்க்கைசெய்த கண்ணியும் * செண்பகமல்லிகையோடு செங்கழுநீ ரிருவாட்சியுமான திருமாலைகட்டி, வடபெருங்கோயிலுடையானுக்கு நித்யமாகச் சாத்தி ஸேவித்துக்கொண்டிருக்கிற இவ்வாழ்வார் தாம், அவதாரங்களை முன்னிட்டுக்கொண்டு, க்ர்ஷ்ணாவதாரத்தில், ஸ்ரீமாலாகாரர் திருமாளிகையிலே யெழுந்தருளி பூஇரக்க அவர்உகந்து சாத்தினாற்போலே முந்துறத் திருநந்தவநஞ்செய்து திருமாலைஸமர்ப்பிக்கத்தொடங்கி

கிற்று. ஸ்ரீமாலாகாரர் திருமாலைசாத்தின வசந்தராம மலைமேரொடுபொருது வெற்றிகொண்ட தோளுக்குப் பல்லாண்டு பாடுகையாலே க்ர்ஷ்ணவர்த்தாந்தத்திலே ப்ரவணராய், "கண்ணன்கேசவநம்பிபிறந்தினில்" என்று - க்ர்ஷ்ணன அவதரித்தது முதலாக, "வெண்ணெய்சேர் பிள்ளை நல்விளையாட்டம்" என்கிற அதிமாநுஷசேஷ்டிதமான க்ர்ஷ்ணவர்த்தாந்ததை இவர் கோபஜந்மதைத ஆஸ்தாநமபண்ணி யநுஷரித்து, அவனுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களிலே அவனைப்போலே ஆழங்காலபட்டுக் குமிழுநீருண்ணாமல் நமக்குவரு பவித்து, அவ்வநுபவஜநித ப்ரீத்யதிசயாத்தாலே, (பெரியாழ்வார் திருமொழி) என்கிற திவ்ய ப்ரபந்தத்தையு மருளிச்செய்து, * சித்தமநன் னொருங்கித் திருமால்மேலசெலுத்த சிந்தையராய்கொண்டு, * சாயைபோலப்பாடவல்ல ஸஜ்ஜநங்களுக்கு உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

ஆண்டாள்வைபவம்.

(దేవస్యమహిషీందివ్యా సాదిగోపాలదేవతా। యస్య్ంతాంత్రజీ ప్రీత్యా స్వస్వం స్వయంప్రభుః) (தேவஸ்யமஹிஷீம்திவ்யா மாதௌ கோதாமுபாஸ்மஹே - யன்மௌலிமாலிகாம்ப்ரீத்யா ஸ்வீக்ரோதி ஸ்வயம்ப்ரபு:).

* அன்னவயற்புதுவை யாண்டாளுடைய திருவவதார க்ரமமிருக்குமபடி யெங்ஙனேயென்னில்:-(అథమేక్షత్రం లాంగలాన్నిర్ధా తాయదా। క్షేత్రం శోధయతాగ్ర నామ్నా సీతేతివిశ్రుతా ॥ భూతలాదుద్ధితా సాచ వ్యవర్ధత మమాత్మజా) (அதமேகர்ஷதக்ஷேத்ரம் லாங்கலாதுத்திதாமயா - க்ஷேத்ரம்ஸோதய தாலப்ததா நாம்நாஸீதேதிவிஸ்ருதா) என்கிறபடியே ஸ்ரீ ஜநகராஜன் யாகசாலைக்கு ஸ்தலம் உழுதுபண்ணுகிற்க, அந்த படைச்சாலிலே பிராட்டி ப்ராதுர்ப்பவித்தருள, (సీతాలాంగలపద్ధతిః) (ஸீதாலாங்கலபத்ததி:) என்கிறது தானே நிருபகமாக, ஸீதையென்று திருநாமஞ்சாத்தி உவப்போடே ஸ்ரீஜநகராஜன் புத்ரியாக வளர்த்துக்கொண்டாப்போலே, *மெய்யடியாரான விஷ்ணுசித்தர், தம் திருநந்தவநத்தில திருத்துழாய்க்குக் கொத்தாகிற்க, அத்திருத்துழாய்மண்ணினகிழே,ஜநககுல ஸுந்தரியைப்போலே *பெடஸ்த்தையாய்திருவாடிப்பூரத்திலே, "பார்வண்ண மடமங்கை" என்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி ஆவிர்ப்பவித்தருளினார்.

(సవిష్ణుచిత్తస్తులసీవనావలిం ఖనిత్రవక్త్రేణ నిఘాతయన్ముదా। శుభేముహూర్తే శుచిమాసి ఫాల్గునీ ప్రతీతతారే తులసీవనాంతరే భువోద్భవత్కాంచనబాలకన్యకాం భూమ్యంశకాం వీక్ష్య విసిష్మయేముదా) (ஸவிஷ்ணுசித்தஸ்துளஸீவநாவலிம் கநித்ரவக்த்ரேண நிகாதயத்கலௌ - ஸுபேமுஹூர்த்தே ஸுசிமாஸிபால்குநீ ப்ரதீததாரே துளஸீவநாந்தரே - புவோத்பவத்காஞ்சநபாலகந்யகாம் பூம்யம்ஸகாம்வீக்ஷ்ய விஸிஷ்மயேமுதா) என்று திவ்யஸூரி சரிதையிலே சொல்லிற்றிறே.

அநந்தரம் * வில்லிபுதுவை நகர்நம்பி விஷ்ணுசித்தர்கண்டு, விஸ்மிதராய், * மின்னனைய நுண்ணிடையாளான இக்கந்யகையை யெடுத்துக் கொண்டு, ப்ரீதியோடே, "சுரும்பார்குழற்கோதை" என்று திருநாமஞ் சாத்தி, * திருமகள்போல வளர்த்துக்கொண்டுபோருகிறகாலத்திலே, * விஷ்ணுசித்தர்தங்கள்தேவரான வடபெருங்கோயி லுடையானுக்குச் சாத்தக்கட்டிவைத்த திருமாலையை, ஆழ்வாரில்லாத அவஸரத்திலேஇப் பெண்பிள்ளைதான் சூட்டிக்கொண்டு, "அவனுக்கு நேரொவ்வாதிருக்கி றேனோ? ஒத்திருக்கிறேனோ?" என்று, * காறைபூண்டு கூறையுடுத்து கைவளை குலுக்கி, கோவைசசெவ்வாய்திருத்தி, அவ்வொப்பனை யழகைக்கண்ணாடியிலே கண்டு, இபபடி பலநாளும் பந்துபந்தாகச் சுருட்டிவைக்க, இத்தை ஆழ்வார் ஒருநாள்கண்டருளி, பெண்ணே! எப்போதும் இப்படியேசெய்கிறாய் என்றுமிகவும் கோபித்து, அந்தத்திருமாலையை அற்றைக்கு வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தாமலிருக்க, அன்று ராத்ரியி ஆழ்வார் ஸ்வப்நத்திலே எம்பெருமானெழுந்தருளி, இற்றைக்கு நமக்கு மாலைகொண்டு வாராதிருப்பானென்னென்ன, தம்புத்ரிகோதை குழலிலேமுடித்த க்ர்த்யத்தை விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானும "அப்போதுகாணும் வாஸனையாப் ப்ரியமாயிருப்பது" எனறருளிச்செய்ய, ஆழ்வாரும், அன்றுமுதல்இவ்வாண்டாளை "பின்னைகொல்நிலமாமகள்கொல் திருமகள்கொல்பிறந்திட்டாள்" என்று விசேஷப்ரதிபத்திபண்ணிப் போருவர். * தொடுத்த துழாயமலர்சூடிககளைநதன சூடுமதொண்டரான * ஆழவார் திருமகளார் தாம சூடிககொடுததது வே நிரூபகமாகச் சூடிககொடுத்த நாய்ச்சியாராயிருப்பர்.

திருததுழாய பரிமளத்தோடே கூடியே முளைக்குமாப்போலே, இநநாய்ச்சியாரும் ஆஜந்மபால்யயௌவநாவஸ்தைகள்தோறும் வளருகிற பரபகதி பரஜ்ஞாந பரமபக்திகளை யுடையளாகையாலே, பகவத் விஷய ப்ராவண்யம், அல்லாத ஆழ்வார்களைக்காட்டில் இவளுக்கு அதிசயித்திருக்கும. புருஷனைபபுருஷன காமிக்குமதும், ஸ்த்ரீயை ஸ்த்ரீகாமிக்குமதும்மேட்டுமடையாயிருககும்; புருஷன் ஸ்த்ரீயைக்காமிக்குமதும், ஸ்த்ரீ புருஷனைக்காமிக்குமதும் பள்ளமடையாகையாலே இதுசேர்ந்திருக்குமிறே; அந்தப்ராவண்யமடியாக, "அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா" என்னும்நிலையையுடையளாய், (ದುಷ್ಟಕಾಳಿಯತಿಷ್ಠಾತ್ರ ಕೃಷ್ಣೋಹಮಿತಿ ಚಾಪರಾ) (துஷ்டகாளியதிஷ்டாத்ர கர்ஷ்ணோஹமிதிசாபரா) என்று - க்ர்ஷ்ணவிரஹத்தை ஸஹிககமாட்டாதகோபகந்நிகைகள் க்ர்ஷ்ணனையநுகரித்துதரித்தாற்போலே, இவளும்மார்கழிநீராடி, நோன்புநோற்று, காமபஜநாதிகளைப்பண்ணி தரிப்போமென்றுபார்த்து, * சங்கத்தமிழ்மாலையாக திருப்பாவை நாயச்சியார்திருமொழி, என்கிற திவ்யப்ரபந்தங்களையும் அருளிச்செயது, ஜகத்துக்கு உபகரித்தருளி வாழுங்காலத்திலே,

5

(పతిసంయోగసులభం వయోదృష్ట్వాచమేపితా। చిన్తార్ణవగతఃపారం నాససాదాఽప్లవోయథా)(பதிஸம்யோகஸுலபம்வயோத்ருஷ்ட்வாசமேபிதா-சிந்தார்ணவகதஃபாரம்நாஸஸாதா஽ப்லவோயதா) என்கிறபடியே ஸ்ரீஜநகராஜன், பிராட்டிபருவங்கண்டு *சிந்தார்ணவகதனைப்போலே இவ்வாழ்வாரும் இந்நாய்ச்சியாருடைய விவாஹயோக்யமான பருவத்தைக்கண்டு வ்யாகுலாந்தக்கரணராக; இவ்வாண்டாளும் *மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேனென்ன, ஆழ்வாரும் பின்னை யெங்ஙனே யென்ன, இவரும், "மற்றொருவர்க்கென்னைப்பேசலொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயர்க்கல்லால்" என்கிறபடியே, * அவன்முகத்தன்றி விழியேனென்ன; ஆழ்வாரும் ஆகில் "நூற்றெட்டுத்திருப்பதியிலெம்பெருமான்களில் ஆருக்குவாழ்க்கைப்படுகிறாய்" என்ன; ஆண்டாளும் ஆழ்வாரைக்குறித்து, அவ்வவருடைய குணரூபதானங்களைக் கீர்த்தித்தருளவேணுமென்ன, ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையான்வைபவமடியாக பாண்டிமண்டலத்திலெம்பெருமான்கள்வைபவமும், மலைநாட்டுத்திருப்பதியிலெம்பெருமானகள்வைபவமும, வடதிசைத்திருப்பதியிலெம்பெருமான்கள்வைபவமும், வடதிருவேங்கடவன் வைபவம்தொடங்கி தொண்டைமண்டலத்திலெமபெருமான்கள் வைபவமும், அழகியமணவாளன்முதலான சோழமண்டலததிலெம்பெருமான்கள்வைபவமும்அழகர்வைபவமுமருளிச்செய்ய;

ஆண்டாளும் அதுகேட்டு, ஆநந்தாசருககள துளிக்கப் புளகீர்தகாத்ரையாய், * என்னரங்கத்தின்னமுதருடைய குழலழகு வாயழகு கண்ணழகுகளைக் கேட்டு, அதிவ்யாமுக்தையாய மோஹித்து, "வந்தானோ திருவரங்கன்வாரானோவென்றென்றே வளையுஞ்சோரும" என்கிறபடியே * மனமுருகி மலர்ககண்கள் பனிப்ப, அழகியமணவாளரையே காமித்து, * மந்திரக்கோடியுடுத்து, மணமாலைசூட்டி, * மைத்துனன்நம்பி மதுசூதனன்வந்து கைத்தலம்பற்றி * மத்தளங்கொட்டவரிசங்கம்நின்றூத முத்துடைத்தாமநிரைதாழ்ந்தபந்தற்கீழ் * பெருப்பெருத்தகண்ணாலங்கள்செய்யக் கனக்கண்டு * திருவரங்கதது ளோங்குமொளியுளாரான * அணியரங்கத்தமமானுக்கே அற்றுத் தீர்ந்தகாதலையுடையளாக; அவ்வளவில் ஆழ்வாரும், "கோதைக்குத் தககவரன் கோயில்பிள்ளை" என்றுகருதி, இது கூடும்படியெங்ஙனேயென்று வ்யாகுலாந்தக்கரணராய்க்கண்வளர்ந்தருள; திருவரங்கச்செல்வனார்ஆழ்வார் ஸ்வப்நத்திலேயெழுந்தருளி, உம்புதரிகோதையைக்கொண்டு, * அணியரங்கன்திருமுற்றத் தேறவாரீர், அவளுக்குத்தகுதியாக நாமே பாணிக்ரஹணம் பண்ணுகிறோ மென்றருளிச்செய்ய; ஆழ்வாரும் உகந்திரப்பாராயிருக்கிறவளவிலே திருவரங்கச்செல்வனார், நம்சத்ர சாமர தாலவ்ர்ந்தாதி ஸகலபரிஜநபரிச்சதங்களோடே ஸ்ரீவில்லிபுத்தூரேறப் போய் ஆண்டாளை அழைத்துக்கொண்டுவாருங்கோள், என்று * திருப்பவளச்செவ்வாய்திறந்து அருளிச்செய்துவிட,

அனைத்துப்பரிகரத்தாரும், ஸ்ரீவில்லிபுத்தூரேறச்சென்று, ஆழ்வாரைக்கண்டு, நம்பெருமாளருள் பாடிட்டருளினபடியை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் கேட்டருளி ஆஶ்சர்யப்பட்டு,பெரியப்ரீதியோடே வடபெருங்கோயிலுடையானுக்கு விண்ணப்பஞ்செய்து, அவருடைய அநுமதிகொண்டு ஆண்டாளை மணிப்பல்லக்கிலே எழுந்தருளுவித்துக்கொண்டு, அழகியமணவாளரல்ல தறியாத பாதிவ்ரத்யமுடைய ஆண்டாளை பிறர்கண்படாமல் தட்டுப்பாயிட்டு மூடிக்கொண்டு, அகிலவாத்யத்துடனே அனைவரும் ஸேவிக்க வெழுந்தருளப் பண்ணிக்கொண்டு, திருவரங்கன் திருப்பதியேறச்சென்று, "ஆண்டாள்வந்தாள், சூடிக்கொடுத்தாள்வந்தாள், சுரும்பார் குழற்கோதைவந்தாள், திருப்பாவை பாடியசெல்விவந்தாள், தென்னரங்கந் தொழுந் தேசியள்வந்தாள்" என்று பலசின்னங்கள் பணிமாற வந்து, அழகிய மணவாளன் திருமண்டபத்தேசென்று தட்டுப்பாயைவாங்க,

சூடிக்கொடுத்தநாய்ச்சியாரும், அகிலருங் காணும்படி,உதறியுடுத்த பட்டுச்சேலையும், சுற்றிய செங்கழுநீர்மாலையும், திருநுதற் கஸ்தூரித்திருநாமமும்,காதளவும் ஓடிக்கயல்போல்மிளிருங் கடைக்கண் விழியும், *கொடியேரிடையும்,*கோகநகத்தகொங்கைகுலுங்க, *சிலம்பார்க்க, *சீரார்வளையொலிப்ப,அன்னமென்னடைகொண்டு,அழகியமணவாளன்திருமுன்பேசென்று, உள்ளேபுகுந்து, கண்களாரக்கண்டு, * கேசவநம்பியைக் கால்பிடிப்பாளென்னும் பேறுபெற்று, நாகபர்யங்கத்தை மிதித்தேறி, * நீமுகத்துநாகணைமேற்சேருந்திருவரங்கரைச்சேர்ந்து, திருவரங்கன்திருவடிவருடும்படி அந்தர்ப்பவித்தருள, இத்தைக்கண்ட ஆழ்வார் சிஷ்யரான வல்லபதேவனுள்ளிட்டார் அகிலரும் விஸ்மயப்பட, திருவரங்கச்செல்வனார் ஆழ்வாருக்கு அருள்பாடிட்டருளி, க்ஷீரஸமுத்ரராஜனைப்போலே நீரும்நமக்கு ஶ்வஶுரராய்விட்டீரென்று மிகவுமுகந்தருளி, இவருக்குத் தீர்த்தம திருமாலை திருப்பரிவட்டத்துடனே ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்து, "வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடிபூண்டுகொண்டுவாழும்" என்று விடைகொடுத்தருள, ஆழ்வாரும் ப்ரீதிவிஷாதத்துடனே ஸ்ரீவில்லிபுத்தூரேறச்சென்று, பூர்வம்போலே வடபெருங் கோயிலுடையான்கைங்கர்யநிரதராய் வாழ்ந்தருளினார். (శుచిమాసిపాణ్డ్యభువిపూర్వఫల్గుని ఘనభేనవీనతుళసీవనాన్తరాత్ । ఉదితాముదారగుణరఙ్గనాయక ప్రియవల్లభాంవసుమతీముపాస్మహే) (ஶுசிமாஸிபாண்ட்யபுவிபூர்வபல்குநிகநபேநவீநதுளஸீவநாந்தராத் - உதிதாமுதாரகுணரங்கநாயக ப்ரியவல்லபாம்வஸுமதீமுபாஸ்மஹே).

தொண்டரடிப்பொடியாழ்வார்வைபவம்.

(చోళక్షితౌ ధనుషిమాసిమహేన్ద్రతారే యస్య ప్రాదురాసమురజిద్వనమాలికాంశః ॥ రఙ్గేశశేఖరతమూర్ధ్వశిఖం ద్విజేన్ద్రం భక్తాఙ్ఘ్రిరేణుమనఘం [illegible] ప్రపద్యే) (சோளக்ஷிதௌ தநுஷிமாஸிமஹேந்த்ரதாரே யஸ்ய [illegible]

முராஜித்வநமாலிகாம்ஶ: - ரங்கேசகேளிரதமூர்த்த்வஶிரம் த்விஜேந்த்ரம் பக்தாங்க்ரிரேணுமநகாத்மகுணம் ப்ரபத்யே) ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார், திருமண்டங்குடியென்கிற க்ராமத்திலே, (మాసానాం మార్గశీర్షోహం) (மாஸாநாம்மார்கஶீர்ஷோஹம்) என்று எம்பெருமான்தானாகச்சொல்லப்பட்ட மார்கழிமாஸத்தில்கேட்டைநக்ஷத்ரத்தில் ஸ்ரீவைஜயந்திவநமாலிகாம்ஶராய், ப்ராஹ்மணவர்ணத்திலேயவதரித்தருளினார். (తత్రోదభూద్భాగవతాద్విజేన్ద్రాన్మాహేన్ద్రక్షేమాసిచ మార్గశీర్షే। శ్రీవిప్రనారాయణనామధేయః మురారివక్షోవనమాలికాంశః)(தத்ரோதபூத்பாகவதாதத்விஜேந்த்ராந்மாஹேந்த்ரபேமாஸிச மார்ககஶீர்ஷே- ஸ்ரீவிப்ரநாராயண நாமதேய: முராரிவக்ஷோ வநமாலிகாம்ஶ:) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே. நம்பெருமாள் அவரைஜாயமாநகாலத்திலே * அமலங்களாக விழித்து கடாக்ஷித்தருள, அத்தாலேசுத்தஸத்வநிஷ்டரான இவர்க்கு "விப்ரநாராயணர்" என்று திருநாமஞ்சாத்தி, காலகாலங்களிலே சௌளோபநயநாதிகளையும் பண்ணுவித்து, நால்வேதம் ஆறங்கம் முதலான அகிலவித்யைகளையும் அதிகரிப்பிக்க, அகிலவித்யாபாரங்கதராய அதிவிரக்தராய அசரோத்வாஹருமான இவர், (మరుద్వృధాయామధ్యస్థే చన్ద్రపుష్కరిణీతటే। శ్రీరఙ్గమతులం క్షేత్రం శ్రియాజుష్టం శుభాస్పదమ్) (மருத்வர்தாயாமத்யஸ்தம் சந்த்ரபுஷ்கரிணீதடே- ஸ்ரீரங்கமதுலம் க்ஷேத்ரம் ஸ்ரியாஜுஷ்டம் ஶுபாஸ்பதம்) என்றபடியே ஸமாப்யதிகராஹித்யமாக ச்லாகிக்கப்படுகிற ஸ்ரீரங்கக்ஷேத்ரத்திலே புகுந்து, (విమానమభ్యేత్య చతుఃప్రదక్షిణం చతుర్దిశం తస్య తదర్థకప్రణామః। తతస్తదావిశ్య విధిర్దదర్శ తమిన్ద్రనీలాచలసన్నికాశం। ప్రసన్నవక్త్రం నలినాయతేక్షణం కృపామయం కాన్తినికేతరూపమ్)(விமாநமப்யேத்யசது:ப்ரதக்ஷிணம் சதுர்த்திஶம் தஸ்ய ததர்தகப்ராணம: - ததஸ்ததாவிஶ்யவிதிர்த்ததர்ஶ தமிந்த்ரநீலாசலஸந்நிகாஶம்- ப்ரஸந்நவக்த்ரம் நளிநாயதேக்ஷணம் க்ருபாமயம் காந்திநிகேதரூபம்) என்கிற விக்ரஹத்தை சதுராநநன் ஸேவித்தாற்போலே, சதுரரில் அக்ரகண்யரான இவரும் * அரவரசப் பெருஞ்சோதியனந்தனென்னும் அணிவிளங்குமுயர்வெள்ளையணையின்மேலே பள்ளிகொள்ளும் பரவாஸுதேவரான அழகியமணவாளனை ஸேவிக்க, பெரியபெருமாளும் தம்முடைய க்ருபையாலே "குழலழகர் வாயழகர் கண்ணழகர்" என்று சொல்லப்பட்டிருப்பதாய் * పుంసాం దృష్టిచిత్తాపహారిణమ్ * பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம் என்கிற தம்முடைய வடிவழகைக்காட்டி இவரைத்தம் பக்கலிலே நிரதிசய பக்தியுக்தராம்படி கடாக்ஷித்தருள;

ஸ்ரீவிப்ரநாராயணரும், அபாரகாருணிகரான * அரங்கனுக்காட் செய்யவேணுமென்று * துளபத்தொண்டிலே தத்பரராய், "புண்டரீகஶ்ச புண்யக்ருத்" என்று புண்யகர்த்தாகச் சொல்லப்பட்ட ஸ்ரீபுண்டரீகரைப்போலேயும், * நன்மாலைகள்சாத்தி ஸந்துஷ்டரான ஸ்ரீமாலாகாரரைப்போலேயும், (సతునాగవరశ్శ్రీమాన్ నారాయణపరాయణః) (ஸதுநாகவரஶ்ஸ்ரீமாந் நாராயணபராயண:) என்கிறகைங்கர்ய ஸ்ரீயையுடைய

ராகையாலே "ஸ்ரீமாந்" என்று சொல்லப்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்
போலேயும், "எண்பகர்பூவுங்கொணர்ந்தேன்" என்று அஷ்டவிதபுஷ்
பமான * அலங்கலந்தொடையல்கொண்டு அடியிணைபணிகிற பெரி
யாழ்வாரைப்போலேயும், இவரும் தம்மை *ஏமாற்றந்தவிர்த்துத் *திரு
வரங்கத்தேகிடந்த * திருவுடையாள்மணவாளர்க்குத் திருநந்தவநஞ்
செய்து நித்யம்திருமாலைகட்டி ஸமர்ப்பித்துப் போருகிறகாலத்திலே;

திருக்கரம்பனூரிலே திவ்யாங்கநா[illegible]சையாய் அதிஸுந்தரையாய்
வர்த்திக்கிற "தேவதேவி" என்கிற வேச்யை ஒருக்கால் நிசுளா
புரீசனான சோளனை ஸேவித்து மீண்டுவருகிறபோது, ஸ்வஸகிக
ளோடேகூட மார்க்ககேதவ்யபநோதநார்த்தமாக ஸ்ரீவிப்ரநாராயணர்
செய்கிறதிருநந்தவநத்தின் திருச்சோலைநிழலிலேஒருமரத்தடியிலேயிரு
ந்து அத்திருச்சோலையின் ஸ்ரீயைக்கண்டு சுற்றிச்சுழன்று பார்த்து
பரவசையாய், பநஸ ஆம்ர பாடல நாளிகேர நாரங்க
ஜம்பீர லிகுச கதளீ குரவக வகுளாசோக புந்நாக பூகீப்ரப்ர்தி
வ்ர்க்ஷஷண்டவிடபாரூட சுகபிகசாரிகாதிசகுநைர்மதுரகூஜிதமாய், நிர
ந்தரவஸந்தமாய், மதுஸ்ரவகுஸுமாந்தராளத்திலே மஞ்ஜுகூஜந்மது
வ்ரதயுக்தமாய், கேதகீ மாலதீ ஜாதி மல்லிகாரவிந்த கல்ஹாரேந்தீவர
சம்பகாமோத பந்துரகந்தவஹோப ஸேவிதமா யிருக்கக்கண்டு,
ஸ்வாக்ரஜையைக்குறித்து, இப்பொழிலின்நிழல்ச்ரமஹரமாய் நந்தநவந
த்தையும் சைத்ரரதத்தையும் பரிஹஸியாநின்றதீ! என்ன; அவளும்
ஸ்மேராநநாப்ஜையான தேவதேவியைக்குறித்து, ஸ்வப்ரஸூந ப்ர
கர்ஷத்தாலே நம்பெருமாள் திருமுடியை பூஷித்துவருமதாய் அவர்
ம்ர்கயாவிஹார ஶ்ராந்திப்ரஶமநமபண்ணுமது அஸ்மதாதிகளுக்கு
ஆத்வகேதஹரணம் பண்ணாதொழியுமோ வென்று ப்ரியாலாபம் பண்
ணிக்கொண்டு ஆராமலக்ஷ்மீ நிஹிதேக்ஷணரானவர்கள், அங்கே ஸ்ரீவி
ப்ரநாராயணரைக் கண்டார்கள்;

இவரும், வளர்ந்த கேஶச்மச்ருக்களையுடையராய், ப்ரவ்ர்த்தரோம
ப்ரகாராசிதாங்கராய், பரிதௌதவஸ்த்ரோர்த்வபூண்டரங்களையு முடை
யராய், தரிக்கப்பட்ட துளஸீபத்மாக்ஷமாலையும் த்வாதஶோர்த்வபு
ண்ட்ரங்களையுமுடையராய்திவ்யோத்யாநஸ்த்ததருகுல்மலதாதிகளுக்கு
ஆலவாலகரணஜலஸேசநாதிகைங்கர்யநிரதராயிராநிற்க, அத்தைஅவர்க
ளிருவரும் விஸ்மயத்துடன் ஆலோசித்துக்கொண்டிருக்க; இவரும்
தம்கைங்கர்யாஸக்தசித்தராய் அவர்களைக கண்ணெடுத்துப்பாராமல்
திரஸ்கரித்திருக்க; அவ்வளவிலே தேவதேவியும் தன்தமக்கையுடனே
இவன் க்லீபனோ? உந்மத்தனோ? நாம்வந்து முன்னேநிற்க நிரீக்ஷியா
திருக்கிறானென்ன; ததக்ரஜையும் அவனைக்குறித்து, இவர் க்லீபரு
மன்று, உந்மத்தருமன்று, ரங்கேச கைங்கர்யஸக்த சித்தரான ம[illegible]
விரக்தர், இவர் த்வத்ரூப ஸம்பத்தியைக் காறியுமிழ்ந்திருப்பர், [illegible]
ரை உன்விப்ரமவிலாஸஹாஸேக்ஷணாதிகளாலே மோஹிப்பித்தாயாகில்

நீயே வாரஸ்த்ரீஜநமுக்க்யை, உனக்கு நான் ஆறுமாஸம் தாஸியா யிருப் பேனென்ன;

தேவதேவியும் அத்தைக்கேட்டு, இவரை நான் வசீகரியாவிட்டால் உனக்கு நான் ஆறுமாஸம வெள்ளாட்டியாவேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணி, ஸ்வாலங்காரத்தையும் கழற்றிக்கொடுத்து, ஸ்வஸகிகளோ டேகூட ஸ்வாக்ராஜையையுமநுப்பி, ஸாத்விகவேஷயுக்தையாய் இவர் திருவடிகளிலே விழுந்து ஸேவிக்க; இவரும், இதுவென் பெண்ணே! என்று கேட்டருள, அவளும், ஸ்வாமீ! அடியேன் வாரஸ்த்ரீவம்ச த்திலே பாபவசாத் பிறந்தேன், என்னை எனதாயானவள் ஸர்வரையும் பஜித்து அர்த்தார்ஜநம பண்ணென்ன:அடியேன்,பூர்வம் பாபங்களைப் பண்ணி இஜ்ஜந்மத்திலே பிறந்ததுமன்றியே இன்னம் பாபார்ஜநம் பண்ணிப் படுகுழியிலே விழவேணுமோவென்று சொல்லி அர்த்தலுப் தையான அவளை பரித்யஜித்து பெருமாளுக்கு அந்தரங்ககைங்கர்ய நிரதரான தேவரீர்திருவடிகளை ஸேவித்து உஜ்ஜீவிக்கவேணுமெனறு வந்தேன், ஆகிஞ்சந்யாநந்ய கதித்வமுடையஅடியேனை இரங்கியருளி ஆராமரக்ஷணக்ர்த்யே நியோகித்தால்தேவரீர் பெருமாளுக்குத்திருமாலை ஸமர்ப்பித்து மாதுகரம்பண்ணி யெழுந்தருளுந்தனையும காத்திருககிறே னென்ன; இவருமிரங்கியருளி, தம்முடைய திருவாராதநமான எம்பெரு மானுக்கு பைக்ஷத்தை அமுதுசெய்யப்பண்ணி, தாமுமமுதுசெய்து, நிஜபுக்தசேஷத்தையுமிரங்கியருளினார்.

பின்பு அவளும், திருநந்தவநத்தில் திருத்துழாய் முதலான பூச்செடிகளுக்குக் குழிகட்டிச் சோதித்துக் கொத்தித் திருமஞ்சநம் பரிமாறிக்கொண்டு இப்படியே ஆறுமாஸ மநுவர்த்தித்திருந்தாள். பின்னையுமொருநாள் குழிகட்டிச் சோதித்துத் திருமஞ்ஜநம் பரிமாறிக் கொண்டிருக்கச்செய்தே ஒருவர்ஷாகாலத்திலே பெருவர்ஷம் வர்ஷி க்க; ஸ்ரீவிப்ரநாராயணரும் பர்ணசாலையில் ப்ரவேசித்திருக்க, அவளும் அப்பாலே யிருந்து நனையாநிற்கக்கண்டு உள்ளேவாஎன்றழைக்க ; அவளும் உள்ளேபுகுந்தவளவிலே ஈரப்புடைவையுடனேயிருக்கிறதை க்கண்டு தம்முடைய உத்தரீயத்தை ப்ரஸாதிக்க, அவளும் தரித் துக்கொண்டு அவரைப்பார்த்து "திருவடிகளைப் பிடிக்கிறேன்" என்ன; இவரும் அநுகூலிக்க; அவளும் திருவடிகளைப் பிடியாநிற்கச்செய்தே, (అఙ్గారసదృశీనారీ ఘృతకుమ్భసమఃపుమాన్) (அங்காரஸத்ர்சீநாரீ க்ர்தகும்பஸமஃ புமாந்) என்கிறபடியே நெருப்பைச்சேர்ந்த நெய்யைப்போலே இவர் மனமுருகச்செய்தே, அவளும், ஸ்வாமீ! அடியேனுக்கு ஹிதமாயிருப்ப தொருவார்த்தை யருளிச்செய்யவேணுமென்று மந்தஸ்மிதஞ்செய்து அபாங்கவீக்ஷணம்பண்ண; இவரும் விகரித்து அவள்கையைப்பிடிக்க; அவளும் "தக்கையுமானேன்" என்று இவரைாக காடாலிங்கநம் பண் ணிக்கொண்டு ரமித்து, ஒருக்காலும், காந்தாவிஷயாநபிஜ்ஞரான

இவரை மநோபவாயோதந வைபவத்தாலே ஸ்வவிஷயே மக்நரா
வாக்கினாள். அதின்மற்றைநாள் ஸ்வக்ர்ஹத்தில்நின்றும் ஸ்வாபரணத்
தையு மழைப்பித்துக்கொண்டு ஸர்வாபரண பூஷிதையாய், இவரை
தன் ஆபிரூப்யத்தாலே மயக்கி, அவயவைகதேசத்திலே ஆழங்கால்
படுத்தி,திருநந்தவநத்திலே மல்லிகாலதாக்ர்ஹத்தையும் மாதவீ குஸு
மோத்கர குஞ்சத்தையும் விசித்ர நிர்ப்பர மந்மதோத்ஸவ ரஸத்தையும்
அநுபவிப்பித்து த்ர்டாநுராகத்தாலே ஒருவரையொருவர் ஒருக்ஷண
மும் பிரியக்ஷமரன்றியே யிருந்து இவரை ஸ்வவசவர்த்தியாம்படி
பண்ணி, ஸ்வஸம்பந்தத்தை ஸஹிப்பிக்க, தன்ஸகிகளும் தமக்கையுங்
கண்டு ச்லாகிக்க, தீர்ணப்ரதிஜ்ஞையாய் ஸ்வகர்ஹமேவந்து, இவரு
டைய வர்ணாஸ்ரம தர்மங்களையுங் குலைத்து, காமுகவேஷ யுக்தராம்படி
பண்ணி, ப்ரக்ர்திபாவசராக்கி, அதிஸ்நித்தைபோலே சிலகாலம் ரமியா
நிற்க,இவரும் "சிலம்படியுருவில் கருநெடுங்கண்ணார்திறத்தனா யறத்
தையேமறந்து" என்கிறபடியே மிகவும் விஷயப்ரவணராய், ஸ்வதர்
மாநுஷ்டாந ஸந்த்யாஸாவித்ரியையும் மறந்து, ஸ்த்ரீபோகமே காலக்ஷே
பமாக வர்த்திக்கிற இவரை ஸர்வஸ்வாபஹரணம்பண்ணி சூந்யதந
ரானவாரே தானும்அநுராகசூந்யையாய்த் தள்ளிவிட; இவரும் அவள்
க்ர்ஹத்வாரத்திலே கிந்நராய் முசிதநுகொண்டுகிடக்க; அவ்வளவிலே
பெருமாளும் பிராட்டியும் அவ்வீதியிலே * ஸவிலாஸஸஞ்சாரம் பண்
ணிகொண்டு எழுந்தருளாநிறக; அவ்வளவிலே பிராட்டி, இவரைக்
கண்டுமந்தஹாஸம்பண்ணி,வேஸ்யாகர்ஹத்வாரத்திலேமுசித்துக்கொ
ண்டுகிடக்கிறாரொன்று கேட்க; பெருமாளும், நமக்குப் பூமாலைதரும்
விப்ரநாராயணன்வேச்யாஸக்தனாய் அவளாலே அர்த்தலோபத்தாலே
நிராக்ர்தனாய் துக்கிதனாய் தத்வாரி முசிதநுகொண்டு கிடக்கிறான்
என் றருளிச்செய்ய; பிராட்டியும், பெருமாளுடனே, நமக்கு அந்த
ரங்கரானவர் இங்ஙனே விஷயாஸக்தராளுலும் விஸ்வமோஹநஹேது
வானதேவரீர்மாயைக்குவிஷயமாககலாமோ? இவரைவிஷயாஸக்தியிலு
ண்டான பாபத்தை நிஸ்ஸேஷமாக நிவர்த்திப்பித்து தேவரீர்திருவடிக
ளுக்குஅந்தரங்கராம்படி கடாக்ஷித்தருளவேணுமென்ன; பெருமாளும்
பிராட்டிவார்த்தைக்கு இசைந்து, தம் பரசபாத்ரத்திலே ஒரு தபநீய
மான சுத்தோதக பாத்ரத்தை யெடுத்துக்கொண்டுவந்து,வேஸ்யாக்ர்ஹ
த்வாரிநின்று, தேவதேவீ! கவாடோத்ககாடநம்பண்ணென்ன; அவ
ளும் நீர் ஆரென்றுகேட்க, நான் அழகிய மணவாளதாஸன், விப்ரநாரா
யணன் அனுப்பவந்தேனென்ன,அவளும்சடக்கெனக்கதவைத்திறந்து
என்னென்றுவினவ; அவனும், ஸ்ரீவிப்ரநாராயணன் உனக்கு இந்த
ஸ்வர்ணபாத்ரத்தைத் தந்தானென்ன; அவளும் ப்ரஹர்ஷ்டையாய்
தபநீயபாத்ரத்தை வாங்கிக்கொண்டு அவரை உள்ளே வரச்சொல்லு
மென்ன, அழகியமணவாளதாஸனும் விப்ரநாராயணரன்டை[illegible]
சென்று தேவதேவியும் உம்மை உள்ளே வரச்சொன்னாளென்ன[illegible]

ரும், கர்ணாம்ர்தமான வார்த்தையைக்கேட்டு ஸந்துஷ்டராய் உள்ளே புகுந்து அவளுடனே க்ரீடாபரராக, அவ்வளவிலே பெருமாளும் கோயிலிலேபோந்து * உரகமெல்லணையிலே சாய்ந்தருளினார்.

அநந்தரம் பொழுதுவிடிந்தவாறே திருக்காப்பை நீக்கினவளவிலே ஸந்நிதியிலிருந்த தபநீய சுத்தோதக பாத்ரத்தைக் காணாமல் கோயில்பரிகரத்தாரடைய பயப்பட்டு,ராஜகர்த்தருககறிவிக்க; நிசுளாபுரீந்த்ரனான ராஜாவுங்கேட்டு, நம்பியார் பரிசாரகர் முதலானாரைப் பிடித்து தண்டிக்க; அவ்வளவிலே ஜலாஹரணார்த்தமாக வந்த தேவதேவியகத்து கடசேடி, தன்னோடுஸம்பந்த முடையானொருவனைப் பாதிக்கக் கண்டு இதுவென்னென்றுகேட்க, தபநீயபாத்ரம்காணாமற்போனத்தை அவளுக்குச்சொல்ல; அவளுங்கேட்டு,ஸ்ரீவிப்ரநாராயணன்எங்கள்தேவதேவிக்கு ஒருஸ்வர்ணபாதரங்கொடுத்திருக்கிறான், அவள்மெத்தைத் தலையணையின்கீழேவைத்திருக்கிறதென்ன, அவனுங்கேட்டுராஜகர்த்தருக்குச்சொல்ல; அவர்களும்வந்து இவர்களைப்பிடித்துக்கொண்டுஅவள் க்ரஹத்தைச்சோதித்து அந்தவட்டிலேயு மெடுத்துக்கொண்டுபோய் அரசனுக்குக்காட்ட; அரசனும்வேஸ்யையைக்குறித்து, இப்படி பெருமாளுடைய பாத்ரத்தை நீ வாஙகலாமோவென்ன; நாயன்தே; நான பெருமாளதென்றறியேன், இவன் தன்வட்டிலென்று தன்தூதன் அழகியமணவாளனென்பானொருவன்கையிலே வரவிட்டான், அறியாமல் வாங்கினேனென்ன; இவரும் நமக்கொருதூதனுமில்லை நான்வட்டிலையு மறியேனென்ன; அவளுமுண்டென்ன; இவருமில்லையென்ன; இப்படி உபயருடையவிவாதமுமகேட்டு,அரசனும அந்தவேச்யையை அபராத தண்டம்வாங்கி வட்டிலையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து இவரையும் ஸ்வர்ணஸ்தேயயுக்த தண்டம் பரீக்ஷித்துப் பணணக்கடவோமென்று காவலிலேவைத்து ஸ்வக்ரஹமே போந்தான்.

அவ்வளவிலே பிராட்டியும், பெருமாளுடனே ஸ்ரீவிப்ரநாராயணரை இனி லீலைக்கு விஷயமாககாதே இரககததுக்கு விஷயமாககிக் கொள்ளவேணுமென்ன, பெருமாளும் ராஜாவின் ஸ்வப்நத்திலே யெழுந்தருளி ஸ்ரீவிப்ரநாராயணர்க்கு ப்ராரப்த்தகர்மத்தை இங்கேகழிக்கைக்காக நாமே தபநீயபாத்ரத்தைக் கொடுத்துத் தண்டிப்பித்தோ மித்தனையல்லது அவர் தண்ட்யரன்று, நிர்த்தோஷர், அந்தவேஸ்யாதநமும் நமக்கு வேண்டா, அவரைவிட்டு பூர்வம்போலே திருமாலை கைங்கர்யத்திலே நிறுத்துமென்று நியமித்தருள; சோளபூபதியும் விடியற்காலத்திலே யெழுந்திருந்து நம்பெருமாள் தனக்கு ஸ்வப்நத்திலே நியமித்தருளினபடியைச்சொல்லி விஸ்மயப்பட்டு ஸ்ரீவிப்ரநாராயணரை யழைப்பித்து அநேகமாக ஸத்கரித்துத் தண்டனிட்டு விட, இவரும் தம் நிஷீகர்த்யத்தை நினைத்து அநுதபிதது "அன்னமென்னடையினார்கலவியையருவருத்தஞ்சினாயேல்" என்கிறபடியே விஷயாஸக்தி

ருசியைக் காறியுமிழ்ந்து அகம்யாகமந ப்ராயஸ்சித்தார்த்தமாக, (ఏత త్సమస్తపాపానాం ప్రాయశ్చిత్తం మనీషిభిః। నిర్ణీతం భగవద్భక్త పాదోదకనిషేవణం) (ஏதத் ஸமஸ்தபாபாநாம் ப்ராயஸ்சித்தம் மநீஷிபி: - நிர்ணீதம் பகவத்பக்த பாதோதகநிஷேவணம்) என்று சொல்லுகிறபடியே ஸர்வபாப ப்ராயஸ்சித்தமான பகவத்பக்தபாதோதகநிஷேவணம் பண்ணி பூதராயருளினார்.

அநந்தரம் இவருக்கு க்ராமகுலாதிகளால்வரு மநர்த்தப் போன்றிக்கே நிலைநின்ற திருநாமமாவது, (యస్యమూర్ధ్ని స్థితం యావత్ వైష్ణవాఙ్ఘ్రిరజశ్శుభమ్। గఙ్గాదిసర్వతీర్థాని తావత్తిష్ఠన్త్యసంశయః) (யஸ்யமூர்த்நிஸ்திதம்யாவத் வைஷ்ணவாங்க்ரிரஜஸ்ஸுபம் - கங்காதிஸர்வதீர்த்தாநி தாவத்திஷ்டந்த்யஸம்யஸ:) என்றும், (నిరపేక్షం మునింశాన్తం నిర్వైరం సమదర్శనం। అనువ్రజామ్యహం నిత్యం పూయయేత్యఙ్ఘ్రిరేణుభిః) (நிரபேக்ஷம்முநிம்ஸாந்தம் நிர்வைரம்ஸமதர்ஸநம் - அநுவ்ரஜாம்யஹம்நித்யம் பூயயேத்யங்க்ரிரேணுபி:) என்றும், "மாயன்றமரடிநீறுகொண்டணியமுயலில் மற்றில்லைகண்டீரிவ்வணங்குக்கே" என்றும், "பாததூளிபடுதலாலிவ்வுலகம் பாக்கியஞ்செய்ததே" என்றும், "தொண்டரடிப்பொடி யாடநாம்பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கையென்னாவதே" என்றும் இவ்வர்த்தவிஷயம் தத்வவித்துக்கள் பலராலும் உத்தேஸ்யதமமாக ஆதரிக்கப்பட்டிருக்கையாலே * துளவத்தொண்டிலே நிஷ்டராய்ப்போரும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸ்ரீபாததூளியென்றே தமக்கு உஜ்ஜீவநகரமான திருநாமத்தையுடையராய், (భాగో నాస్త్యత్ర గచ్ఛతి)(பாகோநாஸ்த்யத்ரகச்சதி) என்ற திருவடியைப் போலவும், (ఐశ్వర్యం వాపి లోకానాం కామయే న త్వయా వినా) என்ற இளையபெருமாளைப்போலவும், "மாயாப்பெருவிறலுலகமூன்றினொடுநல்வீடுபெறினுங் கொள்வதெண்ணுமோதெள்ளியோர்குறிப்பு" என்றநம்மாழ்வாரைப்போலவும், இவரும், "இந்திரலோகமாளுமச்சுவைபெறினும்வேண்டேன்" என்று தத்வ்யதிரிக்தமான இதரபுருஷார்த்தங்களில் செல்லாத திருவுள்ளத்தையுடையராய, "என்னைத்தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும்மனமேதந்தாய" என்கிறபடியே இவரும் "மாதரார்கயல்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை, போதரேயென்றுசொல்லிப் புந்தியிற்புகுந்து தனபாலாதரம்பெருகவைத்தவழகன்" என்றநுஸந்தித்து க்ர்தஜ்ஞராய், அதுவுமன்றிக்கே, "நாகத்தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள், நாகத்தணையரங்கம்பேரன்பில்" என்றும், "கண்டியூரரங்கம்மெய்யங்கச்சிபேர்மல்லை" எனறும்-இப்படி பலவிடங்களிலும மண்டித்திரிகிறமற்றையாழ்வார்களைப் போலன்றிக்கே * யாவரும்வந்தடிவணங்க அரங்கநகர்துயினற அழகியமணவாளரல்லதறியாதபாதிவ்ரத்யத்தையுடையராக, அவ்வளவிலே நம்பெருமாளும் இவர்க்கு * மயர்வறமதிநலமருளி, தம்முடைய பரத்வாதி பஞ்சப்ரகார ரூபகுண சேஷ்டிதங்களை யெல்லாம் நிஸ்ஸந்தேஹமாக கரதலாமலகம்போல் தெளியக் காட்டிக்கொடுக்க, இவரும் * தெளிவுற்ற சிந்தையராய் நிரவதிகபக்தியைப்பெற்று வர்த்திக்கும்படியை தேவதேவி கண்டு, இவ

ளைப்போலே உஜ்ஜீவிக்கவேணுமென்று நினைத்து, தன் ஸர்வஸ்வத்தையும் நம்பெருமாளுக்கு ஸமர்ப்பித்து, பரமஸாத்விகையாய், "ஸத்ஸங்கதி*ஸதாபச்யதியிலே வைக்கும்" என்னுமாப்போலே நம்பெருமாள் கோயிலிலே ஸம்மார்ஜநாதி கைங்கர்யநிரதையாயுஜ்ஜீவித்தாள.

இவ்வாழ்வாருக்கு பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் தலைமண்டையிட்டு, "தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்" என்கிறபடியே ஸர்வவிதோத்தாரக பந்துவாகப் பெரியபெருமாளைத் திருமந்த்ராநுஸந்தாநத்தாலே அநுபவித்தருளி, அத்திருநாமோச்சாரணத்தால் தமக்குண்டான ராஜகுல மாஹாத்மயத்தாலே (திருவடி தன்னாமம் மறந்தும் புறந்தொழா மாந்தரை-திறமபேல மினகண்டீா) என்றுயமன் பாசஹஸ்தனான ஸ்வபுருஷர்களைப்பார்த்து, கர்ணமூலத்திலேயுபதேசிக்கத்தக்கதாக "நமன்றமாதலைகள் மீதே-நாவலிட்டுழிதருகின்றோம்" என்றுஅம்மந்த்ரவைபவத்தைச்சொல்லிஆநந்தித்து, யமாதிகள்தலையிலேயடியிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களடியிலேமுடியிட்டு, திருமாலை கட்டிச்சாத்த நினைத்து * திருமாலைசொல்லுகிற இவர் ஸ்ரீசௌநகபகவான் வக்தாவாக ஸ்ரீசதாநந்தர் ச்ரோதாவாகத் திருநாமங்களைக் கேட்டாப்போலே பெரியபெருமாள் ச்ரோதாவாகத் தாம் வக்தாவாய்க் கொண்டு ப்ரகாசிப்பித்தருளி, (భూతాసికవర్గేణ చవర్గేణేన్ద్రియాణిచ। టవర్గేణతవర్గేణ జ్ఞానగన్ధాదయస్తథా। మనః పకారేణైవోక్తం ఫకారేణత్వహంకృతిః। బకారేణభకారేణ మహాన్ప్రకృతిరుచ్యతే) (பூதாநிசகவர்கேண சவர்கேணேந்த்ரியாணிச-டவர்க்கேணதவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா - மந:பகாரேணை வோக்தம் பகாரேணத்வஹம்க்ருதி:- பகாரேணபகாரேண மஹாநப்ரக்ருதிருச்யதே) என்றும், "பொங்கைம்புலனும்பொறியைந்தும கருமேந்திரியமைம்பூதமிங்கிவ்வுயிரோய் பிரகிருதிமானாங்காரமனங்கள" என்றுசொல்லப்படுகிற சதுர்விம்சதிதத்வாத்மிகமான இப்ஶரீரத்திலாத்மபுத்தியை "புறஞ்சுவரோட்டைமாடம்" என்று நிவர்த்திப்பித்தும், (ஆத்மாதுஸம... [illegible]) (ஆத்மாதுஸமகாரேணபஞ்சவிம்ஶ:ப்ரகீர்த்தித:) என்று சொல்லுகிறபடியே இருபத்தைந்தா மக்ஷரமான மகாரவாசயனைகயாலே ப்ரக்ருதேஃ பரனான ஆத்மஸ்வரூபத்தை "யடியரோர்க்கு" என்று ஸ்வரூப நிர்த்தேசம்பண்ணியும், திருமந்த்ரநிஷ்டராய், *மெய்ம்மையை மிகவுணர்ந்து * உன்கடைத்தலையிருந்து வாழும் சோமபர், பெரியபெருமாளுக்குஅபிமதரென்றுஅவர்கள்தமக்குஉத்தேஶ்யராகையாலே, "உன்னடியார்க்காட்படுத்தாய்" என்று தமக்குப் பெருமாளுண்டாக்கின ததீயசேஷத்வத்தைப் பேசியும், இப்படி இவ்வர்த்த விசேஷங்களை அகிலருமறிந்துஉஜ்ஜீவிக்கும்படி திருமாலை திருப்பள்ளியெழுச்சி என்கிற திவ்யப்ரபந்தங்களிலே விசததமமாகவருளிச்செய்து, லோகத்தை வாழ்வித்தருளினார்.

(కావేరీతీరమాశ్రిత్య వాస్తీర్యత్ర ప్రవర్తతే । తద్దేశవాసినాంముక్తిః క్షేమస్తత్రనివాసినాం)என்று சொல்லுகிறபடியே ஸ்வப்ரவாஹ ஸ்பர்ஶமாத்ரஸம்பந்தத்தாலே முக்திதரவல்ல நீர்மையையுடைத்தான திருக்காவேரிக்கரையிலே நிசுளாபுரியென்று சொல்லப்பட்டிருப்பதாய், மாடகூடப்ராஸாதோபசோபிதமான உறையூரிலே, ஸூர்யவம்ஶப்ரதீபனான சோளபூபதி தர்மமாக ப்ருதிவீபரிபாலநம் பண்ணுகிற்கச்செய்தே க்ஷீரார்ணவராஜனிடத்தே பிராட்டி ப்ராதுர்ப்பவித்தருளினாற்போலே, நம்பெருமாளிடத்தே ஏகாந்தசித்தனான தர்மவர்மாவாகிற சோளனுக்குக் கந்நிகையாய் நீளாம்ஶஜையான உறையூர்நாய்ச்சியார் திருவவதரித்தருள, சோளராஜாவும், ஸ்ரீஜநகராஜன், பிராட்டியை ப்ரீதியோடே எடுத்து வளர்த்தாற்போலே உவப்போடே வளர்க்க வளர்ந்தருளுகிற நாய்ச்சியார், பாலக்ரீடையிலும் நம்பெருமாளையல்லது வேறொரு விளையாட்டறியாதவளாய், ஸகிகளோடே கூடி விஹரித்து வளர்ந்தவள் ப்ராப்தயௌவனையானபின்பு, ஒருநாள் உத்யாநவநத்திலே ஸகிகளோடேகூட டோலாலீலையாய் விஹரியாநிற்க, "வேட்டையாடி வருவானை விருந்தாவநத்தே கண்டோமே" என்கிறபடியே நம்பெருமாள் அங்கே ம்ருகயாவிஹாரபரராயெழுந்தருளக்கண்டு மோஹித்து, ஊரேவந்து, ஸ்வபிதாவான சோழராஜனைக் குறித்து, நம்பெருமாளையல்லது வேறொரு புருஷனுக்கு வாழ்க்கைப்படேன், என்னை அவருக்கே உதகம்பண்ணிக்கொடுமென்ன: சோழராஜாவும் ஸந்துஷ்டனாய் நம்பெருமாள ஸந்நிதியிலேசென்று, அசசெய்தியை விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும நாமே பாணிக்ரஹணம்பண்ணுகிறோம், நமக்கே உதகம் பண்ணிக்கொடுமென்று நியமிக்க; ராஜாவும் * துமில மெழுப் பறைகொட்டித்தோரணமநாட்டி அரங்கமாநகரையலங்கரித்து பெரியப்ரீதியுடனே * பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து நாய்ச்சியாரை உதகம்பண்ணிக்கொடுக்க, பெருமாளும ஜநகராஜன் திருமகளை உதவாஹம பண்ணினாற்போலே உவப்போடே திருமணம்புணர; ராஜாவும் முந்நூற்றறுபது பாரம பொன்னரிசியும் அதுக்குத்தக்க முத்துமாணிக்கமயமான நவரத்நோபஹாரமும், த்ரவ்யதிக வஸ்த்ராபரணங்களும, சோளராஜ்ஜ உச்சவ தாவபுவநங்களும குறைவறக்கொடுத்தும் பர்யாப்தி பிறவாமையாலே தன் ஸர்வஸ்வத்தையும் நம்பெருமாளுக்கே யாக்கி வாழ்ந்தானிறே.

திருப்பாணாழ்வார்வைபவம்.

(శ్రీలోకసారంగమహామునీంద్రస్కన్ధాధిరూఢం కలయామినిత్యం । కళఙ్కహీనంకమనీయభక్తం కవీశ్వరంగాయకసార్వభౌమం) (ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநீந்த்ர ஸ்கந்தாதிரூடம் கலயாமிநித்யம் - களங்கஹீநம்கமநீயபக்தம்கவீஶ்வரம்காயகஸார்வபௌ[illegible]

(శ్రీవేలాబ్దనిసర్గమేకలియుగే సంవత్సరేదుర్మతౌ । భానౌవృశ్చికభాజిపక్షవిదినే [illegible] ధన్యోత్తమే రోహిణ్యాంసహితేలసత్యుడుపతౌ కృష్ణద్వితీయేతథా । సజ్జాతోమునివాహనశ్చ[illegible] రోర్యసగ్రేణో న్నర్ధకే)

மம௦) திருப்பாணாழ்வார், (உறந்தை) என்கிற உறையூரிலே கார்த்திகை மாஸத்தில் ரோஹிணீ நக்ஷத்ரத்திலே பஞ்சமவர்ணத்திலே * ப்ராஹ்மணவேள்விக் குறைமுடித்த பாகவதரைப்போலே ஸ்ரீவத்ஸாம்ஸரான திருப்பாணாழ்வார் அவதரித்தருளினார். (అథాష్టేకలౌ సంప్రాప్తే ... కార్తికమాసి వైష్ణవే) (அதத்ரகுலேஉத்திமேரமா ரமஞோரஸ்திதலாஞ்சநா௦ஶஜ: - ஸமஜாயதபாணஸ௦ஞ்ஜிகஸ்ஸ: கார்த்திகமாஸிவைஷ்ணவே) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே.

(జాయమానం హి పురుషం యం పశ్యేన్మధుసూదనః । సాత్త్వికస్స తు విజ్ఞేయస్స వై మోక్షార్థచింతకః) (ஜாயமாந௦ஹி புருஷ௦ யம்பர்யேந்மதுஸூதந: - ஸாத்விகஸ்ஸது விஜ்ஞேயஸ் ஸவைமோக்ஷார்த்தசிந்தக:) என்கிறபடியே எம்பெருமான் இவர்க்கு ஜாயமாந கடாக்ஷத்தைப் பண்ணுகையாலே, ஸத்வகுண ப்ரசுரராய் மோக்ஷார்த்தியான இப்பாண்பெருமாள், * சேமமுடை நாரதனைப்போலவும், (నిర్గతా ... ఏవముక్త్వా ... రాక్షసస్య ...) (நிர்ஹாத்தாரயாஸ்யாத்வை தேநகீதபலேந மாம்-ஏவமுக்தவாது சண்டாள௦ ராக்ஷஸ ஸம்ஸரண௦க்த:) என்கிறபடியே சரணாகதனான ராக்ஷஸனைக் குறித்து, (యన్మయా పశ్చిమం గీతం స్వరం కైశికముత్తమం । ఫలేన తస్య భద్రం తే మోక్షయిష్యామి కిల్బిషాత్) (யந்மயாபஸ்சிம௦கீத௦ ஸ்வரம் கைஶிகமுத்தம௦ - பலேநதஸ்யபத்ரந்தேமோக்ஷயிஷ்யாமி கில்பிஷாத்) என்று கைசிகபுராணத்தில் யாகதோஷம் பரிஹரித்த பாகவதனைப்போலவும், பகவத்கான வித்யைக்கு ஸார்வபௌமராய், * பரமாத்மனைச் சூழ்ந்துநின்று ஸாமகானம்பண்ணும் நித்யஸூரிகளிலே யொருவர் வந்தவதரித்தாரோ வென்று சொல்லலாம்படியான திவ்யசரித்ரங்களை யுடையரான இப்பாண்பெருமாள், ஸ்வவர்ணாநுகூலமாக இரண்டாற்றுக்கும் நடுவே தாம் மிதியாமே தென்னாற்றின் தென்கரையிலே, திருமுகத்துறைக்கெதிரே "தொழும்த்திசை யுற்றுநோக்கியே" என்கிறபடியே * திருவரங்கமே யான்திசையைநோக்கி தூரநின்று, * வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற் காளென்றுள் கலந்து வீணையும் கையுமாய் * திருப்புகழ்கள் பலவும் பாடிகொண்டு, "சிந்திக்குந்திசைக்குந் தேறுங்கைகூப்பும்" என்கிறபடியே பெரியபெருமாளை அநவரதபாவனைபண்ணிப் போருகையாலே, (తద్భావభావితః) (தத்3பா4வபா4விதமந:) என்கிறபடியே பெரியபெருமாளும் இவர்பக்கல் * உவந்த திருவுள்ளத்தராக, அவ்வளவிலே நாய்ச்சியாரும் பெருமாளுடனே நமக்கு அந்தரங்கரான இப்பாண்பெருமாள் புறம்பேநிற்கப் பெறுமோ என்று விண்ணப்பஞ்செய்ய, பெரியபெருமாளும் பலகால் அருளப் பாடிட்டுப்போகவிட்ட விடத்திலும் இவர் ஸ்வரூபத்தால்வந்த நைச்யத்தாலும் ஸ்வவர்ணத்தால் வந்த நைச்யத்தாலும் பிற்காலித்து, கடுநடையிட்டு அகல்கிறவளவிலே, பெரியபெருமாள், பின்னையும் இவர்பக்கலுள்ள க்ர்பாதிசயத்தாலும், தன்நிர௦குச ஸ்வாதந்த்ர்யத்தாலும் ஸ்ரீலோகஸா

ரங்கமஹாமுநீந்த்ரரைப்பார்த்து "நமக்கு அந்தரங்கரான பாண்பெரு மாளை நீர்நெகிழ நினையாதே, அவரை, உம்முடைய தோளிலே கொண்டு வாரும்" என்று ஸ்வப்நமுகேந நியமித்தருள அவரும் விடிவோரை எழுந்திருந்து, (అద్యమేసఫలం,న్మ సుప్రభాతాచమేనిశా) (அத்யமேஸபலஂஜந்ம ஸுப்ரபாதாசமேநிஶா) என்கிறபடியே இற்றை விடிவு எனக்கு நல்விடிவாச்சுதென்று ஸ்வபநத்தை நிஶ்சயித்து மிகவும் ஹ்ர்ஷ்டராய் *தோதவத்தித் தூய்மறையோருடனே திருமுகத் துறையிலே, *நாட்காலேநீராடி அநுஷ்ட்டாநம் செய்தருளி, (సుదూరమపి గన్తవ్యం యత్రభాగవతస్థితః) (ஸுதூரமபிகந்தவ்யஂ யத்ரபாகவதஸ்த்திதஃ) என்கையாலே, இவ்வாழ்வார் அதிதூரத்திலே நின்று, *யாழினிசை வண்டினங்களாளம்வைக்கு மரங்கத்தைநோக்கி நித்யமாக ஸேவித்து ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டு நிற்கிறவிடத்தேற வெழுந்தருளி, இப்பாண்பெருமாள் திருவடிகளிலே தாமும் தடக்கையுங்கூப்பி தண்டன்ஸமர்ப்பித்து, நம்பெருமாள் தேவரீரை எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு வரவேணுமென்று அடியேனை நியமித்தருளினர் என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும், "குலந்தாங்குசாதிகள் நாலினுங்கீழிழிந்து" என்றும், "குலங்களாயவீரிரண்டிலொன்றிலும்பிறந்திலேன்" என்றும், "நீசனேன்நிறைவொன்றுமிலேன்" என்றும் சொல்லுகிற படியே, இவரும் ஸ்வநைச்யத்தை முன்னிட்டுப் பிற்காலித்து, *திருவரங்கப்பெருநகரை நான் மிதிப்பேனோவென்ன; ஸ்ரீ லோகஸாரங்க மஹாமுநிகளும்,ஆகில் அடியேனுடையதோளின்மேலேயெழுந்தருளும், பெருமாள் அருள்பாடிட்டருளினபடியே எழுந்தருளுவித்துக்கொண்டு போகிறேனென்ன; ஆழ்வாரும்,"செய்ததலையெழுநாற்றுப்போல்அவன் செய்வனசெய்துகொள்ள" என்கிறபடியே, *அவன் செய்யும்சேமத்தையெண்ணித் தெளிவுற்றுங்யஸ்தபரராய்நிற்க,ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநீந்த்ரரும், முக்தரைப் போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருளுவித்துக்கொண்டு திருமாமணிமண்டபத்தேறப் போமாபபோலே ஆழ்வாரைத் தம் திருத்தோளின்மேலே எழுந்தருளுவித்துக்கொண்டு அழகிய மணவாளன்திருமண்டபத்துக்கவ்வருகேபுகுர: பெரியபெருமாளும் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை, நித்யதரித்ரனுக்கு நிதிகாட்டுவாரைப்போலே இவருக்குக் காட்டிக்கொடுகக, (కిరీటకేయూరకరత్నకుణ్డలం ప్రలమ్బముక్తామణిహారభూషితం। విశాలవక్షస్థలశోభికౌస్తుభం శ్రియాచదేవ్యాధ్యుషితోరువక్షసం॥ ప్రతప్తచామీకరచారువాససం సుమేఖలంనూపురశోభితాఙ్ఘ్రికం। సువర్ణనీజాతమ్యాలకోమళం దధానమచ్ఛచ్ఛవియజ్ఞసూత్రకం॥ భుజఙ్గపధానంప్రసృతాన్యహస్తం నికుఞ్చితోత్తానిత పాదయుగ్మం। సుదీర్ఘముద్బాహుముదగ్రదేహం భుజఙ్గతల్పంపురుషందదర్శ)(கிரீடகேயூரக ரத்நகுண்டலஂ ப்ரலம்பமுக்தாமணிஹாரபூஷிதம்-விஶாலவக்ஷஸ்த்தல ஶோபிகௌஸ்துபஂ ஸ்ரியாசதேவ்யாத்யுஷிதோருவக்ஷஸம் - ப்ரதப்த சாமீகரசாருவாஸஸஂஸுமேகலஂ நூபுரஶோபிதாங்க்ரிகம்-ஸுவர்ணநீ

ஜாதம்ர்ஜ்ஞளகோமளாம் ததாநமச்சச்சவியஜ்ஞஸூத்ரகம் - புஜோப தாநம்ப்ரஸர்தாக்ய ஹஸ்தம் நிகும்சிதோத்தாகிதபாதயுக்மம் - ஸுதீர்க்க முக்தாஹ்ருமுதக்ரவேஷம் புஜங்கதல்பம் புருஷம் ததர்ஶ.) என்றும் சொல்லுகிறபடியே - ப்ரஹ்மாதி ஸகலசேதநராலும் ஸேவ்யமாநரான * அரங்கத்தரவணைப்பள்ளியானை ஸேவிக்கப்புகுந்த ஆழ்வார், மாதாவினுடைய ஸர்வாவயவங்களும் கிடக்கச்செய்தே *ஸ்தநந்தயப்ரஜை முலையிலே வாய்வைக்குமாப்போலே சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந்துறை திருவடிகளாகையாலே "அரங்கத்தம்மான் திருக்கமலபாதம்வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றவே" என்கிறபடியே சேஷித்வபோக்யத்வோபாயத்வங்கள் குறைவற்ற திருவடிகளையிறே முந்துறப்பற்றிற்று; "அரங்கத்தம்மான் -" என்கையாலே - சேஷித்வமும், "கமலம்" என்கையாலே – போக்யத்வமும், "பாதம" என்கையாலே - உபாயத்வமும் சொல்லிற்று; பெரியாழ்வாரும் இப்படி யிருந்துள்ள திருவடித் தாமரைகள் முதலாக * திருப்பாதகேசத்தை விருப்பாலுரைத்தநுபவித்தாற்போலே, இவரும * இருளகற்றுமெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி யருள்கொடுத்திட்டடியவரையாட்கொள்வானை பெரியபெருமாளுடைய திவ்யமங்களவிக்ரஹத்தை பாதாதிகேசாந்தமாக அநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீத்யதிசயத்தாலே, தாம் பத்தும்பத்தாக அநுபவித்தபடிக்கு "அமலனாதிபிரான" என்கிற திவ்யப்ரபந்தத்தைபிற்பாடருமஅநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி லோகத்தை வாழ்வித்தருளி மிகவும் உகப்போடேயிறக;பெரியபெருமாளும் வேர்சூடுமவர்கள் மண்பற்றுக்கழற்றாதாப்போலே அத்திருமேனியோடே அங்கீகரித்தருள, ஆழ்வாரும், அகிலரும காணும்படி அணியரங்கன்திருவடிகளிலே அந்தர்ப்பவித்தருளினார்.

திருமங்கையாழ்வார்வைபவம்.

(పరకాలహరింవన్డే హరిపాదగుహాశ్రయం। ఉన్నతప్రతికూలేభ కుంభసంభేదవిభ్రమం। నాదప్రసభసన్త్రస్త శైవశాక్యాదిదుర్ద్విపం। పరకాలమృగేన్ద్రంత్వాం ప్రపద్యే-చ్యుతవన్దితం)
(பரகாலஹரிம்வந்தே ஹரிபாதகுஹாஶ்ரயம - உந்நதப்ரதிகூலேப கும்பஸம்பேதவிப்ரமம் - நாதப்ரஸபஸந்த்ரஸ்த ஶைவஶாக்யாதிதுர்த்விபம் - பரகாலம்ர்கேந்த்ரம்த்வாம் ப்ரபத்யேச்யுதவந்திதம்.)

திருமங்கையாழ்வார், திருவாலித் திருநகரியிலே திருக்குறையலூரிலே, நளவருஷம் கார்த்திகைமாஸம் க்ர்த்திகாநக்ஷத்ரத்திலே, ஸ்ரீ கார்முகாம்ஶராய் அவதரித்தருளினார். ம்லேச்சவம்ஶத்திலே அவதரிக்கையாலே, இவர்க்கு "நீலநிறத்தர்" என்று திருநாமம் சாத்தினார்கள். * (సమజాయతతత్రపాదజప్రముఖశ్శ్చనీలనామకః। పురుషోత్తమకార్ముకాంశజస్ఫురితే కార్తికకృత్తికోదయః) (ஸமஜாயததத்ரபாதஜப்ரமுகஶ்சநீலநாமகஃ - புரு

(సుధాగానాబ్దానాం కలియుగభవానామపగమేన శేవష్టే మాసే శరదిచరమే దైవతగురోః। కళాశేషస్వర్కే శుభకరదినే పూర్ణిమజుషి తథావావిర్భూతకలిరిపురమేయాత్మమహిమా)

ஷோத்தமகார்முகாரமஜஸ்புரிதேகார்த்திக க்ர்த்திகோடுதி) என்று - திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே. "தெரியேன் பாலகனாய்" என்கிறபடியே-பால்யாவஸ்த்தாநந்தரம் ப்ராப்த யௌவனராய் * மாரனார் வரிவெஞ்சிலைக்காட்செய்து, *தெரிவைமா ருருவமேமருவி மிகவும் விஷயப்ரவணராய்,ஸ்வகரதர்தமஸ்த்ரப்ரகாண்டராய், சோளபூபதியை ஸேவித்து யுத்தேபராக்ராந்தராய வீரராயிருக்கிற இவரை; அவனும் ஒரு தேசாதிபதியுமாய் சேநாநாயகனு மாக்கிவைத்துப் போருகிற காலத்திலே, திருவாலிநாட்டிலே நனறுயிருப்பதொரு * தடத்தவிழ் தாமரைப்பொய்கையிலே, "சிலமபார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் சீர்" என்கிறபடியே, சில அப்ஸரஸ்ஸுக்கள் வந்து நாளும் ஜலக்ரீடை பண்ணிப்போக,அவர்களிலே திருமாமகளென்பவள்,ஒரு அப்ஸரஸ்ஸு வேஷத்தை தரித்துக்கொண்டு குமுதமலர் கொய்ய, அவர்களும் இவளை விட்டுப்போக, இவளும் மாநுஷமான சரீரத்தை பரிக்ரஹித்துத் தனித்துநிற்க, அவ்வளவிலே, திருநாங்கூரில் எம்பெருமானை ஸேவித் திருப்பாரொரு பிஷக்வரனான பாகவதோத்தமன் அநுஷ்டாநார்த்த மாகவந்தவளவிலே,இப்பெண்பிள்ளையைக்கண்டு,நீயார்? தனித்திருப்பா னென்னென்றுகேட்க, அவளும், கூடவந்த பெண்பிள்ளைகள் என்னை விட்டுப் போனார்கள், என்னை இனி உம்மோடே கொண்டுபோமென்று தான்வந்த க்ரமத்தை அவருக்குச் சொல்ல, அவரும் புத்ரஹீநராகையாலே மிகவுமுகந்து,நம்மூரேரவாவென்று அழைத்துக்கொண்டு போய், ஸ்வபத்நிகையிலே குமாரிவந்த வரத்தைச்சொல்லி, போஷிக்கும்படி காட்டிக்கொடுக்க, இவளும் வந்த்யையாகையாலே அதிஸந்தோஷத்துடன் அங்கீகரித்து, இவள் குமுதமலர்கொண்டு நின்றதுவே நிரூபகமாக "குமுதவல்லியார்" என்று திருநாமம்சாத்தி தம்பதிகளிருவரும் தங்களுக்கு புத்ரியாக வளர்த்துக்கொண்டு போருகிறகாலத்திலே, இவர்க்குச் சிலர்போய் இப்பெண்பிள்ளையினுடைய ரூபலாவண்யாதிகளை மிகவும் ச்லாகித்துச்சொல்ல, இவரும் அத்தைக்கேட்டு, * நின்றவாநில்லாநெஞ்சி னராய் * அவர்தரும் கலவியேகருதியோடி, திருநாங்கூரிலேசென்று, மருத்துவனான பாகவதனகத்திற்புகுந்து, அவனுடனே ஸம்பாஷணம் பண்ணிக்கொண் டிருக்கச்செய்தே,'இப்பெண்பிள்ளைவெளியேபுறப்படக்கண்டு விஸ்மயப்பட்டு, பாகவதபிஷக்வரரைக்குறித்து, ஸுரஸுந்தோபமையான ஸுதை அநபத்யரான உமக்கு எங்ஙனேயுண்டாய்த்தென்றுகேட்க அவரும் இவருடனே அப்பெண்ணின் வரத்தைச் சொல்லி,இப்பெண்ணினாலே அநபத்யதாசோகம்தீர்ந்தேன்,விவாஹோசிதவயஸ்கையாய் அஜ்ஞாதகுலகோத்ரையான இவளை யாருக்கு வாழ்க்கைப்படுத்துவேனென்று வ்யாகுலாந்தஃகரணனாகா நின்றேனென்ன, இவரும் இப்பெண்ணை நமக்கு பத்நியாகத் தரவேணுமென்று [illegible] பூஷணாதி த்ரவ்யங்களை ஸங்கோசமறக்கொடுத்து மிகவும [illegible] விரும்பிக்கேட்க, தம்பதிகளும் அப்பெண்பிள்ளையை [illegible]

கொடுப்பதாக உத்யோகிக்க அப்பெண்பிள்ளையும், (తాపఃపుణ్డ్రస్తథానామ మన్త్రోయాగశ్చపఞ్చమః) (தாபஃபுண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோயாகஶ்சபஞ்சமஃ) என்று சொல்லப்பட்ட திருவிலச்சினை திருநாமம் முன்னாக பஞ்ச ஸம்ஸ்கார முள்ளவர்க்கொழிய, "மற்றொருவர்க் கென்னைப் பேசலொட்டேன்" என்று தன்னெஞ்சில் அத்யவஸாயத்தைச்சொல்ல, இவரும் அவ்வசநத்தைக்கேட்டு ,(శుభస్యశీఘ్రమ్) (ஶுபஸ்யஶீக்ரம்) என்கிறபடியே அதித்வரையோடே திருநறையூரிலேசென்று, "பொன்னியலு மாடக்கவாடங்கடந்துபுக்கு" என்கிறபடியே, நம்பிதிருமுன்பேவந்து (అఙ్కితస్తేనచక్రేణ బాహుమూలేతులాఞ్ఛితః) (அங்கிதப்தேநசக்ரேண பாஹுமூலேதுலாஞ்சிதஃ) என்றும்,"தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் கோயிற்பொறியாலே யொற்றுண்டுநின்று" என்றும் சொல்லுகிறபடியே திருவிலச்சினையும் தரித்து, (సర్వైశ్శ్వేతమృదాధార్య మూర్ధ్వపుణ్డ్రంయథావిధి। ఋజూనిసాన్తరాళాని హ్యఙ్గేషుద్వాదశస్వపి) (ஸர்வைஶ்ஶ்வேத ம்ர்தாதார்ய மூர்த்த்வ புண்ட்ரம் யதாவிதி - ரிஜூநிஸாந் தராளாநிஹ்யங்கேஷு த்வாதஶஸ்வபி) என்று சொல்லுகிறபடியே கேசவாதி த்வாதசோர்த்த்வ புண்ட்ரங்களை யுடையராய்வர, குமுதவல்லியாரும் ஆழ்வாரைப்பார்த்து, ஒருஸம்வத்ஸரம் நித்யமாக *ஆயிரத்தெட்டுஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமும் ஸ்வீகரித்து நிறைவேறினலொழிய, உம்மை நான் பர்த்தாவாக அங்கீகரிப்பதில்லையென்று ஒருநியமம் பண்ண, அவரும் அதுக்கிசைந்து ப்ராவண்யாதிசயத்தாலே ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொடுக்க, அதின்பின்பு குமுதவல்லியாரை நீலநிறத்தர்க்கு * நாடும் ஊரும் அறிய * நல்லதோர் கண்ணாஞ்செய்து, உதகபூர்வகமாக ஸமர்ப்பிததார்கள்.

(ఆరాధనానాం సర్వేషాం విష్ణోరారాధనంపరమ్। తస్మాత్పరతరంప్రోక్తం తదీయారాధనం నృప) (ஆராதநாநாம்ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம்பரம்- தஸ்மாத்பரதரம்ப்ரோக்தம்ததீயாராதநம்ந்ர்ப)என்கிறபடியேஅதிப்ரீதியுடனே*திருமாலடியார்களைப்பூசிக்க ஒருப்படடு, அதுக்குத தம்முடைய ஸர்வதநத்தையுமிட்டுத் ததீயாராதநம செய்துகொண்டு போருகிறகாலத்திலே, பரகாலன் பகுதித்ரவ்யததையெலலாம் வ்ரயம்பண்ணி ப்ரதிதிநம் ததீயாராதநம் பண்ணுகிறானென்று சிலர்போய் சோழராஜாவுக்குச் சொல்ல, அவனும்கேட்.டுகுபிதனாய் பகுதிக்கு இவர்பக்கல்தரவுவரக்காட்ட, இவரும் அந்தத்தரவுக்கு வந்த ராஜமநுஷ்யாககு (తదద్యైవనిశాముఖేదినముఖేమధ్యాహ్నసాయాహ్నయోఃపశ్చాద్వాప్రజగమ్యతామవసరోనైవాస్తి) (தத்யாமேவநிஶாமுகேதிநமுகேமத்யாஹ்நஸாயாஹ்நயோஃ பஶ்சாதாவ்ரஜகம் யதாமவஸரோநைவாஸ்தி) என்னுமாப்போலே சிலபர்யாயங்களைச்சொல்லக்கேட்டு சலித்து, ராஜமநுஷ்யர், கரத்ரவ்யம் தரவேணுமென்று நிர்ப்பந்தித்துக்கேட்க, இவரும் குபிதராய் அவர்களைத் தள்ளிவிட, அவர்களும்போய் இவ்விசேஷத்தை சோழராஜாவுக்கு அறிவிக்க,

---

* "நூற்றெட்டு" என்றும் சில ஸ்ரீகோசங்களின பாடம்.

அவனும்குபிதனாய், இவர்ஆஜ்ஞாபங்கம்பண்ணினதுக்கு மிகவும்சீறி, தன்ஸேநாபதியை யழைத்து, “பரகாலனைப்பிடித்துக்கொண்டுவா” என்று ஆஜ்ஞாபிக்க, அவனும் கஜ துரக பதாதியோடேசென்று இவரை வளைத்துப்பிடிக்கத்தேட, இவரும் துரகாரூடராய் ஸ்வபலஸஹிதராய் வந்து, எதிர்த்துக்கொண்டு அவன்படைமேலேவிழுந்து, கஜதுரகபதாதிகளைக் கண்டித்து பராஜிதராக்கியோட்டிவிட; ஸேநாபதியும் காந்திசீகனாய் ஓடிவந்து பராஜயத்தைச் சோளனுக்குஅறிவிக்க, சோளபூபன் கேட்டு, * கோபாத்ஸம்ரக்தலோசநனாய், அப்போதே தன்சதுரங்கபலத்தோடே புறப்பட்டுவர, அவனுடைய ஸேநாஸமுத்ரம் இவரைவளைய, இவரும பூர்வம்போலே பயங்கரகரவாளஹஸ்தராய் ஆலித்துக்கொண்டுவந்து, அவன் ஸேநாஸமுத்ரத்தை மந்தராத்ரிபோலேமதிக்க, ஸர்வரும் பராஜிதராய ஓடிவந்து ராஜாவின்மேலேவிழ, ராஜாவும் அதிரௌத்ரத்துடனே, ஓடுகிற பலத்தை நிறுத்தி, ஜகதேகதுர்த்தரனான பெருமையோடே இவரை ஸேநாஸமுத்ர மத்யஸ்த்தராம்படி வளைய, இவரும் அதிவீரராய், ஸ்வகரத்ர்த சஸ்த்ரபலத்தாலே ஸேநையை மதியாமல் ஸம்ஹரிக்குமதுகண்டு, அதிஸந்துஷ்டனாய், இவரை, நீர் ஒன்றுக்கும்பயப்படவேண்டா, உம்முடைய தைர்ய சௌர்யபராக்ரமங்களைக்கண்டு மிகவும் ஸந்தோஷித்தோம், நீர் செய்த அபகாரங்களையெல்லாம் மறந்தோம், அஞ்சாதே நம்மைநம்பி வருவது என்று தன்குருதைவங்களைத்தொட்டு ஶபதம்பண்ணிக்கொடுக்க, இவரும்நம்பி அவனண்டையிலே சென்றவளவிலே, இவருடைய பராக்ரமத்தைமிகவும்ஶ்லாகித்து, நீர்செய்தத்ரோஹமெல்லாம்பொறுத்தோம், பகுதி த்ரவ்யங்களைமாத்ரம தந்துவிடுமென்று இவரைத் தன்மந்த்ரிவசமாக்கி ஊரேமீண்டான். அந்த * ஸசிவனும் படைவீட்டிலேசென்று, இவரைப் பிடித்துக்கொண்டுவந்து, ஒரு தேவாலயத்திலே சிறைவைக்க, இவரும், அந்தக்கோயிலிலே மூன்றுநாள் அமுது செய்யாமல் உபவஸிதராயிருக்க, இப்படி உபவஸித்து ஆர்த்தராயிருக்கிற இவர் ஸ்வப்நத்திலே பேரருளாளர் எழுந்தருளி, உமக்குப் பகுதிககு வேண்டிய த்ரவ்யம் தருகிறோம், காஞ்சீபுரத்தேறவாருமென்று ஸ்வப்நத்திலே அருளிச்செய்ய, இவரும் நிஶ்சிதார்த்தராயிருக்க, பொழுதுவிடிந்தவளவிலே, * கரதநம் தரவேணுமென்று வந்த அமாத்யனுடனே, காஞ்சீபுரத்தே ஆபத்தநமாகச் சிலதநம் சேமித்துகிடக்கிறது, அங்கேவந்தால் உங்கள்தநம் தருகிறோமென்ன; அவனும் ராஜாவுக்குஅறிவிக்க, அவன் அத்தையும் பார்ப்போம், ஜாகரூகராய்க்காவலிட்டுக்கொண்டு போங்கோள் என்று ஆஜ்ஞாபிக்க, இவரும் காவலுடனே காஞ்சீநகரியேறச்சென்று, நிக்ஷேபதநம்சோதித்துக் காணாமையாலே முசித்துக் கிடக்க, அவ்வளவிலே கருணாகரரான வரதராஜரும், அஞ்சாதே கொள்ளுமென்

* ஸசிவன் - மந்த்ரி. கரதநம் - வரிப்பணம்.

வேகவதீதீரத்திலே தநமிருக்கிறவிடத்தை அடையாளத்துடனே ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய; இவரும் அங்கே தநம் கண்டெடுத்து, ஈர்பதநம்கொடுத்து, சேஷித்ததநத்தை ததீயாராதநார்த்தமாகவைத் துக்கொள்ள, அமாத்யனும் அந்ததநத்தைநர்பதிமுன்னே வைத்து, வரதராஜர்ப்ரஸந்நராய்த்ரவ்யம்தந்தபடி சொல்லக்கேட்டுவிஸ்மிதனாய், இவர் ஸாமாந்யரன்று, மஹாபாகவதர், இது த்ரௌபதிக்குப்புடைவைசுரந்தாப்போலே யிருந்தது, இந்ததநத்தை நம்கோசத்திலே வைக்கவொண்ணாதென்று பார்த்து, ஆழ்வாரை யழைத்து, அபராதக்ஷாமணம்பண்ணிக்கொண்டு, பஹுமுகமாக பஹுமாநம்பண்ணிப போகவிட்டு,இவரை உபவஸிப்பித்ததோஷம்போம்படி அந்தத்ரவ்யத் தைதேவப்ராஹ்மண * ஸமர்ப்பணம்பண்ணித் தீர்த்துக்கொண்டான். பின்பு இவரும் சேஷிததத்ரவ்யங்கொண்டு ததீயாராதநமநடத்தி தநமெல்லாம் தீர்ந்து, கையில் ஒன்றுமில்லாமையாலே, வழிபறித்தாகிலும் தநார்ஜநம்பண்ணி ததீயாராதநம் அவிச்சிந்நமாக நடத்தவேணுமென்று, வழிபறித்து தநங்கொண்டுவந்து, ததீயாராதநம் பக்திபுரஸ்ஸரமாக நடத்திக்கொண்டு போராநிற்க, ஸர்வேஸ்வரனும் வழிபறித்தும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்காகையாலே இவர் சரமபுருஷார்த்தத்திலேநிஷ்ணாதரென்றுகொண்டு, அந்தஸுக்ருதமேபற்றாசாக இவரை விசேஷகடாக்ஷம்பண்ணி அங்கீகரிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, இவர்வழிபறிக்கைக்குஉசிதமானபரிகரத்தையுங்கூட்டிக்கொண்டு, திருமணங்கொல்லையில்திருவரசின்மேலேகோடிவைத்து * பதுங்கியிருக்கிற வழியிலே, (సాక్షాన్నారాయణో దేవః కృత్వా మర్త్యమయీం తనుం। మగ్నానుద్ధరతే లోకాన్ కారుణ్యాచ్ఛాస్త్రపాణినా) (ஸாக்ஷாந்நாராயணோதேவ: க்ர்த்வாமர்த்யமயீம் தநும்-மக்நாநுத்தரதேலோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா) என்றும், "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து" என்றுஞ் சொல்லுகிறபடியேவயலாலிமணவாளன் திருமணம்புணர்ந்துவருகிறமணவாளக்கோலமும் தானுமாய், ப்ராஹ்மணவேஷத்தை பரிக்ரஹித்து, பத்நீஸஹிதனாய், ஸர்வாபரண பூஷிதனாய், பஹுத்ரவ்யங்கொண்டு அநேகம் திரளோடு வந்து தோற்ற; இத்திரளைக்கண்டு ஆலித்துக்கொண்டு, ஸாயுதராய், ஸபரிகரராய், பெரிய ஆரவாரம் பண்ணிக்கொண்டு, அவர்களை வளைந்து சூழ்ந்து, வஸ்த்ராபரணங்களையும் அபஹரித்துக்கொண்டு அறுகாழியையும் திருமுத்தாலேகடித்துவாங்க, எம்பெருமானும் இத்தைக்கண்டு "நம் கலியனோ" என்றருளிச்செய்தார். பின்பு இவையித்தனையையும் சுமைசுமையாகக் கட்டி எடுக்கப்பார்க்க, அவை பெயர்க்கவும் போராதபடியாலே மணவாளனை ப்ராஹ்மணனைப்பார்த்து நீ மந்த்ரவாதம் பண்ணினாயென்று நெருக்க, எம்பெருமானும்,"அம்மந்த்ரத்தைஉமக்குச்சொல்லுகிறோம் வாரும்" என்று கழுத்தையணைக்க, இவரும் * ஓம்மறைந்து ஹடாத்கரித்து வாள்வலியால் கேட்க,

---

"பதிக்கிற" என்றும் பாடம். * "ஸமர்ப்பணம்பண்ணி" என்றும்பாடம.

(நீயென் செவியின்வழிபுகுந்து) என்கிறபடியே * செவிக்கினிய செஞ்சொல்லாய், (ఋచో యజూంషి సామాని తథైవాథర్వణాని చ। సర్వమష్టాక్షరాన్తస్థం యచ్చాన్యదపి వాఙ్మయం) (ரிசோயஜூம்ஷி ஸாமானி ததைவாதர்வணானிச - ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் யச்சாந்யதபிவாங்மயம்) என்றும், (సర్వవేదాన్తసారార్థస్సంసారార్ణవతారకః। గతిరష్టాక్షరో నౄణామపునర్భవకాఙ్క్షిణాం)(ஸர்வவேதாந்தஸாரார்த்தஸ்ஸம்ஸாரார்ணவதாரகஃ-கதிரஷ்டாக்ஷரோந்ரூணமபுநர்ப்பவகாங்க்ஷிணம) என்றும், (ఐహలౌకికమైశ్వర్యం స్వర్గాద్యం పారలౌకికం। కైవల్యం భగవన్తఞ్చ మన్త్రోఽయం సాధయిష్యతి)(ஐஹலௌகிகமைசவர்யம்ஸ்வர்க்காத்யம்பாரலௌகிகம் - கைவல்யம்பகவந்தஞ்ச மந்த்ரோயம்ஸாதயிஷ்யதி) என்றுஞ்சொல்லுகிறபடியே ஸகலவேத ஸங்க்ரஹமாய், அநந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரார்ணவத்தினின்றும் கரையேற்றவற்றாய், ஐஹிகாமுஷ்மிக ஐச்வர்யகைவல்யாஉபுநராவ்ர்த்தி லக்ஷணரூபபரமபுருஷார்த்தம் முதலான அகிலார்த்தப்ரதமாய், (ఓమిత్యగ్రే వ్యాహరేత్, నమ ఇతి పశ్చాత్, నారాయణాయేత్యుపరిష్టాత్, ఓమిత్యేకాక్షరం, నమ ఇతి ద్వే అక్షరే, నారాయణాయేతి పఞ్చాక్షరాణి) (ஓமித்யக்ரேவ்யாஹரேத், நமஇதிபஸ்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத், ஓமித்யேகாக்ஷரம், நமஇதிதவே அக்ஷரே, நாராயணாயேதிபஞ்சாக்ஷராணி) என்று - எட்டுத் திருவக்ஷரமாய் பதத்ரயாத்மகமாகையாலே ஸ்வரூபோபாய புருஷார்த்த ப்ரகாசகமுமாய், மற்றவ்யாபகமந்த்ரத்வயம்போலன்றிக்கே இதிலே நாரசப்த முண்டாகையாலே சப்தபூர்த்தியுமுடைத்தாய், "பேராளன் பேரோதும் பெரியோர்" என்கையாலே-சிஷ்டபரிக்ரஹயுக்தமாய், (మన్త్రాణాం పరమో మన్త్రో గుహ్యానాం గుహ్యముత్తమం। పవిత్రఞ్చ పవిత్రాణాం మూలమన్త్రస్సనాతనః) (மந்த்ராணாம்பரமோமந்த்ரோ குஹ்யாநாம்குஹ்யமுத்தமம் - பவித்ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதநஃ) என்கிறபடியே உத்க்ர்ஷ்டதமமாகச் சொல்லப்படுகிற மூலமந்த்ரமான பெரியதிருமந்த்ரத்தை நரநாராயணனாய்த் தனக்குத்தானே உபதேசித்துக்கொண்ட இழவுதீர, "பெற்ற தாயினுமாயின செய்யும்நலந்தருஞ்சொல்லை நான்கண்டுகொண்டேன்" என்று தம் வாயாரச்சொல்லும்படி கலியனுக்கு உபதேசித்தருள; அநந்தரம், (లక్ష్మ్యా సహ హృషీకేశో దేవ్యా కారుణ్యరూపయా) (லக்ஷ்ம்யாஸஹஹ்ருஷீகேசோ தேவ்யாகாருண்யரூபயா) என்கிறபடியேக்ருபைதானொரு வடிவு கொண்டாப்போலே காருண்யரூபையான ஸ்ரீஸஹாயனுக்கொண்டு, "காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின்மீமிசைக்கார்முகில்போல" என்றும், (ஸுபர்ணப்ர்ஷ்டேப்ரபௌஸ்யாமஃபீதாம்பரோ ஹரிஃ-காஞ்சநஸ்யகிரேஸ்ஸ்ரீங்கேஸதடித்தோயதோயதா) என்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்வர்ணமயமான பெரியதிருவடியை மேற்கொண்டுவந்து நீலமேகநிபமாய், கநககிரிமீதிற்கார்முகில் படிந்து உலாவுமாப்போலே விளங்குகிற திவ்யமங்களவிக்ரஹத்தை இவ்வாழ்வாருக்கு * [illegible] க்ஷாத்கரிப்பித்தருள, இவ்வாழ்வாரும் தமக்கு நிர்ஹேதுகமாய் [illegible] திருமந்த்ரத்தையும், அதுக்குள்ளீடான ஸ்ரீமந்நாராயண [illegible]

ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களையுமெல்லாம், "திருமாமகளாலருள்மாரி" என்னும்படி பெரியபிராட்டியாரருளாலேயுண்டான, * தக்கஞானக்கண்களாலே கண்டநுபவித்து, அநுபவஜநித ப்ரீதி உள்ளடங்காமல புறவெள்ளமிட்டு "பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல்" என்கிற இவ்வாறு ப்ரபந்தங்களையும * ஸ்ரீசடகோபவாங்மயமான த்ராமிடவேதசதுஷ்டயததுக்கு ஷடங்கமாக, "ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தரம்" என்கிற சதுர்விதகவிகளாலே யருளிச்செய்து, லோகத்திலே "நாலுகவிப்பெருமாள்" என்று ப்ரஸித்தமாம்படி உபகரித்தருளியும், முன்பு திருமொழியருளிச்செய்துகொண்டு திவ்யதேசங்கள்தோறும் ஸேவித்துக்கொண்டெழுந்தருளாநிற்கச்செய்தே, சோழமண்டலத்திலே எழுந்தருளினவளவிலே, "நாலுகவிப்பெருமாள்வந்தார், நங்கலியர்வந்தார், ஆலிநாடர்வந்தார், அருள்மாரிவந்தார், கொங்குமலர்க்குழலியர்வேள்வந்தார், மங்கைவேந்தர்வந்தார், பரகாலர்வந்தார், பரவாதிமத்த கஜகண்டீரவர்வந்தார்" என்று விருதூதிச்செல்லாநிற்க; அங்கே சம்பந்தன சிஷ்யர்களவந்து, ஆழ்வாரை எங்கள சமபந்தப் பெருமாளிருக்கிற விடத்திலே நீர் நாலுகவிப்பெருமாளென்று விருதூதிச்செல்லத்தகாது என்றுதடுக்க, ஆழ்வாரும உங்கள சம்பந்தப்பெருமாளுடனே தாக்கிக்ககடவோமென்றருளிச்செய்ய; ஆகில் நம்மூரேவாருமென்றழைத்துக்கொண்டுபோய் இவ்விசேஷத்தைச சம்பந்தனுக்கு அறிவிக்க; அவனும் இவருடனே தாக்கிக்கக்கடவோமென்றுவர; ஊரடையசைவராய அவ்வூரிலஒருதிருமுற்றமுமின்றியே, ஸ்ரீவைஷ்ணவர்களுமின்றியே, வீரபாஷண்டபூயிஷ்டமாய், பகவத்விகாஹமின்றியே யிருக்ககண்ட இவ்வாழ்வார்க்கு வாசுருக்ஷிளமபாதிருக்க, இதுக்கு என்செய்யக்கடவோமென்று சிந்தித்திருக்கச்செய்தே, வைஷ்ணவியாயிருப்பாளொரு அம்மையாரைக்கண்டு, இப்படியிருக்கிறது ஆகையால் உன்திருவாராதநமான எம்பெருமானை எனக்கு ஒருக்ஷணம தரவேணுமென்று கேட்க, அவளும ஆழ்வாருக்கு, தன்திருவாராதநமான * வெண்ணெயுண்டத்தாளானை எழுந்தருளுவித்துக்கொடுக்க, ஆழ்வாரும்; அவனைக்கொண்டு சம்பந்தனிருந்தவிடத்தேறச்சென்றிருக்க, அவனும் இவரைக்குறித்து ஒரு கவிசொலல, இவரும அத்தைககேட்டு அந்தக்கவியை தூஷிக்க; ஆகில் நீர் ஒருகுறள்சொலலுமென்ன; ஆழ்வாரும் "ஒருகுறளாயிருநிலம்" என்கிறதிருமொழியையருளிச்செய்து, தம்பெருமையெல்லாந்தோற்ற, "ஆலிநாடனருள்மாரியரட்டமுக்கியடையார்சீயங், கொங்குமலர்க்குலிழலியர்வேள்மங்கைவேந்தன்கொற்றவேற்பரகாலன் கலியனசொன்ன, சங்கமுகத்தமிழ்மாலை" என்ன, அவனும் இத்தைக்கேட்டு ப்ரத்யுத்தரம்சொல்லிக் கவிசொல்ல க்ஷமனன்றியே, இப்படியு மொருவருண்டோவென்று ஆஶ்சர்யப்பட்டு, "நாலுகவிப்பெருமாள்" என்னும்விருது உமக்குச்செல்லும், விருதூதிக்கொண்டு செல்லீரென்று கும்பிட்டுப்போனன்.

அநந்தரம், (విమానం ప్రణవాకారం వేదశృఙ్గం మహాద్భుతం। శ్రీరఙ్గశాయీ భగవాన్ ప్రణవార్థప్రకాశకః) (விமாநம்ப்ரணவாகாரம்வேதஶ்ருங்கம்மஹாத்புதம்- ஸ்ரீரங்கஶாயீபகவாந்ப்ரணவார்த்தப்ரகாஶகஃ) என்கிறபடியே * மன்னுடைய விபீடணற்காய்மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்தவராய், ப்ரணவாகாரமத்தியஸ்த்தரான பெரியபெருமாளுக்கும் * திருவரங்கச் செல்வனாரான அழகியமணவாளர்க்கும் விமாந மண்டப கோபுர ப்ராஸாத ப்ராகாராதிரூபமான கைங்கர்யங்கள் செய்தருளவேணுமென்று திருவுள்ளமாய், அதுக்குத்தம்முடைய * பரிஜநங்களையழைத்து, நம்பெருமாளுக்குத் திருமதிள்முதலான கைங்கர்யம்பண்ணுகைக்கு தநார்ஜநம்செய்யும் விரகென்னென்றுகேட்டருள, அவர்களும் நாகபட்டணத்திலே * புலையறமாயிருப்பதொரு புத்தப்ரதிமை ஹிரண்யஸ்வரூபமாயிருக்கும், அத்தைக்கொண்டுவந்து சிந்நபிந்நமாக்கி, "அறுப்பதே கருமங்கண்டாய்" என்று விண்ணப்பஞ்செய்ய; ஆழ்வாரும் அவர்கள் சொன்னபடியே நாகபட்டணத்திலேபோய், "ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ, பூயத்தால்மிக்கதொரு பூதத்தாலாகாதே, தேயத்தே பித்தனைநற்செம்புகளாகாதோ, மாயப்பொன்வேணுமோமதித்தென்னைப்பண்ணுகைக்கே" என்று தத்பிம்பம்வஹனைபிடும்படி அபஹரித்துக் கொண்டுவந்து பங்கப்படுத்தி, திருமதிள்கைங்கர்யத்துக்கு அர்ஹமாம்படி * சுட்டுரைத்த நன்பொன்னாக்கிக்கொண்டு கல்படிக்கேற்க வொருதுலைப்படுத்திவிற்றுதத்ரவ்யத்தையிட்டுதிருமதிள்முதல்சிகரபர்யந்தமாகப் பண்ணவேணுமென்று உபக்ரமித்து திருமதிள்கட்டுவிக்கிற செவ்வையிலே ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் பெரியபெருமாளுக்குத் திருமாலை சோக்கிறவிடம் நேர்பட, அவ்விடத்தைத்தப்பி ஒதுங்கத் திருமதிள்கட்டுவித்தருள, தொண்டரடிப்பொடியாழ்வார் பார்த்தருளி, திருவுள்ள முகந்தருளி, தாம திருமாலைகொய்கிற ஆயுதத்துக்கு "அருள்மாரி" என்று இவருடையதிருநாமம்சாத்தி ப்ரீதராயருளினார். திருமங்கையாழ்வாரும, திருமதிள் திருமண்டபம் முதலான கைங்கர்யங்களும் பண்ணுவித்துக்ருதார்த்தராயருளினார்.

நம்மாழ்வார்வைபவம்.

(తతః కలియుగస్యాదౌ వైశాఖ్యాం విశ్వభావనః। విష్ణుభక్తిప్రతిష్ఠార్థం సేనేశోఽవతరిష్యతి॥ సేనేశకరుణాలబ్ధదివ్యమన్త్రద్వయం ముదా। ద్రావిడామ్నాయవక్తారం శఠకోపగురుం భజే॥ వకుళాభరణం వన్దే జగదాభరణం మునిం। యశ్శ్రుతేరుత్తరం భాగం చక్రే ద్రావిడభాషయా॥ వకుళాలఙ్కృతం శ్రీమచ్ఛఠకోపపదద్వయం। అస్మత్కులధనం భోగ్యమస్తు మే మూర్ధ్ని భూషణం) (ததஃகலியுகஸ்யாதௌ வைஶாக்யாம்விச்வபாவநஃ- விஷ்ணுபக்திப்ரதிஷ்டார்த்தம்ஸேநேஶோவதரிஷ்யதி – ஸேநேஶகருணாலப்த்ததிவ்யமந்த்ரத்வயம்முதா - த்ராவிடாம்நாயவக்தாரம்ஶடகோபகுரும்பஜே - வகுளாபரணம்வந்தே ஜகதாபரணம்முநிம் - யஶ்ஶ்ருதேருத்தரம்பாகம் சக்ரேத்ராவிட

பாஷயா - வகுளாலங்க்ருதம் ஸ்ரீமச்சடகோபபதத்வயம் - அஸ்மத்குல தநம்போக்யமஸ்துமேமூர்த்நிபூஷணம்) ஆழ்வார்களெல்லாரையும் அவயவபூதராகவுடைய நம்மாழ்வார் திருவவதாரக்ரமமிருக்கும்படி எங்ஙனேயென்னில்;(అస్తి పాణ్డ్యేషు దేశేషు కాచిచ్ఛ్రీనగరీ శుభా। తామ్రపర్ణీనదీతీరే సాక్షాద్దృష్టో హ్యధోక్షజః)(அஸ்திபாண்ட்யேஷு தேசேஷு-காசிச்சீநகரீஶுபா- தாம்ரபர்ணீநதீதீரே ஸாக்ஷாத்த்ருஷ்டோஹ்யதோக்ஷஜ:) என்கிறபடியே *வண்டலம்புஞ்சோலைவழுதிவளநாட்டிலே (గఙ్గా చ యమునా చైవ తథా గోదా సరస్వతీ। నర్మదా సిన్ధు కావేరీ తామ్రపర్ణీ సరిద్వరా) (கங்காசயமுநாசைவததா கோதாஸரஸ்வதீ-நர்மதாஸிந்து காவேரீதாம்ரபர்ணீஸரித்வரா) என்று சொல்லுகிறபடியே - கங்காதி ஸகலநதிகளிலும் உத்க்ருஷ்டதமமாகச் சொல்லப்பட்டிருப்பதான தாம்ரபர்ணியென்கிற பொருநையாற்றின் கரையிலே "ஸ்ரீநகரி" என்று ப்ரக்யாதமான *நல்லார்நவில்குருகூர்நகருக்குநிர்வாஹகரான இவ்வாழ்வார், "எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்முந்தை" என்றருளிச்செய்தபடியே *ஏழாட்காலும் புறந்தொழாமே, "குடிகுடிவழிவந்தாடசெய்யும் *தொண்டக்குலத்திலே பிறந்து *ஏழாட்காலும பழிப்பிலராயிருப்பர்;

எங்ஙனேயென்னில்; - திருவழுதிவளநாடர் என்றொருவர், அவர்பிள்ளை அறந்தாங்கியார், அவர்பிள்ளை சக்ரபாணியார், அவர்பிள்ளை அச்யுதர், அவர்பிள்ளை செந்தாமரைக்கண்ணர், அவர்பிள்ளை செங்கண்ணர், அவர்பிள்ளை பொற்காரியார், அவர்பிள்ளை காரியார், அவர்பிள்ளைமாறன் என்ற இவர்கள்தாம். இக்க்ரமந்தன்னிலே ஸந்தாநபரம்பரையாய் பழையவடியாரான இவர்களுடைய திருவம்சத்திலே பொற்காரியார் என்கிறவர், உலகெல்லாம் வாழும்படி தம்முடைய புத்ரரானகாரியாருக்குவிவாஹம்பண்ணுவிப்பதாகத் திருவண்பரிசாரத்திலே காரியாரைக் கொண்டுபோய்,தாமஸம்பந்தம்செய்கைககுயோக்யராய்வைஷ்ணவஸம்தாநிகரான திருவாழ்மார்பர் திருமாளிகையிலே யெழுந்தருளி, அவரைப்பார்த்து,உம்முடையபுத்ரியான உடையநங்கையாரை நம்முடைய புத்ரரானகாரியாருக்கு விவாஹமபண்ணித் தரவேணுமென்று *தமரும்பிறரும் அறிய ப்ரஸங்கித்துக்கேட்க; திருவாழ்மார்பரும் மிகவும் ஸந்துஷ்டராய்ஸம்மதித்து, *கண்ணாலங்கோடித்து,"மத்தளங்கொட்டவரிசங்கம் நின்றூதமுத்துடைததாமநிரைதாழ்ந்த பந்தற்கீழ்" என்கிறபடியே உபலாளித்து, *பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து உதகபூர்வகமாக உடையநங்கையாரைக் காரியாருக்கு ஸமர்ப்பிக்க; காரியாரும், "வெள்ளிவளைக்கைபற்ற" என்கிறபடியேபாணிக்ரஹணம்பண்ணி மற்றுமுண்டான க்ரியாவிசேஷங்களையும் செய்து, திருவண்பரிசாரத்தில் *திருவாழ்மார்பரானஎம்பெருமானையும் திருவடித்தொழுதுமீண்டு பெரியவண்குருகூரிலே யெழுந்தருளாநிற்க; (పతాకాధ్వజసంరమ్యాం తూర్యఘోషనినాదితాం। సిక్తరాజపథాం రమ్యాం ప్రకీర్ణకుసుమోత్కరాం। పౌరైః ప్రత్యుద్గతాం శూరం ద్విజైశ్చ పురవాసిభిః) (பதாகாத்வஜஸம்ரம்யா

தூர்யோத்குஷ்டநிநாதிதாம் - ஸிக்தராஜபதாம்யாம் ப்ரகீர்ண குஸுமோத்கராம்) என்று சொல்லுகிறபடியே பெருமாள் ஸ்ரீமிதிலையிலே யெழுந்தருளி,* திக்குநிறைபுகழாளனான ஸ்ரீஜநகராஜன் திருமகளைத் திருமணம்புணர்ந்து மீண்டெழுந்தருளும்போது, திருவயோத்யையிலுள்ள ப்ராஹ்மணாதி பௌரஜநங்கள் பட்டணத்தை யலங்கரித்து மங்களவாத்ய கோஷத்துடனே வந்து எதிர்கொண்டாப்போலே, * செம்பொன்மாடத் திருக்குருகூரிலுள்ளாரும் * பூரண பொற்குடம்வைத்துப் புரமெங்கும் தோரணம்நாட்டி * தும்லமெழப் பறைகொட்டி உபலாளித்து எதிர்கொள்ள; குன்றம்போல் மணிமாடநீடு திருக்குருகூரதனுள் புகுந்து, "இல்லறம்" என்று ச்லாக்யமாகச் சொல்லப்பட்டிருப்பதான க்ரஹஸ்த்தாஸ்ரமத்திலே நியதரான காரியார் சிலநாளைக்குப்பின்பு தம்முடைய பத்நியாரான உடையநங்கையாரை, திருக்குருகூரில்நின்றும் பிறந்தகமான திருவண்பரிசாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் மீண்டு வாராநிற்கச்செய்தே; * தேன்கொள்சோலைத் திருக்குறுங்குடியிலேசென்று, * நம்பியைத் தென்குறுங்குடிநின்ற வச்செம்பொனே திகழும் திருமூர்த்தியையும் ஸேவித்து, "அடியோங்களுக்கு ஒருஸந்தாநம் தந்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க; நம்பியும் "நாமேவந்து பிறக்கிறோம்" என்று அர்ச்சகமுகேந வரப்ரதாநம் பண்ணியருள, அவ்வசநம் கேட்டு ப்ரீதராய் நிற்கச்செய்தே, நம்பியும், * பூந்தண்மாலைத் தண்டுழாயை க்ர்பையுடனே ப்ரஸாதித்தருள, "தன்மன்னுநீள் கழலமேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்" என்று கொண்டு, * துணையோடுமபிரியாதேஸ்வீகரித்து மிகவும் உகப்போடே தங்களுக்கு ஆவாஸஸ்த்தாநமான * நல்லார்பலர்வாழ் குருகூரிலே வந்து புகுந்து நித்யவாஸம் பண்ணிககொண்டு போருகிற வளவிலே உடையநங்கையார் கர்ப்பவதியாக, "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" என்னலாம்படி எம்பெருமான் * பாரெல்லாமுய்யும்படி இவரிடத்திலே ஸேனைமுதலியாரை, அவதரிக்கும்படி நியோகிக்க, கலியுகம் பிறந்த நாற்பத்து மூன்றுநாளான வர்த்தமாந பஹுதாந்ய வருஷத்தில் வஸந்தருதுவில், வைகாசிமாஸம சுக்லபக்ஷம் பௌர்ணமிகூடின திருவைசாக நக்ஷத்ரத்தில், காவ்யவாஸர கர்க்கடகலக்நத்திலே, திவ்ய யோக திவ்யகரணங்களிலே, * ஆதித்யராம திவாகராச்யுதபாநுக்களுதயத்திலே, நீங்காத உள்ளிருள்நீங்கி, சோஷியாத பிறவிக்கடல்சோஷித்து, விகஸியாத போதிற்கமலம் மலரும்படி வகுளபூஷணபாஸ்கரோதய முண்டாய்த்து-உடையநங்கையாராகிறபூர்வஸந்த்யையிலே. (రాధేవిదినేలాభేవైశాఖే కావ్యవాసరే। లగ్నే కర్కటకేసూతతనయం నాధనాయికా) (ராதேகவிதிநேலாபே வைஶாகேகாவ்யவாஸரே - லக்நேகர்க்கடகேஸூததநயம் நாதநாயிகா) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே.

திருவநந்தாழ்வானும், வர்ஷாதப நிவாரணார்த்தமாகஇவர்க்குமுன்னே திருப்புளியாழ்வாராய் வந்தவதரித்தருளினார்.

(శ్రీవిజ్ఞానదినోత్తరేహరికలౌవర్షే ప్రమాథ్యాశ్చయే మాసేమాధవనామ్ని భార్గవదినే [illegible] విశాఖాభిధే। లగ్నేశుద్ధచతుర్దశీతిథియుతే శ్రీమత్కుళీరేపివ క్షిత్యాంప్రాదురభూత్ [illegible] కవిర్భాగ్యోదయోస్మాదృశాం) (రాధేకలేర్వ్యాసరపివరాధే మాసేవిశాఖే [illegible] స్వాతేజనిపశ్చతిథ్యాం పరాఙ్కుశోయంభగవాన్ కుళీరే)

(హస్తస్థతాళద్వితయం ప్రపద్యే శఠారివాగ్వ్యూహసముదారకీర్తిమ్। మాధుర్యసంశ్లిష్టకవిత్వయుక్తం మహత్వసంభావితబుద్ధితత్త్వమ్) (ஹஸ்தஸ்த்ததாளத்விதயம் ப்ரபத்யே ஶடாரிவாக்வ்யூஹஸமுதாரகீர்த்திம் - மாதுர்யஸம்ஶ்லிஷ்டகவித்வயுக்தம் மஹத்வஸம்பாவிதபுத்திதத்வம) மதுரகவியாழ்வார்; * செல்வம்மல்கியவன்கிடந்த திருக்கோளூரிலே (చైత్రశ్రీమానయంమాసః పుణ్యః పుష్పితకాననః) (சைத்ரஶ்ஶ்ரீமாநயம்மாஸஃ புண்யஃ புஷ்பிதகாநநஃ) என்று ஶ்ரீமத்தாகச் சொல்லப்படுகிற சித்திரைமாஸத்தில் சித்ராநக்ஷத்ரத்திலே ஶ்ரீகுமுதகணேசாம்சரான ஶ்ரீமதுரகவிகள், வகுளபூஷணபாஸ்கரோதயத்துக்கு அருணோதயம்போலே முன்னே திருவவதரித்தருளினார். (గణేశః కుముదాఖ్యో నామ్నా కవిర్మధురసంజ్ఞికః। చైత్రమాసే తు చిత్తతారకాయామజాయత) (கணேஶஃ குமுதாக்யோ நாம்நா கவிர்மதுரஸம்ஜ்ஞிகஃ - சைத்ரமாஸி ஶுபே சித்ததாரகாயாமஜாயத) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லப்பட்டதிறே. *

* సామశాఖాధ్యయనపూర్వశిఖావత్ బ్రహ్మవర్ణే-ஸாமஶாகாத்யயநபூர்வஶிகாவத் ப்ராஹ்மவர்ணே அவதரிக்கையாலே, இவருக்கு தத்தத்காலங்களிலே சௌளோபநயநாதிகளையும் செய்து, (అఙ్గానివేదాశ్చత్వారో మీమాంసాన్యాయవిస్తరః। పురాణం ధర్మశాస్త్రంచ విద్యాహ్యేతాశ్చతుర్దశ) (அங்காநிவேதாஶ்சத்வாரோ மீமாம்ஸாந்யாயவிஸ்தரஃ - புராணம் தர்மஶாஸ்த்ரம்ச வித்யாஹ்யேதாஶ்சதுர்த்தச) என்று சொலலப்பட்ட பதினான்கு வித்யைகளையும் அதிகரிப்பிக்க அதீத வேதவேதாங்கருமாய் மஹாவிரக்தருமான இவர், (అయోధ్యామథురామాయా కాశీకాఞ్చీహ్యవన్తికా। పురీద్వారవతీచైవ సప్తైతే ముక్తిదాయకాః) (அயோத்யாமதுராமாயாகாஶீகாம்சீஹ்யவந்திகா - புரீத்வாரவதீசைவ ஸப்தைதேமுக்திதாயகாஃ) என்று முக்திப்ரதமாகச் சொல்லப்பட்ட திருவயோத்யை முதலான திவ்யதேசங்களை ஸேவிக்க வெழுந்தருளினார். இப்படி இவர் முன்னாக அவதரித்தருளின ஆழ்வார், * முத்தனையமுறுவலசெய்து மூகக்குறிஞ்சி முலையுணாதே மௌநத்தோடே யெழுந்தருளி யிருக்கச்செயதேயும் வாட்டமின்றிக்கே பரிபூர்ணராயிருக்கிற இந்த ஆஶ்சர்யத்தை, காரியாரும * இவனைப்பெறற வயிறுடையாளான உடையநங்கையாரும் கண்டு, "உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்" என்கிறபடியே எம்பெருமான்பக்கலிலே ந்யஸ்தபாராயிடிருக்க; * பத்துநாளுங்கடந்தவிரண்டாநாள், (శఙ్ఖతీరసమీపేతు తామ్రాయాదక్షిణేతటే। సుస్థితం పుణ్డరీకాక్షం శఙ్ఖచక్రధరంహరిం॥ వరదాభయహస్తంచ రమయాధరయాసహ। నవనీరదనీలాభం పీతవాససమచ్యుతం) (ஶங்கதீரஸமீபேது தாம்ராயாதக்ஷிணேதடே - ஸுஸ்த்திதம்புண்டரீகாக்ஷம் ஶங்கசக்ரதரம் ஹரிம் - வரதாபயஹஸ்தம்ச ரமயாதரயாஸஹ - நவநீரதநீலாபம் பீதவாஸஸமச்யுதம்) என்று சொல்லுகிறபடியே திருச்சங்கணித்துறையை

* (పాణ్డ్యభూమాయాంపథికానతారం చైత్రస్థచిత్రోద్భుజమూర్ధ్వచూడమ్। ఖగాంశభాజం మధురంకవీంద్రం శఠారిభక్తం శరణంప్రపద్యే। యాతే సంవత్సరాఘే మహసి గదజనేద్వాపరస్యేశ్వరాబ్దే। చైత్రేమాసేద్విసప్తోత్తరదివసవరే శుభ్రపక్షే చరూచ్యే। చిత్రాఖ్యే భార్గవీయ్యే గుణవతిచ దినే ప్రాదురాసీచ్ఛఠారేః। రక్తేవాసిద్విశ్రోత్రమధురకవిరసౌ మాదృశాం జీవనాయ.)

யுடைத்தான பொருநலாற்றின் தென்கரையிலே, திவ்யமங்கள விக்ரஹ யுக்தனாய், சங்கசக்ரதாரனாய், புண்டரீகாக்ஷனாய் வரதாபயஹஸ்தனாய் ஸ்ரீபூமிநீளாஸஹிதனாய்க்கொண்டு யெழுந்தருளியிருக்கிற பொலிந்து நின்றபிரான் திருமுன்பே யெடுத்துக்கொண்டு போய், இவருக்கு "மாறன" என்று திருநாமம்சாத்தி, திருப்புளியாழ்வாரடியிலே, * ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச்சிறுத் தொட்டிலிலே வளர்த்தி, இவரை புத்ரப்ரதிபத்திபண்ணாமல், "எங்கள் குடிக்கரசே" என்று விசேஷ ப்ரதிபத்திபண்ணி ஸேவித்துக்கொண்டு நிற்க;

இவர்தாம், (జ్ఞానపూర్ణత్వాత్ తింత్రిణీమూలసంశ్రయః। బాలష్షోడశవర్షాత్మా మూకభావేనసంస్థితః) (ஸஞ்ஜ்ஞாநபூர்ணத்வாத் திந்த்ரிணீமூலஸம்ச்ரய: - பாலஷ்ஷோடசவர்ஷாத்மா மூகபாவம்கமிஷ்யதி) என்று சொல்லுகிறபடியே - திருப்புளியாழ்வாரடியிலே பதினாறு திருநக்ஷத்ரமளவாக, "அவன்முகத்தன்றி விழியேன்" என்று முகுளிதநயநருமாய், "ஆருக்கென்சொல்லுகேன்" என்று மௌநியுமாய் எழுந்தருளியிருக்க; இத்தை உடையநங்கையாரும் காரியாரும் கண்டு, இவர், தம்மைப்போன்ற அதிகாரிகளைக் காணாமையாலே லௌகிகரோடு வார்த்தை சொல்லாதிருக்கிறாரென்றறியதே, திருக்குருகூர்க்குடி நம்பிக்கு நாமசெய்ததென்னென்று சிந்தைகலங்கியிருக்க; இப்ப்ரபாவங்களை திவ்யயோகத்தாலே ஸேவிக்க வெழுந்தருளின ஸ்ரீமதுரகவிகளும் கேட்டருளி யிருக்கச்செய்தே, ராத்ரி ஜலஸம்கார நிவர்த்யர்த்தமாகப் புறப்பட்டவர், தென்திசையிலே, ஒரு அப்ராக்ருத திவ்யதேஜஸ்ஸைக்கண்டு, இதுவென் என்று திகைத்து நின்று, ஏதேனும் க்ராமநகரங்கள் வேகிறதோ? காட்டுத்தீயோ? என்று தம்மிலே விசாரித்து, அம்மறைக்குக் கண்வளர்ந்தருளினார்.

பின்னையும் இரண்டுமூன்றுநாள் இப்படியேகண்டு, இது ப்ராக்ருத தேஜஸ்ஸன்று, அப்ராக்ருத தேஜஸ்ஸாயிருந்தது, இக்காரணத்தை நாம் பரீக்ஷிப்போமென்று பகலெல்லாம் கண்வளர்ந்தருளி, ராத்ரிகளில் அந்த தேஜஸ்ஸே குறியாக அதிதவரையுடனே மீண்டெழுந்தருளி, புண்ய க்ஷேத்ரங்களெல்லாம் சோதித்துக்கொண்டுவந்து, (శ్రీరఙ్గమఙ్గళక్షేత్రం) (ஸ்ரீரங்கமங்களக்ஷேத்ரம) என்கிற * திருவரங்கப் பெருநகரிலே சோதிக்க, அதுக்கும் அப்பாலே தென்திசையிலேயாயிருக்க; பின்னையும் பூர்வம்போலே தவரிதத்தெழுந்தருளி, * மாடமாளிகைசூழ் தழகாய திருக்குருகூரிலே சென்று, அப்பால் பார்த்துக் காணாமையாலே இது இங்கேயாயிருக்குமென்று சோதித்துப்பார்க்க, திருப்புளியாழ்வாரடியிலே, (పద్మాసనోపవిష్టం పరపదయుగళే విష్టచైతన్యం। పరతత్త్వబోధముద్రం పరమాచార్యం పరాఙ్కుశం వన్దే) (பத்மாஸநோபவிஷ்டம்பரபதயுகளேநிவிஷ்டசைதந்யம் - பரதத்வபோதமுத்ரம் பரமாசார்யம் பராங்குசம்வந்தே) என்கிறபடியே - ஸஞ்ஜ்ஞாநபூர்ணராய், உறங்காப்புளி நிழல்தன்னிலே முகுளிதநயநராய், ஷோடசவார்ஷிகராய், ஷோடசகலாபூர்ணரான

சந்த்ரனைப்போலே பத்மாஸநோபவிஷ்டராய், பரதத்வபோதமுத்ரா யுக்தராய், பரமாசார்யரான ஸ்ரீபராங்குசனைப்பார்த்து, இவர்க்கு சைதந்யமுண்டோ? செவிகேட்குமோ என்று பரீக்ஷிக்கைக்காக ஒரு குண்டுகல்லை யெடுத்து அவர் முன்னே திடீரென்றுபோட, இவரும் அதுகேட்டு, திடுக்கென்று திருக்கண்களை மலரவிழித்துப்பார்த்தருள;

ஸ்ரீ மதுரகவிகளும் இவர்க்கு வாக்குண்டோ? இல்லையோவென்று அறியக்கடவோமென்று அவரைக்குறித்து; * "செத்தத்தின் வயிற்றிலே சிறியது பிறந்தால் எத்தைத்தின் றெங்கேகிடக்கும்" என்ன; "அத்தைத் தின்றங்கேகிடக்கும்" என்று ஆழ்வாரருளிச்செய்ய; ஸ்ரீமதுரகவிகளும் கேட்டருளி, இவர் ஸர்வஜ்ஞராயிருந்தார், இம்மஹாநுபாவரை நாம் அநுவர்த்தித்து உஜ்ஜீவிக்கவேணுமென்று நினைத்து, ஆழ்வார் திருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமமாகத் தாளுந் தடக்கையுங்கூப்பி விழுந்து ஸேவித்து, "மேவினேனவன் பொன்னடிமெய்ம்மையே" என்று ஆச்ரயித்து க்ருதார்த்தராய், (గురుపాదాంబుజం ధ్యాయేత్ గురోర్నామ సదా జపేత్) (குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர்நாம ஸதா ஜபேத்) என்கிறபடியே த்ரிவிதகரணங்களாலுண்டான, "தத்பாதாம்புஜத்யாநம், தந்நாமகீர்த்தநம், தத்கைங்கர்யங்களுமே"யாக ஆழ்வாரை ஸதாநுபவம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிற வளவிலே, (ఆదిదేవో జగన్నాథో వాసుదేవో జగత్పతిః। చతుర్భుజశ్శ్యామలాంగః పరమవ్యోమ్ని తిష్ఠతి) (ஆதிதேவோ ஜகந்நாதோ வாஸுதேவோ ஜகத்பதி:-சதுர்ப்புஜஶ்ஶ்யாமளாங்கோ பரமேவ்யோம்நி திஷ்டதி) என்று சொல்லுகிறபடியே ஸர்வகாரணபூதனுமாய், ஸர்வஸ்வாமியுமாய், ஸர்வநியந்தாவுமாய், ஸர்வாந்தர்யாமியாய், * நீலமேனியும் நான்குதோளுமுடையனாய், ஸ்ரீவைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனானவன் ஆழ்வார்க்கு எதிர்விழி கொடுக்கவேணுமென்று திருவுள்ளமான வளவிலே, பெரியதிருவடியும் தம்முடைய பக்ஷபாதம் தோன்ற முன்னே வந்து நிற்க; (అథాగతం గరుడముపస్థితం మహాగిరిం జలదమివారురోహ సః) (அதாகதங்கருடமுபஸ்திதம் மஹாகிரிஞ்ஜலதஇவாருரோஹஸ:) என்றும், "பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோற்றோன்றி - மலிந்த திருவிருந்தமார்பன் - பொலிந்த-கருடன்மேற்கொண்ட கரியான்" என்றும் சொல்லுகிறபடியே, நித்யாந

செத்தத்தின்வயிற்றிலே சிறியதுபிறக்கையாவது, செத்தது என்று- அசித்து. அதெங்ஙனேயென்னில்; - அப்ராணிமத்தாய் ஜடமாயிருக்கையாலே அசித்தைச் சொல்லுகிறது. அதின்வயிற்றிலே சிறியது பிறக்கையாவது - சரீரத்தோடே ஆத்மாவுக்குண்டான ஸம்பந்தத்தை. சிறியதாவது - அணுபரிமாணமாயிருக்கிற ஆத்மாவைச்சொல்லுகிறது. சரீரத்தோடே ஆத்மாவுக்கு ஸம்பந்தமுண்டானால், அதுக்கு போக்யமும் அசித்கதமாயிருக்கிற ஸுகதுக்கங்கள். அத்தைத்தின்று அங்கே கிடக்கையாவது - சரீரகதமாயிருக்கிற ஸுகதுக்காதிகளை புஜித்துக்கொண்டு சரீரத்தையே ஆச்ரயித்துக்கொண்டிருக்கை.

பாயிகியானபிராட்டிஸஹிதனாய்பெரியதிருவடிமேற்கொண்டுதோன்றி, தன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிசேஷ்டிதங்களை யெல்லாம் புகபதேவ ஸாக்ஷாத்கரித்தநுபவிக்கலாமபடி ஆழ்வார்க்கு *மயர்வறமதி நலமருள; ஆழ்வாரும் "பொன்னிவர்மேனி மரதகத்தின்பொங்கிளஞ் சோதி" என்கிறபடியே எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபத்தை யும் தத்ஸ்வரூபபரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், தத ரேயமான திவ்யகுணங்களையும் அநுபவித்து அவ்வநுபவஜநித ப்ரீதி உள்ளடங்காமல, (ఋచోయజూంషిసామాని తథైవాథర్వణాని చ) (ரிசோயஜூம்ஷி ஸாமாநிததைவாதாவணாநிச)என்கிற வேத சதுஷ்டயங்களில், ரிக், யஜுஸ்ஸு, அதர்வணம, என்கிற வேதத்ரய ஸாரார்த்தத்தை திருவிருத்தம, திருவாசிரியம, பெரியதிருவந்தாதி என்கிற திவ்ய ப்ரபந்த த்ரயத்தாலே அருளிச்செய்தும், (వేదానాం సామవేదోస్మి) (வேதாநாமஸாமவேதோஸ்மி) என்று கீதோபநிஷதாசார்யன் தானே சசொல்லப்பட்ட ஸாமவேத ஸாரார்த்தத்தை சரமப்ரபந்தமான திருவாய்மொழியாலே யருளிச்செய்தும, "மிக்கவேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப்பாடியென்னெஞ்சுள்நிறுத்தினான்" என்கிறபடியே * தேவுமற்றறியாத ஸ்ரீமதுரகவி ப்ரப்ர்திகளான ஸஜ்ஜநங்கள் * அறியக்கற்று வல்லாரமபடி ப்ரதிஷ்டிப்பித்து, * ஊரும் நாடு முலகமுந் தன்னைப்போலேயாக்கி, புஷ்ப த்யாக போக மண்டபம் தொடக்கமான திவ்யதேசத் தெமபெருமான்களும் திருப்புளியாழ்வா ரடியிலே எழுந்தருளி, இவர்க்கு திருமுகபாதாநம்பண்ணி, தாங்க ளும் "எமபெருமானுளனே" என்கிறபடியே ஸத்தைபெற்றுநிற்க; நித்யஸூரிகளும ச்வேதத்வீபவாஸிகளும் இவ்வாழ்வார்வைபவத் தைக் காண்கைக்காக வந்து நிற்க, அவர்களை ஸேவித்து, "பொலிக பொலிக" என்று மங்களாசாஸநம்பண்ணி, அவர்கள்வைபவத்தை யறிந்து அநுபவித்த தமக்கு "மாறுளதோவிம்மண்ணின்மிசையே" என்றும, "இனியாவர்நிகரகல்வானத்தே" என்றும், * "யான்பெரியன் நீபெரியையென்பதனை யாரறிவார" என்றும் - எம்பெருமானோடே மார்தட்டி, உபயவிபூதியிலும தமக்கு ஸத்ர்சரில்லாதவராய், ஒருவ ராலும் அறியவரிதான ப்ரபாவத்தையுடையராய், "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாமகண்ணன்" என்று - பால்யாத் ப்ரப்ர்தி பகவத்குணைகதாரகராயிருக்கிற இவ்வாழ்வார், (ప్రాప్యస్య బ్రహ్మణో రూపం ప్రాప్తుశ్చ ప్రత్యగాత్మనః। ప్రాప్త్యుపాయం ఫలం ప్రాప్తేస్తథా ప్రాప్తివిరోధి చ॥ వదన్తి సకలా వేదాస్సేతిహాసపురాణకాః) (ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம்ப்ராப்துஶ்சப்ரத்ய காத்மந:ப்ராப்த்யுபாயம்பலம்ப்ராப்தேஸ்ததாப்ராப்திவிரோதிச-வதந்தி ஸகலாவேதாஸ்ஸேதிஹாஸபுராணகா:)என்று ஸகலவேதசாஸ்த்ரங்களி லும்ஸாரதமமாகச்சொல்லப்படுகிற அர்த்தபஞ்சகத்தையும்,(త్వయార్థః [illegible] మన్త్రం వేదేష్వపి ద్విజ) (த்வயாத்பரதரம்நாஸ்திமந்த்ரம்வேதேஷ்வபி த்விஜ)என்றுமந்த்ரச்ரேஷ்டமாகச்சொல்லப்படுகிறஸர்வவேத[illegible]

ஸாரபூதசரணாகதிமந்த்ரார்த்தத்தையும், சரமப்ரபந்தமான திருவாய்மொழியாலே ஸுவ்யக்தமாம்படி யருளிச்செய்து, (దర్శనంపరభక్తిస్స్యాత్ పరజ్ఞానస్తుసఙ్గమః। పునర్విశ్లేషభీరుత్వం పరమాభక్తిరుచ్యతే) (தர்ஶநம் பரபக்திஸ்யாத பரஜ்ஞாநந்துஸங்கம: - புநர்விஶ்லேஷபீருத்வம் பரமாபக்திருச்யதே) என்கிறபடியே பரபக்திபரஜ்ஞாந பரமபக்திகளையுடையராய்க்கொண்டு, * தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொல்லி * அவாவற்று வீடுபெற்றருளினார்.

அநந்தரம், "திருமால்திருப்பேர்வல்லாரடிக்கண்ணிசூடியமாறன்" என்கிற * திருக்குருகூர்நகர்நம்பிக்கு ப்ரதாநஶிஷ்யரான ஸ்ரீமதுரகவிகள், ப்ரபந்நஜநகூடஸ்த்தரான ஸ்வாசார்யவைபவத்தை, (கண்ணிநுண்சிறுத்தாம்பு) என்கிற திவ்யப்ரபந்தத்திலே யருளிச்செய்து, பரமைகாந்திநிஷ்டரான முமுக்ஷுக்களுக்கு உபகரித்தருளி, அர்ச்சாரூபமான ஆழ்வார் விக்ரஹத்தையும் எழுந்தருளப்பண்ணி, அவருக்கு நித்ய பக்ஷ மாஸ அயந ஸம்வத்ஸரோத்ஸவங்களை யெல்லாம் மஹோத்ஸவமாகத் தாழ்வறநடத்திக்கொண்டு, "வேதந்தமிழ் செய்த பெருமாள்வந்தார், திருவாய்மொழிப்பெருமாள்வந்தார், திருநகரிப்பெருமாள்வந்தார், திருவழுதிவளநாடர்வந்தார், திருக்குருகூர்நகர்நம்பிவந்தார், காரிமாறர்வந்தார், சடகோபர்வந்தார், பராங்குசர்வந்தார்" என்று பலசின்னங்கள் பணிமாற, அவ்வளவிலே, சங்கத்தார் சிஷ்யர்கள்வந்து, எங்கள் சங்கத்தாரோடே தர்க்கித்து, சங்கப்பலகையேறினாலொழிய, "வேதந்தமிழ்செய்த பெருமாள்" என்று விருதுபிடிக்கவொட்டோமென்று தடுக்க, ஸ்ரீமதுரகவிகளும், அது ந்யாயமாம், எங்கள் ஆழ்வார் எங்கும் எழுந்தருளார், அவர் திவ்யஸந்நிதிக்குச்சங்கப்பலகையிடங்கொடுத்ததாகில் இவர்க்கு இடங்கொடுத்ததாமென்றுசொல்லி, ஒரு சிறுமுறியிலே, "கண்ணிநுண்சிறுத்தாம்பினை" என்றுஎழுதி வையுங்கோளென்று அவர்கள்கையிலேகொடுக்க, அவர்களும்போய் இவ்விசேஷத்தைச்சங்கத்தாருக்குச்சொல்லி இச்சிறுமுறியைசங்கப்பலகையின்மேலேவைக்க, அக்காலத்திலே, தென்மதுரையிலே சங்கத்தாரோடு சேர முந்நூறுதமிழ்ப்புலவர் சங்கப்பலகை யேறியிருக்க, அப்பலகை அவர்களெல்லாரையும் எடுத்துக்கவிழ்த்துப்போட்டு, ஆழ்வார் திவ்யஸூக்திச சிறுமுறியொன்றையுமே தரித்துக்கொண்டுநிற்க; இதனைக்கண்டு, சங்கத்தலைவனும்பயப்பட்டு, "ஈயாடுவதோகருடற்கெதிரே யிரவிக்கெதிரின் மினியாடுவதோ, நாயோடுவதோயுறுமிப்புலிமுன் நரிகேசரிமுன் நடையாடுவதோ, பேயாடுவதோவழகூர்வசிமுன் பெருமானடிசேர் வகுளாபரணன், ஓராயிரமாமறையின் தமிழில் லொருசொற்பொருமோ வுலகிற்கவியே" என்று ஆழ்வார்விஷயமாகக் கவிசொல்லி அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டான். பின்னையும் அங்குக்கிடந்ததமிழ்ப்புலவரடைய. ப்ரத்யேகம் ப்ரத்யேகம் கவிசொல்லி, அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டார்கள். இப்படி, (గురుంప్రకాశయేద్ధీమాన్) (குரும்ப்ரகாஶயேத்

நித்யம்) என்கிறபடியே ஸ்வாசார்யரான ஸ்ரீபராங்குசருடைய வைபவத்தை, * ஊரும்நாடு முலகமு மெல்லாமறியும்படி ப்ரகாசிப்பித்துக்கொண்டு சிலகாலம் எழுந்தருளியிருந்து லோகத்தை வாழ்வித்தருளினார்.

இப்படி தத்வதர்ஸிகளாக அவதரித்தருளின இவ்வாழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் முக்யதமமான ப்ரமாணங்களாயிருக்க, தேவதாந்தரவிஷயமாக, "தெய்வநான்முகக் கொழுமுளையீன்று, முக்கணீசனொடுதேவுபலநுதலி மூவுலகும் விளைவித்தவுந்தி" என்றும், "பூவில் நான்முகனைப் படைத்த தேவன்" என்றும், "நான்முகனை மூழ்த்தநீருலகெல்லாம் படையென்று முதல்படைத்தாய்" என்றும், "நான்முகனறன்றொடு தேவருலகோடுயிர்படைத்தான்" என்றும், "பிரமன் சிவனிந்திரனாதிகட்கெல்லாம் நாபிக்கமல முதற்கிழங்கு" என்றும், "பிரமனைத் தனனுந்தியிலே தோற்றுவித்து" என்றும், "இருந்தண்கமலத் திருமலரினுள்ளே திகழ்ந்த திசைமுகனைத் தந்தாய்" என்றும், "தன்னுந்திவாயானுநான்முகற் பயந்த வாதிதேவன்" என்றும், "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்றும், "உந்தியிற் றோற்றினாய் நான்முகனை" என்றும், "உந்திமெழுந்தவுருவமலர்தன்னிற் சந்தச்சதுமுகன்றன்னைப்படைத்தவன்" என்றும், "உந்திமேல் நான்முகனைப்படைத்தான்" என்றும் இப்படி ஆழ்வார்களெல்லாரும் ப்ரஹ்மருத்ராதிகளை ஸர்வேஸ்வரனுடைய ஸ்ருஷ்டராக அருளிச்செய்தும்;

அங்ஙனன்றிக்கே, "வலத்தனன் திரிபுரமெரித்தவன் இடம்பெறத் துந்தித்தலத்தெழுதிசைமுகன்" என்றும், "ஏறனைப்பூவனைப் பூமகள் தன்னை, வேறின்றிவிண்தொழத்தன்னுள் வைத்து" என்றும், "திருவிடமேமார்வமயனிடமே கொப்பூழ், ஒருவிடமு மெந்தை பெருமாற்கரன்" என்றும், "ஏறேறுமிறையோனுந் திசைமுகனுந் திருமகளும், கூறாகுந்தனியுடம்பன்" என்றும், "சிவனொடு பிரமன்வண்திருமடந்தைசேர் திருவாகம்" என்றும், "மலர்மகள் நின்னாகத்தாள், செய்யமறையானநின்னுந்தியான், மாமதிள்மூன்றெய்தவிறையான் நின்னாகத்திறை" என்றும், "பிறைதங்கு சடையானை வலத்தேவைத்துப்பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து, கறைதங்குவேல்தடங்கண்திருவை மார்பில் கலந்தவன்" என்றும், "(விஷ்ணோஶ்ஶ்ரீரநபாயிநீ)" (விஷ்ணோஸ்ஸ்ரீரநபாயிநீ) என்றும் சொல்லப்படுமவளாய், * இறையுமகலகில்லாத நித்யஸித்த மங்களாவஹையாய பரமமஹிஷியான பிராட்டியுடன் ரஜஸ்தமோகுண மிஸ்ரப்ரஹ்மருத்ரர்களுடன் வாசியறத் திருமேனியிலே இடங்கொடுத்துக்கொண்டிருக்கிறானென்று அருளிச்செய்தும்;

அங்ஙனன்றிக்கே, "நிரைமலர்ப்பாதங்கள் சூடி கண்ணபிரானைத் தொழுவார், ஒற்றைப்பிறையணிந்தானும் நான்முகனு மிந்திரனும், மற்றையமரருமெல்லாம்" என்றும், "கள்வாவெம்மையு மேழுலகும் நின்னுள்ளேதோற்றிய விறைவவென்று, வெள்ளேறன் நான்முகனிந்

திரன் வானவர் புள்ளூர்திகழல்பணிந்தேத்துவர்'' என்றும், "நாடொறும் வானவர்தம்மை யாளுமவனும் நான்முகனும் சடைமுடியண்ணலும், "செம்மையா லவன் பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவர்'' என்றும், "நுண்ணுணர்வில் நீலார்கண்டத்தம்மானும் நிறை நான்முகனுமிந்திரனும், சேலேய்கண்ணார் பலர்சூழவிரும்பும திருவேங்கடத்தானே'' என்றும், "அரன் நான்முகனேத்துமசெய்யநின்றிருப்பாதத்தையான்'' என்றும், "மேவித்தொழும் பிரமன்சிவனிந்திரன்'' என்றும், "நெற்றிபெற்றகண்ணனை விண்ணின்நாதனோடும்போதின்மேலநற்றவத்த நாதனோடு மற்றுமுள்ள வானவர், கற்றபெற்றியால வணங்குபாத'' என்றும், "நீறேறுசெஞ்சடை நீலகண்டனும் நான்முகனும் முறையால், சீரேறுவாசகம் செய்யநின்ற திருமால'' என்றும், "ஆவரிவரெனவில்லை யாவனையான்பாதம, எவர்வணங்கியேத்தாதாரெண்ணில, பவரும், செழுங்கதிரோனொண் மலரோன கணனுதலோனன்றே, தொழுந்தகையார் நாளுந்தொடாந்து'' என்றும், இப்படி ப்ரஹ்மருத்ராதிதேவதைகள் எம்பெருமானைககிட்டி தண்டனிட்டுஸ்தோத்ரம் பண்ணித் திரிவார்கள் என்றருளிச்செய்தும்:

அங்ஙனன்றிக்கே, "கேழ்த்தசீரன் முதலாக கிளாதெய்வமாய்க்கிளாந்து, சூழ்த்தமரர்துதித்தாலுன் றொல்புகழ்மாசூணாதே'' என்றும், "நினைந்து நைந்துள்கரைந்துருகி யிமையோர்பலருமுநிவரும புனைந்த கண்ணிநீர்சாந்தம் புகையோடேந்திவணங்கினால - உன பெருமை மாசூணாதோமாயோனே'' என்றும், "மாசூணாவானசோலத் தமரர்கோன வழிப்பட்டால் மாசூணுவுன பாதமலர்ச்சோதி மழுங்காதே'' என்றும், "பிறையேறுசடையானும்நான்முகனுமிந்திரனுமிறையாதலறிந்தேத்த வீற்றிருத்த லிதுவியப்பே'' என்றும,இப்படி ப்ரஹ்மருத்ராதிகள், ஸத்வகுணோத்தராரானபோது, எம்பெருமானைக்கிட்டி ஸேவித்து ஸ்தோத்ரம் பண்ணினால் எம்பெருமானுக்கு அவத்யாவஹமென் றருளிச்செய்தும்;

அங்ஙனன்றிக்கே,"நளிர்மதிச்சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ'' என்றும், "சிவனாயயனாய'' என்றும, "கடிகமழ்கொன்றைச் சடையனேயென்றும் நான்முகக் கடவுளே என்றும) என்றும், "பூத்தண்டுழாய்முடியாய் புனைகொன்றையஞ்செஞ்சடையாய்வாய்த்த வென்னான்முகனே'' என்றும, "என்றிருமார்பன்றன்னை யென்மலைமகள் கூறன்றன்னை, என்று மென்னுமகளையகம பாற்கொண்ட நான்முகனை'' என்றும், "முனியேநான்முகனே முக்கண்ணப்பா'' என்றும், "அவாவறச்சூழரியையயனையரனை யலத்தி அவாவற்று'' என்றும் - இத்திவ்யப்ரபந்தங்களிலே ஆதிமத்யாவஸாநமாக ப்ரஹ்மருத்ராதிகளை ஸர்வேஶ்வரனோடொகவருளிச்செய்தும். ஆக இப்படி ஒருக்காலருளிச்செய்தது ஒருக்கா லருளிச்செய்யா திருக்கையாலே இவற்றை முக்யதமமான ப்ரமாணமென்று விஶ்வஸிக்கலா யிருந்ததில்லையேயென்னில்;

விச்வஸிக்கக்கூடும், எங்ஙனேயென்னில்; இவ்வாழ்வார்கள், தங்களுக்கு தேவதாந்தரவிஷய வைராக்யமுண்டென்று தோற்ற, "ஒரு உலகினதியலவே, ஈனமோளிருக்க மணிநீராட்டி, படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து, தேர்ந்துலகளிக்கும் முதற்பெருங் கடவுளிற்ப, புடைபலதானறிதெய்வம் பேணுதல், தனாஅதுபுல்லறிவாண்மை பொருந்தக்காட்டி" என்றும், "எம்பெருமாமாயனையல்லது, ஒருமாதெய்வம் மற்றுடையமோயாமே" என்றும், "பிதிருமனமிலேன் பிஞ்ஞகன்றன்னோடெதிர்வன், அவனெனக்கு நேரான்" என்றும், "மற்றுமோர் தெய்வமுண்டே மதியிலாமானிடங்காள்" என்றும், "மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோடுற்றிலேன்" என்றும், "எம்பெருமானுண்டுமிழ்ந்த வெச்சிற்றேவரல்லாதார்தா முளரோ" என்றும், அவ்வளவுமன்றிக்கே, "திடவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசை, படர்பொருள் முழுவதுமாயவையவைதொறும், உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன், சுடர்மிகுசுருதியு ளிவையுண்ட சுரனே" என்றும், "போதின்மங்கை பூதலக்கிழத்தி தேவி; அன்றியும், போதுதங்கு நான்முகன் மகன்; அவன்மகன் சொலின் மாது தங்கு கூறன்; ஏறதூர்தியென்றுவேதநூலோதுகின்றதுண்மை" என்றும், "தீர்த்தனுலகளந்த சேவடிமேற்பூந்தாமம் - சேர்த்தியவையேசிவன் முடிமேல்தான் கண்டு - பார்த்தனதெளிந்தொழிந்த பைந்துழாயான்பெருமை - பேர்த்துமொருவராற் பேசக்கிடந்ததே" என்றும், "கபாலநன்மோக்கத்துக்கண்டுகொண்மின்" என்றும், "மார்க்கண்டேனுங்கரியே; கருத்தமனமொன்றுமவேண்டா; கண்ணனல்லாற்றெய்வமில்லை" என்றும், "சத்தியங்காண்மினைய! சிலையினாலிலங்கைசெற்றதேவனே தேவனாவான்" என்றும், இப்படி ப்ரமாணத்தாலும், ப்ரத்யக்ஷத்தாலும், ஸாக்ஷியாலும், (యత్తత్పరమంబ్రహ్మ లోకేవేదేషుపఠ్యతే। సదేవః పుణ్డరీకాక్షః స్వయంనారాయణః పరః) (யதேதத்பரமம்ப்ரஹ்ம லோகேவேதேஷுபட்யதே - ஸதேவபுண்டரீகாக்ஷஸ்ஸ்வயம்நாராயண:பர:) என்று சொல்லப்படுகிற ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரனென்று ஸாதித்தும், அதுவுமன்றியே, பெரியாழ்வார், (పరః పరాణాంపురుషోయస్యతుష్టోజనార్దనః। సప్రాప్నోత్యక్షయస్థాన మేతత్సత్యంమయోదితమ్) (பர:பராணாம்புருஷோயஸ்யதுஷ்டோஜநார்த்தந: - ஸப்ராப்நோத்யக்ஷயஸ்த்தான மேதத்ஸத்யம்மயோதிதம்) என்றும், (నాస్తినారాయణసమో నభూతోనభవిష్యతి। ఏతేనసత్యవాక్యేన సర్వార్థాన్సాధయామ్యహం) (நாஸ்திநாராயணஸமம்நபூதோநபவிஷ்யதி - ஏதேநஸத்யவாக்யேந ஸர்வார்த்தாந்ஸாதயாம்யஹம்) என்றும்சொல்லுகிற ரிஷிகள்வாக்யங்களையும் அவற்றுக்கடியானசுருதிவாக்யங்களையுங்கொண்டு வித்வத்கோஷ்டியானராஜஸ்த்தானத்திலே பரதத்வநிர்ணயம்பண்ணி * விளைந்துகிழியறுத்தும், இப்படிநிச்சயம்பண்ணின ஆழ்வார்கள் ஒருக்காலருளிச்செய்தது ஒருக்காலருளிச்செய்திலர்களென்னவொண்ணாது; ஆனால் இவற்றுக்குக கருத்தென்னென்னில்; அந்த தேவதாந்தரங்களினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களுக்கீடாக அருளிச்செய்தார்களித்தனை.

எங்ஙனேயென்னில்; இவர்கள் கர்மவஶ்யரில் ப்ரதாநராகையாலே, (యుగకోటిసహస్రాణి విష్ణుమారాధ్య పద్మభూః। పునస్త్రైలోక్యధాతృత్వం ప్రాప్తవానితి శుశ్రుమ) (யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்யபத்மபூ: - புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுஶ்ரும) என்றும், (మహాదేవస్సర్వమేధే మహాత్మా హుత్వాత్మానం దేవదేవో బభూవ) (மஹாதேவஸ்ஸர்வமேதே மஹாத்மா ஹுத்வாத்மாநம்தேவதேவோபபூவ) என்றும், பூர்வஜந்மங்களிலே, ப்ரஹ்மபதம், ருத்ரபதம்பெறுகைக்குத்தபஸ்ஸைபண்ணுகையாலே, தத்பல போகார்த்தமாக எம்பெருமானாலே ஸ்ருஷ்டரானார்களென்றும்,

இவர்கள்எம்பெருமான் திருமேனியைப்பற்றிலப்தஸ்வரூபராயிராத போது இவர்களுக்கு ஸத்தைகுலையுமென்றும், இவர்கள் ஸதவோத்ரிக்தரானபோது பகவத்ஸ்தோத்ரரதிகளுக்கு யோக்யராயிருப்பார்களென்றும், இவர்கள்ராஜஸதாமஸப்ரசுரரான போது அஹங்காரத்தாலே பண்ணும்துர்மானமகன்தத்திருக்கையாலேஇவர்கள் எம்பெருமானைக்கிட்டிஸ்தோத்ரம்பண்ணி ஸேவிக்கை அரிதாயிருக்குமென்றும், இவர்களுடைய ஸ்வரூபஸ்த்திதி பரவாநதநிர்வாஹத்தன பகவத்ஸ்மரயசரீரவசேக்ஷமாயிருக்கையாலே, (ఏకో వై నారాయణ ఆసీన్న బ్రహ్మా నేశానో నేమే ద్యావాపృథివీ...) (ஏகோ வை நாராயண ஆஸீந்ந ப்ரஹ்மா நேஶாநோ ...) என்று - அவனுக்கு சரீரமாக அருளிச்செய்கையாலே இதத்வப்ரபந்தங்களை ப்ரக்யதமமான ப்ரமாணங்களென்றாக குறையில்லை.

இவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு சரீரமானபடியை (సర్వస్య జగతో...) (ஸர்வஸ்ய ஜகதஸ்ஸர்வ ஸர்கஸ்தித்யந்த ... ப்ரஹ்மாத்யவஸ்தா பேதைஸ்து விஷ்ணுரேவ ...) என்றும், (కల్పాంతే రుద్రరూపీ యో రుద్రః ... పురుషం విష்ணుం ప్రణతోஸ్మి జనార్దనమ్) (கல்பாந்தே ருத்ரரூபீ யோ ... புருஷம் விஷ்ணும் ப்ரணதோஸ்மி ஜநார்த்தநம்) (స్రష్టి స్థిత్యంతకరణీం బ్రహ్మవిష్ణుశివాత్మికాం। స సంజ్ఞాం యాతి భగవానేక ఏవ జనార్దనః) (ஸ்ருஷ்டிஸ்திதியந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுசிவாத்மிகாம் - ஸஸம்ஜ்ஞாம்யாதிபகவாநேக ஏவ ஜநார்த்தந:) என்றும், "தாமோதரனுருவாகியசிவற்குந்திசைமுகற்கும்" என்றும், "அரனயனென வுலகழித்தமைத்துளனே" என்றும் அருளிச் செய்தார்கள். இவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு சரீரபூதராக, அவன்தான் ஆத்மாவாகக் கூடும்படி யெங்ஙனேயென்னில்; சரீரவாசிசப்தம் சரீரி பர்யந்தஸ்வார்த்தாபிதானம் பண்ணக்கடவதிறே. ஒரு சரீரியானவன், (స్థూలోహం కృశోహం) (ஸ்தூலோஹம், க்ருஶோஹம்) என்றுதானும் சொல்லி, பிறரும் நீதடித்தாய் இளைத்தாயென்று சொல்லுமோபாதி இவர்களையும் ஸர்வேஸ்வரன் றானாகச்சொல்லக் குறையில்லை. "நீரவானம்மண்ணெரிகாலாய் நின்றநேமியான்" என்றும், "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த

முடிவில் பெரும்பாழேயோ, சூழ்ந்ததனிற்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ சூழ்ந்ததனிற்பெரிய சுடர்ஞானவின்பமேயோ" என்றும், "தேவராயநிற்குமத்தேவுமத்தேவரில் - மூவராய்நிற்கும்துபுணர்ப்பும்-யாவராய - நிற்கின்றதெல்லாமநெடுமால்" என்றும், "முதலாவார்மூவரே யமமூவருள்ளும், முதலாவானமூரிநீரவண்ணன்" என்றும் இத்யாதிகளாலே அவனையொழிந்த ஸகல சேதநாசேதநங்களும் அவன்றானாக அருளிச்செய்தார்கள்

இப்படியருளிச்செய்கைக்கடி;- (యస్యాత్మా శరీరం యస్య పృథివీ శరీరం) (யஸ்யாத்மா ஶரீரம்யஸ்யப்ருதிவீ ஶரீரம) என்கிறபடியே ஸர்வேஶ்வரனுக்கு ஆத்மாவுமசரீரம, அசித்தும சரீரம என்று வேதத்திலே சொல்லுகையாலும, (విశ్వరూపసమాహ్వయమ్) (விஶ்வரூபஸமாமஜம்) என்று அவன்றானும் அருளிச்செய்கையாலும், திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநனுக்கு விஶ்வரூபத்தைக்காட்டுகையாலும அவன்றானாகச்சொல்லக்குறையில்லையிறே. (కశ్చిద్బ్రహ్మణో నామ ఈశోஹం సర్వదేహినాం। ఆవాం తవాఙ్గే సమ్భూతౌ తస్మాత్కేశవనామవాన్) (கஶ்சித்ப்ரஹ்மணோநாம ஈஶோஹம்ஸர்வதேஹிநாம் - ஆவாம்தவாங்கேஸம்பூதௌ தஸ்மாத்கேஶவநாமவாந்) என்கிறபடியே நாராயணன்பக்கலிலே ப்ரஹ்மருத்ராதிகள் ஜாதரானார்கள் என்றும், இவர்கள் திருநாபிகமலத்தையும தக்ஷிணபார்ஶ்வத்தையும்பற்றி லப்தஸ்வரூபராயிருப்பார்கள் என்றும, (పాదేనకమలాభేన బ్రహ్మరుద్రార్చితేన చ। పశ్య పుణ్డరీకాక్ష ఆపాదతలమస్తకమ్) பாதேநகமலாபேந ப்ரஹ்மருத்ரார்ச்சிதேந ச - பஶ்யபுண்டரீகாக்ஷ ஆபாததலமஸ்தகம்) என்று - இவர்கள் சேஷபூதராய் எம்பெருமானை ஆச்ரிப்பார்கள் என்றும், இவர்கள் தத்தீநமானஸத்தாஸ்திதிப்ரவ்ருத்திகளையுடையராகையாலே எம்பெருமான்தானென்று ஸ்ம்ருதிஇதிஹாஸ புராணங்களும சொல்லிற்றின. (పరమాత్మా శరీరస్థో నారాయణసమాహ్వయః। తస్యానపాయినీ శక్తిర్దేవీ స్వధర్మధర్మిణీ) (பரமாத்மாஶரீரஸ்தோ நாராயணஸமாஹ்வய: - தஸ்யாநபாயிநீஶக்திர்தேவீஸ்வதர்மதர்மிணீ) என்கிறபடியே * எத்தனையேனும் பிரிவாற்றகில்லாதபெரியபிராட்டியாரோபாதிப்ரஹ்மருத்ராதிகளும் இவன் திருமேனியிலே ஸர்வகாலமுமிருப்பார்களோவென்னில்; ஆபத்காலத்திலே எம்பெருமான் தன் திருமேனியிலேஒதுங்க அவர்களுக்குஇடங்கொடுக்குமத்தனையல்லதுஎப்போதுமிரார்கள், இதுதான்ஸர்வேஶ்வரனுக்கு மஹத்தானசீலகுணமாகையாலே ஆழ்வார்கள்எப்போதும் அத்தையே அருளிச்செய்துகொண்டுபோருவர்கள். "தாளதாமரையானுனதுந்தியான் - வாளகொண்ணீண்மழுவாளியுனாகத்தான்- ஆளராய்த்தொழுவாருமமரர்கள்-நாளுமென்புகழ்கோவனசீலமே" என்றும், "அக்கும்புலியினதளுமுடையாரவரொருவர்பக்கநிற்கின்றபண்பருர்" என்றும்சொல்லக்கடவதிறே. "சலஹங்களானால் அடையவளைந்தானுக்குள்ளே இன்னூர் தியெனனுமல்எல்லாருங் கூடியிருந்து, சலஹமதெளிந்தவாறேபுறப்பட்டாலும் இவ்விடம் இன்னனைபற்று இவ்விடம இன்னன்பற்று என்ற

சொல்லுமாப்போலே'' என்று நஞ்சீயருக்கு பட்டர் அருளிச்செய்தாரிறே. கீழ் இவர்களுக்குச்சொன்ன வித்தனையும் நமக்கும் ஒக்குமென்று அருளிச்செய்தார்கள். எங்ஙனேயெனனில்; "வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவகுக்கின்று" என்றும், "என்னையாக்கிக்கொண்டு" என்றும், "அந்நாள் நீதந்தவாக்கை" என்றும், "என்னைத்தனபொன்னடிக்கீழ்திருத்தி" என்றும், "குலதொல்லடியேன்" என்றும, "குடிகுடிவழிவந்தாட்செய்யும்தொண்டா" என்றும், "அடிமையாமபோற்றி" என்றும, "அருவினையேன் களவேழ்வெண்ணெயதொடுவுண்டகள்வாவென்பன" என்றும், "உயிர்வேறின்றியொன்றாகவே" என்றும, தமக்கென்றும பிறர்க்கென்றுமாகாமல் அருளிச்செய்தாரிறே.

இனி, அவர்களோடு ஸமரோ இவ்வாழ்வார்களெனனில, அன்று;- கர்மத்தையிட்டு ஸ்ருஷ்டித்தானென்றது அவர்களை; ஸ்வேச்சையாலே அவதரிப்பித்தானென்றது இவர்களை: ஆபத்காலத்திலே ஆபந்நிவாரணார்த்தமாகக் காதாசித்கமாகத் திருமேனியிலே யிடங்கொடுத்துவைத்தானென்றது அவர்களை; (நீக்கமில்லாவடியார்) என்னக்கடவதிறே இவர்களை: அவர்கள ராஜஸ தாமஸ மிச்ரஸத்வம தலையெடுத்தபோது பகவத்விஷய ப்ரவ்ருத்தி கனத்திருக்கையாலே சேஷபூதரென்கிறது அவர்களை; (முக்குணத்திரண்டவையகற்றி ஒன்றினிலொன்றிநின்று) என்றும், (நிலைநின்ற தொண்டரான அறந்திகழுமனத்தவர்) என்றும சொல்லுகிற சுத்தஸத்வநிஷ்டராகையாலே தெளிவுற்றசிந்தையரான சேஷபூதரென்கிறது இவர்களை: அவர்கள ஸத்வகுணங்குலைந்து ராஜஸ தாமஸ பரசுராரானபோது அஹங்கரித்து, (கோபம்விஷ்ணு) என்றும், (பரிவின்றிவாணனைக் காத்துமென்றன்று படையோடும வந்தெதிர்ந்த) என்றும்-பாணஸஹாயத்தாதிகளிலே ஈச்வரனோடே எதிரம்புகோர்க்கையாலே ஈச்வரனைக்கிட்டுகை அவத்யமென்றும், பகவத்விஷயீகாரத்துக்கு முன்புண்டான ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளிலே பொல்லாங்குகளை அநுஸந்தித்து, "பிணங்களிடைந்தெதிர்வன, அவனைக்கு நேரான்" என்றுதாமேயருளிச்செய்தாரிறே; ஆகையாலே ஸமரென்னவொண்ணாது. ஆனால், உத்க்ருஷ்டவர்ணஜாதரன்றிக்கே நிக்ருஷ்டவர்ணஜாதராய் இவ்வாழ்வார் செய்தருளினதாய் காதாரூபமாய் பௌருஷேயமாய் அநித்யமாயிருக்கிற இவற்றை, அபௌருஷேயமாய் நித்யநிர்த்தோஷப்ரமாணமான வேதத்தோடொக்க த்ருடதர ப்ரமாணமென்னும்படி யெங்ஙனேயென்னில; இவர்கள் உத்க்ருஷ்ட ஜந்மத்திலே அவதரித்தால் உத்க்ருஷ்டஜந்ம ஜாதர்க்கொழிய அபக்ருஷ்டஜந்மஜாதர்க்கு ஈடேற வழியில்லையாகையாலும், ப்ரபத்தி ஸர்வாதிகாரமாகையாலும், இவர்கள், ஸம்ஸாரநிமக்நரையுயாத்தத் தாழவிழிந்தவர்களாகையாலும், பகவந்நாமஸங்கீர்த்தநத்துக்கு பாஷாகாரரூப தோஷமில்லாமையாலும், வடமொழி மறையென்றது தெனமொழிமறையை நினைத்தாகையாலும், த்ருடதரப்ரமாணமென்னக் குறையில்லை. இது

வும்,"செந்திறத்த தமிழோசைவடசொல்லாகி" என்றும்," செந்தமிழும் வடகலையுந் திகழ்ந்தநாவர் " என்றும், " ஆகஸ்த்யமுமநாதி " என்றும், (பொய்யில் பாடல்) என்றும், "பொய்ம்மொழியொன்றில்லாத மெய்ம்மையாளன்" என்றும் சொல்லப்படுகிற ஸடத்வேஷிகலிஜித்வசநவித்தமிறே.

இனி, புருஷபுத்திமூலமான தோஷத்துக்கு, "யானாய்த் தன்னைத் தான்பாடித் தென்னாவென்னு மென்னம்மான்" என்கிறபடியே இவ்வாழ்வார்கள்நாவிலிருந்து * இன்கவிபாடும் பரமகவிகளாக நன்குலந்து பரமசேதநனான பரவாஸுதேவன் தானே நன்றாகப் பாடி ப்ரகாசிப்பித்ததாகையாலும், (அன்னமதா யிருந்தங்கறநூலுரைத்த) என்கிறபடியே ஹம்ஸாவதாரமாய ப்ரஹ்மாவுக்கு வேதத்தை யுபதேசித்தாற்போலேயும், வ்யாஸபகவானை ஆவேசித்து வேதங்களைவிஸ்தரிப்பித்தாற்போலேயும் ப்ரகாசிப்பித்ததாகையாலே இப்ரபந்தங்களுக்குப் புருஷபுத்தி ஜநிததோஷமேயில்லை. ஸுப்தப்ரபுத்தரான சிஷ்யர்களை உபாத்யாயர் ஓதுவிக்குமாப்போலேயும, ப்ரளயாவஸ்த்தையிலும் தன்திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருந்து, ஸ்ர்ஷ்டிகாலம் வந்தவாறே வேதத்தை ப்ரகாசிப்பித்தாற்போலேயும் ப்ரகாசிப்பித்த தாகையாலே அநித்யதோஷ ப்ரஸங்கமேயில்லை. ஆகையாலே வேதத்துக்குண்டான ப்ராமாண்யம் இதுக்கும் ஒக்குமிறே. (త్రై)గుణ్యవిషయా వేదాః) (த்ரைகுண்யவிஷயா வேதா:) என்றும், (యావేదవర్ణేషు తుసర్వబుద్ధిః సామాన్యతో వై ... సయాతి ఘోరాన్ నరకాన్ ... పిశాచతామేతి మహావనేషు) (யோ வேதவர்ணேஷு துவர்ணபுத்திம் ஸாமாந்யதோவை விததாதி மர்த்ய: - ஸயாதி கோரான் நரகாந் ஸம்க்யாந் பிஸாசதாமேதி மஹாவநேஷு) என்றும - த்ரிகுணாத்மபுருஷர்களை விஷயீகரிக்கும் வேதத்துக்கு இப்படியானால், * மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களருளிச்செய்த த்ராவிடோபநிஷத் ஸாரத்துக்குச்சொல்லவேண்டாவிறே. (అర్చావతారోపాదాన వైష్ణవోత్పత్తిచిన్తనం। మాతృయోనిపరీక్షాయాస్తుల్యమాహుర్మనీషిణః) (அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்திசிந்தநம் - மாத்ர்யோநிபரீக்ஷாயாஸ்துல்யமாஹுர்மநீஷிண:) என்கிற இவ்வர்த்தத்தை * "வீட்டின்பவின்பப்பாக்களில் த்ரவ்யபாஷாநிரூபணஸமம், * இன்பமாரியிலாராய்ச்சி" என்றிறே. ஆசார்யஹ்ருதயத்திலே அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும அருளிச்செய்தருளினார், ஆகையால் அருளிச்செயலில் அப்ராமாண்யபுத்தி மாத்ர்கமநதோஷத்தோடொக்குமிறே. ஆனபின்பு இவையே முக்யதமப்ராமாணங்களென்று நின்றது.

ஆழ்வார்களுக்கு எம்பெருமான் ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரமோ? ஜ்ஞாநஸாக்ஷாத்காரமோ வென்னில்; ஜ்ஞாநஸாக்ஷாத்கார மல்ல ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரமில்லை. ஆகில்,"கமலக்கண்ணனென் கண்ணினுளான் காண்பன்" என்றும், "நம்பியை நான் கண்டபின்" என்றும்,

“கண்ணுள்ளும்-நீங்காவே” என்றும் சொல்லுகிறவை சேரும்படி எங்ஙனேயெனனில், அவையும் ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரமாகக்கடவது. “நள்ளிராவும் நன்பகலும் நானிருந்தோலமிட்டால், கள்ளமாயா வுன்னை யென் கண்காணவந்தீயாயே” என்றும், “பக்கமநோக்கின்றலந்தேன் பாவியேன் காண்கின்றிலேன” என்றும் மற்றும் இப்படி பாட்டுக்கள்தோறும் பெரிய ஆர்த்தியோடே கூப்பிட்டும், “காண வந்தென் கண்முகப்பே” என்கிற பாட்டின்படியே ப்ராஹ்மருத்ராதிகளுமகப்படக் கூப்பிட்டாலும் காணவொண்ணாத வஸ்துவை, நடையழகு நிலையழகு கண்ணழகுகளை ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கவேணுமென்று கூப்பிடுகிற இதுக்கு ப்ரயோஜநமில்லையென்று நிராசராவது, பின்னையும் அவனை சாபலாதிசயத்தாலே, “அப்பனேயடலாழியானே” என்கிற பாட்டின்படியே பரதமபரிஸ்பந்தமே தொடங்கி காணவேணுமென்ற அசோஷ்யமான ஆத்மவஸ்து, குருத்துவற்றுக்கவுலரும்படியாத்துக்கண்மையது “காண்கின்றிலேன்” என்றும் (ஸர்வேந்த்ரியைஸ் ...)(நமாம ஸசக்ஷுராபிவீக்ஷிதம்) என்றும் - மாம்ஸசக்ஷுஸ்ஸாலே காணவொண்ணாதென்று நிராசராய் “தக்கஞானக்கண்களாலே கண்டுதழுவுவனே” என்று தாசநஸமமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரமேயாகிய, * கட்கண்ணாலே காணவிரகிலலை என்று நிர்த்தாரிக்கையாலே, இப் “கண்டேன்” என்று பலவிடங்களிலும் அருளிச்செய்ததும் ஜ்ஞாநஸாக்ஷாத்காரமாகக் கடவது. “கண்டேன் எனறபத்தும் உட்கண்ணாலே” என்று ஆசார்யஹ்ருதயத்திலே அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் அருளிச்செய்தாரிறே. ஆகையால் இவ்வர்த்தம் சுத்தஸம்ப்ரதாயஸித்தம்.

உள்ளத்தினைக்காமம்பயந்தந்தாளுமயமாளைக் காமேகாசரானமறைநானுமிட்டதையும், “என்றனுங்கட்கண்ணாலும் காணுதவெபருக” என்று-ஞ்ஞாநசக்ஷுஸ்ஸாலே காணுமத்தனை யென்றுபட்டதையும், “நெஞ்சுசெனனுமுட்கண்ணேல்காணுமுணர்ந்து” என்றுமிறாக்கும் உபமேதித்தாரிறே ஜ்ஞாநஸாக்ஷாத்காரமேயுள்ளதென்றுபட்டதனை, “நீயப்பெருமான் நீயொம்பெருமானிசையுமிருநிலனு, மாயப்பெருமானுக்கினனு வடிவோங்காணுமால்” என்றும், “முன்னைவண்ணம்பாலின் வண்ணம் முழுதுநிலை நின்ற, பின்னைவண்ணம் கொண்டல்வண்ணம் வண்ணமெண்ணுங்கால், பொன்னின் வண்ணம்மணியின் வண்ணம் புரையுந்திருமேனி, இன்னவண்ணமென்றுகாட்டீர்” என்றும், “சிறிதுந்திருமேனியினவண்ணமென்றுகாட்டீர்” என்றுமருளிச்செய்தாரிறே- திருமங்கையாழ்வாரும்.

முதலாழ்வார்களும் * ஞானச்சுடர்விளக்கேற்றியிறே “திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்” என்று அருளிச்செய்ததும். இனி ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கலாவது ஆச்சாவதார மொன்றுமேயிறே. ஆகையாலே, அவதார விசேஷங்களாய் ச்ரேஷ்டட ஜந்மஜாதராய் அகிலருமுஜ்ஜீவிக்கும்படி அவதரித்தவர்களாய் அகஸ்த்யபாஷாரூபமான த்ராவிடவேதப்ரபந்தங்களை,பெண்ணும்பேதையும்அதிகரிக்கும்படி உப

கரித்தருளின ஆழ்வார்கள்பக்கலிலும், அருளிச்செயல்களிலும், விச்வாஸ பாஹுள்யமுடையவர்கள ஜீவன்முக்தரென்கிறது. (సంజాతా) [illegible] స్య మోక్షోపనైవరస్య [illegible] ప్రియస్య। [illegible] సత్త్వస్య [illegible] శుద్ధి) [illegible] [illegible] [illegible] మోక్షోపకస్య) [illegible] (ఏకాన్త [illegible] [illegible] విరక్తో జ్ఞానతృప్తః [illegible] [illegible] [illegible] వర్తతే యస్సముక్తః) (ஸம்ப்தஸாஸ்த்ராபிதஸ்ய மோக்ஷோபாஸநாசவரம்பராவஸ்தப்ரியஸ்ய-ஏகாந்தஸீலஸ்ய தாடவாதஸம்ஸேசநத்ரிய பரிகலிதாதகஸ்ய-நபோஜநாச்சாதந தத்பரஸ்ய [illegible] ஹரணே ரதஸ்ய - அத்யாத்மவித்யாநத மாநஸஸ்ய மோக்ஷாத்ருஷ்வாதிதாம ஹிம்ஸகஸ்ய)(ஸமதமநியதாத்மா ஸர்வபூதாநுகம்பீவிஷயஸுகவிராகோ ஞாநதாப்தஸம்ப்ரஸாதஃ - அதியதியதாநநீநாநவஹ்நாதேட நஷ்ட ப்ரவஹித இவகேஹவர்த்ததே யஸ்ஸமுக்த) என்கிறபடியே அஸச்சாஸ்த்ராபிருசியையும் லோகயாத்ரையையும் கைவிட்டு ஏகாந்தசீலராய், பரசேதபட்டாபிஷேக பர்யந்தமான ஸம்பத்துக்களை லபித்தாலும் ஸ்வாசாரப்ரச்யுதி வாராதபடி காட்டியுள்ளவராய் புத்ரராய், இந்த்ரிய நிக்ரஹத்திலே விஷேஷஜ்ஞராய், ஆத்மாத்ம ஞாந பரிசீலநபராய், பூதஹிம்ஸையைவிட்டு சமதமாதியாத்ம குணங்களையுடையராய், ஸர்வபூத தயாபரராய், ஆத்மகாமங்களை அநுபவித்துவிட்டவராய், ஜ்ஞாநபூர்த்தியையுடையராய், பரஹ்மனை சாதிப்பவராய், நியதாஹாரராய், அதயநாதருமமென்றிசை அதிகமாயிருமென்றிசைய பார்யாபுத்ராதிகளிடத்தில் அபிமாநரஹிதராய் ஆசார்யவிஸ்வாஸமுடையரானவர்கள், "அடியார்க்குய வைலரா - அத்தகடல ஞாலத்துள்ளே - வைட்டணவர்" என்கிறபடியே ஜீவன்முக்தரென்கிறது. இவ்வாழ்வார்கள் தம் பரமகருணையாலே இத்திவ்ய ப்ரபந்தங்களை * உபயோகத்து உபயமண்ணமாக அருளிச்செய்து லோகத்தை வாழ்வித்தருளி, தன்னுடைச் சோதிக்கெழுந்தருளினார்கள்.

ஆழ்வார்கள்வைபவம் முற்றிற்று.

நாதமுநிகள்வைபவம்.

இவ்வாழ்வார்கள் * தன்னுடைச் சோதிக்கெழுந்தருளி நெடுங்காலம் கழிந்தவாறே, வீரநாராயண புரத்திலே மன்னனார்திருவடிகளிலே ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்துகொண்டு போருகிற ஈச்வரபட்டாழ்வாரும், அவர் குமாரர் நாதமுநிகளும், அவர் குமாரர் ஈச்வரமுநிகளும், ஒருநாளளவிலே மன்னனார் திருமுன்பே சென்று தண்டன்ஸமர்ப்பித்து, தேவரீர், (పరిత్రాణాయ సాధూనాం [illegible] దుష్కృతాం। ధర్మసంస్థాపనార్థాయ సంభవామి యుగే యుగే) (பரித்ரா[illegible]

விநாஶாய ச துஷ்க்ருதாம் - தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே
யுகே) என்கிற திருமுகப்படியே துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலநார்த்த
மாக அவதரித்து விளையாடியருளின ஸ்ரீமதுரை, திருவாய்ப்பாடி, ஸ்ரீப்ரு
ந்தாவநம், யமுநாதீரம், ஸ்ரீகோவர்த்தநகிரி, ஸ்ரீமத்வாரகை, திரு
வயோத்யை, ஸ்ரீஸாளக்ராமம், ஸ்ரீபதரிகாச்ரமம்,
ஸ்ரீநைமிசாரண்யம், ஸ்ரீநரஸிம்ஹகிரி முதலான வடதிசையிலுள்ள
திவ்யதேசங்களெங்கும் திருவடிதொழுது வரவேணுமென்று விண்ணப்
பஞ்செய்ய; மன்னனாரும் அப்படியே செய்யுங்கோளென்று அர்ச்சகமு
கேந விடைகொடுத்தருள; இவர்களும் ஸகுடும்பமாகப் புறப்பட்டுப்
போய், உத்தரதேசத்திலுண்டான * வடதிசை மதுரை சாளக்கிராமம்
வைகுந்தந்துவரை அயோத்தியிடமுடைவதரி முதலான திவ்யதேசங்
களைத் திருவடித்தொழுது, (యమునాఞ్చాతిగమ్భీరాం నానావర్త్తఝషాకులాం) (யமு
நாஞ்சாதிகம்பீராம் நாநாவர்த்தஜ்ஷாகுலாம்) என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்
தில் சொல்லுகிறபடியே அதிகம்பீரமாய்ப் பலசுழிகளையுடைத்தாய்ப்
பெருகாநிற்கிற யமுநாதீரத்திலே "கோவர்த்தநபுரம்" என்கிற க்ராமத்
திலே, "தூயபெருநீர் யமுனைத்துறைவனை" என்கிற எம்பெருமானைத்
திருவடித்தொழுது, மிகவும் ப்ரீதராய், இவ்விடத்திலே நித்யவாஸம்
பண்ணக்கடவோமென்று நிச்சயித்துக்கொண்டு அவர் திருவடிகளிலே
ஸாலவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டு ஸேவித்திருக்கிற காலத்
திலே, மன்னனாரும், "நம்முடைய வீரநாராயணபுரத்தேற வாரும்"
என்று நாதமுனிகளுக்கு ஸ்வப்நங் காட்டியருள; ஈதொரு ஸ்வப்நமி
ருந்தபடியென்! என்று, இவர்களும் தங்களிலே விசாரித்து, இனி
நமக்குச் செய்யவடுப்பதென்னென்று யமுனைத்துறைவர் திருமுன்பே
சென்று தண்டன் ஸமர்ப்பித்து, இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய;
அவரும் அர்ச்சகமுகேந அப்படியே செய்யுங்கோளென்று தீர்த்தப்ர
ஸாதமும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார். இவர்களும் அங்கு
நின்றும் குடும்பஸஹிதமாகப் புறப்பட்டு, வாராணஸிவழியாக வெழு
ந்தருளி, (సప్తసప్తసు లోకేషు లోకేషు సచరాచరే। నాస్తి నాస్తి సమం క్షేత్రం పురు
షోత్తమం) (ஸப்தஸப்தஸு லோகேஷு லோகேஷு ஸசராசரே - நாஸ்தி
நாஸ்திஸமம் க்ஷேத்ரம் புருஷோத்தமம்) என்று - சதுர்த்தச
புவநங்களிலும் ஸ்வஸதர்ஶரஹிதமாகச் சொல்லப்படுகிற ஸ்ரீபுருஷோ
த்தமத்தேற வெழுந்தருளி, ஸ்ரீஜகந்நாதனையும் திருவடித்தொழுது
அங்குநின்றும் புறப்பட்டு, ஸிம்ஹாத்ரியேற வெழுந்தருளி, ஸிம்ஹ
கிரியப்பனையும் ஸேவித்து, அங்குநின்றும் போந்து, (అహోవీర్యమహో
శౌర్య మహాబాహుపరాక్రమః। నారసింహపరం దైవ మహాబలమహోబిలం)(அஹோ
வீர்யமஹோ ஶௌர்ய மஹோபாஹுபராக்ரம: - நாரஸிம்ஹம்பரம்
தைவ மஹோபலமஹோபிலம்) என்றுசொல்லப்பட்ட அஹோபிலநா
ஸிம்ஹனையும் திருவடித்தொழுது, அங்குநின்றும் போந்து, "பரன்
சென்று சேர் திருவேங்கடமாமலை" என்கிற திருமலையேறவெழுந்தருளி

திருமழிசையாழ்வாரையும் ஸேவித்து, (మాయావీ పరమా
నన్దం త్యక్త్వా వైకుణ్ఠముత్తమమ్। స్వామిపుష్కరిణీతీరే రమయా సహ మోదతే)
(மாயாவீபரமாநந்தம்த்யக்த்வாவைகுண்டமுத்தமம் - ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயாஸஹமோததே) என்கிறபடியே ஜகந்நாடகஸூத்ரதாரியான ஸ்ரீவைகுண்டநாதன் பரமாகாசமான பரமபதத்தை உபேக்ஷித்து, இவ்விபூதியிலுள்ளாரை ரக்ஷிக்கையிலுள்ள நசையாலே திருக்கோனேரிக்கரையிலே, திருமாமகளோடே ஸாவலீலையாயெழுந்தருளியிருக்கிற திருவேங்கடத்தப்பனையும் திருவடிதொழுது, அவ்விடத்தே நித்யவாஸம்பண்ணுவோமென்று பாரிக்க; மன்னனார் திருவுள்ளமாகாமையாலே, அதிசீக்ரமாக அங்குநின்றும்புறப்பட்டு, கடிகாசலத்தேறவெழுந்தருளி, "கடிகைத்தடங்குன்றின்மிசையிருந்த அக்காரக்கனியான அழகியசிங்கரையும் ஸேவித்து, அங்குநின்றும்போந்து * புட்குழியெம்போரேறானாரையும் பெரியவுடையாரையும் ஸேவித்து, அங்குநின்றும்போந்து, (నగరీణాం చ సర్వాసాం పురీ కాఞ్చీ విశిష్యతే। గిరీణాం చాపి సర్వేషాం శ్రేష్ఠో హస్తిగిరిః స్మృతః॥ వేగవత్యుత్తరే తీరే పుణ్యకోట్యాం హరిః స్వయమ్। వరదః సర్వభూతానా మద్యాపి పరిదృశ్యతే) (நகரீணாஞ்சஸர்வாஸாம் புரீகாஞ்சீவிஶிஷ்யதே - கிரீணாஞ்சாபிஸர்வேஷாம் ச்ரேஷ்டோ ஹஸ்திகிரிஸ்ம்ருத: - வேகவத்யுத்தரேதீரே புண்யகோட்யாம்ஹரிஸ்ஸ்வயம் - வரதஸ்ஸர்வபூதாநாம் அத்யாபிபரித்ருஶ்யதே) என்றும் சொல்லுகிறபடியே வேகவதியின் வடகரையிலே உத்தமமான கச்சிமாநகரத்திலே, கிரிகளில்லுவதத்துக்கொண்டு ஶ்ரேஷ்டமான ஹஸ்திகிரியின்மேலே புண்யகோடியென்கிற விமானமத்யத்திலேயெழுந்தருளிநின்று, ஸர்வேசதரராலும் ஸேவ்யமானராய ஸர்வபலப்ரதரான பேரருளாளனையும் ஸேவித்து, அவ்விடத்தில் மற்றுமுண்டான திருப்பதிகளையும் ஸேவித்து, அங்குநின்றும்போந்து, திருவயிந்திரபுரத்திலே தெய்வநாயகனையும் திருவடிதொழுது, அங்குநின்றுமெழுந்தருளி, திருக்கோவலூரிலே ஆழ்வார்களநாயனாரையும் திருவடித்தொழுது, அங்குநின்றும்போந்து, (రఙ్గ రఙ్గేతి యో బ్రూయాత్ క్షుతప్రస్ఖలనాదిషు। విష్ణులోకమవాప్నోతి సర్వపాపక్షయాన్నరః) (ரங்கரங்கேதியோப்ரூயாத் க்ஷுதப்ரஸ்கலநாதிஷு - விஷ்ணுலோகமவாப்நோதி ஸர்வபாபக்ஷயாந்நர:) என்றுசொல்லுகையாலே தும்மலிருமல்தொடக்கமான கலக்கங்கள்வந்தால், தத்தோஷநிவர்த்யர்த்தமாக, "திருவரங்கம்பெரியகோயில்" என்று அநுஸந்தேயமாய், பாபஹரமாய், மோக்ஷப்ரதமுமான * திருவரங்கப்பெருநகரிலே யெழுந்தருளி, நம்பெருமாளையும் ஸேவித்து, அங்குநின்றுமெழுந்தருளி, திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வாரையும் ஸேவித்து, அங்குநின்றும் மீண்டு வீரநாராயணபுரத்தில் மன்னனார்கோயிலேற வெழுந்தருள; அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் எதிர்கொள்ளப்புகுந்து, மன்னனாரைத்திருவடிதொழுது அதிப்ரீதராயிருக்க; மன்னனாரும் திருவுள்ளம்போர வுகந்தருளி, அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரையுமழைத்தருளி, நமக்குப்ரியமாயிருக்கும்இவர்களைப்போர

ஆதரித்துக்கொண்டுபோருங்கோ ளென்றருளிச்செய்ய; அவர்களும் திருமாளிகைகட்டிக்கொடுத்து, அமுதுபடிமுதல் மற்றும் திருமாளிகைக்கு வேண்டுமவையெல்லாம், நடத்திக்கொண்டுபோருகிறகாலத்திலே, இவர்களும் மன்னனாருக்குத் திருநந்தவநம்செய்து, திருமாலைகட்டிச்சாத்தி, அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்கு முதலானவைகளெல்லாம் குறைவறநடத்திக்கொண்டு வித்வத்கோஷ்டிகளும் சாஸ்த்ரப்ரவர்த்தநங்களுமெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே, மேல்நாட்டிலநின்றும் சில ஸ்ரீவைஷ்ணவர்களெழுந்தருளி, மன்னனாரைஸேவித்து, அவர்திருமுன்பே "ஆராவமுதே" என்கிறதிருவாய்மொழியையநுஸந்தித்தருள; அத்தை நாதமுநிகள்கேட்டருளி அதிப்ரீதராய், அவர்களைப்பார்த்து, "ஆயிரத்துளிப்பத்து" என்றிருந்தது, இப்ரபந்தம் உங்களுக்கு முற்றப்பாமோ" என்று கேட்டருள; அவர்களும் இப்பத்துப்பாட்டுமேவருவதென்று விண்ணப்பஞ்செய்ய; இவரும் உங்கள்நாட்டிலே ஸ்ரீகோசமுண்டோ? பாடம்போவாருண்டோவென்று கேட்டருள; எங்களுக்கு இவ்வளவுபாடம்வருவது, மற்றொருவரிடத்திலுமில்லையென்று அவர்கள் விண்ணப்பஞ்செய்ய; இவரும் அவர்களுக்கு மன்னனாருடைய தீர்த்தப்ரஸாதமும்ப்ரஸாதிப்பித்துப்போகவிட்டருள, நாதமுநிகளும் இப்ரபந்தம் சடகோபனவதரித்தருளின திருக்குருகூர்ப்ரதேசத்திலேயுண்டாகவேணுமென்று திருநகரிக்கெழுந்தருளி, ஆழ்வாரையும் பொலிந்துநின்றபிரானையும் ஸேவித்து, அங்கே ஸ்ரீமதுரகவிகளுடைய சிஷ்யரான ஸ்ரீபராங்குசதாஸரை ஸேவித்து, இவ்விடத்திலே திருவாய்மொழியோதினவர்களுண்டோ? ஸ்ரீகோசங்களுண்டோவென்று கேட்டருள; அவரும் திருவாய்மொழியும் மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களும் நெடுங்காலமுண்டு ப்ரநஷ்டமாய்த்து, இப்போது எங்களாசார்யர் அடியேனுக்கு, "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்கிற திவ்யப்ரபந்தத்தை ப்ரஸாதித்தருளி, இக்கண்ணிநுண்சிறுத்தாம்பை ஆழ்வார்திருமுன்பே ஏகாஸநத்திலேயிருந்து ஏகாக்ரசித்தராய், ஆழ்வார்திருவடிகளை த்யாநித்துக்கொண்டு நியமத்துடனே பன்னீராயிரமுரு அநுஸந்திக்க ஆழ்வார்ப்ரஸந்நராவரென்று அருளிச்செய்தாரென்ன; நாதமுநிகளும் அந்த திவ்யப்ரபந்தத்தை அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று தண்டனஸமர்ப்பித்து விநயத்துடனே விண்ணப்பஞ்செய்ய; அவரும்மிகவுமுகப்புடனே இவருக்கு அந்ததிவ்யப்ரபந்தத்தை ஓதுவித்தருள; நாதமுநிகளும் ஓதி, திருப்புளியாழ்வாரடியிலே ஆழ்வார்திருமுன்பே பன்னீராயிரமுரு கண்ணிநுண்சிறுத்தாம்பை நியமத்தோடே அநுஸந்திக்க; (ఆస్తికో ధర్మశీలశ్చ శీలవాన్ వైష్ణవశ్శుచిః। గమ్భీరశ్చతురో ధీర శ్శిష్య ఇత్యభిధీయతే)(ஆஸ்திகோ தர்மஶீலஶ்ச ஶீலவாந்வைஷ்ணவஶ்ஶுசி:- கம்பீரஶ்சதுரோ தீரஶ்ஶிஷ்ய இத்யபிதீயதே) என்று சொல்லப்படுகிற சிஷ்யலக்ஷணமான ஆஸ்திக்யாதிகுணங்களையுடையரான நாதமுநிகளுக்குப் பெரியபிராட்டியார் நியோகேந மிகவும் ப்ரஸந்நராயருளி, இந்

நாதமுநிகளைக் குறித்து அசரீரிவாணி சொல்லுமாப்போலே திருவாய் மலர்ந்து, என்காணும் நம்மைக்குறித்து பஹூசஃ உபாஸியாநின்றீர் என்று கேட்டருள; நாதமுநிகளும் "திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களை அடியேனுக்கு இரங்கியருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் பரீக்ஷையுடனே ஸர்வேஸ்வரன் தமக்கு "மயர்வற மதிநல மருளி"னப்போலே நாதமுநிகளுக்கு, (ப்ரஸ்துதாலிங்கஃ) (திவ்யம் ததாமிதேசக்ஷுஃ) என்கிறபடியே திவ்யஜ்ஞாநசக்ஷுஸ்ஸை ப்ரஸாதித்தருளி, ரஹஸ்யத்ரயார்த்தத்தையும், திருவாய்மொழியையும், மற்றுமுள்ள மூவாயிரப்ரபந்தங்களையும், அகிலதர்ஸந தாத்பர்யங்களையும் அஷ்டாங்கயோக ரஹஸ்யத்தையும் ப்ரஸாதித்தருளினார். "மிக்கவேதியர் வேதத்தின் உட்பொருள் - நிற்கப்பாடியென்னெஞ்சுள் நிறுத்தினான்" என்று சொல்லுகிறபடியே நாதமுநிகளும் க்ருதார்த்தராய், பொலிந்துநின்றபிரானையும் ஆழ்வாரையும் ஸேவித்திருக்கிற வளவிலே, மன்னனார் இப்ப்ரபந்தங்களை நம்முடைய முன்பே ஒரு உருச்சொல்ல வாரும் என்று நாதமுநிகளுக்கு ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய; இவரும் மற்றைநாள், பொலிந்துநின்றபிரானையும் ஆழ்வாரையும் ஸேவித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய ஆழ்வாரும் அர்ச்சகமுகேந, ஆகில நீர் வீரநாராயணபுரத்தேறப்போய் இப்ப்ரபந்தங்களை சமதமாத்யாத்மகுணங்களை யுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு * அறியக்கற்றுவல்லாரம்படி ஓதுவியுமென்று நியமித்து தீர்த்தப்ரஸாதங்களையும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார். நாதமுநிகளும் மீண்டு வீரநாராயணபுரத்தேறவெழுந்தருளும்போது வழியிலுள்ள திருப்பதிகளையும் அந்தத்திருப்பதிவைபவமான திவ்யப்ரபந்தங்களையும் அநுஸந்தாநம்பண்ணிக்கொண்டு ஸேவித்து மீண்டு, வீரநாராயணபுரத்தேற வந்து, மன்னனாரைத்திருவடித்தொழுதுநின்று, தம்மை ஆழ்வார் விசேஷகடாக்ஷம்பண்ணி திவ்யப்ரபந்தங்களையும் ப்ரஸாதித்தருளின செய்தியை மன்னனாருக்கு விண்ணப்பஞ்செய்ய மன்னனாரும் மிகவுமுகப்புடனே ஸ்வப்நமுகேந ஒருருவிவருடனே அருளிச்செய்து, ஸம்ஸாரிகளை உஜ்ஜீவிப்பிக்கைக்காக கரணகளேபரங்களைக் கொடுத்தும், சாஸ்த்ரங்களைத் தந்தும், தாமே வந்து பிறந்தும் இவையித்தனையும் செய்தவிடத்திலும் கார்யகரமாயிற்றில்லை, ஆனபின்பு ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தமுகேந வாய்த்து - திருந்திற்று; இப்படிப்பட்ட ப்ரபந்தங்கள் ப்ரமுஷிதமாய்க் கிடக்கவொண்ணாதென்று பார்த்தருளி இவரைக்கொண்டு இவற்றை ப்ரகாசிப்பிக்கவேணுமென்று நினைத்து, "நீர் இவற்றை, இயலுமிசையுமாக்கும்" என்று அர்ச்சகமுகேந நியமித்தருள நாதமுநிகளும் தம்முடைய மருமக்களான கீழையகத்தாழ்வாரையும் மேலையகத்தாழ்வாரையும் அழைத்தருளி, ஆழ்வார் தம்மை விசேஷகடாக்ஷம் பண்ணியருளி ப்ரஸாதித்தருளின இத்திவ்ய ப்ரபந்தங்களை இயலுமிசையுமாக்கவேணும், அதுசெய்யுமிடத்[illegible] கவிபாடும் பரமகவிகள் அருளிச்செய்ததாய, * செஞ்சொற்[illegible]

தெய்வகன்மாலையான திவ்யப்ரபந்தங்களாகையாலே இத்தை திவ்ய
காநத்திலே சேர்த்துப் பாடவேணுமென்று அவர்களையுங் கூட்டிக்
கொண்டு, ஸ்ரீவேதவ்யாஸபகவான் வேதங்களை உதாத்தாநுதாத்த ஸ்வ
ரித ப்ரசயயுக்தங்களாக உச்சரிக்கலாம்படி பண்ணினாற்போலே நாதமுநி
களும் இத்திவ்யப்ரபந்தங்களை திவ்யகாநத்திலே யடைத்து, இயலு
மிசையுமாக்கிப் பாடுவித்தருள, இது லோகத்திலே ப்ரஸித்தமாயிற்று.
அநந்தரம், கங்கைகொண்ட சோழபுரத்திலே அந்தராஜ்யத்துக்கு ராஜா
வான சோழன்வாசலிலே, தேவகாநம் பாடுவாளொருத்தியும் மநுஷ்ய
காநம் பாடுவாளொருத்தியுமாக இரண்டு வாரஸ்த்ரீகள் தங்களில் விவாத
மாய்வந்து, ராஜஸந்நிதியிலே வித்வான்களைத் திரட்டிப்பாட; ராஜா
வும் அங்குள்ள வித்வான்களும் மநுஷ்யகாநம் பண்ணுகிறவளைக்
கொண்டாடி, அவளுக்கு * மணியும் மாலையும் தாம்பூலமும் கொடுத்துப்
போகவிட்டு, தேவகாநம் பாடினவளை அநாதரித்துத் தள்ளிவிட; அவ
ளும், நான்பாடுகிறபாட்டும் காநமும் தேவதைகளறியும் மத்தனையென்று
தேவாலயங்கள்தோறும் புக்குப் பாடிக்கொண்டு வந்து, மன்னனார்
கோயிலிலே நாதமுநிகள் திருமுன்பே பாட; அவரும் அதனைக் கேட்டு
உகந்து கொண்டாடி அவளுக்கு மன்னனாருடைய தீர்த்த ப்ரஸாதமும்
திருப்பரிவட்டமும் ப்ரஸாதிப்பித்தருள, அவளும் இவரைத் தண்டனிட்டுப்
போய் அந்த ராஜாவுடன் நான்பாடுகிற தேவகாநமறிவாராய, "நாத
முநிகள்" என்னும் திருநாமமுடையாரொருவர் வீரநாராயணபுரத்திலே
மன்னனார்கோயிலிலே யிருக்கிறாரென்ன; ராஜாவும் நாதமுநிகளை எழுந்
தருளவேணுமென்று அழைத்துவிட; இவரும் திருவாய்மொழி முத
லான திவ்யப்ரபந்தங்களை திவ்யகாநத்திலே யடைத்தோம், நாட்டார்
இதின்வைபவமறியார்கள், இதனை நாம அறிவிக்கவேணுமென்று திரு
வுள்ளம்பற்றி ராஜகோஷ்டியேற வெழுந்தருள, ராஜாவும் எழுந்
திருந்து தண்டன்ஸமர்ப்பித்து ஆஸநமிட எழுந்தருளியிருந்து ஆசீர்வ
திக்க, ராஜாவும் அத்யாதரத்துடனே இவள் பாடுகிற தேவகாநம
தேவரீர் அறிவீரோவென்று கேட்க; இவரும் மநுஷ்யகாநம் பாடுகிற
வளையும் தேவகாநம் பாடுகிறவளையும் பாடச்சொல்லிக் கேட்டருளி,
ராஜாவைக்குறித்து, இவள்பாடுகிற மநுஷ்யகாநம் உங்களுக்குத்
தெரியும், இவள்பாடுகிற தேவகாநம் தேவர்களுக்குத் தெரியுமது
போக்கி உங்களுக்குத் தெரியாதென்ன, ராஜாவும் தேவரீர் அறியுமெ
ன்னுமிடம் நாங்களறியும்படி யெங்ஙனேயென்ன, நாற்பதுநூறு தாள
த்தைச் சேரவொற்றச்சொல்லி, இது இத்தனையெடை, இது இத்தனை
யெடையென்று நாதமுநிகளருளிச்செய்ய; அவற்றை ராஜாவும் தனித்
தனியே நிறுத்துச் சோதித்துப்பார்க்க, அவையெல்லாம் முந்திரை
ஏறுமல் குறையாமலிருந்தபடியைக்கண்டு மிகவும் ஆஸ்சர்யப்பட்டு,
நாதமுநிகளுடைய ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு பஹுத்ரவ்யத்தை
ஸமர்பிக்கத்தேட; இவரும், சதுர்முக பசுபதி ப்ரமுகபார்ஷித பதங்

களை நிராகரித்திருக்கும் நிஸ்ப்ருஹராகையாலே நமக்கு இவையொன்றும் வேண்டாவென்று ராஜாவை ஆசீர்வதித்து, மீண்டு வீரநாராயண புரத்தேயெழுந்தருளி, மன்னனார் திருவடிகளில் கைங்கர்யைக நிரதராய் வாழ்ந்துகொண்டிருக்குங்காலத்திலே, இவர் ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித்தவர்களாய் ([illegible]) (ஶரீரஸ்வவிஜ்ஞாந வாஸகர்மகுணைஸ்ஸஹ-குர்வர்த்தந்தாரயேத்யஸ்துஸஶிஷ்யோநேதரஸ்ஸ்ம்ருத:) என்று சொல்லப்படுகிற குணங்களையுடையாரான உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், நம்பிகருணாகரதாஸர், ஏறுதிருவுடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வானமாமலை தேவியாண்டான், உருப்பட்டூர் ஆச்சான்பிள்ளை, சோகத்தூராழ்வான் என்கிற எண்மராகத்தும. ([illegible]) (அஹோத்வயஸ்யமாஹாத்ம்யமஹோவீர்யமஹோபலம் - மந்த்ரரத்நம்த்வயம்நாம் வேதஸாரஸநாதநம்) என்கிறபடியே மந்த்ரரத்நமென்று ச்லாகித்துச் சொல்லப்படுகிற த்வயார்த்தத்தையும் ப்ரஸாதித்து, திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களையும் ஓதுவித்து, வேதசாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்து ரஹஸ்யத்ரய ஸாரார்த்தமாய் ஸகலஜகத்காரண பூதனான ஸ்ரீபுருஷ நிர்ணயத்தையும் ந்யாஸதத்வத்தையும் அருளிச்செய்து, * கரியகோலத் திருவுருவைத் தியானித்துக்கொண்டு யோகத்திலேயெழுந்தருளியிருந்தார்.

ராஜா இவருடைய வைபவத்தைக் கேட்டு அங்கேறப்போய், மன்னனாரையும் ஸேவித்து, தானும் ஸ்த்ரீகளுமாக இவர் யோகத்திலே எழுந்தருளியிருக்குமடியைக் கண்டு ஆச்சர்யப்பட்டு மீண்டுபோகிற வளவிலே, "திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே" என்கிறபடியே அவர்களை க்ருஷ்ணனும் கோபிமாருமாக நினைத்து, அவர்களப்பின்னே கங்கைகொண்டசோழபுரத்தேறவெழுந்தருளாநிற்க, இதுகேட்டு உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பனுள்ளிட்ட முதலிகளனைவரும் பின்றொடர்ந்தெழுந்தருளி, கங்கைகொண்ட சோழபுரத்தேயணுகி, தேவரீர் இப்படி செய்யலாமோவென்று விண்ணப்பஞ்செய்ய, நாதமுனிகளும் க்ருஷ்ணனும் பெண்களுமாக நினைத்து அவர்களுடனே வந்தேனென்றருளிச்செய்து மீண்டெழுந்தருளினார். சிலநாள் கழிந்தவாறே, பின்னையுமொருகால ராஜாவந்துமன்னனாரை ஸேவித்து மீண்டுபோகிறவன், தன் ஸாமந்தன் தலையிலே அடியிட்டு யானைக்கழுத்திலேற, இதை நாதமுனிகள் கண்டு, "ஸர்வேச்வரன் ப்ரஹ்மருத்ராதிகள் தலையிலே அடியிட்டு, பெரியதிருவடியைமேற்கொள்ளும்படி இதுவாகாதே! என்று மோஹித்தார்" என்று ப்ரஸித்தமிறே. பின்னையும் சிறிதுகாலம் யோகத்திலே யெழுந்தருளியிருந்து, குருகைக்காவலப்பனைப்பார்த்து, "நீர் யோகரஹஸ்யத்தை அப்யஸியும்" என்று அஷ்டாங்க யோகக்ரமத்தை அவருக்கு அருளிச்செய்தருளினார்.

உய்யக்கொண்டாரைப் பார்த்து, நீரும யோகரஹஸ்யத்தை அப்ய ஸியுமென்ன; உய்யக்கொண்டாரும், பிணமகிடக்க மணம்புணர லாமோ, இந்த சரீராவஸாநத்திலே அப்யஸிக்க வல்லமையுமென்று விண் ணப்பஞ்செய்ய, ஆகில், நீர் சாஸ்த்ரங்களையும் திருவாய்மொழி முத லான திவ்ய ப்ரபந்தங்களையும் ப்ரவர்த்திப்பியுமென் றருளிச்செய்து, தம்புத்ரராகிய ஈஶ்வரமுநிகளைப்பார்த்து,“உமக்கு ஒருகுமாரர் திருவவ தரிக்கப்போகிறார், அவருக்கு “யமுனைத்துறைவனென்று திருநாமம் சாத்தும” என்றருளிச்செய்து, உய்யக்கொண்டாரையும் குருகைக்காவ லப்பனையுங் குறித்து, உங்களுக்கு நாமசொன்ன தர்ஶநதாத்பர்யங் களையும், யோகரஹஸ்யார்த்த விசேஷங்களையும யமுனைத்துறைவருக்கு உபதேசியுங்கோளென்று நியமித்தருளி, முன்புபோலே யோகத்தி லே யெழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், அந்தராஜா ஸபரிகரனாய், வேட்டைக்குவந்து மீண்டு போகாநிற்கச்செய்தே, இவருடைய பெண்பிள்ளைகள்வந்து, ஐயா! நம் மகத்திலே ஒருத்தரநகும் இரண்டுவில்லிகளும ஒருபெண்பிள்ளையுமாக வந்து “நாதமுநிகள் எங்கே” என்று தேடிப்போனார்கள் என்றவாறே, நாதமுநிகளும், அவர்கள் (అగ్రతః ప్రయయౌ రామః సీతా మధ్యే సుమధ్యమా । పృష్ఠతస్తు ధనుష్పాణిర్లక్ష్మణో ఽనుజగామ హ) (அக்ரத꞉ ப்ரயயௌ ராம꞉ ஸீதா மத்யே ஸுமத்யமா ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிர் லக்ஷ்மணோ ஽நுஜகாம ஹ) என்றுசொ ல்லப்பட்டபெருமாளும், பிராட்டியும், இளையபெருமாளும, ஐந்த்ரவ்யாக ரணபண்டிதனுமாகவேண்டுமென்றுதிருவுள்ளம்பற்றி, பின்தொடர்ந்தெ ழுந்தருளி வருகையில், எதிர்ப்பட்டபலரையும் இப்படிபோகிறவர்களைக் கண்டீர்களோவென்றுகேட்டருள; அவர்களும “போய்ப்போகிறார்கள், போய்ப்போகிறார்கள்” என்றுசொல்ல; கடுநடையிட்டு நெடுந்தூரமெ ழுந்தருளி, கங்கைகொண்ட சோழபுரத்தில் கீழ்வாசலளவாக வெழுந் தருளி அங்குள்ளவர்களை இப்படி போகிறவர்களைக் கண்டீர்களோவெ ன்று கேட்டருள; அவர்களும கண்டிலோமென்ன; போகிறவில்லிகளும் காணக்காணமறைந்திட, இவரும் ஏங்கி அடித்துக்கொண்டு விழுந்து மோஹித்து, அதுவே ஹேதுவாக, (పరన్తు వైష్ణవం లోకం నిత్యానన్దం సుఖావహం। తత్ర సంవాహినీం దివ్యాం విరజాం వేదసమ్భవాం॥ సర్వే హిరణ్మయాస్తత్ర సర్వే వేదమయాశ్శుభాః। అప్రాకృతమయా నిత్యాః పునరావృత్తివర్జితాః) (ఏకాన్తినస్సదా బ్రహ్మ ధ్యాయినో యోగినో హి యే। తేషాం తత్పరమం స్థానం యద్వై పశ్యన్తి సూరయః) (பரந்துவைஷ்ணவம் லோகம் நித்யாநந்தம்ஸுகாவஹம் - தத்ரஸம்வாஹிநீம்திவ்யாம் விரஜாம் வேதஸம்பவாம்-ஸர்வேஹிரண்மயாஸ்தத்ரஸர்வேவேதமயாஶ்ஶுபா꞉- அப்ராக்ருதமயாநித்யா꞉ புநராவ்ருத்திவர்ஜிதா꞉) (ஏகாந்திநஸ்ஸதா ப்ர ஹ்ம த்யாயிநோயோகிநோஹியே - தேஷாம்தத்பரமம்ஸ்தாநம் யத் வைபஶ்யந்திஸூரய꞉) என்கிறபடியே, * புணைக்கொடுக்கிலும் போக வொட்டாத * அடியார் நிலாகின்ற வைகுந்த மாநகரை ப்ராபித்தருள;

இச்செய்தியை, உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், ஈஶ்வரமுநிகள் முதலானார் கேட்டு வ்யாகுலப்பட்டு அங்கேறப்போய், அவருடைய விமலசரம விக்ரஹத்தை ஸேவித்து, தங்கள் கண்ணிலும் நெஞ்சிலும் தேக்கிக்கொண்டு சோகார்த்தராய்க்கிடந்து துடித்து, தங்களிலே தேறி தரித்து நின்று, சரமகைங்கர்யத்தை, ஈஶ்வரமுநிகள் திருக்கையாலே ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரவிதியடங்கச் செய்வித்து பள்ளிபடுத்து வீரநாராயண புரத்தேற வெழுந்தருளி மற்றும் செய்யவேண்டும் கர்த்யங்களெல்லாம் செய்வித்தார்கள்; குருகைக்காவலப்பனும் நாதமுநிகள் எப்போதும் யோகத்திலே யெழுந்தருளி யிருக்குமிடத்துக்கருகே யோகத்திலே யெழுந்தருளியிருந்தார். நாதமுநிகள்திருநக்ஷத்ரம் ஆநிமாஸத்தில அநூராதை அவர்தனியன் (వ్యోమ్నః పరస్తాత్సవితుస్సమేత్య లక్ష్మ్యాదియోగాత్కురుకాధిరాజః । సంప్ర) సంప్రాప్తయోగంమహయస్మై నాథాయ తస్మై మునయే నమోస్తు) (வ்யோமநபோஸ்தாத்ஸவித்ஸமேத்ய லக்ஷ்ம்யாதியோகாத் குருகாதிராஜ: - ஸம்ப்ராப்தயோகம்மஹயஸ்மை நாதாயதஸ்மைமுநயேநமோஸ்து)

உய்யக்கொண்டார் வைபவம்

அநந்தரம் உய்யக்கொண்டாரும், நாதமுநிகள்ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்த முதலிகளையுங் கூட்டிக்கொண்டு, திருவாய்மொழி முதலான தாஸநாத்தங்களையும், அருளிச்செய்துகொண்டிருக்குங் காலத்திலே, இவர்ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயித்த முதலிகள மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணிப்பாணபெருமாளரையர், சொட்டைப்பூசிச் செண்டலங்காரர், ஸ்ரீபுண்டரீகதாஸர், உலகுபெருமாள்நங்கை யென்கிற இவ்வைவர்கள். இவர்களில் மணக்காலநம்பி, பன்னிரண்டு ஸம்வத்ஸரம் ஸ்வாசார்யரான உய்யக்கொண்டார் திருவடிகளிலே, (అహంసర్వంకరిష్యామి) (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) என்ற இளையபெருமாளைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டிருக்கையில, உய்யக்கொண்டார் தேவிகளாகிய ஆண்டாள் திருநாட்டுக்கெழுந்தருள, திருமாளிகை கைங்கர்யமெல்லாம தமக்கே பரமாய் நடத்திக்கொண்டு போகாநிற்கச் செய்தே, உய்யக்கொண்டார்பெண்பிள்ளைகளிருவரையும நீராட்டி அழைத்துக்கொண்டு வருகிற வழியிலே வாய்க்கால் சேறாயிருக்கக் கண்டு அவர்கள் திகைத்துநிற்க; தாம் படியாய்க்கிடந்து அவர்களை தம் முதுகிலே அடியிட்டெழுந்தருளுவித்துக்கொண்டு போக, உய்யக்கொண்டாரும் இச்செய்தியைக் கேட்டருளி, இவர் இப்படி செய்வதே!' என்று போர ப்ரீதராய், இவருத்தமாங்கத்தை தம் திருவடித் தாமரைகளாலே யலங்கரித்து, உமக்கு நாம் செய்யவேண்டுவ தென்னென்று கேட்டருள, நம்பியும் "உற்றேனுகந்துபணிசெய்துனபாதம்பெற்றேன்! ஈதே யின்னம் வேண்டுவதெந்தாய்" என்று தேவரீர்திருவடி[illegible] ஸேவையே வேண்டுவதென்ன; உய்யக்கொண்டாரும்உகந்து,உ[illegible] மிகுதியாலே,

దర్శనం) (అతీతానాగతజ్ఞానమాత్మతత్త్వప్రకాశకం । సర్వవేదార్థవిజ్ఞానం సర్వశాస్త్రార్థ దర్శనం)(அதீதாநாகதஜ்ஞாநமாத்மதத்வப்ரகாஶகம் - ஸர்வவேதார்த்த விஜ்ஞாநம் ஸர்வஶாஸ்த்ரார்த்ததர்ஶநம்) (మానసం వాచికం చైవ కాయికం చ త్రిధా కృతమ్। స్వయస్మరణమాత్రేణ నాశయామాస కిల్బిషం) (மாநஸம் வாசிகம் சைவ காயிகம் ச த்ரிதாக்ருதம் - ஸ்வயஸ்மரணமாத்ரேண நாஶயாமாஸ கில்பிஷம்) என்கிற வைபவத்தையுடைய த்வயத்தையே மீளவும் ப்ரஸாதித்தருளினார்.

பின்பு, உய்யக்கொண்டார் திருநாட்டுக்கு எழுந்தருளுகிறபோது, இனி தர்ஶநப்ரவர்த்தகராவாரார் என்று மணக்கால்நம்பி விண்ணப்பஞ்செய்ய, அவரும்;- இங்குள்ள முதலிகளைக் கூட்டிக்கொண்டு நீரே தர்ஶநம் நிர்வஹிக்கக்கடவீர்; பின்பு சொட்டைகுலத்திலே ஈஶ்வரமுநிகள் திருவயிற்றிலே ஸ்ரீமந்நாதமுநிகளுக்கு ஒரு திருப்பேரனார் அவதரிப்பர், அவருக்கு யமுனைத்துறைவனென்று திருநாமஞ்சாத்துவித்து, தர்ஶந ரஹஸ்யார்த்த விஶேஷங்களை உபதேசியும், அவர் தர்ஶநப்ரவர்த்தகராவர் என்று நாதமுநிகள் தம் அந்திமத்திலே அடியேனுக்கு நியமித்த இந்தக் கைங்கர்யத்தை நான் செய்யப்பெற்றிலேன், நீர் அவனை அநுவர்த்தித்தாகிலும் ரஹஸ்யார்த்தங்களையுபதேசியுமென்று நியமித்தருளி, ஸ்ரீமந்நாதமுநிகள் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு பத்மாஸநோபவிஷ்டராய் அணையிலே சாய்ந்தருளி, திருநாட்டுக்கு எழுந்தருள; மணக்கால்நம்பியுள்ளிட்ட முதலிகளெல்லாரும் மிகவும் சோகார்த்தராய், ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுக்களாய் கோஷித்துக்கொண்டு விழுந்து, போரச்சோகித்து, தங்களிலே தேறி நிற்க, நம்பியும், உய்யக்கொண்டாரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிப்படுத்து, ஞ் செய்யவேண்டும் கர்த்தவ்யங்களெல்லாஞ் செய்தருளினார்.

உய்யக்கொண்டார் திருநக்ஷத்ரம், சித்திரையில் கார்த்திகை. அவர் தனியன் (నమః పంకజనేత్రాయ నాథశ్రీపాదపంకజే । న్యస్తసర్వభరాయాస్మత్కులనాథాయ ధీమతే) (நம꞉ பங்கஜநேத்ராய நாதஶ்ரீபாதபங்கஜே - ந்யஸ்தஸர்வபராயாஸ்மத் குலநாதாய தீமதே.)

மணக்கால்நம்பிவைபவம்

அநந்தரம் மணக்கால்நம்பி, முதலிகளைக்கூட்டிக்கொண்டு தர்ஶநம் நிர்வஹித்தருளாநிற்கச்செய்தே, மணக்கால்நம்பியும், ஈஶ்வரமுநிகளுக்கு ஆடிமாஸத்தில் உத்திராடத்திலே ஒரு குமாரர் திருவவதரித்தருள, அதுகேட்டு அதிஸந்துஷ்டராய், அங்கேறவந்து, அவருக்கு (జాతకర్మణ్యవాప్తేతు విష్ణోశ్చక్రస్య ధారణం । చౌలోపనయనే చాపి తన్నాత్యయనేపివా॥ విధినా వైష్ణవశ్చక్రధారయేద్ద్విజోత్తమః) (ஜாதகர்மண்யவாப்தேது விஷ்ணோஶ்சக்ரஸ்ய தாரணம்-சௌளோபநயநே சாபி தர்மஶாஸ்த்ராத்யயநேபிவா)

(விதிநா வைஷ்ணவம்சக்ரம் தாரயித்வா த்விஜோத்தம:) என்கிறபடியே ஈஶ்வரமுனிகளைக்கொண்டு ஜாதகர்மத்தையும் செய்வித்து, *பத்துநாளும் கடந்த விரண்டாநாள், (వైష్ణవైశ్చ వసూత్రైశ్చ కుర్యాత్ సంస్కారమగ్రజః । తస్య దక్షిణే బాహుమూలే ... ॥ ... నామకుర్యాత్ తతః ...) (வைஷ்ணவஸ்ஸைவஸூத்ரைஶ்ச குர்யாத்ஸம் ஸ்காரமக்ரஜ: - தஸ்ய தக்ஷிணே பாஹுமூலே தப்தசக்ரம் த்வயம்- மூர்த்தி ஹஸ்தம்விநிக்ஷிப்ய ஜபேச்ச த்வாதஶாக்ஷரம்- நாமகுர்யாத்ததபஶ்சாத் வைஷ்ணவம் பாபநாஶநம்) என்கிறபடியே ஸ்ரீமந்நாதமுனிகள் நியமநப்ரகாரத்திலே திருவிலச்சினை முன்னாக "யமுனைத்துறைவர்" என்று திருநாமத்தையும் சாத்தி பரிதாயருளினார்.

ஆளவந்தார்வைபவம்

பின்பு ஈஶ்வரமுனிகளும், யமுனைத்துறைவருக்கு அந்நப்ராஶந சௌளோபநயநாதிகளையும் தத்தத்காலங்களிலே செய்தருளி, அத்யயநம்பண்ணுவிக்கிறகாலத்திலே, இரண்டாஞ்சந்தை சொல்லும்போது இவர், ஸஹாத்யாயிகளைப்பார்த்து ஓதினவிடத்தையே ஓதுகிறீர்களென்று அருளிச்செய்ததைக் கேட்டிருப்பார், ஓதப்போகிறொன்றால் ஓதினவிடத்தையே ஓதாநின்றாய் என்னவே, இப்படி அதிமேதாவியாயிருக்கிற இவர் அநேகோபாத்யாயர்களோடே பதக்ரமஸஹிதமாக அத்யயநம்பண்ணி திருக்கல்யாணமுஞ்செய்தருளினார்.

பின்பு, ஈஶ்வரமுனிகளும் திருநாட்டுக்கெழுந்தருள, யமுனைத்துறைவரும் அவரை பரமபதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்து செய்யவேண்டிய காரியங்களெல்லாஞ் செய்தருளினார்.

அநந்தரம் யமுனைத்துறைவரும் மஹாபாஷ்யபட்டருடனே சாஸ்த்ராப்யாஸம் பண்ணுங்காலத்திலே, அந்த ராஜ்யத்திலே ராஜபுரோஹிதனாய் பெரியவித்வானான ஆக்கியாழ்வானுக்கு, அந்ததேசத்தில் வித்வான்களெல்லாரும் கப்பங்கட்டிவருகிறபோருகையாலே, மஹாபாஷ்யபட்டாபகளிலும் கப்பங்கட்டக்கேட்டு வர, அத்தைப்பார்த்து மஹாபாஷ்யபட்டரும் முசித்துக்கிடக்க; யமுனைத்துறைவர் அவரை, நீர் இப்படிமுசித்துக்கிடக்கிறதென்னென்றுகேட்க; அவரும் இச்செய்தியை இவருக்குச்சொல்ல; அதனைக்கேட்டருளி இவரும் அந்தத் தரவைக்கிழித்துவிட, ஆக்கியாழ்வானும் இத்தைக்கேட்டு, வெறுங்கவியோ? தந்த்ரபாரகனோ! என்று கேட்டுவரவிட, யமுனைத்துறைவரும், (నవయంకవయస్తు కేవలం నవయం కేవలతన్త్ర)పారగాః । అపితు ప్రతివాదివా రణ ప్రకటాటోపవిపాటనక్షమాః) என்று இஶ்லோகத்தையருளிச்செய்து எழுதிப்போகவிட்டருள; ஆக்கியாழ்வானும் அத்தை வாசித்து, இப்படி

ஒரு வித்வானுண்டோ? என்று ஆஶ்சர்யப்பட்டு இத்தை ராஜாவுக்கறிவிக்க; ராஜாவும், யமுனைத்துறைவரை சடக்கென வருவதென்று ஸ்வஶாஸநம் வரவிட, அந்த ராஜஶாஸநத்தையுங் கிழித்துவிட, இச்செய்தியை ராஜாவும்கேட்டு, ஆகில அவர் ஸாமாந்யரல்லராயிருந்ததென்று, இவருககு தண்டிகையும் சிவிகையானையும கூட்டிவரவிட,, இவரும் அந்த தண்டிகையிலே ராஜாஸ்தாநத்தேற வெழுந்தருளி, (ఆశైలాదద్రికన్యాచరణకిసలయన్యాస ధన్యోపకణ్ఠాదారక్షోనీతసీతాముఖకమలసముల్లాసహేతోశ్చసేతోః। ఆచప్రాచ్యప్రతీచ్యక్షితిధరయుగళాదర్కచన్ద్రావతంసాన్మీమాంసాశాస్త్రయుగ్మశ్రమవిమలమనామృగ్యతాంమాదృశోऽన్యః) (ஆஶைலாதத்ரிகந்யாசரணகிஸலயந்யாஸதந்யோபகண்டாதாரக்ஷோநீதஸீதாமுககமல ஸமுல்லாஸஹேதோஶ்சஸேதோ: - ஆசப்ராசயப்ரதீச்யக்ஷிதிதரயுகளாதர்க்கசந்த்ராவதம்ஸாந்மீமாம்ஸாஶாஸ்த்ரயுக்மஶ்ரமவிமலமநாம்ருக்யதாம்மாத்ருஶோந்ய:)என்கிறஶ்லோகத்தையெழுதிப்போகவிடடருள, ஆக்கியாழ்வானும இத்தைக்கண்டுமிகவும் குபிதனாய, இவருடனே நானதர்க்கிக்கக்கடவேனென்ன; ராஜாவும் யமுனைத்துறைவரைப்பார்த்து இவருடனே தர்க்கியுமென்ன; யமுனைத்துறைவருமராஜாவைக்குறித்து, நானும்வருமதர்க்கித்தால் வெற்றியுந் தோல்வியும உங்களுககுத் தெரியாது, நாங்களிருவரும் தோற்றோமென்றுஞ்சொல்லுவதில்லை, ஆகையாலே ஜயாபஜயமறியும்படிக்கு மத்யஸ்தரான வித்வான்களை யழைப்பிக்கவேணுமென்ன; ராஜாவும் அப்படியேயாமென்று வித்வான்களை யழைப்பித்துக்கொண்டு வித்யாஸ்த்தாந மண்டபத்திலே தனமஹிஷியையுங் கூட்டிககொண்டிருக்க; ராஜமஹிஷியும், ராஜாவுடனே யமுனைத்துறைவரைககாட்டி, "இவர்தோலார், தோற்றாராகில நான நாயகனெரிததிடககடவேன" என்ன; ராஜாவும தன்மஹிஷியுடன ஆக்கியாழ்வான் தோற்றானாகில் இவர்க்கு அர்த்தராஜ்யந் தரககடவேனென்ன; அவ்வளவிலே ஆக்கியாழ்வானும யமுனைத்துறைவரைப்பார்த்து, லௌகிகங்களிலே நீர அன்றென்றத்தை நான ஆமென்னககடவேன, ஆமென்றதனை அன்றென்னக்கடவேன், வென்றவன தோற்றவன தலையிலே தாடனம்பண்ணக்கடவனென்ன; யமுனைத்துறைவரும அவனைப்பார்த்து, (త్వం నాథ వన్ధ్యా, రాజా సార్వభౌమః, రాజపత్నీ పతివ్రతా) (தவநமாதாநவந்த்யா, ராஜாஸார்வபௌம:, ராஜபத்நீ பதிவ்ரதா)என்றுஇப்படி லௌகிகத்திலே மூன்று வார்த்தை யருளிச்செய்ய; ஆக்கியாழ்வானும் நிருத்தரனாயிருந்தான்; பின்பு ஶாஸ்த்ரத்திலே புகுந்தவாறே அதிலும முழுக்கத்தோற்றான்: வென்றவன் தோற்றவன் தலையிலே தாடனம்பண்ணக்கடவனென்று முன்பே ப்ரதிஜ்ஞைபண்ணின வதுக்கு, நீ ராஜபுரோஹிதனுமாய் வயோவ்ருத்தனுமாகையாலே நான் அது செய்யேனென்று யமுனைத்துறைவ ரருளிச்செய்ய, இத்தைக்கேட்டிருந்த வித்வான்களெல்லாரும் ஸந்தோஷித்து, இவரைப்ரஹ்மரதம்பண்ணிக்கொண்டுவர, ராஜமஹிஷி

யும், "என்னை ஆளவந்தீரோ" என்று யமுனைத்துறைவனை யெடுத்தணைத்துக்கொண்டு, தன்பாத்ராவுடன் * மணிமாடமாளிகைக்குள்ளே புகுந்தாள்; ராஜாவும் இவர்க்குத் தன் அர்த்தராஜ்யமுங்கொடுத்து இவர்தேவிகளையுமழைப்பிக்க, ஆளவந்தாரும் பத்நீ ஸஹிதராய்க்கொண்டு ராஜபோகத்திலே ஸுகமே யெழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், மணக்கால்நம்பியும் இதுகேட்டு கொண்டைக்கோல் கொண்டு கூத்தாடியருளி, ஆளவந்தாரைக்காண வேணுமென்று போர ஆசைப்பட்டு அங்கேறவெழுந்தருள, அவ்விடம் ராஜபதமாய கட்டுங் காவலுமாயிருக்கையாலே ஆளவந்தாரைக் காணப்போகாமல் திருமடைப்பள்ளியிலே புகுந்து, அவர்க்குத் திருப்போனகம் சமைக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைப்பார்த்து, ஆளவந்தார் விரும்பியமுதுசெய்யும்கறியமுதேதென்று கேட்டருள, அவர்களும் தூதுவளையென்றுசொல்ல, நம்பியும் அன்றுமுதல் ஆறுமாஸம் மடைப்பள்ளிக்கு தூதுவளையிட்டு நடத்தியருளினார் இப்படி நடத்தினவிடத்தும் ஒருவிசாரமற்றிருக்கையாலே, இவரும் நாலுநாள் தவிர்ந்திருக்க, ஆளவந்தாரும் அமுதுசெய்யும்போது, "நாலுநாளாகத் தூதுவளையிடாதிருக்கையிருப்பானென்" என்று தளிகைக்கு ஸ்ரீவைஷ்ணவர்களைக்கேட்டருள, அவர்களும் ஒரு ப்ராஹ்மணர் ஆறுமாஸம் முன்னதாக நாள்தோறும் நடத்திப்போருகிறது, நாலுநாளாகத் தவிர்ந்ததென்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் கேட்டருளி, ஸம்ப்ரமப்பட்டு இனி அவர் வந்தவாறே நமக்கறிவியுங்கோளென்று அருளிச்செய்ய; மற்றைநாள் நம்பியும் இன்னம் பண்டுபோலே தூதுவளைகொண்டு எழுந்தருளினவாறே, அவர்களும் ஆளவந்தார்க்கறிவிக்க, அவரை அழையுமென்றருளப்பாடிட்டவாறே, இவரை யெழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு போய், ஆளவந்தாரைக் காண்பிக்க, ஆளவந்தாரும் இவரைக்கண்டு ப்ரத்யுத்தாநம்பண்ணித் தூரவாஸநம் ஆஸநமிட்டு, "நீர் இத்தனைநாளும் நமக்கு இந்தத்தூதுவளை கொணர்ந்து இட்டது எதுக்காக, உமக்கு அர்த்தம் வேணுமோ, க்ஷேத்ரம் வேணுமோ?" என்று மணக்கால் நம்பியைக்கேட்டருள, நம்பியும், நமக்கு இவையொன்றும்வேண்டா, உங்கள் பூர்வர்கள் தேடிவைத்த தநமிருக்கிறது, அந்தக்கிடக்கிறவிடமுமறிவேன், அதனை நீர் கைக்கொண்டருளுந்தனையும், நித்யமாக நாம் தேவரீர்பக்கல் வந்து போம்படி வாசலில் தகையாதிருக்க அப்பணியிட வேணுமென்றருளிச்செய்ய; ஆளவந்தாரும் அப்படியே வாசல்தகையாதபடி கட்டளையிட, நம்பியும் அன்றுமுதல் * கீதை பதினெட்டத்யாயமு மருளிச்செய்ய; ஆளவந்தாரும் * ஆரணசாரமான கீதையினுட்பொருள்கேட்டருளி ஒருநாளைக்கொருநாள் ஆர்த்திபிறந்து, அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்கலா முபாயமில்லையோவென்று நம்பியைக்கேட்க, நம்பியும் ஸாக்ஷாத்கரிக்கலா முபாயமுண்டென்று ஏகாந்தத்திலே யெழுந்தருளியிருந்து, * மெய்ம்மைப்பெருவார்த்தையான

சரமஸ்லோகார்த்தத்தை ப்ரஸாதித்தருள, அத்தைக்கேட்ட ஆளவந்தாருக்கு, நெல்லுக்குப் பால்கட்டகசட்டத் தலைவணங்குமாப்போலே சரணாகதி நெஞ்சிலேபடப்பட, ஆநுகூல்யம் மிருந்து, சரண்யவிஷய ப்ராவண்யாதிசயத்தாலே இஸ்ஸம்ஸாரததில் அருசிபிறந்தபடி கண்டு, அவரைக் கூட்டிககொண்டு, (ந ஜ்ஞானஸ்யாஸம் கோசம் நசைவயமகோசரம் - தஸ்மாத்ரங்கம் மஹாபுண்யம் கோநஸேவேதபுத்திமாந்) என்கிறபடியேஜ்ஞாநவர்த்தகருமாய், நமன் றமராலாராயப்பட்டறியாததுமாய், புண்யவர்த்தகருமான திருவரங்கன் திருப்பதியிலே யழைத்துக்கொண்டு போய், பெரியபெருமாளைத் திருவடி தொழப்பண்ணி, "உங்கள் பூர்வர்கள் தேடிவைத்த மஹாநிதி இதுகாணும்" என்றுகாட்ட, ஆளவந்தாரும பெரியபெருமாளுடைய * முடிவில்லதோரெழில் நீலமேனியைஸேவித்து, "பழுதே பலபகலும் போயினவென் றஞ்சி,யழுதேனரவணைமேற்கண்டு,தொழுதேன்" என்கிறபடியே கீழ் இழந்தநாளுக்குக் கூப்பிட்டு, கண்ணுங்கண்ணீருமாய அரங்கதமமானை யநுபவித்து, "பிறந்தார்பிறந்தெய்தும் பேரின்பமெல்லாந் துறந்தார்தொழுதாரத்தோள்" என்றும், (க்ஷேத்ராணி மித்ராணி தநாநிநாத புத்ராஸ்ச தாராஃபஸவோகர்ஹாணி - த்வத்பாதபத்மப்ரவணாத்மவ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா:) என்றும, (ஸர்வஸங்காந பரித்யஜ்ய) என்றும சொல்லுகிறபடியே ஸர்வஸங்கபரித்யாக பூர்வகமாக ஆஸ்ரமப்ராப்தி பண்ணியருளி, "அண்டர்கோனணியரங்க னென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்கிறபடியே வேறொருவிஷயமறியாதே (பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோऽபரமாத்மநி) என்கிறபடியே அபரமாத்மநி வைராக்யமுடையராய், பரமாத்மாஸக்தராய், பெரியபெருமாளை ஸேவித்துக்கொண்டெழுந்தருளி யிருக்கிறகாலத்திலே, பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, பெரியதிருமலைநம்பி, மாறனேரிநம்பி,திருக்கச்சிநம்பி, ஆளவந்தாராழ்வான், திருமாலையாண்டான், வானமாமலையாண்டான், தெய்வவாரியாண்டான், ஈசுவராண்டான், ஜீயராண்டான், திருக்குருகூரப்பன், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றான், தெய்வப்பெருமாள், வகுளாபரண ஸோமயாஜியார், திருக்குருகூர் தாஸர், திருமாலிருஞ்சோலை தாஸர், வடமதுரைபிறந்தான், ஆட்கொண்டி யம்மங்கி, என்று இவ்விருபது முதலிகளும் ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்தார்கள். இவர்களெல்லாரும வித்வான்களுமாய், தர்ஸநப்ரவர்த்தகருமா யிருக்கிறகாலத்திலே,மணக்கால்நம்பி ஆளவந்தாரைப்பார்த்து இன்னமொரு ரஹஸ்யவிசேஷம் குருகைககாவலப்பன் பக்கலிலே யுண்டு, அங்கேபோய்க் கேளுமென் றருளிச்செய்ய, ஆளவந்தாரும

அதுவென்? தேவரீருக்கு அந்தரஹஸ்ய விசேஷ மின்றிக்கே போவா
னென்னென்ன; நம்பியும் உங்கள்திருப்பாட்டனாரான நாதமுனிகள்,
எங்களாசார்யரானஉய்யக்கொண்டாருக்குஅந்தரஹஸ்யவிசேஷத்தை
அருளிச்செய்யாததேட, அவரும் பிணங்கிடக்க மணம் புணரலாமோ?
சரீராவஸாநதசையிலே அப்பாவிக்கவமையுமென்று விண்ணப்பஞ்செய்
தார், ஆகையாலே அந்தரஹஸ்யவிசேஷம்இல்லையாய்த்தென்ன, ஆகில்
அங்கே கேட்போமென்று, கோயிலிலே ஆளவந்தார் தர்ஸநம் நிர்வ
ஹித்துக்கொண்டு, ஸ்ரீமானாய ஹர்ஷப்ரகர்ஷத்துடனே வாழ்ந்துகொ
ண்டிருந்தார்.

மணக்கால்நம்பிஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்த முதலிகள்; - ஆளவந்
தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், சிறு
ப்புள்ளூருடையபிள்ளை, வங்கிபுரத்தாச்சி என்றிவர்களிவர். இவர்க
ளுக்கு தர்ஸநார்த்தபரவிசேஷங்களை அருளிச்செய்துகொண்டு சிலகா
லம் எழுந்தருளியிருந்து, தம் அந்திமதசையிலே ஆளவந்தாரைப்பா
ர்த்து, "நாதமுனிகளாலே உபாஸமாநமுமுடையரானநீர் அவர்திருவ
டிகளைப் ப்ராப்யமும் ப்ராபகமுமென்று விச்வஸித்து,
உம்மைப்போலே ஒரு தர்ஸநப்ரவர்த்தகனையும் உண்டாக்கிக்கொ
ண்டு கோயிலைவிடாதே யிரும்" என்றருளிச்செய்து, உய்யக்கொண்
டார் திருவடிகளைத் த்யானித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருள,
ஆளவந்தாருள்ளிட்ட முதலிகளெல்லாரும் மிகவும் அவஸந்நராய்
சோகித்துத் தங்களிலே தரித்திருக்க, ஆளவந்தாரும் அவரை ப்ரஹ்ம
மேதத்தாலே ஸம்ஸ்கரித்து, செய்யவேண்டும் கார்யமெல்லாஞ் செய்
தருளினார். மணக்கால்நம்பி திருநக்ஷத்ரம் மாசியில் மகம். அவர்தனியன்
([illegible]) (அயத்நதோயாமுநமாத்மதாஸமலர்க்க
பத்ரார்ப்பணநிஷ்க்ரயேண யக்ரீதவாநாஸ்திதயௌவராஜ்யம் நமாமி
தம்ராமமேயஸத்வம்.)

ஆளவந்தார்வைபவம்.

அநந்தரம், ஆளவந்தாரும் முதலிகளும், அப்பன் யோகத்திலே
யெழுந்தருளியிருக்கும்பட்டத்தேற வெழுந்தருளி, இவரை ஸமாதிபங்கம்
பண்ணவொண்ணாதென்று, தும்முதல், இருமுதல், அடியோசைப்படுத்
துதல்செய்யாதே, மௌநத்தோடே சுவர்ப்புறத்தே பின்னே தெரி
யாதேநிற்க, அப்பனும் யோகத்திலே யெழுந்தருளியிருக்கிறவர், பின்
னேதிரும்பிப் பார்த்தருளி, இங்கேசொட்டைக்குலத்தவர்ஆரேனும்வந்
தாருண்டோவென்று கேட்டருள, ஆளவந்தாரும், "அடியேன் யமு
னைத்துறைவன் விடைகொண்டிருக்கிறேன்"என்றுஎழுந்திருக்க, [illegible]
அப்பன்ஸ்ரீபாதத்திலே ஸேவித்து, அடியோங்கள், சுவர்ப்பு[illegible]

பின்னே தெரியாதபடி நிற்க, தேவரீர் இங்ஙனருளிச் செய்கைக்கு ஹேதுவென்னென்று ஆளவந்தார்கேட்டருள அப்பன் அருளிச்செய்தபடி;- அடியேனுந் தானுமாய அநுபவியாநின்றால பெரியபிராட்டியார் திருமுலைத் தடத்தாலேநெருக்கியணைத்தாலும அவள்முகங்கூடப் பாராத ஸர்வேஶ்வரன, என்தோள்சரியைமுகந்து நாலு மூன்றுதரம் சுவர்ப்புறத்தை எட்டிப்பார்த்தான், இப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக்குலத்திலுள்ளாரானும வந்தாருண்டாகவேணுமென்று இருந்தேன்காணுமென்று அருளிச்செய்தார். ஆளவந்தாரும இதனைக்கேட்டு போரவித்தராயருளி, அடியேனுக்கு இந்த யோகரஹஸ்யக்ரமத்தை அருளிச்செய்யவேணுமென்று அப்பன ஸ்ரீபாதத்திலே தெண்டனிட்டுக்கொண்டு விழுந்துகிடக்க, அப்பனும் உகந்து, அப்படியே செய்கிறோமென்று முடிபிடித்தெடுத்து நமமுடைய சரீராவஸாநத்திலே சொல்லுகிறோம. வரும புஷ்யமாஸத்திலே, குருபுஷ்யயோகத்திலே, அபிஜின்முஹூர்த்தத்திலே, நமக்கு சரீராவஸாநமாயிருக்கும், அதுக்கு உதவ எழுந்தருளவேணுமென்று திருமுகமெழுதிக் கொடுத்தருள, ஆளவந்தாரும திருமுகத்தைக்கொண்டு கோயிலேறவெழுந்தருளினார்.

பின்பு நமபெருமாள் திருவத்யயநத் திருநாளிலே, திருவத்யயநங் கேட்டருளும்போது ஆழ்வார்திருவரங்கப் பெருமாளரையர், "கெடுமிடர்" என்கிற திருவாய்மொழியை அபிநயித்துப் பாடியருளுகிறவர் ஆளவந்தார்திருமுகமண்டலத்தைப் பார்த்தருளி, "நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கறியச்சொன்னோம்" என்று பலகாலும் பாடியருள, ஆளவந்தாரும் இதனைக்கேட்டருளி ஆழ்வாருடையதிருவாசலிலே அந்தர்ப்பூதமாம்போது திருவநந்தபுரத்து ஸேவிக்க வேண்டியிருந்தது என்று அப்போதே திருவோலக்கத்தில் நின்றும எழுந்திருந்து பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து அநுமதிகொண்டு புறப்பட்டருளி, மடத்துக்குக் காவலாகத் தெய்வவாரியாண்டானை வைத்து, திருவநந்தபுரத்துக்கெழுந்தருளி, * படமுடையரவிற்பள்ளிபயின்றவநந்தபுரத்தம்மானையும் த்வராதரமேண திருவடிதொழுது, அங்கேயெழுந்தருளி யிருந்தவளவிலே, ஸந்நிதிமுதலிகளைப்பார்த்து, குருகைக்காவலப்பன் நமக்கிட்டுத்தந்த திருமுகத்தைக் கொண்டுவாருங்கோளென்று அருளிச்செய்ய, முதலிகளுங் கொண்டுவந்து ஸமர்ப்பிக்கப் பார்த்தருளி மாஸமும் திவஸமும் அன்றாயிருந்தபடியாலே ஒரு புஷ்பகவிமானம் பெற்றிலோமே! என்று போர ஶோகார்த்தராய் மீண்டு எழுந்தருளாநிற்க; தெய்வவாரியாண்டானுக்கு ஆளவந்தாரவிஶ்லேஷம பொறாமல், திருமேனிசோஷிக்க, இங்கிருந்தமுதலிகள இவர்க்கு வைத்யர்கள் பலரையும் அழைத்து பார்ப்பித்தவிடத்தில், அவர்கள் இவர்க்கு விஷயஸ்பர்ஶையாயிருக்கும் என்ன; உமக்குள்ளவிஷயத்திலேஸ்பர்ஶையிருக்கிறதென்றுமுதலிகள்கேட்க, அவரும் அடியேனுக்கு ஆளவந்தார்விஷய

மொழியவேறொருவிஷய முண்டோவென்று அருளிச்செய்ய; ஆகில் இவரைஅங்கேறக் கொண்டுபோங்கோளென்று வைத்யர்கள் பலருஞ் சொல்ல, முதலிகளும் இவரைக் கட்டணத்திலே கொண்டுபோக, ஒருநாளைக்கொருநாள் திருமேனி வாட்டந்தீர்ந்து, நடக்கவல்லராய் வருகிறவர், திருவநந்தபுரத்துக்கு அரைக்காத வழியிலேகரைமனை யாற்றங்கரையிலே ஆளவந்தாரைஸேவித்து, அவர்ஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டுவிழுந்துகிடக்க; ஆளவந்தாரும் இவரெழுந் திருக்கமாட்டாமல் கிடக்கிறபடியைக்கண்டு, பெருமாள் ஸ்வதந்த்ரரு மாய் சூரருமாயிருக்கையாலே ஸ்ரீபரதாழ்வானை வைத்தவிடத்தேயிருந் தார், அடியேன் ஸ்வதந்த்ரனுமன்றிக்கே, சூரனுமன்றிக்கேயிருக்கை யாலேயிறே, நீர் வைத்தவிடத்திலே இராமல்வந்தது என்று அருளிச் செய்ய; இத்தைக்கேட்ட தெய்வவாரியாண்டானும், வந்துஸ்வரூபஹாநி பட்டேன் என்று மிகவும் ஸத்தை குலைந்துகிடக்க; இவர் எழுந்திராத படியைக்கண்டு, என்னை ஸ்வதந்த்ரனுமாய், சூரனுமாக்கினீரொழிய எழுந்திரீரென்று கிடக்கிறீரோவென்று ஆளவந்தார் அருளிச்செய்ய, தெய்வவாரியாண்டானும் இவ்வார்த்தையைக்கேட்டு, வந்து ஸ்வரூப ஹாநிபட்டேனாகில், இதுவுமொரு ஸ்வரூபஹாநி யாயிற்றோவெ ன்று பரபரவென்று எழுந்திருந்துநிற்க; ஸ்ரீபாதத்துமுதலிகளும், ([illegible]) (ஜலாசமதஸ்யாவிவோத்தாதௌ) என்ற இவ்வாய்பெருமாளடியிலே இவர்க்குண்டாயிற்று என்ன; ஆளவந்தாரும் இதொரு அதிகாரவிசேஷமிருந்தபடி யென்தான்! என்று போரவுகந் தருளி, மிகவும் மெலிந்தீரென்று முதுகுதடவி அதிகாபாதரசித் தராய, திருவநந்தபுரத்துத்திருக்கோபுரம் அதோதோன்றுகிறது, அங் கேபோய் * ஆயிரமைந்தலையவநந்தசயனனை ஸேவித்துவாருமென்று அருளிச்செய்ய, இவரும் எம்முடைய திருவநந்தபுரம் எதிரேவந்தது என்று ஸ்வாசார்யரான ஆளவந்தாரைக்காட்டியருள, அவரும் ([illegible]) என்றும், "வில்லார்மணிகொழிக்கும்வேங்கடப்பொற்குன்றமுதல்-செல்லார்பொ ழில்சூழ்திருப்பதிக-ளெல்லாம-மருளாமிருளோடமத்தகத்துத்தந்தா-ள ருளாலேவைத்தாரவா" என்றும், "நின்றவண்கீர்த்தியும" என்றுதொடங் கி, "உன்னிணைமலர்த்தாளென்றனக்குமது" என்றும்சொல்லுகிறபடியே விசேஷாதிகாரியான தெய்வவாரியாண்டானைக் கூட்டிக்கொண்டு, ஆள வந்தார் மீண்டு கோயிலேறவெழுந்தருளி பெரியபெருமாளையும் ஸேவி த்துக்கொண்டு, அங்கே தாமும்ஸ்ரீபாதத்துமுதலிகளுமாக விருந்து, தர்ஸநம்நிர்வஹித்தருளுகிறபோது, இனிமேல்தர்ஸநப்ரவர்த்தகராவா ரார் என்று விசாரமுண்டாய் ஒருவரையுங்காணாதே முசித்து சிந்தித் திருக்கிறகாலத்திலே:—

ஆளவந்தார்ஸ்ரீபாதத்தில் ஆஸ்ரயித்தமுதலிகளில், பெரியதிருமலை நம்பி, "வேங்கடத்தைப் பதியாகவாழ்வீர்காள்" என்கிறபடியே திருவேங்கடமுடையானை * அடிக்கீழமர்ந்துபுகுந்து ஸேவித்துக்கொண்டு எழுந்தருளியிராநிற்க; அவர் உடன்பிறந்தபெண்பிள்ளைகளாய்ஸ்ரீபூமிப்பிராட்டியாரென்றும், பெரியபிராட்டியாரென்றும் பேரையுடைய இருவரிலே, மூத்த ஸ்ரீபூமிப்பிராட்டியார், ஸ்ரீபெருமபூதூரில் ஆஸூரி கேசவப்பெருமாளென்கிற ஸர்வக்ரது தீக்ஷிதர்க்கு திருமணம்புணர்ந்தாள்; இளைய ஸ்ரீபெரியபிராட்டியார் மழலைமங்கலத்திலவட்டமணிக்குலத்திலே கமலநயனபட்டர்க்குத் திருமணம்புணர்ந்தாள். அவர்களும் தந்தாம் புக்ககங்களிலே வாழுங்காலத்திலே, (அனந்தః ప్రథమం రూపం లక్ష్మణశ్చ తతః పరం। బలభద్రస్తృతీయస్తు కలౌ కశ్చిద్భవిష్యతి) (அநந்தப்ரதமரூபம் லக்ஷ்மணஸ்சததபரம - பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌகஸ்சித் பவிஷ்யதி) என்கிற வசநத்தின்படியே திருவநந்தாழ்வான், கலியுகத்திலே அகிலாத்மோஜ்ஜீவநார்த்தமாக தம திருவவதாரத்துக்கு இடம்பார்த்து, ராமநிவாகரார்யபாதுகை சௌம்யரான கேசவஸோமயாஜியாருடைய கர்ப்பங்களை விரும்பிருப்போமே, ராமாநுஜம்வாசரா, ஸ்ரீபெரும்பூதூரிலே ஸ்ரீபூமிப்பிராட்டியார கர்ப்பத்தை பற்றி (ప్రాయేణ [illegible]) (ஸந்ந்ருஷ்டாஸ்ம்ருதிர் லுப்தாப்ராயேண இதராஸ்து - அகாரித்விப்ரமுகி ஹாவ்யதமோதாவர்த்தகேகலி,) என்கிறபடியே சவிஸாமராத்யமயனை நிற * இருள்தருமாஞாலத்திலே "கலியுகசெநிகணநிகோல்" என்கிறபடியே,*கலியிருள் நீங்கிபெரிய கிருபைபற்றி சீரியபெருள்ளம பெருதும்படி, (ధీర్లబ్ధా) (தீர்லபதத்தா) என்கிற கணக்கின்படியே சகவருஷம் தொள்ளாயிரத்து முப்பத்தொன்பது சென்ற வர்த்தமாந பிங்களஸம்வத்ஸரத்தில் ஸ்ரீமத்தான சைத்ரமாஸத்தில் சுக்லபக்ஷத்தில், பஞ்சமி குருவாரஸஹிதமான திருவாதிரை நக்ஷத்ரத்திலே கர்க்கடக லக்நத்திலே * பாரெல்லாம் உய்யும்படி ப்ராதுர்ப்பவித்தருள, ஆஸூரி கேசவப்பெருமாள் இவர்க்கு ஜாதகர்மம் செய்தருளினார்.

இச்செய்தியை திருமலைநம்பி கேட்டருளி, ஸ்ரீபெரும்பூதூரேறச் சென்று, ஸர்வக்ரது ஸோமயாஜியாரைக்கண்டு ஸத்கரித்து அவர் புத்ரனையும் * முகவொளிதிகழக் கடாக்ஷித்தருளி, இவன் ஸர்வலக்ஷணஸம்பந்நன், ஸகலஶாஸ்த்ரங்களையும் அதிசரிப்பன், ஆகையாலே, (లక్ష్మణో లక్ష్మిసంపన్నః) (லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்ந:) என்கிற இளையபெருமாள் திருநாமம் சாத்துகைக்குத் தகுதியாயிருந்தானென்று பன்னிரண்டாந்திவஸத்திலே (దక్షిణన్తు భుజం పూర్వం చక్రేణ ప్రతిపేచ్ఛిశోః। వామాంసం ప్రతిపేత్పశ్చా చ్ఛఙ్ఖేనైవ ద్విజోత్తమః) (தக்ஷிணம்துபுஜம்பூர்வம் சக்ரேணப்ரதபேச்சிஶோ: - வாமாம்ஸம்ப்ரதபேத்பஶ்சாத் ஶங்கேநைவ த்விஜோத்தம:) என்கிறபடியே இவர்க்கு நாமகரணத்திலே, திருவிலச்சினை முன்னாக இளையாழ்வார்

என்று திருநாமம்சாத்துவித்து, பின்பு, அந்நப்ராஶநசௌளோபநயநாதிகளையும் தத்தத்காலங்களிலே ஶாஸ்த்ரோக்தப்ரகாரத்திலே செய்ய, அங்கோபாங்கங்களோடே கூட பதக்ரமஸஹிதமாக வேதாத்யயநத்தையும் பண்ணி சதுர்த்தஶவித்யாபாரங்கதராய், ஷோடசகலாபூர்ணனான சந்த்ரனைப்போலே * ஷோடசகர்ம ஸம்ஸ்க்ருதராய், ஷோடசவர்ஷிகரானவாறே, ஸர்வோபகாரக்ஷமமான க்ருஹஸ்த்தாஶ்ரமத்தை அங்கீகரித்தருளி, பெருமாள்கோயிலுக்கருகான திருப்புட்குழியிலே யாதவப்ரகாசனென்பானொருவன் ஏகதண்டிஸந்ந்யாஸி பூர்வபக்ஷம்வாசிப்பிக்கிறானென்று கேட்டருளி, இளையாழ்வாரும் அங்கேயெழுந்தருளி, அவன்பக்கலே ஶ்ரோதாக்களோடே தாமும் ஸஹஶ்ரோதாவாய வேதாந்தம் வாசித்தருளாநிற்க, அவ்வளவிலே மழலைமங்கலத்துக் கமலநயநபட்டருக்கு ஒரு புத்ரனை அவர்பத்நி பெரியபிராட்டியாரிடத்திலே, க்ரோதநஸம்வத்ஸரத்திலே தைமாஸமும் பௌர்ணமியும் ஸோமவாரமும் கூடின புநர்பூசநக்ஷத்ரத்திலே அவதரிக்கத்தருள, ஜாதகர்மாநந்தரம், திருமலைநம்பியுமங்கேற வெழுந்தருளி, கமலநயநபட்டரையுங்கண்டு ஸத்கரித்து, பெரியபிராட்டியாரையும் தம தாமரைக்கண்களாலே நோக்கி, இவன் ஸதாசார்ய [illegible] யுடையனாய், ஸர்வவித்யைகளையும் அதிகரித்துவைதிகபக்ஷபாதியும் என்று திருவுள்ளமுகந்தருளி, கமலநயநபட்டரை நோக்கி "கோவிந்தன்" என்று திருநாமம் சாத்துவித்தருளினார். இவரும் சௌளோபநயநாதி ஸம்ஸ்கார விசிஷ்டராய் க்ருஹஸ்தாஶ்ரமத்தைப்ராபித்தருளி, ஸர்வஶாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, [illegible] யாதவப்ரகாசனிடத்திலே இளையாழ்வார் வாசிக்கிறதைக் கேட்டு, போர ஆசைப்பட்டு அங்கே வந்து, தாமும் வேதாந்தம் வாசிக்கச்செல்லாநின்றார். யாதவப்ரகாசனும், (𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮) (ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம) என்கிற ஶ்ருதிவாக்யத்துக்கு கண்டத்வமுண்டத்வபூர்ணஶ்ருங்கத்வங்கள் ஒரு கோவ்யக்தியிலே சடிக்குமாபோலே பரப்ரஹ்மத்துக்கு இந்த விஶேஷணம் கூடுமென்று அபார்த்தப்ரதிபாதநம்பண்ண, இளையாழ்வார் அத்தை நிஷேதித்து, ஸத்ய பதத்தாலே - க்ஷணிகவ்யாவ்ருத்தியையும், ஜ்ஞாந பதத்தாலே - அசித்வ்யாவ்ருத்தியையும், அநந்த பதத்தாலே - பரிச்சிந்நவ்யாவ்ருத்தியையும்பண்ணி, சேதநாசேதநவிலக்ஷணமாய் நித்யமாயிருக்கும் ப்ரஹ்மமென்ன; அவனும் ஹுங்காரம் பண்ணினான். பின்பு ஒருநாள் இளையாழ்வார், யாதவப்ரகாசனுக்கு அப்யஞ்ஜநத்தொழில்செய்யாநிற்க, அவ்வளவிலே (𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀) (தஸ்யயதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ) என்கிற

---

*. ஷோடசகர்மங்களாவன - கர்ப்பாதாநம், பும்ஸவநம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அந்நப்ராசநம், சௌளம், உபநயநம், உபாகர்மம், உத்ஸர்ஜநத்தோடுகூடின ப்ராஜாபத்யம், ஸௌம்யம், ஆக்நேயம், வைச்வதேவம், வ்ரதம். [illegible], உத்வாஹம், க்ருஹப்ரவேசம்.

ஶ்ருதிக்கு அவன் அநுசிதார்த்தஞ்சொல்ல, அதுகேட்டு இவர்க்குசோக முண்டாய் அந்தசோகாஶ்ரு அவன தொடையிலேவிழ, அது நெருப்புப் பட்டாப்போலே அவன தொடையைச்சுட, அவனும்பதறி, இவர்முகத்தை ப்பார்த்து, உமக்கு துக்கமாவானென்னென்ன; இவரும ([illegible]). (ஸம்பதிதிகபி;) என்று-ஸூர்யனும், ([illegible]) (ஆஸஉபவேஶநே) என்று உபவேஶநம் ஆஶ்ரயமாய, ஸூர்யாஶ்ரயத்தையுடைத்தானகம லம்போலேஎன்றுஇத்யாதியோஜநையிருக்க, அயதார்த்தஞ்சொன்னவாறே துக்கமாயிற்றென்ன; யாதவப்ரகாசனும அதைககேட்டு குபிதனாய, நான் சொன்னபடிகேட்கில் வாசித்திரும, இல்லாவிடில் விட்டுப்போமென்ன, இவரும் அப்படியேசிர்ச்சைகலங்கித்தவிர்ந்திருக்க, அவனும ஏகாந்தத்தி லே, தன்னுடையசிஷ்யர்களில அநுகூலரை அழைத்து, நீங்கள் நானசொ ன்ன அர்த்தத்தை ஸமமதித்திருக்க, இளையாழ்வான ஒருவனுமே எதிர்த தட்டாக வாதியாநின்றான், இவனாலே நமமுடைய அத்வைதரீதி சிறுகும், இவன்முடியும்விரகு என்னென்றுகேட்க, அவர்களும் பலபடி படும்வகைசொல்ல, அவனும் அவ்வோவகைகளுக்குப் பழிபாவங்க ளுண்டாம், அவைவாராமல நினைத்தபடி கூடுகைக்கு, மணிகர்ணிகை யிலேம்ருத்யுண்டாக்குகையே என்னவாயிலுள்ளதென்ன, அழகிதெ ன்று ஸர்வரும் ஐகமத்யமபண்ணிக்கொண்டு, துர்யோதனன் தர்மபுத் ரர்விஷயத்திலே ஜதுக்ருஹத்திலே விஷஸம எண்ணினாப்போலே அந் தரங்கித்து, இளையாழ்வாரை அழைத்து, நீரில்லாவிடில எங்களுக்குஒரு சாயலாயிருக்கிறது, கோபியாமல் காநத்தை அவிச்சிந்நமாக நடத்து மென்றுநன்மையுரைத்து உளளிட்டுக்கொண்டு ஒருநாள கங்காயாத்ரை யைஉத்தேசித்துப புறப்பட்டுப்போமபோது, சிலசில இடங்களிலே இளையாழ்வாரும்கோவிந்தபட்டரும் கூட்டரவுபடாதபடிபண்ணிக்கொ ண்டு க்ஷாத்ரகோடி கணிதசிஷ்யர்கள் சுச்ருஷிக்க வழிசெல்லாநிற்க, விந்த்யப்ரதேசத்திலே ஒருபள்ளக்கரையிலே ஜலஸ்பர்ஶார்த்தமாக இளையாழ்வாரும்கோவிந்தபட்டரும கூடிநின்றவாறே, கோவிந்தபட்ட ரும் விஜநமான ஸமயமறிந்து, இவர்களுடையகங்காயாத்ராநிமித்தத்தை இளையாழ்வாருக்கு ஸூசிப்பித்து அகன்றுபோகச்சொல்லி, தாம ஒருவரேபோந்தார.

இளையாழ்வாரும் வ்யாகுலப்பட்டு அவ்வழியைவிட்டு, குறுக்கறு த்துப்போய், ஒருமரத்தடியிலே நின்றுபார்க்க, அவ்விடம் *வெம்பியெரி கானகமாய் நிர்ஜலப்ரதேசமுமாய், ஶுஷ்ககண்டகாவ்ருதமாய் "பொ ருந்தார்கைவேல்நுதிபோல் பரற்பாயமெல்லடிக்கள் குருதிசோர, விரு ம்பாதகான்விரும்பிவெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர" என்கிறபடி யே *ஊன்றுவெம்பரற்களையுடைத்தாய், தீக்ஷ்ணதாபகர ரவிகிரணங் களையுடைத்தான ([illegible]) (விந்த்யாடவீஷ்வதோயாஸு) என்றுசொல்லுகிற விந்த்யாடவியாகிற சிறந்தகாட்டிலே தனியேநின்று "ஆவாரார்துணை" என்று *பக்கம்நோக்கி "வழிதிகைத்தலமருகின்றேன்"

என்னும்படி இக்விப்ப்ரமம்பிறந்து, * மதியெல்லா முள்கலங்கி அடியிடத் திமிர்த்துக்கொண்டு திகைத்துநிற்க, ஸர்வேஶ்வரனும் (నాహమాత్మానమాశాసే మద్భక్తైస్సాధుభిర్వినా)(நாஹமாத்மாநமாஶ்வாஸே மத்பக்தைஸ்ஸாதுபிர்விநா) என்றிசுகுமவனுகையாலே, (సదారస్సర్వసులభః) (ஸதாரஸ்ஸர்வஸுலப:) என்கிறபடியே * வாளும் வில்லுங்கொண்டு இடர்கெட பத்நீஸஹிதனாய் ஒருவில்லியாய்வந்து இவர்முன்னே தோன்றிற; இவரும் அவர்களைக்கண்டு கலக்கந்தீர்ந்து, * உள்ளந்தேறி நின்று, நீங்கள், எங்கேநின்றும்வந்திகோள், எங்கேறப்போகிறீகோள் என்றுகேட்க, அவர்களும் உத்தரதேசத்தில் ஸித்தாஶ்ரமத்தில் நின்றும் வருகிறோம், ஸத்யவ்ரத க்ஷேத்ரமேறப்போகிறோமென்ன, இவரும், நாம் உங்களுடனே புண்யகோடியேறவருவாராக நினைத்திராநின்றேன் என்ன, நல்லது வாருமென்று அவர்கள் முன்னடியிட இவரும் அவர்கள்பின்னேசெல்ல, அவர்களும் ஸ்வாதீநமாக வழிநடத்த, விந்த்யமிறிகாவித்து ஸந்த்யாகாலமானவளவிலே, காலோசித கர்மாநுஷ்ட்டாநங்களையுஞ் செய்து, அவர்களுடனே, ஓரிடத்தே உபவஸித்திருக்க * வல்லிரவாய் * நள்ளிரவானவாறே * கண்புதையமூடி ஒருராஜவ்ருக்ஷத்தடியிலேயிருந்தார்கள்; அப்போது வ்யாதபத்நியும், நல்லதண்ணீர்மடுக்க ஆசைபபட, வ்யாதபுருஷனும் விடிவேளை ஸமீபத்தில்பாநார்ஹமான, கிணற்றிலே, மதுரநிர்மல ஶீதளகந்தயுத பாநீயம் காட்டுகிறேனென்ன, இளையாழ்வாரும அதுகேட்டு, ஐயோ? பரமோபகாரிகளான இவர்களை லப்த்தமநோரதராக்குகைக்கு, இது நமக்கு அநபிஜ்ஞதேசமாய்விட்டதே! என்று நிர்விண்ணராயிருக்க; * கனவிருளகன்று * கீழ்வானமவெள்ளென்ற வாறே * கொழுமலரணவிக்கூர்ந்து குணதிசை மாருதம் வீச, * அரியென்றபேரரவங்கேட்டு எழுந்திருந்து, சடக்கென காலீநகர்மத்தைச்செயது, வழிநடத்துமவர்களைத் தேடிக் காணமல், ஸர்வதோதிக்கமாக நோக்கிக கூப்பிட்டு, நாலடிதோன்றினவழியே நடந்துவர, * கதிரவன்குணதிசைச்சிகரமவந்தணையஜநபதங்கள் ஸ்பஷ்டங்களாகத் தோற்றக் கண்டு, நேற்று நின்றநிலைக்கு இப்படியுமொரு * நல்விடிவு காணப்பெற்றதே! என்று பேரா ஆஶ்சர்யயுக்தராக, அங்கே ஒரு தோப்பும் கிணறும் நாலிரண்டுபேரும் நிற்கக்கண்டு, இவரும் இது எத்தேசம, எவ்வூரென்று அவர்களைக்கேட்க; அவர்களும் இதென்ன ப்ராஹ்மணு? புண்யகோடிவிமாநம் முன்னேநிற்கத் தெரியாதோவென்ன; இவர் அதுகேட்டு ஸம்துஷ்டராய், ராவணவதம் கேட்டபிராட்டியைப்போலேயும், (దృష్టాసీతా) (த்ருஷ்டாஸீதா) என்ற வார்த்தையைக்கேட்ட பெருமாளைப்போலேயும், மதுவநத்திற் புகுந்த திருவடியைப்போலேயும், தத்க்ஷணத்திலே கர்த்தவ்யதாமூடராய், அவர்களைப் பிராட்டியும் பெருமாளுமாகநினைத்து, க்ருஷ்ணவதார ஸௌலப்யத்தை நினைத்து, "எத்திறம்" என்று மோஹித்த ஆழ்வாரைப்போலே மோஹித்துக்கிடந்தார்.

பின்பு ([illegible]) (ஶநைராஶ்வாஸிதஸ்ஸ்வயம்) என்னும்படியே, தன்னிலே வ்யாமோஹமதெளிந்தவாறே, ([illegible]) (ஹேக்ருஷ்ண ஹேயாதவ ஹேஸக) என்னும்படியே கூடத்திரிந்த அர்ஜுநனை ப்ரமிப்பித்தாற்போலே, என்னையும் * நீர்மையால் நெஞ்சம்வஞ்சித்துப்புகுந்து, * உருக்காட்டாதே யொளிப்பதே! என்று பலவகை சொல்லிப் புலம்பித் தம்மிலே தேறி, ஆநந்தநிர்ப்பரராய், பெரியராஜமார்க்கத்தாலே சென்று, வையமாளிகையேறி, "தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்பூண்ட வன்பாளன்" என்னும்படி * திருப்பொலிந்த சேவடிகளை ஸேவித்து எழுவதுதொழுவதாய், ஆநந்தாஸ்ருக்கள் பனிப்ப புளகிதகாத்ரராய் ஆநந்தித்து, அவன் அந்தர்த்தாநம்பண்ணினதின் க்ருத்தறிந்து, அச்சாலைக்கிணற்றிலே பெருமாளார திருவாராதநத்துக்கு உதவ திருமஞ்சநங் கொண்டுவந்து ஸமர்ப்பித்துப் போராநின்றார்.

அங்கே, யாதவப்ரகாசனும் சிஷ்யருமாக இவர்கள் வருமளவும் நிற்க, அவ்வளவிலே கோவிந்தபட்டர் வர, வந்தீர், இளையாழ்வார் எங்கே என்றுகேட்க, அவரை நாம் கண்டிலோமென்ன, அவனும் தன் ஸமீபவர்த்திகளைப் பார்க்கவிட, அவர்களும் தேடிப்பார்த்துக் காணாமையாலே, ஐயோ? காட்டிலே என்னாகிவந்ததோ! என்று, ஸர்வரும் துக்காகுலராய் முன்னே நடந்து போய், கங்காதீரத்தை யடைந்து கங்கையிலே மாகஸ்நாநம்பண்ணுகிற்க, ஒருநாள் கோவிந்தபட்டர், அகமர்ஷணம் பண்ணுகிறபோதிலே, ஒருலிங்கம் கையில்வந்துசேர, விஸ்மிதராய், இதென்னென்று யாதவப்ரகாசனுக்குக் காட்ட, அவனும் ப்ரீதனாய், கங்காஸ்நாநபலம் கைசேர்ந்தாற்போலே கங்காதரனே கைபுகுந்தான் என்று யாதவப்ரகாசனும் இவரிடத்தே விசேஷபரதிபத்தியுக்தனாக, எல்லாரும் லிங்கம்கைசேர்ந்ததுவே நிரூபகமாக இவர்க்கு, "உள்ளங்கைகொணர்ந்தநாயனார்" என்று பேரிட்டு அழைக்கத் தொடங்கினார்கள். யாதவப்ரகாசனும், கங்காஸ்நாநம் பண்ணி மீண்டு, ஜகந்நாதம் அஹோபிலம் வழியாக வர, உள்ளங்கைகொணர்ந்த நாயனாரும், இந்தலிங்கத்தை ஒருஉசிதஸ்தலத்திலே ப்ரதிஷ்டிப்பித்து வருகிறேனென்ன, யாதவப்ரகாசனும் அப்படியே செய்யுமென்று இவரை மார்க்கமத்யே அனுப்பிவிட்டு, பெருமாள்கோயிலேறப் போக; பின்பு உள்ளங்கைகொணர்ந்த நாயனாரும், தமஜந்மபூமியான மழலைமங்கலத்திலே சென்று, அங்குள்ள வித்வந்மஹாஜநங்களையும் திரட்டி ஸ்வகரஸ்த்த லிங்கத்தை அங்கே ப்ரதிஷ்டிப்பித்து, தத்பக்தராயிருக்கிறவளவிலே; காளஹஸ்திநாதன், இவர்இருப்புக்குவிரும்பி, நீர் நம்பக்கல் வந்திருக்கவேணுமென்று நாயனாருக்கு ஸ்வப்நங்காட்டி, தன் ஸ்த்தாநத்தார் ஸ்வப்நத்திலும் உள்ளங்கைகொணர்ந்தநாயனாரை அழைத்துக்கொண்டு வாருங்கோளென்று ப்ரேரிக்க; அப்படியே அனைத்துக் ஷேத்திலுள்ளாரும் மழலைமங்கலத்திலே வந்து, இவருக்கு பலவகை

பஹுமாநம்பண்ணி அழைத்துக்கொண்டுபோய், ஸ்த்ரநிர்வாஹத்துக்குவேண்டின இலச்சினை மோதிரமுங் கொடுத்து, இவரைத்தங்களுக்கு முக்யராக்க, இவரும் தத்பக்தியுக்தராய் அங்கேயிருந்தார்.

அநந்தரம் யாதவப்ரகாசனும், பெருமாள்கோயிலிலேவந்து, இளையாழ்வாரைக்கண்டு ஆஸ்சர்யப்பட்டு மிகவும் ஸந்தோஷித்து, விந்த்யபாததேசத்திலே உம்மைச்சேராமையாலே அந்யதாசங்கைபண்ணி, கனக்க நிர்வேதப்பட்டிருந்தோம், இவ்வளவு காணப்பெற்றதே! என்ன, இவரும் வழிதப்பி உங்களைக்காணாமல் அலைந்துபோய், வில்லிவ்யாஜேநப் போந்தவ்ருத்தாந்தத்தை ஸவிஸ்தாரமாகச்சொல்ல; அவனுங் கேட்டு இவர்நடை லோகாந்தமாயிருந்ததென்று நினைத்து ஸப்ரீதனாய் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு காலத்தை நடத்தாநிற்க:

அவ்வளவிலே, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பேரருளாளர்ஸந்நிதியினின்றும் கோயிலுக்கெழுந்தருளி, நம்பெருமாளைத் திருவடித்தொழுது, ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்துநிற்க; ஆளவந்தாரும் பெருமாள்கோயில் விசேஷங்கேட்டருள, ப்ரஸங்கிகமாக யாதவப்ரகாசனென்பானொருவனுடைய ஸபையிலே ஸ்ரீபெரும்பூதூர் இளையாழ்வாரென்றொருவர் வேதாந்தம் வாசியாநிற்க, (సత్యం జ్ఞానమనన్తం బ్రహ్మ) (ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம) என்கிற ச்ருதிவர, அவன் அதுக்கு வ்யாவ்ருத்திதோன்ற அர்த்தஞ்சொல்ல, இளையாழ்வாரும் குணயோகஞ் சொல்லலாயிருக்க வ்யாவ்ருத்திசொல்லவொண்ணாதென்ன, அவனும் ஹுங்காரம்பண்ணினான்; பின்னையுமொருநாள் இளையாழ்வார் அவனுக்கு அப்யஞ்ஜநஞ்செய்யும்போது, (తస్య యథా కప్యాసం పుణ్డరీకమేవమక్షిణీ) (தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ) என்கிறதுக்கு அவன் அபார்த்தம் சொல்லக்கேட்டு க்லேசித்தபோது கண்ணீர் அவன்தொடையிலே விழ, அது நெருப்புப்பொறிப்பட்டாற்போலே வேக, அவனும் பதறி, இவர் முகத்தைப்பார்த்து, க்லேசஹேதுவென்னென்ன, இவரும் ஸூர்யனைக் கண்டு அப்போதலர்ந்த கமலம்போலேயிருக்கும் பரமபுருஷன் திருக்கண்கள் என்று இங்ஙனே யோஜனையிருக்க, அபார்த்தங் கேட்டவாறே க்லேசமாயிற்று என்ற வ்ருத்தாந்தத்தை ஸவிஸ்தாரமாக விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாருங் கேட்டருளி, (అనన్తా ఏవాత్ర హి సమ్భవన్తి హంసన్తికాయామివ హవ్యవాహాః। అత్రైవ సన్తోయది సమ్భవన్తి తత్రైవ లాభస్సరసీరుహాణాం) (அநந்த ஏவாதாஹிஸமபவந்தி ஹம்ஸந்தீகாயாமிவ ஹவ்யவாஹா:-அத்ரைவ ஸந்தோயதிஸம்பவந்தி ததைவலாபஸ் ஸரஸீருஹாணாம்) என்கிறபடியே இந்தளத்திலே தாமரைபூத்தாற்போலே, இவ்விபூதியிலே இப்படியும் ஒருமஹாநுபாவனுண்டாகப்பெற்றதே! என்று ப்ரீதராய், அப்பொழுதே அவரைக்காணவேணுமென்னும் பேராசையோடே முதலிகளும் தாமுமாகப்புறப்பட்டு, நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து, அவரநுமதிகொண்டு பயணத்திலே திருக்கோவலூரில் எழுந்தருளி,

ஆழ்வார்கள்நாயனாரையுந் திருவடித்தொழுது, (శ్రీనామపిసర్వాసాం శ్రేష్ఠా పాపహరాహిసా। నామ్నా కాఞ్చీతిఖ్యాతా పురీపుణ్యవివర్ధనీ) (புரீணாமபிஸர்வாஸாம் ஶ்ரேஷ்ட்டாபாபஹராஹிஸா-நாம்நா காஞ்சீதிவிக்க்யாதா புரீ புண்யவிவர்த்தநீ) என்று சொல்லப்படுகிற மாஹாத்ம்யத்தையுடைத் தானபெருமாள்கோயிலேற வெழுந்தருள; திருக்கச்சிநம்பியும், ஸ்வாசார்யரான ஆளவந்தார் எழுந்தருளினார் என்றுகேட்டு அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும், வரந்தரும்பெருமாளையரும, ஸ்ரீசடகோபனும் தீர்த்தப்ரஸாதஙகள்கொண்டு அதிஸம்ப்ரமத்துடனே எதிர் கொள்ள, ஆளவந்தாரும் மிகவும் ஸந்துஷ்டராய் ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி தீர்த்தப்ரஸாதங்களை ஸ்வீகரித்தருள, திருககச்சிநமபியும் மிகவும்உகப்போடே திருவடிகளிலே அடைவுகெடவிழுந்துஸேவிக்க, ஆளவந்தாரும அதிப்ரீதியுடனே அவரை முடிபிடிததெடுத்து, ஸ்ரீகஜேந்த்ரதாஸரே! பேரருளாளர்க்கு அந்தரங்கமான திருவாலவட்டகைங்கர்யம் அவிச்சின்னமாக நடந்துவருகிறதோவென்ன, அவரும் வாய்புதைத்து, தேவரீருடைய கர்பையாலே பேரருளாளர் கொண்டருளுகிறாரென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியைக கூட்டிக் கொண்டு, அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதரான பேரருளாளரை ஸேவிப் பதாகப் புகுந்து, ப்ரதமம் பேரருளாளன்பெருந்தேவியாரைத திருவடித்தொழுது, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளாநிற்க, (ఉదక్పశ్చిమభాగస్థం వల్మీకం మహోరగేః। పూజనీయశ్చతత్రాస్తే శేషఃఫణభృతాం వరః) (உதகபஶ்சிமபாகஸ்த்தம்வல்மீகம்மஹோரகை: - பூஜநீயஶ்சதத்ராஸ்தே ஶேஷஃபணப்ர்தாம்வர:) என்று சொல்லுகிற திருப்புற்றின ஸமீபத்திலே திருவநந்தாழ்வானையும், அதுக்குககிழககாகக் கரியமாணிக்கத்தாழ்வாரையும் ஸேவித்து, ஆளவந்தாரும்முதலிகளும் எழுந்தருளியிருக்கிறவளவிலே, யாதவப்ரகாசனும் திரளுமாகப் பேரருளாளரை ஸேவித்து ப்ரதக்ஷிணம்பண்ணிக்கொண்டு வாராநிற்க, ஆளவந்தாரும், "இவர்களிலே இளையாழ்வார் ஆர்?" என்று நம்பியைக்கேட்டருள; அவரும், சிவந்து நெடுகிவளியராய், (ఆయతాశ్చసువృత్తాశ్చబాహవః) (ஆயதாஶ்சஸுவ்ர்த்தாஶ்சபாஹவ:) என்கிறபடியே ஆஜாநுபாஹுவாய நடுவேவருகிறவரென்று விண்ணப்பஞ்செய்ய; ஆளவநதாரும் ஸந்தோஷத்தாலே ப்ரஸந்ந மதுர கம்பீரநயநங்களாலே, பூயோபூயோ செவ்வரியோட அவரைப் பார்த்தருளி, "ஆம்முதல்வனிவன்" எனறு விசேஷகடாக்ஷம் பண்ணியருளி, பெருமாளைநோக்கி (యస్యప్రసాదకలయాబధిరశ్శృణోతి పఙ్గుః ప్రధావతిజవేనచవక్తిమూకః। అన్ధఃప్రపశ్యతిసుతంలభతేచవన్ధ్యా తందేవమేవవరదంశరణంగతోఽస్మి) (யஸ்யப்ரஸாதகலயாபதிரஶ்ஶ்ர்ணோதி பங்குஃப்ரதாவதிஜவேநச வக்திமூக:-அந்தஃப்ரபஶ்யதிஸுதம் லபதேசவந்த்யா தம்தேவமேவவரதம்ஶரணம்கதோஸ்மி)என்றும், "தாம்வேண்டுங்காமமேகாட்டுங்கடிது" என்றும் - அவ்வவருடைய இஷ்டகாம்யங்களைத் தந்தருளுகிறவராகையாலே, அடியேனுக்கும் இளையாழ்வாராகிற மஹாநுபாவன், நம் தர்ஶந

ப்ரவர்த்தகராம்படி விசேஷகடாக்ஷஞ்செய்தருளவேணுமென்று தேவ
ரீரைச் சரணம்புகுந்தேனென்று விண்ணப்பஞ்செய்து, பின்பு ஹஸ்தி
கிரியின்மேலே யெழுந்தருளி, பேரருளாளரையும் ஸேவித்து, தீர்த்த
ப்ரஸாதமும்ஸ்வீகரித்தருளி, திருக்கச்சிநம்பியையும்நியுத்தி, அப்போது
இவர்க்கொரு நல்வார்த்தைசொல்ல அவஸரம்காணாமையாலே, மீண்டு
முதலிகளும் தாமுமாகக் கோயிலுக்கெழுந்தருளினார்.

அநந்தரம், யாதவப்ரகாசனும் தம்பக்கல் ஶ்ரோதாக்களுடன்
வேதாந்தவ்யாக்யாநம் பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே, அந்தராஜ்ய
த்தில் ராஜாவின்பெண்பிள்ளையை ப்ரஹ்மராக்ஷஸ்ஸுபிடிக்க, இத்தை
பரிஹரிக்கத்தக்க மந்த்ரவாதிகளுண்டோவென்றுஆராய, யாதவப்ரகா
சன் பெரிய மந்த்ரவாதியாயிருக்குமென்று சிலர்சொல்லக்கேட்டு, ராஜா
வும் அவனுக்கு இச்செய்தியை அறிவியுங்கோளென்று ஆள்போகவிட,
ராஜமநுஷ்யர் வந்து, ராஜாவின்பெண்பிள்ளையை ப்ரஹ்மராக்ஷஸ்ஸு
பிடித்ததென்றுராஜா உமக்குஅறிவிக்கச்சொன்னானென்றுசொல்ல; இவ
னும், யாதவப்ரகாசன் உன்னைப் போகச்சொன்னானென்றுப்ரஹ்மராக்ஷ
ஸ்ஸுக்குச்சொல்லுங்கோளென்று வந்தவர்களுடனே சொல்லிப்போக
விட, அவர்களும் போய், யாதவப்ரகாசன் உன்னைப் போகச்சொன்னா
னென்று சொன்னவாறே, அவனும் உன்னை அங்குநின்றும் போகச்சொன்
னேனென்றுசொல்லுங்கோளென்று அந்தப்ரஹ்மராக்ஷஸ்ஸுசொல்ல,
ராஜமநுஷ்யர் இச்செய்தியை யாதவப்ரகாசனுக்கறிவிக்க, அவனும்
மிகவும் குபிதனாய், தானும் திரளுமாகப்போய், ராஜகோஷ்டியிலே
மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு, ப்ரஹ்மராக்ஷஸ்ஸின் அருகில்
நின்று முஷ்டிபிடிக்க, அதுவும் முடக்கினகாலைநீட்டி, அடா! யாதவ
ப்ரகாசா? நீ ஜபிக்கிறமந்த்ரம் நானறியேனோவென்று அந்தமந்த்ர
த்தையுஞ்சொல்லி, நான் இந்த மந்த்ரத்துக்கும்உனக்கும்போவேனோ,
நீ உன்ஜந்மமுமறியாய், என்ஜந்மமுமறியாயென்ன; யாதவப்ரகாசனும்,
ஆகில்? நீ பிராணுமாய்ஸர்வஜ்ஞனுமாயிருந்தாய், என்னுடைய ஜந்ம
மேது, உன்னுடைய ஜந்மமேதென்றுகேட்க; அதுவும், உன்னுடைய
ஜந்மம் மதுராந்தகத்து ஏரிகரையிலேயிருப்பதொருபுற்றிலே ஒருஉடு
ம்பாயிருப்புதி, கோயில்ஸ்ரீவைஷ்ணவர்கள், திருமலைக்கெழுந்தருளும்
போது அங்கே நீராடி அமுதுசெய்கிறவிடத்திலே சிந்தினப்ரஸாதத்
தையும் தீர்த்தத்தையும் ஸ்வீகரித்தாய், அத்தாலேஉனக்குஇந்தவித்வஜ்
ஜந்மம் உண்டாய்த்து; நான் ப்ராஹ்மணவர்ணத்திலேபிறந்து, யாகம்
பண்ண அதிலே மந்த்ரலோப க்ரியாலோபங்கள் பிறந்து, அத்தாலே
ப்ரஹ்மராக்ஷஸ்ஸானேனென்றுசொல்ல; ஆகில்! நீ யாருக்குப் போவுதி
யென்ன, ரக்ஷஸ்ஸும், அவன்பக்கலிலே வாசிக்கிறவர்களிலே யொருவ
ராய், நித்யஸூரிகளில் தலைவரான இளையாழ்வாரைத்தண்டனிட்டு
இவர்போகச்சொன்னாராகில் போகிறேனென்ன; ஆகில்; இளையா

நீர்இத்தைப்போகச்சொல்லுமென்ன, இவரும் நீ இவளைவிட்டுப்போ வென்ன; அதுவும உம்முடைய திருவடித்தாமரைகளை என்தலைமேலே வைத்தாலொழியப்போகேன் என்ன; இவரும் உகந்து அப்படியேசெய் தருள; அதுவும் ஸந்துஷ்டமாய்ச் சிரித்துக் கும்பிட்டுஎழுந்திருந்து; போகிறேனென்ன, இளையாழ்வாரும, ஆகில், நீபோகிறதற்கு அடையா ளங்காட்டிப்போவென்ன, அதுவும், இவ்வரசிலே நானிருப்பேன், இப் போது இவ்வரசை முறித்துக்கொண்டுபோகிறேனென்றுசொல்லிஅவ்வ ரசை முறித்துக்கொண்டுபோய்த்து, யாதவப்ரகாசனும இளையாழ்வாரை மிகவும் ஶ்லாகித்து மீண்டு தன்னுடைய மடமேவந்துபுகுந்தான்.

அநந்தரம், ஆளவந்தார் கோயிலிலே ஒருநாள் வ்யாக்யாநஸமயத்தி லே "இலிங்கத்திட்டபுராணத்திரும" என்கிற பாட்டுப்ரஸ்துதமாக, அப் போதுநமக்குப்பின்பு இத்தர்ஶநநிர்வஹிப்பாரொருவரையுங்காணப் பெற்றிலோமே! என்கிறவிசாரத்திலே இளையாழ்வார்பக்கலதிருவுள்ளமா ய், இப்போது இளையாழ்வாரை யாதவப்ரகாசனோடுஉறவறுத்து, நம்பக் கல்சேர்க்கும்விரகுண்டோவென்று அருளிச்செயது, பேரருளாளரைக் குறித்து, நம் ப்ரபத்தியை ஸபலமாக்கியருளவேணுமென்று மீளவும் ப்ரார்த்தித்தருளினார்.

பின்பு யாதவப்ரகாசனும், மீளவும ஒருநாள க்ரந்தம் நடத்தாநிற்கச் செய்தே, (సర్వం ఖల్విదం బ్రహ్మ) (నేహ నానాస్తి కించన) (ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம) (நேஹநாநாஸ்திகிஞ்சந) இத்யாதி வாக்யங்களை, அத்வைத பரமாக யோஜித்து, ஜீவப்ரஹ்மணோரைக்யம் ப்ரதிபாதிக்க, இவரும அத்தை நிராகரித்து, அவ்வாக்யங்களை விசிஷ்டாத்வைதபரமாக யோஜித்து அர் த்தஞ்சொல்ல, அவனும் அதிகுபிதனாய், இன்றுதொடங்கி என்னுடன வாசிக்கவேண்டாம், உம்முடையபுத்திக்குத்தகுதியானவிடத்தேபோய் க்ரந்தம் கேளுமென்று போகச்சொன்னான்.

இவரும் அதிப்ரீதியோடே மீண்டு, தம்திருமாளிகையிலே வந்து திருத்தாயாருக்கு இச்செய்தியைச்சொல்ல, அவரும வாரீர்பிள்ளாய! இதுவரைக்கும் நீர் படித்ததுபோதும், திருக்கச்சிநம்பி, பேரருளாள ருக்கு அந்தரங்கராயிருக்கிறார், நீர் அவரைஸேவித்து அவர் அருளிச் செய்வதைச் செய்துகொண்டிருமென்று சொல்ல, அப்படியே இளையா ழ்வாரும், திருக்கச்சிநம்பியைஸேவித்து கர்தார்த்தராய் (క్రియతామితి మాంవద) (க்ரியதாமிதிமாம்வத) என்றாற்போலே அடியேன்செய்யும் கைங்கர்யத்தை நியமித் தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும், பேரருளாளருக்குச் சாலைக்கிணற்றுத்தண்ணீர் உகப்பாயிருக் கும், திருவாராதநகாலத்துக்குஉதவும்படி முன்புபோலே ப்ரதிதிநம் ஒருகுடம் திருமஞ்சநங்கொண்டுவந்து ஸமர்ப்பியும் என்றருளிச்செ ய்ய, இளையாழ்வாரும் அப்படியே தப்பாமல் அந்தக் கைங்கர்யம் செய்துகொண்டிராநிற்க;—

அவ்வளவிலே ஆளவந்தார், திருமேனியிலே நோவுசாத்தி
யெழுந்தருளியிருக்கச்செய்தே, திருவரங்கப் பெருமாளரையரைப்
புருஷகாரமாகக்கொண்டு, திருக்கோட்டியூர்நம்பியும், பெரியநம்பியும்,
ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு அடியோங்களுக்குத் தஞ்சமா
யிருப்பதொரு அர்த்தம் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்
செய்ய, ஆளவந்தாரும் முதலிகளிருவரையும் திருவுள்ளம்பற்றி, உங்
களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் இது;-கோயிலாழ்வாரே உங்
களுக்கு உயிர்நிலை-உங்களுக்குத் தஞ்சமென்று புத்திபண்ணிப்போருங்
கோளென்றும், பெரியபெருமாள்திருவடிகளின்கீழே வீணையுங் கையு
மாய ஸேவித்திருக்கும் திருப்பாணாழ்வார் விக்ரஹத்தைப் பாதாதி
கேசாந்தமாக ஸேவித்துக்கொண்டு போருங்கோளென்றும் திருவுள்ள
மாக; திருவரங்கப்பெருமாளரையர் முதலான முதலிகள்மூவரும் அப்
படியே திருவுள்ளம்பற்றி யிருக்கிறவளவிலே, ஆளவந்தாரும், திருவர
ங்கப்பெருமாளரையர்முதலான முதலிகள் மூவரையுங்குறித்து, இத
ற்கு ப்ரமாணமாகத் திருவேங்கடமுடையானுயிர்நிலை யறிந்து
போரும் ஸ்ரீரும்பஹுத்தநம்பியையும், பேரருளாளப்பெருமாளுயிர்நி
லையறிந்து போரும் திருக்கச்சிநம்பியையும், பெரியபெருமாளுயிர்நிலை
யறிந்துபோரும் திருப்பாணாழ்வாரையும், திருப்பாணாழ்வாருயிர்நிலை
யறிந்துபோரும் திருவரங்கப்பெருமாளரையரையுங் காட்டியருளி, ஆழ்
வார்திருவரங்கப்பெருமாளரையரைப்பார்த்தருளி, நீர் பெரியபெருமாளு
யிர்நிலையறிந்துஸேவித்துப்போருகிற விக்ரஹமே அடியேனுக்கு உபா
யோபேயமென்று புத்திபண்ணிப் போருவனென்று அருளிச்செய்ய,
திருவரங்கப்பெருமாளரையரும் ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே தண்டன்
ஸமர்ப்பித்து, தேவரீர் நித்யவிபூதியிலேசென்று, பரமபதநாதனை ஸே
வித்து, * இமையாதகண்ணராயக் கொண்டிருக்கத் திருவுள்ளம்பற்றி
யருளிற்றோவென்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் அவரைக்
குறித்து, நீர் பரஸமாதிக்கு உகந்து அத்யவஸித்திருமென்று அரு
ளிச்செய்து, பின்னையும் ஆளவந்தார் இம்முதலிகள் மூவரையும் திரு
வுள்ளம்பற்றி, ஒருவன் ப்ரபந்நனானால் பகவததீநமான ஆத்மயாத்ரை
யிலும், கர்மாதீநமான தேஹயாத்ரையிலும் அந்வயமுண்டென்று
இருந்தானானால், ஆத்மஸமர்ப்பணங்குலைந்து நாஸ்திகனாய்விடும்; ஆகை
யாலே த்ரிவிதகரணத்தாலும் உபயயாத்ரையிலும் அந்வயம் இல்லை.
நாராயணனுக்கு நைரந்தர்யவேஷம்;தம்பக்கல் பேற்றுக்கு (நமঃ) என்
னுதவர்களை "வானவர்நாட்டையும் நீகண்டுகொள்" என்பதொரு ஔ
தார்யவிசேஷமுண்டு. நாரங்களுக்குநைரந்தர்யவேஷம்;"நாராயணனே
நமக்கேபறைதருவான்" என்கிறபடியே நிர்ப்பரராயிராதே, தம்பேற்
றுக்கு த்வரிக்கையும் ஸ்வரூபஹாநி; எம்பெருமானே ரக்ஷகனென்றிருக்
கையும் ஸ்வரூபஹாநி, எம்பெருமான் ரக்ஷ்யனென்றிருக்கையும்

ஸ்வரூபஹாநி; இப்படியிருந்தானாகில் அநந்யார்ஹசேஷத்வத்துக்கும், ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தத்துக்குமசேராதென்று அருளிச்செய்ய; மீளவும்இவர்கள்,ஸ்ரீபாதத்திலேதண்டனிட்டு,அடியோங்களுக்குப்பற்றும் உபாயமேதென்று கேட்க, ஆளவந்தாரும் நீங்கள் அடியேனை உபாயோபேயமென்று புத்திபண்ணிப் போருகை அடியேனுக்கு ஸ்வரூபஹாநி. "எம்பெருமானாருள்தொழுவா ரெப்பொழுது மென்மனத்தே யிருக்கின்றாரோ" என்கிறவதுவே உங்களுக்கு உபாயோபேயமென்று புத்திபண்ணிப்போருங்கோளென்று அருளிச்செய்ய; முதலிகளும் திருவுள்ளத்திலே முசித்திருக்க; ஆளவந்தாரும இவர்களைக்கண்டு நீங்கள் முசிக்கவேண்டா, உங்களுக்குத் திருமந்த்ரார்த்தம போகமண்டபம், சரமஶ்லோகார்த்தம்புஷ்பமண்டபம, மந்த்ரரத்நார்த்தம் த்யாகமண்டபம்; இதற்குப்ரமாதாக்கள் திருப்பாணாழ்வார்முதலானோர்களென்று அருளிச்செய்தார். இத்தைத் திருவரங்கப்பெருமாளரையர் திருவுள்ளம் பற்றி, தேவரீர் அவதாரம் தீர்த்தம் ப்ரஸாதித்துப்போமளவில் க்ருமிகீடாதிகளுக்கு ஓழிவுவந்தால சேதமில்லையென்று அருளிச்செய்ய, ஆளவந்தாரும் அவ்வார்த்தையைக்கேட்டு பராக்கடித்து ப்ரத்யுத்தரமருளிச்செய்யாமலிருக்க; இவ்வார்த்தையை முதலிகள் இருவரும் திருவுள்ளம்பற்றி, ஆளவந்தார்வியோகத்தில் நாம ப்ராணத்யாகம்பண்ணக்கடவோமென்று நிஶ்சயித்திருக்கிறவளவிலே,பெரியபெருமாள்திருவோலக்கத்திலேஇவ்விசேஷமபிறக்க, பெரியபெருமாளும், திருவரங்கப்பெருமாளரையர்திருக்கோட்டியூர்நம்பிபெரியநம்பிமுதலாக அருளப்பாடிட்டு, ஆளவந்தார்வியோகத்திலே நீங்கள் அவிவேகம் பண்ணினீர்களாகில் நம்மாணையென்று ஆஜ்ஞாபித்து, திருவரங்கப்பெருமாளரையர்திருக்கையிலே அவர்களைக காட்டிக்கொடுத்தருள; அவரும், முதலிகளிருவரையும் கையைப்பிடித்துக்கொண்டு, ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலேசென்று இவ்விசேஷத்தை விண்ணப்பஞ்செய்ய, அவரும் இத்தைக்கேட்டு, நம்பேற்றுக்கு ஸஹியாதவர்கள், பெரியபெருமாள் இரண்டாற்றுக்கும் நடுவே திருவாராதநங்கண்டருள ஸஹியாதவர்கள் என்றருளிச்செய்து, நமமுடைய வியோகத்தில் அவிவேகம்பண்ணினீர்களாகில், உய்யக்கொண்டார், மணக்காலநம்பி முதலான பெரியபெருமாளுகந்த முதலிகளுடைய திருவுள்ளத்தை மறுத்தவர்களாவீர்கோளென்று தம்முடைய திவ்யாஜ்ஞையையிட; இவர்களும் திருவுள்ளத்திலே நொந்திருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் பகவத்பாகவத விஷயங்களிலே தாமிடாதே, பாகவதவிஷயத்திலே பகவந்நோக்கானவனாய், பகவானை குருபரம்பராதியாகத்திருவடிவிளக்குமாப்போலே பாகவதவிஷயத்திலும் தன்ஸத்தைமாண்டு ஆசார்யவிக்ரஹத்தை அநுஸந்தித்துத் தீர்த்தங்கொண்டுபோருகையும், அவர்களுக்குத் தீர்த்தங்கொடுக்குமிடத்தில் அர்த்தகாம பரவசரன்றிக்கே தாங்களும் நேரே ஆசார்யனைநோக்கி குருபரம்பரா பூர்வகமாக த்வயத்தை அநுஸந்தித்து

கொடுக்கையும், இருவர்க்கும் உபதேசம்; ஜ்ஞாநாதிகவிஷயமு
மாய், ஸமூஹமுமாய்ச் சென்றவளவிலே, இருவரும் அர்த்தகாமபர
வசராய், ப்ராக்ருத சரீரத்திலே நோக்காய், ஸமூஹத்திற்சென்ற, முத
லிகளிருக்கத் திருவுள்ளமகன்றுமாகில், ஆசார்யனேயாகிலும இவர்
களுக்கு அதிர்க்கம உபதேசமன்று என்றருளிச்செய்ய; இம்முதலி
களும அவ்வார்த்தையைத் திருவுள்ளம்பற்றியிருக்கிறவளவிலே, ஆள
வந்தாரும முதலிகளைப்பார்த்து உங்களுக்கு சாமார்த்தம் பெரியபெரு
மாள் திருவடிகளிலே ஒருகாலுமகழ வொடிக்கவைக்கையும், ஆசா
ர்யவிஷயத்தில் பரமதத்தை மதியாமல் சாமதத்தையாக யநுஸந்
திக்கையும் [illegible] உத்தாரகமாகக் கொள்கையுமென்று அருளிச்செய்து, திரு
வரங்கப்பெருமாளரையரைத் தண்டனிட்டு, திருக்கோட்டியூர்நம்பியை
யும் பெரியநம்பியையும் அரையரையிட்டுக் காட்டிக்கொடுக்க, திருவரங்கப்
பெருமாளரையரும் அவர்களைக் கைக்கொண்டு, நீங்கள் ஆசார்யவிஸ்
லேஷத்தாலே [illegible] உங்களுக்கு தேசவிசேஷ
[illegible] பெருமை யிழப்பதுக்கொள்
ள [illegible], ஆளவந்தாரும் இதைக்கேட்டுத் திருவுள்ளமுக
ந்து, உங்களுக்குத் திருவரங்கப்பெருமாளரையருடைய விக்ரஹமே
[illegible] போருமென்று அருளிச்
செய்ய; அவர்களும் [illegible] இருக்கவளவிலே, ஆள
வந்தார் [illegible] திருமுண்டாய் நீராடி, பெரிய
பெருமாள் [illegible] திருமஞ்சனங் கண்டருளி, உடு
த்து, [illegible], சாத்தப்படியாகத், அங்குள்ள ஸ்ரீரங்கமாமறையோர்
[illegible] அரையர்கள் [illegible], [illegible] நீங்கியிருக்கிறவளவிலே;
ஆளவந்தார் [illegible] காதாஞ்ஜலிபுடராய்
[illegible], திருவரங்கப்பெருமா
ளரையரை [illegible], ஆளும சேவிக்குமடைவையொ
ழிய [illegible], திருவோலக்கமுடைய இதென்
[illegible], பெரியபெருமாள்திருமேனியில் திருமாலைநழுவி
விழ, [illegible] இருக்கிறவளவிலே, திரு
வரங்கப்பெருமாளரையர் [illegible] ஆளவந்தாருக்கு ப்ரஸா
தித்தருள; அவரும் திருவுள்ளமுகந்து நிற்க, அரையரும் உமமுடைய
[illegible]! என்ன, பெருமாளும தீர்த்தப்ரஸாதம சடகோ
பன் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, ஆளவந்தாரும், மடத்தேறச்
சென்று, திருவரங்கப்பெருமாளரையர், திருக்கோட்டியூர்நம்பி, பெரிய
நம்பி முதலான முதலிகளெல்லாரையும தீர்த்தங்கொண்டு அமுது
செய்யப்பண்ணி, தண்டனிட்டு ஸாவபராதங்களையும் பொறுத்தருள
வேணுமென்று க்ஷமைகொண்டு எழுந்திராமலிருக்க, திருவரங்கப்பெரு
மாளரையரும் "உமக்கொரு அபசாரமுண்டோ" என்று முடிபிடித்தெழு
க்க எழுந்திருந்து, பின்பு அமுதுசெய்து, இவர்களுக்குப் பூர்வம்போலே

நல்வார்த்தையருளிச்செய்துகொண்டிருக்க; அவ்வளவிலே ஆளவந்தார் திருமேனியிலே நோவுசாத்தினதென்றுகேட்டு, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பேரருளாளர்ஸந்நிதியிலேநின்றும் கோயிலேறச்சென்று, ஆளவந்தார்திருவடிகளிலே ஸேவித்திருக்க; ஆளவந்தாரும் பெருமாள்கோயில் விசேஷம்கேட்டு, இளையாழ்வார்செய்கிறதென்னென்றுகேட்டருள; அவர்களும், இப்போது இளையாழ்வார் யாதவப்ரகாசனிடத்திலே சிற்றம்பிறந்து அவனைத்துறந்து, பேரருளாளர்பக்கல் ப்ரவணராய் நில்லாநின்றார் என்று விண்ணப்பஞ்செய்ய; ஆளவந்தாருங்கேட்டருளி, உகந்து, பேரருளாளர் நம்முடைய ப்ரபத்தியைஸபலமாக்கியருளினார், என்றுபெரியப்ரீதியோடே, பேரருளாளப்பெருமாளையும் பேசவல்லராய்க்கொண்டு, ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ்செய்து, ஸ்வாமிமோநாந்தர்ப்பூதரான பெரியநம்பிதிருக்கையிலே கொடுத்து, அவரைப்பார்த்து இளையாழ்வார், இப்போது யாதவப்ரகாசனிடத்தே சேராதே, தேவப்பெருமாள்பக்கலிலே ப்ரவணராயிராநின்றாரென்று கேட்டோம், இக்காலத்தில் நீர் அங்கேறப்போய் அவரை நம்மோடே சேர்க்கவேணுமென்று நியமித்தருள, அவரும் அப்படியே சடக்கெனப்புறப்பட்டுப் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளினார்.

அநந்தரம், ஆளவந்தார் பின்னையும் திருமேனியிலே நோவு சாத்தி மிகவுந் தளர்ந்து கண்வளர்ந்தருள; அங்குள்ள முதலிகளும் பெரியபெருமாள் திருவுள்ளம் ஏதோ! என்று கலங்கி சிந்தித்திருக்கிறவளவிலே; பேரருளாளப் பெருமாளுடைய அயனங்கண்ட வைகாசித்திருநாளில் அவப்ருதத்தின்று, ஆளவந்தாரும் நீராடி பெரியபெருமாளைத் திருவடிதொழச்சென்று, உத்தமஸந்தி யமுதுசெய்து, திருத்திரை நீக்கினவளவிலே, தண்டன் ஸமர்ப்பித்து, பாதாதிகேசாந்தமாகவும், கேசாதி பாதாந்தமாகவும் பெரியபெருமாளை ஸேவித்து, திருவடிக்கீழ் திருப்பாணாழ்வாரையும் அநுபவிக்க; நம்பியார் சடகோபன் தீர்த்தம் ப்ரஸாதம் ப்ரஸாதிக்க, திருப்பதியாரும் திருத்தளிகைப்ரஸாதம் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, ஆளவந்தாரும் ஸ்ரீபாதத்து முதலிகளுடன் மடமேசென்று, மீண்டு முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்தருளப்பண்ணி, வைகாசிமாஸம், ஆறாந்தேதி, ச்ரவணநக்ஷத்ரத்தின்று, அபிஜிந்முஹூர்த்தத்திலே, முதலிகள்சேஷமும் அங்கீகரித்து, ஆழ்வார்களைச்சரணம்புகுந்து, ஆசார்யர்கள்,முதலிகள்,ஸ்த்தாநத்தார் முதலாக எல்லாரையும்அழைப்பித்து, க்ஷமைகொண்டு வேண்டிக்கொள்ள; அவர்களும் பெரியபெருமாளுக்கு ஒரு அபராதமுண்டாகிலன்றோ உமக்கு அபராதமுண்டாவதென்ன; திருவரங்கப்பெருமாளரையர்முதலான முதலிகளை அங்குள்ள முதலிகள் திருக்கையிலேகாட்டிக்கொடுத்தருளி, ஸ்த்தாநத்தாரைப்பார்த்து பெரியபெருமாளுடைய திருவாராதநம், திருமந்த்ரபுஷ்பம்காலகாலத்தி

லே நடத்திக்கொண்டுபோருங்கோள், ஆசார்யர்கள், முதலிகள், தேசாந்
தரிகள் முதலானோரை [illegible]கொண்டுபோருங்கோளென்றுகாட்
டிக்கொடுத்தருள, அவர்களும் அப்படியே ஆகிறதென்று அங்கீகரித்து,
இது புதுமையாயிருந்ததென்று எல்லாரும் விடைகொடுத்துப்போக,
அநந்தரம் மணக்கால்நம்பியை த்யானித்துக்கொண்டு, யோகத்திலே
பத்மாஸநமாக எழுந்தருளியிருந்து, அவர்திருவடிகளைத் தம்முடைய
நெஞ்சிலும், கண்ணிலும், திருமுடியிலும் ஒற்றிக்கொண்டு, அவர்திரு
வடிநிலைகளைத் தம்முன்னே வைத்துக்கொண்டு, *ப்ரஹ்மவல்லி, *ப்ருகு
வல்லி, *புருஷஸூக்தம், *ஆசசராதி, *சூழ்விசும்பணிமுகில் முதலாக
முதலிகள் சேவிக்க, திருநாம[illegible], ஸகலவாத்யங்களும்முழங்க
ஆளவந்தார் ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

ஆளவந்தாரைத்திருப்பள்ளிபடுத்தப்ரகாரம்.

திருவரங்கப்பெருமாளரையர் முதலான எல்லாரும், வேரற்றமரம்
போலே சோகித்துக்கொண்டு விழுந்துசோகிக்க, அங்குள்ளார் இவர்க
ளைத்தேற்றி, ஆளவந்தார்குமாரரான பிள்ளைக்கரசுநம்பியைக்குறித்து,
இனிமுன்பு நடக்கக்கடவ கர்மத்தைச் செய்தருளவேணுமென்ன; தாஸிகள்
திருவாசலிலே [illegible]கிட்டு, *தெற்கிலிட்டு ஸ்தலசுத்திபண்ணி, திருக்
காவண[illegible], [illegible]கட்டி, செங்கழுநீர்மாலைகட்டி,
பலபட்டிகளாலும் [illegible]ளாலும் சுசக்கட்டி யலங்கரித்து,
திருக்காவண[illegible] வாசலிலே [illegible]தாங்காற்றி, இளங்கமுகு
கரும்பு நாட்டி, [illegible], நாலுவாசலிலும் கொடியாடை
சட்டி, [illegible], [illegible]சக்ஷிண பஸ்சிமோத்தர த்வாரங்
களிலே பலாம்ர[illegible] தோரணங்களை நாற்றி யலங்
கரித்து, திரு[illegible] வ்ரீஹிசேர்ந்து பரப்பி, நடுவே
பூர்ணகும்ப[illegible] கோணங்களிலும் பூர்ணகும்பங்களைவைத்
து, கேசவாதி த்வாதச நாமோச்சாரணம்பண்ணிக்கொண்டு, த்வாதச
கலசங்களை [illegible]ஸ்தாபித்து, கலசங்களுக்கு, குச, தூர்வா,
தர்ப்ப, விஷ்ணுக்ராந்தி முதலான புஷ்பங்களையிட்டு, குருபரம்பரா
பூர்வகமாக த்வாதசநாமத்துடன, கும்பார்ச்சனைபண்ணி, த்வாதச
நாமத்தாலே கலசஸ்தாபநம் பண்ணுவித்து, பின்பு பஞ்சாம்ருதஸ்நா
நம்பண்ணுவித்து, பஞ்சபாத்ரத்திலே ஸம்ப்ரோக்ஷணகும்ப மொழிந்தநாலு
கும்பங்களையுங்கொண்டு, ஸ்ரீபுருஷஸூக்தத்தாலே திருமஞ்ஜனம் பண்
ணுவித்து, முதலிகள் தீர்த்தங்கொண்டு, சுருளமுது திருத்தி வேண்டிக்
கொண்டு, அவர்களை வலம்வந்து, வாசல்முன்னில் கோமயக்ருதஸ்த்தலத்
தின்மேலே த்ரோணவ்ரீஹிபரப்பி, உலூகலமுஸலங்களை மந்த்ரபூத[illegible]
நாநம்பண்ணுவித்து, நவவஸ்த்ரவேஷ்டநம்பண்ணி, அவ்வுலூகலத்[illegible]
ஸ்த்தண்டிலோபரிகர்த வ்ரீஹியின்மேலேவைத்து, அதிலே [illegible]

நிக்ஷேபணம்பண்ணி, சுத்தவஸ்த்ரசுக்லமாலாலங்கார்த்தைகளாய, சகரமுத்
ராமுத்ரிதைகளாய், வைஷ்ணவிகளான விஷ்ணுதாஸிகள், த்ரிவிக்ரமன
திருவீதியை வலம்வந்து, திருவாசலில் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்குத்
தண்டனிட்டு, ஸ்ரீவைஷ்ணவாநுஜ்ஞைகொண்டு நின்றவளவிலே, நவவஸ்த்ர
வேஷ்டிதமேருதைவத்யமான அமுமுளைரதைர்க்கைக்கொண்டு, த்வா
தசநாமோச்சாரணம்பண்ணி, திருச்சூர்ணமிடுக்க, திருவரங்கப்பெருமா
ளரையர் முதலானோர், ஸ்தண்டிலமத்யத்திலே, நவாண்ட ப்ரதிவ்யாகார
மாக உல்லேகநம்பண்ணி, வ்ரீஹிபரிஸ்தாபிதமாய பூமிதைவத்யமான
உல்லேகநத்தில அஷ்டதிக்குகளிலும் திவ்யசூர்ண, திவ்யதைல, திவ்யா
நுலேபந, திவ்யமால்ய, திவ்யலாஜ, திவ்யாக்ஷதை, திவ்யநதி, திவ்யசந்தந
லபூர்ணங்களாய், காப்பவித்ராச்சாதித பதரபவித்ராதிகளான ஏழுசங்க
ளைத்வயாநுஸந்தாநத்துடனே ஸ்தாபித்து, பரமாகாசதைவத்யமான சூர்
ப்பத்திலே, திவ்யாக்ஷதைதைவத்யமான நிஸ்துஷதவலாஜத்தைநிறைத்து
பூர்வதிக்கிலே வைத்து, ஸ்ரீவைஷ்ணவர்களைத் தாத்தங்கொண்டு, ஸ்ரீபா
த தீர்த்தம் நிறைந்த கும்பத்தை மேலே வைத்து, ஸ்ரீவைஷ்ணவர்களு
க்கு ஸமர்ப்பணீயமான த்ரவ்யசமிருத்திகளை அருகேவைத்து, பெருமாள
சாத்திக்களைந்து வரவிட்டருளின திருமாலை திருப்பரிவட்ட ப்ரஸாதங்
களையும் பொற்றளிகையிலே கொணர்ந்துவைத்து, ஆளவந்தாரைத்
தண்டனிட்டு, விமலசரமவிக்ரஹத்தை நெருசிலுடன் கண்ணாடியும் தேச
க்கொண்டு சூழவெழுந்தருளியிருந்து, திருப்பல்லாண்டு, கண்ணிநுண்
சிறுத்தாம்பு, சூழ்விசும்பணிமுகில், திருவரங்கப்பெருமாளரையர் இசை
யுடன் இயலாக அநுஸந்திக்க, நாநாநர்த்தகீதவாத்யங்களுடனே, திரு
வீதியிலே திருவிருத்தத்தை இயலாக அநுஸந்தித்துக்கொண்டு வலம
வந்து, மடத்துவாசலிலே இயலசாத்து, திவ்யதைல திவ்யசூர்ணங்
கள் சாத்தி, நீராட்டி, பெருமாள சாத்திக்களைந்து வரவிட்டருளின
திவ்யாநுலேபந திவ்யமால்ய திவ்யபீதாம்பரங்களையும் ஆளவந்தாருக்
குச் சாத்தி அலங்கரித்து, ஆளவந்தார திருமேனியிலே சாத்திக் களை
ந்ததாய், தத்ப்ரஸாதமாய், சேஷித்த எண்ணெய்ப்ரஸாதம், ஸ்ரீசூர்ண
ப்ரஸாதங்களெல்லாம், திருவரங்கப்பெருமாளரையர் முதலானோர்
ப்ரஸாதப்பட்டு, அப்போதையிற்றுப்பையெருசிலே ஸமாச்ரயமாகத்
தேக்கிக்கொண்டு, ஸ்ரீபாதத்திலே விழுந்து, திருவடிகளைத் திருக்கண்க
ளிலும், திருமார்புகளிலும், திருமுடிகளிலும் தரித்து, அவாப்பரபத்தியை
யநுஸந்தித்து, திருமிடற்றுத்தழுதழுப்ப, திருமேனிகளாட, திருமுத்து
திர்த்து, திருமுகக்குவெப்படிக்க, ஆசார்யவிச்லேஷாஸஹிஷ்ணுக்களாய
ஆர்த்தராய் பரவசராயக்கொண்டுசோகிக்க, அங்குள்ள முதலிகள் வந்து
இவர்கள் திருக்கண்களைத் துடைத்து ஆச்வஸிப்பித்துத்தேற்றத் தேறி
நின்று, மென்மையிலே மெள்ள நடையிட்டுவந்து, பீடயாநத்திலே
ஆளவந்தாரை யேறியருளப்பண்ணி, அநுஸந்தாநத்துடனே ஸ்ரீபாதமதா
ங்கிக்கொண்டு, [திருச்சங்குபணிமாற, நர்த்தகீதவாத்யங்கள் எங்கும

முழங்க, வேதபாராயணம்பண்ண, அருளிச்செயல் இயல் நடக்க, நடை பாவாடையிட்டு, சுருமபும் குடையும் ஏந்தி, பொரியும் புஷ்பபுஞ்ஜமும் எங்கும்சிதற, திருப்பதியிலே ஸ்ரீமங்கலிகள் மங்களதீபமேந்தி முன்னேசெல்ல, இருபக்கமும் சாமரமிரட்ட, வெள்ளைவட்டமிட, "தாமரைத்திலே ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளினார்" என்று ஒருமுறைத்திருச்சின்னம்பணிமாற, திருவீதிகள்தோறும் வலம்வந்து, திருக்காம்பனத்துறையிலே யெழுந்தருளுவித்துக்கொண்டுபோய், ஸம்ஸ்கார்ஷணகும்பபூர்ணஜலங்கொண்டு ஆளவந்தாருக்குடன் திவ்யஸ்தலசுத்திபண்ணி யதிஸம்ஸ்கார விதிப்ரகாரமாயெல்லாஞ்செய்து, சுத்தப்பள்ளிபடுத்தினவளவிலே;

அங்கேபெரியநம்பி முதலானோரெல்லாரும் எழுந்தருளி, இச்செய்தியைத் திருநகரிநம்பிக்கு தெரிவிக்கச்செய்து, அவர்புருஷகாரமாகப் பேரருளாளரைவந்தித்துக்கொண்டு, அவர்முன்பே ஸ்ரீசாகரத்தை அநுஸந்தித்து, சித்தப்பிரயாசமும் [illegible], ஸந்நிதியிலேயும் புறப்பட்டு இளையாழ்வார் [illegible] சாலைக்கிணற்று வழியிலே, ஆளவந்தார் ஸ்ரீபாதத்தை அநுஸந்தித்துக்கொண்டிருக்க, ([illegible]) (பரஹ்மாஸிவப்ரஹ்மதமம் பரமவையாசிதத்வம் தத்பரஸ்யமஹிமாணம் விபருஷைஸ்தே) என்கிற ஸ்லோகத்தை இளையாழ்வார் கேட்டருளி, இது அருளிச்செய்தாரார் என்று [illegible] கேட்க, "ஆளவந்தார் திவ்யஸூக்தி" என்று பெரியநம்பி அருளிச்செய்ய, இவரும் அவரை அடியேன் ஸேவிக்க [illegible], ஆகில் நாமும் கூட வருகிறோம் வாரும் என்று [illegible], இவரும் தம்மனுஜநத்தைப் பெருமாள் திருவடியே [illegible], பெரியநம்பியை ஸேவித்து விடைகொண்டு, திருக்காஞ்சி [illegible] ஸேவித்து அவர்க்கு இச்செய்தியை விண்ணப்பஞ் செய்து, பெரியநம்பியுடனே கோயிலுக்கு ஆஸந்நமாக வெழுந்தருளி வாராநிற்க, திருக்காம்பனத்துறையிலே பெரியதிரளைக்கண்டு, "இதென்னத்து" என்று எதிரேவருகிறவர்களைக்கேட்க, அவர்களும் ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளினார் என்ன, இதனைக்கேட்டு இருவரும் ஏங்கி மோஹித்து விழுந்து சோகார்ணவநிமக்நராய்க்கிடந்து [illegible], அவ்வளவிலே இளையாழ்வாரும், ([illegible]) (பஹுதாவிலலாபஹ) என்னும்படியாமேலே பலவகையாகப்புலம்பி அஸ்தமிதாநயபாவராய் நிவாதத்தோநமுகராய் கண்பனிசோரநிற்க, பெரியநம்பியும் "வாளேறுகாணத் தேளேறுமாயுமாப்போலே தம்முடையவ்யஸநத்தைமறந்து, (శ్రేయాంసి బహువిఘ్నాని భవన్తి మహతామపి) (ஸ்ரேயாம்ஸி பஹூ விக்நாநி பவந்தி மஹதாமபி) என்கிறபடியே ஸ்ரேயஸ்ஸாக்கு அநேகவிக்நங்கள் பெரியோர்களுக்கும் உண்டாம், ஆகையாலே நீர் சோகிக்கவேண்டாவென்று இளையாழ்வாரைத்தேற்றி, அவரைக் கையைப்பிடித்துக்கொண்டுபோய், ஆளவந்தாருடைய விமலசரமவிக்ரஹத்

தை ஸேவிக்கப்பண்ண; இளையாழ்வாரும் அவரைத்தண்டனிட்டு, இது வொரு அலப்யலாபமிருந்தபடி! யென்றென்று விஸ்மிதராய், ஆபாத சூடமாக ஸேவிக்குமளவில், மூன்று திருவிரல்கள் முடங்கியிருக்க, இவரும் அதுகண்டு முன்னும் இவர்க்கு இப்படியுண்டோவென்று முத லிகளைக்கேட்க, அவர்களும் முன்பு இல்லை, இப்போது கண்டதித்தனை யென்ன; இளையாழ்வாரும் இவர்திருவுள்ளத்திலே ஏதேனும் ஒருகருத துண்டாகவேணுமென்று விசாரித்தருளி, முதலிகளைப்பார்த்து, முன்பு வ்யாக்யாநஸமயங்களிலே அபிமதமென்னலாமபடிகளைக்கேட்டிருந்தவர்களு ண்டோவென்ன, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாருங்கூடி வேறொன்று மறியோம், வ்யாஸபராசரர்பக்ஷத்திலே உபகாரஸ்மரணமும், நம்மாழ்வார் பக்கல் ப்ரேமாதிசயமும், வ்யாஸஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைதபர மாகவ்யாக்யாநவாரமேசையும்பலகாலுமஅருளிச்செய்யக் கேட்டிருக்கையா யிருக்குமென்ன; இவரும் அகவாயிலெண்ணமறிந்து, இம்மூன்றும் த்ர்டமாய், இவ்வர்த்தங்களையும் அடியேனிடத்திலே பரிபூர்ணமாய், ஸர்வேஶ்வரன் அடியேனை நினைத்தபடிகூட்டுவாறாகில், இம்மூன்றிழவு களையும் தீர்க்கக்கடவேனென்ன, உடனே திருவிரல்கள் நிமிர, இத்தை அகிலருங்கண்டு ஆஶ்சர்யப்பட்டு இவ்வர்த்தங்களையும் உம்மிடத்தி லேயுண்டு, இவருடைய திவ்யசக்தியும் உம்மிடத்திலேகூடும், நீரே இத்தர ஶநத்துக்கு நிர்வாஹகராவீரென்று ஸர்வரும் இவரையங்கீகாரம் பண்ண, இளையாழ்வாரும் "எனக்கனுள்ளனும் பெருக்கமுனும் நீங்காவே" என்கிறபடியே - அவ்விக்ரஹத்தை ஸேவித்துக் கண்ணினும் நெஞ்சிலுந்தேக்கிக்கொண்டு, நம்பெருமாள் நமக்குச் செய்தபடியென்! னென்று போரக்லேசித்து, அபர்தஸ்நாநஞ் செய்தருள, பெரியநம்பி யைத் தண்டன்ஸமர்ப்பித்து, நம்பெருமாளையும் திருவடிதொழாதே அவ ரைவெறுத்து மீண்டு பெருமாள்கோயிலேற வெழுந்தருளினார். பின்பு ஆளவந்தாரை கதித்து, திருப்பள்ளிபடுத்து, செய்யவேண்டும் கர்த்யங்க ளெல்லாஞ் செய்தருளினார்கள். (శ్రీరామమిశ్రపదాంభోజచంచరీకం [illegible] దవాప్తరాజ్యసమ్పన్నం యామునార్యమహం భజే ॥ యత్పదాంభోరుహధ్యాన విధ్వస్తాశేషకల్మషః। వస్తుతాముపయాతోఽహం యామునేయం నమామి తం ॥) (ஸ்ரீராமமிஶ்ரஸச்சிஷ்யம் வந தேதத்வார்த்தகோவிதம் - வாதாதவாபதராஜ்யாத்யோ விரக்தோயாமு நோபவத் - யத்பதாம்போருஹத்யாநவித்வஸ்தாஶேஷகல்மஷ:-வஸ்து தாமுபயாதோஹம் யாமுநேயம்நமாமிதம்) (సింహాసనాం [illegible] యోగీన్ద్ర ముక్తామణిం [illegible] నాథమునీన్ద్ర పౌత్రం । ప్రజ్ఞావిశేష [illegible] చిన్తయ యామునార్యం) (ஸிம்ஹாஸநம்ஸபவமீஶ்வரயோகிஸிந்து முக்தாம ணிம்மஹிதநாதமுநீந்த்ரபௌத்ரம் - ப்ரஜ்ஞாவிஶேஷஜலதிம்ப்ரதிவாதி தூலஜஞ்ஜாநிலம்ஹ்ர்தயசிந்தயயாமுநார்யம்)

அநந்தரம், இளையாழ்வாரும் பயணகதியிலே பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி, திருக்கச்சிநம்பிஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு இசசெய்தி

யை விண்ணப்பஞ்செய்ய, அவரும் போரக்லேசிக்க, இவரும் எண்ணின வாறாகாமையாலே அத்யந்தம் அவஸந்நராய் க்லேசிக்க, திருக்கச்சிநம்பியும், பேரருளாளர் ஸர்வஜ்ஞரும் ஸர்வஶக்தருமன்றோ, உம்முடைய நினைவின்படியே தலைக்கட்டியருளுவர், அஞ்சவேண்டாவென்று தேற்றமிட்டு, பின்பு ஆளவந்தாருக்கு ஸ்ரீஜ்ஞானபரிபாலநஞ்செய்து பெருக்கத் திருவத்யயநம் நடத்தியருளினார்.

இளையாழ்வாரும் கைங்கர்யாவலம்பியாய், பேரருளாளரை ஸேவித்து, பூர்வம்போலே திருமஞ்சநகைங்கர்யம் செய்துகொண்டிராநிற்க, பின்பு நம்பிபக்கல் இளையாழ்வாருக்குப் ப்ரேமம் முதிர்ந்துவர, நம்பிக்கும் இவர் பக்கல் காதல் பெருகிவர, நம்பியுடைய ப்ரபாவமெல்லாமறிந்து, அவர் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிக்கவேணுமென்று வந்து தண்டனஸமர்ப்பித்து, "இவ்வாத்மாவை தேவரீர் உஜ்ஜீவிப்பித்தருளவேணும்" என்ன; நம்பியும் வாரீர் இளையாழ்வாரே! பேரருளாளர், * பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி யடிமைகொண்டது கண்டு நீர் விரும்பினீர், ஆகிலும் ([illegible]) (கிமப்யத்ராபிஜாயதே யோகிநஸ்ஸர்வயோநிஷு ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்) என்கிறபடியே ஆத்மகுணத்துக்குச் சேர்ந்திருக்குமுள்ள பரமவைதிகநிஷ்டையையுடையராய்ச் ஆச்ரயிக்கநினைத்தீர், ஆகிலும் வர்ணாஶ்ரமத்துக்கடுத்த வைதிகமர்யாதைக்குப் போகாதென்று விலக்கியருளினார்.

அதிலொருநாள், இளையாழ்வாருக்குத் திருக்கச்சிநம்பியிடத்தில் ப்ரஸாதப்ரதிபத்தியாக, தத்வயப்ரத்யய நம்பியை "அடியேன்குடிசையிலே அமுதுசெய்யவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் ஸம்மதித்தருள, இளையாழ்வாரும், அதிப்ரீதியோடே தந்திருமாளிகையிலே எழுந்தருளி இதைச்செய்தியைத் தேவியாருடன் அருளிச்செய்து, தளிகைக்குப் பாங்காகப்பண்ணி நம்பிக்கு ஸம்ப்ரமமாக ஸமாராதநம் செய்யென்று நியமித்தருளி, தாமும்நீராடி நித்யகர்மாநுஷ்டாநங்களையும் செய்தருளி, திருமஞ்சநமும் சடக்கெனக்கொண்டுவந்து பேரருளாளர்க்கு ஸமர்ப்பித்து, தம்முடைய க்ருஹார்ச்சையான பேரருளாளரையும் அமுதுசெய்தருளப்பண்ணி, நம்பியையழைக்க, தெற்குத்திருவீதியாலே நம்பி மடத்தைநோக்கி மேற்கே யெழுந்தருள; அதற்குமுன்னே நம்பியும் மடத்தினின்றும் புறப்பட்டு பெருமாளையும் ஸேவித்து, மற்றொருதிருவீதியாலே இளையாழ்வார்திருமாளிகையிலே எழுந்தருளி, "திருவாலவட்டகைங்கர்யத்துக்கு உதவபோகவேணும்" என்று சடக்கென அமுதுசெய்து எழுந்தருளினார். அநந்தரம் இளையாழ்வார்தேவிகளும் அவர் அமுதுசெய்தருளின தளிகையைக் கோலாலேதள்ளி, அவ்விடத்தை கோமயத்தாலே ஸ்தலசுத்திபண்ணித் தெளித்து, தாமும் நீராடிநிற்கிறவளவிலே, இளையாழ்வாரும் மடத்தே தேடிக்காணாமல், மீண்டெழுந்தருளி தேவிகள் நீராடினபடியைக்கண்டு, இதென்னென்று

கேட்டருள, தேவிகளும் அந்த ஸ்ரீவைஷ்ணவர்எழுந்தருளி அமுது
செய்து திருவாலவட்டகைங்கர்யஞ் செய்தருளவேணுமென்று பெரு
மாளைசேவிக்க மீண்டு எழுந்தருளினார். அவர் சாத்தாதவராகையாலே
அவர் அமுதுசெய்த இலைத்தளிகைகையைச்சோலையிலேதள்ளி கோமயத்தா
லே ஸ்தலசுத்திபண்ணினேன், அதனாலே சிரமமடைப்பவேண்டிற்றெ
ன, இவரும், அவளைப்பார்த்துநீராடினதற்கும் கோபித்து நம்பி
ஷ்டம விசித்திரமாதப்படியாலே போரக்கலைத்தது, இனி நமக்குச் செய்ய
வடுப்ப தேதென்னென்று, "என்னோதானொன்றுய" என்கிறபடியே
திருவுள்ளத்திலே விசாரித்தருளி, நம்பெருமாளெழுந்தருளி நம்பி
பாட்டுசென்று, அடியேன் சிலநினைவுகளை நினைத்திருந்தேன், அவை
யெவையென்று தேவரீர் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து, அவர்
அருளிச்செய்ததனை அடியேனுக்கு அருளிச்செய்யவேணுமென்று
இளையாழ்வார் விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் அப்படியே பெரு
மாளையநுபவித்து, ஏகாந்தமானவளவிலே; நம்பி [illegible] இவ்வார்த்
தை சொல்லவானபோமேயிருந்தாயி! என்ன பெருமாளுந்திருவுள்ளமா
யருள, நம்பியும் பெருமாளிடமே:- இளையாழ்வார், சிலநினைவுகள்
நினைத்திருந்தேன், அவையெவையென்று தேவரீரைக் கேட்டுவந்து
சொல்லவேணுமென்றுமிகவும் ஆதரவாயிராநின்றார். அருளிச்
செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், ஸர்வஜ்ஞ
தாஸ்யத்தையுடையாருடைய, சகலமும் [illegible] ப்பாரொருத்
தன், நாம ஸாந்தீபனுடைய வித்யாப்யாஸம் பண்ணினாப்போலே,
பலவிடங்களிலே ஸகலசாஸ்த்ரங்களையும் அப்யஸிக்க அறிந்திருப்பா
ரொருத்தன், நம்மைக்கேட்பிக்கிறானித்தனை.- "பரத்வமும் நாமே,
பேதமேதாபரம், உபாயமும் பரமாத்வே, அந்திமஸ்ம்ருதியும் வேண்
டா, சரீராவஸாநத்திலே மோக்ஷம், பெரியநம்பியைத் திருவடிகளிலே யாச்
ரயிப்பது" என்று இவ்வாறுவார்த்தைகளையும் அருளினார் திருவுள்ள
மாயருள; நம்பியும் இவற்றைக்கேட்டுவந்து, விடிந்தவாறே இவரைய
ழைத்து, இளையாழ்வீர்! பெருமாள் திருவுள்ளம்பற்றியருளின வார்த்
தைகளைக்கேளீர் என்று அவற்றையருளிச்செய்து இவையோ உமக்கு
நினைவென்ன; ஆமென்று இளையாழ்வார் பேரப்பரிதாபர் நம்பிஸ்ரீபாத
த்திலே தண்டன்ஸமர்ப்பிக்க; நம்பியும், இவரையும் பெருமாள் திரு
வுள்ளமும் ஒன்றாயிருந்தபடியென்றென்று மிகவும் உகந்தருளினார்.

ஜீயர்திருவடிகளே சரணம்.

பெரியநம்பிகள்வைபவம்.

அக்காலத்திலே, கோயிலிலே ஆளவந்தார்ஸ்ரீபாதத்துமுதலிக
ளெல்லாருந்திரளாகவிருந்து,பெரியநம்பியுடனே இத்தர்ஶநத்துக்குக்
கடவாராரென்ன, பெரியநம்பியும் முதலிகளைக்குறித்து, ஆளவந்தார்

முன்பு நினைவிட்டு விசேஷ கடாக்ஷம் பண்ணியருளினதும், திருவிரல்கள்நிமிர்ந்தவேற்றமும உங்கள்திருவுள்ளங்களிலே நிலையிடவில்லையோ ஸர்வதா ஆளவந்தாரபிமாநம் பொய்யாகமாட்டாதென்ன; முதலிகளெல்லாருங்கூடி ஸம்மதித்து, இன்னமும், தேவரீர் எழுந்தருளி, இளையாழ்வாரை விசேஷகடாக்ஷம் செய்தருளி, தர்ஸநப்ரவர்த்தகராம்படி திருத்தி அழைத்துக்கொண்டு வரவேணுமென்று பெரியநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் அப்போதே தர்மபத்நீஸமேதமாகப் புறப்பட்டு நம்பெருமாள் ஸந்நிதியிலே சென்று ஸேவித்து விண்ணப்பஞ்செய்து அவரநுமதிகொண்டு தனியராய்ப் புறப்பட்டு, பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளாநிற்கச்செய்தே, ஸ்ரீமதுராந்தகத்திலே ஏரிகாத்தபெருமாள்கோயிலிலே அவரிருந்து [illegible] இருந்தவளவிலே, இளையாழ்வாரும் தம்முடைய பெருமாளை, திருக்கச்சிநம்பி முகேந நியமித்தருளினபடியே பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே ஆச்ரயிப்பதாகப் புறப்பட்டு, திருக்கச்சிநம்பியையும் பேரருளாளரையும் ஸேவித்து, அவர்களநுமதிகொண்டு கோயிலுக்கு எழுந்தருளாநிற்க, ஸ்ரீமதுராந்தகம் வழியாகையாலே இவரும் அங்கே எழுந்தருளி, ஏரிகாத்தபெருமாளை ஸேவிப்பதாக வெழுந்தருள, ஏரிகாத்தபெருமாள் கோயிலிலே பெரியநம்பி யெழுந்தருளியிருக்க, இளையாழ்வாரும் தூரத்திலே கண்டு, அத்யாஸ்சர்யப்பட்டு என்னுடைய பாக்யம் எதிரே வந்து வாய்த்தது, நம்பி, நமக்கெதிரே எழுந்தருளினவைபவம் *கண்டாயோ நெஞ்சே! என்று நிர்ப்பராநந்தபரவஸராய் ஓடிப்போய், பெரியநம்பி திருவடிகளிலே ஹர்ஷஸம்ப்ரமத்துடனே தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, நம்பியும் தம் அபிலாஷை அநாயாஸமாய் தானே வந்து ஸித்திக்கக் கண்டு ஆநந்த நிர்ப்பரராய், இளையாழ்வாரை வாரியெடுத்தணைத்துக்கொள்ள, இளையாழ்வாரும் அடியேனுக்கு இப்போதே தேவரீர் மந்த்ரோபதேசம் செய்தருளி ரக்ஷித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் ([illegible] [illegible] மூர்த்தநி ॥ புண்யகோடி [illegible]) (அஸ்திஹஸ்தகிரிர்நாம தத்ரஸைலவரோ மஹாந - விதாத்ராப்யர்ச்சிதோ விஷ்ணு ஸ்தஸ்யஸைலஸ்யமூர்த்தநி - புண்யகோடிவிமாநஸ்தம் விமாநம் புண்யவர்த்தநம்) என்று சொல்லப்படுகிற ஹஸ்திகிரியிலே புண்யகோடி விமாநமத்யத்திலே, ப்ரஹ்மாதி ஸகலசேதநராலும் ஸேவ்யமாநரான பேரருளாளர்ஸந்நிதியிலே செய்கிறோமென்று அருளிச்செய்ய; இளையாழ்வாரும் காலக்ஷேபம்பண்ணவொண்ணாமைக்கு ஆளவந்தார் பக்கல்கண்டது அமையாதோ, *மின்னின்நிலையிலாத அடியேனுடைய இம்ஸரீரமிருக்கிறபோதே க்ருபைபண்ணியருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்து திருவடிகளிலே விழுந்துகிடக்க, பெரியநம்பியும் முடிபிடித்தெடுத்து, இவருடைய ஆர்த்தியிருந்தபடியென்னென்று மிகவும் உகந்த திருவுள்ளத்தராய் இளையாழ்வாரைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு

போய், ஏரிகாத்தபெருமாள்கோயில் திருமகிழடியிலே எழுந்தருளியிருந்து, (మన్త్రసంస్కారసిద్ధ్యర్థం మన్త్రదీక్షావిధానతః। చక్రస్యధారణంప్రోక్తం మన్త్రైః పఞ్చాయుధానివా)(மந்த்ரஸம்ஸ்காரஸித்த்யாத்தம் மந்த்ரதீக்ஷாவிதௌததா. சக்ரஸ்யதாரணம்ப்ரோக்தம் மந்த்ரைர்பஞ்சாயுதாநிவா) என்றும், (చక్రాదిధారణం పుంసాం పరసంబన్ధవేదనమ్। పతివ్రతానిమిత్తం హి వలయాదివిభూషణమ్) (சக்ராதிதாரணம்புஂஸாம் பரஸம்பந்தவேதநம - பதிவ்ரதாநிமித்தம்ஹி வலயாதிவிபூஷணம்) என்றும் சொல்லுகிறபடியே திருவிலச்சினை ப்ரஸாதித்து, (నివేశ్యదక్షిణేస్వస్య వినీతాఞ్జలిసంయుతమ్। మూర్ధ్నిహస్తం వినిక్షిప్య దక్షిణం జ్ఞానదక్షిణః॥ సవ్యంహృదివినిస్య కృపయావీక్షయేద్గురుః। స్వాచార్యంహృదిసన్ధ్యాత్వా జప్త్వాగురుపరంపరామ్। ఏవంప్రపత్తిదేశేన మాచార్యఃకృపయాస్వయమ్। అధ్యాపయేన్మన్త్రరత్నం సర్షిచ్ఛన్దోధిదైవతమ్) (நிவேஶ்யதக்ஷிணேஸ்வஸ்ய விநீதாஞ்ஜலிஸம்யுதம் - மூர்த்நிஹஸ்தம்விநிக்ஷிப்ய தக்ஷிணம்ஜ்ஞாநதக்ஷிணம் - ஸவ்யம் துஹ்ருதிவிந்யஸ்ய க்ருபயாவீக்ஷயேதகுரு: - ஸ்வாசார்யம்ஹ்ருதயே த்யாத்வா ஜப்த்வாகுருபரம்பராம் - ஏவம்ப்ரபத்யதேசேஸ்ய யாசார்ய க்ருபயாஸ்வயம் - அத்யாபயேத்மந்த்ரரத்நம் ஸர்ஷிச்சந்தோதிதைவதம்) என்றும் சொல்லுகிற க்ரமத்திலே, பெரியநம்பியும் ஸவிநயரான இளையாழ்வாரைத் தம்முடைய வலப்புறத்திலே வைத்து, தம் திருக்கைகளாலே அவர் சிரஸ்ஸை ஸ்பர்ஶித்துக்கொண்டு, தமாசார்யரான ஆளவந்தார்திருவடிகளை ஸ்மரித்துக்கொண்டு, குருபரம்பராபூர்வகமாக மந்த்ரரத்நமான த்வயத்தை ஸாங்கோபாங்கமாக இளையாழ்வாருடைய வலத்திருச்செவியிலே உபதேசித்தருளி, "பெருமாள், நாடடுக்காக ஸ்ரீபரதாழ்வான்தலையிலே திருவடிநிலைகளைவைத்துக் காட்டுக்கெழுந்தருளினாற்போலே, ஆளவந்தாரும் உமக்காகத் தம்முடைய திருவடித்தாமரைகளை என்தலைமேலே வைத்து, திருநாட்டுக்கெழுந்தருளினாரென்றிருங்கிடீர்" என்று பெரியநம்பி இளையாழ்வாருக்கருளிச்செய்தருளினார். ஆளவந்தாருக்குக்கரணபூதரிறே பெரியநம்பி; இளையாழ்வாருக்கு நேரேஆசார்யர் யமுனைத்துறைவரேயாம். ஆகையாலேயிறே "எதிகட்கிறைவன் யமுனைத்துறைவனிணையடி யாங்கதிபெற்றுடையவிராமாநுசன்" என்று பிள்ளையமுதனார் அருளிச்செய்ததும்.

இளையாழ்வாரும், ப்ரமாணமேது, ப்ரமேயமேது, ப்ரமாதாக்களாரென்று, பெரியநம்பியைக் கேட்க; அவரும் "மாதவன்பேர்சொல்லுவதே யோத்தினசுருக்கு" என்கிறபடியே ப்ரமாணமும் த்வயமே; ப்ரமேயம், இத்தால்ப்ரதிபாத்யனாய, ஸ்ரீஹஸ்திகிரியின்மேலே கையுந்திருவாழியுமாய் நிற்கிற பெருமாளே; ப்ரமாதா, நீர்தாம்; இந்தப்ரமாணத்தாலே, ப்ரமேயத்தையநுபவிக்க வாருமென்று அருளிச்செய்தது, அதின்மற்றைநாள் அங்கிநின்றும்புறப்பட்டு ஏரிகாத்தபெருமாளைத்திருவடித்தொழுது, (స్వామో లోకరఞ్జనః) (ஸ்ராமோலோகரஞ்ஜந:) என்னுமாப்போலே தேவரீர் திருநாமத்துக்குத்தகுதியாக இத்தர்ஶநத்தையும் பிந்தடாகமாகா

தபடி செய்தருளிற்றே! யென்று மங்களாசாஸநம் பண்ணியருளி, பெருமாள் கோயிலேற வெழுந்தருள, திருக்கச்சிநம்பியும் எதிரேவந்து பெரியநம்பியை ஸேவிக்க, அவரை க்ருபைபண்ணி அவர்புருஷகாரமாக *உலகேத்துமாழியானத்தியூரானான பேரருளாளரையும் ஸேவித்து நாதமுநிகள் உய்யக்கொண்டாருக்கு அருளிச்செய்தபடியை, உய்யக்கொண்டார்நியோகாத் மணக்கால்நம்பி ஆளவந்தாருக்கு பச்சையிட்டு உபதேசித்து கோயிலிலேகொண்டுபோய பெரியபெருமாளை ஸாக்ஷாத்கரிப்பித்தாப்போலே, பெரியநம்பியும் ஆளவந்தார் நியோகாத், பலகாலநட்டு யுபதேசித்து பேரருளாளப் பெருமாளை ஸாக்ஷாத்கரித்து அநுபவிப்பித்தருளினார்.

அநந்தரம், இளையாழ்வார் திருமாளிகையிலேயெழுந்தருளி, தம் திருமாளிகையில்மேல்பாதியிலே பெரியநம்பி குடும்பஸஹிதமாக எழுந்தருளியிருக்கத்தக்க இடம் ஸமர்ப்பித்து, தளிகைக்கு வேண்டும் பதார்த்தங்களும் ஸமர்ப்பிக்க; நம்பியும் அங்கே ஆறுமாஸம் எழுந்தருளியிருந்து இளையாழ்வாருக்கு த்ராவிடவேத ப்ரபந்தங்களையும், தர்ஶந ரஹஸ்யவிசேஷங்களையும் ப்ரஸாதிக்க, இளையாழ்வாரும் ப்ரீதியுடனே *செவிக்கினியசெஞ்சொற்கேட்டு க்ருதார்த்தராயிருக்கிறகாலத்திலே, ஒருநாள் திருமஞ்சனமுறையிலே எண்ணெய்க்காப்புச் சாத்தவந்த ஸ்ரீவைஷ்ணவர், க்ஷுத்துநலிய நின்றதுஎன்றவாறே, இளையாழ்வாரும் தம்தேவிகளை யழைத்து, ஸ்ரீவைஷ்ணவர் விடாய்த்திருக்கிறார், பர்யுஷிதாந்நமில்லையோ வென்ன, தேவிகளும் அல்பமாகிலுமில்லையென்ன, இவரும் தேவிகளை ஒருகார்யத்திலே ஏவிவிட்டு உள்ளே புகுந்து சோதித்து, பாத்ரத்திலேயிருந்த ப்ரஸாதங்களையெடுத்து தேவியாரையழைத்து ஸ்ரீவைஷ்ணவரை இளைத்திருக்க இப்படிசெய்தாயே! *இடும்பையாலடர்ப்புண்டிடுவோர்க்கு ஒன்றீந்தவாகவில்லையே! என்று நெடுஞ்சொலால் மறுத்தநீசையிறே நீ யென்று கனக்கக்கோபித்துவிட்டார். பின்னையுமொருநாள் கிணற்றின்கரையிலே இளையாழ்வார் தேவிகளுக்கும், பெரியநம்பி தேவிகளுக்கும் ஒருதோண்டி வ்யாஜமாக சண்டையான வளவிலே, இதைப் பெரியநம்பி கேட்டருளி, தம்முடையதேவிகளை மிகவும் கோபித்து, இளையாழ்வாருக்கும் அறிவியாதே தேவிகளையும் அழைத்துக்கொண்டு மீண்டு கோயிலுக்கெழுந்தருளினார். இளையாழ்வாரும் அநுஷ்டானம்பண்ணி யெழுந்தருளி, பெரியநம்பியை ஸேவிக்கப்பெறாமல் திருமாளிகையிலே வர்த்திக்கிறவர்களை பெரியநம்பி எங்கே யென்று கேட்டருள, மீண்டு கோயிலுக்கெழுந்தருளினாரென்று அவர்கள் விண்ணப்பஞ்செய்ய; இவரும் அதுவென், அவர் அருளிச்செய்யாமல் எழுந்தருளுகைக்கு ஹேதுவென்னென்ன; ஒருதோண்டியடியாக மதினியாருக்கும் மதினியாருக்கும் சண்டையானவாறே தம்தேவிகளைக் கோபித்து, பாகவதாபசாரத்துக்கு இருப்பது அப்போதே கோயிலேற வெழுந்தருளினாரென்றார்கள்.

இளையாழ்வார்வைபவம்.

இளையாழ்வாரும் அச்செய்தியைக்கேட்டு திருவுள்ளம்கலங்கி, தேவிகளைப்பார்த்து அதிகுபிதராய, (దోషాణాం ఆకరం స్త్రియః)(தோஷாணாமாகரம ஸ்த்ரியஃ)என்னும்படியைஸ்பஷ்டமாக்கினையே! முன்பே திருக்கச்சிநம்பி விஷயமாகவும், ஸ்ரீவைஷ்ணவர் விஷயமாகவும் அபசாரப்பட்டாய, இப்போதும் பெரியநம்பிதேவிகளுடனே பிணங்கி அஸஹ்யாபசாரப்பட்டாய், இப்படி செய்கிற நீ இப்போதே புறப்படுபோவென்று, தத்ஸம்பந்தியானதநங்களையுங் கொடுத்துப்பயணமாக்கி, பிறந்தகமேபோகவிட்டு, "இல்லறமில்லேல் துறவறம்" என்கிறபடியேஅதிதிஸத்காரயோக்யதையன்றிக்கே ப்ரதிகூலையாயிருக்கிற பார்யையை ஸவாஸநமாகத்யஜித்து, ஸங்கல்பிக்கக்கடவன் என்கையாலே, இளையாழ்வாரும்நமக்கு இனிஸம்ஸாரம்த்யாஜ்யமென்று அத்யவஸித்து (సంసార సాగర ... విముక్త సర్వపాపేభ్యో విష్ణులోకం స గచ్ఛతి) (அநந்தஸரஸின்தீரத்வாவிமாநச்சாயயாங்கிதே - விமுக்தஸ்ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம்ஸ கச்சதி) என்னும் மாஹாத்ம்யமுடைய திருவநந்தஸரஸ்ஸிலேசென்றருளி, (సమ్యక్ స్నాన ...) (ஸம்யக்ஸ்நாநஹ்வயேதீர்த்தேவிகாஹ்யசத்கிலிவிஷ - நிரஸ்தே தாபோகாபோவரதம்ஸாரணம்கதா) என்கிறபடியே திருவநந்தஸரஸ்ஸிலேநீராடி (యథోక్తకారిణం ...) (யதோக்தகாரிணம்விஷ்ணும்பாவம்தம்வா குருதவேதாந்தார்த்யா ஸம்கல்ப்யஸந்யாஸாஸ்ரமமாச்ரயிஷ்யாமி) என்கிறபடியே ஸந்யாஸிக்கஸம்கல்பித்துக்கொண்டு *தொழுதெழுதொண்டர்களுக்கு, பிணியொழித்தமராபெருவிசும்பருளும பேரருளாளனந்நிதியிலே எழுந்தருளி ஸேவித்து, "தாயேதந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றுமிதாயே பட்டொழிந்தேன்" என்கிறபடியே பகவத்பாகவதாசார்யாநுவ்ருத்திக்கு விலக்கடியான இஸ்ஸம்ஸாரஸம்பந்தம் வேண்டுவதில்லை, அடியேனுக்கு தேவரீர் திருவடித்தாமரைகளிலே சேவையே வேண்டுவது, ஆகையாலே (త్రిదండం వైష్ణవం ...) (த்ரிதண்டம்வைஷ்ணவம்ஸம்யக் விப்ராணாம்முமுக்ஷூணாம் - நிர்வாணம் ஸர்வதர்மாணாம் விதிவேதாநுசாஸநம்) என்று சொல்லப்பட்ட த்ரிதண்டகாஷாயவஸ்த்ரங்களை தேவரீர் அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று, இளையாழ்வார் பேரருளாளனை ஆசார்யத்வேந அங்கீகரித்து விண்ணப்பஞ்செய்ய; தேவப்பெருமாளும் திருவுள்ளமுகந்தருளி, (త్రిదండముపవీతం చ ...) (த்ரிதண்டமுபவீதஞ்ச வாஸஃகௌபீநவேஷ்டநம் - ஶிக்யஞ்சேதி பவித்ரஞ்ச பிப்ருயாத்யாவதாயுஷம்) என்கிறபடியே த்ரிதண்டகாஷாயாதிகளை நீருள்ளதனையும் தரிக்கக்கடவீரென்று அர்ச்சகமுகேந ப்ரஸாதித்தருளி, "இராமாநுஜமுநி" என்று திருநாமஞ் சாத்தியருளி நம்மிராமாநுசனை மடத்திலேவைத்துவாருமென்று திருக்கச்சிநம்பிக்கு

அருளிச்செய்தருள, அவரும அப்படியே உபலாளித்துக்கொண்டுபோய் மடத்திலேவைத்து எழுந்தருளினார்.

பின்பு ராமாநுசனும், ஆஸ்ரமதர்மங்களைக் குறைவற நடத்திக்கொண்டு, நமக்கு ஆளவந்தாரவிசேஷகடாக்ஷம்பண்ணினதற்கு ஏடாக விரோதிகளும் கழிந்து ஆநுகூல்யமும கூடாநின்றதே, ஆளவந்தார் திருவுள்ளககருத்து நிறைவேறும்படி நமக்கொருஸஹாயம் உண்டாகவேணுமென்னும் விசாரமுண்டாய், ததநுரோதேந கோவிந்தபட்டரை நினைதது, அவன் நமககு ஹிதப்ரவர்த்தகன், ஸர்வவிஷயவிரக்தன், சாஸ்த்ரவைதககதயமுமுளளவா, இனிஅவனை நம்மோடே சேர்ப்பாருண்டாகில நல்லது, இப்போது அவன தேவதாந்தரபரனுயிராநின்றான், அவ்வுள்ளங்கைகொணாநத இடததே சுருள்நாற்ற மெழுப்பி, ([illegible]) (ஸர்வாநதஸ்ஸர்வதா) என்றுமவனுடைய ஸௌகந்த்யததைககாட்டிமீட்குமவிரகா ஆரோவென்றுநினைவிட; விசேஷாத்மகுணங்களையுடையராய, வேதவேதாநதவிதக்ரேஸராய், வருளாபரணப்ரபந்த முகுளாமோதிதசித்தராய, * நிலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானை அநவரதபாவனைபண்ணி, பிரியாவடிமை செய்யாநின்றுள்ள தேசிகாகரேஸரரான பெரியதிருமலைநம்பியே கடவரொன்று நிஸ்சயித்து ஒரு அநுகூலஸ்ரீவைஷ்ணவனை அவர்ஸந்நிதிக்குப்போகச்சொலலி, தேவரீருடைய மருமகநான வடடமணி கோவிந்தபட்டர், அடியேனுடன ஸஹாத்யாயியாய அநுகூலிததிருந்தவன், துர்வாஸநாதிசயத்தாலே அந்யபரனாய் காளஹஸ்தியாகிற கடுங்காட்டிலே நிலலாநின்றான, தேவரீர அடியேனுககாக அவனிடததே நிர்ஹேதுக க்ருபைபண்ணி, திருவடிகளுககு அவனை ஆட்கொண்டருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்யதுபோகவிட்டருளினார.

அநநதரம்இவர்இப்படி ஆஸ்ரமபரிபாலநம்பண்ணியருளினசெய்தியைக்கந்தாடை முதலியாண்டானும, ஹாரீதகுலதிலகரான திருமறுமார்பனென்கிற திருநாமததையுடைய கூரத்தாழ்வானுங் கேட்டருளி, அதிப்ரீதியோடே பெருமாளகோயிலுக கெழுந்தருளி, ராமாநுஜனை ஸேவித்து, அடியோங்களுககு பஞ்சஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித் தருளவேணுமென்று விண்ணபபஞ்செய்ய, ராமாநுஜனும் திருவுள்ளமுகந்தருளி, அவர்கள் ப்ரார்த்திததபடியேசெய்தருள, அவர்களும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் லபிதது க்ருதார்த்தராய, ([illegible]) (அதீத்யமந்த்ரமாசார்யம் பூஜயேத்ஶக்திதோத்விஜ: - ஆசார்யாதீநவர்த்திஸ்து யாவஜ்ஜீவம் ஸதாஶுசி:) என்கிறபடியேஸ்வாசார்யரானராமாநுஜனையொருக்காலும்பிரியாமல் தத்கைங்கர்யைகரஸராய் ஸேவித்துக்கொண்டிருந்தார்கள்.

பின்புயாதவப்ரகாசனுடையமாதாவுக்குப்பேரருளாளர்ஸேவையும் திருக்கச்சிநம்பி பார்வையும் ராமாநுஜனிடத்[illegible]

ப்ரேமஸம்பாஷணமும் பலகாலும் நடக்கையாலே அதுவே நிதாநமாக
அவனுக்கு தர்ஶநத்திலே ஊற்றம்பிறந்து, "இத்தர்ஶநத்திலே நம்யாதவ
னும் இறங்கினனோ" என்றுநினைத்து, வையமாளிகைப்படியேறுகிற்க,
"நல்லது நல்லது" என்று கிம்வதந்தியுண்டாக, அதுகேட்டு ஸந்தோ
ஷத்துடனே யாதவப்ரகாசன்பக்கல்சென்று இச்செய்தியைச்சொ
ல்லி, நீயும் ராமாநுசனைப்போலே சிகாயஜ்ஞோபவீத பூர்வகமாக
த்ரிதண்டத்தை தரியாயென்ன; பாரமார்த்திகதயா ஸ்வாபிமதார்த்
தத்தில் அருசிதோன்றுகையாலும், இளையாழ்வார் ப்ரதியோகித்
வேநசொன்ன அர்த்தங்கள் நெஞ்சிலே புண்படுத்தாநிற்கையாலும்,
அவர்மாஹாத்ம்யங்களை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு சொல்லியிருக்கையாலும்,
அவருக்கு கங்காயாத்ரையிலே வ்யாதரூபேணவந்த ராமஸாக்ஷாத்கார
ஸஹாயத்தாலும், மாதர்வாக்யத்தாலும் அவன் ஸம்மதித்து, ஸ்வமாதா
வுடனே * ஏகதண்டதாரணம்பண்ணுமிடத்திலே நானசிகாயஜ்ஞோபவீத
த்யாகம்பண்ணுகையாலே அதுக்கு ப்ராயஶ்சித்தமாக பூப்ரதக்ஷிணம்
பண்ணவேண்டியிருந்தது, அது வயோவ்ருத்தனான என்னாலே செய்ய
முடியாது, இனி அசக்தனான நான் செய்யவடுப்பதென்னென்று சொல்லி
முசித்துக்கிடக்க, அவ்விரவிலே பேரருளாளர் அவன் ஸ்வப்நத்திலே
யெழுந்தருளி, நம்மிராமாநுசனை ஒருப்ரதக்ஷிணம்பண்ணி, அவர்
தர த்ரிதண்டகாஷாயாதிகளை தரித்து ஸந்யாஸியாயென்ன; யாதவ
னும் அத்தை விஶ்வஸியாமல், தருக்கசிந்மயுடனே நான் ஒருநினைவு
நினைத்திராநின்றேன், அத்தைப் பேரருளாளருக்கு விண்ணப்பஞ்
செய்து அவர்திருவுள்ளமானபடியை எனக்கு அருளிச்செய்யவேணு
மென்ன, நம்பியும் அன்றுராத்ரி பெருமாளை ஸேவித்து விடைகொள்
ளுகிறவளவிலே, யாதவப்ரகாசன் ஒருநினைவு நினைத்திருந்தேனென்றான்
என்று விண்ணப்பஞ்செய்ய, பேரருளாளரும், அவன்தாயார் இராமாநுச
னைப்போலே நீயும்தரிதண்டஸந்யாஸியாகாய் என்றாள், தான் பூப்ரதக்ஷி
ணம் பண்ணவேணும் என்று முசித்துக்கிடந்தான், நாம நம்மிராமா
நுசனை ஒருப்ரதக்ஷிணம்பண்ணி ஸந்யாஸியாவென்று சொன்னோம்,
நாம் ஸ்வப்நமுகேந சொன்னவார்த்தையை விஶ்வஸியாமல், உம்மை
யிடுவித்துக்கேட்கிறான் இத்தனையென்று அருளிச்செய்ய, நம்பியும்,
இச்செய்தியை விடிவோரை யாதவப்ரகாசனுக்கருளிச்செய்ய, அவனும்,
விஶ்வஸித்துவந்து ராமாநுசர் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பி
த்து, அடியேனுக்கு த்ரிதண்டதாரணம் பண்ணுவித்தருளவேணுமெ
ன்ன, இவரும் அவருடைய உசிதநிவேதத்தைக்கண்டு, அதுசெய்யு
மிடத்து ப்ராயஶ்சித்தாபேக்ஷையுண்டென்ன, அவரும் பகவதுக்தி
ப்ரகாரத்தைவிண்ணப்பஞ்செய்து, அவர்தன்னையே வலம்வந்து ஸவிநய
னாய்நிற்க, அவ்வளவிலே ஆழ்வானும் ஆண்டானும் பகவதாநுகூல்ய
மும்இவருடைய நினைவும் ஒத்திருந்தபடியே! என்று விஸ்மிதராய், (ద్వేషాచ్చైద్యాదయః) (த்வேஷாச்சைத்யாதய:) என்கிறபடியே தேவரீர்க்குப்

* "த்ரிதண்டம்" என்றும்காண்கிறது.

பண்ணுகின்ற த்வேஷந்தானே இவர்க்கு உஜ்ஜீவந ஹேதுவாய்த்தென்றுசொல்லி ஆஸ்சர்யப்பட்டு, (అస్మాభిస్తుల్యోభవతు) (அஸ்மாபிஸ்துல்யோபவது) என்று விண்ணப்பஞ்செய்ய, ராமாநுசனும் போரவுகந்தருளி, சாஸ்த்ரோக்தப்ரகாரேணப்ராயஸ்சித்தபூர்வகமாக சௌளோபநயநாதிகளையும் பண்ணுவித்து, த்ரிதண்டகாஷாயாதிகளையும் ப்ரஸாதித்து, "கோவிந்தஜீயர்" என்று திருநாமம் ப்ரஸாதித்து, பஞ்சஸம்ஸ்காரயுக்தராக்கி, குருபரம்பரா பூர்வகமாக மந்த்ரார்த்தத்தையும் ப்ரஸாதித்தருளி, சாஸ்த்ரங்களிலே இதரேதரவசந வையர்த்த்யம் வாராதபடி "யதிதர்மஸமுச்சயம்" என்கிற ப்ரபந்தத்தைப்பண்ணுமென்ன; கோவிந்தஜீயரும, (అధికృత్యకృతః ప్రయోగో ముఖ్యకర్మ చ। అహోరాత్రక్రియాచారో లింగధర్మగతిస్థితిః ॥ ప్రాయశ్చిత్తాదిసంస్కార ఇత్యేకాదశపర్వకః) (அதிகர்த்தசாலிநகப்ரயோகோமுக்யகர்மச - அஹோராத்ரக்ரியாசாரோலிங்கதர்மகதிஸ்திதி: - ப்ராயஸ்சித்தாதிஸம்ஸ்கார ஹ்ருத்யேகாதஸபர்வக:) என்று - ஏவம்ப்ரகாரேண ஸங்க்ரஹ ப்ரபந்தத்தைச்செய்து ஸந்நிதியிலேவைத்து தண்டன்ஸமர்ப்பிக்க, ராமாநுஜனும் ஆநந்தமாகத் திருக்கண்சாத்தி ஸந்தோஷித்தருள, இவரும ஆசார்யபரதந்த்ரராய் சிலகாலம் எழுந்தருளியிருந்து, அசிரேண பரமபதத்தை ப்ராபித்தருளினர்.

அநந்தரம், ராமாநுசனும், கூரத்தாழ்வானுக்கும் முதலியாண்டானுக்கும மீமாம்ஸாசாஸ்த்ரயுக்மஸ்ரமம பண்ணுவித்துக்கொண்டிராநிற்க; இவருடைய ஆஸ்ரமபராதி முதலான செயதிகளை கோயிலிலே ஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாருங்கேட்டுப்போரவுகந்து, தங்களிலே விசாரித்து நம்பெருமாள ஸந்நிதியிலேசென்று, இளையாழ்வாரை தேவரீர்ஸந்நிதியிலே நித்யவாஸமபண்ணுமபடி அழைப்பித்துக்கொண்டருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெரியபெருமாளும், பேரருளாளர்க்கு அப்போதே திருமுகம போகவிட்டருள; பேரருளாளருங் கேட்டருளி, நந்தாமஅபிமாநத்தைப புறமபேபோகவிடிலன்றோ நாம் நம்மிராமாநுசனை விடுவது என்று அருளிச்செய்துவிட, இச்செய்தியை: பெரியநம்பி முதலான முதலிகளெல்லாருங்கேட்டு இனிச்செய்யவடுப்பதென்னென்று தங்களிலே விசாரித்தருளி, தேவப்பெருமாள் பரமோதாரராயிருப்பர், பாட்டுக்குப் போரநல்லராயிருப்பரென்று, ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையரைக் குறித்து, (వేగవత్యుత్తరే తీరే క్షేత్రే సత్యవ్రతాఖ్యకే। అస్తి కాంచీతి విఖ్యాతా పురీ పుణ్యవివర్ధినీ) (வேகவத்யுத்தரேதீரே க்ஷேத்ரேஸத்யவ்ரதாக்யகே - அஸ்திகாஞ்சீதிவிக்யாதாபுரீபுண்யவிவர்த்திநீ) என்றுபுண்யவாத்தகமாகச் சொல்லப்பட்ட காஞ்சீமஹாநகரியிலே தேவரீர்எழுந்தருளி, புண்யகோடிவிமாநமத்த்யஸ்த்தராய், அகிலர்க்கும் ஸர்வாபேக்ஷிதப்ரதராயிருக்கிறபேரருளாளரைப்பாடி யுகப்பித்து "நமக்கு ராமாநுசனைத்தரவேணும்" என்று கேட்டு அழைத்துக்கொண்டெழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, அவரும் அப்பொழு

தே புறப்பட்டு நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து, பெருமாள் கோயிலைநோக்கியெழுந்தருள,ஸ்வஜநமானவரந்தரும்பெருமாளரையர் அச்செய்தியைக்கேட்டு எதிரேபோய், தமமுடைய திருமாளிகை யிலே எழுந்தருளுவித்துக்கொண்டு, ஸதகரித்து அமுது செய்விக்க,இவ ரும்அதிப்ரீதரா யெழுந்தருளியிருக்க; அதின்மற்றைநாள் விடிவோரை பேரருளாளர், வையமாளிகையிலே "கச்சிக்குவாயத்தான்" என்கிற திருமண்டபத்திலே யேறியருளி, அனைத்துக்கொதியிலுள்ள பரிகாமும் ஸேவிக்க, திருக்கச்சிநமபியும திருவாலவட்டமபணிமாற, அருகே ராமாநுஜனும் அவரருளிச்செய்த வரதராஜாஷ்டகத்தை அநுஸந்தித் துக்கொண்டு நிற்கச்செய்தே; திருவரங்கப்பெருமாளரையர் எழுந்தரு ளின செயதியை திருக்கச்சிநமபி கேட்டருளி எதிர்கொண்டு அரையரை ஸேவிக்க, அவரும் ஈர்வைபண்ணி அநேகோபசாரம்ஸம்பாஷணம்பண் ணிக்கொண்டிருக்கச்செய்தே,அரையரும நமபியுடனேபேரருளாளரை ஸேவிக்கவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நமபியும பெருமாளு டையதிருவோலக்கத்திலே அழைத்துக்கொண்டுபோக, அரையருமவர தராஜனை ஸேவித்து, ([illegible]) (தாபுநஸ்ஸம்சரதாங்க கல்பகத்வஜாரவிந்தாங்குசவஜ்ரலாஞ்சநம் - தாவிசாமதவச்சரணமயுகூ த்வயம்மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி) என்று அநுஸந்தித்துக்கொண்டு தண்டனஸமர்ப்பித்து ஸேவித்துநிற்க, பெருமாளும தீர்த்தப்ரஸாதங் களையும் ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதித்தருள, இவரும "திருப்பொலிந்த சேவடியென்சென்னியின்மேல பொறித்தாய" என்று ப்ரீதராய்நிற்கிற வளவிலே, பெருமாளும இவரை அருளப்பாடிட்டருள, திருவரங்கப் பெருமாளரையரும பக்திபுரஸ்ஸரமாக "மனமெனாருசமேயான" என்று தொடங்கி, "உலகேத்துமாழியானத்தியூரான"என்றும, "பிணியவிழ் தாமரை மொட்டலர்த்தும பேரருளாளா" என்றும், "தொழுதெழு தொண்டர்கள்தமக்குப் பிணியொழித்தருளா பெருவிசும்பருளும பேர ருளாள னெம்பெருமான" என்றும், இப்படி ஆழ்வார்கள் திவ்யஸூ க்தியாய் * பாலேய்தமிழான *'பண்ணுராபாடலின்கவிகளை, தேவகாநத் திலே இயலும்இசையுமாக நாடகத்துடனேபாட: "தெனனுவென்னு மென்னம்மான்" என்கிறபடியே பேரருளாளரும் போரவுகந்தருளி, தாம் சாத்தியிருந்த திருமுத்தின தாழ்வடம், திருப்பரியட்டம், சத்ரசா மராதிகளான மற்றுமுண்டான வரிசைகளெல்லாம் ப்ரஸாதித்தருள, இவரும், நாயன்தே! அடியேனுக்கு இவையொன்றிலும் அபேக்ஷை யில்லை, தேவரீர் அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதராகையாலே அடியேன் அர்த்தித்ததைத் தந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்து, பின்னை யும் கணக்கப்பாடியருள, பெருமாளும் அத்தைக்கேட்டருளி, ப்ரீத ராய், நாமும்நம்பெண்டுகளுமொழியநீரவேண்டினத்தைத் தருகிறோம்,

அத்தைச் சொல்லிக்காணீர் என்ன, அரையரும் ராமாநுஜனைக்காட்டி, "இவரை அடியேனுக்குத் தந்தருளவேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும் அப்போதே அறியப்பெற்றிலோமே, இவரையொழிய நீர்வேண்டினதெல்லாந்தருகிறோம், அத்தைக்கேளீரென்றருளிச்செய்ய, அரையரும், ([illegible]) (ராமோத்விர்நாபிபாஷதே) என்கிற தேவரீர் இரண்டுவார்த்தையருளிச்செய்யலாமோவென்று விண்ணப்பஞ்செய்ய, பேரருளாளரும் இன்னாப்புடனே, "தந்தோம், கொண்டு போகலாகாதோ" என்று அருளிச்செய்ய, திருவரங்கப்பெருமாளரையரும் உடையவரைக் கையைப்பற்றி வாருமென்ன, உடையவரும்பேரருளாளருக்குத் தண்டன் ஸமர்ப்பித்து, திருவரங்கப் பெருமாளரையருடனே யெழுந்தருளப் புறப்பட, பெருமாளும் இவர்க்கு விடைகொடுத்தருள; உடையவரும், கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் பார்த்தருளி, மடமேபோய் நம்முடைய திருவாராதநமான பேரருளாளரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வாருங்கோள் என்று அருளிச்செய்து மடம்புகுராமல் எழுந்தருள; அவர்களும் அப்படியே எழுந்தருளுவித்துக்கொண்டு கூடினவாவிலே, திருக்கச்சிநம்பியும் அவர்களை வழிவிட்டு மீண்டெழுந்தருளினார்.

உடையவரும், ([illegible]) (யத்கத்வாநந ரோ[illegible]) என்று சொல்லுகிற பெருமையையுடைய ஸ்ரீரங்கதாமமாகிற * திருவரங்கத் திருப்பதியை நோக்கிப் பயணகதியிலே யெழுந்தருளி, வடவாற்றிலே நீராடி, கேசவாதித்வாதசோர்த்த்வபுண்ட்ரங்களைச் சாத்திக்கொண்டு திருக்கவளவிலே, இவர் எழுந்தருளினசெய்தியைப் பெரியநம்பி முதலான ஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகளும் ஜீயர்களும் ஏகாங்கிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் கேட்டருளி, பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் சேனைமுதலியாருக்கு அருளப்பாடிட்டருளி, நம் ராமாநுசனை எதிர்கொண்டு அழைத்துவாருமென்று திருவுள்ளமாயருள, அவர், பெரியநம்பியுள்ளிட்ட முதலிகள், ஜீயர்கள், ஸ்ரீவைஷ்ணவர்களுடனே, பெருமாள்பரிகரமான அனைத்துக்கொத்திலவர்களும் ஸேவிக்க, அகில நாதத்தக்க வாத்யத்துடனே, முக்தராயப்போமவர்களை நித்யஸூரிகள் விரஜைக்கரையளவாகவந்து எதிர்கொள்ளுமாப்போலே, திருக்காவேரிவடவாற்றின் கரையளவாக வந்து எதிர்கொள்ள; ராமாநுசனும் சேனைமுதலியாரையும் பெரியநம்பிமுதலானாரையும் ஸேவித்து, அவர்களைப் பின்சென்று கொண்டுபோய், "கொடியணிநெடுமதிள் கோபுரங்குறுகினர்" என்கிறபடியே * திடகொடிமதிளையும் தாமோதரன் திருக்கோபுரத்தையுங்கிட்டி, ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணி, திருமாலைதந்தபெருமாள் திருவீதிமுன்னேப் புகுந்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி த்ரிவிக்ரமன் திருவீதியையும் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளிப்புகுந்து, ஸேவாக்ரமத்திலே பெரிய பீடத்தடியிலேசென்று தண்டன்ஸமர்ப்பித்து, ஸ்ரீரங்கநாயகியாரையும்

ஸேவித்து, ஸ்ரீசந்த்ரபுஷ்கரிணியிலே தீர்த்தஸ்வீகாரம பண்ணியருளி, திருக்கோபுரத்துநாயனார்களையும் ஸேவித்துப்புகுந்து, * கடைத்தலையிருந்து வாழுஞ்சோம்பரான நம்மாழ்வார்முதலான ஆழ்வார்களையும் ஸேவித்து, மற்றும் சுற்றிலுள்ள எம்பெருமானகளையும் ஸேவித்து, * அணியரங்கன்திருமுற்றத்தேபுகுந்து தண்டனஸமாபித்து பாதக்ஷிணமாக வெழுந்தருளி, ப்ரணவாகாரமான திவ்யவிமானத்தையுமஸேவித்து, சேனைமுதலியாரையுந்திருவடிதொழுது, அழகியமணவாளன் திருமண்டபத்தேற எழுந்தருளினவளவிலே, "வந்தவரெதிரெகாள்ள மாமணிமண்டபத்து" என்கிறபடியே முகதனுயப் போருமவனை ஸ்ரீவைகுண்டநாதன் எதிரிகொள்ளுமாப்போலே, நம்பெருமாள், திருக்கைத்தலத்திலேஎழுந்தருளிப் புறப்பட்டு, அழகியமணவாளன திருமண்டபத்தளவாக எழுந்தருளி எதிர்கொண்டு உள்ளேபுகுந்தருள; உடையவரும் விழுவது எழுவது தொழுவதாய ஸேவித்து, திருப்பள்ளியறையிலே புகுந்து, * அரங்கத்தம்மான்பரமபதனைப்பள்ளிகொள்ளும் * கடல்விளங்குகருமேனியம் மானறனைககண்டுகந்து, *மணத்தூணேபற்றிநின்று வாயாரவாழ்த்திப்ரேமபரவசராய், அமலனாதிபிரானில்படியேபாதாதிகேசாந்தமாக"கண்டகண்கள்மற்றொன்றினைக்காணாவே" என்னும்படி பெரியபெருமாளையநுபவித்து, திருப்பல்லாண்டையும் அநுஸந்தித்து,(நமோ நமோ வாங்மநஸாதிபூமயே நமோ நமோ வாங்மநஸைகபூமயே। நமோ நமோ நந்த மஹாவிபூதயே நமோ நமோ நந்த தயைகஸிந்தவே॥ ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ ந பக்திமாம்ஸ் த்வச்சரணாரவிந்தே। அகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே॥) (நமோ நமோவாங்மநஸாதிபூமயே நமோநமோவாங்மநஸைகபூமயே-நமோ நமோநந்தமஹாவிபூதயேநமோநமோநந்ததயைகஸிந்தவே- நதர்மநிஷ்டோஸ்மிநசாத்மவேதீநபக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே- அகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம்ஶரணம்ப்ரபத்யே)என்று பரமாசார்யரான ஆளவந்தார்திவ்யஸூக்தியை அநுஸந்தித்து ஸேவித்துநிற்க, பெரியபெருமாளும் ராமாநுசனை ப்ரேமமகாபைபண்ணியருளி, தீர்த்தப்ரஸாதங்களும் ப்ரஸாதித்து, "நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து" என்கிறபடியே *தேனேமலரும *திருக்கமலபாதமான*துயரறுசுடரடிகளாலே இவருடைய உத்தமாங்கத்தை அலங்கரிக்க; இவரும தாளிணைக்கீழ் வாழ்ச்சியைப்பெற்று, நிரதிசயாநந்த நிர்ப்பரராய் ஸேவித்துக்கொண்டுநிற்க,பெரியபெருமாள் உடையவரைத் *தமதாமரைக்கண்களாலே நோக்கி* சோதிவாய்திறந்து,"பொங்கோதஞ்சூழ்ந்தபுவனியும்விண்ணுலகும்" என்கிற உபயவிபூத்யைச்வர்யத்தையும உமக்கும் உமமுடையார்க்குந் தந்தோம், நம்முடையவீட்டின்கார்யத்தையெல்லாம் ஆராய்ந்துநடத்துமென்று ப்ரஸாதிக்கப்பெற்று, பெரியநம்பி திருமுகமண்டலத்தைப் பார்த்தருளி, "பெரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன்பெறுமாறு"என்று - தேவரீர் திருவடிகள் ஸம்பந்தத்தையிட்டுப் பெருமாள் இப்படி அடியேனை வாழ்வித்தருளினார் என்று விண்ணப்பஞ்

செய்ய; பெரியநம்பியும் "கலியுங்கெடுங்கண்டுகொண்மின்" என்று -
ஆழ்வார் அருளிச்செய்தபவிஷ்யதாத்தம் ப்ரத்யக்ஷமாச்சுதென்று அரு
ளிச்செய்து, பெருமாள் நியமித்தருளினகார்யம் செய்தருளலாகாதோ
வென்ன; உடையவரும், பெரியதிருமண்டபத்தேயெழுந்தருளி யிருந்
து கருவூலங்களையெல்லாமாராய்ந்து, அமுதுபடி, சாத்துப்படி, திரு
மாலை, திருவிளக்குகளெல்லாம் ஆராய்ந்து நடத்தி, மற்றும் திருவாரா
தநத்துக்கு வேண்டினவையெல்லாங் குறைவற நடத்தி, கோயிலைத்
துக்கொத்திலவர்களுடைய ஏற்றத்தாழ்வுகளும் ஆராய்ந்து, திருமதிள்
களுமுதலான விடங்களில் திருப்பணிகளும் நடத்தியருளி, * வண்டின
முரலுஞ் சோலை, மயிலினமாலுஞ்சோலை, கொண்டல்மீதணவும் சோலை,
குயிலினங்கூவும் சோலை, * ரடியாரம்பொழில், திருச்சண்பகத் தொடக்க
மான திருப்பூமாலைகளும், திருநந்தவனங்களும் ஆராய்ந்தருளி, மற்று
முண்டான திருவிளையாட்டுச் சீமைகளுமெல்லாம் ஆராய்ந்துகொண்டு
போருகிற வளவிலே, அகளங்கநாட்டாழ்வானை சிஷ்யனாக்கி கோயி
லுக்கு மேல்காவலாக வைத்தருளி, "திங்களும் நாளும்விழாவறாத"
என்கிறபடியே நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்
ஸரோத்ஸவ, மஹோத்ஸவங்களெல்லாம் தாழ்வற நடத்திக்கொண்டு
போருகிறகாலத்திலே,

முன்பு திருமலைநம்பிஸந்நிதிக்குப் போகவிட்டிருந்த ஸ்ரீவைஷ்
ணவர் ஹர்ஷப்ரகாசத்துடனே மீண்டெழுந்தருளி உடையவர்திரு
வடிகளிலே ஸேவிக்க, ராமாநுஜரும் அவருடையமுகவிகாஸத்தைக்
கண்டு கார்யஸித்தியை நிச்சயித்து ப்ரீதியுடனே அந்தவ்ருத்தாந்தத்
தை விவரமாகச் சொல்லுமென்ன; ஸ்ரீவைஷ்ணவரும்-; தேவரீர்
விடைப்ரஸாதித்தருளினபின்பு திருமலைக்குப் போய் திருமலை
நம்பியை ஸேவித்து, தேவரீர் நியமனப்படியே விண்ணப்பஞ்செய்தேன்,
நம்பியுங் கேட்டருளி, இதுநாமே செய்யக்கடவதாயிருக்க நம்மிராமா
நுஜனும் * எண்ணமுடித்தது திருத்திக்குமமுதாகப் பெற்றதே! யென்று,
தேவரீரநுகூலயத்துக்கு உகந்ததிருவுள்ளத்தராய தத்க்ஷணமே ஸ்ரீபா
தத்துமுதலிகளுடனே அடியேனையுங்கூட்டிக்கொண்டு காளஹஸ்தி
குளக்கரையில் ஒருமாத்தடியிலே யெழுந்தருளியிருக்க, உள்ளங்கை
கொணர்ந்த நாயனாரும் அங்கே ருத்ராபிஷேகார்த்தமாக குடங்கொண்
டு, ருத்ரபரமான பாட்டுக்களையுங் கூறிக்கொண்டுவர, நம்பியும், "கொ
ன்றைச்சடைமுடியானைக் குளிர்நீராட்டினு, லேதுனக்குண்டாம்பயன்"
என்று அருளிச்செய்ய, நாயனாரும் இப்பாசுரங்கேட்டு நம்பியை ஸ்மய
மாநமுகனாய ஏறப்பாராநின்றுகொண்டுபோக, இவரும் * அவன் செய்
யுஞ் சேமத்தையெண்ணித்தெளிவுற்ற சிந்தையராய், மீண்டு திருமலை
யிலேபோய் வ்யாக்யானித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்னையும் ஒருநாள், முன்புபோலே அக்குளக்கரையிலே யெழுந்
தருளியிருக்க, அங்கே நாயனாரும் அபிஷேகஜலாஹரணார்த்தமாக

குடமெடுத்துவருமதுகண்டு, நம்பியும் * அப்போதொருசிந்தைசெய்து, *என்மனஞ்சூழவருவானாய் *உறங்குவான்போலயோகு செய்வானூனே * உணர்வைப்பெறவூர்ந்தவனுறங்குகிறானோ’’ என்று தம்முடைய ஆசார்யர் திவ்யஸூக்தியிலே ([illegible]) (ஸ்வாபாவிகாநவதிகாதிசயேசித்வம்) என்கிறஸ்லோகத்தை ஒருவோலைப்புறத்திலே யெழுதி அவன்வருகிறவழியிலேபொகடுவித்திருக்க; அவனும் அவ்வழியில அவ்வோலையைக்கண்டெடுத்து வாசித்துக்கொண்டு கடக்கப்பொகட்டு, ஜலத்தை ஆஹரித்துக்கொண்டு மீண்டுபோகிறவன், ஜலத்தையு மிறக்கி, முன்பெறிந்த ஏட்டைத்தேடி யெடுத்து, மீண்டு குடமெடுத்துக்கொண்டு வருகிறவன், எங்களைக்கண்டு ([illegible]) (ஸோகஸ்லோகத்வமாகத.) என்று ஸ்ரீவால்மீகிபகவான் அர்த்தசிந்தனை பண்ணினாப்போலே இவனும் ஸ்லோகார்த்த பர்யாலோசனை பண்ணுகின்றுகொண்டு கிட்டவந்து நின்று, உங்களையில நழுவினபொருள் இதுவோவென்ன, நம்பியும், வேறேசிலபொருள நழுவுமதொழிய எங்கள்பொருள் நழுவும தல்லவென்ன; அவனும் அது கிடக்கிடீர், நீங்கள் எல்லாரும் ஒருவிட்டத்திலே நடக்கிற தென்னென்ன, நம்பியும் மார்க்கம் கலக்கமற்றிருக்கையாலேயென்ன, அவனும் சேவலருக்கு * மார்க்கங்கள் உண்டோவென்ன, இவரும் * பொருள்கையுண்டாய்ச்செல்லுமவனுக்கு அடுப்ப திறுவனன்றோவென்ன, அவனும் இப்போது நீங்கள் உற்றுரைவிட வந்தீர்களோவென்ன, இவரும் அதல்ல சறுவைகள சொள்ள வந்தோமென்ன, அவனும், அநுஷ்டாதாக்களுக்குபகுபாத அறிவிதாமன்றோவென்ன, இவரும் அது இடமறிந்துநேர்படில நல்லதென்ன, அவனும் குறுக்கு நெடுக்காகில பேதமென்னென்ன, இவரும்செவ்வையிருக்க கிரயக்காகையே பேதமென்ன, அவனும் இது புதுவார்த்தைக்கட்டுகளோவென்ன, இவரும்பழையவார்த்தைக் கட்டுகளும் இப்படியேயென்ன, அவனும் இதிலே பூர்வவிசாரம வேண்டாவோவென்ன, நம்பியும்பரத்வத்திலேசாண் விசாரமிருப்பதென்ன, நாயனாருமிருத்தானாய் நம்பியை ஏறப்பார்த்திருந்துகொண்டு போம்போதுதலைதுலுக்கிஅடைவுகேடுகாணலாமபடிபோனான்; நம்பியும்அதுகண்டு, ([illegible]) (ப்ரஸாதமசமசிததம்) என்னுமாபோலேநெஞ்சமுருகாநின்றதே! “அவரோயினியாவார்’’ என்றநுஸந்தித்து, ஸாத்யகோடியிலேயிட்டு முதலிகளுடன ஸல்லாபித்துக்கொண்டு திருமலையே மீண்டெழுந்தருளினார்’’ என்றவாறே, உடையவரும, மிகவும் ஆநந்தித்து, கூரத்தாழ்வானையும முதலியாண்டானையும பார்த்தருளி, கேட்டீர்களோ கோவிந்தனுக்கு ஆளவந்தார்திவ்யஸூக்தி நெஞ்சிலூற்று அதற்கு வாங்மாத்ரத்தாலேவைதண்டிகச்சாயையைக்காட்ட, அதற்கு நம்பியும் சாயாமாத்ரத்தாலே வாக்சாதுர்யங்களாலே ரசிக்க, கோவிந்தனும் சாஸ்த்ரவித்தனகையாலே நம்பியுடைய ஸ்ரீஸூக்தியிலே யீடுபட்டிருந்தானானிறே என்றருளிச்செய்தார்.

* “துர்க்கமங்கள்” என்றும பாடம் காண்கிறது.

எங்ஙனேயென்னில்; (కూటస్థోక్షర ఉచ్యతే) (கூடஸ்த்தோக்ஷர உச்யதே) "அமரர்களாதிமுதல்வன்" (దేహినస్సార్వత్రికః) (தேஹிநஸ்ஸார்வத்ரிகः) "நெறிவாசல்தானேயாயநின்றான்," (కశ్చిన్మాం వేత్తి తత్త్వతః) (கஶ்சிந்மாம்வேத்தி தத்வதः) "யானேநீயெனுடைமையுநீயே" (జ్ఞానేన హీనాః పశుభిస్సమానాః) (ஜ்ஞாநேநஹீநாःபஶுபிஸ்ஸமாநா) "என்னினைந்துபோக்குவரிப்போது" (ఏవాలలాటఫలకేలసదూర్ధ్వపుండ్రాః) (ஏவாலலாடபலகேலஸதூர்த்வபுண்ட்ரா) "தவளப்பொடிக்கொண்டுநீரிட்டிடுமின்" (ఊర్ధ్వపుండ్రం ద్విజాతీనాం) (ஊர்த்வபுண்ட்ரம்த்விஜாதிநாம்) "நீறுசெய்வேலிடக்காணில்" (వేదమూలప్రమాణాత్) (வேதமூலப்ரமாணாத்) "மிக்கவேதியர்வேதம்" ([illegible]) ([illegible]) ([illegible] ...స్యయామృత [illegible]) ([illegible] ...వేద్ధవ్యం శరవత్తన్మ [illegible]) ([illegible]) (...தேவஸோமயேதமகாத...) ([illegible]) (அவித்யயாமர்த்யும் தீர்த்வாவித்யயாமர்த்யமஶ்நுதே) (ப்ராணவோதநுஶ்ஶரோஹ்யாத்மாப்ரஹ்மதல்லக்ஷ்யமுச்யதே- அப்ரமத்தேநவேத்தவ்யம்ஶரவத்தந்மயோபவேத்) (நாராயணாத்ப்ரஹ்மா ஜாயதே, நாராயணாத்ருத்ரோ ஜாயதே) என்றிப்படிப்பட்ட ஸ்ம்ருதிஶ்ருதிகளாலே ப்ரதிபாதிக்கிற அர்த்தங்களையெல்லாம் தத்காலத்திலே மனஸ்ஸிலாகும்படி அவதாரிக்க, கோவிந்தருமதி [illegible], [illegible] போதையாலும், இவரும் அவளை [illegible] போதிட்டிருக்கிறமை [illegible] யாலும், நம்பிகளும் அவரை [illegible] விஸ்மிதராய் ஸ்ரீவைஷ்ணவனை யுபலாலித்து, பின்னையென்னென்று கேட்டருள, அவரும் ([illegible]) ([illegible] ப்ஸதிசக்ஷு ஷா-ஸ்ம்ஸாரவ்யாளஸம்ஸ்ப்ருஷ்ட [illegible]) என்கிறபடியே-தேவரீருடைய உபதேசமே போதுமோ! ஊமையும்கூடியில் கார்யபுத்தியைக் [illegible] விண்ணப்பஞ்செய்தார். எங்ஙனேயென்னில்;-திருமலைநம்பியும், திருமலையில் * சிந்தாமணியைத் திருவடிதொழுதுபுறப்பட்டு, காளஹஸ்தியிலலைிலத்தோப்பிலே யெழுந்தருளி யிருந்து, ஸ்ரீபாதத்துமுதலிகளுக்குத் திருவாய்மொழிவ்யாக்யாநம் ப்ரஸாதித்தருளாநிற்க, நாயனாரும் ஒருபாதிரிமரமேறி புஷ்பாஹரணம் பண்ணாநிற்க அவ்வளவிலே, "திண்ணன்வீடு" என்கிற திருவாய்மொழிக்கு அர்த்தம் அருளிச்செய்யாநிற்க, நாயனாரும் மூன்றுபாட்டளவும் பூப்பறிக்கைதவிர்ந்துகேட்டுக்கொண்டிருந்து, நாலாம்பாட்டிலே, "எம்பெருமானுக்கல்லால் பூவும்பூசனையுந்தகுமே" என்றுவர, நாயனாரும் அம்மரத்தினின்றும் இடமொன்றுகுதித்து, கையிலிருந்தபூப்படலிகையைச் சுழற்றியெறிந்து, தரித்திருந்தருத்ராக்ஷத்தையும வாங்கி வீசிப்பொகட்டு, "தகாது தகாது" என்றுநம்பிதிருவடி[illegible]

காமாய் மந்த்ரார்த்தமாகிற த்வயார்த்தத்தை ப்ரஸாதித்தருளி, இன்னமும்சில அர்த்தவிசேஷங்களுண்டு, அவற்றை ஆளவந்தாருடைய அபிமாநாந்தர்ப்பூதரான திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலேசென்று கேளுமென்றருளிச்செய்ய; ராமாநுஜனும் அங்கே எழுந்தருளி, * மாற்றிலி சோறிட்டுத் தேசவாரத்தை படைக்கு மவாசனை, "நம்பி திருமாளிகையெங்கே" என்று கேட்டருள, அவர்களும் "அப்பாலே தோன்றுகிற கூறை" என்று காட்ட; அவ்விடந்தொடங்கி நம்பி திருமாளிகையளவும் தண்டனிட்டுக்கொண்டு எழுந்தருள அப்போது *குற்றமின்றிக்குணம்பெருக்கிக் குருக்களுக்கநுகூலரான ஸத்துக்களை நம்பிப்ராபாவமறிந்தார்கள்; உடையவரும் நம்பிஸ்ரீபாதத்திலேசென்று ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி, தேவரீர் அடியேனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்ய; அவரும் இவருடைய அத்யவஸாயபாஹுள்யத்தை யறிய வேணுமென்று, "ஆகட்டும் சொல்லுகிறேன்" என்று முகங்கொடாமல் எழுந்தருளியிருக்க; மீண்டு கோயிலேற எழுந்தருளினார்.

பின்பு நம்பியும் திருநாளிலே எழுந்தருளி, திருப்பிதம்மூரேற எழுந்தருளுகிறவரை, நம்பெருமாள் அருளப்பாடிட்டு, திருமாலை திருப்பரிவட்டம் தீர்த்தம் சடகோபம் ப்ரஸாதித்து, "நம்ராமாநுசனுக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசியும்" என்று ஆசத்தருளிச் செய்தருள; நம்பியும் ([illegible]) (ந ஸம்வத்ஸரவாஸிநே ப்ரப்ரூயாத்) என்றும், ([illegible]) (இதம் தே நாதபஸ்காய) என்று தொடங்கி ([illegible]) (நசாஸுஸ்ருஷவே வாச்யம்) என்று தேவரீர் நியமித்தருளிற்றே! என்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் அப்படியன்று, ([illegible]) (ஸர்வம் வா ஸர்வஜ்ஞராகும்) என்று தொடங்கிச்சொல்லப்பட்ட சிஷ்ய லக்ஷணபூர்த்தியுள்ளவுடையவருக்குச் சொல்லக்குறையில்லை என்றருளிச்செய்ய, நம்பியும் உடையவரைக் குறித்து, "ஊரேற வாரும்" என்று அருளிச்செய்து எழுந்தருள; ராமாநுஜனும் திருக்கோட்டியூர்நம்பி ஸந்நிதிக்குச்செல்ல, அவரும் இந்த விசைசென்று இன்னமொருகால் வாருமென்ன, இவரும் மீண்டு கோயிலேறவெழுந்தருளினார். இப்படிபதினெட்டுப்ரகார மெழுந்தருளி ஸ்ரீபாதத்திலேஸேவித்து நின்றவளவிலும், நம்பியும் இவருடைய த்ருடாத்யவஸாய பரீக்ஷார்த்தமாக ஒன்றுமருளிச்செய்யாமலிருக்க, ராமாநுஜனும், பெரிய ஆர்த்தியோடே மீண்டு, * இணைமலர்க்கண்ணீர் ததும்பக் கோயிலேறவெழுந்தருளியிருந்தார். அவ்வளவிலே திருக்கோட்டியூர்நம்பிசிஷ்யரான ஒருஸ்ரீவைஷ்ணவர்வந்து நம்பெருமாளை ஸேவித்து மீண்டு எழுந்தருளுகிறவர், உடையவர்ஸ்ரீபாதத்திலே ஸேவித்துநிற்க, அவருடனே தம்முடைய ஆர்த்தியெல்லாந்தோன்றும்படி "பூந்துழாய்முடியார்க்குத்தகவல்ல, பொன்னாழிக்கையார்க்குத்தகவல்ல" என்று விண்ணப்பஞ்செய்துபோகவிட்டருள; அந்தஸ்ரீவைஷ்ணவர்

வர் நம்பி திருவடிகளிலே சென்று தண்டனிட்டு அச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் இத்தனை ஆர்த்தியுண்டாவதே! என்று உகந்தருளி, "தண்டும் பவித்ரமுமாக நாம் ஒருவரோ வருவது" என்று அவரையே மீண்டு ராமாநுஜன்பக்கல் போகவிட்டருள, ஸ்ரீவைஷ்ணவரும் உடையவர் திருவடியேறச்சென்று தண்டனிட்டு நம்பியருளிச்செய்ததை விண்ணப்பஞ்செய்ய, உடையவருங் கேட்டருளி, மிகவும் உகப்போடே அவரைத் தண்டனிட்டு, கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையுங் கூட்டிக்கொண்டு, அவரைப்போலே திருக்கோட்டியூரேறச் சென்று, நம்பி திருவடிகளிலே தண்டனிட்டு நிற்க, நம்பியும் உடையவரைப் பார்த்து உம்மை ஒருவரையுமன்றோ வரச்சொன்னோம், இவர்களைக் கொண்டு வருவானேன் என்று கேட்டருள; உடையவரும், தேவரீர் தண்டும் பவித்ரமுமாக வன்றோ வரச்சொல்லியருளிற்று, இவர்களைத் தண்டும் பவித்ரமுமென்றே கூட்டிக்கொண்டு வந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் எது தண்டு பவித்ரம் ஆர்? என்றுகேட்டருள; உடையவரும் முதலியாண்டானைக்காட்டி இவர் த்ரிதண்டம், கூரத்தாழ்வானைக்காட்டி இவர் பவித்ரம் என்று அருளிச்செய்ய; நம்பியும், ஆகில் இவ்வர்த்தத்தை இவர்களொழிய மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும் என்று அருளிச்செய்தருளி, பரமகருணையாலே (ప్రణవాద్యం నమో [illegible] ముముక్షూణాం [illegible])(ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம் - மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ஸதா - முமுக்ஷூணாம் ஸதாஜப்யம் புக்திமுக்திபலப்ரதம் - வைஷ்ணவாநாம் ஸதாஜப்யம் பக்திஜ்ஞாநப்ரவர்த்தநம்) என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், பதத்ரயாத்மகமாய், ஜ்ஞாநபக்திவைராக்ய ஜநகமாகையாலே முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு * நாத்தழும்பெழ ஸதாநுஸந்தேயமாய் * நலந்தருஞ்சொல்லான பெரிய திருமந்த்ரார்த்தத்தை ப்ரஸாதித்தருளினார்; ராமாநுஜரும் க்ருதார்த்தராய், அதின் மறுநாள் அவ்வூரிலெம்பெருமானார் தெற்காழ்வார்திருவோலக்கத்திலே அநேக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அப்பரம ரஹஸ்யார்த்தத்தை யருளிச்செய்தருளினார்.

நம்பி இச்செய்தியைக் கேட்டருளி, உடையவரை அழைத்து, இந்தப்பரமரஹஸ்யார்த்தத்தை வேறொருவர்க்கும் சொல்லாதேகொள்ளும் என்றன்றோ நாம் உமக்குச்சொன்னோம், அத்தைமறுத்து நீர் அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சொன்னீரென்று கேட்டோம் என்று கேட்டருள; உடையவரும்; - உள்ளது, தேவரீர் திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு சொன்னேனென்று விண்ணப்பஞ்செய்ய; அத்தை மறுத்துச்சொன்ன உமக்கு பலமேதென்று கேட்டருள, உடையவரும் ஆசார்யநியமநத்தை மறுத்த எனக்கு நரகமே பலமென்று அருளிச்செய்ய; அத்தையறிந்திருந்தும் சொல்லுவானேனென்று கேட்டருள; [illegible]

நுஜனும், அடியேன் ஒருவனன்றோ நரகம்புகுவது, தேவரீர்திருவடி களை முன்னிட்டுக்கொண்டு சொல்லுகையாலே இவ்வாத்மகோடிக ளெல்லாம் தேவரீர்திருவடிஸம்பந்தத்தாலே உஜ்ஜீவிப்பார்களென்று சொன்னேனென்று விண்ணப்பம்செய்ய, நம்பியும் இந்த பரஸம்ருத்தி நமக்குக்கூடிற்றில்லையே!யென்று,இவர் பரஸம்ருத்திக்குப் போரஉகந்த ருளி, எம்பெருமானாரே! வாருமென்று எடுத்தணைத்துக்கொண்டு, "அவரோ நீர்"என்றருளிச்செய்து, இத்தர்ஶநம் பரமவைதிக ஸித்தாந்தமென்றிருந்தது, இன்றுமுதல் "எம்பெருமானார்தர்சநம்" என்னுங் கோளென்று எல்லார்க்கு மருளிச்செய்து, அந்த உகப்பின் மிகுதி யாலே, வாரீர் எம்பெருமானாரே! இன்னமொரு சரமரஹஸ்யார்த்த விசேஷஞ் சொல்லுவதாக இராநின்றோம், இவ்வளவிலே நீர் தர்ப்பரா யிராநின்றீர், உம்முடைய அத்யவஸாயத்தைச் சொல்லிக்காணீரென்ன; எம்பெருமானாரும் தேவரீரருளிச்செய்த அர்த்தத்துக்கு மேலே ஓரர் த்தமுண்டென்றிருந்தேனாகில் அவிச்வாஸியாவேன்; கோளாதிருந் தேனாகில் அருளிச்செய்த அர்த்தம் நெஞ்சிலேபட்டதில்லையாமென்று, விண்ணப்பஞ்செய்ய விரகறியாமல், ஶ்ரோதவ்யஶேஷமுண்டோ என்று வ்யா குலாந்தக்கரணனா யிராநின்றேன் என்று விண்ணப்பஞ்செய்ய, நம் பியும் இப்போதுபோய் ஏகாந்தமாக நீர் ஒருவருமே வாருமென்று அருளிச்செய்ய, இவரும் கோயிலேற எழுந்தருளினார்.

பின்பு,எம்பெருமானாரொருவருமே நம்பிஸ்ரீபாதத்தே தனியசென்று தண்டன் ஸமர்ப்பித்துநிற்க, நம்பியும் இவர் திருக்கையைப் பிடித் துக்கொண்டுபோய்,ஏகாந்தமாக மேல்தளத்திலேயேறி,படிக்கதவைவிழு விட்டுஎழுந்தருளியிருந்து,ஒருவர்க்குஞ்சொல்லாதபடி தம்திருவடிகளை த்தொடுவித்துச்சூளுறவுகொண்டு, தம்முடைய நிர்ஹேதுகக்ருபையாலே (సర్వగుహ్యతమంభూయః శృణు మే పరమం వచః। ఇష్టోऽసి మే దృఢమితి తతో వక్ష్యామి తే హితం) (ஸர் வகுஹ்யதமம்பூய:ஶ்ருணுமேபரமம்வச: - இஷ்டோஸிமேத்ருட இதி ததோவக்ஷ்யாமிதேஹிதம்) என்று கீதாசார்யன் அருளிச்செய்தாற்போ லே, நம்பியும்; ஸர்வகுஹ்யதமமாய பரமரஹஸ்யமான சரமஶ்லோக த்தையும் அருளிச்செய்து, அத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற இதரோபாய த்யாகபூர்வகமாக சுத்தோபாயவைலக்ஷண்யத்தையும் ப்ரஸாதித்து, இந்த பரமரஹஸ்யார்த்தத்தை, (ఇదం తే నాతపస్కాయ నాభక్తాయ కదాచన। న చాశుశ్రూషవే వాచ్యం న చ మాం యోऽభ్యసూయతి) (இதம்தேநாதபஸ்காய நாபக்தாய கதாசந - நசாஶுஶ்ருஷவேவாச்யம் நசமாம் யோப்யஸூயதி) என்று சொல்லுகிறபடியேபகவத்விமுகர்முதலானநாஸ்திகர்செவிப்படாதபடி பேணிக்கொண்டுபோருமென்று நியமித்தருள; இவரும் அடியேன் அப்படிப்பட்டபேருக்குச்சொல்லக்கடவேனல்லேன்,பகவத்ப்ரவணரா ன கூரத்தாழ்வானொருவர்க்கும்சொல்லாதிருக்கவொண்ணாதே! என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும், இவ்வர்த்தங்கேட்கைக்கு அதிகாரமு ண்டேயாகிலும் ,(సంవత్సరం తదర్ధం వా మాసత్రయమథాపి వా। పరీక్ష్య విధినా ప్రాజ్ఞే

క్రుప యాసిస్వ హానదేత్) (ஸம்வத்ஸரம் ஸம்வா மாஸத்ரயமதாபிவா-பரீக்ஷ்யவிவிதோபாயை: க்ர்பயாநிஸ்பர்ஹோவதேத்) என்கிறபடியே பஹுப்ரகாரத்தாலும் அவருடைய அத்யவஸாயத்தை யறிந்து ஒருஸம்வத்ஸரம் சுஶ்ரூஷை கொண்டு சொல்லுமென்று நியமித்தருள: எம்பெருமானாரும்; * மாயனன்றோதிய வாக்கதனைக் கற்று யதாஜ்ஞானமுடையராய், அர்ஜுநன் ஷட்கத்ரயத்திலும் எடுப்புஞ் சாய்ப்புமாய்ப் போந்து இவ்வர்த்தங்கேட்டு தரித்தாப்போலன்றிக்கே, "மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்கிறபடியே நிர்ப்பரராய், நிரபராக்வாநுஸந்தாநத்தாலே வந்த ப்ரீத்யுத்கர்ஷியாலுண்டான ராஜகுலமாஹாத்ம்யத்தோடே புறப்பட்டுக் கோயிலேற வெழுந்தருளினார்.

அநந்தரம் கூரத்தாழ்வானும், எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு நிற்க, அவனைப் பார்த்தருளி, ஆளவந்தார் நம்மைவிசேஷகடாக்ஷம்பண்ணி பெரியநம்பியை நோக்கிப் ப்ரபத்திபண்ணி யருளினது ஸபலமாம்படி நம்பி நம்மை வாழ்வித்தருளினார் கண்டீரேயென்றருளிச்செய்து, உடையவரும் ஆழ்வானைக் குறித்து, உமக்குமுட்பட ஒருஸம்வத்ஸரம் சுஶ்ரூஷை கொண்டு அத்யவஸாயபாஹுள்யத்தையறிந்து சொல்லென்று நியமித்தருளினாரென்ன; ஆழ்வானும்; ஒருஸம்வத்ஸரம் இஶ்ஶரீரத்திறத்து நிலையுண்டோ, இல்லையோவென்று வ்யாகுலாந்தக்கரணராய் விசாரித்தருளி பொறுக்கவல்லதறியாதபோராசையாலே ஸம்வத்ஸர பர்யந்தம் - ஆசார்யன் திருமாளிகைவாசலிலே மாஸோபவாஸம் பண்ணுகையென்று ஶாஸ்த்ரமுண்டாகையாலே அப்படியேசெய்ய, உடையவரும் இரங்கி ப்ரஸாதித்தருளினார்.

முதலியாண்டானும் எம்பெருமானார் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, அடியேனுக்கும் அவ்வர்த்தம் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், ஆழ்வான் ஒருவர்க்குமே நம்பி ஸ்ரீபாதத்திலே விண்ணப்பஞ்செய்துகொண்டது, நீர் நம்பி ஸ்ரீபாதத்தேறப்போய்க் கேளுமென்று அருளிச்செய்ய; முதலியாண்டானும், திருக்கோட்டியூரேற வெழுந்தருளி, நம்பி ஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டு ஆறுமாஸம் நின்றவிடத்திலும் அவர் முகங்கொடாமலிருக்க, பின்பு ஆண்டானும் நம்பி திருவடிகளிலே ஸேவித்து நிற்க; அவரும் ராமாநுஜபரிகாஹித்தனைப்போலேயிருந்தாயே! என்ன, அடியேன் தாஶரதியென்ன, ஆகில் வாரும் என்று கேட்டருள; இவரும் சாமாஹஸ்யார்த்தம் அடியேனுக்கும் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் (విద్యామదో ధనమద స్తృతీయోభిజనో మదః। ఏతే మదావలిప్తానా మేతఏవసతాందమః) (வித்யாமதோ தநமத ஸ்த்ருதீயோபிஜநோ மத:-ஏதேமதாவலிப்தாநா மேதஏவஸதாந்தம:) என்கிற இம்மூன்று குறும்பும்போனால் எம்பெருமானார்தாமே க்ர்பைபண்ணி ப்ரஸாதித்தருளுவர், அஞ்சாதே போமென்று தம்திருவடித் தாமரைகளாலே இவர் உத்தமாங்கத்தை அலங்கரித்து விடைகொடுத்தருள, இவரும் மிகவும்

சமதமாத்யாத்மகுணங்களையுடையராய், கோயிலுக்கெழுந்தருளி, உடையவர் ஸ்ரீபாதத்தில் தண்டன்ஸமர்ப்பித்து, நம்பி அருளிச்செய்தபடியை தம்முடைய ஆர்த்தியெல்லாந்தோற்ற விண்ணப்பஞ்செய்து ஸவிநயராயிருக்க, உடையவரும் தம்ஸந்நிதிமுதலிகளைப்பார்த்தருளி, ஆண்டானை நம்பிஸந்நிதியில் ஸ்வரூபசிக்ஷைபெற்று வந்தவேஷமிருந்தபடி பாருங்கோள் என்று அருளிச்செய்து, மிகவும் உகப்போடே ஆண்டானுக்கும் ஸர்வகுஹ்யதமமானசரமஶ்லோகார்த்தத்தை உபதேசித்தருளி, அதிஸஂதுஷ்டராய இப்போதன்றோ நமக்குத் தண்டும் பவித்ரமும் கைப்புகுந்ததென்று அருளிச்செய்தருளினார்.

அநந்தரம், சிலநாளைக்குப்பின்பு, திருக்கோட்டியூர்நம்பி, கோயிலுக்கெழுந்தருளி நம்பெருமாளை ஸேவித்துப் புறப்பட்டு, திருமாலையாண்டானையும் அழைத்துக்கொண்டு எம்பெருமானாருடையமடத்தேயெழுந்தருளினவாறே, உடையவரும் நம்பிஸ்ரீபாதத்திலே ஸேவித்து நிற்க, அவரைக் கடாக்ஷித்து, நீர் திருமாலையாண்டான்பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம்கேளுமென்று உடையவரை அவரிடத்திலே காட்டிக்கொடுத்தருளி, தாம் மீண்டுதிருக்கோட்டியூரேறவெழுந்தருளினார்.

திருமாலையாண்டானும், நம்பியருளிச்செய்தபடியே திருவாய்மொழிதொடங்கி நடத்தாநிற்க, ஆளவந்தார் அருளிச்செய்தபடி ஆண்டான் நிர்வஹித்தமொழிய, பாட்டுக்களிலேயும் சில அர்த்தவிசேஷங்களை ப்ரதிபாதித்து உடையவர் அருளிச்செய்ய; இது ஆளவந்தார் அருளிச்செய்யக் கேட்டிலோமென்று அருளிச்செய்தருளி, "அறியாக்காலத்துள்ளே" என்கிறபாட்டுக்கு அறிவுநடையாடாததசையிலே ஸம்பந்தஜ்ஞானத்தைப் பிறப்பித்து, பிறந்தஜ்ஞானத்தை யழிக்கக்கடவதான தேஹஸம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய் என்கிற இழவாலே அருளிச்செய்கிறார் என்று திருமாலையாண்டான் அருளிச்செய்ய; உடையவரும் முன்னில் பாட்டுக்களோடும், பின்னில் பாட்டுக்களோடும் பெரியப்ரீதியோடே நடவாநிற்க, நடுவே அபார்த்தமாய் ப்ரகரணத்தோடும் சேராது, ஆகையாலே இங்ஙனேயாமித்தனை;- அறியாமையாயாதடியேனை - அறியாக்காலத்துள்ளே - அடிமைக்கண் அன்புசெய்வித்து - வைத்தாயால்" என்றருளிச்செய்கிறாரென்று இதனையும் ஒரு உபகாரஸ்ம்ருதிபரமாக அருளிச்செய்தவாறே, இது விஶ்வாமித்ரஸ்ருஷ்டி, ஆளவந்தார் அருளிச்செய்யக் கேட்டிலோமென்று திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்கை தவிர்ந்திருக்க; திருக்கோட்டியூர்நம்பி இதனைக் கேட்டருளி, கோயிலிலே திருமாலையாண்டான்பக்கலெழுந்தருளி, திருவாய்மொழி நடக்கிறதோ? என்று கேட்டருள, ஆண்டானும் அடியேன் ஆளவந்தார்பக்கல்கேட்ட அர்த்தமொழிய இவர் வேறேசில அர்த்தங்களை ஸ்வகல்பிதமாகச் சொல்லுகையாலே தவிர்ந்தேன் என்ன, நம்பியும் அவர் சொன்ன அர்த்தமேதென்ன, ஆண்டானும்; - "அறியாக்காலத்துள்ளே" என்கிறபாட்டுக்கு உபகாரஸ்ம்ருதியாகவேணுமென்கிறார் என்ன;

இவ்வர்த்தமும் ஆளவந்தார் அருளிச்செய்ய நாம் கேட்டிருக்கிறோமெ ன்று நம்பி அருளிச்செய்து, ஸாந்தீபநிபக்கலிலே க்ருஷ்ணன் வேதாத் யயநம் பண்ணினாப்போலேகாணும் உம்முடைய பக்கலிலே எம்பெரு மானார் திருவாய்மொழிகேட்கிறது, ஆளவந்தார்திருவுள்ளத்திலுள்ள ஆர்த்தமொழிய இவர்க்கு வேறொன்றும் ப்ரகாசியாது, இவர்க்கு நீர் அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணுகிறோமென்றிராதே கொள்ளுமென்று அரு ளிச்செய்து, நம்பியும், திருமாலையாண்டானையும் பெரிய நம்பியையுங் கூட்டிக்கொண்டு எம்பெருமானார்மடமேயெழுந்தருள, உடையவரும் அதிப்ரீதியுடனே தாமுந் தடக்கையுங்கூப்பி இவர்களதிருவடிகளிலே ஸேவித்துநிற்க, அவர்களும் திருவாய்மொழிவிட்டதுவாயதொடங்கி நீர் பலகால் அபசாரப்பட்டதாகிலும் பராங்குசத்தைத் தலைக்கட்டுமென்று ஆண்டானுக்கருளிச்செய்தார்கள். பின்னையும் திருவாய்மொழிதொடங்கி நடவாநிற்கச்செய்தே, மீண்டுமொரு அர்த்தப்ரஸங்கத்திலே ஆண்டான் பரதிபாதித்த அர்த்தங்கேட்டு, ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார் என்று உடையவர் விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும், நீர் ஆளவந்தா ரைக் கண்டறியோமென்றிருக்க, இப்படி அருளிச்செய்யார் என்கைக்கு நிதானமென்னென்று கேட்டருள, உடையவரும் நான் ஆளவந்தாருக்கு ஏகலவ்யனன்றோவென்று விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும், திருக் கோட்டியூர்நம்பி நமக்குரைத்தது ஒத்திருந்தது, இதுவும் ஒருதிருவவ தாரம், ஆளவந்தார்பக்கல் கேளாத அர்த்தமெல்லாம் இங்கே கேட் டோமென்று அவரைத் தண்டனிட்டருளினார்.

பின்பு எம்பெருமானாரும் திருவாய்மொழி சாத்தி போரப்ரீதராயி ருக்க, அவரைப்பார்த்து, பெரியநம்பியும் ஆழ்வார்திருவரங்கப்பெருமா ளரையர்பக்கலிலே இன்னமொரு அர்த்தவிசேஷமுண்டு, அதனை அவர்பக்கலிலே கேளுமென்று அருளிச்செய்தருள, உடையவரும், அது லபிக்கைக்காக அன்றுமுதல் ஆறுமாஸம் அவருக்குச்சப்பாசப்பாலமு துகாய்ச்சி ஸமர்ப்பித்தும், திருவத்யயநகாலங்களிலே அரையர்திருமே னிக்கு அநுரூபமாக மஞ்சட்காப்பு அரைத்து ஸமர்ப்பித்தும் அநுவர் த்தித்தும் போருங்காலத்திலே, ஒருநாள் மஞ்சட்காப்பரைத்து நீராடப் பண்ணுகிற காலத்திலே, அவருடைய திருமேனிக்கு அநுரூபமல்லா திருக்கிறபடியை அவர்திருமுகமண்டலவிகாரத்திலே கண்டு, மஞ்சள் பாத்திரத்தைக் கடக்கவைத்து, வேறேபாங்காக மஞ்சட்காப்பரைத்துசாத் தி நீராடப்பண்ணியருள, திருவரங்கப்பெருமாளரையரும் அத்தைக் கண்டு, மிகவுந் திருவுள்ளமுகந்தருளி, உடையவரைக்குறித்து, என்னு டைய ஸர்வஸ்வத்தையுங் கொள்ளைகொள்ளவோ நீர் இப்படி செய்த தென்று அருளிச்செய்து, வாரீர் எம்பெருமானாரே, உமக்கொரு சரம புருஷார்த்தஞ்சொல்லுகிறோம் கேளீரென்று, தேவுமற்றறியாத ஸ்ரீமது ரகவிகளைப்போலே நீரும் (గురురేవ పరంబ్రహ్మ గురురేవ పరంధనం। గురురేవ పర [illegible] గురురేవ పరాయణం॥ గురురేవ పరావిద్యా గురురేవ పరాగతిః। యస్మాత్తదుపదేష్టా [illegible]

[illegible]) (குருரேவ பரம்ப்ரஹ்ம குருரேவ பரந்தநம் - குருரேவ பரஃகாமோ குருரேவ பராயணம் - குருரேவ பராவித்யா குருரேவ பராகதி: - யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத்குருதரோகுரு:) என்று சொல்லுகிறபடியே, * எனைத்தீமனங்கெடுத்தும, * மருவித்தொழும மனமே தந்தும,* அறியாதனவறிவித்த ஆசார்யனே உபாயோபேயமென்று விஸ்வஸித்தது, ([illegible]) (ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத்சரரூபீ நஸம்ஸய:) என்றும, "பிதக்காளைடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து" என்றுய சொல்லுகிறபடியே - உறங்கும்பெருமாள்தானே உலாவும்பெருமாளாயவந்தார் என்றிருமென்று பஞ்சமோபாய நிஷ்டையான சரமபாவார்த்தவிசேஷத்தை பரஸாதித்தருளினார்.

பெரியநம்பிஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்தபோதே, ஸ்வரூபஸித்தியுண்டாயிருக்க, இவர், பலஸ்ரீபாதத்திலும உபஸ்த்தங்களைக்கடியென், அவர்களதான மேலவிழுந்து ஆர்த்தங்களை உபதேசிக்கைக்கடியென் என்னில்; ஒருராஜா ஸ்வகுமாரார்த்தமாக பலமந்த்ரிகளிடத்தே நிதிகளைவைத்து, தன்குமாரன ப்ரபுத்தஞானவானே கொடுக்கச்சொல்லிப் போமாப்போலே, ஆளவந்தாரும இவர்களிடங்களிலே ஒவ்வொரு அர்த்தவிசேஷங்களை உபதேசித்துவைக்கையாலே, ஆளவந்தார ஸ்ரீபாதத்திலேஸேவித்து அவ்வர்த்தங்களைக் கேளாதஇழவுதீர, இவர்கள்பக்கல் அவ்வர்த்தங்களைப்பெற்று இழவுதீரந்தாரித்தனை. இனி இவ்வாசார்யர்களுக்கு, ஆளவந்தார் இளையாழ்வாரை "ஆமுதல்வன" என்று கடாக்ஷித்து, நாம உங்களுக்குச்சொல்லும் பரமரஹஸ்யத்தைஇளையாழ்வாருக்குச்சொல்லுங்கோளென்று நியமித்தருளுகையாலே, சிஷ்யருமாம், ஆசார்யருமாம, விலக்ஷணஸம்பந்தமே வேண்டுமென்று மேல்விழுந்து உபதேசித்தார்கள். ஆகையாலே முன்புள்ள ஆசார்யர்கள் இவர்க்கு ஆசார்யர்களாய் வாழ்வுபெற்றனர்; பின்புள்ளவர்கள் இவர்க்கு சிஷ்யர்களாய் ஸ்வரூபம்பெற்றார்கள். ஒருஹாரத்தினநடுவே மாணிக்கங் கிடந்து, அந்த ஹாரத்தை சோபிதமாக்குமாபபோலே, * இடையே யிராமாநுசமுநியாய விளங்கினரிமே.

உடையவர், கத்யத்ரயமும, நித்யத்திருவாராதநபபடியும், கீதாபாஷ்யமும் அருளிச்செய்து, "பரப்ரஹ்மம ஸ்ரீமந்நாராயணனே" என்று அறுதியிட்டு, தாஸநப்ரவர்த்தநம பண்ணிக்கொண்டுபோருகிறகாலத்திலே, எம்பெருமானார் ஏழகம்மாதுகரமபண்ணி அமுதுசெய்தருளுகிற காலத்திலே இவர், ஸ்த்தாநத்துறையைநெருக்கிக்கொண்டுபோர, அவர்களிலே ஒருவர் இவர் மாதுகரம பண்ணுகிறவிடத்திலேவிஷமிச்ராந்நத்தை ப்ரயோகிக்கும்படி நியமித்துவைக்க, அந்தக்ரஹஸ்த்தரும, ஸ்வஸ்த்ரீயைப்ரேரிக்க, அவளுமகூடாதென்ன, அவனும் நிர்பபந்திக்க, அவளும் விஷமிஸ்ராந்நத்தை மறித்து ஸமாப்பித்து தண்டனிட்டுபபோக, இவரும்இதென்னென்றுதிகைத்து, பாவமறிந்து, ஸகராந்நத்தை ஸாகர

காமினியான திருக்காவேரியிலே கரைத்துவிட்டு உபவஸித்திருக்க, இச்செய்தியைத் திருக்கோட்டியூர்நம்பி கேட்டருளி, கோயிலுக்கெழுந்தருளாநிற்கச்செய்தே, மத்யாஹ்நகாலத்திலே திருக்காவேரியிலே எழுந்தருளாநிற்க, உடையவரும் முதலிகளுமாக வெழுந்தருளி, நம்பிஸ்ரீபாதத்திலே தண்டனிட்டுக்கொண்டு கிடக்க, நம்பியும் அவரை யெழுந்திருக்கச் சொல்லாமலிருக்க, கிடாம்பியாச்சானும் இதென்ன சிஷ்யாசார்ய க்ரமந்தான்? கருமுகைமாலையை வெய்யிலிலே போகடுவார்களோ? என்று பரிந்தெடுக்க, நம்பியும், உம்மைக்காணும்தேடுகிறோம், திருமேனிக்குபரிவர்நீதாம,இன்றுமுதல் தளிகைக்குப்பண்ணி, இவர்க்கு ஏகமாத்துகரமாக ப்ரஸாதியுமென்று நியமித்தருள, கிடாம்பியாச்சானும் அப்படியே பண்ணி ஸாதித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்பு, யஜ்ஞமூர்த்தி யென்கிற மஹாவித்வானான ஒருப்ராஹ்மணன் கங்காஸ்நாநம்பண்ணி அங்குள்ளவித்வான்களைஜயித்து, அங்கே மாயாவாத ஸந்யாஸாச்ரமத்தையும் பரிக்ரஹித்து, வித்யையாலும், சிஷ்யஸம்பத்தாலும் மிகுந்தவனாயிராநிற்க, அவனும் அங்கே உடையவருடைய வைபவத்தைக்கேட்டு, நாம் அங்கேபோய் அவருடனே தர்க்கிக்கவேணுமென்று அநேக சாஸ்த்ரங்களையெழுதிச்சுமை சுமையாகக்கட்டியெடுப்பித்துக்கொண்டு, தனவித்யாகர்வமெல்லாந்தோற்ற, பெரியமதிப்புடனே, அதிகவரையிலே கோயிலேறவந்து உடையவரைப்பார்த்து, என்னுடனே தர்க்கிக்கவேணுமென்ன, இவரும் அப்படியேசெய்கிறோம், நீ தோற்றால் என்னசெய்கிறாயென்ன; அவனும் நான் தோற்றேனாகில் உம்முடைய ஸித்தாந்தத்திலே புகுரக்கடவேனென்ன, உடையவரும், நாம் தோற்றோமாகில் க்ரந்த ஸந்யாஸம் பண்ணி தோற்றோம் என்கிறோமித்தனையென்ன; அவனும் ஸம்மதித்து, இப்படி அந்யோந்யம் ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டு, பதினெட்டு நாள் அவதியுமிட்டு,இருவரும் ஒருவர்க்கொருவர்தோலாமல் மத்தகஜங்கள்போலே தர்க்கிக்க, இப்படி பதினாறுநாள் ஒருவர்க்கொருவர் தோலாமல் தர்க்கித்தும் அவனைஜயிக்கப்போகாமல, பதினேழாம்நாள் அவனுடைய யுக்திப்ரபலமாக, இவரும் அதுக்குமேல் ஒன்றுந்தோன்றாதபடிநிற்க, அவ்வளவிலே அவனும் தன்வெற்றிதோற்றவெழுந்திருந்து அற்றைக்குப்போக, ராமாநுஜனும், வ்யாகுலாந்தக்கரணராய்மடமே எழுந்தருளி, தம் திருவாராதநமான பேரருளாளரையுந் திருவடிவிளக்கி, அமுதுசெய்யப்பண்ணி, பெருமாளுடனே வெறுத்து, பெருமாளே! ஆழ்வார்தொடங்கி ஆளவந்தாரளவாக, *ஓராண்வழியாய் ப்ரதிஷ்டிதமாய்வந்தஇத்தர்ஶநம் அடியேனைத்தோற்றித் தோற்கக்கடவதோ!, இந்நாள்வரையில் தேவரீர ஸ்வரூபரூப குணவிபூதிகள் ஸத்யமென்று ப்ரமாணத்தை நடத்திக்கொண்டு போந்தீர், இப்போது ஒரு மாயாவாதியைக் கொண்டுவந்து என்னுடையகாலத்திலே எல்லா ப்ரமாணங்களையும் அழித்துப்போகட்டுலீலைகொண்டாடத் திருவுள்ளமாகில்

படியே செய்தருள என்று விண்ணப்பஞ்செய்து, தாமும் அமுதுசெய்யா
மல் கண்வளர்ந்தருள; பேரருளாளரும் அன்றாராத்ரி இவர்ஸ்வப்நத்திலே
யெழுந்தருளி, இளையாழ்வீர்! நிரூபிப்பானேன், உமக்கு, ஸமாச்ரயிரு
ப்பானொருசிஷ்யனை உண்டாக்கித்தந்தோமாகாணும், உம்முடையபரமா
சார்யரான ஆளவந்தார் அருளிச்செய்த மாயாவாதகண்டநத்தைச்சொ
ல்லி அவனை ஜயியும் என்றருளிச்செய்தருள, உடையவரும் திருக்கண்
களை விழித்து இதொருஸ்வப்நமிருந்தபடி யென்னென்று மிகவுந்திரு
வுள்ளமுகந்து, ஸ்வப்நத்திலே அருளிச்செய்த யுக்தியைத் திருவுள்ளத்தி
லேகொண்டு எழுந்தருளியிருந்து, ஸந்தோஷத்துடனே நித்யாநுஷ்
டாநஞ் செய்தருளி, தமதிருவாராதநமான பேரருளாளரையும்
ஸேவித்துப்புறப்பட்டு, ப்ரஸங்கமபேராய்க்கொண்டு தர்க்ககோஷ்டி
யிலேயெழுந்தருள, அவ்வளவிலே அந்தவித்வானும் பாலஞ்ஞரானை
யாலே, உடையவர் எழுந்தருளுகிற காம்பீர்யத்தையும் ஸந்தோஷ
த்தையுங்கண்டு, இவர் நேற்று போநதினமும் எழுந்தருளும்போது
சோம்பிக்கொண்டுபோனார், இப்போது மத்தகஜம்போலே நிர்பேவா
ராகின்றார், ஆகையாலே இது மாநுஷமன்று, அமாநுஷ சேஷ்டித
மாயிராநின்றதென்றுநிர்ணயித்து, சடக்கென எழுந்திருந்து எதிரேசென்
று, உடையவர் திருவடிகளிலே ஸேவித்து, "தேவரீருக்குத் தோற்றேன்"
என்று ஸ்ரீபாதரக்ஷைகளை சிரஸாவஹித்துக்கொண்டு, அடியேனை இரங்
கி யருளவேணுமென்ன; உடையவரும், இதென்னென்று நினைத்து,
தர்க்கிக்கலாகாதோவென்ன, அவனும் உடையவரைக்குறித்து, தேவரீரு
க்குப் பெரியபெருமாள் ப்ரத்யக்ஷமாயிருப்பு, தேவரீரென்ன, பெரிய
பெருமாளென்ன, பேதமில்லையென்று அறிந்தேன், இனி அடியேன்
தேவரீர்ஸந்நிதியில் வாய்திறந்து ஒருவார்த்தைசொல்ல ப்ராப்தியில்லை
யென்ன, உடையவரும் உகந்தருளி, ஆகிலும், நீ சொன்ன மாயாவாத
ஸித்தாந்தத்திலும், ப்ரஹ்மம நிர்குணமென்கையாலே அந்த பரஹ்
மத்திற்கு, ஸத்யத்வாதி குணயோகங்களைச் சொல்லுகிற வேதவாக்யங்
கள் அப்ரமாணமாய்விடும், அவித்யாதிரோஹிதமான ப்ரஹ்மத்திக்கு
குணயோகமுண்டாகையாலே ஸகுணச்ருதியில விரோதமில்லையென்றீ
ராகில் அதுகூடாது, எங்ஙனேயெனனில்; (జ్ఞానస్వరూపం పరం బ్రహ్మ తన్నివర్త్యం
మృషాత్మకం। అజ్ఞానం చేత్తిరస్కుర్యాత్ కః ప్రభుస్తన్నివర్తనే) (ஜ்ஞாநரூபம்பரம்ப்ரஹ்ம
தந்நிவர்த்யம்ம்ருஷாத்மகம் - அஜ்ஞாநம்சேத் திரஸ்குர்யாத் கஃப்ரபுஸ்
தந்நிவர்த்தநே) என்கிறபடியே ஜ்ஞாநரூபமாயிருந்துள்ள பரப்ரஹ்மத்
தை அஜ்ஞாநரூபமான அவித்யை மறைத்ததாகில் அந்த அவித்யைக்
கு நாசமில்லையாகையாலே அது நித்யமாய்விடும், அப்படியாகி லென்
னென்னில்; அவித்யை என்றும், ப்ரஹ்மம் என்றும், இரண்டுவஸ்து
உண்டாகையாலே, அத்வைதமென்கிற மஹாகஜம், த்வைதமாகிற ஆழ
ங்காலிலே அமிழ்ந்தது, இத்யாத்யுக்திகளை யருளிச்செய்ய; அவனும் இ
சைந்து, இவர்க்குத் தோற்று, ஏகதண்டத்தை முறித்தெறிந்துவிட்டு,

எம்பெருமானார் திருவடிகளிலே ஸாஷ்டாங்க ப்ரணாமம் பண்ணிக்கொண்டு கிடக்க, எம்பெருமானாரும், தம்திருவடி மலர்களாலே அவன்முடியை சோபிதமாகக் கிளப்பி எடுத்தணைத்துக்கொண்டு மிகவும் க்ருபை செய்தருள, அவனும் அடியேனுக்கு த்ரிதண்டகாஷாயாதிகளை ப்ரஸாதித்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் அப்படியே செய்கிறோமென்று திருவுள்ளம்பற்றி, முன்பு சிகாயஜ்ஞோபவீத த்யாகம் பண்ணினதாகையாலே அதற்கு ப்ராயஶ்சித்தம் பண்ணவேணுமென்று (హీనో యజ్ఞోపవీతేన యతిస్స్యాద్ధ్యానభిక్షుకః। తస్య క్రియా నిష్ఫలాస్స్యుః ప్రాయశ్చిత్తం విధీయతే॥ గాయత్రీసహితాయైవ ప్రాజాపత్యాష్టకాదను। పునస్సంస్కారమాహృత్య ధార్యం యజ్ఞోపవీతకమ్) (ஹீநோ யஜ்ஞோபவீதேந யதிஸ்யாத் த்யாநபிக்ஷுகः- தஸ்ய க்ரியா நிஷ்பலாஸ்யு ப்ராயஶ்சித்தம் விதீயதே - காயத்ரீஸஹிதாயைவ ப்ராஜாபத்யாஷ்டகாதநு - புநஸ்ஸம்ஸ்காரமாஹ்ருத்ய தார்யம் யஜ்ஞோபவீதகம்) என்கிறபடியே ஶாஸ்த்ரோக்த ப்ரக்ரியையாலே ப்ராயஶ்சித்தமும் பண்ணிவைத்து, சிகாயஜ்ஞோபவீதங்களையும் தரிப்பித்து, (ప్రధార్యం తాపసంస్కారం వైష్ణవైర్ముముక్షుభిః। సర్వాశ్రమేషు సతతం స్త్రీశూద్రాణాం ద్విజోత్తమ) (ப்ரதார்யம் தாபஸம்ஸ்காரம் வைஷ்ணவம் முமுக்ஷுபிஸ்ஸமர்த்தம - ஸர்வாஶ்ரமேஷு ஸததம் ஸ்த்ரீஶூத்ராணாம் த்விஜோத்தம) என்கிறபடியே திருவிலச்சினை முதலான பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்து, (ఉపవీతం త్రిదండం చ పాత్రం జలపవిత్రకమ్। కౌపీనం కటిసూత్రం చ నత్యాజ్యం యావదాయుషమ్) (உபவீதம் த்ரிதண்டம்ச பாத்ரம் ஜலபவித்ரகம் - கௌபீநம் கடிஸூத்ரம்ச நத்யாஜ்யம் யாவதாயுஷம்) என்கிறபடியே த்ரிதண்டகாஷாயாதிகளை நீர் உள்ளதனையுந் தரியுமென்று ப்ரஸாதித்தருளி, உகப்பின்மிகுதியாலே, பேரருளாளர் தமக்கு ஸ்வப்நமுகேந அருளிச்செய்தருளின உபகாரத்திற்கு ஸ்மாரகமாக "அருளாளப்பெருமாளெம்பெருமானார்" என்று திருநாமஞ் சாத்தியருளினார்.

அநந்தரம், அவனை அழைத்துக்கொண்டுபோய், நம்பெருமாளையும் ஸேவிக்கப்பண்ணி, தீர்த்தப்ரஸாதமும், ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதிப்பித்துப் புறப்பட்டு மடமேபோய், தம்திருவாராதநமான பேரருளாளனை ஸேவிக்கப் பண்ணுவித்து, "இவர்காணும் உம்மை நம்பக்கல் சேர்த்தருளினவர்" என்று அருளிச்செய்து, அவரைத் திருவாராதநம் பண்ணி அமுதுசெய்வித்துத் தாமும் அமுதுசெய்து, இவர்க்குத் தளிகை ப்ரஸாதமும் ப்ரஸாதித்தருள; இவரும் அமுதுசெய்து ஸஹர்ஷராய் வாழ்ந்துகொண்டிருக்குங்காலத்திலே, உடையவர் இவரைப்பார்த்து, "வாரீர், அருளாளப்பெருமாளெம்பெருமானாரே! ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களை ஓதிர்" என்று அருளிச்செய்து, திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரமும் ஓதுவித்து மற்றும்வேண்டும் தத்வசிக்ஷைகளையும் ப்ரஸாதித்தருளினார்.

அநந்தரம் உடையவர், ஆழ்வானையும், ஆண்டானையும், அருளாளப் பெருமாளெம்பெருமானாரையும் க்ருபை பண்ணிக்கொண்டு, [illegible]

கோஷ்டியாக நடக்குங்காலத்திலே ஆசார்யர்களெல்லாரும் வந்து உடையவர்திருவடிகளிலேஆச்ரயிக்கத்தைக்கேட்டு அநந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர்நம்பியும், மருதூர்நம்பியும், உடையவர் திருவடிகளிலே யாச்ரயிக்கவேணுமென்று எழுந்தருள அவர்களை, அருளாளப்பெருமா ளெம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிப்பித் தருளினார். அவரும் பிதராய், அவர்களைக்குறித்து, "குருவியின் கழுத்திலே பனங்காயைக்கட்டினாற்போலே உடையவர், செய்தார், நீங்கள் எம்பெருமானார்திருவடிகளைத்தஞ்சமென்றிருங்கோள்" என்று அருளிச் செய்தருளினார்.

பின்பு *ஆயிரமான திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச் செய்துகொண்டு திவ்யகோஷ்டியாக எழுந்தருளியிருக்கிறவளவிலே, "ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி" என்கிற திருவாய்மொழி நடவாநிற்க "சிந்துபூமகிழுந்திருவேங்கடம்" என்கிறவிடத்துக்கு அர்த்த மருளிச்செய்கிறவர், முதலிகளைப் பார்த்தருளி, புஷ்பமண்டபமான பெரியதிருமலையிலே திருவேங்கடமுடையானுக்கு உகப்பாகத்திருநந்தவநஞ்செய்து திருமாலைசாத்துவாராரொருமுண்டோவென் றருளிச்செய்ய; அவ்வளவிலே அநந்தாழ்வானெழுந்திருந்து, "அடியேன் விடை கொள்ளுகிறேன்" என்று விண்ணப்பஞ்செய்து தண்டன் ஸமர்ப்பித்து திருமலைக்கெழுந்தருளித் திருவேங்கடமுடையானையும் திருவடி தொழுது, திருநந்தவநஞ்செய்து, அத்திருநந்தவநத்துக்கு, "ராமாநுஜன்" என்று திருநாமம் சாத்தி, திருமாலைகட்டித் திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிறபடியை, உடையவர்கேட்டுஉகந்தருளி, திருவாய்மொழிப்ரபந்தார்த்தத்தைத்தீவ்ரமாக நடத்திச் சாத்தியருளினார். பின்பு, உடையவரும் நம்பெருமாளை ஸேவித்து, அடியேன் பேரருளாளனையும், திருவேங்கடமுடையானையுந் திருவடிதொழுது மீண்டு விடைகொள்ளுகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய; போய்க்கடுகவாரும் என்று திருவுள்ளமாயருள; உடையவரும், முதலிகளுடனே புறப்பட்டு, திருக்கோவலூரிலே ஆழ்வார்கள் நாயனாரையுந்திருவடிதொழுது,பெருமாள்கோயிலே யெழுந்தருளி, திருக்கச்சிநம்பி மடமேசென்று, (శ్రీమత్కాంచీమునిం వన్దే కమలాపతినన్దనం। వరదాఙ్ఘ్రిసదాసఙ్గ రసాయనపరాయణం) (ஸ்ரீமத்காஞ்சீமுநிம்வந்தே கமலாபதிநந்தநம் - வரதாங்க்ரிஸதாஸங்கரஸாயநபராயணம்) என்று விண்ணப்பஞ்செய்து நம்பிதிருவடிகளிலே தண்டன ஸமர்ப்பித்து நிற்க, அவரும் க்ருபைபண்ணியருள; அவருடனேகூடவெழுந்தருளி, அவர்புருஷகாரமாக ஸ்ரீகோபுரராஜனையும், ஆனைகாத்தபெருமாளையும் ஸேவித்துப் புகுந்து, (మహావరాహం దేవేశం ద్రష్టుకామో రసాతలాత్। నిర్యయౌ యత్ర భగవాననన్తగిపన్నగేశ్వరః॥ తీర్థే తస్మిన్మహాపుణ్యే సిద్ధసఙ్ఘనిషేవితే। సమాహూతాని తీర్థాని సర్వాణి మునిభిస్తదా) (மஹாவராஹம்தேவேசம்த்ரஷ்டுகாமோ ரஸாதலாத் - நிர்யயௌ யத்ரபகவாநநந்தபந்நகேஶ்வர: - தீர்த்தேதஸ்மிந்மஹாபுண்யேஸித்த

ஸங்கமிஷேவிதே - ஸமாஹூதோநிதீர்த்தாநி ஸர்வாணி முநிபிஸ்ததா) என்றுசொல்லப்பட்டமாஹாத்ம்யத்தையுடைய திருவநந்த ஸரஸ்ஸி லேநீராடி, கேசவாதிதிருநாமங்களையுஞ்சாத்தியருளி *எறிதிரை வையம் முற்று மேனததுருவாயிடந்த ஞானப்பிரானையும் ஸேவித்து, ப்ர தக்ஷிணமாக வெழுந்தருளி ஆழ்வார்களையும் ஸேவித்து, ஸ்ரீபலிபீடத் தையும் தண்டனிட்டு, ஜய விஜயர்களையும் ஸேவித்து, ப்ரதக்ஷிண மாக வெழுந்தருளி, திருவநந்தாழ்வானையும் ஸேவித்து, திருப்புற் றடியிலேயும் தண்டனிட்டு, அதற்குக்கிழக்காக தம்மை விசேஷ கடாக்ஷம் செய்தருளின யமுனைத்துறைவர் திருமுற்றத்திலே, (நமோ நமோ [illegible]) (நமோநமோயாமுநாய யாமுநாய நமோநம:) என்று அநுஸந்தித்து தண்டனஸமர்ப்பித்து, கரியமா ணிக்கத் தெய்வப்பெருமானையுந்திருவடி தொழுது, ஸ்ரீபுண்யகோடி விமா னத்தையும் ஸேவித்து, திருமடைப்பள்ளி நாச்சியாரையும் ஸேவித்து, பேரருளாளப்பெருந்தேவியாரையும் ஸேவித்து உள்ளேபுகுந்து, ([illegible]) ஆகாராத்ரயஸம்பந்நாமரவிந்தநிவாஸிநீம் - அசேஷ ஜகதீசித்ரீம்வந்தே வரதவல்லபாம்) என்று அநுஸந்தித்து, தீர்த்த ப்ரஸாதமும் ஸ்வீகரித்துப்புறப்பட்டு ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, திருவயிந்தைமண்டபத்திலே திருவாழியாழ்வானையும், பெரியதிருவடி யையும் ஸேவித்து * சென்றதலந்தமராகனையாளும் சேனைநாதன் கழல் வணங்கி எழுந்தருளி, ([illegible])(அசேஷவிக்நசமநம் அநீகேச்வரமாச்ரயே) ஜாய ஸ்ரீஹஸ்திகிரிச்வரம) என்று தண்டனஸமர்ப்பித்து, வையமாளி கையிலேயேறி, ஸேவாக்ரமத்திலே நம்பியை முன்னிட்டுக்கொண்டு உள்ளேபுகுந்து, *உலகத்து மாதியானத்தியூரானை பேரருளாள ரையும் ஸேவித்து, திருப்பல்லாண்டையும், வரதராஜாஷ்டக த்தையும் அநுஸந்தித்து, *தென்னத்தியூர்கழலிணைக்கீழ்ப்பூண்ட அன்பாளராயிப்ப, திருக்கச்சிநம்பியும், இவர்க்கு தீர்த்தப்ரஸாத மும், *துயரறுசுடரடியான ஸ்ரீசடகோபமும் ப்ரஸாதிப்பித்தருள ஸ்வீகரித்து க்ருதார்த்தராய்ப்புறப்பட்டு, திருக்கச்சிநம்பியுடனே, அடி யேன பெரியதிருமலைக்கு விடைகொள்ளுகிறேனென்று விண்ணப்பஞ் செய்ய, அவரும் "சென்றுவணங்குமினோ சேணுயர்வேங்கடத்தை" என்றருளிச்செய்து விடைகொடுத்தருளினார்.

உடையவரும், அதிப்ரீதியோடே திருப்பதிக்கெழுந்தருளுமளவி லே மார்க்கமத்யத்திலே "வழிதிகைத்தலமருகின்றேன்" என்கிறபடி யே வழிதப்பித் திகைத்துநிற்க, முதலிகளும் அங்கே ஒருஏற்றமிறைப் பானைக்கண்டு, திருமலைக்கு வழியெங்ஙனேயென்று கேட்டளவில், அவனும் செவ்வையான வழியைக்காட்ட, உடையவரும் இதொரு அமானவன்புருஷகாரமிருந்தபடியென்! என்று அவனைத்தண்டனிட்டு, முதலிகளும் இப்பரமாஸ்திகத்வத்தைக் கண்டு களித்து அவர்களு

தண்டனிட, இவரும் முன்னடந்தெழுந்தருளி, திருமலையாழ்வாரையும், திருத்தாழ்வரையிலே யெழுந்தருளியிருக்கிற ஸ்ரீபராங்குசபரகாலப்ரப்ருதிகளான ஆழ்வார்பதின்மரையும் ஸேவித்து, திருப்பதியிலே யெழுந்தருளியிருந்து, விட்டலதேவனையும் சிஷ்யனாக்கிக்கொண்டு, திருப்பதியிலே ஸ்வசிஷ்யர்கள் முப்பதுதிருநாமங்களைக் குடியேற்றி, இளமண்டபத்தையும் கைப்பற்றுகவிநியோகித்து அங்கே எழுந்தருளியிருக்க; இச்செய்தியை அநந்தாழ்வான் தொடக்கமான ஸ்ரீவைஷ்ணவர்கள் கேட்டருளித் திருமலையினின்றுமிறங்கிவந்து எம்பெருமானாரை ஸேவித்து, "தேவரீர் அப்பனை ஸேவிக்க எழுந்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், ஆழ்வார்கள் திருமலையிதியாமையாலே நாமும் ஏறக்கடவோமல்லோம், திருத்தாழ்வரையிலே யெழுந்தருளியிருக்கிற ஆழ்வார்களை ஸேவித்திருக்கிறோமென்றருளிச்செய்ய; அநந்தாழ்வானும், தேவரீர் ஏறாதபோது அடியோங்களொருவரும் ஏறோம், மற்றுமுள்ளாரொருவரும் ஏறுவதில்லையென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், அப்படியே செய்கிறோமென்று தத்ருத்தணமாகத் திருமேனியை சோதித்துக்கொண்டு எழுந்தருளி, அடிப்புளியாழ்வாரடியிலே திருமலையாழ்வாரை ஸேவித்து, (ஸ்ரீநாராயணம்) (பாதேநாதயாரோஹதி) என்கிறபடியே ஸ்ரீவைகுண்டநாதனியோகாத் சேதநன, பாதபீடத்திலே அடியிட்டேறுமாபோலே ப்ரதிபத்திபண்ணிக்கொண்டு, திருவேங்கடமுடையான் அருளப்பாடிட்டத் திருமலையேறி, *செப்பார் திண்வரையையும் *பன்மணிநீரோடுபொருதுருளும் கானத்துறையும்" *அன்னனைய பொற்குவடுகளையும், *வேயகள்நின்று வெண்முத்தமே சொரியும் *கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடத்தையும் கண்டுகளித்துக்கொண்டு, திருப்பரியட்டப்பாறையளவிலே எழுந்தருளாநிற்க; திருவேங்கடமுடையான் தீர்த்தப்ரஸாதங்கொண்டு பெரியதிருமலைநம்பி எதிரேஎழுந்தருளி ப்ரஸாதித்தருள; உடையவரும், நம்பிதிருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணி, தீர்த்தப்ரஸாதமும் ஸ்வீகரித்தருளி, தேவரீர் எழுந்தருளவேணுமோ? ஒருசிறியாரில்லையோ? என்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும், நாலுதிருவீதியிலும் ஆராய்ந்து பார்த்தவிடத்தில்என்னிற்காட்டில சிறியாரைக்கண்டிலேனென்ன உடையவரும் முதலிகளும் இத்தைக்கேட்டருளி, அத்யாஸ்சர்யப்பட்டு, கல்வேலியளவிலே எழுந்தருளாநிற்க; ஜீயர்கள், ஏகாங்கிகள், ஸ்ரீவைஷ்ணவர்கள், திருமலையிலுள்ள ஸ்தாநத்தார், ஸ்ரீபாதந்தாங்குவார் முதலான அனைத்துக் கொத்திலுள்ளவர்களும் வந்து எதிர்கொண்டு ஸத்கரிக்க; உடையவரும் முதலிகளுமாக எழுந்தருளி, வைகுந்தன் திருவாசலிலே தண்டன்ஸமர்ப்பித்து, திருக்கோனேரியிலே நீராடி, கேசவாதித்வாதசநாமங்களையுஞ் சாத்தியருளி, நாலுவீதியையும் ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, "சிந்தாமணிகள் பகரல்லைப் பகல்செய்" என்கிறபடியே கசிதாநர்க்க ரத்நத்யுதி ரஞ்ஜிதமான மாடகூடப்ராஸாத

தோரண கோபுர ப்ராகாரங்களையும் அநுபவித்து, அங்கே தம் கைங்கர்யமான ராமாநுஜனென்கிற திருநந்தவநத்திலே எழுந்தருளி, திருக்கண்சாத்தி உகந்தருளி, அநந்தாழ்வானையும் பார்த்து அணைத்துக்கொண்டு "வளர்த்ததனால் பயன் பெற்றேன்" என்று மிகவும் க்ருபைபண்ணியருளி, மற்றும் அங்குண்டான "தேனேய்பூம்பொழில்" என்றும், "விரையார்பொழில்" என்றும், "கோற்றேன்பாய்ந்தொழுகும்குளிர் சோலை" என்றுஞ்சொல்லுகிற * மொய்த்த சோலைகளையும், அச்சோலைக் கலங்காரமாக * செண்பகமாயிருக்கும் திருவுடைய செண்பகம், செருந்தி, திருமகிழ், பாடலம், சுரபுன்னை, புன்னாகம்முதலான மதுஸ்ரவகுஸும ப்ரகர்ஷத்தையுடையதிருப்பூமரங்களின்னெழிலையும், செவ்வந்தி, பிச்சி, இருவாட்சி, மல்லிகை, முல்லைதொடக்கமான கொடிமலரழகையும், "மொய்பூந்தடந்தாழ்வரை" என்று சொல்லுகிற * செந்தீமலரும், * சேராரசுனைகளில, மதகபரமாநாதித மநோஹாரிசெந்தாமரை ஸ்ரீயையும், * திருவேங்கடத் தெண்ணீர்ச்சுனைகளில * மீனாயப்பிறக்கும் விதியுடையாரையும், * கோனேரிவாழுங் குருகு, கொக்கு, நாரை, தாராமுதலான பக்ஷிஸங்கங்களையும, வ்ருக்ஷசாகாரூடபிககூஜித காஹளீநாதங்களையும், * கொண்டலதிரத் தோகைவிரித்து நடமாடுகிற மயூரகேகாரவத்தையும, * வண்டினங்கள் தென்னாதெனாவென்று பண்பாடுகிற பாடலையுங்கண்டு கேட்டு ஆநந்தித்து, * நிலங்கோட்டிடைகொண்ட ஞானப்பிரானையும ஸேவித்து, * அவாவறச்சூழ்ந்தான் திருவாசலிலே தண்டனிட்டு, அநந்தாணிப்புளியையும ஸேவித்து, ஸ்ரீபலிபீடத்தடியிலேதண்டனிட்டு, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி யமுனைத்துறைவர் என்கிற திருப்பூமண்டபத்தையும் ஸேவித்து, (ధనుర్మాసేసితేపక్షే ద్వాదశ్యా మరుణోదయే । ఆయాన్తి సర్వతీర్థాని స్వామిపుష్కరిణీతటే) (தநுர்மாஸேஸிதே பக்ஷேத்வாதஶ்யாமருணோதயே - ஆயாந்திஸர்வதீர்த்தாநி ஸ்வாமிபுஷ்கரிணீதடே) என்று சொல்லப்படுகிற மாஹாத்ம்யத்தையுடைத்தான ஸ்வாமிபுஷ்கரிணியிலே தீர்த்தஸ்வீகாரஞ்செய்து, செண்பகத்திருவாசலுக்குள்ளே புகுந்து தண்டன்ஸமர்ப்பித்து, திருமடைப்பள்ளி, யாகசாலை, திருமாமணிமண்டபத்தையும ஸேவித்து, சேனைமுதலியாரையும் ஸேவித்து, வேங்கடத்தரியையுந் திருவடிதொழுது ஆநந்தநிலயமென்னும் திவ்ய விமாநத்தையுங் கண்ணாலே பருகுவாரைப்போலே அநுபவித்து உள்ளெழுந்தருளி, * அடியாருமவானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் குலசேகரன்படியைக் கடந்து உள்ளேபுகுந்து, * நிலதமுலகுக்காயநின்ற * தண்ணார்வேங்கடவிண்ணோர் வெற்பனை * எண்ணம் புகுந்துதித்திக்கும் * செந்தாமரைக்கட் செங்கனிவாய் நாற்றோளமுதையும் * செங்கமலக் கழலிற்படியும், சிதக்கடலென்கிற திருமொழிப்படியும், மணிநூபுராதி கிரீடாந்த ஸர்வதிவ்யாபரண திவ்யமால்யாம்பர திவ்யாங்கராகசோபிதமான அவ்வடிவழகை பாதாதிகேசாந்தமாக அநுபவித்து, "அலர்மேல்மங்கையுறைமார்பா - நி

லொன்றில்லா வடியேனுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேன்” என்று அடிக்
கீழமர்ந்து புகுந்து,பூவார்கழல்களைக் கிட்டி க்ருதாஞ்ஜலிபுடராய் அநு
பவித்துநிற்க; இவர்க்குத் தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதிக்க ஸ்வீகரித்து
க்ருதார்த்தரா யருளி, “இதுபூலோகவைகுண்டமாயிருந்தது” என்று ஆஸ்
சர்யப்பட்டு, திருமஞ்சனமும் ஸேவித்தருளி, அழகப்பிரானுருடைய
ஸ்ரீபலிதிருநாளையும் ஸேவித்தருளி, * விண்ணோர்வெற்பாகையாலே
“நிகரில்லமரர் முனிகணங்கள்” என்றருளிச்செய்த நித்யஸூரிகளன
றோஇங்குவர்த்திப்பார், நாம இங்கேவாததிக்கவொண்ணாதென்று அப
போதேதிருமலையினின்றும இறங்கவேணுமென்று உத்யோகிக்க, பெரிய
திருமலைநம்பியும் திவ்யதேசத்திலேமூன்றுநாளிருக்கவேணுமெ
ன்றருளிச்செய்தருள; உடையவரும ஸம்மதித்து,மூன்றுநாளும அமு
துசெய்யாமல்,*அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமான அப்
பனை அநுபவித்து, அதுவே தாரகமாக எழுந்தருளியிருந்து, இப்படி
யே மூன்றுநாள் சென்றவாறே, நம்பியுடன அப்பனஸந்நிதிக்குச்செ
ன்று, திருப்பல்லாண்டை யநுஸந்தித்து அஞ்சலித்து நிற்க; அப்ப
னும் மிகவும் உகப்புடனே இவர்க்குத தீர்த்த ப்ரஸாதமும ப்ரஸாதித்
து, தம் * பூவார்கழல்களை சிரோபூஷணமாக்கி, உமக்கும் உம்முடையா
ர்க்கும், உபயவிபூதயைச்வர்யமும தந்தோமென்று நம் தெற்குவீட்
டிலே சொன்னோமேயென்று, திருப்பவளச் சோதிவாய்திறந்து அருளி
ச்செய்தருள, உடையவரும மஹாப்ரஸாதமென்று அங்கீகரித்துநிற்க,
அப்பனும விடைகொடுத்தருள, நம்பியுடன புறப்பட்டு அப்பொழுதே
யிறங்கி யருளி, திருப்பதியிலேபெரியதிருமலைநம்பிதிருமாளிகை யேறச
சென்று, அங்கே அமுதுசெய்து, அவாஸந்நிதியிலே இதிஹாஸ
ஸ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்திற்கு அர்த்தங்கேட்டுக்கொண்டு ஒரு
ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருக்குங்காலத்திலே; ஸ்ரீகோவிந்தப் பெரு
மாள் திருமலைநம்பிதிருமாளிகையிலே ஸாவிதகைங்கர்யங்களும பண்
ணிக்கொண்டிருக்கும்படியைக்கண்டு, உடையவர் பரிதராயிருக்கிறவள
விலே,ஒருநாள்நம்பிக்குத்திருப்படுக்கைபடுத்துப்பூந்துறத் தாமஅதிலே
கண்வளர்ந்துபார்க்க, இத்தை எம்பெருமானார் ஒருநாள கண்டருளி,
இப்பரிமாற்றமிருந்த பொல்லாங்கென்னென்று அத்தைப் பெரியதிரு
மலைநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் அவனையழைத்து, கோ
விந்தப்பெருமாளே! நீர் நமக்குப் படுத்தபடுக்கையிலேபடுத்துக்கொண்
டீரென்றுகேட்டோம், இப்படி செய்யலாமோ? இதற்குபலமென்ன?
என்றுகேட்டருள; ஸ்ரீகோவிந்தப்பெருமாளும், நமக்குநரகமேபலமெ
ன்ன, நம்பியும், இத்தை அறிந்திருந்தும்செய்வானேனென்ன; இவரும்,
தேவரீர்திருமேனியில்ஒன்றுஉறுத்துதல்,ஊர்தல்,கடித்தல்செய்யாமல்
கண்வளர்ந்தருளப்பெற்றால் அடியேனுக்கு நரகமேயமையுமென்று
விண்ணப்பஞ்செய்ய;இத்தைஉடையவர்கேட்டருளி, ஈதொருப்ரதிபத்
தி விசேஷமிருந்தபடி என்னென்று உகந்தருளினார். ஒருநாள் நம்பி

யுடைய திருநந்தவநத்தைநோக்கிக்கொண்டுஉடையவர் எழுந்தருளாநி
ற்க,ஓரிடத்திலே கோவிந்தப்பெருமாள் ஒருபாம்பின்வாயிலே கையிட்டு
மீளவும நீராடிக் கைங்கர்யத்திலேபோக; உடையவரும் இதுகண்டு,
கோவிந்தப்பெருமாளே! என்செய்தீரென்று கேட்க; அவரும் பாம்பு
நாக்கை நீட்டிக்கொண்டு நோவுபடும்படியைக் கண்டு அதன் நாக்கிலே
முள்ளிருக்கவாங்கினேனென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும்,
இவருடைய பூததயையிருந்தபடியென்னென்று உகந்தருளினார்.

அநந்தரம், எம்பெருமானாரும், ஸ்ரீராமாயணம் சாதித்தவாறே,
பெரியதிருமலைநம்பிஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து, அடியேன்
திருவரங்கப் பெருநகரை நோக்கி விடை கொள்ளுகிறேனென்று விண்
ணப்பஞ்செய்ய, நம்பியும் இத்தனைதூரமெழுந்தருளின உமக்கு நாம்
ஒன்றும் தரப்பெற்றிலோமே! என்ன; இவரும்அப்படிதந்தருளத் திரு
வுள்ளமுண்டாகில், “சாந்தவிநவல்வினைகளும சரிதத்துமாயப்
பற்றறுத்துத் திரந்து தன்பால் மனம் வைக்கத்திருத்தி” என்கிறபடி
யே, இவருடைய துர்வாஸனையைச்சேதித்து, “பொய்ந்நின்ற ஞான
மும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பு, மிந்நின்ற நீர்மையினியாமுறா
மை” என்னும்படி பண்ணியருளி, “உடன்கூடுவ தென்றுகொலோ”
என்றிருந்த அடியேனை நினைவைத்தலைக்கட்டியருளின தேவரீர்
இந்த கோவிந்தப் பெருமாளைத் தந்தருளவேணுமென்று விண்ணப்பம்
செய்ய; பெரியதிருமலைநம்பியும் அவரையழைத்து, வாரீர் கோவிந்தப்
பெருமாளே! எம்பெருமானாரை நம்மைக்கண்டாற்போலே ஸேவித்
திருமென்று உதகதாரா பூர்வகமாகக் கொடுத்தருளினார். உடையவர்
அவரைக் கூட்டிக்கொண்டு, நம்பிக்கு தண்டன்ஸமர்ப்பித்துப் புற
ப்பட்டு,*வண்டுவளங்கிளரும நீள்சோலை வண்பூங்கடிகையிலே சென்று,
கடிகாசலமேறி,*மிக்கான வேதவிமலர் விழுங்குமக்காரக்கனியையுங்கண்
டு ஸேவித்துக்களித்து, அங்குநின்றும் புறப்பட்டு, திருப்புட்குழியிலே
யெழுந்தருளி, காத்தாபுஷ்கரிணியிலே தீர்த்தம் ஸ்வீகரித்து, பெரிய
வுடையாரையுந் திருவடிதொழுது, சண்டப்ரசண்டர்களையும் சரண
மடைந்துஉள்ளேபுகுந்து, மரகதவல்லியாரையும், திருவநந்தாழ்வானை
யும் ஸேவித்து, மற்றும ஸேவாக்ரமம தப்பாமல் ஸேவித்து, ப்ரதக்ஷிண
மாக வெழுந்தருளிப் புகுந்து, சேனைமுதலியாரையுந் திருவடிதொழுது
*பொன்முடியம போரேற்றையெம்மானைநாற்றடந்தோள்தன்முடிவொ
ன்றில்லாத தண்டுழாய் மாலையனையுமஸேவித்துநின்று, (సువర్ణమకుటానర్ఘ
తులసీమాల్యశోభిత। సమస్తజగదాధార శఙ్ఖచక్రగదాధర॥ దామోదరహృషీకేశ త్రయీమయ
జనార్దన। దానవారే జగన్నాథ శార్ఙ్గపాణే నమోస్తుతే) (ஸுவர்ணமகுடாநர்க துளஸீ
மால்யஶோபித - ஸமஸ்தஜகதாதார ஶங்கசக்ரகதாதர - தாமோதர
ஹ்ருஷீகேஶ த்ரயீமயஜநார்த்தந - தாநவாரே ஜகந்நாதஶார்ங்கபா
ணே நமோஸ்துதே)என்று - அநுஸந்தித்துநிற்க, தீர்த்தப்ரஸாதமும்
ப்ரஸாதிக்கஸ்வீகரித்து தண்டனிட்டுப்புறப்பட்டு, திருவெஃகாவுக்கு

லான அங்குள்ள திருப்பதிகளையும் ஸேவித்துமீண்டு, திருக்கச்சிநம்பி ஸந்நிதியிலே யெழுந்தருளினார்.

"அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா" என்றுமாபோலே, ஸ்ரீகோவிந்தப்பெருமாள் திருமேனியில் வைவர்ண்யம பிறந்து, முகமுரு வின இருப்பைக்கண்டு உடையவரும், இவருக்கு அகவாயில் எண்ணமறிந்து, கோவிந்தப்பெருமாளே! நம்பியைஸேவித்து வாருமென்று இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களைக்கூட்டி யனுப்பி, திருக்கச்சிநம்பியுடனே பெரியாளை ஸேவித்திருந்தார். இவரும் திருப்பதியிலே எழுந்தருளி, நம்பிதிருமாளிகைவாசலிலே தண்டன்ஸமர்ப்பித்துநிற்க, அங்குள்ளார் அவனைக் கண்டு உள்ளேசென்று பெரியதிருமலைநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய; நம்பியும், திருவுள்ளங்கலங்கி, பித்தனைப்போகச்சொல்லுமென்ன; தேவிகளும இதத்தனை தூரம் இளைத்துவந்தவனை அழைத்து ஸேவைஸாதித்து, ஸ்ரீபாததீர்த்தமும், தளிகைப்ரஸாதமும்ப்ரஸாதிக்கவேண்டாவோ வென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் விற்றபசுவுக்குப்புல்லிடுவாருண்டோவென்று நைஷ்டுர்யத்தையேப்ரகாசிப்பித்து முகங்கொடாமல் தள்ளிவிட; கோவிந்தப்பெருமாளும், அங்கு நின்றாராய், திருவாசலிலே தண்டன்ஸமர்ப்பித்து, ஸ்ரீவைஷ்ணவர்களுடனே மீண்டு உடையவரை ஸேவித்துநிற்க; ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்தவ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி, நம்பியுடைய ஸர்வஜ்ஞதையை ஸ்லாகித்து, கோவிந்தப்பெருமாளையும் பிற்காலியாதபடி, தம்மெளலப்ய ஸெளசீல்யாதிகுணங்களாலே ஆழங்கால்படுத்திக்கொண்டு, திருக்கச்சிநம்பிக்கு தண்டன்ஸமர்ப்பித்து விண்ணப்பம்செய்து புறப்பட்டு திருவரங்கன்திருப்பதியைநோக்கி யெழுந்தருள அங்குள்ள முதலிகளெல்லாரும் எதிர்கொள்ளவெழுந்தருளிஸேவாக்ரமத்திலே நம்பெருமாளை ஸேவித்துநிற்க வந்தீரோ? என்று வினவியருளி, தீர்த்தப்ரஸாதமும ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதிக்க, ஸ்வீகரித்துப்புறப்பட்டு மடமேயெழுந்தருளி, ஸ்வாமிமாநாஸர்ப்பூதரான முதலிகளையும் கர்பைபண்ணிக்கொண்டு எழுந்தருளி யிருந்தார்.

ஸ்ரீகோவிந்தப் பெருமாளுக்கு, எம்பெருமானார்கோஷ்டியில் அநுபவமும், அவர்விக்ரஹாநுபவமும், அவர்ஸல்லாபங்களும், அவர்திருவடிகளிலேகைங்கர்யங்களுமே காலக்ஷேபமாய், நித்ராலஸ்யங்களுமின்றிக்கே, ப்ரதயஹம் நடவாநிற்க; ஒருநாள் உடையவரும் முதலிகளும் பெரியதிருவோலக்கமாகவெழுந்தருளியிருக்க; முதலிகளெல்லாரும் கோவிந்தப்பெருமாளுடைய ஜ்ஞாநபக்தி வைராக்யங்களையும், ஸ்வாசார்யபக்திநிஷ்டையையும் சொல்லித் தலைதுலுக்கிக்கொண்டாட, ஸ்ரீகோவிந்தப்பெருமாள், தாமும், "அதுவொக்கு மொக்கும்" என்று அவர்களைக் காட்டில் தம்மைத் தாமே மிகவும் ச்லாகித்துக்கொள்ள; உடையவரும், அதுகண்டு இவனைக்குறித்து, எல்லாரும் உம்மைஸ்லாகித்தால் நீர் நைச்யாநுஸந்தானம் பண்ணவேண்டியிருக்க அதுசெய்

யாதே நீர்தாமே உம்மைஸ்துதித்துக்கொள்ளாநின்றீர், இப்படி செய்யு
மதுஸ்வரூபத்திற்குச் சேருமோவென் றருளிச்செய்ய; ஸ்ரீகோவிந்தப்
பெருமாள் உடையவரைப்பார்த்து, ஐயா! முதலிகள் அடியேனைக்
கொண்டாடில், காளஹஸ்தியில் கையுங்குடமும் கழுத்தில் இலங்கைக்
கொட்டைவடமுமாய்க்கொண்டு எளிவரவுபட்டு நின்ற அந்நிலை
யைக்கொண்டாடு மத்தனையன்றோ? வுள்ளது; இப்படியான
பின்பு, "பித்தவாரைப்பிராணா பிரமகுருவாகிவந்து" என்கிறபடியே,
தேவரீர் இவ்வாத்மாவை எடுக்கைக்காகவே ஒரு திருவவதாரம்பண்
ணி செய்தருளின கர்ஷிபாரம்பரைகளை நம்முதலிகளெல்லாரையும்போ
லன்றிக்கே நித்யஸம்ஸாரிகளிலும் கடைகெட்டுக்கிடந்த அடியேன், கால
த்தவமுள்ளதனையும், "எனக்கினியாரிக்கர்நீணிலத்தே" என்றும், "இனி
யாவர்நிகராகல்வானெந்தே" என்றும், "நெஞ்சமேநல்லைநல்லை" என்
றும் சொல்லுகிறபடியே அடிமையை ஸ்லாகித்துக்கொள்ள ப்ராப்தியுண்
டாகையாலே, அடியோங்களெல்லாரும் தேவரீராலே இவ்வாத்மாவு
க்குண்டான நன்மைகளை ஸ்லாகித்தால் தேவரீரைக் கொண்டாடிற்று
மித்தனையன்றோ என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானாரும், கோவி
ந்தப்பெருமாளை "நல்லீர் நல்லீர்" என்றுபோர உகந்தருளி, உம்முடைய
குணங்கள் நமக்கும் உண்டாம்படி அழகிய நெஞ்சாலே நம்மையணைத்
துக்கொள்ளீர் என்று வாரியெடுத்தணைத்துக்கொண்டருளினார்.

ஒருநாள் ஸ்ரீகோவிந்தப்பெருமாள் எம்பெருமானடியாள்வாசலி
லே, காலயாமகாவையுபுகுந்து நிற்கக்கண்டு, ஒருஸ்ரீவைஷ்ணவர் உடை
யவர்கோஷ்டியிலே அதனைவெளியிட, உடையவரும் கோவிந்தப்
பெருமாளே! நீர் அங்கே நின்றபாடென்னென்ன; இவரும் தேவரீர்
தாலாட்டு மதுரமாய இசைப்பாடி * செவிக்கினிய செஞ்சொல்லாயிரு
க்க, தேவரீர் முற்றுபவருமை முன்னலைவளையக்கட்ட, போக்கடியற்று
நின்றேனென்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீவைஷ்ணவரும், தாலாட்டு
நடந்ததுவுமறிந்தோம், உடையவரும், இவர்பராவண்யமிருந்தபடி
யென்! என்று உகந்தருளினார்.

பின்பு, இவர்க்கு இருநூறும் வகாரசமுமின்றிக்கே, த்ரிவிதகரணத்
தாலும் "இராமாநுசன் மிக்க சீலமல்லால உள்ளாதென்னெஞ்சு"
என்கிறபடியே, இராமாநுசன் * மெய்யிலபிறங்கியசீரும் அவர் குணா
நுபவமே காலக்ஷேபமாகச்செல்லாநிற்க; ஸ்ரீகோவிந்தப்பெருமாள்
திருத்தாயார்வந்து, கோவிந்தப்பெருமாளே! உம்முடையதேவிகள்
பக்வமானாள் என்ன; இவரும் ஆகில், அம்மா? இருட்டும் தனியுமா
யிருக்கும் அவகாசம்பார்த்து அவளை வரக்காட்டுமென்ன; அவரும்
பஹுநாள் அவகாசம்பார்த்து ஒருநாளும் அவகாசம்காணாதே, உடைய
வருக்கு விண்ணப்பஞ்செய்ய; அவரும், இவரையழைத்து, கோவிந்தப்
பெருமாளே! நம்மாணை, ஒருருதுகாலத்திலே நீர்போமென்று அரு
ளிச்செய்துபோகவிட்டருள; கோவிந்தப்பெருமாளும் தேவிக[illegible]

இராமுற்ற அந்தர்யாமியை அநுபவிப்பித்து சத்குணசேஷ்டிதங்களைக் கீர்த்தித்தருளிப் போகவிட; இவர்திருத்தாயார் விடிவோரைவந்து இங்ஙன் செய்யலாமோவென்ன; இவரும அந்தர்யாமிப்ரகாசித்திருககு அழிச்சாட்டங் கூடுமோவென்ன; இச்செய்தியை அருகிலிருந்தவர்கள் எம்பெருமானாருடனே விண்ணப்பஞ்செய்ய; இவரும் திருவடிகளிலே ஸேவித்துநின்றவளவிலே அவரும், இராமுற்ற என்செய்தோனறு மந்தஸ்மிதம்செய்துகேட்டருள; இவரும அந்தர்யாமிப்ரகாசிகையாலே இதுக்கு ஏகாந்தம்கண்டிலேனென்று விண்ணப்பமசெய்ய; உடையவரும், வாரீர் கோவிந்தப்பெருமானே, உமககு விஷயாந்தர விரக்திவித்தையுண்டாகில், (அநாச்ரமீநதிஷ்டேத்) (அநஸ்ரமீநஸம்திஷ்டேத)என்கிற சாஸ்த்ரவசநம் மீறிப்போமோவெனன; இவரும, அடியேனுககு ஸந்யாஸாஸ்ரமம்ப்ரஸாதித்தருள வேணுமென்று விணணப்பஞ்செய்ய உடையவரும த்ரிதண்டகாஷாயாதிகளைப்ரஸாதித்து தந்திருநாமததையேப்ரஸாதித்தருள; இவரும், ஸ்ரீபாதச்சாயாபந்நனாயிருக்குமவனுககு பொருக்கும்படி ப்ரஸாதித்தருளவேணுமென்றுவிண்ணப்பஞ்செய்து, திருவடிகளிலே தண்டனிட்டுக்கிடக்க; உடையவரும, அந்தத்திருநாமத்தை ப்ரத்யாஹரித்து, "எம்பார்" என்று திருநாமஞ்சாத்தி முடிபிடித்தெடுத்து க்ருபைசெய்தருளினார்.

அநந்தரம், தேசாந்தரத்தினின்றும இரண்டுஸ்ரீவைஷ்ணவாகள் கோயிலுக்கெழுந்தருளித் திருவீதியிலேநின்றவாகளைப்பாாத்து, எம்பெருமானார்மடமேதென்றுகேட்க; அவர்களும எநத எமபெருமானார் மடமென்ன?; புதுக்கஎழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்கள நெஞ்சுளைந்து, நீங்கள் இரண்டிட்டுசசொல்லுவானேன, தாஙகளுககு இரண்டு எம்பெருமானாருண்டோவென்ன; அவாகளும, அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் எழுந்தருளியிருககிறாராகையாலே சொனனோமென்ன; நாங்கள் அவரையறியோம, உடையவர்மடததைககேட்டோமென்ன; ஆனால் ராமாநுசன்மடம ஏதென்று அவாகளகாட்ட, அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும உடையவர்மடமேசென்றுபுககார்கள்.

அருளாளப்பெருமாளெம்பெருமானார் இப்ரஸங்கத்தை யாத்ருச்சிகமாகக்கேட்டு, ஐயோ! நாம், உடையவரைப்பிரிந்து ஸ்தலாந்தரத்திலே யிருந்தபடியாலே லோகத்தார நம்மை எம்பெருமானாருக்கு எதிர்த்தட்டாகச்சொன்னார்கள், ஆகையாலேநாம அநாதப்பட்டோம என்று மிகவும் வ்யாகுலப்பட்டு, அப்போதே தமமுடையமடத்தை இடித்துப்பொகட்டுவந்து, உடையவர்திருவடிகளைக கட்டிக்கொண்டு, அநாதிகாலம் இவ்வாதமா, தேவரீர்திருவடிகளையகன்று அநர்த்தப்பட்டுப்போந்ததுபோதாமல், இப்போதும அகற்றிவிடத் திருவுள்ளமாய் விட்டதோ! என்று மிகவும்க்லேசிக்க; உடையவரும் இதற்குக்காரணமென்னென்ன; அவரும், அங்குப்பிறந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்ய, உடையவரும், அச்செய்திகளையடையக்கேட்டு, ஆனால்

இனி உமக்கு நாம்செய்ய அடுப்பதென்னென்ன; அருளாளப்பெருமா
ளெம்பெருமானாரும், அடியேனை இன்றுதொடங்கி * நிழலுமடிதாறும்
போலே, "நின்றுளிணைக்கீழ்வாழ்ச்சி யான் சேரும்வகை யருளாய்"
மென்கிறபடியே, தேவரீர் திருவடிகளின்கீழே வைத்துக்கொண்டு நித்ய
கைங்கர்யங்கொண்டருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடை
யவரும், அங்ஙனே இனிப்போதே வாருமென்று, அவரைத்தம்ஸந்நிதியிலே
அனைக்ஷணமும் பிரியாமல் வைத்துக்கொண்டு, அகிலார்த்தங்களையும்
ப்ரஸாதித்தருள, அவரும் க்ருதார்த்தராய், உடையவரையொழிய வே
றொருதெய்வமறியாதவராகையாலே, ஸகலவேதாந்த ஸாரார்த்தங்களை
யும் பொன்னாச்சியாரும் தாமும் ஸுஸங்க்ரஹமாகக்கற்று உஜ்ஜீவிக்கலாம்
படி, "ஞானஸாரம், ப்ரமேயஸாரம்" என்கிற திவ்யப்ரபந்தங்களை
யுமிட்டருளி, அதிலே, "ஸச்சிஷ்யனென்பானுக்கு ஸதாசார்யனே
பரதேவதை, அவன் திருவடிகளில் கைங்கர்யமே பரமப்ராப்யம், அவ
ன்றனைப் பகவதவதாரவிசேஷம்" என்னுமதனையுமருளிச்செய்தருளினார்.

அநந்தரம், கூரத்தாழ்வானையும், முதலியாண்டானையும், அருளா
ளப்பெருமாளெம்பெருமானாரையும், மற்றுமுள்ள முதலிகளையுங்
கூட்டிக்கொண்டெழுந்தருளியிருந்து, "இலிங்கத்திட்டபுராணத்தீரும்
சமணரும் சாக்கியரும், வலிந்து வாதுசெய்வீர்களும்" என்றருளிச்
செய்த * இடங்கொள் சமயத்தையெல்லாமெடுத்துக் களைகைக்காகவும்,
( ) (தத்த்வமஸி)யாதிவாக்யஜந்யஜ்ஞாநமே மோக்ஷஸாதந
மென்கிற மாயாவாதிகளோடும், ஜ்ஞாநகர்மஸமுச்சயமே மோக்ஷஸாதந
மென்கிற குத்ருஷ்டிகளையும் நிரஸித்து, வேதநத்துக்கு கர்மம் அங்க
மாய், வேதநத்யாநோபாஸநாதி சப்தவாச்யமாய், பக்திரூபாபந்நமான
உபாஸநாத்மக ஜ்ஞாநமே வேதாந்த ப்ரதிபாத்யமான மோக்ஷஸாதந
மெனகைக்காகவும், நாம் வேதாந்தம் நடத்தவேணுமென்று அருளிச்செ
ய்ய; அப்படியே செய்தருளவேணுமென்று முதலிகள் விண்ணப்பஞ்செய்ய;
உடையவரும், ஆழ்வானைப்பார்த்து, நான்சொன்ன பாஷ்யவாக்யம்
உம்முடைய திருவுள்ளத்திற்கு ஒத்திருந்தாலொழிய நீர்திருவெழுத்
துச் சாத்தவேண்டாமென்று நியமித்தருள, ஆழ்வானும் அப்படியே
திருவெழுத்துச் சாத்திவருமளவில், ஆத்மாவுக்கு சேஷத்வவிதுரமான
ஜ்ஞாத்ருத்வம் ப்ரதிபாதித்து ஒருவாக்ய மருளிச்செய்தருள; ஜீவாத்மா
வுக்கு சேஷத்வ விதுரமான ஜ்ஞாத்ருத்வத்தோடு தேஹாத்மாபிமாநத்
தோடு ஒருவாசியில்லாமையாலே ஆழ்வானும் திருவெழுத்துச் சாத்
தாமலிருக்க; உடையவரும், அத்தை நிரூபித்துப் பாராமல், எழுது
மென்ன, இவரும் எழுதாதிருக்க; அதுகண்டு குபிதராய், ஆகில் நீரே
பாஷ்யஞ்செய்யுமென்று அருளிச்செய்கை தவிர்ந்து, ஆழ்வானை உதை
த்துப்போகவிட; முதலிகள், ஆழ்வானே! ஆசார்யர்கோபித்துத்தள்ளிவிட்
டாரே, இப்போது நீர் என்னநினைத் திருக்கிறீரென்று கேட்க; ஆழ்வா
னும், உடைமை உடையவன் இட்டவழக்காயிருக்கும், அடியே[illegible]

இதில் அந்வயமில்லையென்றருளினா. பின்பு, உடையவரும், வாக்யார்த்தத்தைநன்றாகஆலோசித்துக்கொண்டு, ஆழ்வானையழைத்து சோபித்ததற்கு அநுதபித்து, பகவச்சேஷத்வதோடேகூடின ஜ்ஞாதர்த்வ ப்ரதிபாதகமான வாகயமருளிச்செயதருள; ஆழ்வானும் அதிசீக்ர மாகத் திருவெழுத்துச்சாத்த, இப்படி ஸ்ரீபாஷ்யம், வேதாoததீபம், வேதாoதஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம, கீதாபாஷ்யம இவற்றையருளிச்செய்து, ஆளவந்தாருடைய பரமமான இழவைத தீர்த்தருளினா.

உடையவரை, முதலிகளெல்லாரும தணடனிட்டு, தேவரீர் இதரஸமயநிராகரணபூர்வகமாக தாஸநஸ்தாபநம பண்ணியருளிற்று, இனி * நீதில் நன்னெறிகாட்டி தேசமெங்கும திரிநது, திகவிஜயம பண்ணி அங்குள்ள திவ்யதேசங்களையும ஸேவித்து எழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செயய; உடையவரும முதலிகளுமாக நமபெருமாள்திருமுனபேசென்று தண்டனஸமாப்பித்து இச்செயதியை விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும அப்படியேசெயயுமென்று திருவுளளமாக; அங்குநின்றும புறபபட்டருளி, சோழமணடலத்திலே யெழுநதருளி, திருக்குடந்தைமுதலான திருப்பதிகளையும ஸேவிதது, அங்குணடான இதரஸித்தாoத வித்வானகளையும தாககிதது ஜயிதது, அஙகுநின்றும தெறகேபுறப்பட்டு * வளரிளமபொழில்சூழ மாலிருஞ்சோலைமுதலான திருப்பதிகளையும ஸேவிதது, பாணடிமணடலத்திலுண்டான பரவாதிகளையும ஜயிதது, திருப்புல்லாணியையும ஸேவிதது, ஸேதுதர்ஸநம்பண்ணி, திருநகரியேறசசென்று, எணணிலுண் சிறுததாமபை அநுஸந்தித்து நமமாழவாரை, ஸேவிததுநிறக; ஆழவாரும, மிகவும க்ர்பைபண்ணியருளி, தம் தீர்த்தப்ரஸாதமும, திருமாலைப்ரஸாதமும ஸ்ரீமதுரகவிகளையும ப்ரஸாதிகக, ராமாநுசனும (వకుళధవళమాలా వక్షసంవేదబాహ్యప్రబలసమయవాదచ్ఛేదనం పూజనీయం । విపులకురుకనాథం కారిసూనుం కవీశం శరణముపగతోహం సంశ్రయే నాథమేనమ్)(வகுளதவளமாலாவக்ஷஸம்வேதபாஹ்ய ப்ரபலஸமயவாதச்சேதநம்பூஜநீயம - விபுலகுருகநாதம் காரிஸூநும கவீசம ப்ரணமுபகதோஹம்சரணமுபேதேபசரம) என்று அநுஸந்தித்து தண்டன்ஸமாப்பிததுப புறப்பட்டு, திருப்புளியாழவாரையும, பொலிந்துநின்றபிரானையும திருவடிதொழுது புறப்பட்டு, மற்றுஞ்சுற்றிலுண்டான திருப்பதிகளையும ஸேவிதது அஙகுள்ள பாஹ்யகுத்ருஷ்டிகளையும் ஜயித்துப்புறப்பட்டு, திருககுறுங்குடிக கெழுநதருளி, *கோலத்திருக்குறுங்குடிநமபியை ஸேவித்து, தீர்த்தப்ரஸாதமும ஸ்வீகரித்துநிற்கிறவளவிலே, நம்பியும, அர்ச்சகமுகேந, நாம, ராமகர்ஷ்ணாதிரூபேண "சன்மம்பலபலசெய்து" எனகிறபடியே வநதுபிறந்து சேதநரைத்திருத்தப் பார்த்தவிடத்தில, அவர்கள் ஆஸுரப்ரக்ர்திகளாய்ஒருவரும்நம்மைவந்து சேர்ந்தார்களில்லை, நீர் இத்தனைபேரையும் எங்ஙனே திருத்தினீர் என்று கேட்டருள; உடையவரும், தேவரீர்கேட்கும்க்ரமத்திலேகேட்டால், சொல்லுமடைவிலே சொல்லுகிறோமென்ன; நம்பி

யும்,இவர்க்கு ஒருதிவ்யஸிம்ஹாஸநத்தையிட்டருள; அகிலேஸ்வராசார்யரான பெரியநம்பி யெழுந்தருளியிருக்கிறாராகபாவித்துக்கொண்டு, தாம் நிலத்திலேயிருந்து, நம்பிதிருச்செவியிலே, (సర్వేషామేవ మన్త్రాణాం మన్త్రరత్నం సుఖావహం । సకృత్స్మరణమాత్రేణ దదాతి పరమం పదం ॥ మన్త్రరత్నం ద్వయం న్యాస ప్రపత్తిశ్శరణాగతిః । లక్ష్మీనారాయణాయేతి హితం సర్వఫలప్రదం) (ஸர்வேஷாமேவமந்த்ராணாம் மந்த்ரரத்நம்ஸுகாவஹம் - ஸக்ருத்ஸ்மரணமாத்ரேண ததாதிபரமம்பதம் - மந்த்ரரத்நம்த்வயம்ந்யாஸ ப்ரபத்திஶ்ஶரணாகதி: - லக்ஷ்மீநாராயணாயேதி ஹிதம்ஸர்வபலப்ரதம) என்கிற மாஹாத்மயத்தையுடைய த்வயத்தை உபதேசிக்க; நம்பியும் பேராவுகந்து, "ராமாநுஜனை யுடையோம்" என்று நமிசெய்ய, உடையவரும் அவருக்கு "ஸ்ரீவைஷ்ணவநம்பி" என்று தாஸ்யநாமம் ப்ரஸாதித்தருள; நம்பியும், இவரை ப்ரஹ்மரதமேற்றி யுபலாளித்தருளினார். உடையவரும் நம்பியை ஸேவித்துநின்று, (అపచారానిమాన్ సర్వాన్ క్షమస్వ పురుషోత్తమ) (அபசாராநிமாந்ஸர்வாந் க்ஷமஸ்வபுருஷோத்தம) என்று விண்ணப்பஞ்செய்து, அங்குநின்றும் புறப்பட்டு திருவண்பரிசாரத்தையும் திருவாட்டாற்றையும் திருவடிதொழுது, திருவனந்தபுரத்திலே யெழுந்தருளி, *படமுடையரவில்பள்ளிபயின்ற பத்மநாபப்பெருமாளையும் த்வாரத்ரயத்தாலே பாதாதிகேசாந்தமாக ஸேவித்தருளி, அங்குள்ளப்ரதிவாதிகளையும் ஜயித்து, ஸ்ரீராமாநுஜமடத்தையும் உண்டாக்கிப் புறப்பட்டு, மலையாளதேசத்திலுண்டான திருப்பதிகளையும் ஸேவித்து அத்தேசத்தில் அநயவாதிகளையும் ஜயித்து, மேலைஸமுத்ரக்கரைவழியாக உத்தரதேசத்திலெழுந்தருளி, "வடமதுரை, சாளக்கிராமம், வைகுந்தம், துவரை, அயோத்தி" என்றும், உத்தரபதரிகாச்ரமம், நைமிசாரண்யம், புஷ்கரம் என்று சொல்லப்பட்ட திவ்யதேசங்களையும், மற்றுமுண்டான திருவாய்ப்பாடி, ஸ்ரீகோவர்த்தநகிரி, ஸ்ரீப்ருந்தாவநம் முதலான திருப்பதிகளையெல்லாம் ஸேவித்துக்கொண்டு, அவ்வவ்விடங்களிலுள்ள குத்ருஷ்டிவித்வான்களையும் ஜயித்து, படிமண்டபத்தைக்கிட்டி, ஸரஸ்வதிபண்டாரத்தேற வெழுந்தருளினவளவிலே, ஸரஸ்வதி, உடையவரைப்பார்த்து, (తస్య యథా కప్యాసం పుణ్డరీకమేవమక్షిణీ) (தஸ்யயதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ) என்கிற ஶ்ருதிக்குப் பொருள்சொல்லிக்காணீரென்ன; இவரும், (కపిస్తాదిత్య ఉదితః కం పిబతి కిరణైరిత్యపి కపిర్భగవస్తత్ర ముఖ్యాస్తే సకపిర ముఖాస్త్రయదిహోత్తత్ । ప్రతిమకిక ప్యాసదివసకర తేజో వికసితస్స పద్మశ్రీమత్వాదగణి భగవచ్చక్షురుపమా) (கபிஸ்தவாதித்யஸ்ஸம்பிபதி - கிரணைரித்யபி; கபிர்ப்பபஸ்திதயாம்நாதஸ்ஸசபிரமுநாஸ்தம்யதிஹதத் - ப்ரதிமஸ்கப்யாஸம்விகஸகராதேஜோவிகஸிதஸ் ஸபத்மஸ்ரீமத்வாதககணிபகவச்சக்ஷுருபமா) என்று, கம் என்று - ஜலமாய், கிரணங்களாலே அத்தை பாநம்பண்ணுகையாலே, கபிசப்தவாசயனான ஆதித்யனாலே, (అసుక్షేపణే) (அஸுக்ஷேபணே) என்று விகாஸவாசகமாய், அலர்த்தப்பட்ட தாமரைப்பூப்போலேயிருக்கும் பரமபுருஷன்திருக்கண்களென்று, கப்யாஸத்தி...

பொருளருளிச்செய்ய; ஸரஸ்வதியுங்கேட்டு ஸந்துஷ்டையாய், இவருக்கு "ஸ்ரீபாஷ்யகாரர்" என்று திருநாமஞ்சாத்தி, ஹயக்ரீவரையும எழுந்தருளுவித்துக்கொடுத்து மிகவும ச்லாகிக்க; ஸ்ரீபாஷ்யகாரரும், நம்மை இத்தனை ஆதரிக்கைக்கு அடியென்னென்று கேட்டருள; அவளும் நீர் என்கருத்தறிந்து பொருள் சொல்லுகையாலே நான் ஆதரித்தேனென்றாள்; இத்தை அத்தேசத்திலுள்ள ப்ரதிபக்ஷவித்வாம்ஸுகள் கேட்டு வந்து, உடையவருடன தர்க்கிக்க, அவர்களெல்லாரையும் ஜயித்தபடியை அத்தேசத்தின ராஜாகேட்டு, இதொரு ஆச்சர்யமிருந்தபடியென்! என்றுவந்து உடையவர்ஸ்ரீபாதத்திலே யாச்ரயிக்க, அவனையும க்ருபைபண்ணி யெழுந்தருளியிருக்குமளவிலே, அங்குள்ள அஸூயாளுக்களான வித்வாங்கள இவரை அபிசரிக்கத்தேட, உடையவருங் கேட்டருளி, இத்தைக காணக்கடவோமென்று திருவுள்ளமபற்றியிருக்க; அவ்வளவிலே வித்வானகள ப்ரித்தேறி, தங்களைத் தாங்களே மோதிக்கொண்டு பேயகளாய் ஓடித்திரிய; ராஜாவும் இதனைக்கண்டு உடையவரைத் தண்டனிட்டு, தேவரீர இபபடி செயதருளலாமோவென்று வேண்டிககொண்டு அவாகளையும ஸ்வஸ்தராமபடி பண்ணுவித்து, அவருடைய திருவடிகளிலேஆச்ரயிபபித்து, தான் ஸர்வபரிகரத்துடன இருகாதவழி ஸேவித்துககொண்டுவந்து வழிவிட்டுமீண்டு போக; உடையவரும வாராணவாஸிவழியாக வெழுந்தருளி கங்கையைககிட்டி, * கஙகைகஙகையென்ற வாசகத்தாலே * ஏழுமையுங்கூடியீண்டிய பாவமெல்லாம இறைபபொழுதளவினுள கழிவிடும் பெருமையையுடைய கங்கையில, "திருமால கழலிணைககீழ குளித்திருந்து" என்கிறபடியே நீராடி, கேசவாதிதவாதச ஊர்த்வபுண்டரங்களையும தரித்துக்கொண்டு, * கணடமெனறுங கடிநகரிலெமபெருமானையும் கைதொழுதுகழலிணைபணிநதுபுறபபட்டு, ஸ்ரீபுருஷோத்தமத்தேற வெழுந்தருளி ஸ்ரீஜகந்நாதனையுந்திருவடித் தொழுது, அங்குள்ள ப்ரச்சந்நபௌத்த வித்வாங்களையும்ஜயித்து, அங்கே ராமாநுஜ மடமுண்டாக்கி, அங்கிலும் புறப்பட்டு ஸ்ரீகூர்மத்தேற வெழுந்தருளி கூர்மநாதனையும் ஸேவித்து, ஸிம்ஹாத்ரியேற வெழுந்தருளி ஸிம்ஹகிரியப்பனையும் ஸேவித்து, அவ்விடத்தில் அந்யஸமயங்களையும தர்க்கித்து ஜயித்து, அங்கிலும புறப்பட்டு அஹோபிலத்தேறச்சென்று அஹோபில நரஸிம்ஹனையும்ஸேவித்துப் புறப்பட்டு, * தெறிகுரலருவித திருவேங்கடமலையேறி, திருவேங்கட முடையானையும ஸேவித்து நிற்கிறவளவிலே, "தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும சக்கரமும, சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்; சூழும், திரண்டருவிபாயுந் திருமலைமேலெந்தைக், கிரண்டுருவு மொன்றாயிசைந்து" என்று ஆழ்வார் அநுபவித்த ஹரிஹராகாரமொத்திருக்கையாலே, சைவா இத்தைக்கேட்டு "எங்கள்நாயனார்" என்றுபிணங்கிவர, உடையவரும் உங்கள்தம்பிரானுக்கு அஸாதாரண சிஹ்நமான த்ரிசூல டமருகத்தையும், எங்கள் ஸ்வா

மிக்க அஸாதாரண சிஹ்நமான திருவாழி திருச்சங்காழ்வார்களையும் பண்ணி, திருவேங்கடமுடையான் திருமுன்பே வைப்போம், அவர் எத்தையெடுத்து தரித்துக்கொள்ளுகிறாரோ அதைகையிட்டு அவர்ஸ்வரூபத்தை நிரூபிப்போமென்று அவ்வாயுதங்களைப்பண்ணி அவர்ஸந்நிதியிலேவைத்து, கர்ப்பக்ருஹத்தில் ஆருமில்லாதபடி சோதித்து திருக்காப்பைச்சேர்த்துககொண்டு புறப்பட்டுவந்து, ப்ராதஃகாலமானவாறே திருக்காப்பைநீக்கி ஸேவிக்கிறவளவிலே, * கூராராழி வெண்சங்கேந்தியிருக்கக்கண்டு, ஆநந்தாஸ்ருக்கள்பனிப்பக் கொந்தளித்துக்குணலைக் கூத்தடித்துககொண்டு சைவரை அடித்தோட்டிவிட்டு, "பொன்னை மாமணியையணியார்ந்ததோர்மின்னை வேங்கடத்துச்சியில்கண்டு" என்றபடியே வாஷூகவலாஹகம்போலே, அகிலர்க்கும் அகிலபாபத்தையும்போக்கி அகிலாபேக்ஷிதப்ரதானதிருவேங்கடத்தெந்தையைத் திருவடித்தொழுது, அப்போதே திருமலையிலும் இறங்கி திருத்தாழ்வரையில் ஆழ்வார்களையுந் திருவடிதொழுது புறப்பட்டு, பெருமாளகோயிலுக்கெழுந்தருளி, பேரருளாளரையுமஸேவித்துப புறப்பட்டு, திருவல்லிக்கேணி திருநீரமலைமுதலான கிழக்கில்திருப்பதிகளையும் ஸேவித்து, மதுராந்தகத்தேற வெழுந்தருளி ஏரிகாத்தபெருமாளையும் ஸேவித்து, பெரியநம்பி தமமை க்ருபைபண்ணியருளின திருமகிழடியைத் தண்டனிட்டு, திருவயிந்திரபுரத்தில் தெய்வநாயகனையும திருவடிவணங்கி, தொண்டைமண்டலத்திலுண்டான மாயாவாதிகளையும்ஜயித்துப் புறப்பட்டு, வீரநாராயணபுரத்தேசென்று, நாதமுனிமன்னனையும் ஸேவித்து, நாதமுனிகள் யோகத்திலேயெழுந்தருளியிருந்தவிடத்தையும் ஸேவித்து, இப்படி பூப்ரதக்ஷிணமபண்ணி, மடங்கித் திருவணையாடி, திருவரங்கம்பெரியகோயிலிலேயெழுந்தருளி, பெரியபெருமாளை * அமலனாதிபிரானிற்படியே திருவடிமுதல்திருமுடியளவாக*முடிவில்லதோரெழில் நீலமேனியையுமநுபவித்து, அஞ்சலித்துககொண்டு, ஜயஸ்ரீயுடன்நிற்க, பெருமாளும பவளவாய்திறந்து, "உமக்கொருகுறைகளுமில்லையே!" என்ன; ஸ்ரீபாஷ்யகாரரும் "திருமாலுருவோடவன்சின்னமே பிதற்றுகிறபது ஓர் திருமால்தலைக்கொண்ட நங்கட்கெங்கேவருந் தீவினையே" என்கிறபடியே அங்கும தேவரீரையே சிந்தித்துத்திரிந்துவந்த அடியேனுக்கு ஒரு குறையுண்டோவென்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் உகந்து தீர்த்தப்ரஸாதம ப்ரஸாதிப்பிக்க ஸ்வீகரித்துப் புறப்பட்டு மடமேயெழுந்தருளி * அணியரங்கன்திருமுற்றத்தடியார் தங்களின்பமிகுபெருங்குழுவுகண்டு உகந்து அவர்களை க்ருபைபண்ணிக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

உடையவரும், இப்படி * ஊரும் நாடும் உலகமும் தம்மைப்போலேயாக்கிவாழ்ந்தருளுகிறகாலத்திலே; இவரை ஆஸ்ரயித்தமுதலிகளில், கூரத்தாழ்வான் ஸகலசாஸ்த்ரவித்தமராய் ஆசார்யபதைகநிஷ்டராய், அபிகமந உபாதாந இஜ்யா ஸ்வாத்யாய யோகங்களாகிறபஞ்சகால

பராயணராய், விஹிதவிஷயவிரக்தராயிராநிற்க; ஒருவர்ஷாகாலத்திலே மத்யாஹ்ந காலமளவாக வர்ஷம்வர்ஷிக்க * ஸங்கவகாலம்தவறி மத்யாஹ்நகாலமானவாறே, உபாதாநம்தவறி, அஹங்யஹநிசிஷ்டாக்ர கண்யஜநக்ர்ஹங்களில் உபதாநம் பண்ணிவந்தே திருமேனியாத்ரை நடக்கவேண்டுகையாலும், அற்றைக்குத்திருமாளிகையிலே ஸம்சிரபதார்த்தம்ஒன்றுமில்லாமையாலும், நீராடியெழுந்தருளி, திருவடிவிளக்கி, ஒருபலத்தை அமுதுசெய்யப்பண்ணி, நீர்த்தஸ்வீகாரம பண்ணியிருக்க, ஸாயம்காலமானவாறே தத்காலீநகாமத்தைசசெய்தருளி, நமபெருமாளைஸேவித்துத் திருவாய்மொழியநுஸந்தாநமேதாரசமாசபபட்டினியேகண்வளர்ந்தருள; அவ்வளவிலேநம்பெருமாள் பெரியஅவஸரம அமுதுசெய்தருளித் திருசசின்னம்பணிமாற, ஆண்டாள், காஹளநாதங்கேட்டு, "உம்முடைய பக்தர்பட்டினியேயிருக்க, நீா என்ன குலாவிக்குலாவி அமுதுசெய்தருளுகிறீர்" என்ன; அவ்வாக்யம் பெரிய பெருமாள்திருச்செவியிலுறுதத்தி, ஸணையிலேநித்ரைபண்ணிக்கொண்டிருந்தஉத்தமநம்பிகனவிலே பெருமாள் எழுந்தருளி, நம்பீ! "ஆழ்வான் இன்றைக்கு உபவஸிதநிருக்கிறார், நமமக்காரவடிசில் தளிகையை உபயசத்ரசாமர ஸகலவாத்யஸமேதமாக ஸிரஸாவஹித்துககொண்டு போய்க்கொடும" எனறருளிசசெயய, உத்தமநமபியும, ஸ்வபநம் தெளிந்து கண்களைவிழித்துப்பார்த்து தவரித்தெழுநதிருந்து, பெருமாளருளிசசெய்தபடியே, தளிகையை ஸிரஸா வஹித்துககொண்டு அகிலவாத்யத்துடன் ஆழ்வான்திருமாளிகைவாசலிலேசெல்ல, ஆழ்வானும், பதறியெழுநதிருநது இதென்னவென்றுகைத்து எதிரேசெல்ல, நம்பியும், நம்பெருமாள, உமக்கு அக்காரவடிசிலதளிகை அனுப்பியருளினார், அங்கீகரியுமென்ன; ஆழவானும தளிகையை மஹாபரஸாதமென்று சிரஸாவஹித்துககொணடு அடியேனுக்கு அடியிலே ஸாவாபீஷ்டமும் தநதருளினா, இது க்ரயதத்ளிகையாயிருக்குமென்று தமக்கும் ஆண்டாளுககுமாக இரண்டுதிரளைகளை அஙகீகரிததது சேஷிதததைப்போகவிடடருளி!, ஆணடாளைபபார்தது, நீ என்னநினைததாயென்ன! அவளும், அடியேன் ஒனறும நினைக்கவில்லை, அவஸரம் அமுதுசெய்தருளித் திருச்சின்னமபணிமாறினவாறே, உமமுடைய பக்தா இப்படி பட்டினியிருக்க நீரென்ன குலாவிககுலாவி யமுதுசெய்கிறீரென்றேனிததனை என்று விண்ணப்பஞ்செயய; நீ இப்படி சொல்லலாமோவென்று ஆண்டாளை, வெறுத்து, ப்ரஸாதத்தை தாமும் ஸ்வீகரித்து அவளுக்கும் ப்ரஸாதித்தருளினா. பட்டரும, சீராமப்பிள்ளையும அவதரிக்கைக்குஹேது இததிரளைகளிறே.

பட்டர்வைபவம்.



இப்படி, நம்பெருமாளநுக்ரஹத்தாலே ஆழவானுக்கு ஒருகுமாரர், வைகாசியில் அநூராதத்தில் திருவவதரித்தருள, திருநாமம் சாத்துகை

முதலான உஜ்ஜீவநா௦சத்துக்கு உடையவர்கடவரென்று, **ஆழ்வான்,**
தமக்கு அதில் அந்வயமற்றிருக்க, ஸௌத்யாஶௌசநிவர்த்தியான
வுடனே, எம்பெருமானார் ஆழ்வான்திருமாளிகையேறவெழுந்தருளி
எம்பாரைப்பார்த்து, ஆழ்வான்குமாரரை யெடுத்துக்கொண்டுவாரும்
என்ன, அவரும் ஆண்டாள்பக்கலிலேசென்று, குலக்கொழுந்தான
குமாரரைத் தம்மார்பிலே யணைத்துக்கொண்டு, த்ருஷ்டிதோஷாதிகள்
வாராதபடி * பந்நகேந்திரக் குழந்தைக்கு ரக்ஷார்த்தமாக த்வயாநு
ஸந்தாநத்துடனே மங்களாசாஸநம்பண்ணிக் கொண்டுவந்து, எம்பெ
ருமானார் * தண்டாமரைக்கண்களாலே குளிரக் கடாக்ஷித்தருளும்படி
திருக்கைத்தலத்தே பிடித்தருள, உடையவரும் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே
ஆநந்தாஸ்ருக்கள் பனிப்ப கடாக்ஷிக்குமளவில், சிசுவினுடைய பசுகு
பசுகென்கிற தேஜோவிசேஷத்தையும் திருமுகவொளியையும் கண்டு,
எம்பாரே! த்வயம் பரிமளியாநின்றது, என் செய்தீரென்ன, அவரும்
சிசுவுக்குக் காப்பாக த்வயாநுஸந்தாநம் பண்ணிக்கொண்டு விடைகொ
ண்டேனென்ன; உடையவரும், திருமேனி பெறுதலுக்கு உகந்தருளி,
"ஏர்த்தத்யா௦சத்துக்கு முற்பட்டீரே உஜ்ஜீவநா௦சத்துக்கும் நீரே
கடவீர்" என்று நியமித்தருளி, பின்பு குழந்தைக்குப் ப௦சாயுதத்
திருவாபரணமும் தம்திருக்கையாலே சாத்தியருளி, நாமகரணத்திலே
எம்பாரைத் திருக்கையாலே திருவிலச்சினையும் சாத்துவித்து, ஸ்ரீபராசர
பாவொன்றுநாமமாக "ஸ்ரீபராசரபட்டர்" என்று திருநாமத்தையும்
சாத்தி ஆளவந்தாருடைய இரண்டாம்பூவையும் திரத்தருளினார். (ஸ்ரீ
[illegible] యామునార్యమనోరథంపూ
ర్తుం[illegible]) (புத்ரீகாரோபயதுரந்தரேணபராஸராக்ஷரகுலப்ரதீபஃ-
கோவிந்தஸூர்யஸ்ய முநாய மநோரதபூர்த்தவாந்த்விதீயம்)
என்று இவ்வர்த்தம் லக்ஷ்மீகாவ்யத்திலே உத்தமநம்பியாலும் சொல்
லப்பட்டதிறே.

அநந்தரம், எம்பாரின் தம்பியார் சிறியகோவிந்தப்பெருமாளு
க்கு ஒருகுமாரர் அவதரித்தருள, அதைக்கேட்டுகந்து, உடையவர்,
ஆளவந்தாராகாரதீ பலிக்கப்பெறுமே! என்று, அவர்திருமாளிகையேற
வெழுந்தருளி, அவர்குமாரரையும் கருணையாலே கடாக்ஷித்தருளி, அக்
குமாரருக்கு "ஸ்ரீபரா௦குசநம்பி" என்று நம்மாழ்வார்திருநாமம்சாத்
தியருளி, ஆளவந்தாருடைய மூன்றாம்பூவையும்திரத்தருளினார். (గోవింద
రాజాన్వయ [illegible] | అపాచకారప్రభవం తృతీయంవిరాజతే
వృత్తమణిర్దీపః) (கோவிந்தராஜாந்வயஜோமநீஷீ பரா௦குசோயாமுநவை
மநஸ்யம் - அபாசகாரப்ரபவ௦தர்தீய௦ விராஜதேவர்த்தமணிப்ரதீபஃ)
என்று இதுவும் லக்ஷ்மீகாவ்யத்திலே சொல்லப்பட்டதிறே.

பின்பு பெருமாள்,மஞ்சள்நீர்குடிப்பித்து பட்டரைபுத்ரஸ்வீகாரம்
பண்ணியருளி, திருமணத்தூணருகே தொட்டிலிட்டு, நாச்சியார்

சோட்டிவளர்க்கவளர்ந்தருளுகிறவர், பெருமாள் அமுதுசெய்வதற்கு முன்னே தவழ்ந்துசென்று, படைத்திருந்த தளிகையில அள்ளி அமுது செய்யும்படியாயிறே வளர்ந்தருளினது. பட்டர் ஐந்து திருநக்ஷத்ரத்திலே, * நெடுமாற்கடிமை யநுஸந்திக்கிற ஆழ்வானை, ஐயா! சிறுமை பெருமையாகிற பரஸ்பரவிருத்த தர்மத்வயமும் ஒருவஸ்துவிலே கிடக்குமோ? ஆழ்வார், "சிறுமாமனிசர்" என்று இரண்டையுஞ்சேர அருளிச்செய்வானென்னென்றுகேட்க; ஆழ்வானும், நல்வீர்! கேட்டபடி அழகிது, நீர் அநுபநீதராகையாலே உமக்கிப்போது சாஸ்த்ரங்கொண்டு இசைவிக்கவொண்ணாது, ப்ரத்யக்ஷத்திலே உமக்குக் காட்டுகிறோம் கேளீர், திருமேனிசிறுத்து ஜ்ஞாநம்பெருத்திருக்கிற கிடாம்பியாச்சான், அருளாளப்பெருமாளெம்பெருமானார் போல்வாரைக் காணும் "சிறுமாமனிசர்" என்கிறது என்று இசைவித்தருளிச்செய்தார்.

பட்டர் ஐந்துதிருநக்ஷத்ரத்திலே, திருவீதியிலே பிள்ளைகளுடனே விளையாடாநிற்க, ஒருவன், "ஸர்வஜ்ஞபட்டர் வருகிறார்" என்று அதிஸம்ப்ரமத்துடனே காளமூதிவர; இவரும், உடையவர், ஆழ்வான், ஆண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார் முதலான பெரியோர்களிருக்குமிடத்திலே ஸர்வஜ்ஞபட்டனென்று விருதூதி வருகிறான் இவனாரடா? என்று, இரண்டுதிருக்கையாலே மணலையள்ளிக்கொண்டு, அவனைப்பார்த்து, நீ ஸர்வஜ்ஞனன்றோ? இத்தனை சொல்லென்ன, அவன், அதுக்கொன்றும் சொல்லமாட்டாதே லஜ்ஜித்து வாயடைத்துக்கவிழ்தலையிட்டுநிற்க; பட்டர் அவனைப்பார்த்து, பெருவாய்! இதொருகைப்புழுதியென்று சொல்லிப்போனாலென்னென்று விருதூதித் திரியமாட்டாதே அஜ்ஞனாயிவிட்டாயே!; இவனுடைய ஸர்வஜ்ஞனென்கிற விருதையும், ஜயபராஜயத்தையும் போக்கடித்து, காளத்தையும் பறியுங்கோளென்கிற மழலைச்சொல்லை ஆழ்வான் கேட்டு, இவர் ஆருடையகுமாரரென்ன, "ஆழ்வான்குமாரர்" என்று அருகிருந்தார் சொல்லக்கேட்டு, அவனும், "பறப்பதின் நட்டு தன்முறையா" என்று ஆஸ்சர்யப்பட்டு, பட்டரைத் தன்தண்டிகையிலே வைத்துக்கொண்டு ஆழ்வான்திருமாளிகைவாசலிலே சென்றவாறே பொன்னாச்சியார் கண்டு, இவர் * செய்த சிறுசேவகத்தைக் கேட்டு வாரியெடுத்துக்கொண்டு, த்வயாநுஸந்தாநத்தாலே ரக்ஷையிட்டு, "நம்பரமல்லன வாண்மைகளைத் தனியேநின்று தான் செய்வதோ, எம்பெருமானே! உன்னைப்பெற்ற வயிறுடையேன் இனியாவென்செய்கேனோ" என்று முன்றானையாலே யிவரை முட்டாக்கிட்டு உள்ளேகொண்டு புகுந்து, "கண்ணெச்சிலுண்டாக இவரைத்திருவீதியிலே போகவிடுவார்களோ" என்று வெறுத்து, ஆண்டாள்திருக்கையிலேகொடுத்து, ஸ்ரீபாததீர்த்தத்தைத்தெளித்து, இவ்விபூதியில் இவர்நெடுநாள்தங்குமவரன்றென்று வயிறுபிடித்தருளினார்.

பட்டரை உபநீதரானபின்பு, வேதாத்யயநம் பண்ணுவிக்க, இவர் மேதையிருக்கும்படி;-ஒருநாள் சந்தையிட ஓதி, மற்றைநாள் ஓதுகைக்

வெழுந்தருள, மறுத்துச் சந்தையிடப் புக்கவாறே, ஓதுகிற கடையில் நின்றும் போந்து, விளையாடிக்கொண்டு எழுந்தருளியிருக்க; எல்லாரும் ஓதாநிற்க இவர் புறப்பட்டு வந்தாரென்று, ஆழ்வானும் ஆண்டாளும் கேட்டு, அப்பனே? எல்லாரும் ஓதாநிற்க நீர் ஓதாமல் வருவானேனென்ன; இவரும், அவர்கள் ஓதினவிடத்தையே ஓதாநின்றார்களென்ன; ஆகில் நீர் நேற்றுச் சந்தையிட்ட பாஸுரத்தைச் சொல்லிக் காணீரென்ன, சந்தையிட்டபடியே உச்சரித்துக் காட்டியருள; ஆழ்வானும் ஆண்டாளும் பயப்பட்டு, இனிமேல் சிறிதுநாள் இவரை ஓதவிடவொண்ணாதென்று, தங்களிலே சொல்லித்திருந்தார்கள். பின்பு, ஆழ்வானும் எம்பாரும், பட்டருக்கு ஆசார்யாபிமானமும் தத்வசிக்ஷைகளும் பண்ணிவைத்தார்கள். பெருமாள், ஒருநாள் திருத்திரையை வளைத்துக்கொண்டு ஏகாந்தமாக எழுந்தருளியிருக்க, பட்டர் திருவடி தொழப்புக, பெருமாள் முனிந்து புறப்படவிட்டருளினமையால்; இவர் புறப்பட்ட வளவிலே, அவனையழைப்பித்து, நாமிட்ட பணி அருளப்பாடென்ன, உள்ளேபுகுந்து தண்டனிட்டு நின்றவளவிலே, பெருமாள், நாம் புறப்படவிட்டபோது என் நினைத்திருந்தாயென்ன, பெருமாளும் நாய்ச்சிமாருமாக நினைத்திருந்தேனென்ன; முன்பு நம்மை நினைத்திருந்தபடி யெங்ஙனேயென்று கேட்டருள; ஆழ்வானும் ஆண்டாளுமாக நினைத்திருந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும், நம்மானை, நம்மை, முன்புபோலே நினைத்திரு என்று அருளிச்செய்தருளினார். ஆழ்வானும், பட்டருடைய விவாஹோசிதமான ப்ராயத்தைக் கண்டு, உடையவருடனே, பிள்ளைக்கு விவாஹம் பண்ணிவைக்கும்படி யெங்ஙனே, நம் உறவுமுறையார் ப்ரார்த்தியாயிராநின்றார்களென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், பெரிய நம்பிதிருமேனி பக்திகாரான ஸ்ரீவைஷ்ணவ ஸாத்தாநிகரிடத்திலே பட்டருக்குப் பெண்கொள்ளக்கடவதால், ஸ்வஸூத்ரசாகைகளுக்கும் ப்ராஹ்மண்யவைஷ்ணவத்வங்களுக்கும் தட்டாகாதிறேயென்ன; ஆழ்வானும் மனமகிழ்ந்து, ஆண்டாளுடன் ஆலோசித்து, உடையவரை முன்னிட்டுக்கொண்டு அவர்களிடத்தே பெண்கேட்க; அவர்களும் பட்டருடைய ஆபிஜாத்யத்தைக்கண்டு புதுஸம்பந்தமென்று இசையாதிருந்தார்கள்; ஆண்டாள், ஒருநாள் ஆழ்வானைப்பார்த்து, பிள்ளைகள் பெருத்தார்கள், ஒருகார்யஞ்செய்விக்க வேண்டாவோவென்ன; ஆழ்வானும், ஈச்வரகுடும்பத்துக்கு என்னைக் கரையச்சொல்லுகிறாயோவென் றருளிச்செய்து, பெரியபெருமாளைத் திருவடித்தொழுது மடங்குகிறபோது, “பிள்ளைகள் பெருத்தார்கள், ஒருகார்யஞ்செய்விக்கவேண்டாவோவென்று சொல்லுகிறார்கள்” என்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், திருவுள்ளம்பற்றி, நீரோ அதற்குக்கடவீர், நாமன்றோ? தகுதியாகச்செய்விக்கிறோம், நீர்போமென்று திருவுள்ளமாயருளி, பெண்கொடுக்கும்படி அவர்களுக்கு ஸ்வப்நங் காட்டியருள; மற்றைநாள் தாங்களே வந்து கொடுக்கிறோமென்று சொல்லி, அக்கச்சியையும், மன்னியையும், [illegible]

நக்கு தாளைவார்த்துக்கொடுத்து * பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்தருளினார்கள்.

இளையாழ்வார்வைபவம்.

உடையவர் ஸந்யஸித்தருளுகிறபோது, சரீரஸம்பந்தியை விட வேண்டுகிறதோவென்று நம்முதலியாண்டானையொழிய ஸந்யஸித்தோமென்றருளிச்செய்ய; இப்படியருளிச்செய்யலாமோவென்று ஸ்ரீபாதத்து முதலிகள் கேட்க; இவரும், கையிலத்ரிதண்டத்தைவிடிலன்றோ நம்முதலியாண்டானை விடுவதென்றருளினார். ஒருநாள், எம்பெருமானார் திருப்பள்ளிகட்டிலிலே யேறியருளி, ஒருபாட்டுச்சந்தையிட்டவாறே, முதலியாண்டான பரவசராயருள; இத்தைக்கண்ட எம்பெருமானாரும், (వేదవేద్యే పరే పుంసి జాతే దశరథాత్మజే। వేదః ప్రాచేతసాదాసీ త్సాక్షాద్రామాయణాత్మనా) (வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே - வேத: ப்ராசேதஸாதாஸீத்ஸாக்ஷாத்ராமாயணாத்மநா)என்றுமாப்போலே வேதங்களும் ஆழ்வார்முகேந திருவாய்மொழியாய் வந்தவதரித்த தொன்றனன்றோவென்றருளிச்செய்தார். பெருமாள் பெரியதிருநாள்கண்டருளி திருக்காவேரியிலே தீர்த்தம்ப்ரஸாதிக்க எழுந்தருளுகிறபோது, எம்பெருமானார், முதலியாண்டான திருக்கைத்தலம்பற்றி யெழுந்தருளிநீராடி மீண்டெழுந்தருளும்போது, பிள்ளையுறங்காவில்லிதாஸர் திருக்கைத்தலம்பற்றி யெழுந்தருள, ஸேவித்திருந்த முதலிகள் இதுக்கடியென்னென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், உயர்ந்திருக்கச்செய்தே தாழநில்லாநின்றோமென்கிற அபிமானமுண்டே அல்லாதார்க்கு, அகங்கொத்தையும் இல்லாதவரிவரேயிவரென்றருளினார். பெரியநம்பிதிருமகளாரான அத்துழாய் புக்ககத்திலேவாழுங்காலத்திலே, ஒருநாள்தீர்த்தமாடத் துணைவரவேணுமென்று மாமியாரை அபேக்ஷிக்க; அவளும், உன்சீதனவெள்ளாட்டியைக்கொண்டுபோவென்று கடுத்துச்சொல்ல; நம்பிபக்கலிலே வந்து, ஐயா? என்னை இப்படிசொன்னாளென்ன, நாமறியோம், உங்கள்ஜீயருக்குச்சொல்லென்ன; அவரும் அங்கேசென்றுவிண்ணப்பஞ்செய்ய; அவரும், அருகிலிருந்தமுதலியாண்டானை உமக்குஇந்தாரும் சீதனவெள்ளாட்டியென்று கொடுத்து "போம்" என்ன; ஆண்டானும் கூடவெழுந்தருளி, நீராடப்பண்ணுவித்துக்கொண்டுவந்து, அவருடைய புக்ககத்திலேநின்று, தாஸவ்ருத்திகளைச்செய்யத்தொடங்க, அவருடைய புக்ககத்தார், ஆண்டான்! இதுவென்னென்ன, என்னைவரவிட்ட உடையவரைக் கேளுங்கோள், அவர்சொன்னதுசெய்யவேணுமேயென்ன; அவர்களும் நம்பிஸ்ரீபாதத்தேறப்போய், நம்பீ! முதலியாண்டானைவரவிட்டு எங்களை இப்படி லஜ்ஜிப்பிக்கவேணுமோவென்ன; நாம் அறிந்தோமோ? உடையவரைக் கேளுங்கோளென்ன, அவர்களும் அங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய;

உடையவரும், ஆண்டானை அத்துழாய்க்குச் சேனவடிமையாகத் தந்தோம், அவர் அங்குநிற்கை உங்களுக்கு அநிஷ்டமாகில் இங்கிருந்து அடிமைசெயகிறுவொன்று அழைப்பித்துக்கொண்டருளினார்.

பெரியநம்பி, மாறனேரிநம்பியை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப்பள்ளிபடுத்தருள ; எம்பெருமானார் இதுகேட்டு, நம்பிஸ்ரீபாதத்தேறச்சென்று தண்டன்ஸமர்ப்பித்து, ஜீயா! ஸம்ஸாரம் சிலுகிடாதபடி அடியேன் ஒருவழியாலேவேலியிட்டுவர தேவரீர்ஒருவழியாலே பிரித்தருளாநின்றதே! என்று விண்ணப்பஞ்செய்ய;நம்பியும,வாரீர்உடையவரே! இக்ஷ்வாகுவம்சத்திலே அவதரித்து ஸாமாந்யதர்மத்தை வெளியிட்டருளின பெருமாளைக்காட்டில் நான்பெரியவனோ, பெரியவுடையாரைக்காட்டில் இவர் தண்ணியரோ; ஸாமாந்ய தர்மநிஷ்டரான தர்மபுத்ரரைக்காட்டில் நான்பெரியவனோ,ஸ்ரீவிதுரரைக்காட்டில் இவர் தண்ணியரோ, * பயிலுநசுடரொளி, * நெடுமாற்கடிமை கடலோசையோவென்றருளிச்செய்ய; உடையவரும உகந்து ஸமமதித்திருக்கச் செயதே; மாறனேரிநம்பி திருநாட்டுக்கெழுந்தருளும்போது பெரிய பெருமாள்திருவடிகளே சரணமென்றுதல், ஆளவந்தார்திருவடிகளே சரணமென்றுதல செய்யக்கணடிலோம்,இதுவென்னென்று உடையவருடனே பெரியநம்பி அருளிசசெயதருள; உடையவரும அவாக்கு அப்போது * ஶ்லோகத்வயாநுஸந்தாநமாயிருந்ததாயக கொள்ளீரென்று விண்ணப்பஞ்செய்ய ; நமபியும அதுபெண்கண்டபிச்சனவார்த்தையன்றோவென றருளிசசெயதருள; உடையவரும், பெண்ணினுடைய நித்யயோகத்தைத் திருவுளளமபற்றுதொழிகிறதென்னென்று விண்ணப்பஞ்செய்தார். உடையவர் ஒருநாள் ஓருமையையழைத்துக்கொண்டுஉள்ளே யெழுந்தருளிக்கதவையடைத்து,ஏகாந்தத்திலேஸம்ஜ்ஞையாலே தமதிருவடிகளைத் தொடநிகாட்டியருள; அவனும் அதுவே தஞ்சமென்று புத்திபண்ணியிருக்க; ஆழ்வான் இத்தைக் கதவின் புரையிலேகண்டு, "ஐயோ!, கூரத்தாழ்வானாய்ப்பிறந்து பரக்கசாஸ்த்ரஙகளைக் கற்றுககெட்டேன், ஒன்றும அறியாத ஊமையாய்ப்பிறந்தால் அடியேனுக்கும் உடையவா இரங்கியருளுவரோ! என்று மோஹித்தாரொன்று ப்ரஸித்தமிறே.

திருககோட்டியூர்நம்பி, திருககோட்டியூரிலே மேல்தளத்தின் மேலே படிக்கதவைவிழவிட்டு த்யாநித்துககொண்டிருக்க; உடையவர் அங்கேற வெழுந்தருளி, நம்பியைககுறித்து, த்யாநமேது, மந்த்ரமேதென்றுகேட்டருள; நமபியும் த்யாநம, ஆளவந்தார்வடவாற்றிலே நீராடியருளும்போது அகமர்ஷணம்பண்ணி முழுகியிருந்தால், அவர் திருமுதுகு வல்லான் கடாரம்கவிழ்த்தாப்போலே யிருக்கும், அதுவே எனக்குத்யாநம்; யமுனைத்துறைவர் என்கிற திருவேமந்த்ரமென்றருளிச்செய்தருளினார். ஆகையாலே ஆசார்யவிக்ரஹமே ஸதாத்யேயமென்

றும், தன்னாமமே ஸதாஜப்யமென்றும் உடையவருக்கு உபதேசித்தாரா
ய்த்து. (బాలమూకజడాన్ధాశ్చ పఙ్గవో బధిరాస్తథా। సదాచార్యేణ సన్దృష్టాః ప్రాప్నువన్తి పరాం గతిం) (பாலமூகஜடாந்தாஶ்ச பங்கவோபதிராஸ்ததா-ஸதாசார்யேண
ஸ௦த்ர்ஷ்டா: ப்ராப்நுவ௦திபராங்கதிம்) என்கிறபடியே பெண்ணும்
பேதையும் எல்லாரும் ஸ௦ஸாரதுத்தீர்ணராம்படி விசேஷகடாக்ஷஞ்
செய்துகொண்டும், கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப்
பெருமாளெம்பெருமானார்முதலான முதலிகளுக்கும், ஸ்ரீபாஷ்யம் ப்ர
ஸாதியாநின்றுகொண்டும் ஸுகமேவாழ்ந்தருளாநிற்க; அக்காலத்திலே;
ராஜ்யம்பண்ணுகிறசோளராஜா துஶ்ஶைவனாகையாலே, வேதவிருத்த
மான கள்ளப்பொய்ந்நூலாகிய சைவாகமத்தை த்ருடதர ப்ரமாணமான
மெய்ந்நூலென்று அத்யவஸித்து, தானும் தன்புரோஹிதனுமாகக்
கூடவிருந்து, தன்னுடைய நாட்டிலுள்ள வித்வான்களையெல்லாம்
திரட்டி, (శివాత్పరతరంనాస్తి) (ஶிவாத்பரதர௦நாஸ்தி) என்று ஓலைக்கு
எழுத்திடச்சொல்லித் தண்டிக்க; சிலர் அவனுடைய ஆஜ்ஞைக்கு அருசி
யும், சிலர் ஆத்தக்ஷேத்ராதிகளை ஆசைப்பட்டும் எழுத்திட்டார்கள்.
இத்தைக்கண்ட நாலூரான், இந்த ஆபாஸரிட்டதாலென்ன ப்ரயோஜன
முண்டு, ராமாநுஜனும் கூரத்தாழ்வானும் இட்டாலன்றோ இட்டதாவ
தென்ன; சோளனும், அப்பொழுதே சில மநுஷ்யரைப்பார்த்து, ராமா
நுஜனை அழைத்துக்கொண்டு வாருங்கோளென்று கோயிலுக்கு வரக்கா
ட்ட, அந்தராஜமநுஷ்யர், உடையவர்மடத்து வாசலிலே வந்து,
ராமாநுஜன் எங்கேயென்றுகேட்க; இச்செய்தியை உடையவருக்கு
நீராடத் திருமஞ்சனம் முகந்து கொடுக்கிற கூரத்தாழ்வான் திருச்செ
வியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர்வந்து ரஹஸ்யமாக விண்ணப்பஞ்செய்ய,
ஆழ்வானும் உடையவருடைய த்ரிதண்ட காஷாயாதிகளை தரித்துக்
கொண்டு,உடையவருக்கும்விண்ணப்பஞ்செய்யாதே ராஜமநுஷ்யருடன்
போகத்தேட, அவ்விசேஷங்கேட்டு, ஆழ்வானுடனே பெரியநம்பியும்
புறப்பட்டெழுந்தருள அவர்களை அழைத்துக்கொண்டுபோனார்கள்.

அநந்தரம், உடையவரும் த்ரிதண்டகாஷாயாதிகளைத்தாருங்கோ
ளென்ன; கூரத்தாழ்வான் தரித்துக்கொண்டு ராஜமநுஷ்யருடனே
எழுந்தருளினாரென்று முதலியாண்டான் விண்ணப்பஞ்செய்ய; ஆகில்
அவருடைய வெள்ளையைத் தாருங்கோளென்று வாங்கித் தாம் சாத்தி
க்கொண்டு, ஆழ்வானுக்கும், பெரியநம்பிக்கும் என்னதீங்குவருகிறதோ!
என்று போரக்லேசித்திருக்க; முதலியாண்டானுள்ளிட்ட முதலிக
ளெல்லாரும், தேவரீர் இங்கிருக்க வொண்ணாதென்று விண்ணப்பஞ்
செய்ய; உடையவரும், இனிச்செய்ய வடுப்பதென்னென்று வ்யாகு
லாந்த:கரணராய் பேரருளாளர் திருமுன்பேசென்று திருவடிக
ளிலே சரணம்புக்கு, "வெறுப்பொடு சமணர் முண்டர்விதியில் சாக்கி
யர்கள் நின்பால் பொறுப்பரியனகள்பேசி" என்றுதொடங்கி "தலையை
யறுப்பதே கருமங்கண்டாய் அரங்கமாநகருளானே" என்று

ஆழ்வார் அருளிச்செய்தபடி இப்போது அவன் தலையையறுக்கக்கூடாது, அவன் பரிகரவானுகையாலே முகாந்தரேணச்செய்துவாராநின்றேன் என்று விண்ணப்பஞ்செய்து, முதலிகளும் தாமுமாக மேற்கே யெழுந்தருளாநிற்க, ராஜமநுஷ்யர் பின்தொடர, பின்னே ஆள் தவரித்து வருகிறதென்று முதலிகள் விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் வழியில் மணலையள்ளி, "கொடுமைசெய்யுங் கூற்றமுமென் கோலாடி குறுகப்பெறா, தடவரைத்தோள் சக்கரபாணீ! சார்ங்கவிற்சேவகனே!" என்று இத்தைப்போற்றி அவர்கள் வருகிறவழியிலே * ஒழுக்கிவாருங்கோளென்ன; முதலிகளும் அப்படியேசெய்ய; ராஜமநுஷ்யர் அந்தமணலை மிதித்து அப்பால் அடியிடப்போகாமல், "போகிறபாப்பார் மந்த்ரவாதம் பண்ணிப்போனார்கள்" என்று மீண்டுபோக, உடையவரும், முதலிகளும், * ஆங்கத்தமைப் புயல்வண்ணனே வழித்துணையாக யெழுந்தருளினார்.

ஒருபோது வழியிலே நீலகிரிச்சரரான சிலவேடமுதலிகள் புனம் பார்க்கிற, அங்கே ஸ்ரீவைஷ்ணவர் எம்பெருமானாரைத் தேடிக்கொண்டு எழுந்தருள; அவர்கள் இவரைத் திருநாமமே துமிபாக நீர் எங்கிருந்து எழுந்தருளுகிறீரென்று கேட்க, கோயிலில நின்றுமெழுந்தருளுகிறோமென்ன; அவர்களும், எம்பெருமானார்க்கு ஒருகுறைகளுமில்லையே? பெரியபெருமாள் திருச்செல்வத்துக்கு ஒரு குறைகளுமில்லையே என்று கேட்க; இவரும், என்ன பெரியபெருமாள், என்ன திருச்செல்வம், எம்பெருமானார் சோழராஜனாலே * வெண்பரிதானம தரித்தெழுந்தருளினார், இன்னவிடத்தே யெழுந்தருளினாரென்று தெரியாது என்று அருளிச்செய்ய; அவர்களும் அவ்வார்த்தைகேட்டு வ்யாகுலப்பட்டுப் புலம்பாவுறைகதவிர்ந்து அன்றுமுதல் ஆறுநாள்பட்டினியேகிடக்க, ஆறாநாள் ராத்ரி அம்மலையடியிலே எம்பெருமானாரும் முதலிகளும் மழையிலே நனைந்து, குளிரிலேயிருபட்டு இவர்கள் புனத்தில் நெருப்பெரிகிறதை, உடையவரும், அங்கேற நம்மைக் கொண்டுபோங்கோளென்று அருளிச்செய்ய, முதலிகளும் அங்கேறவெழுந்தருளுவித்துக்கொண்டுபோய, வழியெங்கே பிள்ளைகாளென்ன; அவர்களும், ப்ராஹ்மணர் குரலாயிருந்தது, பெருவிடாயோடே ஒருகுரலாயிராநின்றதென்று ஓடிவந்து வேலியைப்பிரிந்து, இங்கேவாருங்கோளென்று அழைத்துக்கொண்டுபோய, சாதத்துக்குத் திருப்பரிவட்டங்களும் கொடுத்து, சாத்தியிருந்த திருப்பரியட்டங்களையும் உலரவிட்டு, குளிரபோகக் காய்ச்சியொற்றி, எங்குநின்றும் எழுந்தருளுகிறீர்களென்றுகேட்க; இவர்களும், கோயிலிலநின்றும் வருகிறோமென்ன; எம்பெருமானார் செய்கிறதென்னென்றுகேட்க; முதலிகளும், நீங்கள் எம்பெருமானாரையறிந்தபடியெங்ஙனேயென்ன; நாங்கள்நல்லானடிமைகள், அவர்எங்களுக்கு ஹிதம்ப்ரஸாதிக்கும்போது நமக்கெல்லாம் பரமாசார்யர் எம்பெருமானாராயிருக்கும், ஆகையாலே "உடையவர்திருவடிகளேசரணமென்

திருங்கோள்" என்று அருளிச்செய்தாரென்று விண்ணப்பஞ்செய்ய,
முதலிகளும், ஆகில் இவரோ உடையவரென்று காட்டியருள, அவர்க
ளும் ஸ்ரீபாதத்தைக் கட்டிக்கொண்டு அழுது வ்யாகுலப்பட்டு, திரு
வடிகளிலே விழுந்து ஸேவித்து, தேனும் தினையுங்கொண்டுவந்து ஸம
ர்ப்பித்து இக்கதினைவறுத்துஇடித்துத் தேனிலகலந்து அமுதுசெய்த
ருளவேணுமென்றுவிண்ணப்பஞ்செய்ய; முதலிகளும் அப்படியே செ
ய்து அமுதுசெய்தருளி, அற்றைக்குக்கண்வளர்ந்தருளினார்கள்; மற்
றைநாள் விடிவோரை வேடமுதலிகளில் ஒருவரையும் தம ஸ்ரீபாதத்து
முதலிகளில் ஒருவரையுமாகக் கோயிலுக்குப்போகவிட்டு, உடை
யவருடனே மற்ற நாம்பத்தஞ்சுதிருநாமமும் எழுந்தருளினார்கள். அவ்
வேடமுதலிகளும், இவர்களைமலைக்குமேற்கே அறுகாதவழிகொண்டு
போய,ஒருவேடமுதலியகத்தேவிட; அவ்வேடமுதலி பகலெல்லாம வே
ட்டைக்குபபோய வந்து உண்ணபபுகக்வாறே, ப்ராஹ்மணாகளபட்டி
னியே யிருக்க, நாம் உண்ணலாகாதென்று, அருகாக ஒருக்ராமத்திலே
கட்டளைவாரியெனபாரொருப்ராஹ்மணனகத்திலே இவர்களைக்கொண்
டுபோய்விட்டு, வேண்டும கட்டளைகளையும்பண்ணி, இப்போதே அமு
துசெய்யப்பண்ணுவியுங்கோளென்று சொல்லுங்கோளென்று ஆள்கொடு
த்துப்போகவிட; அவர்களும்; உடையவரையும, முதலிகளையுங் கூட்
டிக்கொண்டுபோய், அவனகத்தேவிட்டு, இவர்களை இப்போதே
அமுதுசெய்யப் பண்ணுவியுங்கோளென்று சொல்லி, வேண்டிய கட்ட
ளைகளும் பண்ணுவித்து மீண்டுபோனாகள.

அவ்வகமுடையானுடைய பத்நியும் தண்டன் ஸமர்ப்பித்து உங்க
ளுக்கு அமுதுசெய்யவேண்டாவோவென்று விண்ணப்பஞ்செய்ய;
முதலிகளும் வேண்டாவென்று அருளிச்செய்தருள, அவளும உங
களுக்கு ஸந்தேஹிக்கவேண்டா, அடியேனும் எம்பெருமானா ஸ்ரீபா
பாதத்தை யுடையேனென்றருள; முதலிகளும், நீ எமபெருமானார் ஸ்ரீபா
தத்தையாஶ்ரயித்தபடி யெங்ஙனேயென்றுகேட்க; அவளும், நாங்கள்
இவ்விடம்வர்ஷமின்றியே யிருந்தவாறே கோயிலிலேவந்திருந்தோம்,
அங்கே என்னகமுடையாரும நானும் ஒருமடத்திலே யிருக்கையா
யிருக்கும், அப்போது எம்பெருமானார் ஏழு திருமாளிகையிலே மாது
காம்பண்ணி அமுதுசெய்தருளுவா; அவர் திருவீதியிலேஎழுந்தருளும்
போது, அகளங்கநாட்டாழ்வானுளளிட்ட முதலிகளெலலாரும அவர்
திருவடிகளிலே ஸேவிப்பர்கள்; அவர் ஒருநாள் மாதுகரத்திற்கு அந்தத்
திருமாளிகையேற வெழுந்தருள, அடியேனும, மச்சில் நின்றும்
இறங்கிவந்து இடைகழியில் தகைந்துநின்றேன்; அவர் இதுஎன்ன
பெண்ணே! என்றுகேட்டருள, நீர்மாதுகரம்பண்ணுநின்றீர், உம்மை
ராஜாக்களும் பட்டணத்து முதலிகளும் தண்டனிடாநின்றார்கள்.
இதற்கடியென்னென்றவாறே; உடையவரும், நாம் அவர்களுக்கு பக
வத்விஷயத்தில் சிலநல்வார்த்தைசொல்லுகையாலேகாண் என்றருளிச்

மெசய்தருள; அந்தநல்வார்த்தையை அடியேனுக்கும் ப்ரஸாதித்தருள
லாகாதோவென்றேன், அப்போது ஸ்மிதமருளிச்செய்து எழுந்தருளினார்;
பின்பு எங்கள் நாட்டில் வர்ஷமுண்டாய், நாங்கள் எங்கள் நாட்டேறப்
போகும்போது அவர் அருளிச்செய்த நல்வார்த்தையைமறந்தேன்,
உடையவரை ஸேவிக்கப்பெற்றிலனே! என்ற இழவோடே நினைத்தி
ருக்க, அத்தைக்கும் அங்கேறவெழுந்தருள; அடியேனும் மச்சில்நின்று
மிறங்கிவந்து தண்டனிட்டுநின்று, நாங்கள் எங்கள்நாட்டேறப்போகா
நின்றோம், தேவர் முன்பு அருளிச்செய்தநல்வார்த்தையை மறந்
தேனென்ன, அப்போது உடையவரும்மீளவும் த்வயத்தைநெஞ்சிலே
நிலைநிற்கும்படி குருபரம்பராபூர்வகமாக உபதேசித்து, மீண்டு எழுந்
தருளத்தேட, அடியேனாத்மரக்ஷையாக ஏதேனுமொன்று தந்
தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தேன், அப்போது சாத்தியிரு
ந்த ஸ்ரீபாதுகைகளை ப்ரஸாதித்தருளினார் அடியோங்களும் அன்றே
போனோம், பின்னை ஸேவிக்கப்பெற்றிலோமென்றவாறே, உடையவ
ரும் தமதுள்ளத்திலே விசாரித்தருளி திருப்போனகம் சமைக்கவரு
ளிச்செய்து, இவள்செய்யுமது பார்த்திருமென்று ஒரு ஸ்ரீவைஷ்ணவ
னையேவ, அவனும்போய்க்கண்டு; அவளும் அடைவாகச்சமைத்து, முன்பு
உடுத்த புடவையை அவிழ்த்து, சுத்தமான புடவையைஉடுத்து, உள்
ளேபுக்கு, "ராமாநுஜ திருவடிகளேசரணம்" என்று உச்சரித்து,
அந்த ஸ்ரீபாதுகைகளை எடுத்துவைத்து, திருவடிவிளக்கி அமுதுசெ
ய்யப்பண்ணி ஆராதித்து, நிவேதித்துத் தண்டனிட்டு ஸமர்ப்பித்து, ஸ்ரீபா
தம் விளக்கி, அமுதுசெய்யப்பண்ணித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செ
ய்ய; முன்பு போன ஸ்ரீவைஷ்ணவனை யழைத்து, இவள்
செய்தபடியெல்லாம் என்னென்று கேட்டருள, அவனும், இவள் திருப்போனகம்
அடைவாகச்சமைத்து முன்பு உடுத்த புடவையையும் விடுத்து, சுத்த
மான புடவையையும் உடுத்து, திருப்போனகத்தை யெடுத்துக்கொண்
டுபோய் உள்ளேபுக்கு, கதவையடைத்து த்யாநம்பண்ணியிருந்து
அமுதுசெய்யப்பண்ணினாள், அந்நாழிகை நீண்டிருந்தது, எம்பெரு
மானிருக்கிறவிலையென்றவாறே; அவளையழைத்து, நீ உள்ளேசெய்த
தென்னென்று கேட்டார்; அவளும், முன்பு அடியேனுக்குத் தஞ்ச
மாக ப்ரஸாதித்தருளின பாதுகைகளைத் திருவடிவிளங்கி அமுது
செய்யப்பண்ணியபடியே ப்ரஸாதமருளுவது, இப்போதும அப்படியே
செய்தேனென்று விண்ணப்பஞ்செய்ய, ஆகில், அவைதன்னை இங்கே
கொண்டுவந்து காட்டென்ன; அவளுங் கொண்டுவந்துகாட்ட; அவை
அங்குத்தைக்கு ஒத்திருந்தது, எம்பெருமானார் அருளிச்செய்தவார்த்
தை ஒத்திருந்ததில்லையாகில முதலிகள் அமுதுசெய்யார்கள், அத்தை
என்செவியில்சொல்லிக் காணுமென்ன; அவளும் விண்ணப்பஞ்செய்ய
அந்தவார்த்தையும் ஒத்திருந்தது; ஆகில இதுகளுக்குள்ளே எம்பெருமானா
ருண்டோ? பார்த்துக்காணுமென்ன; அவளும் திருவிளக்கை யேற்றிக்

கொண்டுவந்து அடைவேபார்த்து, எம்பெருமானார் திருவடிகளைக் கண்டு அங்கே திகைத்துநின்று, "இது எம்பெருமானார் திருவடிகளைப் போலே யிராநின்றது, காஷாயமில்லாமையாலே தெரிகிறதில்லை" என்றவாறே, நான்காண் என்றருளிச்செய்ய; அவளும் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அழப்புக்கவாறே, கண்ணைத்துடைத்து, (...) (விதுராந்நாநிபுபுஜே ஶுசீநிகுணவாநிச) என்கிற பாவநத்வ போக்யத்வங்களையுடைத்தாயிருந்தது, இனி முதலியாரை அமுது செய்யக் குறையில்லையென்றருளிச்செய்ய; முதலிகளும் அமுதுசெய்து கண்வளர்ந்தருள; அப்பெண்பிள்ளை, முதலிகள்தளிகைப்ப்ரஸாதத்தையும் கூட்டிக்கலந்து, மச்சிலேயிருக்கிற தன்பார்த்தாவையெழுப்பி ப்ரஸாதமிட்டு ப்ரஸாதப்படப்பண்ணி தான் ப்ரஸாதப்படாமலிருக்க; அவனும், இதென்னென்றுகேட்க; அவளும், கோயிலிலேநின்றும், எம்பெருமானாரும் முதலிகளும் எழுந்தருளி அமுதுசெய்யமாட்டோமென்று கண்வளர்ந்தருளினாரென்றவாறே, அவனும் நான் அதற்கென்னசெய்யவேணுமென்ன; நீர் எம்பெருமானாரை யாஶ்ரயிக்கவல்லீரோவென்ன, அவளும் இசைந்து ப்ரத்யயம்பண்ணிக்கொடுக்க, அவளும் உகப்புடனே ப்ரஸாதப்பட்டு நித்ரைபண்ணினாள். மற்றைநாள் பொழுதுவிடிந்தவாறே,எழுந்திருந்துவந்து,உடையவர் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, இற்றைக்கு எழுந்தருளியிருந்து இவரை காபை செய்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானாரும் அற்றைக்குஅங்கே அவஸரித்தருளி, அவளுக்காக அவனுக்கு ஹிதோபதேசம் பண்ணி, விசேஷகடாக்ஷம்செய்தருளி அங்கே நாலைந்துநாளெழுந்தருளியிருந்து, த்ரிதண்டகாஷாயாதிகளையும் ஸம்பாதித்து, தம திருவாராதநமான பேரருளாளர்ஸந்நிதியிலேவைத்து தண்டன்ஸமர்ப்பித்து, உடையவர் முன்புபோலே அவற்றைத் தரித்தருளினார்.

மற்றைநாளமேறகே வஹ்நிபுஷ்கரிணியாகிறகாவேரியைத்தாற வெழுந்தருளி, அங்கே சிறிதுகாலம் எழுந்தருளியிருந்து, அங்குநின்றும் மிதுலாபுரி ஸாளக்ராமத்தேறவெழுந்தருள; ஊரடைய ப்ரசந்நவிரோதிகளாகையாலே உடையவரை அநாதரித்திருக்க; உடையவரும், முதலியாண்டானை யழைத்து,இவ்வூரார் நீர்முகக்குந்துறையிலே நீரும் ஸ்ரீபாதத்தைநீட்டிக்கொண்டிருமென்று நியமித்தருள; ஆண்டானும் அப்படியே செய்தருள; அவ்வூரார் இவர்ஸ்ரீபாததீர்த்த வைபவத்தாலே, நிர்த்தஅஹங்காரராய, மற்றைநாளேதெளிந்துவந்து,உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிக்க, அதநீர்த்தப்ரபாவத்தையிட்டு இவ்வூருக்குசாளக்ராமமென்றதிருநாமம் அந்வர்த்தமென்றருளிச்செய்தார். அங்கேவடுகநம்பியை ஸ்வபாதச்சாயாபந்நராம்படி விசேஷகடாக்ஷம்செய்து, அவர்க்கு தர்ஶநார்த்தம் ப்ரஸாதித்துக்கொண்டு சிங்கர்கோயிலிலே சிறிதுநாளெழுந்தருளியிருந்து, விஷ்ணு வைஷ்ணவத்வேஷியான சோளன் க்ரிமிகண்டனாய் நசிக்கும்படியாக அபிசாரம்பண்ணி, அங்கு நின்றும்

தொண்டனூரேற வெழுந்தருளினார். அங்கே அத்தேசத்திற்கு அதிபதியான விட்டலதேவராயன்மகள் பிஸாசாவிஷ்டையாயிருக்க; அவனும், மந்த்ரவாதிகள் பலரையுங்கொண்டு தீர்க்கத்தேடினவிடத்திலும் தீராதபடியாலே துக்கிதனாயிருக்க, தத்பத்நியும், நிர்வாணமாய்ஓடித் திரிகிற தன் பெண்ணைக்கண்டு, மிகவும் வ்யாகுலப்பட்டிருக்குமளவிலே நம்பியும், உபாதாநார்த்தமாக ராஜக்ருஹத்தேற வெழுந்தருளினவர் துக்கிதையான ராஜபத்நியைக்கண்டு, துக்கஹேது வென்னென்று கேட்டருள; அவளும் தத்காரணத்தைச் சொல்ல, தொண்டனூர்நம்பியும் கேட்டருளி, நம்மாசார்யரான எம்பெருமானார் கடாக்ஷித்தால் இப்பேய் விட்டுப்போமென்று ப்ரஹ்மராக்ஷஸ்ஸின்கதையை ஸவிஸ்தாரமாக அவர்களுக்கு அருளிச்செய்ய; அவளுங்கேட்டு, ஆஶ்சர்யப்பட்டு, தன் பர்த்தாவுக்கு அறிவிக்க; அவனும், உடையவர், இப்பேயைவிடுவிக்கில் அவரை நமக்காசார்யராக, அவர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கக்கடவோமென்ன; அவ்வளவிலே அவர் ஸ்வக்ருஹத்துக்கு விருந்திடத்தேட, இவளும் தன்பர்த்தாவை நிருபித்து, நீர் அநுகூலரென்று, அவர்கள் இங்கேவாரார்கள், சொல்லாதேகொள்ளுமென்ன; அவனும், அவர்கள் வாராதிருப்பார்களோவென்று இவள்வார்த்தையை அதிக்ரமித்துச் சொல்ல; அவர்களும், முன்பு டில்லிஸ்தாநத்து துஷ்டனை இவனே ஆக்ரமித்துப் பிடித்துக்கொண்டுபோய், பட்டர்ஹுனனறிக்கேபோம்படி ஒரு அங்கு விச்சேதம் பண்ணுகையால "விட்டலதேவராயன்" என்று ப்ரஸித்தமானகையாலே, ஹீநாங்கனாகத்தே ப்ரீதிக்கவொண்ணாதென்று தவிர்ந்துவிட்டார்கள், அதுகண்டு அவன் அவர்களிடத்தே அதிகுபிதனாய் அவர்களை திரஸ்கரித்திருக்குமளவிலே, அவனுடைய ஸ்த்ரீயும், அவனைக்குறித்து உடையவர் திருவடிகளில் ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கலாகாதோ, இவர்களாலே என்ன ப்ரயோஜனமுண்டென்ன; அவனும் இசைந்து, உடையவரை ஸ்வக்ருஹத்தேற வெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, ராமாநுஜனும், நம ராஜதானியை மிதிக்கக்கடவோமல்லோம் என்று அருளிச்செய்ய, அவ்வளவிலே, தொண்டனூர்நம்பி முதலான முதலிகள், இவனை, விசேஷகடாக்ஷம் செய்தருளினால் தர்ஶநத்துக்கு பஹுவுபகாரமுண்டென்று பஹுச, வேண்டிக்கொள்ள, உடையவரும் ஸம்மதித்து அவன் அகத்தேற வெழுந்தருளினவளவிலே; அவனும் அதிஸந்துஷ்டனாய், திருவடிகளிலே ஸாஷ்டாங்க ப்ரணாமம் பண்ணி ஸவிநயனாயநிற்க; முதலிகளும், உடையவர்ஸ்ரீபாததீர்த்தத்தை அவன் புத்ரிக்கு ப்ரஸாதித்து தத்தீர்த்தத்தாலே ப்ரோக்ஷிக்க; அவளுடைய சித்தப்ரமம்போய் தெளிந்துவந்து சேலையும் உடுத்து உடையவரை ஸேவிக்க; இதை விட்டலதேவராயன் கண்டு, அத்யாஶ்சர்யப்பட்டு தத்க்ஷணமே ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயிக்க, அவனையும் இரங்கியருளி, திருவடிகளுக்கு அந்தரங்கனும்படி கடாக்ஷித்தருளினார்.

இப்படி அவனை ஸ்வவைபவத்தாலே சிஷ்யனாக்கிக்கொண்டு, அவனுக்கு விஷ்ணுவர்த்தநராயனென்று திருநாமம் ப்ரஸாதித்தருளி

ஸம்ஹ்ருஷ்டராய்நிற்க; அவ்வளவிலே, எங்கள் சிஷ்யனை நீர் இங்ஙனே மயக்கி சிஷ்யனாக்கிக் கொள்ளும்போது, எங்களை ஜயித்தன்றோ செய்யலாவதென்று பன்னிராயிரம் க்ஷபணர் ஏககாலத்திலே வாதுதர்க்கிக்கத்தொடங்க; இனி நம்மை வெளியிடாதிருக்கவொண்ணாதென்றுபார்த்து, ஒரு திருமண்டபத்திலே திருத்திரையை வளைத்துக்கொண்டு உள்ளேயெழுந்தருளியிருந்து ஸஹஸ்ரபணாமண்டலமுடைய திருவநந்தாழ்வானாய், ஓரொருத்தர்க்கு அநேகப்ரகாரமாக ப்ரத்யுத்தரமருளிச்செய்து, அவர்களை வாய்மூடுவித்து ஜயிக்க; அவர்களிலே சிலர் அதிவிஸ்மிதராய் அவருடைய திருவடிகளிலே ஆஸ்ரயிக்கத் தேட, அவர்களை அடிமைகொண்டு, ஸ்ரீவைஷ்ணவர்களாம்படி பண்ணி விசேஷகடாக்ஷஞ்செய்தருளி, தாதிவ்யசக்தியை ப்ரகடிப்பிக்க; இதைக்கண்டு பெளல ராஜ்யாதிபனான விஷ்ணுவர்த்தநனும் உடையவர் திருவடிகளிலே ஆஸ்ரயணம் பண்ணாநிற்க; அங்குத்தையில் லெம்பெருமானை, தொண்டனூர் நம்பி ஆபிமானித்த திருக்கையாலே அவருக்கு "நம்பிரமபிரான்" என்று திருநாமம்சாத்தியுகந்தருளி, சிங்கர்கோயிலிலே யெழுந்தருளி வெதாத்த வ்யாக்யாநத்தை செய்துகொண்டு இருக்குங்காலத்திலே, திருக்கையில திருமண் மாண்டு, சாத்துகைக்குத் திருமண் பெற்றிலோமே! என்று வருந்திக்கொண்டு கண்வளர்ந்தருள; அன்று ராத்ரி, திருநாராயணப் பெருமாளும், அனித்தாக யதுகிரியிலே, உம்முடைய வரவு பார்த்துக்கொண்டு நில்லாநின்றோம், உம் திருமண் போலே திருமண்ணும் இங்கேயுண்டு, சடக்கென வாரும் என்று ஸ்வப்னத்திலே கட்டியருள, உடையவர், விடிவோரை ப்ரீதராயெழுந்திருந்து, இதை முதலிகளுக்கு அருளிச்செய்து, விஷ்ணுவர்த்தநராஜனையும் அழைப்பித்து, தாம் ஸ்வப்நங் கண்டபடியை அருளிச்செய்ய, அவன் கேட்டு பரமஸந்துஷ்டனாய் ஸம்மதித்து, காடு வெட்டுவித்து உடையவரை முன்னே போகவிட்டுக்கொண்டு செல்ல; பஹுதாந்ய ஸம்வத்ஸரம் தைமாஸத்திலே, எம்பெருமானாரும், செம்பொன் யதுகிரியேறி, வேதபுஷ்கரிணியிலே சென்று (పరిధానశిలాం దృష్ట్వా ప్రాణమన్త్రిద్విజోత్తమః) (பரிதாநசிலாம் த்ருஷ்ட்வா ப்ராணமந்த்ரித்விஜோத்தம:) என்கிறபடியே பரிதாந சிலையையும் ஸேவித்து, அங்கே நீராடி (వేదపుష్కరిణీతీరే విశాలే శిలాతలే । పరిధానం ద్విజశ్రేష్ఠః కాషాయం పరమేప్సుమాన్) (வேதபுஷ்கரிணீதீரே விஶாலேசிலாதலே - பரிதாநம்ஸஜக்ராஹ காஷாயம் பரமேப்புமாந்) என்கிற தத்தாத்ரேயனைப் போலே தாமும் மீளவும் காஷாயந் தரித்தருளி, முன்னே நடந்து, திருநாராயணப் பெருமாள் எழுந்தருளியிருக்கிற இடத்தைத் தேடிக் காணாமல், பகவத்ப்ரபாவத்துக்குக் குறைவாக என் செய்தோம்! என்று, திருவுள்ளங்கலங்கிக் கண்வளர்ந்தருள; அவ்வளவிலே திருநாராயணப் பெருமாள், இவர்கனவிலேயெழுந்தருளி, கல்யாணஸரஸ்ஸின் தென்மேற்குமூலையில் செண்பகச்சோலைக்கருகே திருமகிழுக்குத்தென்பார்ஶ்வத்திலே, வளர்ந்ததிருத்துழாயின்கீழே பெரியபுற்றுக்குள்ளே இராநின்

ரேம், திருமண்ணும், அந்தக்கல்யாண ஸரஸ்ஸுக்கு வடமேற்குமூலை
யிலே (శ్వేతద్వీపాత్ సమానీతం శుద్ధం మృత్స్నామహత్తమమ్ । యాదవాద్రౌ వినిక్షిప్తమక్షయం శ్వేతమృత్స్నా) (ச்வேதத்வீபாத்ஸமாநீதம் சுத்தம்ம்ருத்ஸ்நாமஹத்தமம் -
யாதவாத்ரௌவிநிக்ஷிப்தம் அக்ஷயந்தந்மமாஜ்ஞயா) என்கிறபடியே
பெரியதிருவடியாலே, ச்வேதத்வீபத்தினின்றுங் கொணர்ந்து, யதுகிரி
யிலே நிக்ஷேபிக்கப்பட்டு, மஹாப்ரபாவத்தாலே அக்ஷயமாக
இராநின்றது, நீர் கல்லிப்பார்த்தால், உமக்கு அடையாளமாக, இவ்விடந்
தொடங்கி நாம் இருக்கும் புற்றளவாக முறிந்திட்ட திருத்துழாய்க்கொ
ழுந்தே குறியாக வரிசொன்று, ப்ரத்யக்ஷஸமாநாகாரமாக ஸ்வப்நமுகேந
அருளிச்செய்ய; உடையவரும் உகந்து, உணர்ந்து எழுந்திருந்து,
முறிந்திட்ட திருத்துழாய்க்கொழுந்தே குறியாக, கல்யாண ஸரஸ்ஸின்
கரையிலே எழுந்தருளி சம்பகவனத்திலே, கப்புங் கவருமாய்ப்பணை
த்துக்கொழுந்துவிட்ட திருத்துழாய்மரத்தைக்கண்டு களித்து, ஆநந்தத்
துடனே பலகாலும் தண்டனிட்டு, அத்திருத்துழாய் மரத்தின்மண்
காப்புநீக்கினவளவிலே (...) (கம்பியதுகிரிஸ்த்
தம்சாந்திவிந்துப்ரதாம) என்கிறபடியே, புற்றினுள்ளே பொற்கோ
யில் தோன்றியபின்பு, * மறைநான்கினுள்ளமர்ந்த மாயவனுடைய நீலசிகா
மணி தோன்ற, சகவருஷம் ஆயிரத்திற்குமேலே பன்னிரண்டுசென்ற
வர்த்தமாந பஹுதாந்யஸம்வத்ஸரத்தைய மாஸம் சுக்லபக்ஷ சதுர்த்தசியும்
வியாழக்கிழமையுங் கூடின புநர்பூச நக்ஷத்ரத்திலே நாராயணனுருவங்
கண்டு, நலமந்தத்துடனே நர்த்தித்து, எல்லாருங்குரவைக்கூத்தடித்து,
மங்களசங்க பேரீம்ருதங்க படஹாதிமங்கலவாத்ய ஜயசப்தகோஷம்பண்ணி,
ராஜாவையும் அழைத்துக் காட்டியருளி, பாலாலே திருமஞ்சனம்பண்ணி,
“பகற்கண்டேன் நாரணனைக்கண்டேன்; கனவில், மிகக்கண்டேன்; மீண்ட
வனை மெய்யே, மிகக்கண்டேன்” என்கிறபடியே, திருநாராயணப்பெரு
மானை, திருவடி முதல் திருமுடியளவும் கண்ணாரக்கண்டு, அநுபவித்
து, தம்திருக்கையாலே மூன்றுநாள் திருவாராதநஞ்செய்தருளி, “மாற
னடிபணிந்துய்ந்தவன்” என்று, பரமாசார்யரான, ஸ்ரீபராங்குசருக்கு
தாம் அத்யந்தாபிமத ஶிஷ்யராகையாலே பித்ருதநத்தைப் புத்ரன்விநி
யோகங்கொள்ளுமாபோலே, * தமிழ்மறைகளாயிரமும் ஈன்றமுதல்
தாய் சடகோபன் மொய்ம்பால்வளர்த்த இதத்தாயிராமாநுசனாகை
யாலே ஐச்வர்ய கைவல்யங்களாகிற க்ஷுத்ரபுருஷார்த்தங்களைக் காற்
கடைக்கொண்டு, திருநாராயணன்றாளே உபாயோபேயமென்று நிஷ்
கர்ஷிக்கிற * ஒருநாயகத்திருவாய்மொழியை திருநாராயணனுக்கு ஸமர்
ப்பித்தருளினார். பின்பு கல்யாண ஸரஸ்ஸின் வடமேற்குமூலையிலே தம்
த்ரிதண்டத்தாலே கீற, பாலாறுபோலே பொங்கிக் கிளம்புகிற திருமண்
குவைகளைக்கண்டு, ஆநந்தாதிசயத்தாலே அத்திருமண்கொண்டு பன்
னிரண்டு திருநாமஞ்சாத்தியருளி, த்ரிதண்டமண்டிதகரபுண்டரீகராய்
விளங்கியருளி, காடுவெட்டி ஊருங்கோயிலும் சமைப்பித்து, திருநார

யணப்பெருமாளுக்கு ஸ்ரீபாஞ்சராத்ரஸாத்வத ஸம்ஹிதையாலே ப்ரோக்ஷணாதிகளை ஸ்ரீரங்கராஜபட்டர்திருக்கையாலே செய்வித்தருளி, திருநாரணற்கு நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் மஹோத்ஸவமாக நடத்துகைக்கு உத்ஸவபேரமில்லையே! என்று மிகவும் வ்யாகுலசித்தராய்க் கண்வளர்ந்தருள; அப்போது இவர்ஸ்வப்நத்திலே திருநாராயணப்பெருமாள் எழுந்தருளி, நம்உத்ஸவபேரமான ராமப்ரியர், இப்போது டில்லியிலே எழுந்தருளி, துருஷ்கராஜ க்ருஹத்திலே லீலைகொண்டாடி எழுந்தருளியிருக்கிறார், அங்கேறப்போய் எழுந்தருளுவித்துக்கொண்டு வாரீரென்று திருவுள்ளமாயருள; உடையவரும் ப்ராதஃகாலமானவாறே எழுந்திருந்து, ஸ்வப்நத்தை முதலிகளுடன் ஆலோசித்துக்கொண்டு, ப்ரயாணத்திலே தவரித்து டில்லியேற வெழுந்தருளினவாறே, டில்லிபுரீந்த்ரனான ராஜா இவரைக்கண்டு பரமயுக்தராக ப்ரணதிபூர்வகமாக பஹூபசாரம்செய்து எழுந்தருளினகார்யமருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், எங்கள்குலதெய்வமான ராமப்ரியர் இங்கே எழுந்தருளியிருக்கிறார், அவரைத்தரவேணுமென்று அபேக்ஷிக்க, ராஜாவும் அப்படியே செய்கிறோமென்று சொல்லிக்கொண்டு சிறைவைத்த எம்பெருமான்கள்சிறைச்சாலையைச் சோதித்துக்கொள்ளுமென்று அப்பணியிட்டு விட; இவரும் அங்கேறவெழுந்தருளி சோதித்து, திருநாரணர்வடிவுக்கு ஒத்திராமையாலே இந்தவர்கள் ஒருவருமல்லவென்று, ராமப்ரியரை அவர்களில் காணாமையாலே முசித்துக்கிடக்க, அன்றிரவிலே ராமப்ரியர்; இவர்ஸ்வப்நத்திலே யெழுந்தருளி, நீர் முசிப்பானேன், நாம் அவன்மகளாலே பூஜைகொண்டு அவள் ஸஜ்ஜாக்ருஹத்திலேயிராநின்றோம், அங்கேவாரீரென்றருளிச்செய்ய, உடையவரும் இச்செய்தியை ராஜாவுக்கறிவிக்க, இவரும், அவரைக்கண்டு திருவடித்தொழலாகாதோ என்ன, அப்படியேயாகிறதென்று இவரை, அவனும், தன்மகள் ஸஜ்ஜாக்ருஹத்தேற வெழுந்தருளுவித்துக்கொண்டுபோக; அங்கே ராமப்ரியரும், இட்ட சட்டையும், கட்டின சிறுச்சதங்கையும், இட்ட கஸ்தூரித் திருநாமமும், முடித்த * மைவண்ண நறுங்குஞ்சியும், * தன்முகத்துச் சுட்டி தூங்கத்தூங்க * நெறித்தகுழலுமாய், ஸஜ்ஜையிலும் குதித்து “தன்னியலோசை சலன் சலனென்றிட” என்கிறபடியே செம்பொற் சதங்கைகள் சலசலவென்றொலிக்க, அகிலருங்காணும்படி வந்து உடையவர் திருமடியிலே யிருக்க; உடையவரும், ஆநந்தாஸ்ருக்கள் பனிப்ப, ஆநந்தைகார்ணவாந்தர் நிமக்நராய், புளகிதகிலாங்கராய், மார்பும் தோளும் பூரித்து, “என்னுடைய செல்வப்பிள்ளையோ” என்றெடுத்து அணைத்துக்கொண்டருள இதனைக்கண்ட ராஜாவும், அத்யாஸ்சர்யயுக்தனாய், அவர்திருவடிகளிலே விழுந்து ஸேவித்து, அநேகவிதமாக ஸத்கரித்து, பஹு உபஹாரஸஹிதமாக ஸம்பத்குமாரரை, யதிஸார்வபௌமர்க்கு எழுந்தருளுவித்துக் கொடுத்தனுப்ப;

உடையவரும், அங்குநின்றும் புறப்பட்டு, இவரை யெழுந்தருளுவித்துக்கொண்டு த்வரித்து பயணகதியிலே யாதவாத்ரிக்கெழுந்தருளி ப்ரோக்ஷணாதி ப்ரதிஷ்டாபுரஸ்ஸரமாக, திருநாராயணப்பெருமாளுடைய திவ்யோத்ஸவ கர்த்தாவாகி; நித்ய, பக்ஷ, மாஸ, அயந, ஸம்வத்ஸரோத்ஸவாதி மஹோத்ஸவத் திருநாள்களும் நடத்தியருளி, தீர்த்த ப்ரஸாதமும் பெற்று, எதிராஜமடமும் கட்டிவைத்து, ஐம்பத்திருவர்களுக்கு ஆன ஊழிய கைங்கர்யத்தையும் கல்பித்தருளி, ஐம்பத்திருவரென்று ஸமுதாயத்திருநாமமும், ப்ரத்யேகமாக தாஸ்ய நாமமும் ப்ரஸாதித்து, அங்கே அவர்களை ப்ரதிஷ்டிப்பித்து, குறைவறத் திருவாராதநமும் நடத்திக்கொண்டிருக்க: ஒருநாள்வரையிலே ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய ஸ்ரீபாதத்திலுள்ள ஆசார்யர்களுடனேயும், ஜீயர்களுடனேயும், ஐம்பத்திருவர்களுடனேயும், சாத்தின சாத்தாத முதலிகளுடனேயும், கொத்தியம்மைமார்களுடனேயும், திருமேனிக்காவல் திருவேளைக்காரர்களுடனேயும், பெருங்கூட்டத் திருவோலக்கமாக இராமாநுஜனில் எழுந்தருளியிருந்து, இத்திருநாராயணபுரத்திலே நித்யவாஸம்பண்ணுமவர்களுக்கு நமக்குண்டான பரமபதமுண்டாமென்றருளிச்செய்தருளினார். ஆகையாலே அந்த நம்மலை க்ருதயுகத்திலே, ஸநத்குமாரர் ஸத்யலோகத்தில் நின்றும் ஆநந்தமய திவ்ய விமானத்தோடே எழுந்தருளுவித்துக்கொண்டுவந்து திருநாராயணனை இங்கே ப்ரதிஷ்டிப்பிக்கையாலே நாராயணாத்ரியென்றும், த்ரேதாயுகத்திலே தத்தாத்ரேயர் நாலு வேதபுருஷர்களையும் ஸிஷ்யராக்கிக் கொண்டுவந்து வேதபுஷ்கரிணிக் கரையிலே வேதாந்தத்யயநம் பண்ணியிருக்கையாலே வேதாத்ரியென்றும், த்வாபரயுகத்திலே, நம்பி மூத்தபிரானும் ஸ்ரீக்ருஷ்ணனும் ஆராதிக்கப் பெறுகையாலே யாதவாத்ரியென்றும், "யுகே கலௌ து ஸம்ப்ராப்தே யதிராஜே ப்ரஜநாத் - யதிசைலமிதி ப்ரோக்தம் நாமதேயம் தரிஷ்யதி" (యుగే, కలౌ తు సంప్రాప్తే యతిరాజే ప్రజానాత్ । యతిశైలమితి ప్రోక్తం నామధేయం ధరిష్యతి) (யுகே கலௌ து ஸம்ப்ராப்தே யதிராஜே ப்ரஜநாத் - யதிசைலமிதி ப்ரோக்தம் நாமதேயம் தரிஷ்யதி) என்கிறபடியே, கலியுகத்திலே எம்பெருமானார் எழுந்தருளி ஜீர்ணோத்தாரணம் பண்ணி அபிமானிக்கையாலே எதிசைலமென்றும் ப்ரஸித்தமாய்த்து.

அநந்தரம், பத்மகிரியிலே சென்று, பௌத்தஸமயங்களை வென்று "என்றுமென்பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்களங்ஙனமாவர்களே" என்னும்படி அவர்களை கற்காணந்தன்னில் அரைப்பித்து நிஶ்ஶேஷமாக நிரஸித்து நிஷ்கண்டகமாக்கியருளி, ஸ்ரீபாஷ்யமும் வ்யாக்யானித்துக்கொண்டு திருநாராயணப்பெருமாள் திருவடிகளிலே பன்னிரண்டு ஸம்வத்ஸரம் வாழ்ந்தருளுகிறகாலத்திலே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலில் நின்று மெழுந்தருளி உடையவர்திருவடிகளிலே ஸேவித்திருக்க; இவரும், "பெரியபெருமாளும், பெருஞ்செல்வமும் செய்கிறபடியென்" என்று கேட்டருள; அவரும், "தேவரீர் இல்லாதகுறையொன்

ருழிய மற்றொருகுறைகளு மில்லை" என்ன; இவரும "சோழன் பக்கல் எழுந்தருளின ஆழ்வானும், பெரியநம்பியும செய்தபடியென்" என்று கேட்டருள; ஸ்ரீ வைஷ்ணவரும, கோயிலில நின்றும கூரத்தாழ்வானையும், பெரியநம்பியையும, ராஜமநுஷ்யா அழைததுககொண்டு போய் சோழன்முன்னேவிட, அவனும இவாகளைப்பார்ததது, ([illegible]) (ஶிவாத்பரதரஂநாஸ்தி) என்று ஓலைக்கெழுததிடச்சொல்ல, கூரத்தாழ்வானும், ஶ்ருதிஸ்ம்ருதிஇதிஹாஸ புராணங்களிலே பஹுப்ரகாரமாக ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாதபரன, ஜகத்காரண பூதன, த்யேயனுமவனுமவனே, ஸாக்ஷாந்முக்தி ஸம்ஹாரகர்த்தாவுமவனே, ப்ரஹ்மருத்ராதிகள் அவனுக்குப் புத்ரபௌத்ராதிகளாய அவன நியமநத்திலே யிருக்குமவர்கள; அவ்வளவுமன்றியே, ([illegible]) (ஏகபோவிஸரத்பாதமந்யம்ப்ரக்ஷாளயந்ப்ருதா - அபரோநந்தரநஸ்ரஜகதா கோதிகஸ்தேஷாஂநணயதாம்) என்று-திருவடிகளை நீட்டினவனொருவன, கமண்டலோதகத்தாலே பக்திபுரஸ்ஸரமாகத திருவடிகளைவிளக்கினவனொருவன, தத்தீர்த்தத்தை ப்ரீதியோடே சிரஸாவஹித்தவனொருவன, இவாகளில பெரியவன் ஆரென்று நீயேவிசாரித்துக்கொள்ளுமென்ன; அவனும,இசையாதிருக்க; இவரும், இமமாத்ரமேயோ, ([illegible]) (யசசௌசகிஸ்ஸாதஸரித்பரவம்ராதகேந தீர்த்தேநமூர்த்நிவித்ருதேந ஶிவஶ்ஶிவோபூத்" என்றும த்ரிவிக்ரமபாதஜலஸங்கததாலே கபாலித்வமபோய் சிவத்வமுண்டானவனிறே சிவனென்று அருளிச்செய்ய, சோழனும அதுகேட்டு அதிகருத்தனாய், நீபெரியவித்வானாகையாலே உனக்கு வேண்டினபடியெல்லாம் சொல்லவல்லை, அதுநின்றது, நான் சொன்னபடியே ([illegible]) (ஶிவாத்பரதரஂநாஸ்தி) என்று ஓலைக்கெழுத்திடும என்று ஓலையைக கையிலேகொடுதது கனக்கநிர்ப்பந்திக்க, கூரத்தாழ்வாரும், ([illegible]) (ஶிவாதபரதரஂநாஸ்தித்ரோணமஸ்திததபரம) என்று ஓலைக்கெழுத்திட்டருளினார். சோழனும இவர இப்படிபரிஹஸித்து ஓலைக்கொப்பமிட்டபடி கண்டு, அத்யந்தகோபாக்ராந்தசித்தனாய், ஆழ்வானையும் நம்பியையும், நேத்ரோத்பாடநம்பண்ணச்சொல்ல; ராஜமநுஷ்யர்களும், அவாகளைப் பிடித்துக்கொண்டுபோய் அவன் சொன்னதுபோலே செய்து படைவீட்டில்நின்றும் புறப்படவிட;'பெரியநம்பியும், அவ்வேதனை பொறுக்கமாட்டாமல, அங்கே ஒருகொல்லைத்தலைமாட்டிலே, ஆழ்வான்மடியிலே திருமுடியும அத்துழாய்மடியிலே திருவடிகளுமாய் இளைத்துக் கண்வளர்ந்தருளா;நம்பியை, ஆபத்தசையிலே அத்துழாய் அங்கு நின்றும் கோயிலேறப்போனாலோ வென்ன; நம்பியும், நாம் அங்கேபோய் ப்ராக்ருதியைவிடில, ஸ்ரீவைஷ்ணவர்கள்,"நம்பியுமுட்படத்திருவடிச்சாரும்போதுகோயிலேறப்போகவேண்டிற்றிலலையோ" என்று சங்கிப்பார்களென்று அருளிச்செய்து, ஆளவந்தார் திரு

வடிவாளேந்தியாகித்துக்கொண்டு அங்கே திருநாட்டுக் கெழுந்தருளினார். ஆகையால், ப்ரபந்நனுக்கு அந்திமஸ்ம்ருதியில்லையென்றபடி. பின்பு சிலஸ்ரீவைஷ்ணவர்கள், பெரியநம்பியை, அங்கே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்து, ஆழ்வானை ஒருகட்டணத்திலே எழுந்தருளுவித்துக்கொண்டு, ராத்ரியிலே ஒருவருமறியாமலே கோயிலிலேவந்து புகுந்தார்கள். கூரத்தாழ்வானும், பெரியநம்பியைப்போலே அடியேனுக்கும் இஸ்ஸரீரம் போயத்தில்லையே! என்றுகொண்டு "முறையோ வரவணைமேல் பள்ளிகொண்ட முகில்வண்ணனே" என்று போர க்லேசித்தருளினார் என்றுவிண்ணப்பஞ்செய்ய; உடையவரும் கேட்டு, "ஐயோ! கண்ணபிரானே! அறையோ" என்று கோஷித்துக்கொண்டு, வேரற்றமரம்போலே விழுந்துகிடந்து துடித்து, திருமிடறுதழுதழுப்ப, அத்யந்தமவஸந்நராய், கண்ணுங்கண்ணீருமாய், * கண்ணநீர் கைகளாலிறைத்து க்லேசிக்குமபடி கண்டு, அருகிருந்த முதலிகள் தேற்றத்தேறி, ஆழ்வானையும் திருமேனியுடனிருக்கப் பெற்றோமே யென்றருளிச்செய்து, பெரியநம்பிக்கு ஸ்ரீசூர்ண பரிபாலநஞ்செய்து, பெருக்கத்திருவத்யயநமும் நடத்தியருளி, ஆழ்வானுக்குத் திருக்கண் போச்சுதே! என்று,வ்யாகுலப்பட்டருளி, மாறொன்றில்லாமாருதிச் சிறியாண்டானை, "ஆழ்வானையும் அங்குள்ளவிசேஷங்களையுமாராய்ந்துவாரும்" என்று சோழதேசத்துக்குப் போகவிட்டு, பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண்டெழுந்தருளியிருக்கிற பெரியநம்பிதிருநக்ஷத்ரம், மார்கழியில் கேட்டை. அவர் தனியன் - ([illegible] ణామృతనిషేవయా । పూర్ణకామాయసత [illegible] యోగ్యతౌగమార్థ [illegible] ప్రపత్తిశ్చా [illegible] , చోళేన్ద్ర [illegible] సకలిపరపుమాన్ [illegible] పూర్ణమార్యం) (கமலாபதிகல்யாணகுணாம்ருதநிஷேவயா - பூர்ணகாமாயஸததம் பூர்ணாயமஹதேநம - ஆசார்யபாதுகேயாத திகநிகமாந்தார்த்தஜாத ப்ரபத்திம்சோ [illegible] பச்சதத்ரக்ஷணார்த்தம்-சோளேந்த்ரப்ராயயோ [illegible] ஸகலிபரபுமாந்ஸ்ரீபதிரோஹதிஷ்டாம் ஸாரீரம்தத்ப்ரசாயஸஹிதமநவைதம் மஹாபூர்ணமாயம்)

திருக்கோட்டியூர்நம்பியை அந்திமதசையில் தேவரீர் திருவுள்ளத்திலே நினைத்திருக்கிற நினைவென் என்று ஸ்ரீபாதத்துமுதலிகள் கேட்க, நம்பியும், சக்ரவர்த்தித்திருமகனார் திருவுள்ளத்தை ஒருபக்ஷிபுண்படுத்திற்றென்றுசொல்லி நிற்பவராய், ஆளவந்தாரை நினைத்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். அதாவது - ஸரணாகத பரித்ராணமும் போராதென்றிருக்குமவனிருக்க நமக்கொரு நினைவுண்டோவென்று கருத்து. இதுகண்டு ஸ்ரீபாதத்துமுதலிகள் ப்ராயேண துக்கித்துத்தேறி, தெற்காழ்வானைக்கொண்டு, நம்பிக்குத் தீர்த்தங்கொண்டாடி திருவத்யயநமும் நடத்தியருளினார்கள். திருக்கோட்டியூர்நம்பிதிருநக்ஷத்ரம்

வைகாசியில் ரோஹிணி. அவர்தனியன் - (శమదమగుణపూర్ణం యామునార్యప్రసాదాత్ అధిగతపరమార్థ జ్ఞానభక్త్యాదిసిన్ధుమ్। యతిపతినతపాదం శ్లోకతత్వార్థనిష్ఠం శ్రితదురితహరంతం గోష్ఠిపూర్ణం నమామి॥ శ్రీవల్లభపదామ్భోజ దీభక్త్యమృతసాగరం। శ్రీమద్గోష్ఠిపురీపూర్ణం దేశికేన్ద్రం భజామహే) (ஶமதமகுணபூர்ணம் யாமுநார்யப்ரஸாதாத் அதிகதபரமார்த்தம் ஜ்ஞாநபக்த்யாதிஸிந்தும் - யதிபதிநதபாதம் ஶ்லோகதத்வார்த்தநிஷ்டம் ஶ்ரிததுரிதஹரம்தம் கோஷ்டிபூர்ணம் நமாமி, ஸ்ரீவல்லபபதாம்போஜ தீபக்த்யம்ருதஸாகரம - ஸ்ரீமத்கோஷ்டீபுரீபூர்ணம் தேஶிகேந்த்ரம்பஜாமஹே.) திருமாலையாண்டான் திருநக்ஷத்ரம் மாசிமகம. அவர்தனியன் - (రామానుజమునీన్ద్రాయ ద్రావిడీసంహితార్థదం। మాలాధరగురుం వన్దే వావదూకం విపశ్చితం) (ராமாநுஜமுநீந்த்ராய த்ராவிடீஸம்ஹிதார்த்ததம் - மாலாதரகுரும்வந்தே வாவதூகம்விபஶ்சிதம்.) திருவரங்கப்பெருமாளரையர் திருநக்ஷத்ரம வைகாசியில கேட்டை. அவர்தனியன் - (అధ్యాపయద్యోదిన్ద్రాయ పరాంకుశసహస్రికాం। తన్నాథవంశ్యం వన్దేహం శ్రీరఙ్గాధిపదేశికం) (அத்யாபயத்யோதீந்த்ராய பராங்குஶஸஹஸ்ரிகாம் - தந்நாதவம்ஶ்யம்வந்தேஹம் ஸ்ரீரங்காதிபதேஶிகம.) பெரியதிருமலைநம்பி திருநக்ஷத்ரம், சித்திரையில ஸ்வாதி. அவர்தனியன் - (పితామహస్యాపిపితామహాయ ప్రాచేతసాదేశఫలప్రదాయ శ్రీభాష్యకారోత్తమదేశికాయ - శ్రీశైలపూర్ణాయనమోనమస్తాత్) (பிதாமஹஸ்யாபிபிதாமஹாய ப்ராசேதஸாதேஶபல ப்ரதாய ஸ்ரீபாஷ்யகாரோத்தமதேஶிகாய - ஸ்ரீஶைலபூர்ணாய நமோநமஸ்தாத்) திருக்கச்சிநம்பி திருநக்ஷத்ரம், மாசியில மாகஶீர்ஷம. அவர்தனியன் - (కరుణాకరపాదాబ్జ శరణాయమహాత్మనే। శ్రీమద్గజేన్ద్రదాసాయ కాఞ్చీపూర్ణాయతే నమః) (கருணாகரபாதாப்ஜஶரணாயமஹாத்மநே - ஸ்ரீமத்கஜேந்த்ரதாஸாயகாஞ்சீபூர்ணாயதேநம..)

அநந்தரம், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான், த்வரிதது பயணகதியிலேகோயிலிலேசென்று கூரத்தாழ்வானை ஸேவித்துநிற்க, ஆழ்வானும் சிறியாண்டானைக்கண்டு, உடையவரை ஸேவித்தாற்போலே ஸந்துஷ்டராய், உடையவர்செய்தருளுகிறபடி யென்னென்று வினவியருள; இங்குத்தைவிசேஷமெல்லாம் ஸவிஸ்தாரமாகவிவரித்துச்சொல்ல உடையவர்கேட்டு, ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுவாய், தேவரீருக்குத் திருக்கண்போச்சுதே! என்று மிகவும் ஆர்த்தராய், அடியேனை ஆராய்ந்துவாவென்றுயனுப்பியருளினரென்ன; ஆழ்வானும், *உலகங்கட்கெல்லாம் ஓர் உயிரானதாம்ஸுகமேயிருக்கப்பெறில், இவ்விபத்து அடியேனகண்ணழிவுமாத்ரமேகொண்டுபோகப் பெற்றதென்று ஹ்ருஷ்டராயிருக்கிறோனென்று விண்ணப்பஞ்செய்யுமென்றுவிட; அவ்வளவிலேசோழனுககுக் கழுத்திலே புண்ணாகிப் புழுத்துப் புரண்டானென்றுகேட்டு,கங்கைகொண்ட சோழபுரத்தேற ஆண்டானும்சென்று, * அச்செவிக்கினிய செஞ்சொல்லைநிஶ்சயித்துக்கொண்டு எழுந்தருளாநிற்க,வழியில்ஸந்தித்த அம்மங்கியம்மாளையுங் கூட்டிக்கொண்டு த்வரித்துஎழுந்தருள, ஒருநாள்

உடையவர் ஸ்ரீபாதத்துமுதலிகளுடன அநுஷ்டாநார்த்தமாக,திருக்கல்யாணிககரையிலே யெழுந்தருளி யிருக்கச்செய்தே, கோயிலில் நின்றும் எழுந்தருளின மாறென்றில்லாமாருதிச்சிறியாண்டானும், அம்மயங்கியம்மாளும் உடையவர்திருவடிகளைத் தங்கள் ஆநந்தாஸ்ருக்களைக்கொண்டுநனைதது,தண்டனஸமாப்பிதது,ஆழ்வானுசகும் பெரியநம்பிக்கும், அபராதம்பண்ணின சோழன், கழுத்திலே புண்ணாய்ப்புழுத்துப் புரண்டுபோனானென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், கர்ணம்ர்தமானகட்டுரையைக்கேட்டு, மாபுர்தோளும் பூரித்து, ஸந்தோஷாதிசயத்துடனே, இவாகளை வாரியெடுத்து அணைததுக்கொண்டு, ஆநந்தாஸ்ருககளைகொண்டு அவாகளை வழியவார்த்து, இவ்வளவுதூரம் இவ்விஶேஷங்கொண்டு எழுந்தருளினஇவர்களுக்கு,சிறக்கக்கனக்கக்கொடுக்கலாவது த்வயமல்லதில்லையென்று நிஶ்சயித்து, மீளவும் த்வயத்தையே அவர்களுக்குப பரிசிலாக இரங்கியருளி, தமஸந்நிதி முதலிகளைப்பார்த்து, "இதுகல்யாணஸரஸ்ஸு-என்றுமது அந்வர்த்தமாகக் கண்டோம்" என்ன; முதலிகளும அப்படியே யாமென்று அத்தைக்கொண்டாட, அவர்களையுங் கூட்டிக்கொண்டு ப்ரஹ்லாதவரதரான அழகியசிங்கர் திருமலையேறி, அவாரத திருவடிவணங்கி, பகவத்பாகவதவிஷயமென்றால அஸஹமாநரூயபபோந்த ஹிரணயனை முன்பு நிரஸித்தருளினாப்போலே,இபபோதுபரததவமான தேவரீரை "இல்லை"என்று*ஸாதாரமுபமாந பூதரானபரஹ்லாதாழ்வானுககொப்பான கூரத்தாழ்வானுக்கும் பெரியநமபிககும் அபராதம பண்ணின இவனையும், கரிமிகண்டனைகிரசிப்பித்தருளிற்றே! என்று விணணப்பஞ்செயது தீர்த்தப்ரஸாத ஸ்வீகாரம பெறறு விடைகொண்டு அப்போதே புறப்பட்டு உடையவரும முதலிகளுமாகப் பெரியப்ரீதியோடே திருநாராயணப்பெருமாள திருமுன்பேசென்று, திருவடித்தொழுது, திருப்பல்லாண்டை யநுஸந்தித்து மங்களாஶாஸநம்பண்ணி, "நமோநாராயணாய" என்று காதாஞ்ஜலிபுடராய், திருவடிகளை நோக்கி இனி அடியேன கோயிலேறப்போயவருகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய; திருநாராயணனும நெடும்போது வாயவிடமாட்டாதேநிற்க; உடையவரும,நீர்உளளதனையும் இங்கேயிருமென்றுகோயிலிலே நியமித்தருளிற்றேயென்ன; ஆகில அப்படியே செய்யுமென்று அர்ச்சகமுகேந திருவுள்ளமாயருள; ஐம்பததிருவரும், ஸ்ரீபாதத்திலே விழுந்துஸேவித்து, தேவரீர்திருவடிகளைப்பிரியில தரிக்கமாட்டோமென்று ஆர்த்தராய் தலையிறககிட்டு நிற்க; உடையவரும், * அப்போதொரு சிந்தைசெய்து தம்விக்ரஹததிற்குப் படியெடுத்தாப்போலேவிளங்குகிற தம்முடைய அர்ச்சாரூபவிக்ரஹத்தை அவதரிப்பித்து, அதிலே தம்திவ்யஶக்தியையும் ப்ரதிஷ்டிப்பிதது ஐம்பத்திருவரை அழைத்து,நாம் உங்களுக்காக இங்கேயிராநின்றோமென்று அவ்விக்ரஹத்தை அவர்களுக்குத் திருவாராதநமாக இரங்கியருளி, அவர்களைககுறித்து, "செல்வப்பிள்ளை,

ணைற்றின்கரையில் பிள்ளையாயிருக்கும், பேணிக்கொண்டுபோருங்கோ ன்" என்று நியமித்தருளி, அவர்கள்கையிலே செல்வப்பிள்ளையை அடைக்கலமாகக்காட்டிக் கொடுத்தருளி, திருவிளக்கு திருமாலை அமுது படி சாத்துப்படிமுதலான உபசாரங்களெல்லாம், நன்றாகப்பேணிச்செய்துகொண்டு, த்ரோஹபுத்தியாலே ஒருகார்யம் நினைத்திராமே, அநந்யோக்யஸஹர்தயராய், ஊழியகைங்கர்யங்களையும் மறவாதே, பக்திபுரஸ்ஸரமாகப் பண்ணிப்போருங்கோளென்று, திருவடிகளைத்தொடுவித்துக்கொண்டு நியமித்தருளி, செல்வப்பிள்ளையைப் பிரியமாட்டாமல் திருவடிகளைப்பூண்டு விழுவது எழுவது தொழுவதாய், திருவுள்ளமுருகி, திருக்கண்கள் துளிக்க, திவ்யவிமானத்தையும், திருப்பதியையும், திருச்சோலையிலெழில்களையும், திருமண்குழைகளையும் புகுந்து புகுந்து பார்த்துப்பார்த்து அநுசரித்து மங்களாசாஸநம்பண்ணியருளிக்கொண்டு, புத்ரவாத்ஸல்யம் பின்னே தள்ள, நம்பெருமாள் அருளப்பாடிட்டத, ஒருநடையிலே ஒன்பதுநடைநடந்து கோயிலேறவெழுந்தருளினார்.

அநந்தரம், பயணகதியிலேயெழுந்தருளியிருந்து, திருமுகத்துறையிலே நீராடி, கேசவாதித்வாதசஹோர்த்வபுண்ட்ரதாரிகளாயெழுந்தருள, அங்குள்ளாரெல்லாரும் எதிர்கொண்டு ஸேவிக்க; அவர்களையும் [illegible] பண்ணியெழுந்தருளிப்புகுந்து, ஸேனாபதியாழ்வானை ஸேவித்து அழகியமணவாளன் திருமண்டபத்திலே [illegible] புகுந்து உறைகோயிலுள்ளே புகுந்து, பெரியபெருமாளையும் நம்பெருமாளையும் திருவடித்தொழுது, * மனமுருகி மலர்க்கண்கள் பனிப்ப, [illegible] பருகி வாயாரவாழ்த்தி நிற்க; பெருமாளும், திருப்பவளச்செவ்வாய்திறந்து, உடையவரைநோக்கி; நெடுநாள் தேசாந்தரத்திலே சென்று போர மெலிந்தீரோ! என்று வினவியருள; எம்பெருமானாரும், பெரியபெருமாளைக்குறித்து * அகமகிழும்தொண்டர்வாழ அன்பொடு தென்திசைநோக்கித் தேவரீர் பள்ளிகொண்டருளுகையாலே, * [illegible] சொல்லும்படியே, உபயவிபூதியிலுள்ளார்க்கும் எனக்கு மேல் [illegible] என்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் உகந்து, தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டம், தளிகைப்ரஸாதங்களும் ப்ரஸாதிக்க ஸ்வீகரித்து க்ருதார்த்தராய் நிற்க; பெருமாளும், மடமேபோமென்று விடைகொடுத்தருள; இவரும் புறப்பட்டு திவ்யோத்ஸவம்கொண்டாடும் திருமண்டபங்கள், திருக்கோபுரங்கள், திருமதிள்கள்தொடக்கமான திவ்யநகர ஸ்ரீயையெல்லாம் சுற்றிஸேவித்து, முதலிகளும் தாமுமாக அழகான திருமாளிகையேறவெழுந்தருள; ஆழ்வானும் எதிரேயெழுந்தருளி உடையவர்திருவடிகளிலே விழுந்து ஸேவித்து, உகப்பின்மிகுதியாலே திருவடிகளைப் பூண்டுகொண்டுகிடக்க; உடையவரும், ஆழ்வானை வாரியெடுத்தணைத்துக்கொண்டுக்லேசாதிஶயேந சோகாச்ருவானது தாராவர்ஷமாகவர்ஷிக்க, நெடும்போது ஒருவார்த்தையும் அருளிச்செய்யமாட்டாதே, விம்மல் பொருமலாய் துக்கார்ணவமக்நராய் தழுதழுத்ததிருமிடற்றொலியுடன்,

ஆழ்வான்,! இத்தர்சநத்துக்காக த்ர்ஷ்டிபூதரான உமக்குக் கண்போகவே! என்ன; ஆழ்வானும் ஒருஸ்ரீவைஷ்ணவர் திருநாமம்கோணிற்றென்றாகிலும் நினைத்திரேனேயென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், அது உமக்குண்டோ? அடியேன் துஷ்கர்மமன்றோ உமக்கிப்படிவருகைகாடியென்று திருவுள்ளம்புண்பட்டு, துக்கோபநோதநம் பண்ணியருள; ஆழ்வானும்தேறியிறா, மற்றுமுண்டான ஸ்ரீவைஷ்ணவஸமூஹத்துடன்கூட மடமேயெழுந்தருளியிருந்தார்.

பின்பு, அந்நாட்டிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும், உடையவர் ஸ்ரீபாதத்தேறச்சென்று தண்டன்ஸமர்ப்பித்து, பெரியநம்பி திருநாட்டுக்கெழுந்தருளினீர, ஆழ்வானுக்கும் திருக்கண்மலர்போயிற்றே! என்று துக்கோபநோதநம்பண்ணித் தேவரீரையாகிலும் ஸேவிக்கப்பெற்றோமே! என்றுசொல்லி எல்லாரும் ப்ரீதராயிருக்கிறகாலத்திலே திருச்சித்திரகூடத்தில மூலபேரம் அழிந்தது, உத்ஸவபேரம் திருப்பதிக்கு எழுந்தருளிற்றென்று உடையவர் கேட்டருளி, அந்தவிழவெல்லாம் தீரும்படி திருப்பதியெழுந்தருளி ஸ்ரீகோவிந்தராஜனை மூலபேரஸஹிதமாக திருப்ரதிஷ்டையும் பண்ணிவைத்து, "தில்லைச்சித்திரகூடந்தென செல்வனே, பொனிமலைத்தவமும் வேங்கடத்தெங்கோவிந்தனே" என்றது மெய்யாகப்பலித்ததே! என்று அருளிச்செய்து இழவுதீர்ந்தருளி, திருமலையேறி திருவேங்கடமாமுகிலையும் திருவடித்தொழுது, அப்போதே மீண்டு திருமலையிறங்கி, திருத்தாழ்வரையில் ஆழ்வார்களையும் ஸேவித்துப்புறப்பட்டு, பெருமாள்கோயிலேயெழுந்தருளிப் பேரருளாளனையுந் திருவடித்தொழுது, மீண்டுபயணமாகி திருவரங்கம் கோயிலுக்கெழுந்தருளி புகுந்து நம்பெருமாளை ஸேவித்து, தம்மடமேயெழுந்தருளி, ஸ்வாமிமாநாநுகூலப்ரவர்த்தநமாக வெவ்வேறே பலிசிந்துளியும்போலே தர்ஸநதாத்பர்யார்த்தமருளிச்செய்துகொண்டு ஸுகமேயெழுந்தருளியிருந்தார்.

அதின்மற்றைநாள், உடையவர் ஆழ்வானையழைத்து, பேரருளாளர் ஆச்ரிதாபத்பரிஹாரநிரதராயிருப்பர், நீர் அவரை "கண் தந்தருளவேணும்" என்று ஒருஸ்தோத்ரம விண்ணப்பஞ்செய்யுமென்றருளிச்செய்ய; ஆழ்வானும், அடியேனுக்கு இக்கண்வேண்டாவென்று விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானாரும், அப்படியன்று சொல்லவேணுமென்று பலநாளும்நிர்ப்பந்தித்தருளிச்செய்தருள; ஆழ்வானும், கண்ணழியாமல் வரதராஜஸ்தவத்தை யருளிச்செய்ய உபக்ரமித்து, (ஸ்வஸ்திஹஸ்திகிரிமஸ்தகசேகரஸ் ஸந்தநோது மயி ஸந்ததம் ஹரி: - நிஸ்ஸமாப்யதிகமப்யதத்தயம் தேவமௌபநிஷதீ ஸரஸ்வதீ, நீலமேகநிபமஞ்ஜநபுஞ்ஜஶ்யாமகுந்தளமநந்தஶயம் த்வாம் - அப்ஜபாணிபதமம்புஜநேத்ரம் நேத்ரஸாத்குருகரீஶஸதாமே) (స్వస్తిహస్తిగిరిమస్తకశేఖర స్సన్తనోతుమయి సన్తతంహరిః। నిస్సమాభ్యధికమభ్యధత్తయం దేవమౌపనిషదీసరస్వతీ) என்றுசொல்லி,
(నీలమేఘనిభమఞ్జనపుఞ్జశ్యామకున్తళమనన్తశయంత్వామ్। అబ్జపాణిపదమమ్బుజనేత్రం నేత్ర

ஞ்டிய ேர்சஸ்தாக)என்றஇஸ்லோகத்தாலே ஸதாதர்ஶநம்பண்ணயோக்ய மான அப்ராக்ர்தஇிவ்யநேத்ரம் அடியேனுக்குத் தந்தருளவேணுமென்று விஜ்ஞாபிக்க;அன்றிரவே,ஆழ்வானுக்கு,பேரருளாளரும்“தந்தோம்” என்று ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய; ஆழ்வானும், ப்ரத்யூஷகாலத்திலே பெரியப்ரீதியோடேயெழுந்திருந்து அநுஷ்டாநத்தைச்செய்து வரதராஜஸ்தவத்தை நிறைவேறவருளிச்செய்து, உடையவர் ஸந்நிதிக்குச்சென்றுத் தண்டனிட்டு, தேவரீர்நியமநப்படியே வரதராஜ ஸ்தவத்தைவிண்ணப்பம் செய்தேனென்று வரதராஜ ஸ்தவத்தை முற்றுவிண்ணப்பஞ்செய்து காட்ட; உடையவரும்கேட்டுஉகந்தருளினவளவிலே, ஆழ்வானும், * பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும பேரருளாளனுகையாலே அடியேன்கேட்டபடியே “வைகுண்டேதுபரேலோகே நித்யத்வேநவ்யவஸ்திதம் - பஶ்யந்திசஸதாதேவம் நேத்ரைர்ஜ்ஞாநேந சாமரா:” (வைகுண்டேதுபரேலோகே நித்யத்வேநவ்யவஸ்திதம் | பஶ்யந்திசஸதாதேவம் நேத்ரைர்ஜ்ஞாநேந சாமரா:) (வைகுண்டேதுபரேலோகேநித்யத்வேநவ்யவஸ்திதம் - பஶ்யந்திசஸதாதேவம்நேத்ரைர்ஜ்ஞாநேநசாமரா:) என்று சொல்லப்படுகிற ஸ்ரீவைகுண்டநாதனை ஸதாதர்ஶநம் பண்ணுகிற அப்ராக்ர்த திவ்யசக்ஷுஸ்ஸை ப்ரஸாதித்தருளினாரென்ன; உடையவரும், அங்ஙனன்று, அங்கேறப்போவோம் வாருமென்று ஆழ்வானைக்கையைப்பிடித்துக்கொண்டு பெருமாள்கோயிலேற வெழுந்தருளி, அருளிச்செய்த வரதராஜ ஸ்தவத்தை,ஆழ்வான்பேரருளாளர்ஸந்நிதியிலேவிண்ணப்பஞ்செய்கிறபோது,உடையவர் கார்யாந்தரத்தில் தாழக்க, ஸ்தவமுநிறச்செவிசாத்தி பேரருளாளரும், ஆழ்வான! உமக்கு அபேக்ஷிதமென்னென்று கேட்டருள;ஆழ்வானும்,உடையவர்திருவுள்ளம்பற்றினதைவேண்டிக்கொள்ளாதே, “நான்பெற்றபேறு நாலூரானும்பெறவேணும்” என்று விண்ணப்பஞ்செய்ய; அப்படியேபெறக்கடவனென்று, பெருமாளும்திருவாய்மலர்ந்தருளினவளவிலே உடையவர்கேட்டு, பதறி ஓடிவந்து திருவுள்ளம் உளைந்து, பெருமாளே! ஸர்வஜ்ஞரானதேவரீர இப்போது என்னினைவைத் தலைக்கட்டிற்றிலீரே!, ஆழ்வான! நீ ஸ்வதந்த்ரனாய என்னினைவைத் தலைக்கட்டாதே அதிலங்கித்து, நான் வருவதற்குமுன்னே இப்படி செய்தாயே! என்று, இருவரையும வெறுத்து, இனி யென்னென்று திகைத்துநிற்க; பேரருளாளப் பெருமாளும, “நம்மையும் உம்மையும் காணுமிடத்துகட்கண்ணாலேகாணக்கடவர்”என்றுவரப்ரதாநம்பண்ணியருள; ஆழ்வானும், பெருமாளைத் தம்கட்கண்ணாலே கண்டுஸேவித்து, சாத்தினதிவ்யாபரணம், திவ்யவிக்ரஹாவயவாதிகளை, இவை யிவையென்று குறித்துக்காட்டியருளி, உடைவர் விக்ரஹத்தையும ஸேவித்துக் காட்டியருள; இவரும், க்ர்தார்த்தராய், ஆழ்வானுடன் மீண்டு கோயிலேறவெழுந்தருளி, பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண்டிருக்கச் செய்தே;-

நாய்ச்சியார்திருமொழி வ்யாக்யாநத்தில், "நாறுநறும்பொழில்," என்கிறபாட்டு ப்ரஸ்துதமாக, ஆண்டாள் பரார்த்தனையை நாம் தலைக் கட்டவேணுமென்று, அப்போதேபுறப்பட்டு, திருமாலிருஞ்சோலை மலைக்கெழுந்தருளி, கோதைப்ப்ரார்த்தித்தபடியே, நூறுதடாநிறைந்தவெ ண்ணெயும், நூறுதடாநிறைந்த அக்காரவடிசிலும் பரிவுடனே * மாலிருஞ்சோலைநம்பிக்கு அமுதுசெய்வித்தருளி, ஸ்ரீவில்லிபுத்தூரேறவெழுந்தருளி, வடபெருங்கோயிலுடையானையும் ஸேவித்து, நாய்ச்சியார் திருமாளிகைக்கெழுந்தருளி, * ஆழ்வார்திருமகளாரை அடிவணங்கி நிற்க; கோதையும், * குலமுனிவனைக் குறித்து, தம்ப்ரார்த்தனையைத் தலைக்கட்டினீரென்று மிகவுமஉகந்து "நமகோயிலண்ணர்" என்று அர்ச்சகமுகேந திருநாமம் பரஸாதித்து தீர்த்தப்ரஸாதங்களும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள; அங்கிலும் புறப்பட்டுத் திருநகரிக்கு எழுந்தருளி ஆழ்வாரையும ஸேவித்து, தீர்த்தப்ரஸாதமும்பெற்று, மீண்டு பயண கதியிலே கோயிலுக்கெழுந்தருளி, ஸ்ரீபாதத்துமுதலிகளுக்கு, தர்மநார்த்தம் ப்ரஸாதித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

இப்படி எழுந்தருளியிருக்கிற ஸ்ரீபாஷ்யகாரருடையஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்தமுதலிகளுடைய திருமுடியடைவு எங்ஙனேயென்னில்; - கூரத்தாழ்வான், மாடபூசியாழ்வான், சேட்டலூர் சிறியாழ்வான், அநந்தாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான், அரணபுரத்தாழ்வான், அகளங்கநாட்டாழ்வான், நெய்யுண்டாழ்வான், உக்கலாழ்வான், கோமடத்தாழ்வான், வேதாந்தியாழ்வான், நடுவிலாழ்வான், பிள்ளையாழ்வான், மிளகாழ்வான், காராஞ்சியாழ்வான், ஈயுண்ணியாழ்வான், கோயிலாழ்வான், திருக்கோவலூராழ்வான், திருமோகூராழ்வான். (உ௦) முதலியாண்டான், பெரியாண்டான், சிறியாண்டான், அம்மங்கியாண்டான், மாருதிப்பெரியாண்டான், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான், சோமாசியாண்டான், கந்தாடையாண்டான், ஈஶ்வராண்டான், ஈயுண்ணியாண்டான், பிள்ளையாண்டான், குரிஞ்சிப்பூர்சிறியாண்டான், ஆளவந்தாராண்டான், ஐயராண்டான், கிடாம்பியாச்சான், சிறியாச்சான், கணியனூர்சிறியாச்சான், கொங்கிலாச்சான், ஈச்சம்பாடியாச்சான், பொன்னாச்சான், ஐயப்பிள்ளையாச்சான், தூயப்பிள்ளையாச்சான், ஆச்சியாச்சான், எச்சான். (சச) அருளாளப்பெருமானெம்பெருமானார், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி, மனூர்நம்பி, செட்டைநம்பி, குருவநம்பி, திருக்குறுங்குடிநம்பி, வங்கிபுரத்துநம்பி, மூடும்பைநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி, ஸ்ரீவில்லிபுத்தூர்நம்பி, வடுகநம்பி, திருக்குருகூர்நம்பி, கொமாண்டூர்பிள்ளைநம்பி; ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீபராங்குசபட்டர், வரந்தரும்பெருமாள்பட்டர், அழகியமணவாளபட்டர், ஸ்ரீவேதவ்யாஸபட்டர், சிறுப்பள்ளிதேவராஜபட்டர், கோவிந்தபட்டர், திருவரங்கபட்டர், நம்பியாரில் ஸ்ரீரங்கராஜபட்டர், அழகியமணவாள பட்டர், உள்ளூரில்பெரியபெருமாள்பட்டர், சட்டம்பள்ளிஜீயர், ஈச்

சம்பாடிஜீயர், ஸ்ரீகுலசேகரஜீயர், திருவெள்ளறைஜீயர், ஆட்கொண்டவல்லிஜீயர், திருமழிசைஜீயர், திருவாய்மொழிஜீயர், திருநாராயணபுரஜீயர், ஸ்ரீசாளக்ராமஜீயர், கோவிந்தஜீயர், திருமாலிருஞ்சோலைஜீயர், திருப்புட்குழிஜீயர், திருக்குடந்தைஜீயர், திருமுட்டம்ஜீயர், திருநின்றவூர்ஜீயர். (௮௪) திருநாராயணபுரத்தரையர், பெருமாள்கோயில்பெருமாளரையர், ராஜநாராயணப்பெருமாளரையர், திருவரங்கமாளிகையரையர், திருவாய்மொழியரையர், பிள்ளைதிருநறையூரரையர், திருக்குறுங்குடியரையர், திருநகரியரையர், திருக்கண்ணபுரத்தரையர், திருமாலிருஞ்சோலையரையர், திருவநந்தபுரத்தரையர், ராஜமஹேந்த்ரபுரத்தரையர், பிள்ளைவிழுப்புத்தூரரையர், திருவேங்கடத்தரையர், ஆட்கொண்டவம்மாள், அம்மங்கியம்மாள், முடும்பையம்மாள், பரித்திகொல்லியம்மாள், உகலம்மாள், சொட்டையம்மாள், ஆநுரிபெருமாள், கிடாம்பிப்பெருமாள், அம்மங்கிப்பெருமாள், முனிப்பெருமாள், பட்டினிப்பெருமாள், திருமலைநல்லான், எம்பார் (௧௧௪) சாராருசிசோமயாஜியார், பெரியகோயில்வள்ளலார், அலங்காரவேங்கடவர், திருக்குருகைப்பிரான்பிள்ளான், ஆர்க்காட்டுப்பிள்ளான், கொமாண்டூர்பிள்ளான், ராமாநுஜப்பிள்ளான், திருக்கலிப்பிள்ளான், கோமடத்தையன், வைத்தமாநிதி, சிறுஐயர், பெருஐயர், அணியரங்கத்தமுதனார், திருவரங்கத்தமுதனார், கொமாண்டூரிளையவல்லி, [illegible], எம்பெருமானார்செல்வப்பிள்ளை; சாத்தாதமுதலிகள், ஸ்ரீகுலசேகரப்பெருமாள், பட்டர்பிரான்தாஸர், பகைவெல்லிதாஸர், ஸ்ரீவில்லிபுத்தூர்தாஸர், ஸ்ரீநாராயணதாஸர், ஸ்ரீகோவர்த்தனதாஸர், திருவழுதிவளநாடுதாஸர், ஸ்ரீராமாநுஜதாஸர், பிள்ளையுறங்காவில்லிதாஸர், வண்டர், சுண்டர், ராமாநுஜவேளைக்காரர், நந்தத்துமுதலிகள் மூவர்திருநாமம் - திருவரங்கதாஸர், திருமாலிருஞ்சோலைதாஸர், வானமாமலைதாஸர்; கொங்கிலமுதலிகள் மூவர்திருநாமம் - அழகியமணவாளதாஸர், திருவேங்கடதாஸர், பேரருளாளதாஸர்; மழலைச்சூத்தத்தில முதலிகள் மூவர்திருநாமம் - யதிவரசூடாமணிதாஸர், எதிராஜதாஸர், இளையாழ்வார்தாஸர்; பாண்டியநாட்டுமுதலிகள் மூவர்திருநாமம் - மகிழலங்காரதாஸர், ஸ்ரீசடகோபதாஸர், பிள்ளைதிருவாய்மொழிதாஸர்; ஸ்ராநததாரில் - ஸேநாநாதப்ரஹ்மராயர், வீரஸேநாதப்ரஹ்மராயர், ஜகந்நாதப்ரஹ்மராயர், வீரராகவப்ரஹ்மராயர், பிள்ளைதேவராஜர், பிள்ளையுறந்தையுடையார், திருமஞ்சனமெடுக்கும்தூயமுனிவேழம், ஸ்ரீபண்டாரம்நோக்கும் திருவரங்கத்துமாளிகையார். ஆண்டவர், அரியவர் (௧௬௪)

திருவநந்தபுரத்தம்மை, திருவாட்டாற்றம்மை, திருவண்பரிசாரத்தம்மை, மன்னனார்கோவில்போரேற்றம்மை, திருநறையூரம்மை, திருக்கண்ணபுரத்தம்மை, திருப்பதிஸ்ரீகார்யஞ்செய்யுமம்மை, ஆண்டாளம்மை, காயகத்தேவியார், துய்யபெருந்தேவியார், பெரியபெருந்தேவியார், சிறியபெருந்தேவியார், பெரும்பூதூர் திருவரங்கம், திருக்குடந்

தை துய்யவாயிரம், கொங்கில்பிராட்டியார், அத்துழாயம்மை, அம்மங்கியம்மை, கூரத்தாண்டாள், தேவகிப்பிராட்டியார், யதிராஜவல்லியார், பங்கயச்செல்வியார், பொன்னாச்சியார், இன்னிளவஞ்சியார், சூடிக்கொடுத்தாள், திருப்பாவைபாடினாள். (கஅக)

எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயித்த முதலிகளான எழுபத்துநாலாசார்யர்களாரெனில்: ஆளவந்தார்குமாரர் சொட்டைநம்பி, அவர் குமாரர் என்னாச்சான், அவர் குமாரர் பிள்ளையப்பன்; பெரியநம்பிகுமாரர் புண்டரீகர், திருக்கோட்டியூர்நம்பி குமாரர் தெக்காழ்வான், திருமாலையாண்டான் குமாரர் சுந்தரத்தோளுடையார், பெரியதிருமலைநம்பி குமாரர் ராமாநுஜனும், பிள்ளைத்திருமலைநம்பியும்; கூரத்தாழ்வான் குமாரர் பட்டர், ஸ்ரீராமப்பிள்ளை; முதலியாண்டான் குமாரர் கந்தாடையாண்டான், நடுவிலாழ்வான், கோமடத்தாழ்வான், திருக்கோவலூராழ்வான், திருமோகூராழ்வான், பிள்ளைப்பிள்ளையாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான், அநந்தாழ்வான், மிளகாழ்வான், நெய்யுண்டாழ்வான், சேட்டலூர்சிறியாழ்வான், வேதாந்தியாழ்வான், கோயிலாழ்வான், உக்கலாழ்வான், அரணபுரத்தாழ்வான், எம்பார், கிடாம்பியாச்சான், கணியனூர்சிறியாச்சான், ஈச்சம்பாடியாச்சான், கொங்கிலாச்சான், ஈச்சம்பாடிஜீயர், திருமலைநல்லான், சட்டம்பள்ளிஜீயர், திருவெள்ளறைஜீயர், ஆட்கொண்டவில்லிஜீயர், திருநகரிப்பிள்ளை, காராஞ்சிசோமயாஜியார், அலங்காரவேங்கடவர், நம்பிகருந்தேவர், சிறுப்பள்ளிதேவராஜபட்டர், பிள்ளையுறைந்தையுடையார், திருக்குருகைப்பிரான்பிள்ளான், பெரியகோயில்வள்ளலார், திருக்கண்ணபுரத்தெச்சான், ஆசூரிப்பெருமாள், முனிப்பெருமாள், அம்மங்கிப்பெருமாள், மாருதிப்பெரியாண்டான், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான், ஸோமாசியாண்டான், ஜீயராண்டான், ஈச்வராண்டான், ஈயுண்ணிப்பிள்ளையாண்டான், பெரியாண்டான், சிறியாண்டான், குரி[illegible]சிபுரச்சிறியாண்டான், அம்மங்கியாண்டான், ஆளவந்தாராண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி, மழுவூர்நம்பி, திருக்குறுங்குடிநம்பி, குரவநம்பி, முடும்பைநம்பி, வடுகநம்பி, வங்கிபுரத்துநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி, அம்மங்கியம்மாள், பருத்திக்கொல்லையம்மாள், உக்கலம்மாள், சொட்டையம்மாள், முடும்பையம்மாள், கோமாண்டூர்பிள்ளை, கோமாண்டூர்இளையவல்லி, கிடாம்பிப்பெருமாள், ஆக்காட்டுப்பிள்ளான்.

(సంసేవిత స్సంయమిసప్తశత్యా పీఠైశ్చతుస్సప్తతిభిస్సమేతైః, అన్యైరనన్తైరపి విష్ణుభక్తై రాస్తేధిరఙ్గం యతిసార్వభౌమః) (ஸம்ஸேவிதஸ்ஸம்யமிஸப்தஶத்யா பீடைஶ்சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேதை: - அந்யைரநந்தைரபிவிஷ்ணுபக்தை ராஸ்தேதிரங்கம்யதிஸார்வபௌம:) என்கிறபடியே, எழுநூறு உத்தமாச்ரமிகளாலும், எழுபத்துநாலுஸிம்ஹாஸநஸ்தரான ஆசார்யபுருஷர்களாலும், அஸங்க்யாதரான சாத்தின சாத்தாத முதலிகளாலும், பரி[illegible]

யிரம் ஏகாங்கிகளாலும், முந்நூறுகொத்தியம்மைமார்களாலும், எண்ணிறந்த ராஜாக்களாலும், மற்றுமுள்ளாராலும் ஸேவ்யமாநராய, (ஸ்ரீரங்கநாதஜயது ஸ்ரீரங்கஸ்ரீஶ்ச வர்த்ததாம்) (ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீஶ்சவர்த்ததாம்) என்று நம்பெருமாளை மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு ஸேவித்திருந்தார்.

இப்படியிருக்கிற வுடையவர்திருவடிகளிலே நித்யகைங்கர்யம்பண்ணும் முதலிகள்; கூரத்தாழ்வானும், முதலியாண்டானும், நடாதூராழ்வானும், பட்டவர்க்கமும், ஸ்ரீபாஷ்யத்திற்கு உசாத்துணையாயிருப்பர்கள்; அருளாளப்பெருமானெம்பெருமானார், திருவாராதநம் செய்தருளுவர்; கிடாம்பிப்பெருமாளும், கிடாம்பியாச்சானும், திருமடைப்பள்ளிக்குக் கடவராயிருப்பர்கள்; வடுகநம்பி, எண்ணெய்க்காப்பு சாத்தியருளுவர்; கோமடத்துச்சிறியாழ்வான் கலசப்பானையையும், ஸ்ரீபாதரக்ஷையையுமெடுப்பர்; பிள்ளையுறங்காவில்லிதாஸர் கருவூலமநோக்குவர்; அம்மங்கி, பாலமுதுகாய்ச்சுவர்; உக்கலாழ்வான் ப்ரஸாதகலமெடுப்பர்; உக்கலம்மாள் திருவாலவட்டமபணிமாறுவர்; மாருதிப்பெரியாண்டான திருக்கைகசெம்புபிடிப்பர்; மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான் மடத்திற்கு அமுதுபடி, கறியமுது, பாலமுது, நெய்யமுதுமுதலானவை நடத்திப்போருவர்; தூய முனி வேழம திருமஞ்சனமெடுப்பர்; திருவரங்க மாளிகையார் ஸ்ரீபண்டாரம் நோக்குவர்; வண்டரும சுண்டரும், கைக்காயிரம்பொன்னுக்கு ராஜஸேவைபண்ணி மடத்திற்குத் திருக்கைவழக்காக்கியருள்வர்கள், ராமாநுஜவேளைக்காரர் திருமேனிக் காவலாய்ப் போருவர்; அகளங்கநாட்டாழ்வான் ப்ரதிபக்ஷநிரஸநம பண்ணிப்போருவா

வடுகநம்பிவைபவம்.

இவர்களில் வடுகநம்பி, "எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயம்" என்று விஶ்வஸித்து அவர்திருவடிநிலைகளையே திருவாராதநம்பண்ணிப்போருவர். வடுகநம்பி, ஒருபயணத்திலே உடையவர் திருவாராதநத்தையும், தம்முடைய திருவாராதநத்தையும் சேரவெழுந்தருளப்பண்ணிக்கொண்டுவர; உடையவர்கண்டு, வடுகா! இதென் செய்தாய்? என்ன; இவரும், உங்கள்தேவரிலஎங்கள் தேவருக்கு வந்த குறை என்னென்று விண்ணப்பஞ்செய்தார். வடுகநம்பி உடையவருடன் பெருமாளை ஸேவிக்கப்போனாலும், உடையவர் விக்ரஹத்தையே ஸேவித்துக்கொண்டுபோருவர். ஒருநாள் எம்பெருமானார், இத்தைக் கண்டு பெரியபெருமாளுடைய திருக்கண்ணழகைப் பாராயென்ன இவரும், பெருமாள்திருக்கண்ணழகையும் உடையவர்திருக்கண்ணழகையும் பார்த்து, "என்னமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்ன; உடையவரும், இதொன்றிருந்தபடி என்னென்றுஉகந்து, வடுகநம்பியை பூர்ணகடாக்ஷஞ்செய்தருளினா. வடுகநம்பி,

எம்பெருமானார் அமுதுசெய்தருளி தளிகைப்ரஸாதம் ப்ரஸாதித்தால், இரண்டு திருக்கைகளாலும் ஏற்றுக்கொண்டு ப்ரஸாதஸ்வீகாரம்பண்ணி, தம்திருமுடியிலே திருக்கைகளைத் தடவிக்கொண்டு போருவர். இத்தை ஒருநாள் உடையவர் கண்டு, கனக்ககோபித்து, வடுகா! கையைக் கழுவிக்கொள்ளென்றருளிச்செய்தார். மற்றைநாள் நம்பெருமாள் அமுதுசெய்தருளுகிறகாலத்தில உடையவருடன் சென்றவளவிலே, உடையவரும், தமக்குப்ரஸாதித்த பெருமாள் ப்ரஸாதத்தைத் தாமும் ஸ்வீகரித்தருளி, வடுகா! இதோவென்று இவருக்கும் ப்ரஸாதிக்க, இவரும், இரண்டு திருக்கைகளாலும் மேற்றுக்கொண்டு ப்ரஸாதப்பட்டு, ஸ்ரீவைஷ்ணவர் திருக்கைவிளக்க ப்ரஸாதிக்க, திருக்கை விளக்கிக் கொண்டார். உடையவர், இதுகண்டு, இதென்செய்தாய் வடுகாவென்ன, நேற்று அருளிச்செய்தபடி செய்தேனென்றார். உடையவரும், இதுகேட்டு உமக்குத் தோற்றோமென்றருளினார். வடுகநம்பி ஒருநாள் உடையவர்க்குப்பாங்காகப்பாலமுது காய்ச்சாநிற்க, பெருமாள் பெரியதிருநாளில் உடுத்து முடித்துப் பூண்டுபுறப்பட்டருள, உடையவரும் பெருமாளை ஸேவிக்கப்புறப்பட்டு, வடுகா! பெருமாளை ஸேவிக்கவாவென்ன; நம்பியும், உம்முடைய பெருமாளை ஸேவிக்க வந்தால், என்னுடைய பெருமாளுக்குக்காய்கிறபாலமுது பொங்கிப்போம், வரக்கூடாதென்றருளினார். வடுகநம்பியகத்தே பூர்வஸம்பந்திகளாயிருப்பார் சிலர்வந்து தங்கிப்போக, அகத்தையெல்லாம் சோதித்து தத்ஸ்பர்ஷ்ட பாண்டங்களையுமுடைத்துப்போகட்டு, பூசி இதற்குப்ராயஶ்சித்தமென்னென்று விசாரித்து, முதலியாண்டான் புழக்கடையில் கழித்துக்கிடந்த பாண்டங்களைக்கொண்டுபோய் விநியோகங் கொண்டார். ஆகையால் - ஆசார்யஸம்பந்தமுடையார் எல்லைக்குள்பட்டதில் அபாவநத்வபுத்தியின்றிக்கே ஸ்வபாவநத்வபுத்தி முற்றினபடி. வடுகநம்பி உடையவர் ஸ்ரீபாததீர்த்தமல்லது மற்றொருவர் ஸ்ரீபாததீர்த்தங் கொள்ளார். தீர்த்தநியதியும் இவர்க்கேயுள்ளதொன்றிறே. இப்படி தீர்த்தநியதியையுடையராய், அவர் ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்ரீஸாளக்ராமத்திலே தாம் தநமாகச் சேர்த்து வைத்துப்பேணிக்கொண்டு, உடையவர் திருவடிநிலைகளையே திருவாராதநமாக வுடையராய், அவைதன்னையே அங்கே ப்ரதிஷ்டிப்பித்து நோக்கிக்கொண்டுபோந்து, தம்சரமதசையிலும் தமக்கு அந்தரங்கரான சரமாதிகாரிகளுக்குத் தஞ்சமாகக்காட்டிக்கொடுத்து, சீர்த்தநம்பித்து, வருந்தியும் பேணிக்கொண்டுபோருங்கோளென்று அடைக்கலங்காட்டிக் கொடுத்தருளினார்.

அநந்தாழ்வான்வைபவம்.

அநந்தரம் அநந்தாழ்வான், ராமாநுஜன் புத்தேரி கட்டிவைக்கும்போது மண்சுமவாநிற்க, 'பிள்ளைகளிலே யொருவர்சென்று கூடையை வாங்கப்புக, நான் அத்தைவிடில் இளைப்பன், நீ இத்தைத் தொடு

இளைப்புதியென்றருளிச்செய்ய; இளைப்பாகாதென்று பிள்ளை,பின்னையுங்
கூடையை வாங்கப்புக; ஆகில், நான் ஜீவிக்கிற ஜீவநத்தை வாங்கவே
ணுமோ, நீயும் வேணுமாகில் ஒருகூடையை வாங்கிக்கொண்டு சுமக்க
மாட்டாயோ வென்றருளினார். பின்னையுமொருநாள் கர்ப்பவதியான
தம் தேவிகள்மேலே மண்சுமத்தாநிற்க; இதுகண்டு திருவேங்கடமு
டையான் ஒருபிள்ளையாய் எதிரேவந்து வாங்கிக்கொண்டுபோக; தேவி
கள் கடுகவருமதுகண்டு, இதுவென்ன கடுகவருகிறாயென்ன; அவளும
ஒருபிள்ளை எதிரேவந்து கூடையை வாங்கிக்கொண்டுபோகிறானென்று
சொல்லக்கேட்டு,உடனேசென்று கண்டு, கைங்கர்யவிக்நகாரீ!, நீகூடை
யைத்தொடாதேகொள்ளென்று கொட்டெடுத்தடிக்கப்புக; திருவேங
கடச்செல்வன் ஓடிச்சென்று கோயிலிலே புகுந்தானென்பார்கள். அநந்
தாழ்வான், திருநந்தவநத்திலே திருப்படித்தாமமெடாநிற்க, திருக்கை
யிலே போகிஸந்தஷ்டமாக, பின்னையும் போய்நீராடி கைங்கர்யத்திலே
போர; ஸ்ரீபாதத்துக்குப் பரிவராயிருப்பார் விஷமந்த்ரக்கப்பாரக்கவேண்
டாவோவென்ன, வேண்டாவென்று அத்தைநிவர்த்திப்பித்தருளினார்.
பின்பு கோயிலேற வெழுந்தருளினவாறே, திருவேங்கடமுடையான
திருவாய்மலர்ந்து "விஷந்தீரக்கவேண்டா" என்று என்ன நினைத்
துச்சொன்னீரென்று கேட்டருள; இவரும, கடியுண்டபாம்பு வலிதா
கில் திருக்கோனேரியிலே தீர்த்தமாடி திருவேங்கடமுடையானை
ஸேவிக்கிறேன்; கடித்தபாம்பு வலிதாகில் விரஜையிலே தீர்த்தமாடி
ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்கிறேனென்று திருவுள்ளமென்று விண்ணப்
பஞ்செய்தார். அநந்தாழ்வான போகலராஜ்யத்துக்கு எழுந்தருளுகிற
போது, கட்டுத்திருப்போனகம் கட்டிக்கொண்டுபோய அமுதுசெய்யப்
புக்கவாறே பட்டையடங்கலும் சிறெறும்பாய்க்கிடக்க, அத்தைக
கண்டு துணுக்கென்று தம்முதலிகளைப் பார்த்து, "எம்பெருமான
பொன்மலைமேலேதேனுமாவேனே" என்னுமவர்களிலே சிலராயத்து
இவர்கள், இப்படியேகொண்டுபோய்த்திருமலையிலேவைத்துவாருங்கோ
ளென்று அருளிச்செய்தார். அநந்தாழ்வான், யமுனைத்துறைவனிலே
திருமாலை கட்டாநிற்க, திருவேங்கடமுடையான அருள்பாடிட,
பேசாதேயிருந்து, திருமாலை சாத்துக்கொண்டு உள்ளே புக்க
வாறே; நானழைக்க நீர்வாராதிருந்ததென்? என்று திருவுள்ளமாக;
இவரும், கருமுகைமொட்டுவெடியாநிற்க எனக்குத் தேவரீரைக்கொண்டு
கார்யமென் என்றார்; திருவேங்கடமுடையானும், ஆகில், நாமஉம்மை
யிங்குநின்றும் போகச்சொன்னோமாகில் நீர் செய்வதென்னென்று திரு
வுள்ளமாக; இவரும், "பரன்சென்று சேர்திருவேங்கடம" என்கிறபடி
யேதேவரீரன்றோ வந்தேறிகள், இவ்விடம் தேவரீரை யாச்ரயித்தவர்க
ளதன்றோ, தேவரீர் ஒருகிழமை முற்பட்டீரித்தனை, இருவரும்திருமலை
யாழ்வாரை யாஸ்ரயித்தோ மித்தனையன்றோவென்று விண்ணப்பஞ்
செய்தார்.

இப்படிப்பட்ட சிஷ்யஸம்பத்துடனே உடையவர் வாழ்ந்தருளுங் காலத்திலே, ஆழ்வான், எம்பெருமானாருக்கு விண்ணப்பஞ்செய்யாதே நம்பெருமாளை ஸந்நிதியிலேசென்று ஸேவித்துநிற்க; பெருமாளும், ஆழ்வான்! நீ ஒன்று சொல்லுவாரைப்போலே யிருந்தாயே! என்று திருவுள்ளமாயருள; இவரும், ஒரு ச்லோகத்தை விண்ணப்பஞ்செய்து உபந்யஸிக்க; பெருமாளும், உமக்கு வேண்டினதெல்லாந் தருகிறோம், வேண்டிக்கொள்ளுமென்று உகப்பின் மிகுதியாலே திருவாய்மலர்ந்தருளிச்செய்ய; ஆழ்வானும், நாயன்தே! அடியேனுக்குப் பண்டே எல்லாந் தந்தருளிற்றேயென்ன; பெருமாளும், அப்படியன்று இப்போதும் வேண்டிக்கொள்ளும், நம்பெண்கொளாணை, நம்மிராமாநுசனாணையே தருகிறோமென்று திருவுள்ளமாக; ஆழ்வானும், தவத்நுபவவிரோதியான இச்சரீரத்தை விடுவித்து தவதநுபவத்தைத் தந்தருளவேணுமென்று அபேக்ஷிக்க; பெருமாளும் அதனை யொழியச் சொல்லுமென்ன; இவரும், "தாம்வேண்டுங் காமமே காட்டிமாகடிது" என்கிறபடியே, அடியேன் அபேக்ஷித்ததனையே ப்ரஸாதிக்க வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; ஆகில், உமக்கும், உம்முடைய ஸம்பந்தமுடையார்க்கும் ப்ரமபதந் தந்தோமென்றருளிச்செய்தருளி, திருப்பரியட்டமும், தளிகை ப்ரஸாதமும் *பூந்தண் மாலைத்தண்டுழாயும், திருக்கைச்சிறப்பும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார். பின்பு, ஆழ்வான், ஆச்சிரிதமார்க்கத்திற்கு பரமமாலங்காரம்போலே புறப்பட்டு, தம்திருமாளிகையிலும் புகுராதே, ஆழ்வார் திருமாளிகையிலே புறவீடு விட்டெழுந்தருளியிருந்தார். உடையவரும் இத்தைக்கேட்டு, உடுத்த காஷாயத்தை வாங்கி ஆராசத்தே தறவெறிந்து ஏற்றுக்கொள்ள, ஸ்ரீபாதத்து முதலிகள் இது என்ஜீயா! என்று கேட்க, உடையவரும், நமக்கு ஆழ்வான் ஸம்பந்தமுண்டே, பரமபதம் பெறலாமன்றோ என்றருளிச்செய்தார். ஆகையாலே ஸ்வாசார்ய ஸம்பந்தத்தோடு ஸ்வசிஷ்யஸம்பந்தத்தோடு வாசியில்லையிறே. உடையவரும், சோகாவிஷ்டராய், ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரையுங் கூட்டிக்கொண்டு, ஆழ்வானிருந்தவிடத்தேறச்சென்று ஆழ்வான்! நீர் இப்படி செய்தருளலாமோவென்ன; ஆழ்வானும் பேசாதேயிருந்தார். உடையவரும், ஆழ்வான்! உமக்கு முற்படவேண்டும் அபிப்ராயமென், பேசாதிருக்கிறதென்னென்று கேட்டருள; ஆழ்வானும் பரமபதத்தில் நடக்கும் அடைவுகேட்டுக்கு அஞ்சியென்ன; உடையவரும் அதுசொல்லிக் காணீரென்ன; ஆழ்வானும், "முடியுடைவானவர் முறைமுறை யெதிர்கொள்ள" என்று முற்பட்டவர்கள் நித்யஸூரிகளுடன் பிற்பட்டவர்களை எதிர்கொள்ள வருவர்கள், அது, அடியேன் பிற்படில் அடைவுகேடாமென்ன; உடையவர் இதுகேட்டு, (ஸ்வாஸ்ரூ[illegible] க்ரமஃ) என்று அடைவுகெட்டிருக்கும் போகவிபூதியிலே நீர் அடைவு தேடுவதே! இதொரு அதிகாரவிசேஷ மிருந்தபடியே! என்று போர[illegible]

தராய் திருமுத்துதிர்த்து உடையவர், இவர்க்கு ஒடுகிற நினைவையறிந்து இவர்செவியிலே த்வயத்தை யருளிச்செய்ய, முதலிகளும் இப்போதாக விதுவென்னென்ன; நீங்கள் அறிவீர்களோ, ராஜகுமாரனுக்கு கர்ப்பூர நிகரமில்லாதபோது நாக்குவரளுமாப்போலே இவர்க்கு த்வயமில்லாதபோது நாக்குவரளுமென் றருளிச்செய்து, ஆழ்வானையணைத்துக் கொண்டு விம்மல்பொருமலாய், திருவுள்ளமுடைகுலைபபட்டு, ஆழ்வார்! என்னுயிர்நிலையான உம்மையிழந்து எங்ஙனே தரிப்பேன், என்னையும் உடன்கொண்டுபோகத் திருவுள்ளம்பெற்றிலீர், நம்மைவிட்டுப்போக உமக்குருசிப்பதே!, பரமபதநிலய பாசகல்லங்கம், * [illegible] - புரஸாரத்ர்ஷ்டிசித்தாபஹாரி யான பெருமாளபக்கல ஸங்கத்தையறுத்து உம்மைமுந்துறப்பண்ணுவதே!, பரமபதநாதனும், அங்குள்ள நித்யமுக்தரும என்னபாக்யம பண்ணினார்களோ, இங்குறங்குகிறபெருமாளும் இங்குள்ள நாங்களும என்னபாபம் பண்ணினோமோ, உம்திருவுள்ளங் கலங்கச்சொல்லி என்ன ப்ரயோஜநமுண்டு, உமபேற்றுக்கு நாம் விலக்கடியாகலாமோ, ஸுகமே நித்யவிபூதியேற வெழுந்தருளீரென்று ஆழ்வான்திருமுதுகைத்தடவி அநுசரித்து விடைகொடுத்தருள; ஆழ்வானும, உடையவர்திருவடிகளிலே வேரற்றமரம்போலே விழுந்துகிடக்க; உடையவரும இரண்டுதிருக்கைகளாலும் வாரியெடுக்க எழுந்திருந்து, உடையவர்திருவடிகளை தம்திருக்கண்களிலும், திருமார்பிலும் ஒற்றிக்கொண்டு ஸ்வஶிரோபூஷணமாகக்கொண்டு தீர்த்தங்கொள்ள, உடையவரும் திருக்கைகளாலே ப்ரஸாதிக்க, ப்ரஸாதப்பட்டு, (యోనిత్యమచ్యుతపదాంబుజయుగ్మరుక్మవ్యామోహతస్తదితరాణి తృణాయ మేనే। అస్మద్గురోర్భగవతోస్య దయైకసిన్ధోః రామానుజస్య చరణౌ శరణం ప్రపద్యే) (யோநித்யமச்யுதபதாம்புஜயுகமருக்ம வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே, அஸ்மத்குரோர்பபகவதோஸ்ய தயைகஸிந்தோ ராமாநுஜஸ்ய சரணௌஶரணமப்ரபத்யே) என்று அநுஸந்தித்துக்கொண்டு கர்தாஞ்ஜலிபுடராய, இனி மடமே யெழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவர், வடவாற்றங்கரையளவாகப்பின்னேசெல்ல; ஆழ்வான், இனி நில்லுமென்று தண்டஸமர்ப்பித்து மீண்டு ஆழ்வார்திருமாளிகைக்கு அருகிலிட்ட திருக்காவணத்தின நடுவே எழுந்தருளியிருந்து ஆண்டாளைப்பார்த்து, எம்பிரானைத் திருக்குறு யென்ன; ஆண்டாளும் தேவரீர்திருவுள்ளத்தைப பின்செல்லுமதையொழிய அடியேனுக்கு வேறொரு நினைவுண்டோ? என்று திருவடிகளிலே தண்டனிட்டு அஞ்சலித்துநிற்க; ஆழ்வானும், பட்டரையும், சீராமப்பிள்ளையையும் அழைத்தருளி, பெருமாளும் நாய்ச்சியாருமெழுந்தருளியிருக்க உங்களுக்கு ஒரு தாழ்வில்லை, நம்பெருமாள் பெற்று வளர்த்தாரொன்றதுவே தஞ்சமென்றிராதே, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள், ஆண்டாள்சொன்னபடியே வர்த்தியுங்கோள், பாகவதவிஷயத்திலே த்ரிவிதகரணங்களாலும் அபராதம்பண்ணாதே அவர்களை

அநுவர்த்தித்துக்கொண்டு போருங்கோளென்றருளிச்செய்து, திருவடிகளிலேவிழுந்துகிடக்கிறபட்டரையும் சிராமப்பிள்ளையையும் எடுத்து, திருக்கையாலே கண்ணீரைத்துடைத்து, நீங்கள் ப்ராக்ருதஸம்பந்தத்தை நினைத்து க்லேசித்தீர்களாகில், உடையவர்திருவடிகளில் ஸம்பந்தத்தை தூஷித்தவர்களாவுதிகோள்; ஆத்ம ஸம்பந்தத்தைநினைத்து க்லேசித்தீர்களாகில நம்முடைய * ஒழிக்கவொழியாத உறவை யறிந்திலீர்களாவுதிகோள் என்று அவர்களைத் தேற்றி, கோயிலுக்குநேரே பிள்ளைப்பிள்ளையாழ்வான்மடியிலேதிருமுடியையும், ஆண்டாள்மடியிலே திருவடிகளையும்வைத்துக்கொண்டு, உடையவர்திருவடிகளை த்யானித்துக்கொண்டு அங்கேதிருநாட்டுக்கெழுந்தருளினார். உடையவர் இதுகேட்டு அங்கேறவெழுந்தருளி பட்டரைப்பார்த்து, க்லேசியாதேயென்றருளிச்செய்து ஆழ்வானுக்குச் சரமகைங்கர்யத்தைச் செய்யுமென்ன; பட்டரும், பெருமாளபரிகரத்தையும், அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையுங் கூட்டிக்கொண்டு (ఆచార్యాణాం చ సర్వేషాం వైష్ణవేన। నారాయణానువాకేన స్నానమావర్తయేత్సుతః) "ஸர்வேஷாமாசார்யாணாம் காயத்ர்யா வைஷ்ணவேநச - நாராயணாநுவாகேந ஸ்நாபயேதபிதாஸுத:" என்கிறபடியே ஆழ்வானை நீராட்டப்பண்ணி, கேசவாதியான திருநாமங்களைச்சாத்தி அலங்கரித்து, ஸ்ரீசூர்ணபரிபாலநம் பண்ணி, எழுந்தருளுவித்துக்கொண்டு போய், (కేశవాద్యైస్తథా నామభిరలంకారయేత్। సర్వధా దాహయేద్విప్రో బ్రహ్మమేధవిధానతః) (கேசவாத்யைஸ்ததா நாமபிரலங்காரயேத் - ஸர்வதா தாஹயேத்விப்ரோ ப்ரஹ்மமேதவிதானத:) என்றும், (బ్రహ్మమేధవ్రతం ప్రోక్తం మునిభిర్బ్రహ్మవాదిభిః। మహాభాగవతానాం హి కర్తవ్యమితి నిశ్చయః)(ப்ரஹ்மமேதவ்ரதம் ப்ரோக்தம் முநிபிர்ப்ரஹ்மவாதிபி: - மஹாபாகவதாநாம் ஹி கர்த்தவ்யமிதி நிஶ்சய:)என்றும்-கேசவனடியாரான முமுக்ஷுக்கள் திருமேனி விட்டால, அத்திருமேனியை ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரமொழிய வேறொன்றால் ஸம்ஸ்கரிக்கவொண்ணாமையாலே, மஹாபாகவதோத்தமரான கூரத்தாழ்வானை, பட்டர், ப்ரஹ்மமேதவிதிப்படி ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தருளி, பன்னிரண்டுநாளும் செய்யும் கார்யங்களை ஶாஸ்த்ரோக்தப்ரகாரமாகச் செய்தருளி உடையவரையும், முதலிகளையும் எழுந்தருளுவித்துக்கொண்டுபோய், (నాతః పరతరం తీర్థం వైష్ణవాఙ్ఘ్రి జలాచ్ఛుభం। శేషాంగాభోగసంపూర్ణ్యం గంగామపి పునాతి హి) (நாதஃபரதரம்தீர்த்தம் வைஷ்ணவாங்க்ரிஜலாச்சுபம் - சேஷாங்கபோகஸம்புண்யம் கங்காமபி புநாதிஹி) என்னும் வைபவமுடைய பாகவத ஸ்ரீபாத தீர்த்தத்தையும் ஸ்வீகரித்தருளி, (శుభా దౌ ద్విజముఖ్యైశ్చ సర్వసంపచ్ఛుభావహం। సహస్రైర్బాహ్మణైర్భోజనం కారయేద్వైదికోత్తమః॥ అశుభాన్తే విశేషేణ గ్రామమధ్యే బ్రహ్మసంహితా। భక్త్యా తద్వ్యాప్తవర్ణై ...) (ஶுபாதௌ த்விஜ வர்யைஶ்ச ஸர்வஸம்பச்சுபாவஹம் - ஸஹஸ்ரஶாகாத்யயநம்காரயேத் வைதிகோத்தம: - அஶுபாந்தே விஶேஷேண க்ராமமிதே ப்ரஹ்மஸம்ஹிதா - அத்யேதவ்யா ... ராஶௌசகவிநாஶிநீ) என்றும், (వృద్ధావాదౌ శుభేచాన్తే గ్రామమధ్యే ...

ஸா। అధ్యేతవ్యా ద్విజశ్రేష్ఠై రాద్యాగీతసహస్రికీ) (வ்ர்த்தாவா தேள க்ஷயே சாம்ஸ்தே த்ராமிட ப்ராஹ்மஸம்ஹிதா - அத்தயேதவ்யாத்விஜஸ்ரேஷ்டை ராதயா கீதஸஹஸ்ரகீ) என்று ப்ராஹ்மாண்ட புராணத்திலே சொல்லுகிறபடியே திருவாய்மொழி ப்ரபந்தத்தை அநுஸந்தித்து, அநந்தரம் புஷ்பாஞ்ஜலி பண்ணிச் சாத்தியருளி, (యథా తుష్యతి దేవేశో మహాభాగవతార్చనాత్। తథా న తుష్యతే విష్ణు ర్విధివత్ స్వార్చనాదపి) (யதா துஷ்யதி தேவேஸோ மஹா பாகவதார்ச்சநாத் - ததா ந துஷ்யதே விஷ்ணுர் விதிவத்ஸ்வார்ச்சநாதபி) என்றுஞ் சொல்லுகையாலே, ஸ்ரீவைஷ்ணவர்களையும் அமுதுசெய்யப் பண்ணி ஸத்கரித்தருளினார். கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம் தையில் ஹஸ்தம். அவர் தனியன் - (శ్రీవత్సచిహ్నమిశ్రేభ్యో నమ ఉక్తిమధీమహే। యదుక్తయ స్త్రయీకణ్ఠే యాన్తి మఙ్గళసూత్రతామ్॥ శ్రీమత్కూరకులాధీశం శ్రీవత్సాఙ్కముపాస్మహే। అస్మ ద్యతీన్ద్రశిష్యాణాం ఆద్యం వేదాన్తవేదినాం) (ஸ்ரீவத்ஸசிஹ்நமிஸ்ரேப்யோ நமவுக்திமதீமஹி - யதுக்தயஸ்த்ரயீகண்டே யாந்திமங்களஸூத்ரதாம் - ஸ்ரீமத்கூரகுலாதீஸம் ஸ்ரீவத்ஸாங்கமுபாஸ்மஹே, அஸ்மத்யதீந்த்ர ஸிஷ்யாணாம் ஆத்யம் வேதாந்தவேதிநம்).

அதின்மற்றைநாள் உடையவர், பட்டரை அழைத்துக்கொண்டு நம்பெருமாளை ஸேவிக்கவெழுந்தருளி அழகியமணவாளன் திருமண்டபத்திலே தண்டன்ஸமர்ப்பித்து, பட்டரைக் கையைப் பிடித்துக்கொண்டுபோய் பெரியபெருமாள் திருவடிகளிலேகாட்டிக்கொடுக்க; பெருமாளும் மீளவும் மஞ்சள்நீர் குடித்து பட்டரை விஸேஷித்துப் புத்ரஸ்வீகாரம்பண்ணியருளி அர்ச்சகமுகேந திருவாய்மலர்ந்தருளி, "ஆழ்வானையிழந்தோமே! என்று வ்யாகுலப்படாதே, நம்மை ஆழ்வானாக நினைத்திரும்" என்று அருளிச்செய்தருள; உடையவரும் ஸந்தோஷித்து பெருமாளைக்குறித்து, தேவரீர் இவர்க்கு ஆயுஸ்ஸை ப்ரஸாதித்தருளும், அடியேன் வித்யைகளை அப்யஸிப்பிக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், வாய்திறவாதே தீர்த்த ப்ரஸாதமும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள; உடையவரும் பட்டரையழைத்துக்கொண்டு மீண்டு தம்மடமே யெழுந்தருளி, எம்பாரைப்பார்த்து, இவரை தர்ஸந ப்ரவர்த்தகராம்படி ஸாஸ்த்ராப்யாஸம் பண்ணுவியுமென்று அவர் கையிலே காட்டிக்கொடுத்து, முதலிகளுக்கு பகவத்விஷயம் அருளிச்செய்யா நின்றுகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இப்படி யிருக்கிற உடையவர்ப்ரபாவத்தை, பெரியபெருமாளும், திருவேங்கடமுடையானும், பேரருளாளரும், திருநாராயணப்பெருமாளும், அழகரும், திருக்குறுங்குடிநம்பியும், நம்மாழ்வாரும், நாதமுனிகளும், ஆளவந்தாரும், பெரியநம்பியும், திருக்கோட்டியூர் நம்பியும், திருமலைநம்பியும், திருமாலையாண்டானும், ஆழ்வார் திருவரங்கப் பெருமானரையரும், மற்றும் ஸ்ரீபாதத்து முதலிகளும், ப்ரஹ்மரக்ஷஸ்ஸும், ஊமையும் வெளியிட்டார்கள்.

பெரியபெருமாள் வெளியிட்டபடி யெங்ஙனே யென்னில்; * திருப்பவளச்செவ்வாய் திறந்து, உபயவிபூத்யைச்வர்யத்தையும், உமக்கும் உம்முடையார்க்குந் தந்தோம் என்றருளிச்செய்கையாலும்:" அப்பன் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்; உமக்கும் உம்முடையார்க்கும் உபயவிபூத்யைச்வர்யத்தையும் தந்தோமென்று நம்தெற்குவீட்டிலே சொன்னோமே" என்று திருப்பவள வாய்திறந்து அருளிச்செய்கையாலும்: உடையவர் திருமலைக்கெழுந்தருளும் போது, ததிவிக்ரயம் பண்ணுமவளான தும்பையூர்கொண்டியென்பாளொரு கோபாங்கனை, வந்து, க்ரயத்ரவ்யார்த்தமாக உடையவரையும், முதலிகளையும் ஸேவித்துநிற்க; உடையவர் அவளுக்குத் ததீயை ப்ரஸாதம் ப்ரஸாதிக்கச்சொல்லிக் கிடாம்பியாச்சானை நியமித்தருள; அவர் ப்ரஸாதித்த ஸ்ரீபாததீர்த்தம் ததீயை ப்ரஸாதத்தாலே ஸம்யக்ஜ்ஞாநோதயமுண்டாய், அடியேனுக்குத் ததிமூல்யம் வேண்டா, மோக்ஷம் தரவேணுமென்று ப்ரார்த்திக்க, அதற்குத் திருவேங்கடமுடையான் கடவர் என்ன, அவளும் அவர்க்குத் தேவரீர் ஒரு சிறுமுறி தரவேணுமென்ன; உடையவரும், உகந்து தாமெழுது திருமலையேறி த்வரித்துவரக்கண்டு திருவேங்கடவா எதிரேசென்று அச்சிறுமுறியை வாங்கி வாசித்துக் கொண்டு திருநாடு தந்தருளுகையாலும்.

பேரருளாளர் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்; அருளாளப்பெருமாளெம்பெருமானாருடன் தர்க்கித்தபோது, உத்தரஞ்சொல்லமாட்டாமல் பேரருளாளர்க்கு விண்ணப்பஞ்செய்ய, அப்போது, இன்னபடி உத்தரம் சொல்லுமென்று செங்கனிவாய் முறுவல் தோன்ற வருளிச்செய்கையாலும், யாதவப்ரகாசருக்கு, ஸ்வப்நமுகேந நம்மிராமாநுஜனை ஒருப்ரதக்ஷிணம் பண்ணி ஸேவியாயென் றருளிச்செய்கையாலும்.

திருநாராயணப்பெருமாள் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்; தொண்டனூரிலே ஸ்வப்நங்காட்டியருளி யழைத்துக்கொண்டுபோய், அவருக்கு ப்ரஸந்நராயருளுகையாலும், என்னுடைய செல்வப்பிள்ளையன்றோ வென்று எடுத்தணைக்கும்படி எதிராஜ குமாரரான ஸௌசீல்யத்தாலும்:- அழகர் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்;- ஒருநாள் திருவோலக்கத்திலே, நம்மிராமாநுஜனுடையார்க்குஅருள்பாடு என்று திருவுள்ளமாயருள, நாயந்தே! என்று ஆசார்யர்களெல்லாரு மெழுந்தருளி திருவடிகளிலே ஸேவித்துநிற்க, பெரியநம்பிவழியார் சிலர் வாராமலிருக்க; நம்பியும், அதுவென், நீங்கள் நாம் அழைக்க வாராதிருப்பானென் என்றுகேட்டருள, அவர்களும், ராமாநுஜனுடையார்க்கு அருள்பாடென்று தேவரீர்திருவுள்ளமாயருளுகையாலே, அவர் எங்களுக்கு சிஷ்யரென்று வாராதிருந்தோமென்று விண்ணப்பஞ்செய்ய; அழகரும், தசரதவஸுதேவாதிகள்நம்மை, புத்ரப்ரதிபத்திபண்ணினும்

போலே யிருந்தது நீங்கள் ராமாநுஜனை சிஷ்யப்ரதிபத்தி பண்ணி னது என்றும்,பின்பு ஒருநாள் கிடாம்பியாச்சானை யருளப்பாடிட்டு,ஒன் றுசொல்லாயென்று திருவுள்ளமாயருள; அவரும், (అపరాధసహస్రభాజనం) (அபராதஸஹஸ்ரபாஜநம்) என்று தொடங்கி,(అగతిం) (அகதிம்) என்று சொல்ல; அழகரும், நம்மிராமாநுஜனை யுடையையாயிருந்து, (అగతిం) (அகதிம்) என்று சொல்லப்பெறுமென்று திருவுள்ளமா யருளுகையா லும்:= திருக்குறுங்குடிநம்பி வெளியிட்டபடியெங்ஙனேயென்னில்: உடையவரும் முதலிகளும், நம்பியைஸேவிக்க வெழுந்தருளின வள விலே, திருக்குறுங்குடி நம்பியும் திருவோலக்கமாக வெழுந்தருளி யிருந்து,உடையவரை யருளப்பாடிட்டு, (బహూని మే వ్యతీతాని జన్మాని తవ చార్జున) (பஹூநிமேவ்யதீதாநி ஜந்மாநிதவசார்ஜுந) என்று - இத்தனைஜந்மம் பிறந்தோமென்று தெரியாது, அஜ்ஜந்மங்களிலே ஒருவரும் நமக்ககப்ப டாமல் (ఆసురీం యోనిమాపన్నా మూఢా జన్మని జన్మని, మామప్రాప్యైవ కౌన్తేయ తతో యా న్త్యధమాం గతిం) (ஆஸுரீம்யோநிமாபந்நா மூடாஜந்மநிஜந்மநி - மாமப்ரா ப்யைவ கௌந்தேய ததோயாந்த்யதமாங்கதிம) எனகிறபடியே ஆஸுர ப்ரக்ருதிகளாய்ப்பிறந்து பிறந்தஜந்மங்கள்தோறும்மூடராய்நம்மைவந்து கிட்டாதே அதமமானகதியை யடைந்தார்கள; இவ்வாத்மாக்களெல்லா ரும்,உமக்கு அகப்பட்ட விரகை நமக்குச் சொல்லவேணுமென்று திரு வுள்ளமாக; உடையவரும்தேவரீர்கேட்கும க்ரமத்திலேகேட்கில்சொல் லுகிறேனென்ன; நம்பியும்,இவருக்கு ஒரு ரத்நகம்பளத்தை ஆசநமாக இட்டு, இனிச் சொல்லுமென்ன; உடையவரும் அவ்வாஸநத்திலே, பெரியநம்பி யெழுந்தருளியிருக்கிறாராக பாவித்துக்கொண்டு, அவர் திருச்செவியிலே ஹிதத்தை விண்ணப்பஞ்செய்ய, அன்றுதொடங்கி நம்பியும், நம்மிராமாநுஜனுடையோமென் றருளிச்செய்கையாலும்:=

நம்மாழ்வார் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்;-லோகத்தைத் திருத்துவதாக எம்பெருமானோடே மார்தட்டி "நின்கண்வேட்கை யெழுவிப்பனே" என்றவர்தாமே, "ஏ! பாவம் பரமே!" என்றுக்லேசி த்து, "அகலிடத்தை யாராய்ந்து அது திருத்தலாவதே!" என்று, ஈஶ்வ ரன் அவதரித்துத் திருத்தவொண்ணாத லோகத்தை நாமோ? திருத்தக் கடவோமென்று கைவாங்கி, "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந் தோம்" என்று தாமும் தம்திருவுள்ளமுமேயாய், த்ரிகாலஜ்ஞராகை யாலே, "கலியுங்கெடும்கண்டுகொண்மின்" என்று உடையவர்திருவவ தாரத்தைக் குறித்து அருளிச்செய்கையாலும்:=ஸ்ரீமந்நாதமுநிகள் வெளியிட்டபடியெங்ஙனேயென்னில்: - "குளப்படியிலே தேங்கினல் குருவிகுடித்துப்போம், வீரநாராயணபுரத்தேரியிலே தேங்கினல் நாடு விளையும்" என்றருளிச்செய்தது உடையவர்திருவவதாரத்தைக்குறித்து என்னுமிடம்; - பெரியபெருமாளாகிற பெருங்கடலிலே ஆழ்வாராகிற காளமேகம்படிந்து, தத்கல்யாணகுணம்ர்தஸ்ளகத்தைப் பருகிவந்து,

நாதமுனிகளாகிற மஹாமேருவிலே வர்ஷித்து, உய்யக்கொண்டார் மணக்கால்நம்பியாகிற அருவிகளாலேயிறங்கி, ஆளவந்தாராகிற பேராற்றிலேகூடி, எம்பெருமானாராகிற பெரிய ஏரியிலேவந்து தேங்கி,நம்மாசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு,இஸ்ஸம்ஸாரமாகிறகழனிக்கு ஏறிப் பாய்கிறதென்றருளிச்செய்தவிடத்தில் ஒத்திருக்கையாலும்:—ஆளவந்தார் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்; - இம்மஹாநுபாவன் இத்தர்சநத்திலே புகுந்தானாகில "இவன்-முதல்வன்-ஆம்" என்று அருளிச்செய்கையாலும்;—பெரியநம்பி வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்; - அத்துழாயும தாமுமாக வெழுந்தருளி யிருக்கச் செய்தே; உடையவரும் முதலிகளுமாக வெழுந்தருள; பெரியநம்பி எழுந்திருந்து தண்டனிட; இதுவென்! உடையவர் உமக்கு சிஷ்யரன்றோ? இப்படி செய்யலாமோவென்று அத்துழாய் விண்ணப்பஞ்செய்ய; நம்பியும்,"அத்தானுக்குத்தாக தலைநாண் இது"என்றார். ஒருநாள் உடையவரும் முதலிகளுமாக நீராடி எழுந்தருளும்போது, பெரியநம்பி எதிரே கண்டு தானுந்தடகையுங்கூப்பித் தண்டனிட; உடையவரும் அஞ்சலித்து க்ர்னைசெய்தெழுந்தருள; இதனை முதலிகள்கண்டு, இதுவென்! ஜீயா! என்ன; உடையவரும இப்போது அவரிஷ்டமநுவர்த்திக்கை யன்றோ நமக்குள்ளது என்ன; முதலிகளும் பெரியநம்பிஸந்நிதியில் சென்று, உடையவரை நீர் ஸாஷ்டாங்கபரணமம் பண்ணுகைக்கடி யென்னென்று கேட்க; நமபியும், ஆளவந்தாரும் முதலிகளுமென் றிருந்தேனென்ன; அவர்களும், அதுக்கு நிதானமென்னென்ன; நம்பியும் ஆளவந்தாருக்குப்பினபு அகிலார்த்த பூர்த்தியுள்ளது இவர்க்கேயாகையாலே ஸதாசார்யஸந்நிதியோடு ஸச்சிஷ்யஸந்நிதியோடு வாசியில்லாமையாலே ஸேவித்தேனென்று அருளிச்செய்து,தம்குமாரர் புண்டரீகாக்ஷரையும உடையவர்திருவடிகளிலே யாஸ்ரயிப்பிக்கையாலும்:—திருக்கோட்டியூாநமபி வெளியிட்டபடி யெஙஙனேயென்னில்;-தாம் திருமந்த்ரார்த்தமப்ரஸாதிக்கும்போது ஆருக்கும் சொல்லாதேகொள்ளுமென்று ஆஜ்ஞாபித்தருளிச்செயய; இவரும், அத்தைத் தெற்காழ்வார்திருவோலக்கத்திலே தூளிதாநமாக ஸர்வர்க்கு மருளிச்செய்ய; நம்பியும் இத்தைகேட்டு குபிதராய், உடையவரையழைத்து ஆசார்யாஜ்ஞாதிலங்கநத்துக்கு பலமேதென்ன;உடையவரும்,நரகமேபலமென்ன; நம்பியும், ஆகில் அறிந்திருந்தும் செய்வானேனென்ன; இவரும் அடியேனொருவனுமன்றோ நரகம புகுவது, தேவரீர்ஸம்பந்தத்தாலே இவ்வாத்மாக்களெல்லாம் உஜ்ஜீவிக்குமென்று சொன்னேனென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் ப்ரீதராய், எம்பெருமானாரே! வாருமென்று எடுத்தணைத்துக்கொண்டு, இந்தபரஸம்ர்த்திநமக்கில்லையாய்விட்டதே! அவரோ நீரென்றருளிச்செய்து, இன்றுமுதல் "எம்பெருமானார்தர்ஶந மென்னுங்கோள்"என்றுசொல்லி, தம்குமாரர் தெற்காழ்வாரையும் அவர்திருவடிகளிலே யாஸ்ரயிப்பிக்கையாலும்:— திருமலைநம்பி வெ...

யிட்டபடி யெங்ஙனேயென்னில;- உடையவர் திருமலைக்கு எழுந்தரு ளும்போது, திருப்பரியட்டப்பாறையளவாக எதிரேசென்று தீர்த்த ப்ரஸாதம் ப்ரஸாதிக்க; உடையவரும ஸ்வீகரித்தருளி, நம்பியைப் பார்த்து, தேவரீர்எழுந்தருளவேணுமோ? வேறேயொரு சிறியவர்களில் லையோவென்ன;நம்பியும்,நாலுதிருவீதியிலும் ஆராய்ந்தவிடத்திலெனி னிலும்சிறியாரைக் கண்டிலேனென்கையாலும்,எம்பாரை உடையவருக கு உதகபூர்வகமாகக் கொடுக்கையாலும, தமகுமாரர ராமாநுஜனையும, பிள்ளைதிருமலைநம்பியையும் அவர்திருவடிகளிலே யாஸ்ரயிப்பிக்கை யாலும்:=திருமாலையாண்டான வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்; அவர்தமபக்கல் திருவாய்மொழிக்கு அர்த்தஙகேளாநிற்க, "அறியாக காலத்துள்ளே" எனகிற பாட்டுக்கு இவர் உபாரஸ்மாதி பரயாக அர்த்தமருளிசசெய்ய, ஆண்டானும், இது விசவாமித்ர ஸ்ருஷ்டி யென்று அருளிச்செய்கை தவிர்ந்திருக்க; பினபு திருக்கோட்டியூர்நமபி எழுந்தருளி, ஆண்டானையழைத்து, ஸாந்தீபன்பக்கலிலே க்ருஷ்ணன் அத்யயநம் பண்ணினைபோலேயாரும இவர உமமுடையபக்கல் திரு வாய்மொழி கேட்கிறது, இவரிரண்டர்த்தமும ஆளவந்தாரருளிசசெய ததுகாணுமென்ன; உடையவரும, பினனையுமொரு அர்த்தப்ரஸ்தாவத் திலே ஆளவந்தார இப்படி யருளிசசெய்யாரென்ன; ஆண்டானும, நீர ஆளவந்தாரைக் கண்டறியும காணாதிருக்க, இப்படி யருளிசசெய்யார் என்கைக்கு ஹேதுவென்னென்ன; இவரும, நான ஆளவந்தாருக்கு ஏகலவ்யனன்றோவென்ன; ஆண்டான தண்டனிட்டு, இதுவுமொரு திருவவதாரமோவென் றருளிசசெய்து, தமகுமாரர் சுந்தரத்தோளு டையாரை உடையவர் திருவடிகளிலே யாஸ்ரயிப்பிக்கையாலும:= திருவரங்கப் பெருமாளரையர வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்;- தம்பக்கல் உடையவர், ஆறுமாஸம ஸேவித்திருந்து, பாங்காக மஞ்சட் காப்பு அரைத்துச் சாத்தி நீராட்டப் பண்ணுவித்தருள, திருவரங்கப் பெருமாளரையரும் ப்ரீதராய, என்னுடைய ஸர்வஸ்வத்தையும கொள ளைகொள்ளவோ நீர இப்படி செய்ததென்று அருளிசசெய்து, பஞசமோ பாயநிஷ்டையை அருளிசசெய்து, தமகுமாரர திருவாயமொழியரை யரையும் உடையவர்திருவடிகளிலே யாஸ்ரயிப்பிக்கையாலும:

வடுகநம்பி;ஆசார்யபதமென்று தனியேயொருபதமுண்டு, அதுவுள் ளது எம்பெருமானார்க்கே யாகையாலே, எல்லாககும எமபெருமா னார்திருவடிகளொழிய வேறு உபாயோபேயமில்லை, அவர்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோளென்று அருளிச்செய்தருளினார். கணியனூர் சிறியாச்சான் ஸசேலஸ்நாநபூர்வகமாக ஆர்த்தியோடே உபஸந்நராய் திவ்யாஜ்ஞையிட்டு எம்பெருமானார்திருவடிகளொழிய வேறுதஞ்ச மில்லையென் றருளினார். அருளாளப்பெருமா ளெம்பெருமானார், தம் திருவடிகளிலே யாச்ரயித்த எச்சான், அநந்தாழ்வான், தொண்டனூர்

நம்பி, மருதூர்நம்பி, இவர்களுக்கு ஹிதோபதேசம்செய்து, "உடைய
வர், குருவியின்கழுத்திலே குண்டுக்கல்லை கட்டினாப்போலேசெய்தருளி
னார், நீங்கள் எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென் றிருங்கோள்"
என்றருளிச்செய்தருளினார். பிள்ளைப்பிள்ளையாழ்வான், திருவடிகளிலே
யாசரயித்தவளவிலே, "ஆழ்வான்! ஆசார்ய தக்ஷிணையாக தரிவித்த காண
ங்களையும் பரிஹரித்துக்கொண்டு பாகவதாகளிடத்தே ஆநுகூல்யைக
ரஸராய்ப் போரும்" என்றருளிச்செய்ய, அவரும் இது பரிஹரித்து
முடியாதென்று பயப்பட்டு நிற்கும் கிடக்க, ஆழ்வான் அவரையழை
த்து, எதிரியைக்குத் திருவுள்ளம் நிகிரஹித்தும், ராஜதண்டமும்வரும்,
ஆகையாலே, காயிகாபராதம் செய்யக்கூடாது; ([illegible]
[illegible]) "[illegible]
ஜகதேகநகாமறே, [illegible]"
என்கிறபடியே பரபவாதஞ் சொல்லுகிறவாக்கொணமையும் பரிஹரித்
துக்கொள்ளுமென்றருளிச்செய்ய, இனி மநஸ்ஸாலே நினைத்திராகில்
அநுதபித்தாலபோம், இது எம்பெருமானார்திருவுள்ளத்தேபடாதபடி
எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும் என்றருளிச்செய்தரு
ளினார். மிளகாழ்வான், முதலியாண்டானை என்றேறு தர்க்கிக்க வாரு
மென்ன, முதலியாண்டானும், நீர் தோற்றீராகில் செய்வதென்னெ
ன்ன; மிளகாழ்வானும், நான் தோற்றேனாகில் உம்மை என்தோளிலே
சுமந்துகொண்டுபோகிறேனென்ன, அநந்தரம், உபயரும் தர்க்கிக்க,
மிளகாழ்வான்தோற்று, முதலியாண்டானை ஸ்ரீபாதமதாங்கிகொண்டு
சற்றிடம்போய், இனி அடியேனை இறக்கியருளவேணுமென்று விண்ணப்
பஞ்செய்ய; ஆண்டானும், உடையவர்திருவடிகளிலே காட்டிக்கொடு
த்து ஆஸ்ரயிப்பித்தருளி, "எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றி
ரும்" என்றருளிச்செய்தருளினார். [illegible], பட்டரைப்பார்த்து, "நம்
பெருமாள் நம்மைப்புத்ரஸ்வீகாரம்பண்ணியருளினார், ஆழ்வானுடைய
பிள்ளை, அகிலசாஸ்த்ரங்களையும் அதிகரித்தோம்" என்கிறமேன்மையை
நினைத்து இருமாந்திராதே எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரு
மென்றருளிச்செய்தருளினார். பட்டர் நஞ்சீயரைப்பார்த்து, வேதாந்தி
யென்கிற பேரையுடையோம், நம்முடையபக்கல ஆஸ்ரயித்தோம், நம
க்குபஹூத்ரவ்யத்தை ஆசார்யதக்ஷிணையாகத் தந்தோம்என்று இருமாந்
திராதே எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும் என்றருளிச்செ
ய்தருளினார். நஞ்சீயர், நம்பிள்ளையைப்பார்த்து, லோகாசார்யரென்கிற
பேரையுடையோம,திருவாய்மொழிக்குப் பொருள் சொல்லவல்லோம்
என்று இருமாந்திராதே எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென் றிரு
மென்றருளிசசெய்தருளினார். நம்பிள்ளை, சிவக்கரைப்பிள்ளையைத் திருக்
கையைப் பிடித்துக்கொண்டு எழுந்தருளாநிற்க, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் நம்
பிள்ளைதிருமாளிகைத் திருவிடைகழியிலே கண்வளராநிற்க, சிவக்கரை
ப்பிள்ளை, அவரை "காலை முடக்கும்" என்ன; நம்பிள்ளையும், [illegible]

மதிகல மருளப்பெற்ற ஆழ்வார் '''திருத்தாள்' என் றருளிச்செய்ய நீரோ காலென்பீர்'' என்று அவர்கையைவிட்டருள, அவரும் சிவக்கரை யிலே போயிருந்து, பின்பு சோகார்த்தராய், ''இரண்டாற்றுக்கும் நடுவே நின்று, கவணிலேகலலைவைதது வீசிறுப்போலே தள்ளிவிட்டருளிற்றே! இனி அடியேனுக்கு கதியென்'' என றுவிண்ணப்பஞ்செய்துவரக்காட் டியருள, பிளளையும், ''உமக்கொரு குறையுமில்லை, எம்பெருமானார்திருவடி களே தஞ்சமென றிருப்பது'' என றருளிச்செய்து போகவிட்டருளினார்.

திருக்குருகைப்பிரான்பிளளான், சிறுப்புத்தூரிலே யெழுந்தருளி யிருக்கச்செய்தே, சோமாசியாணடான, பிள்ளான்ஸ்ரீபாதத்திலே மூன் றுருஸ்ரீபாஷ்யம் வாசித்தருளி, மீண்டெழுந்தருளுமபோது, சோமா சியாண்டான் அநுவர்த்திதது, அடியேனிருக்கிறதேசம் இதுவாயிரு ந்தது, அடியேனுககுத்தஞ்சமாயிருப்பதொனறு அருளிச் செய்யவேணு மென்ன; பிள்ளானும், ஆணடானைநகுறித்து, நீர், பாட்ட ப்ராபாகர மீமாம்ஸைகளுககுப் பொருள்சொல்லவலலோம், ஸ்ரீபாஷ்யத்துக்குப் பொருள்சொல்ல வல்லோம எனறு மேனமையடித திராதே, எம் பெருமானார்திருவடிகளேசரணமெனறிருமென்றருளினா. கோமடத்து ப்பிள்ளான், தம ஸ்ரீபாததநில, காகவககபபாடி யாச்சானபிள்ளை மூன் றுரு ஸ்ரீபாஷ்யம வாசித்து அததால் மிகவும மேனமையை யுடையரா யிருக்குமதுகண்டு, இவாக்கு இம்மூததாலே அபசாரம் வருமென்று அஞ்சி, எமபெருமானாதிருவடிகளேதஞ்சமெனறிருமெனறு அருளிச் செய்தருளினா். எங்களாழ்வான, காககைபபாடியாசசானபிளளையைப் பார்த்து, உமமைப்பெருமாள்முனிந்தருளினபோது எனனினைத்திருந்தீ ரென்று கேட்டருள; அவரும, எம்பெருமானார்திருவடிகளேதஞ்ச மென்றிருந்தேனென்று விண்ணப்பஞ்செய்தார். நடாதூரமமாள் ஸ்ரீ பாதத்திலே பத்துப்பனனிரண்டு திருநாமம ஸ்ரீபாஷ்யமவாசிக்கிற போது, அமமாள், அவர்களுககு ஸ்ரீபாஷ்யத்தை உபந்யஸித்துக்காட் டியருள; அவாகளும பக்தி குருபாயமாகஇருந்ததெனன; பின்பு, அவ ரும் ப்ரபத்த்யுபாயத்தை யருளிசசெய்து காட்டியருள; பக்தியிலும ப்ரபத்திதான் அரிதாயிருந்ததெனறு அவர்கள விணணப்பஞ் செய்ய; ஆகில், எமபெருமானார் திருவடிகளை தஞ்சமென்று விஸ்வஸித்து உஜ்ஜீவியுங்கோளெனறருளினா. நடுவிலாழ்வான, திருநாராயணபுரத் திலேயிருந்து ஸ்ரீபாஷ்யம்வாசிப்பிக்கிறகாலத்திலே, வங்கிப்புரத்தாய் ச்சி, சொட்டையம்மாளுள்ளிட்டார் ஸ்ரீபாஷ்யத்தைக கேட்டு இது அரி தாயிருந்ததென்ன; ஆகில்இதருளிச்செய்தருளின எம்பெருமானார்திரு வடிகளே தஞ்சமென் றிருங்கோளென் றருளினார்.

ஸ்ரீவேதவ்யாஸபட்டர், திருநாராயணபுரத்திலே, எம்பெருமா னார் திருமுன்பே கோஷ்ட்டிபண்ணி, ஸ்ரீபாஷ்யத்தை உபந்யஸிக்க, இதுகங்காப்ரவாஹமாயிருந்தது, எங்களால் அவகாஹிக்கப்போகா

தென்று ஐம்பத்திருவர்விண்ணப்பஞ்செய்ய; பட்டரும்,ஆகில், உங்கள் குலதெய்வமான எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோ ளென்றருளினார். நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர்,வெள்ளைக்குளத்து ஆனைசாத்தசிங்கர்முன்பே கோஷ்டிபண்ணி ஸ்ரீபாஷ்யம் உபந்யஸிக்க, தம்சிஷ்யரான இளையவழகியார் எழுந்திருந்து, இதுகங்காப்ரவாஹமா யிருந்தது,என்றால்அவகாஹிக்கப்போகாதென்று விண்ணப்பஞ்செய்ய; ஆகில், எம்பெருமானார்திருவடிகளே சரணமென்றிரும்மென்று அருளிச் செய்தருளினார். வடுகநம்பி, எம்பெருமானார் திருவடிகளே சரணம்,நம் பெருமாள்திருவடிகளே சரணம் என்று இரண்டையும் சேர அநுஸந்திக் கும் ஆழ்வானையும், ஆண்டானையும் இருசரையரென்பர். வடுகநம்பி,எம் பெருமானார் திருவடிகளே சரணமென்னுமாப்போலேயும், பட்டர் அழ கிய மணவாளப்பெருமாள் திருவடிகளே சரணமென்னுமாப்போலே யும், அநந்தாழ்வான், திருவேங்கடமுடையான் திருவடிகளே சரண மென்னுமாப்போலேயும், திருக்கச்சிநம்பி பேரருளாளர்திருவடிகளே சரணமென்னுமாப்போலேயும் எம்பெருமானார்,செல்வப்பிள்ளைதிருவடி களே சரணமென்னுமாப்போலேயும் ஒருவர்க்கும் இசைந்திராது. ப்ரஹ் மராக்ஷஸ்ஸு வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:- யாதவப்ரகாசனுக்கு உடையவரைக்காட்டி,இவர் திதயஸரிகளிலேதலையொன்று சொல்லுகை யாலும். ஊமை வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:- பெருமாள் கோயிலிலே பாகவதஜந்மத்திலேபிறந்ததொருபிள்ளை ஐந்தாறுவய: ஸ்ஸளவாக ஊமையாயிருந்து, பின்பு, இரண்டுஸம்வத்ஸரம் காணதிருந் து,பின்பு எல்லாரும் காணவந்து வார்த்தைசொல்ல வல்லனாக, இவ் வாஸ்சர்யத்தைக்கண்டு எல்லாருந் திரளாகவிருந்து ஊமையைப்பார்த் து, நீ இத்தனைநாளும் எங்கேறப் போனாயென்று கேட்க, அவனும் நான க்ஷீராப்திக்குப் போனேனென்ன; அங்கு விசேஷமென்னென்று கேட்க,ஸ்ரீஸேநாபதியாழ்வான் உடையவராயவதரித்தருளினாரென் றவநந்தரம் அவனைக்கண்டதில்லையென்று ஸ்ரீபகவத்ஸேநாபதிஜீயரருளி ச்செய்கையாலும் இவர்ப்ரபாவத்தை எல்லாரும் ப்ரகாசிப்பித்தார்கள்.

நாதமுநிகள் தொடக்கமான ஆசார்யர்களிற் காட்டில் இவருக்கு ப்ராதாந்யங்கொள்ளும்படி எங்ஙனேயென்னில்; பகவதவதாரங்களெல் லாமொத்திருக்கச்செய்தே, ஸ்ரீராமக்ருஷ்ணாத்யவதாரங்களுக்கு ப்ரா தாந்யமுண்டானாப்போலேயும், ரிஷிகளெல்லாரிலும் வைத்துக்கொண் டு, வ்யாஸ பராஸர ஸுக ஸௌநக நாரதாதிகளுக்கு ப்ராதாந்யமு ண்டானாப்போலேயும், திவ்யதேசங்களெல்லாம் ஒத்திருக்கச்செய்தே, கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரங்களுக்கு ப்ரா தாந்ய முண்டானாப்போலேயும், ஆழ்வார்களெல்லாருமொத்திருக்க நம்மாழ்வாருக்குப்ராதாந்யமுண்டானாப்போலேயும், ஆசார்யர்களெல் லாரிலும்வைத்துக்கொண்டு உடையவருக்கு ப்ராதாந்யங் கொள்ளத் தட்டில்லையிறே.

ஸ்ரீராமாவதாரத்திற்கு ப்ராதாந்ய மெத்தாலே யென்னில்;-பெருமாள், அபய ப்ரதாந மருளிச்செய்தும், குஹப்பெருமாளுடன்*சீரணிந்த தோழமைகொண்டும, பெரிய வுடையாரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தும், ஸ்ரீசபரிகையாலே ஸம்யக் போஜநஞ் செய்தும், திருவடியுடன் "உண்பஞானென்ற வொண்பொருள்" என்னும்படி ஸஹபோஜநம்பண்ணிப்போருகையாலும் :—ஸ்ரீ க்ர்ஷ்ணாவதாரத்துக்கு ப்ராதாந்ய மெத்தாலே யென்னில்; - கீதோபநிஷத்தை வெளியிட்டு சரமஶ்லோக மருளிச்செய்கையாலும, பீஷ்மத்ரோணாதிகளுடைய க்ர்ஹங்களை விட்டு, ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே, (కుచేల కుబ్జన్తి) "ஶசிநிருணவற்திச" என்கிற பாவநத்வ போக்யத்வங்களையுடைத்தா யிருந்ததென்று அமுதுசெய்தது, (ద్విషదన్నం నభోక్తవ్యం) (த்விஷதந்நம்நபோக்தவ்யம) என்றுமுறைகூறுகிற சொற்றை நிராகரித்தும் இதுதன்னையே ஶதருகோஷ்டியிலும் ப்ரவிததமாக்குகையாலும:

கோயிலுக்கு ப்ராதாந்யம - திருப்பாணாழ்வாரோடு கலந்து பரிமாறுகையாலே: திருமலைக்கு ப்ராதாந்யமெத்தாலே யென்னில: - குறுமபறுத்தநமபிக்கும தொண்டைமான் சக்ரவர்த்திக்கும வார்த்தையருளிச்செய்து கலந்து பரிமாறுகையாலே: பெருமாள்கோயிலுக்கு ப்ராதாந்யமெத்தாலே யென்னில;- திருக்கச்சிநம்பியோடு ஸ்மிதபூர்வகமாக பாஷணம்பண்ணி மிகவும கலந்து பரிமாறுகையாலே: திருநாராயணபுரத்திற்கு ப்ராதாந்ய மெத்தாலே யென்னில.-ஸாசரித தமயனைபக்கல் ஆதராதிசயத்தாலே தந்நிவேதிதாந்நத்தை ஸமயாக்போஜநம்பண்ணி அவனை வாழ்விக்கையாலும, எதிராஜ புத்ரரான ஸௌஶீல்யத்தாலும:

ஸ்ரீவேதவ்யாஸபகவானுக்குப்ராதாந்யம,வேதங்களைவிஸ்தரிப்பித்து, அதில் கர்மகாண்டத்தைவிட்டு, ப்ரஹ்மபாகத்திலே புருஷஸூக்த, சாந்தோக்ய,வாஜஸநேயக,தைத்திரீயக,ஶ்வேதாஶ்வதர,மஹோபநிஷதாதிகளிலும, தது ப்ப்ரஹ்மணங்களான புராணேதிஹாஸாதிகளிலும், (సత్యంసత్యమ్) (ஸத்யம் ஸத்யம்) என்று தொடங்கி, (నదైవంకేశవాత్పరమ్) "நதைவம்கேஶவாத்பரம்"என்றுஸத்யபுரஸ்ஸரமாக பரதத்வநிர்ணயம் பண்ணுகையாலே. ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷிக்குப்ராதாந்யம, (పురాణేషుచవైష్ణవం) "புராணேஷுசவைஷ்ணவம" என்னும்படியான ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே, சிதசித்ச்வரதத்வங்களை விசதமாகப்ரதிபாதித்த உதாரனென்று ஆளவந்தார் நமஸ்கரித்தருளுகையாலே. ஸ்ரீஶுக ப்ரஹ்மரிஷிக்குப்ராதாந்யம், பரிக்ஷித்துராஜாவுக்கு ஸ்ரீபாகவதத்திலே தத்வநிர்ணயத்தைப்பண்ணி, (శుకోముక్తః) (ஶுகோமுக்த:) என்னும்படியான வைபவத்தையுடையராகையாலே. ஸ்ரீஶௌநகபகவானுக்குப்ராதாந்யம்,ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே பல விடங்களிலும் தத்வ நிர்ணயம் பண்ணுகையாலே. ஸ்ரீநார்தபகவானுக்கு ப்ராதாந்யம் (భుజయగోనుపిబన్తి రక్షితంయస్యవిష్ణోః పరమపురుషనామ్నా కీర్తనంయస్యవాణీ! బుజతరమపిఘ్నానిమస్తకేయస్య

కణ్ఠే సరసిజమణిమాలా యస్యతస్యాస్మి దాసః) (புஜயுகமபிசிஹ்னைாo கௌபஸ்ய விஷ்ணோ: பரமபுருஷநாமநா கீர்த்தநoயஸ்யவாசி - ரிஜுதரமபிபுண்ட்ரம் மஸ்தகேயஸ்யகண்டே ஸரஸிஜமணிமாலா யஸ்யதஸ்யாஸ்மி தாஸ) என்று சொல்லப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தாஸனென்று சொல்லுகையாலும், பெரியாழ்வாரும், "சேமமுடைநாரதனார்" என்று சொல்லுகையாலும்.

ஆழ்வார்களில் நம்மாழ்வாருக்குப்ராதாந்யமெத்தாலேயென்னில்; ஸஹஸ்ரசாகையான ஸாமவேதத்தினுடைய பொருளை நாலுப்ரபந்தத்தாலே ஸாவாதிகாரமாக்குகையாலும், நாதமுநிகளுக்கு ப்ரஸந்நராய் அருளிச்செயல் நாலாயிரத்தையும் ப்ரஸாதித்து, மற்றுமுண்டான தாமஸதாத்பர்யங்களையெல்லா மருளிச்செய்து தாமஸத்தை நிலைநிறுத்துகையாலும்.

உடையவர், ஸூத்ரசொன்னவாக்யார்த்தங்களைப்போலன்றிக்கே, பெருமாளருளிச்செய்த அபயப்ரதாநத்தை விசதமாக்குகையாலும், கீதாசார்யனருளிச்செய்த சரமச்லோகார்த்தத்தை ப்ரகாசிப்பிக்கையாலும், ரிஷிப்ரோக்தமான ப்ரமாணங்களுக்கு அர்த்தமருளிச்செய்கையாலும், மற்றையாழ்வார்களருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களையும், அங்கோபாங்கமாகவுடைய திருவாய்மொழிப் ப்ரபந்தத்தை அர்த்தவத்தாக விசதமாகப்ரகாசிப்பிக்கையாலும், தாமருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களையும், ஆழ்வார்களருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களையுங்கொண்டு ஸூத்ரவாக்யங்களை ஒருங்கவிட்டு, ஸ்ரீபாஷ்யம், கத்யத்ரயம் முதலான ப்ரபந்தங்களையும் அருளிச்செய்து, நிகிலதமதிஸமயங்களையும் நிராகரித்து, ஸ்வமதஸ்தாபனம் பண்ணுகையாலும், "எம்பெருமானார்தர்சநம்" என்று நிறுத்தப்பெற்றமையும்.

ஆழ்வான், ஆண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார், ஸ்ரீபராசரபட்டர் முதலானோர், தந்தாம் சிஷ்யர்களுக்கு, எம்பெருமானார் திருவடிகளே சரணமென்று திருவுள்ளமானகைக்கு ஹேது வென்னென்னில்;- "மாறனடிபணிந்துய்ந்தவன்" என்று சொல்லுகையாலும், ஆழ்வார்க்கும் உடையவர்க்கும் நடுவுள்ள ஆசார்யர்கள், நம்மாழ்வாருக்கு கரணபூதராகையாலே இவர்க்குநேரே ஆசார்யர் திருக்குருகூர் நம்பியாகையாலும், அவர் 'கலியுகமே கேடிம' என்று இவரவதாரத்தைக் குறித்தருளிச்செய்கையாலே ஆழ்வாராலே ப்ரவர்த்திதமான தர்சநத்தை நிலைநிறுத்தி, அவர்வைபவத்தை, (గురుప్రకాశయేద్ధీమాన్) (குருoப்ரகாமயேத்தீமாந்) என்று ப்ரகாசிப்பிக்கையாலும், ஆழ்வார்க்கு நேரே சிஷ்யர் உடையவராகக்கடவர்.

ஆளவந்தாரும் இவ்வர்த்தத்தை அநுஷ்டித்துக் காட்டியருளினார். எங்ஙனே யென்னில்; - மணக்கால்நம்பி, உய்யக்கொண்டார், இவர்கள் உகப்பைப்பின்சென்று, (పితామహంనాథమునిం విలోక్యప్రసీద) (பிதாமஹம்நாத முநிoவிலோக்யப்ரஸீத) என்றும், (నాథాయనాథమునయేఽత్రపరత్రచాపి)

(நாதாயநாதமுநயேத்ரயாத்ரசாமிநிக்யம்) என்று-இங்குமங்கும் ஆசார்யன் திருவடிகளே சரணமென்றும், ஆசார்யவிஷயத்தில க்ருதஜ்ஞதை யாவதாத்மபாவி யென்று மருளினர். ஆகையாலே, ஸ்வரூபோஜ்ஜீவநத்திற்கு ஆசார்யனே தஞ்சமென்று பற்றுதலொழிய வேறே இவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லையிறே. இவ்வர்த்தத்தை யநுஷ்டித்தார் ஆரென்னில்; ஸ்ரீமதுரகவி ப்ரப்ருதிஜ்ஞாநிகளிறே.

உடையவர், புழுவன்வ்யாஜேந மோக்ஷமெழுந்தருளினபோது, உபந்யஸித்த கட்டளையைக்கேட்டு, ஆசார்யர்களெல்லாரும் ஆஸ்சர்யப்பட, உடையவரும், என்பரமாசார்யரான ஆளவந்தார்வார்த்தைகொண்டு சொன்னோமிது, ஆளவந்தார்கோஷ்டியிலே ஒருநாளாகிலும் ஸேவிக்கப்பெற்றோமாகில பரமபதத்திற்கு சுருளும்படியும் கட்டிவிட்டேனே என்றருளிச் செய்தாரிறே

உடையவர், அபயப்ரதாநம் அருளிச்செய்யாநிற்க, பிள்ளையுறங்காவில்லிதாஸர், கோஷ்டியிலுமெழுந்திருந்திருக்க, இதுவென்? பிள்ளாய்! என்று உடையவர் கேட்டருள; ([illegible]) (பரித்யக்தாமயாலங்காமித்ராணிச த்நாநிச-பவத்கதம்மேராஜ்யஞ்சஜீவிதஞ்சஸுகாநிச) என்றும ([illegible]) (த்யக்த்வாபுத்ராம்ஶ்சதாராம்ஶ்சராகவம் ஶரணங்கத:) என்றும் - பகவத்ஸமாஶ்ரயணத்துக்கு விரோதியானவைகளையடையவிட்டு, "பெருமாள் திருவடிகளே தஞ்சம்" என்றுவந்து, ([illegible]) (கஸ்தஏவ்யதிஷ்டத) என்று. நிலத்திலே காலபாவாதே, ககநஸ்தனாய் நிராலம்பனாயின்ற விபீஷணாழ்வானையுங்கைப்பட, (வத்யதாம்)(வத்யதாம) என்று கல்லுந்தடியுங்கொண்டு ராமகோஷ்டிக்கு பசுபத்ந்யாதிகளோடு கூடினவடியேன், ஆளாகப் புகுகிறேனோ வென்றார். உடையவரும், பிள்ளாய்! அஞ்சாதே கொள்ளும், நான் பெற்றேனாகில் நீர் பெறுகிறீர், பெரியநம்பிபெற்றாராகில் அடியேன் பெறுகிறேன்; ஆளவந்தார் பெற்றாராகில் பெரியநம்பி பெறுகிறார்; மற்றுமுள்ளார் பெற்றார்களாகில் இவர்களும் பெறுகிறார்கள். நம்சடகோபர், "அவாவற்று வீடுபெற்ற" என்று தம்வாக்காலே அருளிச்செய்கையாலே அவர்பெற்றது ஸித்தம். ஆனபின்பு நமக்கும் ஸித்தமென்றிரும், எல்லார்க்கும் நாய்ச்சியார் புருஷகாரமுண்டாம்போது அச்சம் வேண்டாம்; ஆகையிறே நித்யயோகம்; ஆனபின்பு ஸம்ஸாரிகளும் எம்பெருமானும், ஒருசங்கிலித்துவக்கிலே காணுமிருப்பது; ஆகையால நம்முடைய ஒழுக்குக்கூட்டம் நம்மைவிட்டகலாதென்றிரீர். கமுகு உண்ணில் வாழையும் உண்ணுமென்றிரும். ஸ்ரீவிபீஷணாழ்வானை அருளப்பாடிட்டபோது தனித்தருளப்பாடிட்டதில்லையே-அவனோடுவந்தநால்வரையும்; தகையென்றபோதும் தனித்துத் தகையென்றதில்லையே; ஆனபின்பு நான்பெற்றேனாகில் நீர்பெறுகிறீர், அஞ்சாதே ஸுகமேயிருமென்றருளிச்செய்தருளி

ஞர். [ஏத்தியிருப்பாரைவெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார்தவம்] ஏத்தியிருந்தார்-ஸ்ரீபரதாழ்வான்; அவரைச்சாத்தி யிருந்தார்-ஸ்ரீசத்ருக்நாழ்வான்; ஏத்தியிருந்தார் - நம்மாழ்வார்; அவரைச் சாத்தியிருந்தார் - ஸ்ரீமதுரகவிகள். ஏத்தியிருந்தார் - பெரியாழ்வார்; அவரைச் சாத்தியிருந்தார் - நாய்ச்சியார். இனி எம்பெருமானாரைப் பற்றுமவ்வளவே ஸ்வரூபமாகில், திவ்யதேசங்களைக் கைவிட்டானாகானோ வென்னில், கைவிட்டானாகான், அதெங்ஙனேயென்னில்;- "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்னும், பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவைதன்னொடும்வந், திருப்பிடம்மாயனிராமாநுசன் மனத்து" என்கையாலே எம்பெருமானார் திருவடிகளைத் தொழவே திவ்யதேசங்களெல்லாம் திருவடிதொழுதானாகக்கடவன்; உடையவரை ஆராதித்து அமுதுசெய்யப் பண்ணவே, எல்லா திவ்யதேசங்களிலெம்பெருமான்களையும் ஆராதித்து அமுதுசெய்யப் பண்ணினானாகக் கடவன்.

"நின்றவண்கீர்த்தி" என்கிற பாட்டிலும், "பேறொன்றுமற்றில்லை" என்கிற பாட்டிலும் - கர்மமுமுபாயமன்று, ஜ்ஞாநமுமுபாயமன்று, பக்தியுமுபாயமன்று, ப்ரபத்தியுமுபாயமன்று, எம்பெருமானார்திருவடிகளே உபாயமுபேயமென்னையாலே - எம்பெருமானாரைப்பற்றுகையே ப்ரபத்தி, ராமாநுஜவென்கிற சதுரக்ஷரியே திருமந்த்ரம், அவர்திருவடிகளென்றுமதை யுபாயமாகக்கொள்ளுகை த்வயார்த்தம், இதுவே விசிஷ்டார்த்தமான வேதாந்தமென்று நடாதூரம்மாள் அருளிச்செய்தருளுவர்.

கூரத்தாழ்வான், நாராயண, ராமாநுஜ, என்கிற திருமந்த்ரங்களுக்குள்ளே - ஸம்ஸாரமோக்ஷங்களிரண்டுக்கும்பொதுவானதையும், மோக்ஷைகஹேதுவானதையும், இது சொன்னது. (சதுரக்ஷரீ) (சதுராசதுரக்ஷரீ) என்றாரிறே.

"கையிலங்கனி" என்கிறபாட்டிலே - ஸர்வலோகாதலாமலகமாகக் காட்டித்தந்தாலும், உன்னிராமாநுஜநாமாநுபவமே பரமப்ராப்யமென்றும், "இராமாநுசனைத்தொழும் பெரியோர் எழுந்திரைத்தாடுமிடமடியேனுக்கிருப்பிடம்" என்று - ராமாநுஜனைத் தொழும் பெரியோர் நித்யவாஸம் பண்ணுமிடமே அடியேனுக்கு ப்ராப்யபூமியென்றும், "உன்தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி யென்னை யாக்கி யங்காட்படுத்தே" என்று-, ராமாநுசனே உன்னடியார் திறத்திலுற்றமாறுதபக்தியையுண்டாக்கி அவர்களுக்கே என்னையாட்படுத்தாய்என்று உடையவர்திருமுக மண்டலத்தைப் பார்த்து விண்ணப்பஞ்செய்ய, இசைந்து எழுந்தருளியிருந்தாரிறே. இதுவேமுக்யப்ரமாணமென்று நமக்கெல்லார்க்கும் புத்திபண்ணக் குறையில்லை. எங்ஙனேயென்னில்;- "அங்கயல்பாய்வயல்" என்கிற பாட்டிற்படியே பெருமாளையும் நாய்ச்சியாரையும் புருஷகாரமாகக்கொண்டு, எம்பெருமானார் திருவடிகளைப்

பெறவேணுமென்று, ப்ரபந்தத்தைத் தலைக்கட்டியருளினாரிறே- அமுதனாரும்.

ஏவம்வித வைபவயுக்தரான இந்த எம்பெருமானாரை தத்பாகிநேய ஸூநுவாய் தந்நாமத்தையுடையராய், தந்நாமகுணார்ஹரான கந்தாடையாண்டான், கனக்க அநுவர்த்தித்து, ([illegible]) (பரித்ராணாய) இத்யாதிப்படியே தேவரீர், ([illegible] [illegible]) (புண்யாம்போஜவிகாஸாய பாபத்வாந்தக்ஷயாய ச - ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:) என்னும்படி அவதரித்தருளின தேவரீருடைய அர்ச்சாவிக்ரஹத்தை ஸ்ரீபெரும்பூதூரிலே ஸாவகாலத்திலும் ஸேவிக்கலாம்படி எழுந்தருளப்பண்ணவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; ஸ்வாமியும், அப்படியே செய்யுமென்று அநுமதிபண்ணியருள; ஆண்டானும், அநுகூலனான சில்பியை அழைப்பித்து, ([illegible] [illegible] [illegible]) (புஷ்டிஸம்ஸ்தவாக்தம ப்ரியதம் விலஸிதம் தன்னுடை ஸ்திர்மந்திரம் காஷாயேண ஸ்ரீகோபவீதருசிரம் தோர்மூல சக்ராயுதம் - ஆகாரம் தஸகர்மமாஸிகசத்துளஸீ பத்மாக்ஷமாலாம்சிதம் யுக்தம் [illegible] ஸ்ரீபாஷ்யகாரம் பஜே) என்கிற வாக்யத்தின்படியே விக்ரஹாகாரத்தை ப்ரகாசிப்பிக்கப் பண்ண; அவனும், அர்ச்சாவிக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி ஸந்நிதியிலே கொண்டுவந்துவைக்க; இதனைக்கண்டு உகந்தருளி அந்த விக்ரஹத்திலே தம்முடைய ஸம்பந்தமும் பரிபூர்ணமாயிருக்கும்படி காடாலிங்கநம்பண்ணி, "இவ்விக்ரஹத்தைப் புஷ்யமாஸத்திலே குருபுஷ்யத்திலே ப்ரதிஷ்டிப்பியும்" என்று திருமுகம் எழுதிக்கொடுத்தருளிப் பியருள; ஆண்டானும், அப்படியே திருவடிகளிலே ஸேவித்து அந்த விக்ரஹத்தை யெழுந்தருளுவித்துக்கொண்டு வந்து, மூலவிக்ரஹத்தையும் எழியருளப்பண்ணுவித்து, திருமுகப்படியே திருப்ரதிஷ்டையும் செய்வித்தருளினார். இங்கே ப்ரதிஷ்டிப்பிக்கிற அன்றைத்திவஸத்திலே திருமேனியிலே மிகவும் தளர்த்தியுண்டாக, ராமாநுஜனும், இதேதென்று பராமர்சிக்க, ஆண்டானுக்கு எழுதிக்கொடுத்த திவஸம் அன்றாயிருக்கக்கண்டு விஸ்மயப்பட்டு, "சிகரம் வருவது" என்று ஆண்டானுக்குத் திருமுகம் போகவிட்டருள; அவரும் திருமுகத்தை ப்ரஸாவஹித்து மீண்டெழுந்தருளி, திருவடிகளை ஸேவித்துக்கொண்டிருந்தார். ([illegible]) (சரிதம் ரகுநாதஸ்ய ஸதகோடிப்ரவிஸ்தரம்) என்கிற சக்ரவர்த்தித திருமகன் வைபவம்போலே உடையவர் வைபவமும் அடையச்சொல்லப்போகாதிறே; யதாமதி யதாஸ்ருதமாகச் சொன்ன இத்தனை.

அநந்தரம், ஸமூகத்திலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்களைப்பார்த்தருளி, ப்ரபந்நாதிகாரிகளுக்கு முன்னடிபார்த்து வர்த்திக்கவேண்டுவன

மூன்றுவிஷய முண்டு. அவையாவன;- அநுகூலரென்றும், ப்ரதிகூல ரென்றும், அநுபயரென்றும். அநுகூலராவார் - ஸ்ரீவைஷ்ணவர்கள்; ப்ரதிகூலராவார் - பகவத்த்வேஷிகள்; அநுபயராவார் - ஸம்ஸாரிகள். இதில், அநுகூலரைக்கண்டால், சந்தந குஸுமதாம்பூலாதிகளைக் கண்டாற்போலவும், நிலாத்தென்றல்களைக்கண்டாற்போலவும், அபிமத விஷயத்தைக்கண்டாற்போலவும் உகந்துபோரக்கடவன். ப்ரதிகூல ரைக்கண்டால் ஸர்ப்பாக்நிகளைக்கண்டாற்போலே வெருவிவர்த்திக்கக் கடவன். அநுபயரைக் கண்டால், காஷ்ட லோஷ்டாதிகளைக் கண்டாற் போலே த்ருணீகரித்து வர்த்திக்கக்கடவன். அவர்கள் அநுகூலித்தார்க ளாகில், ஆத்மஜ்ஞாநத்தை யுபதேசிக்கவும், அநுகூலியார்களாகில் ஐயோ! என்று க்ருபைபண்ணிப்போரவும்.

இப்படிசெய்யாதொழிந்தால், ப்ரத்யவாயம் - அர்த்தகாமப்ராவண்யம். அதடியாக ஸ்ரீவைஷ்ணவர்களை அநாதரிக்குமாகில், ஸார்வபௌமனுடைய ராஜபுத்ரனை, அவனுடைய ஸந்நிதியிலே பரிபவிக்கையாலே, அவன் வெறுக்குமாப் போலே எம்பெருமானுக்குள்ளம் வெறுக்கும். அர்த்தகாமமடியாக ப்ரதிகூலரை ஆதரிக்குமாகில், ஸார்வபௌமனான ராஜாவின் மஹிஷி, ஸ்வதந்த்ரஜந்துக்களையாசைப்படுகையைப்போலே, ராஜாவுக்கு அஸஹ்யமாகை யாலே ராஜா வெறுக்குமாப்போலே, எம்பெருமானிவனை வெறு த்திடுவர், அர்த்தகாமமடியாக அநுபயரை ஆதரிக்குமாகில், ரத்நத் திரளும் பலகறையுமாய் வைசித்து விடாதுபோலே, பிறந்தஜ்ஞாநம் காரியகரமாய்த்தலைக்கட்டாது, எம்பெருமான் இவனை அநாதரிக்கும் என்றருளிச்செய்தருளினார்.

பின்பு எம்பெருமானார், சமீபமான ஸந்நிதிக்குப் பட்டரைக் கூட்டிக்கொண்டு, பெருமாளைஸேவித்து, பட்டருக்குத் திருமுன்னே தீர்த்த ப்ரஸாதங்களைப் ப்ரஸாதிப்பித்து, தாமும் தீர்த்தப்ரஸாதம்பெ ற்று, முதலிகளைநோக்கி, நம்முடைய ஸம்ப்ரதாயப்ரவர்த்தகராவாரிவரெ ன்று பட்டரைக்காட்டியருளி, வாரீர்பட்டரே! மேலநாட்டிலே வேதாந் தியென்றொரு பெரியவித்வான் இருக்கிறானென்றுகேட்டோம், நீர் அங் கேறப்போய் அவனை நம்ஸம்ப்ரதாயத்திலாம்படி திருத்துமென்றரு ளிச்செய்து, பட்டரைக் கூட்டிக்கொண்டு மடமேயெழுந்தருளி ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரையுமழைத்து, நம்முடைய விஶ்லே ஷத்தில் அவிவேகம் பண்ணினீர்களாகில் நம்மாணையென்று ஆஜ்ஞா பித்து; பெரியநம்பி, ஆளவந்தார் ஸ்ரீபாதத்தோடும் நம்மோடும் ஸம்பந்தமில்லை, நித்யஸூரிகள்திரளிலும் புகுரப்பெறுதே இழப்புதி கோள்; அதுவுமன்றியே, நம்சடகோபர்திருவுள்ளத்தை மறுத்தவர் களாய் அதப்பதித்துப்போவீர்களென்றும் அருளிச்செய்து, எல்லார் கையாலும் தம் திருவடிகளைத் தொடுவித்து, சூழாவுகொண்டு, முதலி களைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணி; பின்னைப்பின்னை

வான், உக்கலாழ்வான், கோமடத்தாழ்வான், சேட்டலூர் சிறியாழ்வான், வேதாoதியாழ்வான் முதலானவர்களை, கந்தாடையாண்டான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும்; எச்சான், அநந்தாழ்வான், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி முதலானவர்களை, அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருக்கையிலேகாட்டிக்கொடுத்தருளியும்; பட்டர், கணியனூர் சிறியாச்சான், சட்டம்பள்ளிஜீயர், ஈச்சம்பாடிஜீயர், பெரியாண்டான், சிறியாண்டான் முதலானவர்களை, எம்பார் திருக்கையிலேகாட்டிக்கொடுத்தருளியும்; கிடாம்பியாச்சான், கிடாம்பிப்பெருமாள், எங்களாழ்வான், நடாதூராழ்வான் முதலானவர்களை, திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும்; மாருதிப் பெரியாண்டான், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான், ஆரணபுரத்தாழ்வான், ஆசூரிப்பெருமாள், உமைநங்கிப்பெருமாள் முதலானவர்களை, நடுவிலாழ்வான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும், இன்னும் இருந்தவர்களை இருந்தவர்கள் கையிலே காட்டிக்கொடுத்தருளியும், பின்பு பட்டரைப்பார்த்தருளி, ஆழ்வானையும், ஆண்டானையும்போலே கூரகுலதிலகரான நீரும், வாதூலகுலதிலகரான கந்தாடையாண்டானும், நம்மடியாகவுண்டான ஸம்ப்ரதாயத்தையுடையராய, (మచ్ఛిత్తా మద్గతప్రాణాః బోధయన్తః పరస్పరం) (மச்சித்தாமத்கதப்ராணா, போதயந்த பரஸ்பரம்) என்னும்படியாயிருங்கோளென்றருளிச்செய்து, ஸ்ரீவைஷ்ணவர்களைப்பார்த்து, (పఠిత్వా భాష్యం తత్ప్రవచనముఖేనాపి యది వా ప్రబంధపాఠం ... పరిచర్యా ...) (படித்வாபாஷ்யம் தத்ப்ரவசநமுகேநாபி யதிவா கிரிஸ்ரத்தாவாஸே பரிபுசிதஸ்தாந நிவஹே - ப்ரபோதி நை வா ப்ரபந்நமநோர்த்தமநநம் பரபஞ்சாநாம் வாமேபவதுபரிசர்யாபரிசய.) (గచ్ఛ ఫరంపదముదాచ వచాంసి యాని రామానుజార్యఇహ తేషు చతుర్థదా। శ్రీయాదవాద్రి వసతింస్థతతంభజన్త స్వస్థా భవన్తి మమ ...) (கச்சபரம்பதமுவாச வசாoஸியாநி ராமாநுஜார்ய இஹதேஷு சதுர்த்தவித்தாம - ஸ்ரீயாதவாத்ரிவஸதிoஸததம் பஜoதஸ் ஸoதோபவoதிமமஸoததி மூலநாதா.) என்கிறபடியே இருக்குமநாள பண்ணலாம் கைoகர்யம் ஆறுண்டு: அவையாவன- ஸ்ரீபாஷ்யத்தை வாசித்தும், வாசிப்பித்தும் போருகை; அதற்கு யோக்யதையில்லாவிடில், அருளிச்செயலை ஓதியும், ஓதுவித்தும் போருகை; அதற்கும் யோக்யதையில்லாவிடில், உகந்தருளின நிலங்களிலே அமுதுபடி, சாத்துப்படி முதலானவற்றையுண்டாக்கி நடத்திக்கொண்டுபோருகை; அதற்கும் யோக்யதையில்லையாகில் திருநாராயணபுரத்திலே ஒருகுடில் கட்டிக்கொண்டிருக்கை; அதற்கும் யோக்யதையில்லையாகில், த்வயத்தை அர்த்தாநுஸந்தாநம் பண்ணிப்போருகை; அதற்கும் யோக்யதையில்லையாகில், என்னுடையவனென்று அபிமாநிப்பான் யாவனொரு பரமபாகவதன், அவனுடைய அபிமாநத்திலே ஒதுங்கிப்போருகையென்றும்;—இவற்

ஜின் ப்ரிய ப்ரியதர ப்ரியதமங்கள் இன்னதென்றும்; ப்ராப்தி ப்ரதிபந்தகமான பகவத்பாகவத ஆசார்யவிஷயங்களில், * அபசாரத்தை வருந்தியும் பரிஹரித்துப் போருங்கோளென்றும்; இவை முதலானவைகளாயுள்ள அநேக ஹிதங்களை ப்ரஸாதித்தருளினார்.

எம்பெருமானார்; கோயிலண்ணனதுக் கொத்தையும் அழைப்பித்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு வேண்டிக்கொள்ள; அவர்களும் தேவரீருக்கு ஒரு அபராதமுண்டோ, * உலகங்கட்கெல்லா மோருயிரான தேவரீரை யிழந்து எங்ஙனே தரிப்போமென்று கண்பனிசோரா நிற்க, * அப்பொழுது தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளு மணியரங்கரிருக்க உங்களுக்கொரு தாழ்வில்லை, நம்பெருமாள் கைங்கர்யத்தைக் குறைவற நடத்திக்கொண்டு, ஸ்ரீவைஷ்ணவர்களையும் அரவணைத்துக் கொண்டு போருங்கோளென்றருளிச்செய்து, கோயிலுக்கு நேரே எம்பார் திருமடியிலே திருமுடியும் வடுகநம்பி திருமடியிலே திருவடிகளுமாகக் கண்வளர்ந்தருள;

ஸ்ரீபாதத்து முதலிகள் ப்ரஹ்மவல்லி, ப்ருகுவல்லி, சூழ்விசும்பணி முகில்முதலானவற்றை ஸேவித்தருள சிரஸ்கபாலம்பேதித்து ப்ரஹ்மரந்த்ரத்தாலே உடையவர் திருநாட்டுக்கெழுந்தருள; கந்தாடையாண்டான், அருளாளப்பெருமா ளெம்பெருமானார், எம்பார், வடுகநம்பி முதலான முதலிகளெல்லாரும், கோஷித்துக்கொண்டு வேரற்ற மரம் போலே விழுந்து கிடந்து துடித்து, நீட்டுறத்தழுத்தழுப்ப திருமூக்கு வெப்படிக்க அவசராய்க்கிடந்து, இட்டகால் இட்டகைகளாய்ச் சிந்தித்துத்திகைத்து, * இணைமலர்க் கண்ணீர்ததும்பத் தாராவர்ஷமாகத் திருமுத்துதிர்த்து ப்ரலாபித்து, ([illegible],)([illegible]) (த்ரிலப்தா,)(தர்மோநஷ்ட) என்கிறபடியே யாவதே! [illegible] விஷண்ணராயிருக்க; அவ்வளவிலே பெருமாள் உடுத்துக்களைந்த பீதகவாடை, சூடிக்களைந்த * துழாய்மலர், என்னென்னவெல்லாம் பொற்றளிகையிலே உத்தமநம்பி தரித்துக்கொண்டு, ஸகலவாத்யத்துடனே மடத்துவாசலிலே செல்ல; அதுகண்டு, முதலிகளெல்லாரும் தேறிநின்று, இனிச் செய்யவேண்டும் கர்த்யத்தைச் செய்யவேணுமென்று, எம்பெருமானாருடைய விமலசரம விக்ரஹத்தை, தூயதாக நீராட்டப்பண்ணிவைத்து, அலங்கரித்து, கேசவாதி த்வாதசோர்த்வ புண்ட்ரங்களையும் சாத்தி, பெருமாள்சாத்திக்களைந்து வரவிட்ட * பெருமானரையில் பீதகவண்ணவாடை கொண்டு திருமுடியிலே சாத்தி, அவன் மார்வணிந்த வனமாலையும் சாத்தி அலங்கரித்து, உடையவர் திருவடிகளை, தங்கள்கண்ணிலும் மார்பிலும் நெஞ்சிலும் ஒற்றிக்கொண்டு, * ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுக்களாய், ஐயோ! கண்ணபிரான் * முறையோ அரவணைமேல் பள்ளிகொண்ட முகில்வண்ணனே!'' என்று கையெடுத்துப்பெருமிடறுசெய்து கூப்பிட்டு, மூர்ச்சித்துக்கிடக்க; அருகிருந்த முதலிகள்வந்து எடுத்துத்தேற்றத் தேறிநின்று; உடையவர்க்கு, சாத்திக்களைந்த தி

சேஷமாயிருந்துள்ள எண்ணெய், சுண்ணம், திருமண், ஸ்ரீசூர்ணங்களை எல்லாரும் ப்ரஸாதப்பட்டு, தீர்த்தங்கொண்டு, திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருக்கையாலே, ஆளவந்தாரைப்போலே, உடையவர்க்கு ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்து, பிடாரமான திவ்யவிமானத்திலே யேறியருளப்பண்ணி, ஸகலவாத்யங்களும் முழங்க, பெருமாள் பரிகரமடைய, சத்ர சாமர தாலவ்ருந்தாதிகளை தரித்து ஸேவிக்க; திருவீதியெங்கும் கோடித்து பொரியும்புஷ்பமும் சிந்த, தர்ஸநத்தில் எம்பெருமானார் திருநாட்டுக்கெழுந்தருளினார் என்று ஒற்றைத்திருச்சின்னம் பணிமாற, திருவீதிகள்தோறும் எழுந்தருளுவித்துக்கொண்டுபோய் யதிஸம்ஸ்காரவிதிப்படிச்செய்து திருப்பள்ளிபடுத்து, பெருமாள் அவப்ருதங்கொண்டாடுமாப்போலே தீர்த்தம் கொண்டாடி பத்துப்பன்னிரண்டுநாளும் செய்யவேண்டும் கார்யமெல்லாம் செய்து பெருக்கத் திருவத்யயநமும் நடத்தியருளினார்கள். ஸம்ஸார ஸ்திதயருசியிலேவதாரமும், ததநுகுணமான பகவத்ஸஹவாஸமதிநிஸ்சயமும், சரமகாலத்தளவும் ஸ்வாபிமாநாந்தர்ப்பூதராயிருக்குமவர்களுக்கு உபகாராநுகுணமாக வார்த்தையிலே விஷயப்ரதேசமும் பரிஹாரநியமாதி விசேஷோபதேசமும், சரமகாலத்திலே ஸ்வாபிமத சரமாதிகாரிஸ்பர்ஸ விசேஷமும், திருமுடியைப்பற்றி பூர்வாசார்யர்கள் விளங்க திருவடிகளைப்பற்றி அபராசார்யர்கள் விளங்க பூர்வாபராசார்ய ஸம்பந்த நாயக ரத்நத்வமும் உடையவர்க்கே யுள்ளவென்றதாயிற்று. இத்தால்-ஸ்ரீராமக்ருஷ்ண சரிதங்கள்போலே ஸ்ரீராமாநுஜாசார்யசரித்ரமும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸதாநுஸந்தேயமென்னுமத்தாயிற்று. எம்பெருமானார் திருநக்ஷத்ரமசித்தியிலே திருவாதிரை இவரவதரித்ததிவசம்-(ஸாங்க்ருத்யோ) (யோகி த்யமச்யுத) இத்யாதி.

ப்ராப்யதேசத்திலும் ஆசார்ய சேஷத்வ முறைதவறவொண்ணாதென்னும் தவறையும், சரமத்தசையிலும் பரிணாமபர்யாண ப்ராப்யமாக ஸ்வாசார்யனத்தானே ஸ்வயமாகத்தவிடாயகெட உபதேசிக்கப்பெற்ற தன்னேற்றமும், பாகவதாபிமானமே தலத்திலும் பரமாபிமானஸ்தலமே சரமதேசமாகப்பெறலுக்குத் தனிமுறைப்பமும், சரமாதிகாரபரவிசேஷமும், ஆழ்வானபக்கலிலே அநுஷ்டாந சேஷமாகக் கண்டதிறே. முதலியாண்டான் திருநக்ஷத்ரமசித்தியிலே- ள-புநர்வஸு, அவதரித்ததிவசம்-(పాదుకే యతిరాజస్య కథయన్తి యదాఖ్యయా। తస్య దాశరథేః పాదౌ శిరసా ధారయామ్యహం) (பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா - தஸ்ய தாஸரதேঃ பாதௌ ஸிரஸா தாரயாம்யஹம்) (అజహద్భాగినేయత్వం పాదుకాత్వం తథైవ చ। సంప్రాప్తో యతిరాజస్య గుణైస్తత్పరీక్షితైర్హేతుభిః) (அஜஹத்பாகிநேயத்வம் பாதுகாத்வம் ததைவ ச - ஸம்ப்ராப்தோ யதிராஜஸ்ய குணைஸ்தத்பரீக்ஷிதைர்ஹேதுபிঃ) (శ్రీవైష్ణవానాం దాసత్వస్వామిత్వప్రథితాహ్వయం। వాధూలకులధౌరేయం వన్దే దాశరథిం గురుమ్) (ஸ்ரீவைஷ்ணவாநாம் தாஸத்வ ஸ்வாமித்வ ப்ரதிதாஹ்வயம் - வாதூலகுலதௌரேயம் வந்தே தாசரதிம் குரும்.)

திருக்குருகைப்பிரான்பிள்ளான் தனியன், (యతిపర్యాప్తకలశ్యాత్ యతిరాజాభిసన్ధిమాన్। కుశలందిశతాంమహ్యం కురుకేశ్వరదేశికః) (யதிபர்யாப்தகலஶ்யாதோ யதிராஜாப்திசந்தமா: - குஶலம்திஶதாம்மஹ்யம் குருகேஶ்வர தேஶிக:) (విఖ్యాతో యతిసార్వభౌమ జలధేశ్చన్ద్రోపమత్వేనయః శ్రీభాష్యేచయదన్వయాస్సువిదితాః శ్రీవిష్ణుచిత్తాదయః। వ్యాఖ్యాంభాష్యకృదాజ్ఞయోపనిషదాంయో ద్రామిడీనాం వ్యధాత్పూర్వం తంకురుకేశ్వరంగురువరంకారుణ్యపూర్ణంభజే) (விக்யாதோ யதிஸார்வபௌமஜலதேஶ்சந்த்ரோபமத்வேநய: ஸ்ரீபாஷ்யேசயதந்வயாத்ஸுவிதிஸ்ஸ்ரீவிஷ்ணுசித்தாதய: - வ்யாக்யாம்பாஷ்ய க்ருதாஜ்ஞயோபநிஷதாம் யோத்ராமிடாநாம் வ்யதாத பூர்வம் தம்குருகேஶ்வரம்குருவரம் காருண்யபூர்ணம் பஜே).

கிடாம்பியாச்சான் தனியன் - (రామానుజపదామ్భోజ యుగళంయస్యధీమతః। ప్రాప్యంచప్రాపకం వన్దే ప్రణతార్తిహరంగురుం) (ராமாநுஜபதாம்போஜ யுகளீயஸ்ய தீமத: - ப்ராப்யம்சப்ராபகம்வந்தே ப்ரணதார்த்திஹரம்குரும்) (ఆస్తికానాం వన్దే పరిత్రాతుం మనాగపి। యాచితం కురుకేశేన ప్రణతార్తిహరంగురుం) (ஆஸ்திககரேஸாம்வந்தே பரிவாராட்குருபாசகம - யாசிதம்குருகேஶேந ப்ரணதார்த்திஹரம்குரும்) (శ్రీభాష్యం దర్శయిత్వా యతిపతిరచితం శారదాయై నివృత్తో నత్వా శ్రీవేఙ్కటేశం పథిసహ సదత్తం తాతయోపి ప్రశస్తః। ఆఖ్యాం వేదోత్తమాఙ్గోదయనఇతిదధ్యాద్వ్యకారే తద్భాష్యకారేణ తాతాచార్యం విష్ణుం రామానుజమనుదినం సాదరం తం నమామి) (ஸ்ரீபாஷ்யம்தர்ஶயித்வா யதிபதிரசிதம்ஸாரதாயைநிவ்ருத்தோநத்வாஸ்ரீவேங்கடேஶம்பதிபாமபதம்தத்தவாந்தேகோபிராஜை - ஆங்யாம்வேதாந்தமாங்கோ தயநஇதித தபாஷ்யகாரேண தத்தாமாதரேயாசார்யவிஷ்ணோ ராமாநுஜமநுதிநம்ஸாதரம்தம்நமாமி)

எங்களாழ்வான் தனியன் - (శ్రీవిష్ణుచిత్త పదపఙ్కజసంశ్రయాయ చేతోమమస్పృహయతే కిమతఃపరేణ। నోచేన్మమాపి యతిశేఖరభారతీనాం భావఃకథంభవితుమర్హతివాగ్విధేయః) (ஸ்ரீவிஷ்ணுசித்தபதபங்கஜஸம்ஶ்ரயாய சேதோமமஸ்ப்ருஹயதே கிமத பரேண - நோசேந்மமாபி யதிஶேகரபாரதீநாம் பாவகதம்பவிதுமர்ஹதி வாகவிதேய:) நடாதூராழ்வான் தனியன் - (యస్మిన్పదంయతివరస్య ముఖాత్ప్రణేతుం నిష్కామదేవనిదధే సకలార్థభాష్యం। తస్యైవతంభగవతఃప్రియభాగినేయం వన్దే గురుంవరదవిష్ణుపదాభిధానం) (யஸ்மிந்பதம்யதிவரஸ்ய முகாத்ப்ரணேதும் நிஷ்காமதேவநிததேநிகமாம்தபாஷ்யம- தஸ்யைவதம்பகவத ப்ரியபாகிநேயம் வந்தேகுரும்வரதவிஷ்ணு பதாபிதாநம்) (జ్ఞానోత్తమోద్ధతనిరాకరణప్రభుష్య ద్రామానుజార్యకరుణాపరిణాహపాత్రం। వత్సాన్వవాయతిలకం వసతింగుణానాంవన్దామహే వరదవిష్ణుగురుంవరేణ్యం) (ஜ்ஞாநோத்தமோத்ததிநிராகரணப்ரது ஷ்யத்ராமாநுஜார்யகருணாபரிணாஹபாத்ரம்- வத்ஸாந்வவாயதிலகம் வஸதிம்குணாம்வந்தாமஹே வரதவிஷ்ணு குரும்வரேண்யம்.) சோமாசியாண்டான் தனியன்- (నౌమిలక్ష్మణయోగీన్ద్ర పాదసేవైకధారకం। శ్రీరామంక్రతునాథార్యం శ్రీభాష్యామృతసాగరం) (நௌமிலக்ஷ்மணயோகீந்த்ர பாதஸேவைகதாரகம்-ஸ்ரீராமம்க்ரதுநாதார்யம் ஸ்ரீபாஷ்யாம்ர்தஸாகரம்.)

நடுவிலாழ்வான் தனியன், (యేనప్రోత్కలితే నిత్యం గార్గ్యవంశమహాంబుధిః। మన్మహే తం సదా చిత్తే మధ్యమార్యకలానిధిం) (யேநப்ரோத்கலிதேநித்யம் கார்க்யவம்ஶமஹாம்புதிः - மந்மஹே தம்ஸதாசித்தே மத்யமார்யகலாநிதிம்.) அருளாளப்பெருமா ளெம்பெருமானார்தனியன் - (దయాపాలనదేవాయ జ్ఞానసారప్రదాయచ। ప్రమేయసారం దదతే నమోస్తు ప్రేమశాలినే) (தயாபாலநதேவாய ஜ்ஞாநஸாரப்ரதாயச - ப்ரமேயஸாரம்தததே நமோஸ்துப்ரேமஶாலிநே) (యతిరాజదయాపాత్రం యతిపఙ్క్తివిభూషణం। దయాపాలమునిం వన్దే దేశికాగ్రేసరం సదా) (யதிராஜதயாபாத்ரம் யதிபங்க்திவிபூஷணம் - தயாபாலமுநிம்வந்தே தேஶிகாக்ரேஸரம்ஸதா) அநந்தாழ்வான் திருநக்ஷத்ரம் சித்திரையில் சித்திரை. அவர் தனியன் - (అఖిలాత్మగుణావాసమజ్ఞానతిమిరాపహం। ఆశ్రితానాం సుశరణం వన్దే అనన్తార్యదేశికం) (அகிலாத்மகுணாவாஸமஜ்ஞாநதிமிராபஹம் - ஆஶ்ரிதாநாம்ஸுஶரணம்வந்தே அநந்தார்யதேஶிகம்) (శ్రీమద్రామానుజాచార్య శ్రీపాదామ్భోరుహద్వయం। సదుత్తమాఙ్గసన్ధార్యం అనన్తార్యమహం భజే) (ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய ஸ்ரீபாதாம்போருஹத்வயம் - ஸதுத்தமாங்கஸந்தார்யமநந்தார்யமஹம்பஜே) (యతీన్ద్రపాదామ్బుజచఞ్చరీకం శ్రీమద్దయాపాలదయైకపాత్రం। శ్రీవేఙ్కటేశాఙ్ఘ్రియుగాన్తరఙ్గం నమామ్యనన్తార్యమనన్తకాన్తం) (யதீந்த்ரபாதாம்புஜ சஞ்சரீகம்ஸ்ரீமத்தயாபாலதயைகபாத்ரம் - ஸ்ரீவேங்கடேஶாங்க்ரியுகாந்தரங்கம் நமாம்யநந்தார்யமநந்தகாந்தம்.)

எச்சான் தனியன் - (యేన వైష్ణవదేహళ్యాం పాయన్తం పరమాత్మనః। శేషత్వమాత్మనో జ్ఞేయం యజ్ఞేశంతముపాస్మహే) (யேநவைஷ்ணவதேஹல்யாம் பாயந்தம்பரமாத்மநः - ஶேஷத்வமாத்மநோஜ்ஞேயம் யஜ்ஞேஶந்தமுபாஸ்மஹே) வடுகநம்பி தனியன் - (రామానుజార్యచరణప్రవణం పరదేవవత్। వటుపూర్ణమహం వన్దే జ్ఞానపయోనిధిం) (ராமாநுஜார்யசரண ப்ரவணம்பரதேவவத் - வடுபூர்ணமஹம்வந்தே பரஜ்ஞாநபயோநிதிம.) எழுபத்துநாலு ஆசார்யர்களுக்கும் சமுதாயத்தனியன் - (రామానుజార్యాచ్ఛ్రుతిమౌళిభాష్య మర్థం రహస్యం ద్రమిడశ్రుతీనాం। సంప్రాప్య తేనైవ గురూకృతాంస్తాన్ భజే చతుస్సప్తతిపీఠసంస్థాన్) (ராமாநுஜார்யாச்ச்ருதிமௌளிபாஷ்யம் அர்த்தம்ரஹஸ்யம்த்ரமிடஶ்ருதீநாம் - ஸம்ப்ராப்யதேநைவகுருக்ருதாம்ஸ்தாந் பஜே சதுஸ்ஸப்ததிபீடஸம்ஸ்தாந.) மாருதிச்சிறியாண்டான், தம்முடைய அந்திமதசையிலே பணித்தவார்த்தை:—திருவேங்கடமுடையான், தன்ஸ்வரூபத்தை மறந்து என்ஸ்வரூபத்தை நினைத்தானாகில் பழையநரகங்களொழிய வேறே எனக்கென்று சிலநரகங்களை ஸ்ர்ஷ்டிக்கவேணும்; அன்றிக்கே, என் ஸ்வரூபத்தை மறந்து தன்ஸ்வரூபத்தை உணர்ந்தானாகில், பழையதிருநாடுபோராது, எனக்கென்று வேறேயொரு திருநாடு ஸ்ருஷ்டிக்கவேணுமிறே. அதாவது - ஸ்வகர்தோஷஸ்மரணம் அநந்தது:கப்ரதாநஹேது; ஈஶ்வரவாத்ஸல்யஸ்மரணம் அநந்தாஶ்சர்ய ஸுகப்ரதாநஹேதுவென்றபடி. மாருதிச்சிறியாண்டான்தனியன் - (జ్ఞాతుం కూరకులాధిపం క్రమిగ శాస్త్రప్రపదం ప్రేషితః శ్రీరామావరజేన నోసల పత్రద్వయ స్వాతదీయాం స్థితిం। సంప్రాప్తస్య

నయాంప్ర రా న్ర్ ప్రాత్న ల్యాణవాపీతటే సోసామారుతిరిత్య శంసతవయం తస్మైనమస్కుర్మ్మహే)

(ஜ்ஞாதும்கூரகுலாதிபம் க்ரிமிகளாத்ப்ராப்தாபதம்ப்ரோஷித: ஸ்ரீரா மாவரஜேஜந்ர்கோஸலபதிம் த்ராஷ்ட்வாததீயாம்ஸ்திதிம் - ஸம்ப்ராப்த ஸ்த்வரயாபுராம்தநபுராத்கலயாணவாபீதடே யோஸௌமாருதிரித்ய ஸம்ஸதவயம்தஸ்மைநமஸ்குர்மஹே.)

பிள்ளையுறங்காவில்லிதாஸர் தம்முடைய அந்திமதசையிலே முதலிக ளெல்லாரையும் அழைப்பித்து தீர்த்தங்கொண்டு, க்ஷமைகொண்டு, பொன்னாச்சியாரையழைத்து, "நம்முடைய விஸ்லேஷத்தில் நீபிழை த்திருக்கில் கெட்டாய்" என்று ஆஜ்ஞையிட்டு, உடையவர் திருவடிநிலைகளைத் தம்முடியிலே வைத்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினர். அநந் தரம், பொன்னாச்சியாரும், கலேசியாமலிருந்து, திருவாசலைத்திருவல கிட்டுத்தெளிந்தெளித்து திருப்பிண்டியிட்டு திருக்காவணமிடுவித்து நிற்க; ஸ்ரீவைஷ்ணவர்கள், உடையவரோடும் துறையிலே திருமஞ்சந மெடுத்துக்கொண்டுவந்து, தீயாது ஸந்தானத்துடனே நீராட்டி, திருநாமம் திருச்சூர்ணம் முதலான அலங்காரங்களெல்லாம் செய் து, பெருமாள் சாத்தியருளிவந்து வரவிட்டருளின திருமாலையும் திருப் பரிவட்டமும் சாத்தியலங்கரித்து, தாமும் ஸர்வாபரணபூஷிதையாய் கஸ்தூரிநாமமும் பட்டுமுடுத்தினாள், ஸ்ரீவைஷ்ணவர்களைத் தீர்த்தங் கொண்டு, சுனைப்பற்று தூத்து, திருமாளிகையிலுள்ள த்ரவ்யங்களட ங்கலும் ஸமர்ப்பிக்க, கருப்பூரமுமேந்தித்து நூற்றந்தாதி இயலாக அநு ஸந்தித்துவர, பின்பு திருச்சூர்ணமிடித்து எல்லாரும் எண்ணெய்சுண் ணம் கொண்டபோது, பிள்ளையுறங்காவில்லிதாஸருடைய விமலசரம விக்ர ஹத்தைத் தீவய்யிமானத்திலேயெழுந்தருளப்பண்ணிவைத்துக்கொண்டு, ஏகாந்தியாய ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றுமுள்ள முதலிகளும் மாறிமா றி ஸ்ரீபாதந்தாங்க, அந்தக்கருஞ்சுவிமானமும் தூரமறைந்தவளவிலே, பொன்னாச்சியாரும் சோகாபத்தையாய், "மாரிமாககடல் வளைவணர்க் கிளையவன் வரைபுரைத் திருமார்வில, தாரிறைசையில் போயின நெஞ்ச மும் தாழ்ந்தது நான்லன்காணேன், ஊரும் துஞ்சிற்றுலகமும் துயின் றது ஒளியவன்விசும்பியங்கும், தேருமபோயிற்றுத் திசைகளும் ம றைந்தனசெய்வதொன்றறியேனே" என்றுகையெடுத்துக் கூப்பிட்டு, அழுதுகொண்டிருந்து, பாகவதவிஸ்லேஷா உஸஹிஷ்ணுவாய் மூர்ச்சித்துக்கிடந்து, அப்போதே அங்கே திருநாட்டுக்கெழுந்தருள; முதலிகளும் அங்கே அவருக்குத் திருச்சூர்ணமிடித்து, பிள்ளையுறங்கா வில்லிதாஸருடன் திருப்பள்ளிபடுத்தார்களென்பர்கள். இவருக்கு ததீய விஸ்லேஷத்தில் அப்போதே ஶரீரவிஸ்லேஷம் வரும்படியான ததீய ப்ரேமம் முற்றிவளர்ந்தபடியிறேயிது. இவர் தனியன் - (జాగరూకత్వ ష్పాణిం పాణౌఖడ్గసమన్వితం। రామానుజస్పృశ్యవేధి మాశ్రితార్థప్రకాశకం॥ భాగినేయద్వయ యుతం భావ్యకారభరంవహం। రఙ్గేశమఙ్గళకరం ధనుర్దాసమహంభజే) (ஜாகரூகத்வஞ் பாணிம்பாணௌகட்கஸமந்விதம் - ராமாநுஜஸ்பர்ஶவேதிமாஶ்ரித

ித்தப்ரகாஸகம்- பாகிநேயத்வயபுதஂபாஷ்யகாரபரஂவ்ஹம் - ரங்கேஸ மங்களக்ர்தஂ தநூர்த்தாஸமஹஂபஜே),

நம்பிதிருவழுதிவளநாடுதாஸர், திருநாட்டுக்கெழுந்தருளுகிற ஸமயத்திலே, தம் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அழ,அதற்கு நம்பி, கெடுவாய்! செத்துப்போகிற நான் போகாநின்றேன், ஸ்ரீபராசரபட்டர் வாசிக்கக் கேட்கவிருக்கிற நீ ஏன் அழுகிறாய் என்றருளிச்செய்தாரிறே.

பிள்ளைதிருவழுதிவளநாட்டரையர், தம்அந்திமதசையிலேக்லேசிக்க, சுற்றிலுமிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம முகம்பார்த்திருக்க, அவரும்இவர்களுடையஅபிப்ராயத்தைத் தமதிருவுள்ளத்திலேகொண்டருளி,வாரீர்கோள்முதலிகாள்! ஸஂஸாரிகளிழவுக்கு நொந்தோமாக காணுங்கோள்; அவர்களுக்கும் நமக்கும் அல்பமாயததுவாசியுள்ளது: எங்ஙனேயென்னில்-நாம்இடுவது ஒருதண்டம, பண்ணுவது ஒருப்ரபத்தி,இழப்பது ஒருதேஹயமான ஸஂஸாரம, பெறுவது ஒருவிலக்ஷணமான பரமபதம்,இத்தையறியாதே அதபபதிக்கிறார்களே! என்றுக்லேசமாய்த்ததுக்காணுங்கோளென்ன; முதலிகளும சந்தாபத்தாரானார்கள். அதாவது-பாதுக்காஉஸஹிஷ்ணுத்வமும்,பரஸமர்தனைப்ரயோஜநத்வமும ஸ்ரீவைஷ்ணவனுக்கு உண்டாகவேணுமென்று கருத்து.

ஜீயர்திருவடிகளேசரணம.

எம்பார்ப்ரபாவம்.

எம்பார், உடையவர் திருநாட்டுக்கெழுந்தருளும்போது அவர் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு, நாயந்தே! பெரியதிருமலைநம்பி; சுக்திகையிலேரஜதபுத்திபண்ணுவாரைப்போலே அபரமாத்மவிஷயே பரமாத்மபுத்தி பண்ணி விபரீதஜ்ஞாநநிஷ்டனாய காளஹஸ்தியாகிற கடுங்காட்டிலேயிருந்த என்னை, * போதரேயென்றுசொல்லிப்புந்தியில்புகுந்து தன்பாலாதரம் பெருகுமபடிதிருத்தி, மாயப்பற்றறுத்து, அடியேனுடைய துர்வாஸநாச்சேதத்தைப்பண்ணியருளி, * பொருளல்லாத வென்னைப்பொருளாக்கி யடிமைகொண்டருளி, "தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய முற்றுமாய" என்கிறபடியே ஸர்வவிதபந்துவும் த்ர்ஷ்டாத்ர்ஷ்டங்களிரண்டும் தேவரீர்திருவடிகளென்று காட்டிக்கொடுத்தருளினார், நம்பிதிருவடிகளை யகன்ற இழவெல்லாந்தீர ஸர்வவிதோத்தாரகபந்துவாய்நிற்கிற தேவரீர் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்றத்யவஸித்திருக்கிறேன், (నచసీతాత్వయాహీనా నచాహమపిరాఘవ। ముహూర్తమపిజీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ) (நசஸீதாத்வயாஹீநாநசாஹமபிராகவ - முஹூர்த்தமபிஜீவாவோஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ) என்கிறபடியே என்னுயிர்நிலை

யான தேவரீர்திருவடிகளை அகன்று ஒருக்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டேன், தேஹிவிட்டுப்போனால் தேஹம் நிற்குமோ, "நிழலுமடிதாறுமானோம்" என்கிறபடியே ஸ்ரீபாதச்சாயாபந்நனான அடியேன் எங்ஙனே தரித்திருப்பேன்! என்று திருவடிகளிலேபோர ஆர்த்தியோடே விழுந்து எழுந்திராமல்கிடக்க; உடையவரும் எம்பாரைக் குளிரநோக்கியருளி, நாம நம்பிதிருக்கையாலே உம்மை உதகபூர்வகமாக பரிக்ரஹித்த பின்பு நமக்கு உம்மைப்பிரியக்கூடுமோ; நம்முடையவைகுண்டநாதனும் அப்படியே செய்தருளுகிறான், பதறாதே கொள்ளுமென்று எம்பாரை வாரியெடுத்தணைத்துக்கொண்டு, தமபொன்னனங்கழற்றமைப்பூக்களாலே அவர்திருமுடியை அலங்கரித்தருளி, திருநாட்டுக்கு எழுந்தருள; எம்பாரும தாயைப்பிரிந்தஸ்தநந்தயப்ரஜையைப்போலே சிதிலாந்தக்கரணராய, பெரியஆர்த்தியோடே உடையவர் ப்ரஸாதித்தருளின ஆத்தவிசேஷங்களை பட்டர்முதலான முதலிகளுக்கு ப்ரஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிராநிற்க; ஒருநாளாக உடையவர்திருவடிகளைத் திருவுள்ளத்தே * நினைந்துநைந்துள்கரைந்துருகி, * தாய்நாடுகன்றுபோலே எப்போது காணப்பெறுவேனென்று த்வரைவிஞ்சி, ஆசார்யவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாமல "அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா" என்கிறபடியே உடையவரையகன்று இருக்கமாட்டாத ஆற்றாமை கரைபுரண்டு, பெரியபெருமாள்ஸந்நிதியிற்சென்று, நாயனே! அடியேன உடையவர் திருவடிகளேறப்போக நினையாநின்றேன், தேவரீர் விடைஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் அப்படியேசெய்யுமென்று திருவுள்ளமபற்றியருளி, எம்பாருக்கு தீர்த்தப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும இரங்கிப்ரஸாதித்தருள; இவரும, "திருப்பொலிந்தசேவடி யென்சென்னியின்மேல் பொறித்தாய" என்று அங்கீகரித்தருளி, * அமலனாதிபிரானிலபடியே பாதாதிகேசாந்தமாக அநுபவித்தருளி, "என்னமுதினைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்றுகொண்டு, * அணியார்பொழில்சூழரங்கநகரப்பனைத் தமகண்ணுள்ளும் நெஞ்சுளளும் நீங்காதபடியாக நிறைத்துக்கொண்டு புறப்பட்டருளி உடையவர்மடத்தேற வெழுந்தருளி, (యోనిత్యం) (யோநித்யம்) என்றுதொடங்கி, (రామానుజస్యచరణౌశరణం ప్రపద్యే) (ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம்ப்ரபத்யே) என்று அநுஸந்தித்துக்கொண்டு தண்டன்ஸமர்ப்பித்து மடமே யெழுந்தருளி, தம்திருவாராதநமான அரங்கநகரப்பனைத் திருவடிவிளக்கி, பட்டரையழைத்தருளி, வாரீர்பட்டரே! நாம் ஆழ்வான்குமாரர், அகிலசாஸ்த்ரங்களையும் அதிகரித்தோம், நம்பெருமாள் நம்மை புத்ரஸ்வீகாரம் பண்ணியருளினாரென்னும் மேன்மைகளைநினைத்து இறுமாந்திராதே, நம்மாரை "எம்பெருமானார்திருவடிகளே உபாயோபேயம் என்று அத்யவஸித்திரும்" என்று அருளிச்செய்து; கணியனூர்சிறியாச்சான், சட்டம்பள்ளி ஜீயர், ஈச்சம்பாடிஜீயர்முதலானார்க்கும் மற்றுமுள்ள முதலிகளுக்கும்

உடையவர் ப்ரஸாதித்தருளின அர்த்தவிசேஷங்களையும் ப்ரஸாதித்துக் கொண்டு தர்ஶநம் நிர்வஹித்து வாழ்ந்தருளவேணுமென்று மங்களா சாஸநம் செய்தருளி அவர்களை பட்டர்திருக்கையிலேகாட்டிக்கொடுத் தருளி, ஸர்வாபராதங்களையும்பொறுத்தருளவேணுமென்று தண்டன ஸமர்ப்பித்து, பட்டர்முதலான முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமு துசெய்யப்பண்ணி,* அரங்கத்துறையுமின்துணைவனை வழித்துணையாக நினைத்துக்கொண்டு, உடையவர்திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திரு நாட்டுக்கெழுந்தருளினார். பட்டரும் ஆசார்யவிஶ்லேஷம் பொறுக்க மாட்டாமல் மிகவும்சோகார்த்தராய் கலேசிக்க; அங்கிருந்தமுதலிக ளும், வாரீர்பட்டரே! தேவரீர் இப்படி க்லேசிக்கலாமோவென்று தேற் றவிட, பட்டரும் தமமிலேதெளிந்துகொண்டிருக்கிறவளவிலே; பெருமாள்சாத்திக்களைந்த திருமாலை திருப்பரிவட்டம் முதலான வற்றையுங்கொண்டு அனைத்துக்கொத்திலவர்களுமவர, சிறியகோவிந் தப்பெருமாள் திருக்கையாலே ப்ரஹ்மமேதவிதியடக்கசசெய்வித்து, எம்பாருடைய விமலசரமவிக்ரஹத்தை பீடயாநத்திலே யெழுந்த ருளுவித்துக்கொண்டுபோய, யதிஸம்ஸ்கார விதயுக்தப்ரகாரேண ஸம்ஸ் கரித்துக் கநிதுப பளளிபடுத்து, அவப்ர்தங்கொண்டாடி, பெருக்கத் திருவத்யயநமும நடத்தியருளினார்கள. ஆசார்யகைங்கர்யமே பரமப்ர யோஜநமாய்த தன்னைப பெறுமையும, ஆசார்யவிஷயத்திலே சரயவிக ரயார்ஹராய ஸ்வவ்யாபாரமற் றிருந்தபடியும, ஆசார்யஸந்நிதியில சாயாவத பாரதந்த்ர்யமும, ஆசார்யனையன்றி தரியாத ஸ்வபாவ மும் இவர்க்கேயுள்ளதொன்றிறே. இவர் தனியன் - (రామానుజపదచ్ఛాయా గోవిన్దాహ్వానపాయినీ। త దాయత్తస్వరూపా సా జీయాన్మద్విశ్రమస్థలీ) (ராமாநுஜபதச் சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ - ததாயத்தஸ்வரூபாஸா ஜீயாந்மத் விஶ்ரமஸ்தலீ) (எம்பார்மலர்க்கண்ணனைத் தாமரையடியார் பாதாரவிந்தம், அம் பாலிடரொன்றில்லை ஒருகாலும் மரணமயர்க்குத், தம்பாலுண்டு ஸ்வாமி காந்தமிலலையென்று தாமுரைத்த, எம்பாரடிசரணே எம்பாரடி சரணங் களுக்கே.) (భట్టార్యాయ ప్రపత్తిం వ్యపదిశతివరం ద్రావిడామ్నాయవక్తా శ్రీభాష్య వ్యాసపీఠం యతివరా ... రహస్యా... । య ... ... న్యాయనా మార్యవర్య స్తం గోవిన్దార్యమస్మత్కుల ... జ్ఞాన వైరాగ్య ...) (பட்டார்யாயபர பத்திம்வ்ய பதிஶதிவரம் த்ராவிடாம்நாயமௌலோரதஸ்ம ஸ்ரீபாஷ்ய மந்யாநபிசயதிவரா தேஶதோங்யாந்ரஹஸ்யாந் - யஶ்சோக்தோதேஶி கேந்த்ரோ யதிபதிசரணச்சாயநாமார்யவர்ய ஸ்தம்கோவிந்தார்யமஸ் மத்குலகுமமித ஜ்ஞாநவைராகயமீடே) (హ్యాదినారాయణం పశ్యన్నాభ్యగచ్ఛ ద్రహస్సదా। యస్స్వదారరతౌ చాపి గోవిన్దం తముపాస్మహే) (ஹ்ருதிநாராயணம்பஶ்யந் நாப்யகச்சத்ரஹஸ்ஸதா - யஸ்ஸ்வதாரரதௌசாபி கோவிந்தம்தமுபா ஸ்மஹே.)

ஆழ்வார்களுக்கும் உடையவருக்கும் தீர்த்ததிவஸம் சொல்லா தொழிந்தது - அத்யாபி அகிலாத்மோத்தாரணார்த்தமாக அர்ச்சாவிக்ர

ஹங்களை அங்கீகரித்து இங்கே யெழுந்தருளியிருக்கிறார்களாகையாலே. அவர்கள் இங்கிலும் கால்வாங்கிப்போகில் ஆத்மசோதிகளுக்கு ஈடேற வழியில்லையிறே. இதனைத் தினைத்திறே - நம்பூர்வாசார்யர்கள் தீர்த்தங் கொண்டாடித் திதிபரிபாலநம் பண்ணுதொழிகிறதும்.= (శ్లో) యామునే మహా పురే ... హస్త్యద్రిమధ్యాశ్రమః శ్రీరఙ్గశ్రియమేత్య శిష్యమహితో వేదాన్తభాష్యంవదన్। దీప్రో దిగ్విజయం ... శ్రియం భూధరే యతివరస్సర్వత్ర మానంభజే) (ஆர்த்ராயா முதிதோ மஹா புரிகதோ ஹஸ்த்யத்ரிமாத்தா ஶ்ரமஶ் ஸ்ரீரங்கஸ்ரியமேத்ய ஶிஷ்யமஹிதோ வேதாந்தபாஷ்யம்வதந் தீப்ரோ திக்விஜயம் விதாய ஸஹஸா விபஶ்சார்த்த விபஶ்சாஶதா பாதிஸ்ரீ யதுபூதரே யதிவரஸ்ஸர்வத்ர மாநம்பஜந்) என்று * சித்திரையில் செய்ய திருவாதிரையிலே ஸ்ரீபெரும்பூதூரிலே அகிலாத்மமோத தாரணார்த்தமாக வந்தவதரித்து அகிலசாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, பெருமாள் கோயிலிலே பேரருளாளர் நியமனத்தாலே பெரியநம்பியை ஆச்ரயித்து பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்று, "மாற்பாலமனஞ்சுழிப்ப மங்கையர் தோள்கைவிட்டு" என்கிறபடியே ஸர்வஸங்கபரித்யாகபூர்வகமாக பேரருளாளர் ஸந்நிதியிலே ஆஸ்ரமப்ராப்தி பண்ணியருளி, ஸ்ரீரங்கைச்வர்யத்தைப் பெற்று, ஸ்ரீபாஷ்யமருளிச்செய்து திக்விஜயம் பண்ணி, திருவரங்கர் பரத்வத்தை நிலைநிறுத்தியருளி, புழுவனவயா மேஜ மேலநாட்டுக்கெழுந்தருளி யதிராஜனைக் கொண்டு அனேகதழகும கண்டருளப்பண்ணி, செல்வப்பிள்ளையைப் பெற்றெடுத்து வந்து ப்ரதிஷ்டிப்பித்தருளி, ஐம்பத்திருவர்களாக ஆசாரவதார விக்ரஹத்தை யங்கீகரித்து, அதிலே ஸர்வசக்தியையும் ப்ரதிஷ்டிப்பித்துக்கொண்டு அவர்களாலே ஸேவ்யமானராய் * செம்பொற்கழலடி திருவருச்செல்வப்பிள்ளையை மங்களாசாஸநஞ்செய்துகொண்டு, காலதத்வமுள்ளதனையும் கோயிலிலே ஸப்ரதிஷ்டிதராய் வாழ்ந்தருளுகிறாராய்த்து-உடையவர்.

பட்டர்வைபவம்.

அநந்தரம் பட்டர், ஸ்ரீபாதத்துமுதலிகளுடனே பெருங்கூட்டத்திருவோலக்கமாக வெழுந்தருளியிருந்து தர்ஶநம் நிர்வஹித்தருளுகிறகாலத்திலே, ஒரு தீர்த்தவாஸி ப்ராஹ்மணன் வந்து பட்டரை ஸேவித்து அவருடைய வேதாந்தோபந்யாஸ சாதுர்யத்தையும் கோஷ்ட்டியின் வைபவத்தையுங் கண்டு, பட்டரே! மேல்நாட்டிலே வேதாந்தி யென்று ஒரு பெரியவித்வானிருக்கிறான், அவனுடைய வித்யையும் கோஷ்டியும்போலே உமக்குமிருந்ததென்ன; பட்டரும் அவன்சொன்ன வார்த்தையைக் கேட்டருளி, ஆமோ, அப்படியுமொரு வித்வானுண்டோவென்ன; உண்டென்றுசொல்லி, அவன் இங்குநின்றும் புறப்பட்டு மேல்நாட்டுக்குப்போய் வேதாந்திகோஷ்ட்டியிலே சென்று, வேதாந்திகளே! உம்முடைய வித்யைக்கும் கோஷ்ட்டிக்கும் ஸத்ருஶராய் பட்

ரென்பா ரொருவர் இரண்டாற்றுக்கும் நடுவே எழுந்தருளி யிருக்கிறரென்ன ; வேதாந்திகளும் ப்ராஹ்மணனைப்பார்த்து, ஆமோ? பட்டர் நமக்கொத்தவித்யாரோவென்ன; அவனும், பட்டர் உம்மிலும் அதிகரென்ன; அவனும் அவருக்கு ஏந்தசாஸ்தரம் போருமென்ன;ப்ராஹ்மணனும்,சப்த தர்க்க பூர்வோத்தரமீமாம்ஸைதொடக்கமான ஸகல சாஸ்த்ரங்களும், பட்டருக்குப்போமென்ன, வேதாந்திகளும், இவன் சொன்னத்தைக்கேட்டு, இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும்எதிரில்லை என்று, ஷட்தர்ஸநத்திற்கும் ஆஸநமிட்டு, அதின்மேலே உயரவிருந் தோம், பட்டர் நமமிலும அதிகரென்று ப்ராஹ்மணன் சொன்ஞ னென்று அன்றுதொடங்கி வேதாந்தியும் திடுக்கிட்டிருந்தான்.

அவ்வளவிலே அந்த ப்ராஹ்மணன் அங்குநின்றும் புறப்பட்டுக் கோயிலுக்குவந்து, பட்டர்ஸந்நிதியிலேவந்து, பட்டரே! உம்முடைய வைபவமெல்லாம் வேதாந்திக்குசசொன்னேனென்ன; பட்டரும் அநத ப்ராஹ்மணனைக்குறித்து, நீ வேதாந்திகளுக்கு என்னசொன்ஞயென்ன; அவனும், பட்டருக்கு ஸப்த தர்ககஙகளும் பூர்வோத்தர மீமாம்ஸை களும் நன்ருகப்போருமெனறு வேதாந்தியுடனே சொன்னேனெ ன்ன; பட்டரும், அந்தப்ராஹ்மணனைக்குறிதது, தீர்த்தவாஸியாய், தேசங்களெங்கும் நடையாடி எல்லாருடைய வித்யாமாஹாத்மயங்க ளெல்லாம் அறிந்து நாகரிகனுயிருக்கிற நீ,நமககுப்போருமதெல்லாமறி ந்து, வேதாந்திக்குச்சொல்லாமல் கேவலம் வேதாந்தசாஸ்த்ரங்களை போருமென்று தப்பச்சொன்ஞயே யென்ன ; ப்ராஹ்மணனும், பட்ட ரைக்குறித்து, இந்தலோகததிலே நடையாடுகிற சாஸ்த்ரமொழிய உம க்கு மற்ற எதுபோருமென்று வேதாந்திக்குச் சொல்லுவதென்ன; திருநெடுந்தாண்டகம் போருமென்று வேதாந்திக்குச் சொல்லாதிருந் தாயே யென்று வெறுத்து அருளிச்செய்துவிட: அவனும பின்னையும் போய், வேதாந்தியுடனே இச்செய்தியைச்சொல்ல; வேதாந்தியும், திருநெடுந்தாண்டகமென்கிற ஸப்தத்திற்குத்தானே அர்த்தமாகிறதி ல்லை, அவர் எப்படிப்பட்ட வித்வாரோவெனறு விஸ்மயப்பட்டிருக்கச் செய்தே; பட்டரும், வேதாந்தியை, நம்முடைய தர்ஸநத்திலே அந்த ர்ப்பூதராம்படி திருத்துமென்று உடையவர் நியமித்தருளினது அவஸ் யம் கர்த்தவ்யமென்று, தம்திருவுள்ளத்திலேகொண்டு, பெருமாள்ஸந் நிதியிலேசென்று ஸேவித்துநின்று, நாயன்தே! மேல்நாட்டிலே வே தாந்தியென்ரெருரு பெரியவித்வானிருக்கிறுன், அவனைத் திருத்தி, நம் தர்ஸநப்ரவர்த்தகனும்படி பண்ணவேண்டுமென்று அங்கேறவிடைகொ ள்வதாக இராநின்றேன், தேவரீர் அவனை நன்ருகத்திருத்தி ஸ்ரீராமா நுஜஸித்தாந்தத்திற்கு நிர்வாஹகனும்படி திருவுள்ளம்பற்றியருளவே ணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், அப்படியே யாகக்கட வன், த்வரித்துப்போய்வாருமென்று திருவுள்ளமாய், தீர்த்தம், திரு மாலை, திருப்பரிவட்டத்துடனே தம் குமாரரான வாசிதோன்ற அநே

ம்திருவாபரணம், திருப்பரிவட்டம், ந்ர்த்தகீதவாத்யங்கள் முதலான, ஸகல பரிஜநபரிச்சதங்களையுமகூட்டி போமென்றுவிடைகொடுத்தருள; பட்டரும், புறப்பட்டு மேல்நாட்டிலே யெழுந்தருளி, காவேரிக்கரை யிலேசிறுப்புத்தூரண்டையிலேநின்றருள; அநந்தாழ்வான், ஆழ்வான் தம்பிரா பட்டர் எழுந்தருளினாரென்று கேட்டு, சடக்கெனப் புறப்பட்டெழுந்தருளி, திருக்காவேரிக் கரையிலே பட்டரைக்கண்டு ஸேவித்து, ஐயோ! ஸுகுமாரரான நீர், காடும் மலையுங்கடந்து இத்தனைதூரமெழுந்தருளலாமோ வென்ன; பட்டரும் திருவடிகளிலே விழுந்து ஸேவித்து, உடையவர் மேல்நாட்டிலேபோய் ஸ்ரீ[illegible]திருத்தி, மதாநுப்ரவர்த்தகராமபடி பண்ணென்றுநியமித்தருளினாரே, அப்படி [illegible]ஸாதிக்க அநுப்பியருளினாரென்று விண்ணப்பஞ்செய்ய, அநந்தாழ்வானும், * [illegible]குடிக்கரசே வாருமென்று பட்டரை[illegible]போய், ([illegible]) (யாதவாத்ரௌ ஜிகம்ஷா யோஷா[illegible] - [illegible]; [illegible]) [illegible]போகவேண்டுமென்கிறஇச்சை யாவர் [illegible], அவர்கள் [illegible]தேசத்தில் [illegible]பட்டர்மறந் [illegible], ([illegible]) ([illegible]ஸோமஸாக்ஷாச்சேஷா [illegible]) என்று [illegible]திருவநந்தாழ்வானவதாரமான யதுகிரி [illegible], [illegible] குணம்பட்ட விசாககாய் [illegible] உபேக்ஷித்து * அ[illegible], அவம[illegible] [illegible], ([illegible]) ([illegible] ஸேஷஸேஷா[illegible]; - [illegible]'' என்று - * வைகுந்த நாட்டில வாழும் செல்வம் [illegible], திருவநந்தாழ்வான, நித்யமுக்தர் முதலானோரும, திருநாட்டை [illegible] போமபடி குடிவாங்கிவந்து, இஸ்ஸௌலப்யாநுபவார்த்தமாக, தாயகஸ்தாவரஜங்கமங்களை பரிகாஹித்து, ஸ்வப்ரதிஷ்டிதராய் இங்கே வர்த்திக்கிறாரென்னும் படியான வைபவத்தையுடைய யாதவாத்ரியைக் கிட்டி, சேதநர் [illegible]த்திலே [illegible]போலே செம்பொன்யதுகிரி யேறி, திருக்கல்யாண ஸரஸ்ஸைக்கிட்டி நீராடி, கேசவாதியான பன்னிரண்டுதிருநாமமசாத்தியருளி எழுந்தருள, அங்கிருந்த ஐம்பத் திருவாமுதலான அனைவரும் சடகோபன்முன்னிலையாக வந்தெதிர் கொள்ள; பட்டரும், ஸாஷ்டாங்கமாக ஸேவித்து, திவ்யநகரிக்குள்ளே யெழுந்தருளி, சதுராநநகோபுரத்தை அஞ்சலித்து, உள்ளேபுகுந்து,

ஸ்ரீபலிபீடத்தருகேதாளுந் தடக்கையுங்கூப்பித் தண்டன்ஸமர்ப்பித்து, உடையவர்ஸந்நிதிக்கெழுந்தருளி, (யோநித்ய)(யோநித்ய)என்றுதொடங்கி,(ராமாநுஜஸ்யசரணௌஶரணம்ப்ரபத்யே) என்றுஸேவித்துராமாநுஜதிவாகரரையுந் திருவடித்தொழுது வாழ்த்தி, தீர்த்தப்ரஸாதங்களும் பெற்று, அவர்புருஷகாரமாக ப்ரதக்ஷிணமாகவெழுந்தருளி, (பஞ்சாதபி விமானஸ்ய ...) (பஞ்சாதபி விமானஸ்ய ப்ராகாராந்தரமத்யத: - ஸுதர்ஶநசலக்ஷ்மீஶ்சவாததத்தே ஸர்வகாமதௌ)என்றுசொல்லப்பட்ட திருவாழியாழ்வானையும், யதுகிரி நாய்ச்சியாரையும் ஸேவித்து, ஆநந்தமயமான திவ்ய விமானத்தையுந் தொழுதுஉள்ளேயெழுந்தருளி ஸாஷ்டாங்கமாகஸேவித்து, நம்மாழ்வார் திருமங்கையாழ்வாரையும்ஸேவித்து, செல்வப்பிள்ளையையுந் திருவடித்தொழுது, அவ்விக்ரஹஸௌந்தர்யத்திலே ஆழங்கால்பட்டுநிற்க; செல்வப்பிள்ளையும் உகந்து, தீர்த்தம், திருமாலை, சடகோபன், ப்ரஸாதித்தருளப்பெற்றுப் புறப்பட்டு, சேனைமுதலியாரையுந்திருவடிதொழுது, சண்டபரசண்டர்களான த்வாரபாலகர்க ளநுமதிகொண்டு உள்ளே சென்று, திருப்பல்லாண்டையநுஸந்தித்து, திருநாராயணப்பெருமானை பாதாதிகேசாந்தமாக ஸேவித்து அஞ்சலித்துநிற்க; திருநாராயணரும், மிகவும் உகப்போடே, பட்டருக்கு திருமாலை, திருப்பரிவட்டம், தீர்த்தம், சடகோபனும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள அநந்தாழ்வானுடனே புறப்பட்டு எழுந்தருளி, வேதாந்திகளிருக்கிறவூர் ஆஸந்நமானவாறே, "ஆழ்வான்குமாரர் பட்டர்வந்தார், அணியரங்கன்குமாரர் பட்டர்வந்தார், வேதாந்தாசார்ய பட்டர்வந்தார், வேதியர்கள் தனித்தலைவர்வந்தார், ஸ்ரீபராஶரபட்டர்வந்தார், பரவாதிமத்தஹஸ்தி பஞ்சாநநர்வந்தார்" என்று பலதிருச்சின்னம் பணிமாறுகை முதலான தூர்யகோஷத்துடனே மஹாஸம்ப்ரமமாக ஸர்வாபரணபூஷிதராய், சத்ர, சாமர, தாலவ்ருந்தாதிகள் ஸேவிக்க மணிப்பல்லக்கிலே எழுந்தருளாநிற்க; அவ்வளவிலே, இரண்டு ப்ராஹ்மணர்கள் எதிரேவந்து, பட்டரைப் பார்த்து, நீராரர், அநேகம ஸம்ப்ரமத்துடனே எங்கேற வெழுந்தருளுகிறீரென்று கேட்க, பட்டரும், நாம் ஸ்ரீரங்கராஜபட்டர், வேதாந்திகளுடனே தர்க்கிக்கப்போகிறோம் என்ன; அந்தப்ராஹ்மணர்கள் சொன்னபடி; - நீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே யெழுந்தருளினால், வேதாந்திகளை உமக்குக்காணப்போகாது, அவர் க்ருஹத்துக்குள்ளேயிருந்துவிடுவர்; அவருடைய சிஷ்யப்ரசிஷ்யர்கள் தலைவாசலிலே யிருந்து, வந்தவித்வான்களுடனே நாலாறுமாஸம் தர்க்கித்து;அவர்களை உள்ளே புகுரவொட்டாதே புறம்பேதள்ளிவிடுவர்களென்ன; பட்டரும், அந்தப்ராஹ்மணரைப்பார்த்து, ஆகில் நாம் நேரேசென்று அவன்க்ருஹத்திலேபுகுந்து வேதாந்திகளைக்காணும் விரகென்னென்றுகேட்டருள, அவர்கள் சொன்னபடி; - வேதாந்தி

தநவாஜ்ஞையாலே, ப்ராஹ்மணருக்கு ஸத்ரபோஜந மிடுவன், அந்த ஸத்ரபுக் ப்ராஹ்மணரோடே கலசி, அவர்கள் வேஷத்தையுந் தரித்துக் கொண்டு உள்ளே சென்றால், புஜிக்கவருகிற ப்ராஹ்மணரை நிரீக்ஷித்திருப்பன், அங்கே வேதாஂதிகளைக் காணலாம்; ஆகையாலே உம்முடைய ஸஂப்ரமங்களையெல்லாம் இங்கே நிறுத்தி நீரொருவருமே ஸத்ராசிகளுடனே உள்ளே எழுந்தருளுமென்று சொல்லிப்போனார்கள்.

அநஂதரம, பட்டரும, இவர்கள்சொன்னது கார்யமாமென்று திருவுள்ளமபற்றி, தம்முடைய அனைத்துப் பரிகரத்தையும் ஊருக்கு தூரத்திலே நிறுத்தி, தாம சாத்தியிருந்த ஸர்வாபரணங்களையும் களைந்துவைத்து ஒரு அரசிலைக்கிளையைக் குத்தி இடுக்கிக்கொண்டு, காவிவேஷ்டியும் தரித்து, ஒருகமண்டலமும் கையில தூக்கிக்கொண்டு, அநந்தாழ்வானும் தாமுமாய ஸத்ராசிகளுடனேகூட, கார்ப்பண்ய வேஷத்துடனே உள்ளே எழுந்தருள; வேதாஂதிகளும், ப்ராஹ்மணர் புஜிக்கையைப் பார்த்துக்கொண்டு ஒருமண்டபத்திலே ஆஸநமிட்டு அதின்மேலே பெரிய மதிப்புடனே யிராநிற்க, ப்ராஹ்மணரெல்லாரும ஸத்ரசாலையிலே புகுர, பட்டர் அங்கேயெழுந்தருளாமல் வேதாஂதிகளைநோக்கி யெழுந்தருள, வேதாஂதிகளும, பிள்ளாய! இங்கேன் வருகிறீரென்ன; பட்டரும் பிக்ஷைக்கு வருகிறேனென்ன; எல்லாரும் புஜிக்கிறவிடத்திலே போகீர் பிக்ஷைக்கென்ன; பட்டரும், எனக்குச் சோற்றுப்பிக்ஷையன்றென்ன; வேதாஂதிகளும், இவர் ஸத்ராசியானாலும் கிஂசித் வித்வானாகக்கூடுமென்று விசாரித்து "காபிக்ஷா" என்ன; பட்டரும், "தர்க்கபிக்ஷா" என்ன, வேதாஂதிகள் இத்தைக்கேட்டுத் திடுக்கிட்டு, முன்னே தீர்த்தவாஸிப்ராஹ்மணன்வந்து நமக்குச்சொன்ன பட்டரல்லது நம்முன்னேவந்து கூசாமல் நின்று தர்க்கபிக்ஷையென்று கேட்கவல்லவர்கள் இந்தலோகத்திலொருவருமில்லை; வேஷம் கார்ப்பண்யமா யிருந்ததேயாகிலும் இவர் பட்டராகவேணுமென்று நிஶ்சயித்து, நம்மை தர்க்கபிக்ஷை கேட்டீர், நீர் பட்டரோவென்ன; இவரும ஆம என்று கமண்டலம, கல்லை, காவிவேஷ்டி இவற்றையெல்லாம சுருட்டியெறிந்து எழுந்தருளியிருந்து, மஹாவேகமாக உபந்யஸிக்க; அவ்வளவிலே வேதாஂதிகளும், பட்டர்வைபவம கேட்டிருந்தும, இவர் வித்யாமாஹாத்ம்யங் காணவேணுமென்று இருவரும ஒருவர்க்கொருவர் மத்தவாரணம் பொருமாப்போலே இங்ஙனே ஒன்பதுநாள் சென்றபின்பு, பத்தாம்நாள் பட்டர் தர்க்கிக்கச்செய்தே மாயிஸித்தாஂதத்தை, ஶததாவாகக்கண்டித்து விஶிஷ்டாத்வைதபரமாக உபந்யஸிக்க; இத்தைக்கண்ட வேதாஂதிகள் எழுந்திருந்துநின்று நடுங்கி, வேறொன்றும் சொல்லாதே, மநுஷ்யமாத்ரமேயென்றிருந்தேன், நம்பெருமாளென்ன, நீரென்ன, பேதமில்லை; உறங்கும்பெருமாள் அவர், உலாவும்[illegible]மாள நீர்; ஆனபின்பு வாய்திறந்து ஒருவார்த்தைசொல்ல[illegible]

ன்று, அனைகுலையத்தலைகுலையவந்து பட்டர்திருவடிகளிலே அடைவு
கெடவிழுந்து ஸேவித்து, அடியேனை யிரங்கியருளவேணுமென்று மிக
வும் அநுவர்த்திக்க; பட்டரும், தாமெழுந்தருளின கார்யம் அதிசீக்கிர
மாக பலித்தவாறே மிகவுந் திருவுள்ளமுகந்தருளி, வேதாந்திகளை
அங்கீகரித்தருளி, அவருக்கு; ([illegible]
[illegible]) (ஆதபம்சக்ரவஜ்ஞோ: பஞ்ச
ஸம்ஸ்காரஸம்ஸ்கர்தா:-ஆகாரத்ரயஸம்பந்நோமஹாபாகவதோத்தம:)
என்று சொல்லப்பட்ட தாபபுண்ட்ராதி பஞ்சஸம்ஸ்காரங்களையும்
ப்ரஸாதித்து அர்த்தபஞ்சகஜ்ஞானத்தையுமுண்டாக்கி, ஆகாரத்ரய ஸம்
பந்நரான மஹாபாகவதோத்தமராக்கி, விசேஷகடாக்ஷஞ்செய்தருளி,
வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர், ஆகையாலே நாம் உமக்கு
பாக்கச்சொல்லவேண்டுவதொன்றுமில்லை, விசிஷ்டாத்வைதமே பொருள்,
நீர் மாயாவாதத்தை ஸவாஸநமாகத்யஜித்து, ஸ்ரீபாஷ்யத்தைப்பற்றி
ஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்தையே நிர்வஹித்துப் போருமென்று அரு
ளிச்செய்து, ஆழ்வார்களருளிச்செயல் நாலாயிரமும் ஓதும்படி நியமித்
தருளி, இனி நாம், நம்பெருமாளை ஸேவிக்கப் போகிறோமென்று உத்
யோகித்துப் புறப்பட்டவளவிலே, ஊருக்குப் புறம்பேயிருந்த அனை
த்துப்பரிகாரமும் ஊரிலேவந்து மஹா ஸம்ப்ரமத்துடனே
பட்டரைச்சூழ்ந்து ஸேவித்து, பூர்வம்போலே ஸர்வாபரண பூஷிதரா
க்கி, மணிப்பல்லக்கிலே யேற்றி, உபயசாமரம், தாலவ்ருந்தாதிகளை பணி
மாற, ஸகலவாத்யங்களுமுழங்க, திருச்சின்னம் பணிமாறப் புறப்பட்டக்
கண்டு, வேதாந்திகள் பட்டருடைய பெருமையையும் ஸம்பத்தையும்
நன்றாகக் கண்குளிரநோக்கி, இந்த ஸ்ரீமாந் இரத்னஜாதம் பலே
யும் கட்டமுங்கடந்து எழுந்தருளி நித்ய ஸம்ஸாரிகளிற்றும் கடைகெ
ட்டு, மர்ஷாவாதியாயிருந்த அடியேனுடைய துஷ்கார்யம் பாராதாக
அங்கீகரித்தருளுவதே! என்று மிகவும் வித்தராய், கண்ணும் கண்ணீரு
மாய்க்கொண்டு பட்டர்திருவடிகளிலே விழுந்து கலங்கிநிற்க, பெரிய
பெருமாள் தாமான தன்மையாய் ஸேவித்து ஸௌந்தர்யாதிகளை
யுடையராய எழுந்தருளின தேவரீர், அநேககாலம் தபோநிஷ்டராயிருந்து அல
ம்புரிந்தநெடுந்தடக்கைக்கும் எட்டாதபடி கைக்கு நின்றுபோன இவ்வாத்
மா இன்னும் தப்பிப்போமென்று திருவுள்ளம்பற்றியருளி இப்படி
அதிகார்ப்பண்யமா யிருப்பதொருவேஷத்தையும்தரித்துக்கொண்டுஸத்
ராசிகளுடனேகூடவெழுந்தருளி, அதிக்ராமநியான அடியேனை அங்கீ
கரித்தருளின அந்தவேஷத்தை நினைத்தால்அடியேனுக்குப்பொறுக்கப்
போகிறதில்லையென்று சொல்லி, வாய்விட்டழுதுகொண்டு, திருவடி
களிலே விழுந்துகிடக்க; பட்டரும் வேதாந்திகளை முடிபிடித்தெடுத்து,
நிறுத்தித்தேற்றி, நீர்இங்கே ததீயாராதனைக்கபரராய் ஸுகமேயிருமென்
றருளிச்செய்து, கோயிலைநோக்கிப் புறப்பட்டெழுந்தருளாநிற்க; "மின்
னுமாமுகில்மேவுதண்டிருவேங்கடம்" என்கிறபடியே - அம்புதரசம்பி

யதுபூதராய்ச்ரங்க நிலயனான நரஸிம்ஹதிவ்யவிமாநம்தோன்றக்கண்டு, அஞ்ஜலித்து, பின்னையும் திருநாராயணபுரம் வழியாக வெழுந்தருளி அநந்தாழ்வான் முன்னிலையாக, நயநம், நரஸிம்ஹம், கிரிபரிப்ர்டஸ்தாநம், வேதாரண்யம், ஜ்ஞாநாஸ்வத்தமாகிற பாகவதஸ்த்தலம் ஐந்தும், ஸ்வேதயாத்ர, பரிதாநசிலைகளும் ஆகிற ஸப்தக்ஷேத்ரங்களையும், வேதபுஷ்கரிணி, நாபாதீர்த்தம், பலாசதீர்த்தம், பத்மதீர்த்தம், யாதவ மஹாநதி, வைகுண்டகங்காதீர்த்தம், நாராயணதீர்த்தம், மைத்ரேய குண்ட தீர்த்தங்களையும் ஸேவித்து அவகாஹித்து இவற்றின் மத்யஸ்த மான திருக்கல்யாணியிலே நீராடி, கேசவாதித்வாதசோர்த்வ புண்ட்ர தாரராய், முன்புபோலே ஸேவாக்ரமம் தப்பாமல் ஸேவித்து, தீர்த்த ப்ரஸாதங்களும்பெற்றுப் புறப்பட்டு திருமலையிறங்கி யெழுந்தருளி, சிறுப்புத்தூரிலே அநந்தாழ்வானை நியமித்து, பயணகதியிலே த்வரித்துக் கோயிலுக்கெழுந்தருளி, திருக்காவேரியிலே நீராடி, த்வாதசோர்த்வ புண்ட்ரதாரராய் ஸகலபரிஜந பரிச்சதங்களோடே, "வேதாந்தாசார்யபட்டர் வந்தார், வேதாந்திச்சாமி வந்தாரு விரகா வந்தார்" என்று திருச்சின்னம் பணிமாற, * அமர்ப்பகன்றிருமுற்றத்தடியார் எதிர்கொள்ள எழுந்தருளி ஸேவாக்ரமம் தப்பாமல் ஸேவித்துக்கொண்டு உள்ளேபுகுந்து * மாயோனை மணத்தூணே பற்றிநின்று வாயார வாழ்த்தி நிற்க, பெருமாளும், பெரியபெருமாளோடே திருமாலை திருப்பரிவட்டம் தீர்த்தம் சடகோபமும் ப்ரஸாதித்து திருமாளிகையிலே போகவிட்டருள, பட்டரும் தம்திருமாளிகையிலே யெழுந்தருளி, அங்கே ஆண்டாளை ஸேவித்து ஸ்ரீபாதத்து ப்ரவேசித்து தாமநமிரவஹித்துக்கொண்டெழுந்தருளி யிருந்தார்.

அநந்தரம், அங்கே கங்கைகொண்டையிலே, வேதாந்திகள * திருமாலடியார்களைப் பூசித்துக்கொண்டிருக்கும் நாளிலே, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் நின்று, வேதாந்திகள் திருமாளிகைக்கெழுந்தருளி க்ஷுத்து நவியாதிநறுக்கென்று அமுதுசெய்யத்தேட; வேதாந்திகள் தேவிகளிருவரும் உங்களை வேதாந்திகள் தீர்த்தமாடப்போனார், இங்கு ஒன்றுமில்லை, நீங்கள் அங்கே நடப்ப போங்கோளென்றுசொல்லி உதாஸீநம்பண்ணிவிட; அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும், வேதாந்திகள் பக்கலசென்று இத்தை அறிவிக்க; அவரும் அதுகேட்டு, அநுதபித்து, தம்திருமாளிகையிலே எழுந்தருளி, தேவிகளிருவரையுமஞ்சி, அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளத்தேட; அங்குள்ளவர்கள் வேதாந்திகளைப் போகவொண்ணாதென்று தகைய; இவருமதமக்கு நிரவதிக தநமுண்டாகையாலே அத்தை மூன்றம்ஸமாகப் பிரித்து, இரண்டுதேவிகளுக்கும் இரண்டம்ஸம்கொடுத்து மற்றையம்ஸத்தை ஸ்வாசார்யருக்காக எடுப்பித்துக் கொண்டு, அத்தேசத்தையும்ஸவாஸநமாகவிட்டு, "இல்லறமில்லேல் துறவறமில்" என்று அதிதிஸத்காரயோக்யையல்லாதபார்யையைத்யஜித்து

ஸங்க்யஸிக்கக்கடவனென்று ஶாஸ்த்ரம சொல்லுகையாலே ஸர்வ ஸங்கபரித்யாகபூர்வகமாக அங்கே ஸங்யஸித்தருளி, கோயிலைநோக்கி யெழுந்தருளாநிற்கச்செய்தே, திருக்காவேரிக்கரையிலுள்ள சிறப்புத் துறையிலே அநந்தாழ்வானைக்கண்டு ஸேவித்துநிற்க; அநந்தாழ்வானும் வாரீர் வேதாந்திகளே! ஸுகுமாரரான நீர் இங்ஙனேசெய்யலாமோ, வேர்த்தபோதுநீராடி,பசித்தபோது அமுதுசெய்து, பட்டர் திருவடிக ளே சரணமென்றிருந்தால உம்மைபரமபதத்தினின்றும் தள்ளிவிடுவா ருண்டோ, இனியென்; திருமந்த்ரத்திலேபிறந்து,த்வயத்திலேவளர்ந்து த்வயைக நிஷ்டராவீரென்று ஆசீர்வதித்து போமென்றுவிட்டார். அதாவது-திருமந்த்ரம் ஆத்மஸ்வரூப ப்ரதிபாதகபரமாகையாலே சேஷத்வ ஜ்ஞாநோத்பத்தியாகிற ஆபிஜாத்யமுண்டாய, த்வயத்திலும்- ஸ்ரீமச்சப்தோக்தமான பெரிய பிராட்டியார் புருஷகாரத்தாலே வர்த்த மாநார்த்தத்திலே வர்த்தித்து, உத்தர வாக்யோக்தங்களைப்பற்ற கைங் கர்யைக நிஷ்டராவீரென்று சொன்னபடி.

வேதாந்திகளும் பயணகதியிலேபோய் கோயிலிலே யெழுந்தருளி பட்டர்திருவடிகளிலே ஸேவித்து, தாமகொண்டுவந்ததநத்தை தம்ம தென்கிற வபிமாநத்தை விட்டு, பட்டருக்கு இஷ்டவிநியோகார்ஹ மாம்படி அவர் திருவடிகளிலே ஸமர்ப்பித்து நிர்மமராய்நிற்க; அவ் வளவிலே,பட்டரும மிகவும உகந்தருளி, "நம்முடைய ஜீயாவந்தார்" என்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒருக்ஷணமும் பிரியாமல் தம்முடையஸந்நிதியிலேவைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ர ஸாதித்தருள; ஜீயரும், பட்டரையல்லது மற்றொரு தெய்வமறியாதிருந் தார். பட்டரும நம்முடைய ஜீயரென்றுசொல்லி அணைத்துக்கொண்ட வன்றுதொடங்கி வேதாந்திகளுக்கு"நஞ்ஜீயர்"என்று திருநாமமுண்டா யிற்று. நஞ்ஜீயர் பட்டரைப்பார்த்து, பெருமாள் சந்த்ரபுஷ்கரிணிக் கரையிலே கண்வளர்ந்தருளுகிற தற்குத திருவுள்ளக்கருத்து என்னெ ன்று விண்ணப்பஞ்செய்ய; பட்டரும், "நாராயணோ!" என்று கூப் பிட்டபின்பிறே அந்தமடுவின்கரையிலே எழுந்தருளிற்று; இங்குக் கண் வளர்ந்தருளுகிறது நான் கூப்பிடுவதற்குமுன்னே என்னையெடுக்கைக்காக நான் அகப்பட்ட பொய்கையிலேவந்து கண்வளர்ந்தருளுகிறானித்தனை; நீர் இவ்வர்த்தம்கேட்டது உம்முடைய வசத்தாலே யன்றுகாணும், உம்மைக்கொண்டு எம்பெருமான் என்னினைவை வெளியிட்டருளினார் என்று அருளிச்செய்தார். அதாவது-பகவதபதார்த்தங்களடங்க ஸ்வார்த் தமாகவென்றிறே ஜ்ஞாநாதிகர் அநுஸந்திப்பரென்றபடி.

நஞ்சீயர் பட்டரை ஸ்ரீபாதந்தாங்குவதாகத் தோளிலேதண்டை வைக்கப்புக,பட்டரும், உம்முடைய வேஷத்திற்கு இதுவிருத்தங்காணு மென்றருளிச்செய்ய; ஜீயரும்,அங்குத்தையடிமைக்கு ஏகாந்தமென்று இவ்வேஷத்தைபரிக்ரஹம்பண்ணினேன், அதுதானே அதற்கு விரோத மாகில் பழையவெள்ளையை யுடுக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்தார்;

அதாவது - ஆசார்யகைங்கர்யத்திற்கு அநுரூபமாகாத வர்ணாஶ்ரம தர்மமும் பரித்யாஜ்யமென்றபடி. பட்டர் குடும்பஸஹிதமாக கூர குலோத்தமனிலே யெழுந்தருளியிருக்கிறவளவிலே, திருநந்தவனத்தில் அல்பம உபஹதியுண்டாக, திருநந்தவநம்செய்கிற ஏகாங்கிகள் சிலவார்த்தைகள் சொன்னாகளென்று நஞ்ஜீயர் கேட்டருளி, ஏகாங்கிகளை யழைத்து, நம்பெருமாள் திருக்குழற்கற்றை சிக்குநாறுகிறதென்றோ நான் திருநந்தவநம் செய்கிறது, பட்டருடைய குடும்பத்திறகு இஷ்டவிநியோகாஹமாகவேணுமென்று திருநந்தவந வ்யாஜேநகோலினனித்தனையன்றோவென்று, அவர்களை சீறிவிட்டருளினார்; இததால - ஆசாரயபரதந்த்ரன பகவதகைங்கர்யமபண்ணககோலுவது ஆசாரயகைங்கர்யார்த்தமாக வித்தனையென்று கருத்து.

அநந்தரம, பட்டா திருவணையாட வெழுந்தருளுகிறபோது, பகலெல்லாம வழிநடநதருளின ஆயாஸத்தாலே, விட்டதொரு தூற்றடியிலே, நஞ்ஜீயாமடியிலே திருமுடியை வைத்துக கண்வளாநதருள; ஓிரவெலலாம துடைமாறுதல, அசைத்தல செய்யாதேயிருந்தருளினார். ஆகையாலே ஆசார்யவிஷயத்திலே சைதநயமற்றுபடுக்கையா யடிமைசெய்கை ஶிஷ்ய ஸ்வரூபஸித்தியென்கிறது. திருவணையாடி மீண்டெழுந்தருளுகிறபோது,ஸாயங்காலமானவாறே * பாதிரியெனகிற க்ராமததிலேபோய ஒருவேடனகததே எழுநதருளபபுககவாறே, அவனும், தானிருநத ஆஸநத்தையும வாஙகிபபொகட்டு, இவர்கது ஒருகட்டிலே அமைதது்கொடுககு, அதின்மேலேயெழுநதருளியிருந்து, இவன் நம்முடைய வைபவமறிநதுசெயதானலலன, கயாதிபாஞயச செய்தானலலன், நம்மால் உபகாதஞயச செயதானலலன, தனனுடைய கர்ஹத்திலே புகுந்தோமெனனும அபிமாநமேறே இவன இவ்வளவு செய்யவேண்டிற்று, ஈஶ்வரன் தன்னபிமாநததிலே யொதுஙகினாை என்னினைத்திருககிறோனோ என்றநுஸநதித்தருளி; பினபு, அந்தகர்ஹமுடையவனைக்குறித்து,இன்றைககு விசேஷமேதென்றுகேட்டருள;அவனும், நாயனதே, நான்காட்டிலே வேடடைககுபபோனேன், அங்கே ஒரு முசல்குட்டியைப் பிடித்தேன், அதினுடைய தாயானது என்முன்னே வந்து வழியிலே எதிரோ கும்பிட்டுககொண்டு கிடந்தது, அத்தைக் கண்டு எனக்கு தயைபிறந்து அதினகுட்டியை விட்டுப்போந்தேனென்றான்; அத்தைக்கேட்டு, இவரும ஒருசேதநனுக்கில்லாததொன்று, பரமசேதனனுக்குள்ளதொன்று, (మామేకం శరణం వ్రజ) (மாமேகம்ஶரணம்வ்ரஜ)என்று அம்முசலுக்குஉபதேசித்தாருமில்லை,(అరిః ప్రాణాన్ పరిత్యజ్య రక్షిత వ్యః కృతాత్మనా) (அரிஃப்ராணாந்பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃகர்தாத்மநா) என்று இவ்வேடனுககு உபதேசித்தாருமில்லை, அவ்யவதாநேந ஶாஸ்த்ரஸித்தி பலிப்பதே! இதொரு ப்ரமாணஸித்தியிருந்தபடியே! யென்று, நஞ்ஜீயர்க்கருளிச்செய்து கோயிலுக்கெழுந்தருளி பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே, வீரஸுந்தரப்ரஹ்மராயன் பெருமாளுக்குத் திருமதிள்கட்டுவிக்கிறநேரிலே, பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகையகப்பட, அவர்திருமாளிகையை யிடித்துத் திருமதிள் கட்டவேணுமென்று வீரஸுந்தரன்சொல்ல; பட்டரும், உன் திருமதிளோ பெருமாளுக்கு ரக்ஷகம், அவர்மங்களாஸாஸநமன்றோ; ஆகையாலே முன்பு திருமங்கையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை கட்டுகிற ஸ்தாநத்தைத் தப்ப ஒதுங்கத் திருமதிள்கட்டவில்லையோ, நீரும் இப்போதும் அப்படியே அவர்திருமாளிகையைவிட்டு ஒதுங்கத் திருமதிள்கட்டிவையுமென்றுசொல்ல; வீரஸுந்தரனும், ஆசார்யபுத்ரரென்று அஞ்சாதே அவர்வார்த்தையை அதிக்ரமித்து, ஆழ்வான்திருமாளிகையை யிடித்து, திருமதிள் கட்டிவைத்து, பட்டரை, தந்மூலமாகக் கோயிலிலே யிருக்கவொட்டாதே மிகவும் உபத்ரவிக்க; பட்டர் கோயில்நின்றும் புறப்பட்டு, திருக்கோட்டியூருக்கு எழுந்தருளும்போது, வழியிலேயிளைத்தருளி, நஞ்சீயர் இப்போது வருவதுகாணேனென்ன; நஞ்ஜீயரும், ஜீயா! ஜீயா! என்று அழைத்துக்கொண்டு கட்டுத்திருப்போனகமும் தண்ணீரமுதும் கொண்டுஓடிவந்து, சடக்கென அது செய்யப்பண்ணிவைத்து இளைப்பாற்றிவைக்க; பட்டரும் நஞ்ஜீயருக்கு அப்போதும் ஒருவிசேஷகடாக்ஷம் செய்தருளினார் ஆகையாலே அநுவர்த்தநவிசேஷங்களாலே ஆசார்யாநுக்ரஹத்துக்கு பாத்ரமாக வேணுமிறே.

அநந்தரம், திருக்கோட்டியூரிலேயெழுந்தருளியிருந்து, ([illegible]) (பூர்வகண்டத்வயஸஸாரஸநிகநிததநீரோபகண்டாமாவிரோபோதஸ்[illegible]த்ருதப்ரஹ்மகோஷாம-மார்கமேமார்கமே பதிகநிவஹை[illegible]க்காம் பஸ்யேயம் தாம் புநரபிபுரீம் ஸ்ரீமதீம் ரங்கதாம்ந) என்று சொல்லிக்கொண்டு, கோயிலையும், பெருமாளையும், விட்டுப்பிரிந்திருக்கையாலே மிகவும் க்லேசப்பட்டு "என்றுகொலோ கண்குளிரக்காணுநாளே" என்றுகொண்டு எழுந்தருளியிருக்கிறகாலத்திலே:

ஒருஸ்ரீவைஷ்ணவர், பட்டரை ஸேவித்து அடியேனுக்குத் திருவிருத்தத்திற்கு அர்த்தம் ஒருருப்ரஸாதித்தருளவேணுமென்று மிகவும் அநுவர்த்திக்க, பட்டரும், நஞ்ஜீயரைப்பார்த்து, ஜீயா! எனக்குக் கோயிலையும் பெருமாளையும் விட்ட க்லேசத்தாலே செவிகள் சீப்பாயாகின்றது, ஆகையாலே எனக்கு வாய்திறந்து வார்த்தை சொல்லப்போகிறதில்லை, நீர் திருவிருத்தத்திற்கு அர்த்தம் ஒருரு இந்த ஸ்ரீவைஷ்ணவருக்குச்சொல்லுமென்று அவரை ஜீயர்ஸ்ரீபாதத்திலே காட்டிக்கொடுத்து இங்ஙனே நடந்துசெல்லுகிறநாளிலே; கடலைக் கலக்கினாற்போலே பட்டர்திருவுள்ளத்தைக்கலக்கிவிரோதித்த 'வீரஸுந்தரன மரித்

ரூப்போர; அவ்வளவிலே கோயிலிலே பட்டர்திருத்தாயாரான ஆண்
டாளை ஸேவித்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள், பட்டருடைய விரோதிபோ
ருனென்று தங்கள் திருப்பரிவட்டங்களைமுடிந்து ஆகாசத்திலேயெறி
ந்து, [illegible] ஸந்தோஷித்துக் கூத்தாடி ஆண்டா
ளுக்கறிவிக்க; அதுகேட்டு ஆண்டாள்செய்தபடி;- திருமாளிகைக்குள்
ளே புகுந்து, திருக்காப்பைச்சாத்திச் சிறைதத்தாளிட்டு, வயிறுபிடித்
து மிகவும் கலங்கித்து, வாய்விட்டு உச்சைஸ்வரமாக அழத்தொடங்கி
னாள்; ஸந்தோஷாதிசயத்தாலே கூட்டமாயத் [illegible] நட்டமிட்டுக் கூத்தா
டுகிற முதலிகள் அதுகேட்டு, ஆண்டாளைக்குறித்து, பட்டரை இங்கிரு
க்கவொட்டாமல் விரோதித்தபாபிஷ்டன் போனானென்று ஸந்தோஷி
யாமல் துக்கிக்கிறபடி [illegible], பட்டருடைய விரோதிபோகவும், பட்டரும்
முதலிகளும் [illegible] நாமெல்லோரும் கூடிவாழவும்,
உமக்கு [illegible]; ஆண்டாளும் ஸ்ரீவைஷ்ண
வர்களைப் [illegible] அருளிச்செய்தபடி;- பிள்ளைகாள்! நீங்களொன்றும் அறி
கிறிலீர்கள்; [illegible] ஆழ்வாருடைய சிஷ்யனாயிருந்து,
ஆசார்யபுருஷர்களான [illegible] அவர்திறத்திலே
[illegible] "அறியாமல்செய்தேனித்தனை,
பொறுக்கவேணும்" [illegible] பட்டர்திருவடிகளிலே தலைசாய்ப்ப
[illegible] அநுதாபமுமின்றியே
செத்துப்போனான், [illegible] சரீரம்விட்டபோதே யமபடர்
கையிலே [illegible] அடிபுண்டு, மலங்கவிழ்க்குமாகையா
லே [illegible]; [illegible] நதாகிலும் தர்ஷ்டஸுக
[illegible], அதுவுங்கூட இழந்தானாகாதே!
ஆழ்வான் திருவடிகளை [illegible] ஆத்மா இப்படி நட்டுப்
பட்டுப்போனதே [illegible] நெரிகிறபடி உங்களொ
ருவர்க்கும் தெரியவில்லையோ [illegible] ஆண்டாளருளிச்செய்தாள். குற்
றஞ்செய்தவர்களைப் [illegible] ஸஹியாதவராய், தயார்த்ரசித்தராய்ப்
போருமது ஆழ்வான் [illegible] கருங்கேயுள்ளதொன்றிறே.

பிள்ளைப்பிள்ளையாழ்வான் இவ்விசேஷங்கேட்டு கோயிலிலும்,
திருக்கோட்டியூர் [illegible] இதனை யருளிச்செய்ய, பட்டரும்
கேட்டு ஸந்துஷ்டராய், "[illegible] தலைமேற் கொழுமீரோ நம
ரோமே" என்றபடியே, அவர் [illegible] அடிக்கடி வணங்கி அவரு
டனே கூடத்தக்ஷணமே கோஷ்டீபுரத்திலும் புறப்பட்டுக்கோயிலேற
வெழுந்தருளி, பண்டுபோலே தர்ஸநநிர்வஹித்துக்கொண்டிருந்தார்.

அம்மணியாழ்வான், இருநூற்றுக்காதவழிநடந்து வந்து, பட்டர்
ஸ்ரீபாதத்திலே தண்டஸமர்ப்பித்து, அடியேனுக்குத்தஞ்சமாயிருப்
பதொரு அர்த்தம்ப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க; பட்டரு
ம், * நெடுமாற்கடிமைக்கு அர்த்தம் ப்ரஸாதித்தருளி, எம்பெருமானை அறி

கையாவது, அவனை அனைவயிறுபட்டறிகை, ததீயனையறிகையாவது அவனை முழுக்கவறிகையென்றருளிச்செய்தருள, அவரும், பலபடி சொல்லியென், மறப்பன், இவ்வளவேயாமையுமென்று அவர் அது தன்னையே தாரகமாகப்பண்ணிக்கொண்டு எழுந்தருளினார். ([illegible]) என்கையாலே - ஸச்சிஷ்யன், ஸதாசார்யனருளிச் செய்ததொரு சரமார்த்தத்தையோ தஞ்சமென்று விச்வஸிக்கவேணுமென்றபடி.

வீரசிகாமணிப் பல்லவராயன், பட்டரைக்குறித்து, பட்டரே! ராஜகார்யம்செய்கையாலே அடியேனுக்கு பகவத்விஷய வைபவங்கேட்க விரகில்லை, எனக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் ப்ரஸாதிக்கதருள வேணுமென்று அபேக்ஷிக்க; பட்டரும், கடற்கரை வெளியை நினைக்குரு மென்று அருளிச்செய்தருள; அது தெரியாமையாலே, அவர் கைகளையே பிசைந்துநிற்க; இவரும், கடற்கரையிலே ஒரு அர்த்தராத்ரகாலத்திலே பெருமாள் பெரிய வாநரஸேனையோடே விட்டிருக்க, அக்கரையிலே பிணந்தின்னிப் பையல் ராவணனிருக்க, ப்ரஹஸ்தாதி மஹாராக்ஷஸேனை உணர்ந்து பெருமாளை நோக்கிக்கொண்டிருக்க, அவர்களும் ப்ரக்ருதிமான்களாகையாலே கண்ணுறங்காமல் ஸேனை சோர்ந்தவளவிலே, தாமும் தம்திருத்தம்பியாருமாக, புலுக்கிலே அம்பறாத்தூணியைக் கட்டி, கையிலே தெறித்துப்பிடித்த பெருவில்லை திருச்சார்ங்கமுமாய், தரித்த திருவில்லும் தாமுமாய், சில [illegible]டைகள் முட்டையிட்டு, தன் சிறகின் கீழே நோக்கியிட்டுவைக்குமாப்போலே எழுபது வெள்ளம் ப்லவங்க குலபதி மஹாஸேனையையும், நடையாடும்பக்ஷிகள்போலே ரக்ஷித்துக்கொண்டு ஓரிராவெல்லாம் சாரிகையாய்வந்த சக்ரவர்த்தி திருமகனுடைய கையும் வில்லுமே தஞ்சமென்று விச்வஸமாயிருமென்றருளினார்.

தர்மாக ரஹஸ்யமாவது, உறங்குகிறபோது நம்மை ரக்ஷிக்குமவ உணர்ந்தால் நம்மை நோக்குமென்றிருக்கச் சொல்லவேண்டாவிறே என்றபடி. ஒருநாள் த்ரிபுவநவீரதேவராயர், பட்டருடைய வைபவங்கண்டு, பட்டரே! நீர் நம்பக்கல் ஒருநாள் வந்துபோகிறீரன்று; பட்டரும், பெருமாள் அஞ்சலென்றதை மறந்தாலும் அவ்வாசலொழிய வேறொருபோக்குண்டோவென்றருளினார். அதாவது - (ஸக்ருதேவ) (ஏதத்வ்ரதம்மம) என்று-ஸ்வாச்ரிதரக்ஷணைகதீக்ஷிதரான எம்பெருமானிருக்க, * கதிபயக்ராமேசாச்ரித புருஷாதமன் வாசலிலே அவனைக் கடவோமல்லோமென்றபடி.

ஒருநாள் பட்டர், பெருமாளைத் திருக்கைத்தலத்திலே திருவடிதொழப்புக, திருமுன் அடிக்கிறவர், பட்டரைப்பாராமல சில பருஷோக்திகளைச்சொல்ல; ஸ்ரீபாதத்தில்ஸ்ரீவைஷ்ணவர் அவரோடே எதிருத்தரம் சொல்லப்புக; பட்டரும், வாரீர பிள்ளாய்! கேளும், பெருமாளுக்கு ஏகாந்தத்திலே என்குற்றம் விண்ணப்பஞ்செய்ய, ஒருகாலமற்றதாய் பெருமாளும் திருச்செவிசாத்தாமல் போந்தவித்தை, பெருமாளுக்கு

அந்தரங்கபரிகரமா யிருப்பாரொருவர் நம் தோஷங்களை ஏகாந்தத்திலே விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் திருச்செவிசாத்தினதுகண்டால், அத்தை விலக்குகிறவித்தால் நீர்பெற்றபேறென்னென்று அருளினார். இத்தால் - பகவத்ஸந்நிதியிலே ஏகாந்தத்தில் ப்ரகர்த ஸ்வதோஷக்யாபநம் தத்வாத்ஸல்யஜநகமாய், ததங்கீகார ஹேதுவுமாமென்று நினைக்கக் கடவதென்றபடி.

பட்டர்ஸ்ரீபாதத்திலே ஸம்பந்தமுடையராய ஸோமயாஜியாயிருப்பாரொருஸ்ரீவைஷ்ணவர், பட்டரை, அடியேனுக்குத் திருவாராதநக்ரமம் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பட்டரும், உடையவர் திருவாராதநக்ரமத்தை ப்ரஸாதித்தருள; அவரும், அதுகொண்டு நெடுநாள் திருவாராதநம்பண்ணிப் போரச்செய்தே, ஒன்றிரண்டுநாள் பட்டர் திருவாராதநத்தை ஸேவித்திருக்க, அந்த தமக்கு அருளிச்செய்த க்ரமம் ஒன்றும் கண்டிலர்; இவர் திருவாராதநம்செய்தபடி; ஒருநாள் பட்டர் நீராடி நாயந்திருப்பரிவட்டம் சாத்தியருளி, திருமண்காப்புச் சாத்தியருளி, உள்ளே அமுதுசெய்யத் தளிகையை அமர்த்தினவளவிலே, தளிகை முன்னே எழுந்தருளியிருந்து, தெற்காழ்வாரை எழுந்தருளுவித்துக்கொண்டு வாருமென்ன, அவர்களும் அப்படியே எழுந்தருளுவித்துக்கொண்டுவந்து கைத்தலத்திலே பிடித்தவளவிலே, தமக்கு அமுதுபடைத்த திருப்போனகத்தையும் சேர்த்த தண்ணீரமுதையும் அவருக்கே அமுதுசெய்வித்தருளி ப்ரஸாதப்பட்டருளினார். ஸ்ரீவைஷ்ணவரும், அதனைக்கண்டு பட்டரை தெண்டனிட்டு ஸவிநயராய் ஒரு விண்ணப்பமுண்டு, [illegible] பாமாயிருக்கிறதென்று சொல்ல; பட்டரும், அருளிச்செய்யுமென்ன; அந்த ஸ்ரீவைஷ்ணவரும், திருவாராதநப்படியை அடியேனுக்கு இப்படியருளிச்செய்தருளிற்று, தேவரீர் இப்படி செய்தருளுகிறது, இதப்படியென்னென்று விண்ணப்பஞ்செய்ய; பட்டரும், ஸமஸ்த சாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து பார்த்தவிடத்து உனக்கு இப்படிபோலேயல்லால் நமக்கு ஒருவார்த்தைகண்டிலேன், என்னை இருத்தினவிடத்தில் அப்படி யொழியச்செய்கைக் கொருசாஸ்த்ரம் கண்டிலனென்றருளிச்செய்தருளினார். இத்தால் - சிஷ்யனுக்கு ஞானபரிபாகமுண்டானபடியாக கொணடிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப்போலே, சப்தாதிவிஷயங்களிலே மண்டித்திரிகிற கரணங்களை பகவத்விஷயபாரவஸ்யமாம்படி திருத்துகை, ஆசார்யனுடைய க்ர்த்யமென்னுமதுவும், பகவத்விஷயைக பரமான வநுஷ்டானவிசேஷத்திற்குக் கருத்தது அவிசேஷஜ்ஞர்க்கு தோற்றாதென்னுமதுவும் தோன்றுகின்றதிறே.

பட்டரை ஒருவன், தேவதாந்தரங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுவர்த்தியா தொழிவானென்னென்ன; ப்ரமாண விரோதமுண்டாகிலன்றோ ஸந்தேஹமுள்ளது, இங்கே ஸந்தேஹமில்லையென்றருளிச்செ

தார். அதெங்ஙனேயென்னில்; - ஸத்த்வப்ரசுரரை, ரஜஸ்தமஃப்ரசுரர் அநுவர்த்திக்குமதுபோக்கி ஸத்வப்ரசுரர் ரஜஸ்தமஃப்ரசுரரை அநுவர்த்திக்கக்கடவதோ வென்றருளிச்செய்தார்; ஆகையாலே தேவதாரதாரங்கள் குணதோஷங்களிரண்டாலும் ஒருக்காலும் அநுவர்த்தநீயரன்றென்றபடி.

பட்டர் அறியில் ஸம்மதியாரென்று, பட்டர்ஸ்ரீபாதத்தை வேறொரு ஸ்ரீவைஷ்ணவர்திருக்கையாலே விளக்குவித்து ஆண்டாள் ஸ்வீகரித்துக்கொண்டிருந்தாள்; இத்தை ஒருஸ்ரீவைஷ்ணவர் கண்டு, தாயாரான தேவரீர் இப்படி செய்தருளலாமோவென்ன; ஆண்டாளும், அதுவென்! பிறர் திருவாராதநத்தின் தீர்த்தமே ஸ்வீகார்யமாய், தானெழுந்தருளப்பண்ணின விக்ரஹத்தின் தீர்த்தம் ஸ்வீகார்யமாகாதோவென்ன; அவரும் அதற்கடி யென்னென்றுகேட்க; ஆண்டாளும் "கண்புரம்கைதொழும்பிள்ளையைப்பிள்ளையென்றெண்ணப்பெறுமோ," என்றருளிச்செய்தாள். இத்தால - சிஷ்யபுத்ரர்களேயாகிலும ஜ்ஞாநாதிகர் ததீயத்வேந அநுவர்த்தநீயரென்றபடி.

பட்டர், தம்ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவரைப்பார்த்து, நீர் அநந்தாழ்வான்ஸ்ரீபாதத்திலே சென்று ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமிருக்கும்படியெங்ஙனேயென்று கேட்டுவாருமென்று அருளிச்செய்ய; அவரும் அநந்தாழ்வான ஸந்நிதிக்கு எழுந்தருள, அங்கே பலஸ்ரீவைஷ்ணவர்கள் அமுதுசெய்தருள, இடம்போராமையாலே அவர்கள் அமுதுசெய்தருளுமளவும இவரும்பேசாதிருக்க; அப்பு அநந்தாழ்வானும் இவரைக்கண்டு, நெடும்போதுண்டே! அமுதுசெய்தருளப்பெற்றதில்லையே! இளைப்போடே யிருக்கிறதே! என்று போரநொந்து, சடக்கென அமுதுசெய்தருளப்பண்ணி, தாமும தேவிகளுமாக சேஷித்திருந்த திருப் போனகத்தை அமுதுசெய்தருளி எழுந்தருளியிருந்து, ஸ்ரீவைஷ்ணவரைக் குறித்து, எங்குநின்று மெழுந்தருளிற்றென்று கேட்டருள; அவரும், பட்டர், தேவரீர்ஸ்ரீபாதத்திலேசென்று ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமிருக்கும்படி எங்ஙனேயென்று கேட்டு வரச்சொல்லிவிட்டருளினாரென்று விண்ணப்பஞ்செய்ய; அநந்தாழ்வானும, ஆகில உம்மைப்போலே யிருக்குமென்றருளினார். இத்தால்-தன் ஜ்ஞாநாநுஷ்டாநாபிமாநாதி நிமித்தமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலே முற்பாட்டுக்கு ஆசைப்படாதே, பிற்பாட்டுக்கேயாசைப்பட்டு ததீயசேஷத்வத்தைப பேணுகைஸ்ரீவைஷ்ணவலக்ஷணமென்று உத்தரமருளிச்செய்து விட்டாராய்த்து.

ஒருநாள் பட்டர் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பாரொருஸ்ரீவைஷ்ணவர், ஸஹவாஸதோஷத்தாலேகலங்கி விஷயப்ராவண்யங் தலையெடுத்து, பட்டர்ஸந்நிதியிற்சென்று, பட்டரே! உமக்கும் நமக்கும் பணியில்லை யென்றுசொல்ல, பட்டரும், வாராய்பிள்ளாய்! அது உன் நினைவாலேயன்றே, நீவிட்டாலும் நாம்விடுவோமோ வென்றருளிச்செய்த

ருள, அவனும் அகன்றுபோகத்தேட, இவரும் அவனை பலாத்கரித்துப் பிடித்து, உபாயோநஜ்ஞாநோபதேச முகத்தாலே வருந்தித்திருத்தி ஸ்ரீபாதத்திற்கு அந்தரங்கராக்கிக்கொண்டருள; அவரும், மஹாவிரக்தராய் நிலையிலேநின்றருளினார். ஆகையாலே, அஜ்ஞாநம் தலையெடுத்து அகன்றுபோவாரையுமுட்படவிடாதே யத்நேநத்திருத்திச் சேர்த்துக் கொள்ளுகை ஸதாசார்யலக்ஷணமென்கிறது.

ஒருநாள், பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களுமாகப் பெருங்கூட்டத் திருவோலக்கமாக வெழுந்தருளியிருந்து, பகவதகல்யாணகுணாநு ஸந்தாநம் நடவாநிற்க; ஒருஸ்ரீவைஷ்ணவர், நாம்பண்ணின ஸுக்ர்தமன்றோ இப்படியிருக்கப்பெற்றது என்ன; அவ்வளவிலே சிறியாச்சான் எழுந்திருந்துநின்று, நெடுங்காலம் பெருமாள் ரக்ஷகரென்று சிக்ஷித்து வைத்து, இப்போதாக ஒரு ஸுக்ர்த தேவருண்டாலவதே! யென்றருளினார். இத்தால - உஜ்ஜீவிஷுவான ஈஶ்வரனிருக்க, ஆநுகூல்யங்களுக்கு ஸுக்ர்தமடியென்கை ஸ்வரூபநாசமென்றபடி.

பட்டரோடே அமுதனார் வெறுத்தருளி, தாம் ஆழ்வானுடைய வெற்றிலைச்செருக்கிலே பிறந்தவர், நான் ஆழ்வானுடைய ஜ்ஞாநச் செருக்கிலே பிறந்தவனன்றோவென்று சொல்லிவிட; அத்தை பட்டர் கேட்டருளி பாசுரம் அழகிது, ஆகிலும இத்தைத் தாமேசொன்னாரோ வென்றருளிச்செய்தார். ஆகையாலே ஆசார்யாபிமாந ஜநிதஸ்வோத்கர்ஷரூபசலாகாவசநம ஸ்வரூபாநுசிதமென்றபடி.

ஒருநாள பெருமாளபுறப்பட்டருளி ஒரு திருமண்டபத்திலே யெழுந்தருளியிருக்கச்செய்தே, பட்டா திருவாலவட்டம் ஸேவித்திராநிற்க, ஸ்ரீபாதத்து முதலிகள ஸந்த்யாவந்தநத்திற்கு காலம்தப்புகிறதுஎன்று விண்ணபபஞ்செய்ய, பட்டரும், "பகவதகைங்கர்ய நிரதருக்கு ஸந்த்யாவந்தநவைகல்யதோஷம வாராது" என்றருளிச்செய்தருளினார். இதற்கு கருத்து, ([illegible]) என்று திருமுகப்பாசுர மிருக்கையாலே - பகவத்கைங்கர்யத்தையிழந்து நித்யகாமாநுஷ்டாநார்த்தமாகப்போகை ஸ்வரூபவிருத்தமென்றபடி.

ஒருக்கால பட்டருடனே அநேகம் வித்வான்கள் திரண்டுவந்து தர்க்கிக்க, பட்டர் அவர்களெல்லாரையும் வாய்மூடுவித்து ஜயித்தருள, பின்னையும் அவர்கள் இவருடைய ஸர்வஜ்ஞதையைபரிக்ஷிப்போமென்று ஒருகுடத்திலே ஒருபாம்பையடக்கிக்கட்டி, இக்குடத்திலேயிருக்கும் வஸ்து வென்னென்றுகேட்க; பட்டரும், திருவெண்கொற்றக் குடையிருக்கிறதென்ன; அவர்களும்சிரித்து, குடத்துக்கட்டை அவிழ்த்துவிட்டவளவிலே போகிபுறப்பட, அவர்களும், இதுகொற்றக்குடையோவென்ன; பட்டரும் அன்றோ, "சென்றாற்குடையாம்" என்றன்றோ ஆழ்வார் அருளிச்செய்ததென்ன; அவர்களும் இவருடைய ஸர்வஜ்ஞதைக்கு விஸ்மயப்பட்டு க்ர்தார்த்தராய்ப்போனார்கள்.

முன்பு உடையவர்காலத்திலே, ஆசார்யர்களெல்லாரும் உடையவருக்கு மாநஸபுத்ரரான திருக்குருகைப்பிரான்பிள்ளானை அநுவர்த்தித்து, ஆழ்வார்களருளிச்செயல்களின் அருபொருள் தெரியும்படிக்கு தேவரீர் வ்யாக்யாநம் செய்தருளும்படி உடையவரை வேண்டிக்கொள்ளவேணுமென்று பிள்ளானுக்கு விண்ணப்பஞ்செய்ய; பிள்ளானும், உடையவர் பெருங்கூட்டத் திருவோலக்கமாக எழுந்தருளியிருக்கச்செய்தே, ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணி, ஸவிநயராய் இரப்புடனே ஒருவிண்ணப்பமுண்டென்று சொல்ல; உடையவரும் என்னென்று கேட்டருள; பிள்ளானும், தேவரீர் ஸ்ரீபாஷ்யமருளிச்செய்து திக்விஜயம்பண்ணி தர்ஸநத்தை நிலைநிறுத்தியருளிற்று, இனி, திருவாய்மொழிமுதலான ஆழ்வார்கள்திவ்யப்ரபந்தங்களுக்கும் வ்யாக்யாநம் செய்து ரக்ஷித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், திருவுள்ளத்திலே விசாரித்தருளி, அப்படியாமாகில், நாம் அருளிச்செயல்களுக்கு வ்யாக்யாநம்பண்ணினால், மந்தமதிகளுக்கு இதற்கு இவ்வளவே அர்த்தமுள்ளதென்று தோற்றும், விசேஷஜ்ஞருக்கு அவ்வவருடைய புத்திக்கிடாக பஹுவாசகசகாசம், அவ்வழியாலே அபசாரமுண்டாம், ஆகையாலே நீர் ஒருபடி திருவாய்மொழிக்கு வ்யாக்யாநம் செய்யும் என்று நியமித்தருள, அவரும் ஸ்ரீவிஷ்ணுபுராணப்ரக்ரியையாலே திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி செய்தருளினார்.

பட்டரும் நஞ்ஜீயருக்கு பிள்ளானபடியான ஆறாயிரப்படியை ப்ரஸாதித்தருள, அவரும் அத்தை நன்றாக அதிகரித்து, பட்டரை அநேகமாக அநுவர்த்தித்து, அவருடைய அநுமதிகொண்டு, திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படியாக ஒருவ்யாக்யாநம் பண்ணிச்செய்தே, ஒருகைசிகத்வாதசியின்று, பெருமாள்ஸந்நிதியிலே கைசிகபுராணம் வாசித்தருளாநிற்க; என்னையும்போலன்றிக்கே, ஒருபுதமாக பஹுமுகமாக பாவார்த்தங்களையருளிச்செய்கிறபடியைக்கண்டு, பெருமாள் திருவுள்ளமுகந்து; இவருக்கு தாமசாத்தியிருந்த திருப்பரிவட்டம், திருவாபரணங்களையும், பின்னும்சிலவற்றையும்பரிசிலாக இரங்கியருளி, ஸந்தோஷாதிசயத்தாலே, "பட்டரே! உமக்கு மேலைவீடு தந்தோம்" என்றுபெருமாள் திருவுள்ளமாக; இவரும் மஹாப்ரஸாதமென்றங்கீகரித்தருள; திருவோலக்கமடைய கடல்குழம்பினாப்போலே, இப்படி திருவுள்ளமாவானென்னென்று கலங்கி வயிறுபிடிக்க, பட்டரும், ஹர்ஷப்ரகர்ஷத்துடனே பெருமாள்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, க்ருதாஞ்ஜலிபுடராய் நின்று, நாயன்தே! தேவரீர் அர்ஜுநனைக்குறித்து, (𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿) (மோக்ஷயிஷ்யாமி) என்றருளிச்செய்தருளிற்று என்று கேட்பார்வார்த்தை கேட்டிருக்கையன்றிக்கே, தேவரீர்தாமே இப்படி திருவாய்மலர்ந்தருளப்பெற்ற விப்பேற்றுக்கடி; - உடையவர்தேவரீர் திருவடிகளிலே காட்டிக்கொடுத்த உறவும், ஆழ்வானோடுண்டான குடல்துடக்கும், எம்பாருமிறே என்று விண்ணப்பஞ்செய்ய; திரு

பட்டர்திருநாடலங்கரித்தல்.

வோலக்கத்திலிருந்தஸ்ரீரங்கமறையோர்பட்டரைப்பார்த்து, பெருமாள், உகப்புத்தலைமண்டையிட்டு விசாரியாமல் ஒருவார்த்தையருளிச் செய்தருளினார், நீர் இங்ஙனே உகந்து அங்கீகரிக்கிறதென், உம்மைக்கொண்டு இவ்விபூதியைத் திருத்தவேணுமென்றன்றோ பெருமாள் திருவுள்ளம் பற்றியிருக்கிறதென்ன; பட்டரும், ஆனால் இவ்விபூதியும், இவ்விபூதியிலுள்ளாரும, பாக்யஹீநராகில் அடியேன் செய்வதென்; நாய்க்குடலுக்கு நறுநெய்தொங்குமோ, என்னை இவ்விபூதிபொறுக்குமோ, இன்னம் சிறிதுநாள் இங்கே அடியேனைக்கொண்டருளில பரமபதத்திற்கும் இதுக்கும் [illegible] என்றருளிச்செய்து, பெருமாள் தம்மை விசேஷகடாக்ஷம் செய்தருளின [illegible] மாஹாத்ம்யத்தாலுண்டான செருக்குத் தவிராமையுடன், [illegible] சந்நிதியைப்பண்ணி, நாய [illegible] திருவடித்தாமரைகளும், [illegible] சிவந்த திருமுகமண்டலமும், முறுவலும [illegible] பரமபதத்தில் கண்டு [illegible] கொண்டு குதித்து வருவேனென்று விண்ணப்பம் [illegible] பெரியபெருமாளையும் ஆபாதசூடம் [illegible] கண்ணாரஸேவித்துநிற்க; பெருமாள் [illegible] பாஹ்மாதபண்ணுவித்து, கோயில் [illegible] ஸ்ரீவைஷ்ணவர்களும், ஸேவித்துவர, [illegible] எழுந்தருளி ஆண்டாளை ஸேவித்து நிற்க; அவரும், "[illegible] புகுவீர்" என்று ஆசீர்வதிக்க; பட்டரும், "அடியேனுக்கு வேண்டுவதிதே" என்றுஉகந்தருளி, [illegible] அமுதுசெய்தருளி [illegible] எனையுமபோலே திருநெடுந்தாண்டகம் [illegible] செய்யாநிற்கச்செய்தே "அலமுரிந்த நெடுந்தடக்கை" என்கிறபாட்டுக்கு அர்த்தமருளிச்செய்கிறபோது, "அஞ்சிறைய [illegible]" என்கிறவிடத்திலே "பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்டபின், பிறவியென்னும் கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றால்" என்று இத்தை இரட்டித்த நுஸந்தித்தருளி, திருக்கண்களை மலரவிழித்து, திருமேனியைச் சிலிர்ப்பி, புன்முறுவல்செய்து திருமுடியிலே அஞ்சலிசெய்துகொண்டு, அணையிலேசாய்ந்து திருக்கச்செய்தே சிரகபாலம் வெடித்துத் திருநாட்டுக்கெழுந்தருள; முதலிகளும், உடனேசென்று பட்டர் இளைத்து எழுந்தருளியிருக்கிறாரென்று ஆண்டாளுக்கறிவிக்க; ஆண்டாளும், சடக்கென வெழுந்தருளி, பட்டரை வாரியெடுத்து மார்பிலே அணைத்துக்கொண்டு, திருநாட்டுக்கெழுந்தருளின விஸ்மயத்தைக்கண்டு, திருவுள்ளங் கலங்குதல், திருமுகம் கன்றுதல், கண்ணீர்மல்குதல் செய்யாதே, வண்டுகள் பூவின்பரிமளமறிந்து ஆக்ராணித்து க்ரஹிக்கும்[illegible] போலே பட்டருடைய ஸௌகுமார்யமறிந்து நலக்காமல்

கமலத்தையலர்த்தி, தான் * தெய்வவண்டானதன்மைதோன்ற,ஸ்ரீவை குண்டநாதன் இவரைக் கைக்கொண்டருளுவதே!பெருமாளுக்கும நாய்ச்சிமாருக்கும் பேரிழவுசெல்லாநிற்க, பரமபதநிலயனுக்கும அங்குள்ள நாய்ச்சிமாருக்கும் பெருவாழ்வு செல்லுகிறதே! என்று, புத்ரசோக லேசமற்று, உடையவன் உடைமையைககொண்டால் நாம் வெறுக்கலாமோ என்று ஆண்டானிருக்க; கடல் கலங்கினாப்போலே கோயிலி லுள்ளாரடங்க சோகார்த்தராய்க்கிடந்து துடிக்க; வேதாஂதிகளும் வேரற்றமரம்போலே கோஷித்துககொண்டு விழுந்து சோகார்த்தராய் பஹுவாய் ப்ரலாபித்து * மழைக்கண்ணீர் மலகநிறக; பெருமாளும் நாய்ச்சிமாரும்,திருமுத்தின்பணி,காளாஞ்சி, திருவெண்சாமரம், மேல் கட்டு, முத்துத்தாமம் தொடக்கமான தம்முடைய ஸர்வபரிஜந பரிச்சதங்களடங்கக்கொடுத்து,நம்முடையஅவப்ரதோத்ஸவமபோலே கொண்டாடுங்கோளென்று திருவுள்ளமாகி, இப்போது நமக்குச் செவ்வாய் வக்ரமாய்தென்று திருவுள்ளம் நொந்து,நம் புத்ரனே யிழந்தோமே! என்று சுருளமுதும் அமுதுசெய்யாமல், முசித்தெழுந்தருளியிருக்க; வேதாஂதிமுதலானமுதலிள், சீராமப்பிள்ளையைக்கொண்டு பட்டரை ப்ரஹ்மமேதத்தாலே ஸஂகரித்துப் பள்ளிபடுத்து, அவப்ருதங் கொண்டாடி மீண்டுவருமபோது, நஞ்சீயர், முட்டாக்கிட்டுக் கொண்டு புறககடைவழியாலே தமமடமேஎழுந்தருள, ஸ்ரீபாதத்து முதலிகள் இதுக்கடியென்னென்று விண்ணப்பஞ்செய்ய, நஞ்சீயரும்,; புதுக்க அறுத்தவிதவை தெருவிலே வெளிபபட வருமோவென்றருளிச்செய்தருளினார். அதாவது - ஸச்சிஷ்யன், ஸதாசார்யனையிழந்து பார்யாஸமனாயிருக்கை ஸ்வரூபஸித்தியென்றுகருத்து. பின்பு ஆண்டாளும் முதலிகளும திருமாளிகையிலே புக்கவளவிலே, வெறிச்சான திருமாளிகையைக்கண்டு, பட்டர்திருததம்பியாரான சீராமப்பிள்ளை, "நலல தோர்தாமரைப்பொய்கை நாண்மலர்மேற் பனிசோர,அல்லியும தாதுமுதிர்ந்திட்டழகழிந்தாலொத்ததாலோ,இல்லம வெறியோடிற்றாலோ" என்று அடித்துக்கொண்டு விழுந்து பெருமிடறுசெய்து ஆர்த்தராய்க் கூப்பிட்டு சோகிக்க; ஆண்டாளும், அவ்வார்த்தியைக்கண்டு, இவர் ஆழ்வான்றிருவயிற்றிலே பிறக்கத்தக்கவரல்லரென்றுமுசித்து முதலிகளைப பார்த்து; - பிள்ளாய்! பட்டர் பெற்ற பேற்றுக்குப் பொறாமல் ஜ்ஞாதித்வம் கொண்டாடுகிறீரோ, நீர் இப்படி செய்கையில் நான் ஒருகைப்புடையிலேயிருககிறேனென்ன;சீராமப்பிள்ளையும சோகத்தை விட்டு துணுக்கென வெழுந்திருந்து, ஆண்டாள்திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, அபசாரப்பட்டேன், பொறுத்தருள வேணுமென்று க்ஷமைகொண்டு, பட்டருக்குத் தீர்த்த திருவத்யயநம் செய்தருளி நிறைவேறினபின்பு பெருமாளைத் திருவடித்தொழச் சென்றவளவிலே; பெருமாள் சீராமப்பிள்ளையை அருளப்பாடிட்டருளி, பட்டரை

யிழந்தோம், உமக்கு நாமிருக்கிறோம், முசியாதே கொள்ளு மென்று பட்டருடையவரிசைகளடங்கக் கொடுத்தருளி, ப்ரஹ்மரதம் பண்ணுவித்துத் திருமாளிகையிலே போகவிட; சீராமப்பிள்ளையும் முசிப்பற்று ஹ்ருஷ்டராயிருந்து தர்சநம் நிர்வஹித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார். இதனால் - மஞ்சளநீர் குடிப்பித்துப் பெற்றுவளர்த்தவரே பெருவீடுகொடுக்கும்படியான தன்னேற்றமும், அர்த்தாநுஸந்தாநவேளையிலே ஹார்த்தனை ஸாக்ஷாத்கரித்து வழிநடத்தும்படியான தன்னேற்றமும், பேறிழவிரண்டுக்கும் பெருமாள் தாமாய் அதில்கலக்கமற்ற தன்னேற்றமும், ஆழ்வானருடலதுடக்குடையபட்டர்க்கேயுள்ளதொன்றிறே. பட்டர்வைபவம்முற்றசசொல்லி முடியாதிறே. யதாமதி யதாச்ருதமாகச் சொன்னதித்தனை.

பட்டர்திருநக்ஷத்ரம் வைகாசியில் அநுராதம். அவர்தனியன் - "ஸ்ரீபராஶரபட்டார்யஶ் ஸ்ரீரங்கேஶபுரோஹித:-ஸ்ரீவத்ஸாங்கஸுதஶ் ஸ்ரீமாந்ஶ்ரேயஸே மேஸ்து பூயஸே" (శ్రీపరాశరభట్టార్యశ్శ్రీరఙ్గేశపురోహితః। శ్రీవత్సాఙ్కసుతశ్శ్రీమాన్ శ్రేయసే మేஸ్తు భూయసే)

பட்டர்திருவடிகளே ஶரணம்

நஞ்சீயர்வைபவம்.

அநந்தரம் வேதாந்திகளான நஞ்சீயர், *பட்டர்நல்லருள்கொண்டு திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரமாக ஸ்ரீபாஷ்ய ப்ரக்ரியையாலே ஒரு வ்யாக்யாநம் செய்து, பட்டோலைகொண்டு இத்தை ஒரு ஸம்புடத்திலே நன்றாகவெழுதித்தர வல்லாருண்டோவென்று தம் ஸ்ரீபாதத்து முதலிகளைக் கேட்க; அவர்களும், தென்கரையில் நின்றும் நம்பூர்வரதராஜரென்பாரொருவர் பலநாளுமிங்கே வருவர், அவர் நன்றாக எழுதுவரென்று விண்ணப்பஞ்செய்ய; அவரையழைப்பித்து ஒரு காந்தமெழுதிக் காணுமென்ன எழுதிக்காட்ட; ஜீயரும் அத்தைத்திருக்கண்சாத்தி விசேஷ கடாக்ஷம் செய்தருளி, அவரை பஞ்சஸம்ஸ்கார யுக்தராக்கி ஒன்பதினாயிரத்தை ஒருரு அருளிச்செய்து தப்பாமல் எழுதித்தாருமென்று பட்டோலையைவரதராஜர்கையிலேகொடுத்தருள; அவரும் அத்தைவாங்கி திருமுடியிலேகட்டிக்கொண்டு திருக்காவேரியிலே நீஞ்சிப்போகச் செய்தே, ஒரு அலை வந்தடித்து க்ரந்தம் ஆற்றுக்குள்ளே விழுந்து போக, வரதராஜரும் அக்கரையிலேயேறி, பட்டோலை போய்விட்டதே! இனி நாம் என்செய்யக்கடவோம்என்றுவிசாரித்து, ஒருஅலேகத்தை யுண்டாக்கிக்கொண்டு நஞ்சீயர்ப்ரஸாதித்தருளினவர்த்தமொன்றும்தப்பால்ஒன்பதினாயிரமும் நன்றாகவெழுதியருளி, ஜீயர்திருக்கையிலேகொடுக்க, ஜீயரும் ஸ்ரீகோசத்தை யவிழ்த்துப் பார்க்குமளவில் தாமருளிச்செய்த கட்டளையாயிருக்கச் செய்தேயும், சப்தங்களுக்கு அநுகுணமாக பலவிடங்களிலும் வி[illegible]

ஷார்த்தங்கள் எழுதியிருக்கையாலே அத்தைக்கண்டு திருவுள்ள முகந்தருளி வரதராஜரைப்பார்த்து இது மிகவும் நன்றாயிராநின்றது, இதென்னென்றுகேட்க; அவரும் பயப்பட்டு ஒன்றும் விண்ணப்பஞ் செய்யாதிருக்க, ஜீயரும் நீர் பயப்படவேண்டாம், உண்மையைச்சொல்லுமென்ன, வரதராஜரும், ஜீயா! திருக்காவேரி நீச்சாகையாலே பட்டோலையை அடியேன் தலையிலே சட்டிக்கொண்டு நீஞ்சப்புக்கவாறே ஒரு அலைவந்து அடிக்கையாலே அது ஆற்றிலே விழுந்து அமிழ்ந்து போயிற்று, இது தேவரீர் ஒருருப்ரஸாதித்தருளின கட்டளையிலே எழுதினேனென்று விண்ணப்பஞ்செய்ய; நஞ்சீயரும் "இவருடைய புத்திவிசேஷமிருந்தபடி என்றான்! இவர் மஹாஸமர்த்தராயிருந்தார், நன்றாகவெழுதினார்" என்று திருவுள்ளம் மிகவும் உகந்தருளி, வரதராஜரை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு, "இவர் நம்முடைய பிள்ளை, திருக்கலிகன்றிதாஸர்" என்று திருநாமஞ்சாத்தி, தம்முடைய ஸந்நிதியிலே அனவரதமும் பிரியாமல் வைத்துக்கொண்டு, பிள்ளைக்கு ஸகலார்த்தங்களையும் கரதலாமலகமாம்படி ப்ரஸாதித்தருளினார். அவரும் ஜீயரையல்லது* தேவுமற்றறியேனென்றிருந்தார். ஆகையாலே ஜீயர் நம்முடைய பிள்ளையென்று அருளிச்செய்தவன்று தொடங்கி வரதராஜருக்கு "நம்பிள்ளை" என்று திருநாமமாயிற்று.

நம்பிள்ளை, நஞ்சீயரை இதரோபாயங்களுக்கு ப்ரமாணமும் பஹுளமாய் அநுஷ்டாதாக்களும் பலராயிருக்க, இதுக்கு ப்ரமாணமும் சுருங்கி அநுஷ்டாதாக்களும் சுருங்கி நிச்சசந்தோஷித்தவர்களும் அநுஸந்தேயங்களன்றியேயிருப்பானென்னென்னவென்று கேட்க; ஜீயர் அருளிச்செய்தபடி; இருவர்கூடியாற்றிலேயிறங்கிப்போகாநின்றால், ஆற்றிலமிழ்ந்தினவனை அம்பூதவன் கைப்பிடித்துக்கரையேற்றுகைக்கு ஒரு ப்ரமாணாபேக்ஷை வேணுமோ; ப்ரமாணாபேக்ஷையுண்டென்றுநினைத்தீராகிலும், ([illegible]) ([illegible]) ([illegible] సంయుతః) ([illegible]) (முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே, தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:) (ந்யாஸ இத்யாஹுர்மநீஷிணோ ப்ரஹ்மாணம்) ([illegible] பாயபர்யாயோந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத:) (ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்தச்சரணாகதிரித்யபி) என்று ஏவமாதிப்ரமாணங்கள் பலவற்றையுமருளிச்செய்து, ப்ரமாணங்களில் குறையில்லை, இனி அதிகாரிசுருக்கம்பார்க்கில் லோகத்தில் இருந்ததேகுடியாக ஸம்ஸாரிகளாயிருக்க அதில் நாலிரண்டுபேர் உத்தமாச்ரமிகளானால் ஸம்ஸாரிகளுக்கு ஒரு உத்கர்ஷமும் ஸந்யாஸிகளுக்கு ஒரு அபகர்ஷமுமுண்டோ? இனி (జ్యోతిష్టోమేన స్వర్గకామో యజేత) என்று ஸ்வர்க்காநுபவத்துக்கு ஸாதனத்தை ஶாஸ்த்ரம் விதியாநின்றால் ஒருஊரிலே ஒருவனன்றோ யஜித்தான் அதுக்கேறவும் ஆள்பற்றப்போகிறதோ என்

ரோ கேட்கிறது, (ஶிஷ்யாதீம்ஶ்ச கரந்யாஸமங்கந்யாஸஞ்ச வர்ஜயேத்) (சிஷ்யாதீம்ஸ்சகர, ந்யாஸ மங்கந்யாஸஞ்ச வர்ஜயேத்) என்கையாலே - சிஷ்யாத்யபேக்ஷை யில்லை, இதிலாத்தத்துக்குக் கூட்டுவேண்டிலிறே இதற்குக்கூட்டு வேண்டுவது, இதுவே எனக்குக்கருத்தென்றுதிருவுள்ளமாக, பிள்ளையும் க்ருதார்த்தராயருளினார்.

நம்பிள்ளை, நஞ்சீயரைக்குறித்து, ஒருவன் தனக்கு ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்றறியலாவது எவ்வவஸ்தையிற் பிறந்தாலென்ன; ஜீயரும் அர்ச்சாவதாரத்துக்கு பரத்வமுண்டென்றறிந்தவளவிலும், ஒருஸ்ரீவைஷ்ணவன் பாகவதபுத்ராதிகள்பக்கல் ஸ்நேஹத்தளவாகிலும் ஸ்நேஹமறந்தவளவிலும், ஒருஸ்ரீவைஷ்ணவர் கடுத்துவார்த்தை யருளிச்செய்தாலே தம்மைப்பொருந்தியெலவிட்டு நத்தடடாதேபோகரூபமாயிருந்தவளவிலும் ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்றறியலாம்; ஆகையால் அர்ச்சாவதார பரத்வபுத்தியும், பாகவதபர்யமும், தத்கடிசேர்த்திபோக்யதா புத்தியுமுண்டானபோது ஸ்ரீவைஷ்ணவத்வம் ஸித்தமென்கிறது.

நம்பிள்ளை, நஞ்சீயர்ஸ்ரீபாதத்திலே ஸ்ரீபாஷ்யம் வாசித்தருளாநிற்கச்செய்தே, திருப்போனகம் சமைந்ததென்றவாறே, சொக்கத்தேவனைத் திருவாராதநம் பண்ணுமென்று அருளிச்செய்ய; அடியேன் திருவாராதநக்ரமத்தையறிந்திலேனென்று விண்ணப்பஞ்செய்ய; ஜீயரும், நானும் சாலக்ரமமறிந்திராநின்றேன், தவர உத்தரவாக்யத்தையநுஸந்தித்து திருவடிவிளக்கி அமுது செய்யப்பண்ணமாட்டீரோவென்றருளிச்செய்தார். உகந்தருளின விடங்கள் பலவிடமாய் திருப்போனகம் படைப்பது ஒன்றிலேயாகிலும் அமுதுசெய்தருளப்பண்ணும்படி எங்ஙனேயென்று, பிள்ளை, நஞ்சீயரைக்கேட்க, ஜீயரும் த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களிரண்டுக்கும் நடுவே, "ஸர்வமங்கள விக்ரஹாய" என்கிற விசேஷணஸஹிதமாகவுச்சரித்து அமுதுசெய்யப்பண்ணுவது என்றருளிச்செய்தார். இத்தால் - உபாயகண்டமத்யே இத்தை உச்சரிக்கவருளிச்செய்தது - நாராயணசப்த சதுர்த்தியுடன் சதுர்த்தி சேர்ந்திருக்கைக்காகவும், உபாயநாராயணபதஸூசித விக்ரஹ ஸமர்ப்பகமாகைக்காகவும், அநந்யப்ரயோஜநத்வ நமோர்த்தமாகவுமிறே. இத்தால் - நம்பூர்வாசார்யர்கள் த்வயமொழிந்த மந்த்ரங்கொண்டு திருவடிவிளக்கார்களென்றதாகிறது.

நஞ்சீயரை, நம்பிள்ளை, "அவதாரங்களேதுக்காக" என்றுகேட்க; ஜீயரும், ஒரோரவதாரங்களால்பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பண்ணினவனை அந்தபலத்தை அநுபவிப்பிக்கைக்காக வென்றருளினார். பிள்ளையும் பாகவதாபசாரந்தானேதென்று விண்ணப்பஞ்செய்ய, ஜீயரும்;-ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டக்கால் தங்களோபாதி ப்ரக்ருதிமான்களாக நினைத்திருக்கை புல்லிமை; எங்ஙனேயென்னில், ஸ்ரீவைஷ்ணவர்கள், * திருவுடைமன்னர் * செழுமாமணிகள் * [illegible]

தேவர் * பெருமக்கள் * தெள்ளியார் * பெருந்தவத்தர் * உருவுடையார் இளையார்கள் * வேதம்வல்லார், * செய்தவேள்வியர் * தக்கார் * மிக்கார் * வேதவிமலர் * சிறுமாமனிசர் * எம்பிரான்தனசின்னங்கள் * பேராளன பேரோதும்பெரியோர் என்று இப்படியாக விரும்பி, நம்குலநாதராய் * மயர்வற மதிநலமருளப்பெற்ற வாழ்வார்கள் பஹுமதிபண்ணி திருநாமங்கள்சாத்திவாய்புலத்தி யருளிச் செய்கையாலே, ஸ்ரீவைஷ்ணவர்களை தங்களோடொத்த ப்ரக்ருதிமான்களென்று நினைத்திருக்கை நேரே பாகவதாபசாரமென்றருளினர். ஆகையால் ஆழ்வார்களும் உடபட, "கொண்டாடும் நெஞ்சுடையாரவரெங்கள் குலதெய்வமே" என்று பஹுமதி பண்ணி விரும்புகையே ஸ்ரீவைஷ்ணவத்வலக்ஷணமிறே. இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவவிஷயத்தில ஸாமாந்யபுத்தியே அநர்த்தஹேது =

நஞ்சீயர் நம்பிள்ளையைக்குறித்து, பகவதநுபவம் பண்ணுமவனுக்கு விஷயாநுபவத்தில அந்வயமில்லை, இவ்வர்த்தத்தை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் அருளிச்செய்தார்களிறே. எங்ஙனேயெனில்;- * வாசுதேவன் வலையுளகப்படுதல், மாதரார்கயற்கணென்னும் வலையுளகப்படுதல், * மதுரக்கொழுஞ் சாறுகொண்ட சுந்தரத்தோளிலே யகப்படுதல், * சாந்தேந்து மென்முலையார் தடந்தோளிலே யகப்படுதல், * வானவர்க்கு வன் துணையான அரங்கத்துறையுமின்னு துணைவனைத் துணையென்றிருத்தல், * ஆவியே யமுதேயென நினைந்துருகி யவரவர்பணைமுலை துணையென்றிருத்தல், * அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதத்தைப் பானம்பண்ணுதல், * பாவையராவாயமுதத்தைப் பானம்பண்ணுதல், * நான்குவேதப்பயனைப்பேணுதல், * மாதரார்வனமுலைப்பயனைப் பேணுதல், ஒன்றுஇதுவாதல், ஒன்றுஅதுவாதலென்று ஏவமாதிகளாலே பஹுமுகமாக வருளிசசெய்தார்களிறே. ஆகையாலே "அன்னமென்னடையினார்கலவியை யருவருத்தஞ்சி" என்றும், "முந்துறவுரைக்கேன் விரைக்குழல்மடவார்கலவியைவிடு" என்றும - பரகாலரான திருமங்கையாழ்வார் ப்ரதமம் விஷயருசியைக் காறியுமிழ்ந்தே பகவதஸமாச்ரயணம் பண்ணவேணுமென்று நிஷ்கர்ஷித்தருளிச்செய்கையாலே, க்ஷுத்ரவிஷயத்தை ஸவாஸநமாகப்பரித்யஜித்தேப்ராப்தவிஷயத்தைப் பற்றவேணுமென்று அருளிச்செய்ய; பிள்ளையும் க்ருதார்த்தராய நஞ்சீயரை அரைக்ஷணமும் * பிரியாவடிமைசெய்துகொண்டு வாழ்ந்தருளும் காலத்திலே, நஞ்சீயரும், நூறுரு திருவாய்மொழிக்கு அர்த்தம் நிர்வஹித் தருளுகையாலே, பிள்ளை ஜீயருக்கு சதாபிஷேகமபண்ணியருளினரென்று ப்ரஸித்தமிறே.

நஞ்சீயர்திருவடிகளேசரணம்.

நம்பிள்ளைவைபவம்.

நஞ்சீயர்பக்கலிலும் நம்பிள்ளைபக்கலிலே ஸர்வார்த்தங்களும் குடிபுகுருகையாலே பிள்ளையும் தீபாதுத்பந்நப்ரதீபம்போலே தர்சநம்

நிர்வஹிக்கக்கண்டு, ஜீயரும் க்ர்தக்ர்த்யரா யிருக்கும் நாளிலே, நம்பி ள்ளைஸ்ரீபாதத்திலே பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பி ள்ளை, பின்பழகிய பெருமாள்ஜீயர், ஈயுண்ணிமாதவப்பெருமாள் முத லான அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆச்ரயித்து க்ர்தார்த்தராயிருந்தார் கள். இவர்களிலே பின்பழகியபெருமாள் ஜீயர் ஊணுமுறக்கமுமின் றியே பிள்ளைதிருவடிகளிலே * வழுவிலாவடிமைசெய்துகொண்டு வாழ்ந்தருளும்காலத்திலே; ஒருகால் திருமேனி பாங்கின் றியே கண்வளர்ந்தருளுகிறபோது, தமக்கு அந்தரங்கரான ஸ்ரீவைஷ்ண வர்களை யழைத்து, அடியேன் இப்போது திருவடிச்சாராமல் இங்கே இன்னம் சிறிதுநாளிருக்கும்படி பெருமாள்ஸந்நிதியிலேசென்று *ஏழை யேதலனும்* ஆழிமொழச்சந்த்ரும விண்ணப்பஞ்செய்து ப்ரபத்திபண்ணி வேண்டிக்கொள்ளுங்கோளென்ன, அவர்களும் அப்படியே செய்து நிற்க, ஜீயருக்குத் திருமேனி பண்டுபோலே பாங்காயிற்று.

இத்தைக்கேட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள், நம்பிள்ளை ஸந்நிதியிலே சென்று தண்டன்ஸமர்ப்பித்து, ஜ்ஞாநவ்ருத்தருமாய் வயோவ்ர்த்தரு மாயிருக்கும் பின்பழகியபெருமாள்ஜீயர் இப்படிச்செய்தார், இது இவர்ஸ்வரூபத்துக்குச் சேருமோவென்று விண்ணப்பம்செய்ய; பிள்ளை யும் அவருடைய அபிப்ராயமறிகிலோம், ஸகல சாஸ்த்ரங்களும் போ வது பிள்ளைஎங்களாழ்வாருக்காயிற்று, அவர்பக்கல்சென்று கேளுங் கோளென்ன; ஸ்ரீவைஷ்ணவர்களும் எங்களாழ்வானைக் கேட்க; அவ ரும், ஸ்ரீரங்கைச்வர்யத்தில ஸங்கம்போலே காணுமென்ன; பிள்ளையும் இத்தைக்கேட்டு அழகிது, திருநாராயணபுரத்தரையரைச்சென்றுகேளு ங்கோளென்ன; அவர்களும் அவரைக்கிட்டிக் கேட்டவிடத்தில் அவ ரும் துவக்கிலாகைங்கர்யம் தலைக்கட்டாமையாலே காணுமென்ன; பிள் ளைஇத்தையுங்கேட்டு ஆகிறதென்று அம்மங்கியம்மாளைக் கேளுங்கோ ளென்ன; அவரும், பிள்ளைகோஷ்டியி லிருந்தவர்களுக்கும் ஒருதேச விசேஷம்ருசிக்குமோவென்ன, இத்தையும்பிள்ளைகேட்டு நலமென்று விட்டு, அம்மங்கிப் பெரியமுதலியாரைக்கேளுங்கோளென்ன, அவரும் நம்பெருமாள் சிவந்ததிருமுகமண்டலமும் கஸ்தூரித்திருநாமமும் பர மபதத்திலேகண்டிலேனாகில, ஒரு மூலையடியே முறித்துக்கொண்டு வரு வேனென்றன்றோ பட்டருளிச்செய்தது, அப்படியே யிவரும் நம்பெரு மாள் சிவந்ததிருமுகமண்டலத்தையும்திருநுதலில் கஸ்தூரித்திருநாம த்தையும் விட்டுப்போகமாட்டாராக வேணுமென்றார்; பிள்ளை, இவற்றையெல்லாம் திருவுள்ளம்பற்றியருளி, ஜீயர்திருமுகமண்டலத் தைப்பார்த்துச்சிரித்து இவை உம்முடையநினைவுக்குஒக்குமோவெ ன்ன; இவையித்தனையுமன்றென்ன, ஆகில் உம்முடையவபிப்ராயத்தை சொல்லவேணுமென்றருளிச்செய்ய ஜீயர் விண்ணப்பம்செய்தபடி; எண்ணெய்க்காப்பு முறைகளிலே தேவரீர் திருமஞ்சனங்கொண்டருளி

தூயவுடையாடை திருவுத்தரீயம் சாத்தியருளி யுலாவியருளும்போது குறுவியர்ப்போடேகூடின திருமுகமண்டலஸேவையையும், சுற்றிச்சுழற்றிப்பணிமாறுகிற கைங்கர்யத்தையும்விட்டு அடியேனுக்கு பரமபதத்துக்குப்போக இச்சையாயிருந்ததில்லை, இன்னம் சிறிதுகால மிங்கேயிருந்து கைங்கர்யம் பண்ணவேணுமென்று நினைத்துச்செய்தேனென்று விண்ணப்பஞ்செய்தார். இதைக்கேட்டருளி பிள்ளையும் முதலிகளும் இவ்வுடம்போடே இவ்வைச்வர்யம் கூடுவதே! என்று மிகவும் திருவுள்ளமுகந்தருளினார்கள்.

ஒருநாள் நம்பிள்ளை, பகவத்விஷயமருளிச்செய்து கோஷ்டிகுலைந்தவளவிலே பின்பழகிய பெருமாள்ஜீயர் பிள்ளைதிருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களேவையென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும், இச்சை ஸ்வரூபம், இரக்கம் உபாயம், இனிமை உபேயமென்றருளிச்செய்ய; அப்படியன்று அடியேன் நினைத்திருப்பது என்று விண்ணப்பஞ்செய்ய; உமக்கென்று சிலபிள்ளைக்கிணறுகளுண்டோ, நீரெங்ஙனே நினைத்திருப்பது, அத்தைச்சொல்லிக்காணீரென்ன, தேவரீர் அநுக்ரஹம்செய்தபடியேயபிமானித்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமையாயிருக்கையே அடியேனுக்கு ஸ்வரூபம்; அவர்களுடைய அபிமானமே அடியேனுக்கு உபாயம்; அவர்களுடைய முகமலர்த்தியே அடியேனுக்கு உபேயமென்று நினைத்திருப்பன் என்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும் பரியப்பட்டருளினார்.

ஒருக்கால் பிள்ளை, பகவத்விஷயம் அருளிச்செய்து கோஷ்டிகுலைந்து போகாநிற்கச்செய்தே, வைஷ்ணவனாயிருப்பானொருராஜா, வருகிற பெருந்திரளைக் கண்டு, நம்பெருமாள் திருவோலக்கம் குலைந்ததோ, நம்பிள்ளை கோஷ்டி குலைந்ததோவென்று கேட்டானென்பார்கள். இப்படி ஸம்ருத்தையான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே நம்பிள்ளை வாழ்ந்தருளுங்காலத்திலே, முதலியாண்டான் திருப்பேரனாராய், கந்தாடையாண்டான் குமாரரான கந்தாடைத்தோழப்பர், நம்பிள்ளையுடைய பெருமதிப்பையும், வைபவத்தையுங்கண்டு, அஸூயையால பொறுக்க மாட்டாம லிருக்குமவர் ஒருநாள் பெருமாளைஸேவித்துக்கொண்டிருக்கிறவளவிலே, பிள்ளையும் பெருந்திரளுமாகப் பெருமாளைஸேவிக்கவென்று கோயிலுக்குள்ளேயெழுந்தருள; தோழப்பர், பிள்ளையைச்சீறி பஹுபருஷோக்திகளைச் சொல்லிநிந்திக்க, பிள்ளையும், அத்தைக்கேட்டு நடுங்கிக்கொண்டு பெருமாளைஸேவித்து புறப்படவெழுந்தருள; இச்செய்தியை ஜ்ஞாநாதிகையாயிருக்கிறதோழப்பர்தேவிகள்கேட்டு வ்யாகுலப்பட்டு, திருமாளிகைக்குள் செய்கிற கைங்கர்யங்களையும்செய்யாமல் வெறுத்து எழுந்தருளியிருக்க; அவ்வளவிலே தோழப்பரும் பெருமாளைஸேவித்து மீண்டுதம்திருமாளிகையிலே எழுந்தருள; தேவிகளும் முன்புபோலே எதிரே புறப்பட்டுவந்து ப்ரீதியுடனே தமக்கு ஒருகைங்கர்யமும் பண்

ணுமையாலே, அவளைப்பார்த்து, உன்னை நாம் அங்கீகரித்தவன்று தொடங்கி நம்மைக்கண்டால் ஆசார்ய ப்ரதிபத்திபண்ணிக்கொண்டு போந்த நீ இன்று உதாஸீநம பண்ணுகைக்கடி யென்னென்று கேட்டருள; தேவிகளும, தோழப்பரைக்குறித்து, வாரீர், ஆழ்வாருடைய திருவவதாரமென்னலாம்படி பெருமாளுக்குப்ராணபூதராயிருந்துள்ள நம்பிள்ளையை பெருமாள்ஸந்நிதியிலே அநேகமாக பருஷோக்திகளைப் பண்ணி தூஷித்து, "இப்படி செய்தோமே!" என்கிற அநுதாபமுமற்று ஜீவிக்கவிருக்கிற உம்மோடு எனக்கென்ன ஸம்பந்தமுண்டு, நீர் என்னை வெறுத்தீராகில், என்னுடைய மாதாபிதாக்கள் பெற்றுவளர்த்து உம்முடையகையிலே காட்டித்தந்த இந்த சரீரத்தை உமக்குவேண்டினபடி செய்துகொள்ளும, எங்களாசார்யர், என் ஆத்மாவை அங்கீகரித்தருளினவன்றே நான் உஜ்ஜீவித்தேன; ஆனபின்பு, ([illegible]) (பதமகோடி ஸஹஸ்ரேநாபிநக்ஷமாமிநதாசந) என்று பாகவத நிந்தனைபண்ணினவர்களை ஒருக்காலும் க்ஷமிப்பதில்லையென்று பெருமாள்தாமே யருளிச்செய்த பாசுரமறிந்தும அறியாதவர்போலே யிருக்கிற உம்மோடு எனக்கு ஸஹவாஸங்கூடாது, நிலம்பிளந்தால் இழையிடவொண்ணாதாப்போலவும, கடலுடைந்தால் கட்டவொண்ணாதாப் போலவும், மலைமுறிந்தால் தாங்கவொண்ணாதாப்போலவும் பாகவதாபசாரம் தீர்த்துக்கொள்ளக்கூடாதிறே; ஆனபின்பு நான் என்னிஷ்டத்திலே யிருந்து ஈடேறப் போகிறேனென்ன; தோழப்பரும், தேவிகள் சொல்லுகிற வார்த்தைகளைக்கேட்டு, சற்றுப்போது நினைத்தெழுந்தருளி யிருந்து, பெரியவித்வானுகையாலும், திருவுள்ளத்திலுண்டான அஸூயையால்வந்த திருவுள்ளத்தின் கலக்கந்தீர்ந்து தெளிந்து தேவிகளைப்பார்த்து நீசொன்னதெல்லாம் ஒக்கும், நாம் தப்புச்செய்தோம, இனிமேல் செய்யவடுக்குமதேதென்ன; தேவிகளும், ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடாதே, கெடுத்தவிடத்தே தேடிக்கொள்ளீரென்ன; தோழப்பரும் ஆவதேதென்னென்ன; தேவிகளும், பரமதயாளுவான நம்பிள்ளை திருவடிகளிலேசென்று ஸேவித்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு அவர் க்ருபை பண்ணியருள ஈடேறுமென்ன; தோழப்பரும், அவரை, பெருமாளுடைய பெருந்திருவோலக்கத்திலே பரிபவித்து, இப்போது அவர் ஸந்நிதியிலே போய்நிற்கவென்றால் எனக்கு லஜ்ஜாபயங்கள் அநுவர்த்தியாநின்றது, நீ கூடவந்து க்ஷமிப்பிக்க வேணுமென்ன; தேவிகளும் தோழப்பர்சொல்லும் வார்த்தையைக்கேட்டு அப்படியே செய்கிறேனென்று கடுக வெழுந்திருந்து அவரையுங்கூட்டிக்கொண்டு, நம்பிள்ளை திருமாளிகைக் கெழுந்தருளுவதாகப் புறப்படுகிற வளவிலே, நம்பிள்ளை செய்தபடி;-கோயிலிலும் எழுந்தருளினபின்பு முதலிகளெல்லாரையும் அனுப்பியருளி, பகலெல்லாம் அமுதுசெய்தருளாமல் தம் திரு

ஸாயம்காலமானவாறே
மாளிகைக்குள்ளே யெழுந்தருளியிருந்து
ஆவச்யககர்மத்தைச் செய்தருளி ஒற்றைத் திருப்பரிவட்டத்துடனே
முட்டாக்கிட்டுக்கொண்டு தாம் ஒருவருமே எழுந்தருளி, தோழப்பர்
திருமாளிகைவாசலிலே கைப்புடையிலேவந்து கண்வளர்ந்தருள; தோ
ழப்பரும் தேவிகளும், திருவிளக்கையேற்றிக்கொண்டு, பிள்ளைதிருமாளி
கைக் கெழுந்தருளுவதாக வாசலிலேபுறப்பட்டவளவிலே கைப்புடை
யிலே ஒருவெள்ளைகிடக்கிறதைக்கண்டு, தோழப்பர், இங்குக் கிடக்
கிறீரென்று கேட்க,பிள்ளை, "அடியேன் திருக்கலிகன்றிதாஸன்" என்
ன; அவ்வளவிலே தோழப்பர் இதென்னென்று திகைத்து, பிள்ளையைப்
பார்த்து, நாம் மஹாதேஜஸ்வி, நம்மை நம்பெருமாள்திருவோலக்
கத்திலே பரிபவிக்கலாமோதென் என்கிற கோபாதிசயத்தாலே நம்மு
டைய வாசலிலேவந்து மௌர்க்க்யம் செய்வதாகவந்து கிடக்கிறீரோ
வென்ன; பிள்ளையும், அடியேன் அப்படிசெய்யவரவில்லை, பெரியபெரு
மாள்ஸந்நிதியிலே முதலியாண்டான்திருப்பேரனான தேவரீர் திரு
வுள்ளங்கலங்கும்படி வர்த்தித்த மஹாபாபியான அடியேனுக்கு தேவரீ
ருடைய திருமாளிகைவாசலல்லது புகுவாசல்மாண்டுவந்துகிடக்கிறேனென்ன;
அவருடைய நைச்யமான வார்த்தைகளைக்கேட்டு இதொரு அதிகாரமிரு
ந்தபடி யென்னென்று போரவித்தராய், பிள்ளையை வாரியெடுத்து
அணைத்துக்கொண்டு, இத்தனைநாளும், சிறிதுபேருக்கு ஆசார்யரென்
றிருந்தேன், இப்போது லோகத்துக்கெல்லாம் நீரே ஆசார்ய
ரென்றறிந்தேனென்றருளிச்செய்து, "லோகாசார்யர்" என்று பிள்
ளைக்குத் திருநாமம்சாத்தியருளி, தம்முடைய திருமாளிகைக்குள்ளே
கொண்டு புக்கு, தாமும் தேவிகளுமாகப் பிள்ளையை அநேகமாக அநு
வர்த்தித்து அவர்திருவுள்ளத்தை மிகவும் உகப்பித்து, சாத்தி வெண்
டும் அர்த்தவிசேஷங்களெல்லாம் கேட்டு பிள்ளை திருவடிகளிலே
மிகவும் ப்ரவணராய, க்ருதார்த்தராயருளினார்.

நஞ்சீயர் பரமபதத்தெழுந்தருளும் ப்ரகாரம்.

நம்பிள்ளை, மஹாவைபவமுடையராய் வாழ்ந்தருளுகிறகாலத்திலே
நூறு திருநக்ஷத்ரம ஸ்ரீமானாயெழுந்தருளியிருந்த நஞ்சீயர்
திருமேனியிலே நோவுசாத்திக்கண்வளர்ந்தருள; திருவடி
ஸம்பந்தியான குட்டிக்குறியினையாழ்வார், ஜீயரைப்பார்த்து, "த்வய
த்தை அநுஸந்தித்தாலாகாதோ" என்ன; நஞ்சீயர் அவரைக்குறித்து,
அதுவென்! நடையாடித்திரிவார்க்குவேண்டாதே கிடக்கைப் பட்டார்
க்கு வேண்டியோ த்வயமிருப்பதென்ன; அவரும் நிருத்தரராய் லஜ்
ஜிதரானாரிறே. இத்தால் - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு த்வயம ஸதாநுஸந்
தேயமென்றதாய்த்து. இத்தைக்கேட்டுத தெக்காழ்வார்பட்டர், ஜீயர்
ஸ்ரீபாதத்திலேசென்று ஸேவித்து உமக்குச் செய்யவேண்டுவதென்
னென்று கேட்டருள, ஜீயரும், பெரியபெருமாள் ஸர்வஸ்வதானம்

பண்ண அநுபவிக்கவேண்டியிராநின்றதென்று விண்ணப்பஞ்செய்ய; தெக்காழ்வார்பட்டரும், இத்தைத் திருமாலைதந்த பெருமாளுக்கு அறிவிக்க, அவரும் இத்தைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் புறப்பட்டருளி, மடத்துவாசலிலேசென்று, சேலையைக் களைந்து ஜீயரை அநுபவிப்பித்தருள, ஜீயரும் அநுபவித்து, பெருமாள் எனக்கு ஸர்வஸ்வதானம் பண்ணியருளினார், நாம் உங்களுக்கு ஸர்வஸ்வதானம் பண்ணுவதாக ஒருப்பட்டோம், அபேக்ஷையுடையார் உடையபடியே அபேக்ஷித்துக்கொள்ளுங்கோளென்றருளிச்செய்ய; பிள்ளையும், அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை யருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; ஜீயரும், மணக்கோலத்திலே முளைதெளிப்பாரைப்போலே, இப்போது தஞ்சமாகக் கேட்பது ஒருவார்த்தையுண்டோ என்று பிள்ளைக்கு அருளிச்செய்தவார்த்தை;- ஆத்மவிநியோகம் ஈஶ்வரனென்றிராதே ஈஶ்வரவிநியோகம் ஆத்மாவென்றிருமென்று அருளிச்செய்ய, அதில் பிள்ளை திருவுள்ளம் ப்ரஸந்நமாகாமையாலே பேசாதேநிற்க; ஜீயரும், உம்முடைய நினைவை சொல்லிக்காணீரென்ன; பிள்ளையும், ஸ்ரீவைஷ்ணவர்கள் என்னை நினைத்திருக்கக் கடவரென்ன; ஜீயரும், அது அதிகாராநுகுணமாகவன்றோ இருப்பது, த்ருப்தனுக்கில் ஆர்த்தனாகிறான், ஆர்த்தனுக்கில் த்ருப்தனாகிறானென்றருளிச்செய்தருளி, பின்னையும் பிள்ளையைக்குறித்து இந்நாககார்யத்திலே உமக்குகாத்தவ்யமில்லை, பெருமாளுக்குத உபாக முதலிகளையுங் கூட்டிக்கொண்டு தர்ஶநார்த்தம் நிர்வஹித்துப்போரீரென்று அருளிச்செய்து, வாரீர் பிள்ளாய்! பட்டர் அடியேனுக்கு ஹிதோபதேசம் செய்து, "வேதாந்தியென்கிற பேரையுடையோம், நம்பக்கலே ஆஶ்ரயித்தோம், பஹுத்ரவ்யத்தை ஆசார்யதக்ஷிணையாகக்கொடுத்தோம்" என்று இறுமாந்திராதே "எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்" என்றருளிச்செய்தார்; நீரும் அப்படியே லோகாசார்யரென்கிற பேரையுடையோம், அருளிச்செயல்நாலாயிரத்திற்கும் பொருள் சொல்லவல்லோம், ஸ்ரீபாஷ்யத்திற்குப் பொருள்சொல்லவல்லோமென்றும் மேன்மையைநினைத்து இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்று அருளிச்செய்து, பிள்ளைமுதலானாரை க்ஷமைகொண்டு தீர்த்தங்கொண்டு அமுதுசெய்தருளப்பண்ணி, சோயிலுக்குநேரே பகவத்ஸேநாபதிஜீயர்மடியிலே திருமுடியும், பின்பழகியபெருமாள் ஜீயர் திருமடியிலே திருவடிகளுமாகக் கண்வளர்ந்தருளி பட்டர்திருவடிகளை த்யானித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். பிள்ளையும், ஆசார்யவிஶ்லேஷத்தை ஸஹிக்கமாட்டாதே * மல்குநீர்கண்ணொடுமையலுற்று க்லேசித்தருள; முதலிகளும், தேவரீர் இங்ஙன் சோகிக்கக்கூடுமோவென்ன பிள்ளையும் தம்மிலேதேறிநின்று, பெருமாள் சாத்திக்களைந்துவரவிட்டருளின திருமாலையையும் திருப்பரிவட்டங்களையும் கொண்டு கோயிலி

ந்துக்கொத்தும் வந்துஸேவிக்க, யதிஸம்ஸ்கார விதியாலும், ப்ராஹ்ம மேதவிதியாலும் ஜீயரை அதிஸம்ப்ரமத்துடனே ஸம்ஸ்கரித்து கலித்துப்பள்ளிபடுத்தருளி, பின்புண்டானகர்த்யங்களையெல்லாம்செய்து திருவத்யயநமும் நடத்தியருளினார்கள்.

அந்திமதசையில் ஈச்வரன்தானே விஷயீகரித்தெழுந்தருளி ஸர்வஸ்வதாநம்பண்ணப்பெற்ற தன்னேற்றமும், திருவாய்மொழிக்கு ஸதாபிஷேகம்பண்ணப்பெற்ற தன்னேற்றமும், ஆசார்யன் எழுந்தருளி யிருந்ததேசமே பரமப்ராப்யமென்று எழுந்தருளி தம்ஸர்வஸ்வத்தையும் அத்தேசத்துக்கே சேஷமாக்கி தத்கைங்கர்யமே யாத்ரையாய் அதுவே தாரக மாகப்பெற்ற தன்னேற்றமும் நஞ்சீயர்க்கேயுள்ளதென்றதிறே. நஞ்சீயர்திருநக்ஷத்ரம் பங்குனியில் உத்திரம். அவர்தனியன் - (నమో వేదాన్తవేద్యాయ జగన్మఙ్గళహేతవే । యస్యవాగమృతాసారపూరితం భువనత్రయమ్ ॥ యద్వచస్సకలంశాస్త్రం యచ్చర్యావైదికీవిధిః । యత్కటాక్షో జగద్రక్షా తం వన్దే మాధవం మునిమ్ ॥)
(நமோவேதாந்தவேத்யாய ஜகந்மங்களஹேதவே யஸ்யவாகம்ருதாஸார பூரிதம்புவநத்ரயம், யத்வசஸ்ஸகலம்சாஸ்த்ரம் யச்சர்யாவைதிகீ விதி:- யத்கடாக்ஷோஜகத்ரக்ஷா தம்வந்தேமாதவம்முநிம்)

இதில் பெருமாளிரங்கின ஸர்வஸ்வதாநம் - முன்னைத்திருமேனி காட்டுகை. ஜீயர்பண்ணின ஸர்வஸ்வதாநம் - முறைவரசமர்த்த விசேஷங்களைவெளியிடுகை. ஆத்மவிநியோகம் [illegible] க்கடி பலித்வாபிமாநித்வமில்லாமை. ஸர்வஸ்வவிநியோகம் ஆசார்யனை திருக்கைக்கடி பலியுமாய் அபிமாநியுமான சேஷித்வ [illegible] காரஹ போக்யதை. ஆர்த்ததசையில் [illegible] ஸம்ஸ்லேஷத்தில் சரீர விஸ்லேஷம் [illegible] பரமார்த்தவிலையில் இப்போதே ஸம்ஸ்லேஷிக்கவேணுமென்று போகின்றேனென்று [illegible] கை. தர்ப்பணத்தில் ஆதர்ஸத்தை [illegible] சரீரவிஸ்லேஷம்பிறக்கும்படி அதிஸயத்த [illegible] விஸ்லேஷத்தளவும் பொறுக்கும்படியான [illegible] ப்தியுண்டாய், இப்போது [illegible] யாகையென்றபடி.

நஞ்சீயர் திருவடிகளே சரணம்.

நம்பிள்ளைவைபவம்.

பிள்ளையும், இவ்வர்த்தத்தை அநுஷ்டாநபர்யந்தமாகக் கண்டருளினார்; எங்ஙனே யென்னில்;- அம்மங்கியம்மாள் பரமபதத்திற்கு எழுந்தருளும்போது, பிள்ளை அவர் திருமாளிகையேற எழுந்தருள; அம்மாள் தேவிகள் ப்ரஸந்நையாயிருக்கக்கண்டு, ஸ்ரீபாதத்து முதலிகள் இதற்கடியென்னென்று பிள்ளையைக்கேட்க; பிள்ளையும், தேவிகள் விஷயத்தில் இதற்கு முன்பு அம்மாள் பண்ணின விரோதமுண்டாகிலிறே அவர்பேற்றுக்கு இவர்வெறுப்பதென்றருளினார். தம்முடைய ஸ்ரீபாதத்திலாளொருவர் திருநாட்டுக்கெழுந்தருள, தத்பார்யாபுத்ராதிகள் வந்து தப்

ஸ்ரீபாதத்திலேவிழுந்து அழ; இதற்கடியென்னென்று முதலிகள்கேட்க; பெறுகிறதேசம் கொந்தளிக்கிறபடி கண்டால் இழக்குந்தேசம் என்படக்கடவது என்றருளினார். ஆகையால் ஸத்வஸ்துவை இழந்ததேஶம் கையெடுத்துக் கூப்பிடச்சொல்லவேண்டாவிறே யென்றுகருத்து.

நம்பிள்ளையும், ஸ்ரீபாதத்துமுதலிகளும் திருவெள்ளறைநாய்ச்சியாரை ஸேவித்து மீண்டு கோயிலுக்கெழுந்தருளாநிற்கச் செய்தே, * தடவரையதிரத் தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக் கரைமரஞ்சாடிக் கடலினைக்கலங்கக் கடுத்திழிகங்கைபோலே திருக்காவேரி இருகரையும் ஒத்து, அதிகம்பீரமாய், நாநாவர்த்தஜைதாகுலமாய் ப்ரவஹியாநிற்க ஓடமிடையாமையாலே ஒருதாழியிலே யெழுந்தருள, நட்டாற்றிலே சென்றவாறே, போதும் அஸ்தமித்து, மழையுமிருட்டுமாய் அக்கரை இக்கரை தெரியாமல் திசைப்ரமம்பிறந்து தாழி அமிழத்தேட; இந்தஅவஸ்தையில், நாமிருவரிலொருவர் தாழியைவிட்டால் கரையேறலாம், ஒருவர்தம்மைவிடாதொழிகில் நம்பிள்ளைமுதலாக எல்லாருமமிழ்ந்து போவார்கள் என்று தாழிக்காரன் கூப்பிட, நட்டாறாகையாலும், பயாதிஶயத்தாலும் ஒருவருமதற்கு இசைந்தார்களில்லை; அவ்வளவிலே ஒருஸ்த்ரீ கர்ப்பிணியான அம்மையார் தாழியிலிருக்கிறவனைப்பார்த்து, *உலகங்களுக்கெல்லாம் உயிரான நம்பிள்ளையைப் பேணிக்கொண்டு கரையிலே விடு, நூறுபிராயம் புகுவாய், என்று அவனை ஆசீர்வதித்து அந்தகாரத்தையும் பாராமல் ஆற்றிலே விழுந்தாள்; அவ்வளவிலேதாழி கரையிலே போக; அப்போது அம்மையாருக்கு ஒருதிடர் ஸந்திக்க, அதிலே தரித்துநின்று, ராத்ரிகாலமாகையாலும், கரை ஆஸந்நமாகையாலும், ஸ்வாசார்யரான நம்பிள்ளை [illegible]செய்கிறவார்த்தையை கேட்டு, ஸ்வாமீ! தேவரீர் வ்யஸநப்படவேண்டா, அடியேன் இங்கே யிருக்கிறேனென்று கூவ, [illegible]யும், திடர்கள், மரங்கள், ஸாந்த்ரமாய் [illegible] திக்குமறிந்து தாழிக்காரனையிட்டு அவளையும் கரையிலே அழைப்பித்துக்கொள்ள: அவளும்வந்து, பிள்ளை திருவடிகளிலே ஸேவித்து ஆசார்யனையல்லது வேறுரக்ஷகாந்தரமறியாதவளாகையாலே, அந்த ஆற்றிலேயழுந்திப்போகும்போதும் தேவரீர் அங்கே ஒருதிடராய்வந்து ரக்ஷித்தருளிற்றே யென்றுகேட்க; பிள்ளையுமதுவுண்டாய் விஸ்வஸித்துவானபின்பு அதுவும் அப்படியாகாதோ என்றருளினார். இதனால் - ஸ்வசரீரஅர்த்தப்ராணங்களை யழியமாறியாகிலும் ஆசார்யனைப் பேணவேணுமென்னுமதுவும், அந்நிஷ்டையுடையாளாகில் ஸ்வாசார்யன் அவனைப்பேணிரக்ஷிக்குமென்னுமதும் தோன்றுகின்றதிறே.

அநந்தரம், பிள்ளையும் முதலிகளுமாகக் கோயிலிலெழுந்தருளியிருந்து தர்ஶநம் நிர்வஹித்துக்கொண்டு வாழ்ந்தருளுகிறகாலத்திலே நம்பிள்ளைஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்திருப்பாளொரு அம்மையாருக்கு திருமாளிகைக்கு அருகே ஒருகோல்துறைநிலவஶந முண்டாயிருக்க,

அவளுக்கு ஸப்ரஹ்மசாரியா யிருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவர், "பிள்ளை திருமாளிகை நெருக்கமாயிருக்கிறது, இந்த ஒருகோல்துறையை அவருக்கு ஸமர்ப்பியும்" என்று அம்மையாருக்குப் பலகாலுமருளிச்செய்ய; அவளும், கோயிலிலேஒருகோல்துறை ஆருக்குக்கிடைக்கும், நான் திருவடிச்சாருந்தனையுங்கொடேனென்ன; ஸ்ரீவைஷ்ணவரும் இச்செய்தியை பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும், அம்மையாரை யழைத்தருளி, உமக்குஒருஶரீரத்திற்குச் சற்றிடமன்றோ வேண்டுவது, முதலிகள் எழுந்தருளியிருக்க நெருக்கமாயிருக்கிறது, உன்னொருகோல்துறையையும் நமக்குத்தரவேணுமென்ன; அம்மையாரும், அப்படியே செய்கிறேன், தேவரீர் பரமபதத்திலே அடியேனுக்குஒருகோலதுறை தந்தருளவேணுமென்ன; அதற்கு ஸ்ரீவைகுண்டநாதனன்றோகடவன், அவனுக்குவிண்ணப்பஞ்செய்துகொண்டு தருகிறோமென்றருளிச்செய்ய; அவளும் அடியேன்ஸாது, அங்கிலே பெண்பெண்டாட்டி, தருகிறோமென்ற வார்த்தைமாத்ரம் போராது, எழுதித் தரவேணுமென்ன; பிள்ளையும், இப்படியுங்கேட்பதே! என்று திருவுள்ளமுகந்து இன்னவருஷம் இன்னமாஸம் இத்தனையாமதேதி இந்தஅம்மையாருக்குத் திருக்கலிகன்றிதாஸன் பரமபதத்திலே ஒருகோலதுறை எழுதிக்கொடுத்தான், அகிலலோகஸ்வாமியான ஸ்ரீவைகுண்டநாதன் காயம் செலுத்திக்கொடுத்தருளவேணுமென்று ஶாஸநமெழுதித் தம்முடைய திருவெழுத்துச்சாத்திக்கொடுத்தருளினார். அம்மையாரும் திருமுகத்தை ஶிரஸாவஹித்து ப்ரீதியுடனே வாங்கிக்கொண்டு தீர்த்த ப்ரஸாதங்களும் ஸ்வீகரித்து அன்றுமற்றைநாளும் பிள்ளையை ஸேவித்துக்கொண்டிருந்து மூன்றாம்நாள்பரமபதத்திலேசென்றாள். இதனால் - ஆசார்யன் இரங்கி ப்ரஸாதித்ததொன்றையேதஞ்சமென்றிருப்பார்க்கு பரமபதம்ஸித்தமென்னும், உபயவிபூதியும் ஆசார்யனிட்டவழக்காயிருக்குமென்னும் தோன்றுகின்றதிறே.

மஹாபாரதபட்டர் பிள்ளையை, சைதந்யவஸ்துவாயிருக்கிற ஆத்மாவுக்கு ஶரீரவிஶ்லேஷம்பிறந்தால் பரமபதம் ஸித்தமென்று அறுதியிட்டிருக்கலாவது எவ்வர்த்தத்தாலே யென்றுகேட்க; ஸ்ரிய:பதியை உபாயோபேயமென்று அறுதியிட்டிருப்பது, நெடுங்காலம் இழந்து கிடந்தவஸ்துவைக்காட்டித்தந்த ஆசார்யனபக்கலிலே கனக்கவிஶ்வாஸமுண்டாயிருப்பது, அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யத்தின்படியே எம்பெருமானார்தர்சநமேஸித்தாந்தமென்றறுதியிட்டிருப்பது, ஸ்ரீராமாயணத்தாலேபகவத்குணாநுஸந்தானம்பண்ணுவது, ஆழ்வார்களருளிச்செயல்களாலே போதுபோக்குவது, ஶரீரவிஶ்லேஷம் பிறந்தால ஸந்தேஹிக்கவேண்டா, "மீட்சியின்றிவைகுந்தமாநகர்மற்றது கையதுவே" என்றருளினார். இத்தால் - உபாயோபேயநிர்ணயமும், ஆசார்யவிஶ்வாஸமும், தர்சநவிச்வாஸமும், பகவத்குணாநுபவபாரவஶ்யமும் உண்டாகவே ப்ராப்யஸித்தி யுண்டாமென்று உத்தரமருளிச்செய்ததாய்த்து.

நம்பிள்ளைஸ்ரீபாதத்திலே, பாண்டியநாட்டினின்றும் சிலவைஷ்ணவர்கள் வந்துகண்டு, எங்களுக்குத்தஞ்சமாயிருப்பதொருவார்த்தையருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும், கடற்கரைவெளியை நினைத்திருங்கோளென்றருளினார். அவர்களும், மணற்குன்றையும், நாவல்காடடையும் நினைத்திருக்கவோவென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும், புன்முறுவல்செய்து அருளிச் செய்தபடி;-சக்ரவர்த்தித்திருமகன் கடற்கரையிலேவிட்டிருக்கச்செய்தே ஸ்ரீவாநரவீரர்கள் * [illegible]-ராகவார்த்தே பராக்ராந்தராய்த்தங்களையுபேக்ஷித்துப் பெருமாளை நோக்கிக்கொண்டுகிடக்க, இவர்கள் கண்ணுறங்குந்தனையும் தானுறங்கி, இவர்கள் கண்ணுறங்கினவாறே, அம்பறுத்தூணியை முதுகிலேகட்டி திருக்கையிலேபிடித்தசார்ங்கமும்திருச்சரமுமாய் நோக்கினசகரவர்த்தித்திருமகனுடைய திருவடிகளே தஞ்சமென்றிருங்கோளென்றருளினார் ஆகையாலேஸ்வரக்ஷணசிந்தையற்றுயிதனுகவே ஸர்வரக்ஷகன்கைகொண்டுரக்ஷிக்குமென்கிறது.

பிள்ளையை, ஒருவன் எம்பெருமானையொழிந்த தேவதாந்தரங்களை பஜிக்கலாகாதென்கிறநீங்கள் நித்ய நைமித்திகாதிகளிலே அக்நீந்த்ராதி தேவதைகளை பஜிப்பானென், ஆலயங்களை பஜியாதொழிவானென் னென்ன; பிள்ளையும், வாராய அக்நிஹோத்ராக்நியை உபாஸித்தும் ச்மசாநாக்நியை நிவர்த்திதனும் போருகிறாப்போலே நித்யாதிகளில் பகவத்ப்ரகாரபுத்த்யாபண்ணுகிறஉபாஸநம்பகவதுபாஸநமேயாக விசேஷசாஸ்த்ரம் விதிக்கையாலும், ஆலயப்ரதிஷ்டைகளில் பராபரத்வவ்யத்யயம் பண்ணியிருக்கும் தாமஸபுருஷாகளாலே விருத்தாகமம்த்ரதந்த்ரப்ரக்ரியையாலே ஸ்வதந்த்ரபுத்த்யாதேவதாந்தரங்கள்க்ர்தப்ரதிஷ்டாகாரங்களாகையாலும், இவ்விடத்திற்கு பகவத்ப்ரகாரபுத்த்யா உபாஸிக்க விதியில்லாமையாலும். அதுவுமன்றியே, தேவதாந்தரவர்ககந்தனளில் * [illegible]-தூரதோவர்ஜநீயத்வம் ருத்ரனுக்கு மிகவுமுண்டிறே. எங்ஙனேயெனனில;-ஸத்வகுணத்யந்த விரோதியான தமோகுணப்ரசுரனுகையாலே, நித்யாதிகளைப்போலே ஆலயங்களிலும் பகவத்ப்ரகாரபுத்த்யா உபாஸிக்கலாகாது, த்யாஜ்யதயாஜ்ஞாதவ்யங்களான பகவத்வ்யதிரிக்தவிஷயங்கள் ஸ்வீகாரத்திற்குஉடலாகவும், உபாதேயதயாஜ்ஞாதவ்யமான பகவத்விஷயம த்யாகத்திற்கு உடலாகவும் கடவதோவென் றருளிச்செய்தார். ஆகையாலே வேதாந்தவிஹித பகவத்ப்ரகார பூதாலயஸ்த்த அந்யதேவதாபஜநமும் அநர்த்தகரமென்கிறது.

நம்பிள்ளையை, ஒருஸ்ரீவைஷ்ணவர்வந்து ஸேவித்து, திருமேனி அற இளைத்திருந்ததென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும், ஒன்று தேய்தல் ஒன்று, வளருதலன்றோவென்றருளினார். இத்தால் - ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் வளர* "நினைந்துநைந்துள்கரைந்துருகி" சரீரம் தேயுமென்றபடி. ஒருஸ்ரீவைஷ்ணவர்வந்துபிள்ளையைக்கண்டு, ஆரோ

க்யமொன்றுமில்லையோவென்று கேட்க; பிள்ளையும், யுத்தம்பண்ணப் போகிறோமோ, பெருமாளை ஸேவித்திருக்கைக்குவேண்டும ஆரோக்யமுண்டு, ஒருகுறையுமில்லையென்றருளினர். ஆகையாலே, ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆரோக்யாபேக்ஷை வேண்டாவென்கிறது. நம்பிள்ளை திருமேனி நோவுசாத்தியிருந்தமைகேட்டு, ஒருஸ்ரீவைஷ்ணவர்சென்று ஸ்ரீபாதத்திலேஸேவித்து, நோவைக்கண்டுவெறுக்க; பிள்ளையும் அவனைக்குறித்து இஸ்ஸரீரத்தில்வந்த வ்யாதியை நல்லவிருந்து வந்ததாகக்காணும் நான்நினைத்திருப்பதென்றருளினர். இத்தால் - ([illegible]) (காதக்ராத்யாப்ரதிக்ஷம்தேமர்தயப்ரியமிவாதிதம) என்கிறவிதுவிறே திருவுள்ளக்கருத்து.

நம்பிள்ளை திருமேனியிலே நோவுசாத்தி யெழுந்தருளியிருக்கச்செய்தே, பிள்ளையெங்களாழ்வாரும், அம்மங்கியம்மாளும அறியாதாக எழுந்தருளி எங்களாழ்வான் நியமநத்தாலே, அம்மங்கியம்மாள பிள்ளைபக்கல பரிவாலே ஒருபாத்ரத்தைத் திருக்கையிலேயிட்டுத் தொடப்புக, பிள்ளை திருமேனியை யிருவருமாக; அவர்களும விஷண்ணராய் உமமுடைய விஷயமாக நீரபரவ்ருத்திகளின்றே ஸ்வரூபஹாநி, உம்முடையவிஷயமாக நாங்களபரவாத்தித்தால உமக்கு ஸ்வரூபஹாநியில்லைகாணுமென்று சிலவசநங்களைப்படிக்க; எனக்காகஇப்போது, நீங்கள் சிலவசநங்களையன்றோ விஸ்வஸித்திருக்கிறது, நானும ஒரு வசநத்தைத் தஞ்சமென்றிருப்பனகாணுமென்றருளினர்; அவர்களும், அதுவென், சொல்லவேணுமென்ன; பிள்ளையும, ஜீயர், தம சரமதசையிலே த்வயமொழிந்த மற்றைந்தசெல்லாம், உபாயசாஸ்த்ரம முதலான சாஸ்த்ரமர்த்தங்களோடு ஒருவாசியில்லையென்றருளிச்செய்தான; அவர்களும், பிள்ளை! திருமந்த்ரமசெய்வதென்னென்ன; பிள்ளையும், அதுசெய்வதென், விவரண விவரணியாலே த்வயார்த்தமென்ன; அவர்களும், ஆகில் த்வயத்தைக்கொண்டு செய்யகுறை யென்னென்ன; இவரும், விடாய்த்தவன் விலாவறத் தண்ணீர் குடிக்குமாப்போலேயிருப்பதொன்றிறேயிது, ஆகையாலே ஸ்வவ்யாதிஸமதயார்த்தமான ப்ரபதநமும் ஸ்வரூபஹாநி, பரவிஷயவ்யாதிசாமர்யார்த்த ப்ரபதநமும ஸ்வரூபஹாநி. எங்ஙனே யென்னில; ஸ்வவிஷ்யமாக ப்ரவர்த்திக்கில் ஸ்வஸ்வரூப பாரதந்த்ர்ய தூஷணமாமித்தனை, பரவிஷயமாகப்ரவர்த்திக்கில பரஜ்ஞாநசக்திகளுக்கு தூஷணமாமென்றருளினர். இத்தால - தொடக்குழையும் பூப்போலே மந்த்ராமந்த்ரஸ்பர்ஸம் பொறாத த்வயைகநிஷ்டராதிஸயமும, த்வயத்தை மற்றொன்றுக்கும ஸாதநமாக்கி பிசக்கி முசிக்கப் பெறாமையும, ஸ்வபரவிஷயவ்யாதி ஸமதயார்த்தப்ரபதந தோஷ விஸேஷமும் சொல்லப்பட்டதிறே.

அநந்தரம், பிள்ளைக்கு, திருமேனிவாட்டமதிர்ந்து பண்டுபோலே ஆரோக்யமுண்டாய், ஸ்ரீபாதத்தில்முதலிகளுக்கு தர்ஸநதாத்பர்யங்களை ப்ரஸாதித்துக்கொண்டு ஸுகமே யெழுந்தருளியிருக்கும் நாளிலே,

கூரத்தாழ்வானுடைய திருப்பேரனாரான நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர், நம்பிள்ளையுடைய ஜ்ஞாநபக்தி வைராக்யங்களையும், பாகவதஸம்ர்த்தியையும், லோகபரிக்ரஹத்தையும், சிஷ்யஸம்பத்தையும்கண்டு, பொறுக்கமாட்டாமல் கடிகடியென்றுகொண்டு போருவாராயிருப்பர். அக்காலத்தில் அந்தபட்டர்ராஜஸ்தாநத்திற்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பின்பழகியபெருமாள்ஜீயரைக்கண்டு, ஜீயா! நாம் ராஜகோஷ்ட்டிக்குப் போகிறோம், கூடவாருமென்று அழைக்க; நம்பரமாசார்ய வம்ச்யரன்றோவென்று பட்டருடனே ராஜஸ்தாநத்தேற வெழுந்தருள; ராஜாவும், பட்டரை எதிர்கொண்டு பஹுமாநம்பண்ணி ஆஸநத்திலே யெழுந்தருளவைத்து ஸேவித்துக்கொண்டு பெரியதிருவோலக்கமாக விருந்து, தாநபஹுமாநங்களையாலும், வ்யுத்பந்நதைகையாலும், பட்டருடைய வைதுஷ்யசோதநார்த்தமாக, பட்டரே! ([illegible]) (ஆத்மாநம்மாநுஷம்மந்யே ராமம்தசரதாத்மஜம்) என்று - பரத்வமதோற்றாமல்வாழ்ந்துநிற்கிறபெருமாள் ஜடாயுவைக்குறித்து, ([illegible]) (கச்சலோகாநுத்தமாந்) என்று மோக்ஷம் கொடுத்தபடி எங்ஙனேயென்று கேட்க, பட்டரும், அதற்கு உத்தரமருளிச்செய்ய சிறிது விசாரிக்க வேண்டியிருக்க; அவ்வளவிலே ராஜாவுக்கு வேறே பராக்காக; பட்டரும், ஜீயா! திருக்கலிகன்றிதாஸர், பெரியவுடையாருக்குப்பெருமாள் மோக்ஷங்கொடுத்தருளினதை எப்படிநிர்வஹிப்பர் என்ன ([illegible]) (ஸத்யேநலோகாந்ஜயதி) என்கிறஶ்லோகங்கொண்டு நிர்வஹித்தருளுவரென்ன, பட்டரும், ஆமோவென்று அத்தைத் திருவுள்ளத்திலே யோசித்து ஒக்குமென்று எழுந்தருளியிருக்க, ராஜாவும் அபிமுகமாகத்திரும்பி, பட்டரே! நாம் கேட்டதற்கு உத்தரமருளிச் செய்திலீரேயென்ன; பட்டரும், நீர் பராக்கடித்திருக்க, நான் சொல்லலாவதொரு அர்த்தமுண்டோ? ஸாவதாநராய்க்கேளுமென்று, ([illegible]) (ஸத்யேநலோகாந்ஜயதி தீநாந்தாநேநராகவ - குரூந்ஶுஶ்ரூஷயாவீரோ தநுஷாயுதிஶாத்ரவாந்) என்கிற ஶ்லோகத்தை பட்டரருளிச்செய்ய; ராஜா கேட்டு, மிகவும்ப்ரீதனாய், தேவரீர்அருளிச்செய்தது ஒக்குமென்று, ஶ்லாகம்பண்ணி, அடிக்கடிகொண்டாடி, அநர்க்கங்களான ஆபரணங்களையும் வஸ்த்ரங்களையும் கொடுத்து, பஹுமதிபண்ணி, தான்திருத்தாநாய், திருவடிகளிலேவிழுந்து ஸேவித்துக் கோயிலேறவெழுந்தருளுமென்று ஸத்கரித்துவிட; பட்டரும், ராஜாகொடுத்தவஸ்த்ரபூஷணங்களை அங்கீகரித்து, அங்கினின்றும் புறப்பட்டு ஜீயர்திருக்கையைப் பிடித்துக்கொண்டு, ஜீயரே! என்னையும் இந்தநத்தையும் பிள்ளை திருவடிகளிலே கொண்டுபோய்க்காட்டிக் கொடுமென்று போரஆர்த்தியோடே அநுவர்த்தித்துச்சொல்ல; ஜீயரும், பட்டர் அருளிச்செய்தபடியேகொண்டுபோய் பிள்ளைதிருவடிகளிலேகாட்டிக்கொடுக்க; பிள்ளையும், தம்பரமாசார்யவம்ச்யரான நடுவில்திருவீதிப்பிள்ளையை ஸேவி

த்து மிகவும் ஆதரித்து, ஐயரே! இதுவேது என்று கேட்டருள; பட்டரும், பிள்ளைதிருமுகமண்டலத்தைப்பார்த்து, தேவரீருடைய திவ்ய ஸூக்தியில் பதினாயிரம்கோடியில் ஒன்றுபெற்றதாம் இது, அடியேனையும் இந்தத்ரவ்யங்களையும் அங்கீகரித்தருளவேணுமென்ன; பிள்ளையும் ஆகிறதென்; கூரத்தாழ்வான் திருப்பேரனாரான நீர் இப்படிசெய்யப்ராப்தமன்று காணுமென்ன: பட்டரும், நிதயஸம்ஸாரியான ராஜா, தேவரீருடையதிவ்யஸூக்தியிலே சிந்தின சொலலுக்குத தோற்றுக்கொடுத்ததனமிது; ஆனபின்பு, கூரத்தாழவான குடல்துடக்கிலே பிறந்த அடியேன் அந்தப்ரபாவத்திற்குத்தகுதியாகத் தேவரீருக்கு ஸமர்ப்பிக்கலாவதுஒன்றுமில்லையே யாகிலும், அசலகத்தேயிருந்தும இத்தனைநாள் தேவரீர்திருவடிகளை யிழந்துகிடந்தமாத்ரமன்றிக்கே, தேவரீரவைபவத்தைக்கண்டு, (அஸூயா ப்ரஸவபூ:) (அஸூயாப்ரஸவபூ:)என்கிறபடியே, அஸூயைபண்ணித்திரிந்த இவ்வாத்மாவை தேவரீருக்குஸமர்ப்பிக்கையல்லது வேறே எனக்கொருகைமமுதலில்லை; ஆகையாலே அடியேனை அவஶ்யம் அங்கீகரித்தருளவேணுமென்றுகண்ணுங்கண்ணீருமாயக்கொண்டு பிள்ளைதிருவடிகளிலே ஸேவித்துக்கிடக்க; பிள்ளையும பட்டரை வாரியெடுத்தணைத்துக்கொண்டுவிசேஷகடாக்ஷம்செய்தருளி, தம்திருவுள்ளத்திலே தேங்கிக்கிடக்கிற அர்த்தவிசேஷங்களெல்லாவற்றையும் இவர்க்குப்ரஸாதித்தருள, இவரும க்ருதார்த்தராய ஒருக்ஷணமும பிரியாமல், பிள்ளைஸந்நிதியிலே கைங்கர்யம்பண்ணிக்கொண்டு ஸந்துஷ்டராய் எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே, பட்டருக்கு ஒருருதிருவாய்மொழிக்கு அர்த்தம் ப்ரஸாதித்தருள, பட்டரும, பிள்ளை அருளிச்செய்ததொன்றும தப்பாமல், பகலில்கேட்டுத் தரித்து இராமுற்ற எழுதித்தலைக்கட்டினவாறே, தாம் எழுதின க்ரந்தங்களை கொண்டுபோய பிள்ளைஸந்நிதியிலே வைக்க; பிள்ளையும இதென்னென்றுகேட்க; பட்டரும, தேவரீர இந்தத்தடவை திருவாயமொழி நிர்வஹித்தத கட்டளையை, பிள்ளையும, ஆமோவென்று க்ரந்தங்களையவிழ்த்துப்பார்த்தவளவில், ஸாரதலக்ஷம க்ரந்தமாய் மஹாபாரத ஸங்க்யையாயிருக்க, அதைக்கண்டு பிள்ளை பெருக்கவ்யாகுலப்பட்டு, பட்டரைப்பார்த்து, நம்முடைய அநுமதியின்றிக்கே நாட்டுக்குப்பாட்டுரையாம்படி நீர்இதைத்தப்பியவெளியிட்டுவானெனென்ன; பட்டரும, தேவரீர் அருளிச்செயத ஸூக்தியை யெழுதினேன், அதொழிய கால்சொம்பு கூழியேற எழுதினதுண்டாகில் பார்த்தருளீரென்ன; பிள்ளை, பட்டரைப்பார்த்து, வாரீர், திருவாய்மொழிநிமித்தமாக நாமவாக்காலே சொன்னதனைத்தும்ஆழ்வாரீரோவென்று நம்முடைய சித்தஸ்தமானபொருளை எழுதப்பெறுரீரோவென்று வெறுத்தருளிச்செயது, உடையவர்காலத்திலே திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவாய்மொழிக்கு ஸ்ரீவிஷ்ணுபுராணப்ரக்ரியையாலே ஆறாயிரமாக இடுகைக்கு உடையவரால் அநுமதி கொள்ளப்பட்ட யத்நத்திற்கு மட்டில்லை, ஆனபின்பு, நம்முடைய காலத்திலே, நம்மையுமகேளாமல லக்ஷத்திருபத்தையாயிரம் க்ரந்தமாகப் பரக்கவெழுதினால் ஒருஶிஷ்யாசார்யக்ரமமற்று அஸம்ப்ரதாயமாய்ப்போங்காணும், என்றுஅருளிச்செய்து, அவர்கையிலும் க்ரந்தங்களை வாங்கிக்கொண்டு நீரைச்சொரிந்து கறையானுக்குக்கொடுக்க, அவை அன்றே மர்த்தாய்ப்போய்த்து. பிள்ளைவைபவத்தை, "இந்திரனவார்த்தையும் நான்முகனவார்த்தையுமீசனுடன், கந்தன்சொல்வார்த்தையுங்கம்பவாரிந்தக்காசினிக்கே, நந்தினம

முத்தெரு நம்பூர் வரதர் தம் மாளிகையில், சிந்தின வார்த்தைகொண்டே சில நாள் திறைகொள்வரே" என்று ஸ்ரீபாதத்து முதலிகள் அநுஸந்தித்தார்களிறே.

அநந்தரம், பிள்ளை, தமக்கு பரியஶிஷ்யராய்த் தம் பக்கலிலே அகிலார்த்தங்களையும் அலகலகாகக் கற்றிருக்கும் பெரியவாச்சான்பிள்ளையைத் "திருவாய்மொழிக்கு ஒரு வ்யாக்யாநம் பண்ணும்" என்று நியமித்தருள; பெரியவாச்சான்பிள்ளையும் ஸ்ரீராமாயண ஸங்க்யையிலே ஒரு வ்யாக்யாநம் செய்தருளினார். பிள்ளையும், ஒருநாள் திருவாய்மொழிக்கு அர்த்தம் நிர்வஹிக்கிற கட்டளையை, அந்தரங்கஶிஷ்யரான வடக்குத்திருவீதிப்பிள்ளை, பகலெல்லாம் கேட்டு அன்றைக்கு ராத்ரியிலே எழுதித் தலைக்கட்டினவாறே அத்தை பிள்ளை ஸந்நிதியிலே கொண்டுபோய் வைக்க; பிள்ளையும் இதென்னென்று கேட்டருள; அவரும், தேவரீர் இந்தத்தடவை திருவாய்மொழி நிர்வஹித்தருளின கட்டளையென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும் ஸ்ரீகோஶத்தை அவிழ்த்துப் பார்த்தருள, அதி ஸங்க்ஷேபமும் அன்றிக்கே, அதிவிஸ்தரமும் அன்றிக்கே ஆனைக்கோலஞ்செய்தாப்போலே மிகவும் அழகாய் ஶ்ருதப்ரகாஶிகை கட்டளையிலே முப்பத்தாறாயிரமாயிருக்கையாலே, பிள்ளையும், அத்தைக்கண்டு போரப்ரீதராயருளி, வடக்குத்திருவீதிப்பிள்ளையைப்பார்த்து நன்றாக எழுதினீர், ஆகிலும் நம்முடைய அநுமதியின்றிக்கே யெழுதினீராகையாலே கரந்தனை நம்மிடத்திலே தாருமென்று வாங்கி உள்ளே வைத்தருளினார். இத்தைக் கேள்விப்பட்டு ஈயுண்ணி மாதவப்பெருமாள், பலநாள் நம்பெருமாளை பரதந்த்ரங்களைப் பண்ணி வேண்டிக்கொள்ள, ஒரு நாள் பெருமாள் அர்ச்சகமுகேந ஈயுண்ணிச்சிறியாழ்வார்பிள்ளையை அருளப்பாட்டிட்டருளி, "ஏனென்றும் நம்மை பஹுவாக உபாஸியாநின்றீர்" என்று கேட்டருள; ஈயுண்ணி மாதவப்பெருமாளும் ஸ்வாமீ! நம்பிள்ளை திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறாயிரமென்று ஒரு வ்யாக்யாநம் பண்ணியிருக்கிறது, அத்தை அடியேனுக்கு அவர் இரங்கி ப்ரஸாதிக்கும்படி நியமித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, பெருமாளும் அப்படியே செய்கிறோமென்று திருவுள்ளம்பற்றியிருக்கச்செய்தே, நம்பிள்ளையும் முதலிகளுமாகப் பெருமாளைத் திருவடித்தொழச் சென்றவாறே, பெருமாள் பிள்ளையைக்குறித்து தீர்த்தம், திருமாலை, திருப்பரிவட்டம், சடகோபனும் ப்ரஸாதித்தருளி அர்ச்சகமுகேந, பிள்ளையைப் பார்த்து ஈடு முப்பத்தாறாயிரத்தை ஈயுண்ணிச்சிறியாழ்வார்பிள்ளைக்கு ப்ரஸாதியுமென்று திருவுள்ளமாக; பிள்ளையும், மஹாப்ரஸாதமென்று பெருமாள் அருளப்பாட்டை ஶிரஸாவஹித்துக்கொண்டு புறப்பட்டுத் தம் திருமாளிகையிலே எழுந்தருளி, தமக்கு அபிமதஶிஷ்யரான ஈயுண்ணி மாதவப்பெருமாளென்கிற சிறியாழ்வார்பிள்ளைக்கு, ஈடு முப்பத்தாறாயிரமும் கொடுத்து வாழ்வித்தருளினார்.

பின்பழகியபெருமாள்ஜீயர்

அருளிச்செய்த

குருபரம்பரா ப்ரபாவம்.

ஸம்பூர்ணம்.
